ஸ்ரீ:

# ஸ்ரீ மஹா பாரதம்

## ஸபா பர்வம்

(ஸ்ரீவேதவியாஸ பகவான் வடமொழியில் அருளிச்செய்த
ஸ்ரீமஹா பாரதத்திற்குச் சரியான மொழிபெயர்ப்பு)

கும்பகோணம் காலேஜ், ஸம்ஸ்கிருத பண்டிதர்
மஹாவித்வான்
சதாவதானம் ஸ்ரீ-உபய-வே.
**தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியர்**
அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்று,

கும்பகோணம் காலேஜ், தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
பாஷாபாரத துரந்தர, மகாமகோபாத்யாய,
**ம. வீ. இராமானுஜாசாரியரால்**
பதிப்பிக்கப்பெற்றது

*Publishers :*
**SRI MAHABHARATHAM PRESS**
SRI VEDA VINAYAGAR ST.,
**KUMBAKONAM.**

உரிமை பதிவுசெய்யப்பட்டது]

[விலை ரூ. 3-8-0

ஸ்ரீ:

# ஸ்ரீ மஹாபாரதம்

## ஸபா பர்வம்

---

## விஷய ஸூசிகை

### மந்திர பர்வம்

அத்தியாயம் பக்கம்


1 கடவுள் வாழ்த்து ... ... ... 1
மயன் அர்ஜுனனுக்குப் பிரதியுபகாரஞ்செய்ய இச்சித்தது ... 1–2
அர்ஜுனன் கிருஷ்ணனுக்குச் செய்யும்படி மயனுக்குக் கட்டளையிட்டது ... ... ... 2
கிருஷ்ணன் ஒரு சபை செய்யும்படி மயனை ஆக்ஞாபித்தது 3
தர்மபுத்திரர் மயனுக்கு மரியாதை செய்தது ... 3
மயன் சபைசெய்ய அளவெடுத்தது ... ... 3
2 கிருஷ்ணன் குந்தி முதலானவரிடம் விடைபெற்றுத் துவாரகைக்குப் புறப்பட்டது ... ... 4–5
பாண்டவர்கள் கிருஷ்ணனை வழிவிட்டுத் திரும்பியது ... 5–6
கிருஷ்ணன் துவாரகை சேர்ந்தது ... ... 6
3 மயன் அர்ஜுனனிடம் விடைபெற்றுப் பிந்துஸரஸுக்குச் சென்றது ... ... ... 7
மயன் பிந்துஸரஸிலிருந்து பலவகைப் பொருள்களைக் கொணர்ந்தது ... ... ... 8
மயன் பீமார்ஜுனர்களுக்குக் கதாயுதத்தையும் சங்கத்தையும் கொடுத்தது ... ... 8
மயன் சபையை நிர்மாணஞ்செய்தது ... ... 9
சபையின் சிறப்பு ... ... ... 9–10
மயன் எவ்வளவு காலத்தில் சபையைச் செய்தானென்பது... 10
4 தர்மபுத்திரர் சபாப்பிரவேசஞ் செய்தது ... ... 10–11
தர்மபுத்திரர் சபையில் வீற்றிருந்த சிறப்பு ... ... 11–13
5 தர்மபுத்திரருடைய சபைக்கு நாரதர் வந்தது ... 13–15
நாரதர் தர்மபுத்திரரை யோகக்ஷேமம் விசாரித்தது ... 15–23
தர்மபுத்திரர் வேதம் முதலியன பயன்படுவதெப்படியென்று நாரதரை வினவியது ... ... 23–24
நாரதர் யுதிஷ்டிரர் வினவுக்கு விடைகூறித் திரவிய லாபத்தைப்பற்றித் திரும்பவும் வினவியது ... ... 24–25
6 தர்மபுத்திரர் நாரதர் வினவுக்கு விடைகூறியது ... 25
நாரதர் இந்திரன் முதலியோரின் சபைச் சிறப்புக் கூறுவேனென்றது ... ... ... 26
7 நாரதர் இந்திர சபைச் சிறப்புக் கூறியது ... 27–29
8 நாரதர் யமசபைச் சிறப்புக் கூறியது ... ... 29–32
9 நாரதர் வருண சபைச் சிறப்புக் கூறியது... ... 32–34
10 நாரதர் குபேர சபைச் சிறப்புக் கூறியது ... ... 34–37
11 நாரதர் பிரம்மசபைச் சிறப்புக் கூறியது ... ... 37–42

அத்தியாயம் பக்கம்


12 தர்மபுத்திரர் நாரதரிடம் அரிச்சந்திரனைப்பற்றி வினவியது 42
நாரதர் அரிச்சந்திரனுடைய ராஜசூயத்தையும் அதனால் வந்த சிறப்பையும் சொல்லியது ... ... 43–44
நாரதர் பாண்டுவின் கட்டளையைத் தர்மபுத்திரருக்குத் தெரிவித்தது ... ... ... 44
13 தர்மபுத்திரர் ராஜ்யபாரஞ் செய்தது ... ... 45–46
தர்மபுத்திரர், சகோதரர்கள் மந்திரிகள் முதலியோரிடம் ராஜசூயத்தைப்பற்றிக் கேட்டது ... ... 46
மந்திரிகள் முதலியோர் ராஜசூயஞ் செய்யும்படி தர்மபுத்திரருக்குச் சொல்லியது ... ... 46–47
தர்மபுத்திரர் கிருஷ்ணனுக்குத் தூதனுப்பினது ... 48
கிருஷ்ணன் இந்திரப்பிரஸ்தஞ் சேர்ந்தது ... ... 49
தர்மபுத்திரர் கிருஷ்ணனை ராஜசூயத்தைப்பற்றிக் கேட்டது ... ... ... 49
14 கிருஷ்ணன் தர்மபுத்திரருக்கு ஜராசந்தன் வலிமையைக் கூறியது ... ... ... 50–55
கிருஷ்ணன் தர்மபுத்திரருக்கு ஜராசந்தன் முதலியவரிருக்கையில் ராஜசூயஞ்செய்வது முடியாதென்று கூறியது 55
15 தர்மபுத்திரர் ராஜசூயஞ் செய்யாதொழிவது நலமென்றது 56
பீமசேனன் ஜராசந்தனை ஜயிப்பதாகச் சொன்னது ... 57
கிருஷ்ணன் ஜராசந்தனை எதிர்ப்பது முக்கியமென்றது 57–58
16 தர்மபுத்திரர் கிருஷ்ணபீமார்ஜுனர்களை ஜராசந்த வதத்துக்கு அனுப்புகிறதைப்பற்றித் தூங்கித்துக் கூறியது... 58–59
அர்ஜுனன் சத்ரு ஜயஞ்செய்து ஸம்ராஜ பட்டம்பெறுவது அவசியமென்றது .. ... ... 59–60
17 கிருஷ்ணன் ஜராசந்த வதத்துக்கு உபாயங் கூறியது ... 60–61
கிருஷ்ணன் ஜராஸந்தன் பிறப்பு முதலியவற்றைக் கூறியது 61–69
பிருகத்ரதனுடைய விவாகமும் அவன் வாக்குத்தத்தமும் ... 61
பிருகத்ரதன் தபோவனஞ் சென்றது ... ... 62
பிருகத்ரதன் சண்டகௌசிகரைக் கண்டது ... 62
சண்டகௌசிகர் பிருகத்ரதனுக்கு மாங்கனி கொடுத்தது... 63
சண்டகௌசிகர் பிருகத்ரதனுக்குப் பிறக்கும் புத்திரனுக்கு எட்டு வரங்கள் கொடுத்தது ... ... 63
பிருகத்ரதன் மாங்கனியைத் தன் இரண்டு மனைவிகளுக்கும் கொடுத்தது ... ... 63
பிருகத்ரதனுடைய இரு மனைவியரும் ஒருடம்பின் இரு கூறுகளைப் பெற்றது ... ... 63
தாதிகள் பிறந்த இரு துண்டங்களையும் நாற்சந்தியில் போட்டது ... ... ... 64
ஜரையென்னும் அரக்கியால் அவ்விரு துண்டங்களும் ஒருருவமானது ... ... ... 64
ஜரை பிருகத்ரதன் மனைவியரிடம் குழந்தையைத் தந்தது 64
பிருகத்ரதன் ஜரையின் வரலாற்றை வினவியது ... 65

அத்தியாயம் பக்கம்
18 ஜரை பிருகத்ரதனுக்குத் தன் வரலாறு கூறியது ... 65
பிருகத்ரதன் தன் புத்திரனுக்கு நாமகரணஞ் செய்தது ... 66
19 சண்டகௌசிகர் பிருகத்ரதன் அரண்மனைக்கு வந்தது ... 66
சண்டகௌசிகர், ஜராசந்தன் பல பராக்கிரமமுள்ளவன் ஆவானென்றது ... ... ... 66–67
பிருகத்ரதன் ஜராசந்தனுக்கு அபிஷேகஞ்செய்து வனஞ் சென்றது ... ... ... 67
பிருகத்ரதன் மனைவிமாருடன் விண்ணுலகடைந்தது ... 67–68
ஜராசந்தனுக்குக் கிருஷ்ணனிடம் விரோதமுண்டானது ... 68

ஜராசந்த வத பர்வம்

20 கிருஷ்ணன், தாமும் பீமார்ஜுனர்களும் ஜராசந்த வதத்தைச் செய்வதாகச் சொல்லியது ... ... 69
தர்மபுத்திரர் ஜராசந்த வதத்திற்காகக் கிருஷ்ணபீமார்ஜுனர்களுக்கு விடைகொடுத்தது ... ... 69–70
கிருஷ்ண பீமார்ஜுனர்கள் ஸ்நாதக வேஷந் தரித்து மகத தேசம் சென்றது ... ... ... 70–71
21 கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு மகத தேசத்துக்கும் கிரி ... விரஜத்துக்குமுள்ள அரண் முதலிய சிறப்புரைத்தது ... 71–72
கிருஷ்ணபீமார்ஜுனர்கள் மூன்று பேரிகைகளை உடைத்தது ... ... ... 73
கிருஷ்ணபீமார்ஜுனர்கள் சைத்யகத்தின் சிகரத்தை உடைத்துக் கிரிவிரஜ நகருக்குட் பிரவேசித்தது ... 73
ஜராசந்தன் அபசகுனங்களைக் கேட்டு விரதோபவாசங்கள் நடத்தியது ... ... ... 73
கிருஷ்ணபீமார்ஜுனர்கள் கடைகளிலிருந்து புஷ்ப சந்தனாதிகளைப் பலாத்காரமாக எடுத்தணிந்தது ... 74
கிருஷ்ணபீமார்ஜுனர்கள் ஜராசந்தன் அரண்மனையிற் பிரவேசித்தது ... ... ... 74
ஜராசந்தன் கிருஷ்ணபீமார்ஜுனர்களைப் பூஜித்துக் குசலப் பிரசனஞ் செய்தது ... ... ... 74
கிருஷ்ணன் ஜராசந்தனுடைய குசலப்பிரசனத்துக்கு விடையளித்தது ... ... ... 74
ஜராசந்தன் அர்த்தராத்திரியில் கிருஷ்ணபீமார்ஜுனர்களிடம் வந்தது ... ... ... 75
ஜராசந்தன் கிருஷ்ணபீமார்ஜுனர்களுடைய வேஷத்தைப்பற்றிச் சந்தேகித்துக் கேட்டது ... ... 75–76
கிருஷ்ணன் ஜராசந்தனுக்கு மறுமொழி கூறியது ... 76
22 கிருஷ்ணனுக்கும் ஜராசந்தனுக்கும் வாக்குவாதம் ... 76–77
கிருஷ்ணன், தாங்கள் இன்னாரென்று வெளியிட்டது ... 78
ஜராசந்தன் கிருஷ்ணனை இகழ்ந்ததும், கிருஷ்ணபீமார்ஜுனரோடு யுத்தஞ்செய்ய எண்ணங்கொண்டதும் ... 79–80
ஜராசந்தன் தன் குமாரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யக் கட்டளையிட்டது ... ... ... 80
23 கம்ஸன் வரலாறு ... ... ... 80–82

அத்தியாயம் பக்கம்

தேவதூதன் கம்ஸனுக்குச் சொல்லியது ... ... 81
கம்ஸன் தேவகியைக் கொல்ல யத்தனித்ததும், வசுதேவர் சமாதானஞ் செய்ததும் ... ... ... 81
கம்ஸன் தேவகியின் குமாரர்கள் அறுவரைப் பிறக்கப் பிறக்கக் கொன்றது ... ... ... 82
தேவகியின் ஏழாவது கர்ப்பம் ரோகிணியின் வயிற்றில் மாற்றி வைக்கப்பட்டது ... ... ... 82
கிருஷ்ணன் அவதரித்தது ... ... ... 82
வசுதேவர் கிருஷ்ணனை இடையனுக்குக் கொடுத்து அவன் பெண்ணை வாங்கிவந்தது ... ... ... 82
கம்ஸவதம் ... ... ...82 ; 172-174
கிருஷ்ணன் உக்ரஸேனனுக்குப் பட்டங் கட்டியது ...82 ; 172-174
ஜராசந்தன் கிருஷ்ணனைத் தடுத்துக் கம்ஸன் மகனுக்குப் பட்டங் கட்டியது ... ... ... 83
ஜராசந்தன் அரசர்களை ஜயித்துச் சிறையில் வைத்தது ... 83
24 ஜராசந்தன் பீமசேனனோடு யுத்தம் வேண்டினது ... 83
ஜராசந்தனுடைய புரோகிதர் கோரோசனை முதலியவற்றோடு ஜராசந்தனிடம் வந்தது ... ... 83
ஜராசந்தன் யுத்த ஸந்நாகஞ் செய்தது ... ... 84
பீமசேனனுக்கும் ஜராசந்தனுக்கும் மல்ல யுத்தம் ... 84–88
ஜராசந்தன் களைப்படைந்தது ... ... 86
கிருஷ்ணன் பீமசேனனைத் தூண்டிச் சொல்லியது ... 86
25 பீமசேனன் ஜராசந்தன் விஷயத்தில் தாமதிக்கக்கூடாதென்றது ... ... ... 86–87
கிருஷ்ணன் பீமசேனனுக்கு ஜராசந்த வததைப்பற்றிச் சொல்லியது ... ... ... 87
கிருஷ்ணன பீமசேனனுக்குக் கோரையைக் கிழித்துக் காண்பித்தது ... 87
கிருஷ்ணன் திரும்பவும் கோரையைக் கிழித்துக் கால் மாற்றிப்போட்டது ... ... ... 88
ஜராசந்த வதம் ... ... ... 88
கிருஷ்ணபீமார்ஜுனர்கள் ஜராசந்தனுடைய தேரிலேறி அரசர்களை விடுவித்து நகரத்துக்கு வெளியில் வந்தது ... 88–89
கிரிவிரஜ நகரத்து ஜனங்கள் கிருஷ்ணனைப் பூஜித்தது ... 89
சிறையிலிருந்து விடுபட்ட அரசர்கள் கிருஷ்ணனைப் பூஜித்து அவருக்குத் தாங்கள் என்ன செய்யவேண்டுமெனக் கேட்டது ... ... ... 89–90
கிருஷ்ணன் தர்மபுத்திரருக்கு உதவிசெய்யும்படி அரசர்களைக் கட்டளையிட்டது ... ... ... 90
அரசர்கள் கிருஷ்ணனுக்குக் காணிக்கை கொடுத்தது ... 90
கிருஷ்ணன் சகதேவனுக்கு அபயமளித்து அவன் கொடுத்த ரத்தினங்களைப் பெற்றுக்கொண்டது ... 90
சகதேவன் கிருஷ்ணபீமார்ஜுனர்களிடம் அனுமதி பெற்றுத் தன் தந்தைக்கு உத்தரக்கிரியைகள் செய்தது ... 90–91

| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | கிருஷ்ணன் சகதேவனிடம் காணிக்கைப் பெற்று அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தது ... | 91 |
| | கிருஷ்ணன் அரசர்களை ராஜசூய யாகத்துக்கு வரக் கட்டளையிட்டு அவர்களோடும் பீமார்ஜுனர்களோடும் இந்திரப்பிரஸ்தம் வந்தது ... ... ... | 91 |
| | கிருஷ்ணன் தர்மபுத்திரரால் மரியாதைசெய்து புகழ்ப் பெற்றது ... ... ... | 92 |
| | தர்மபுத்திரர் ஜராசந்தன் தேரைக் கிருஷ்ணனுக்குக் கொடுத்தது ... ... ... | 92 |
| | சிறையிலிருந்து விடுபட்ட அரசர்கள் தர்மபுத்திரரிடம் விடைபெற்றுத் தத்தம் நகரஞ் சென்றது ... | 92 |
| | கிருஷ்ணன் தர்மபுத்திரர் முதலியோரிடம் விடைபெற்றுத் துவாரகைக்குச் சென்றது ... ... | 92–93 |
| | **திக்விஜய பர்வம்** | |
| 26 | தர்மபுத்திரர் ராஜசூயத்தைப்பற்றிக் கவலையுற்றது ... | 93 |
| | அர்ஜுனன் பொக்கிஷத்தை நிரப்புவது அவசியமென்றது ... ... ... | 94 |
| | பீமார்ஜுன நகுலசகதேவர்கள் திக்விஜயத்திற்குச் சென்றது ... ... ... | 94 |
| 27 | அர்ஜுனன் திக்விஜயம் ... ... ... | 95–104 |
| | அர்ஜுனன் பகதத்தனை ஜயித்தது ... ... | 96 |
| 28 | அர்ஜுனன் சுவேத பர்வதம் வரையில் ஜயித்தது ... | 96–98 |
| 29 | அர்ஜுனன் உத்தர குருக்ஷேத்திரம் வரையில் ஜயித்து இந்திரப்பிரஸ்தம் வந்தது ... ... ... | 98–104 |
| 30 | பீமசேனன் திக்விஜயம் ... ... ... | 104–107 |
| | பீமசேனன் சேதி தேசம் வரையில் ஜயித்தது ... | 104–105 |
| 31 | பீமசேனன் திக்விஜயஞ்செய்து இந்திரப்பிரஸ்தம் வந்தது... | 105–107 |
| 32 | சகதேவன் திக்விஜயம் ... ... ... | 107–122 |
| | சகதேவன் நீலனோடு யுத்தஞ்செய்தது ... ... | 109–110 |
| | அக்நி நீலராஜன் புத்திரியை விவாகஞ்செய்தது ... | 110 |
| | அக்நி நீலராஜனுக்கு வரங்கொடுத்தது ... ... | 110 |
| | சகதேவன் அக்நியைத் துதித்தது ... ... | 110–111 |
| | நீலராஜன் சகதேவனுக்குக் கப்பங் கொடுத்தது ... | 112 |
| 33 | சகதேவன் சோழநாடு பாண்டிய நாடுகளுக்குச் சென்றது... | 113–116 |
| 34 | சகதேவன் கடோத்கசனை அழைத்தது ... ... | 116 |
| | சகதேவன் விபீஷணருக்குத் தூதனுப்பியது ... | 117 |
| | கடோத்கசன் விபீஷணரைக் கண்டது ... ... | 118–119 |
| | கடோத்கசன் தான் வந்த காரியத்தை விபீஷணருக்குத் தெரிவித்தது ... ... ... | 119–121 |
| | விபீஷணர் கப்பங் கொடுத்தது ... ... | 121 |
| | கடோத்கசன் விபீஷணரிடம் திரவியங்களைப் பெற்றுவந்து சகதேவனுக்குக் கொடுத்தது ... ... | 122 |
| | சகதேவன் இந்திரப்பிரஸ்தம் சேர்ந்தது ... ... | 122 |
| 35 | நகுலன் திக்விஜயம் ... ... | 122–124 |

அத்தியாயம் பக்கம்

ராஜசூய பர்வம்

36 கிருஷ்ணன் தனங்களோடு இந்திரப்பிரஸ்தம் வந்தது ... 125
தர்மபுத்திரர் கிருஷ்ணனை ராஜசூயஞ் செய்யும்படி வேண்டினது ... ... ... 126
கிருஷ்ணன் தர்மபுத்திரருக்கு ராஜசூயஞ் செய்ய அனுமதி கொடுத்தது ... ... ... 126
தர்மபுத்திரர் யாக ஸாமக்கிரியைகளைச் சித்தஞ் செய்யக் கட்டளையிட்டது ... ... ... 126
தர்மபுத்திரருடைய ராஜசூயத்தில், பிரம்மா உத்காதா முதலியோர் யார் யாரென்பது ... ... 126–127
சிற்பிகள் யாகசாலை முதலியவற்றைக் கட்டினது ... 127
சகதேவன், பிராமணர் அரசர் முதலியோருக்குத் தூதனுப்பினது ... ... ... 127
தர்மபுத்திரர் யாகதீக்ஷை செய்துகொண்டு யாகசாலைக்குச் சென்றது ... ... ... 127–128
சிற்பிகள் யாகத்துக்கு வருபவர் தங்கும்படி வீடுகளைக் கட்டினது ... ... ... 128
தர்மபுத்திரர் பிராமணர்களுக்குப் பசுக்கள் முதலியவற்றையும் வேலைக்காரிகளையும் கொடுத்தது ... 128
37 அரசர்கள் ராஜசூய யாகத்துக்கு வந்தது ... ... 128–129
38 தர்மபுத்திரர், பீஷ்மர் முதலியோரை அவரவருக்குத் தக்க வேலைகளில் ஏற்படுத்தினது ... ... 130–131
தர்மபுத்திரர் ராஜசூயம் நடத்தியது ... ... 131–132

அர்க்காஹரண பர்வம்

39 யாகத்துக்கு வந்தவர்கள் பல சாஸ்திரங்களைப்பற்றி வாதஞ் செய்தது ... ... ... 132–133
நாரதர் சிந்தித்தது ... ... ... 133–134
கிருஷ்ணன் வசுதேவரைச் சேனைக்கதிபதியாக வைத்தது... 134
யாகத்தில் பூஜிக்கத்தக்கவர்கள் யார் யாரென்பது ... 135
பீஷ்மர் கிருஷ்ணனைப் பூஜிக்க ஆக்ஞாபித்தது ... 135
சகதேவன் கிருஷ்ணனைப் பூஜித்தது ... ... 135–136
சிசுபாலன், பீஷ்மர் முதலியோரைத் தூஷித்தது ... 136
சிசுபாலன் அக்ரபூஜையைப்பற்றித் தர்மபுத்திரரைக் கேட்டது ... ... ... 136
40 சிசுபாலன் தர்மபுத்திரரையும் சபையோரையும் கிருஷ்ணனையும் பார்த்துப் பூஜையை இகழ்ந்து கூறியது ... 136–138
சிசுபாலன் சபையைவிட்டுச் சென்றது ... ... 138
41 தர்மபுத்திரர் சிசுபாலனைச் சாமாதானப்படுத்திச் சொல்லியது ... ... ... 139
பீஷ்மர் சிசுபாலனைக் கோபித்துக் கிருஷ்ணனைப் பூஜிப்பது நியாயமென்றது ... ... 139–141
42 சகதேவன் கிருஷ்ணனைப் பூஜித்தது தகுதிதான் என்றது... 141–142
சகதேவன் கிருஷ்ண பூஜையைப் பொறாதவர்களுக்குத் தன் காலைக் காண்பித்தது ... ... ... 142

அத்தியாயம் பக்கம்
43 பீஷ்மர் உலக சிருஷ்டியையும் நாராயண ரூபத்தையும் கூறியது ... ... ... 143–144
நாராயணன் உலகத்துக்குப் பிரபிதாமகரென்றது ... 144
44 பீஷ்மர் மதுகைடவ வதத்தைக் கூறியது ... ... 144–146
பூமி மேதினி யென்னும் பெயரைப் பெற்ற வரலாறு ... 146
45 வராகாவதார சரித்திரம் ... ... ... 147–148
யக்ஞவராகர் சமுத்திரத்தினின்றும் பூமியைத் தூக்கி நிலைநிறுத்தினது ... ... ... 148
46 நரசிம்மாவதார சரித்திரம் ... ... 148–153
ஹிரண்யகசிபு தவஞ்செய்தது ... ... 148
ஹிரண்யகசிபு பிரம்மதேவரிடம் வரம்பெற்றது ... 149
பிரம்மா, ஹிரண்யகசிபுவை விஷ்ணு வதஞ் செய்வாரென்று தேவர்களுக்குச் சொல்லியது ... ... 150
ஹிரண்யகசிபு மூவுலகங்களையும் பிடித்தது ... 150–151
பிரம்மா முதலிய தேவர்கள் ஹிரண்யகசிபுவின் வதத்திற்காக நாராயணனைப் பிரார்த்தித்தது ... ... 152
நாராயணன் நரசிம்ம ரூபந் தரித்து ஹிரண்யகசிபுவிடம் வந்தது ... ... ... 152
ஹிரண்யகசிபுவின் வதம் ... ... ... 153
47 வாமனாவதார சரித்திரம் ... ... ... 153–155
நாராயணன் வாமனாவதாரஞ் செய்தது ... ... 154
வாமனமூர்த்தி மகாபலியிடம் மூன்றடி நிலம் யாசித்தது ... 154
விஷ்ணு உலகளந்தது ... ... ... 154–155
விஷ்ணு பாதம் வைத்த பிளப்பிலிருந்து நதி உண்டானது ... 155
விஷ்ணு அசுரர்களின் செல்வத்தையும் மூவுலகத்தையும் இந்திரனுக்குக் கொடுத்தது ... ... 155
48 தத்தாத்ரேயாவதார சரித்திரம் ... ... 156–157
கார்த்தவீர்யார்ஜுனன் தவஞ்செய்து வரம்பெற்றது ... 156–157
49 பரசுராமாவதார சரித்திரம் ... ... 158–160
பரசுராமர் கார்த்தவீர்யனை வதஞ்செய்தது ... 158
பரசுராமர் எத்தனை முறை க்ஷத்திரியர்களை அழித்தாரென்பது ... ... ... 159
பரசுராமர் பித்ரு தர்ப்பணஞ் செய்தது ... ... 159
பரசுராமர் பூமியைக் காசியபருக்குக் கொடுத்தது ... 159
கன்னிகைகள் பரசுராமரை ஸௌபனேடு எதிர்க்க வேண்டாமென்றது ... ... ... 159
பரசுராமர் ஆயுதங்களைவிட்டுத் தவஞ்செய்தது ... 160
50 ராமாவதார சரித்திரம் ... ... ... 160–163
திருமால் தசரத புத்திரராக அவதரித்தது ... ... 160
ராமபிரான் சீதையை மணந்தது ... ... 161
ராமபிரான் எத்தனை வருஷம் வனவாசஞ் செய்தாரென்பது ... ... ... 161
ராமபிரான் சீதையைப் பிரிந்தது ... ... 161
ராமபிரான் சுக்ரீவனையும் ஆஞ்சனேயரையும் நேசித்து வாலியை வதஞ்செய்தது ... ... ... 161

| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | ராவணன் முதலியோர் வதம் ... ... | ... 162 |
| | ராமபிரான் விபீஷணருக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தது ... ... | ... 162 |
| | ராமபிரான் ராஜ்ய பரிபாலனஞ் செய்தது ... | ... 162–163 |
| | ராமபிரான் எத்தனை வருஷ காலம் அரசாட்சி செய்தாரென்பது ... ... | ... 162 |
| | பீஷ்மர் கிருஷ்ணாவதாரக் கதையைச் சுருக்கிச் சொன்னது | 163 |
| | பீஷ்மர், விஷ்ணு கல்கியாக அவதரிக்கப்போகிறாரென்றது | 163 |
| 51 | தர்மபுத்திரர், கிருஷ்ண சரித்திரத்தை விரிவாகச் சொல்லும்படி பீஷ்மரைக் கேட்டது ... | ... 164 |
| | தாரகாமய யுத்தம் நடந்தது ... | ... 164–166 |
| | காலநேமியின் வதம் ... ... | ... 166 |
| | விஷ்ணு கிருஷ்ணாவதாரத்துக்கு முன் எத்தனை வருஷங்கள் யோகநித்திரை செய்தாரென்பது | ... 166 |
| | பூமிதேவி தேவசபையில் முறையிட்டது ... | ... 167 |
| 52 | விஷ்ணு தேவர்களைப் பூமியிற் பிறக்கக் கட்டளையிட்டது ... | 167 |
| | விஷ்ணு யதுகுலத்தில் அவதரித்தது ... | ... 168 |
| | தேவேந்திரன், கிருஷ்ணன் தேவகாரியங்களைச் செய்யப் போகிறாரென்றது ... ... | ... 168 |
| | கிருஷ்ணன் சகடாசுரனைக் கொன்றது ... | ... 168 |
| | கிருஷ்ணன் பூதனையைக் கொன்றது ... | ... 169 |
| | கிருஷ்ணன் மருத மரங்களை வீழ்த்தியது ... | ... 169 |
| 53 | கிருஷ்ணன் பாண்டீர மரத்தினடியில் விளையாடினது | ... 170 |
| | கிருஷ்ணன் காளியநர்த்தனம் செய்தது ... | ... 171 |
| | பலராமர் தேனுகாசுரனைக் கொன்றது ... | ... 171 |
| | கிருஷ்ணன் கோவர்த்தன பூஜையில் பாயஸான்னம் புசித்தது ... ... | ... 171 |
| | கிருஷ்ணன் கோவர்த்தன கிரியைத் தூக்கினது ... | ... 171 |
| | இந்திரன் கிருஷ்ணனுக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்தது | ... 171 |
| | கிருஷ்ணன், அரிஷ்டன் கேசி சாணூரன் சுதாமனென்னும் அரசன் இவர்களைக் கொன்றது | ... 172 |
| | பலராமர் முஷ்டிகனைக் கொன்றது ... | ... 172 |
| 54 | பலராமகிருஷ்ணர்கள் குருகுலவாசஞ் செய்தது | ... 172 |
| | பலராமகிருஷ்ணர்கள் எத்தனை நாட்களில் வேதவேதாங்கங்களை அப்யசித்தனரென்பது ... | ... 172 |
| | பலராமகிருஷ்ணர்கள் வில்வித்தை கற்றது | ... 172–173 |
| | பலராமகிருஷ்ணர்கள் எத்தனை தினங்களில் வில்வித்தை கற்றார்களென்பது ... ... | ... 172–173 |
| | ஸாந்தீபனி பலராமகிருஷ்ணர்களைக் குருதட்சிணை கேட்டது ... ... | ... 173 |
| | பலராமகிருஷ்ணர்கள் மீன் வடிவமாயிருந்த அசுரனைக் கொன்றது ... ... | ... 173 |
| | பலராமகிருஷ்ணர்கள் குருதட்சிணை கொடுத்தது | ... 173 |
| | கம்ஸ வதம் ... ... | ... 174 |
| | கிருஷ்ணன் ஜராசந்தனை ஜயித்தது ... | ... 175 |

அத்தியாயம் பக்கம்

55 நரகாசுரன் உற்பத்தி முதலியன ... ... 175
இந்திரன் துவாரகைக்கு வந்தது ... ... 176
இந்திரன் அதிதியின் வேண்டுகோளைக் கிருஷ்ணனுக்குத் தெரிவித்தது ... ... 176
கிருஷ்ணன், முரன் நிசும்பன் ஹயக்ரீவன் விரூபாக்ஷன் நரகன் இவர்களைக் கொன்றது ... ... 177
பூமிதேவி கிருஷ்ணனிடம் குண்டலங்களைக் கொடுத்து நரகனுடைய சந்ததிகளைக் காப்பாற்றும்படி வேண்டினது ... ... 177
கிருஷ்ணன், நரகன் குற்றஞ் செய்ததனால் கொல்லப்பட்டானென்றது ... ... 177–178

56 கிருஷ்ணன் நரகனுடைய அரண்மனையைப் பார்த்தது ... 178
மணிக்குன்றிலிருந்த பெண்கள் தங்களுக்கு நாரதரும் வாயுதேவனும் சொன்னதைக் கிருஷ்ணனுக்குத் தெரிவித்தது 179
மணிக்குன்றிலிருந்த பெண்கள் கிருஷ்ணனைத் தங்களுக்குக் கணவராகும்படி பிரார்த்தித்தது ... ... 180
கிருஷ்ணன் தனங்களையும் பெண்களையும் மணிக்குன்றையும் கருடன் மேலேற்றித் தேவலோகஞ் சென்றது ... 180–181
கிருஷ்ணன் அதிதி தேவிக்குக் குண்டலங் கொடுத்தது ... 181
அதிதி தேவி சத்தியபாமைக்கு வரமளித்தது ... 181

57 கிருஷ்ணன் துவாரகையில் பிரவேசித்தது ... 181–182
துவாரகா நகரச் சிறப்பு ... ... ... 182–186

58 கிருஷ்ணன் பலராமரோடும் இந்திரனோடும் தமது அரண்மனையில் பிரவேசித்தது ... ... 186
இந்திரன் கிருஷ்ண சரித்திரத்தைச் சுருக்கிச் சொன்னது ... 187–188
இந்திரன் தேவலோகஞ் சென்றது ... ... 188

59 கிருஷ்ணனுடைய தாய்மாரும் மனைவியரும் கிருஷ்ணனைக் கண்டது ... ... ... 188–189

60 பாணாசுரன் வரலாறு ... ... ... 190
அநிருத்தன் உஷையை அடைந்தது ... ... 190
பாணன் அநிருத்தனைச் சிறையிலிட்டது ... ... 190
நாரதர், அநிருத்தன் சிறையிலிருப்பதைக் கிருஷ்ணனுக்குத் தெரிவித்தது ... ... ... 190–191
கிருஷ்ணன் பாணனது நகருக்குச் சென்றது ... 191
சிவன் முதலியோர் பாணன் நகரைக் காத்தது ... 191
கிருஷ்ணன், சிவன் முதலியோரை ஜயித்தது ... 191
கிருஷ்ணனுக்கும் பாணனுக்கும் யுத்தம் ... ... 191–192
கிருஷ்ணன் பாணனுடைய கைகளை அறுத்தது ... 192
கிருஷ்ணன், அநிருத்தன் உஷை முதலியோரைக் கருடன் மேல் ஏற்றிவந்தது ... ... ... 192

61 கிருஷ்ணனுடைய வேறு பல ஜயங்கள் ... ... 192–194
கிருஷ்ணனுக்கு மேலானவர் யாருமில்லை என்றது ... 195

62 சகதேவன் அரசர்களை நிராகரித்துக் கூறியது ... 195
நாரதர் சபையில் கிருஷ்ணனைப் புகழ்ந்து கூறியது ... 196

அத்தியாயம் பக்கம்

சகதேவன் பூஜையை நிறைவேற்றினது ... 196
சிசுபாலன் யுத்தத்தைப்பற்றி ஆலோசித்தது ... 196
கிருஷ்ணன் சிசுபாலனது யுத்தஸந்நாகத்தை அறிந்தது .. 196

சிசுபால வத பர்வம்

63 தர்மபுத்திரர் அரசர்கள் விஷயத்தில் தாம் நடந்துகொள்ள வேண்டியதைப் பீஷ்மரிடம் வினவியது ... 197
பீஷ்மர் தர்மபுத்திரருக்கு மறுமொழி கூறியது ... 197–198
64 சிசுபாலன் பீஷ்மரை நோக்கி அவரையும் கிருஷ்ணனையும் இகழ்ந்து கூறியது ... ... ... 198–203
65 பீமஸேனன் சிசுபாலன் சொன்னதைக் கேட்டுக் கோபித்தது 203
பீஷ்மர் பீமஸேனனை அடக்கியது ... ... 203
சிசுபாலன் பீஷ்மரிடம் பீமஸேனனை விடும்படி சொல்வது 203
66 பீஷ்மர் பீமஸேனனுக்குச் சிசுபாலன் வரலாறு கூறியது ... 204–206
67 சிசுபாலன், பாஹ்லீகன் முதலியோரைப் புகழ்ந்து பீஷ்மரையும் கிருஷ்ணனையும் இகழ்ந்தது... ... 206–208
பீஷ்மர் சிசுபாலனை இகழ்ந்தது ... ... 208
68 சிசுபாலன் கிருஷ்ணனை யுத்தத்திற்கு அழைத்தது ... 209
சிசுபாலன் யுத்தஸந்நாகஞ்செய்து தேரேறியது ... 209
கிருஷ்ணன் சிசுபாலனுடைய குற்றங்களை அரசர்களுக்குச் சொன்னது ... ... ... 210–211
அரசர்கள் சிசுபாலனை விட்டு நீங்கியது ... ... 211
சிசுபாலன் கிருஷ்ணனை 'உன்னால் எனக்கு ஆவது என்ன' என்றது ... ... ... 211
69 தர்மபுத்திரர் நாரதரிடம் அபசகுனத்தைப்பற்றிக் கேட்டது 212
நாரதர் தர்மபுத்திரருக்குச் சகுன பலன் கூறியது ... 212–215
சிசுபாலன் யுத்தத்துக்கு வந்தபோது அபசகுனங்கள் உண்டானது ... ... ... 215
70 சிசுபாலன், கிருஷ்ணனையும் பீஷ்மரையும் பாண்டவர்களையும் கொல்வதாகச் சொல்லியது ... ... 215–216
கிருஷ்ணனுக்கும் சிசுபாலனுக்கும் யுத்தம் ... ... 216–219
தாருகன் சிசுபாலனைக் கொல்லும்படி கிருஷ்ணனுக்குச் சொல்லியது ... ... ... 218
கிருஷ்ணன் தாருகனைத் தைரியப்படுத்தியது ... 218–219
சிசுபால வதம் ... ... ... 219
பீமன் முதலியோர் சிசுபாலனுக்குத் தேக சம்ஸ்காரஞ் செய்தது ... ... ... 220
தர்மபுத்திரர் சிசுபாலன் புத்திரனுக்குச் சேதி ராஜ்யாபிஷேகஞ் செய்தது ... ... ... 220
71 தர்மபுத்திரர் ராஜஸூயத்தை நிறைவேற்றியது ... 220–223
72 தர்மபுத்திரர் ரித்விக்குகளைப் பூஜித்து அவப்ருத ஸ்நானஞ் செய்தது ... ... ... 224
யாகத்துக்கு வந்த அரசர்கள் தர்மபுத்திரரைப் புகழ்ந்து விடைகேட்டுச் சென்றது ... ... ... 224–225

அத்தியாயம் பக்கம்

72 பீமன் முதலியோர் அரசர்களை வழியனுப்பியது ... 225
கிருஷ்ணன் தர்மபுத்திரரிடம் விடைபெற்றது ... 225–226
கிருஷ்ணன் குந்தி முதலியோரிடம் விடைபெற்றுச்சென்றது 226
பாண்டவர்கள் கிருஷ்ணனை வழியனுப்பியது ... 226
துரியோதனன் முதலியோர் மரியாதை செய்யப்பெற்றுச் சபையில் வசித்தது ... ... ... 226

த்யூத பர்வம்

73 தர்மபுத்திரர் நண்பர்களுக்கும் பிராதாக்களுக்கும் விடை கொடுத்தது ... ... ... 227
வியாஸர் தர்மபுத்திரரிடம் வந்தது ... ... 227
தர்மபுத்திரர் வியாஸரிடம் உத்பாதங்களைப்பற்றிக் கேட்டது 227
வியாசர் தர்மபுத்திரருக்கு மறுமொழி சொல்லிச் சென்றது 227–228
தர்மபுத்திரர் பிரதிக்ஞை செய்தது ... ... 229
தர்மபுத்திரர் நகரப் பிரவேசஞ் செய்தது ... ... 229
74 துரியோதனன் சபையைப் பார்க்கையில் தடுமாறி விழுந்து பொறாமையுற்றது ... ... ... 229–231
சகுனி துரியோதனனை இளைப்பின் காரணம் கேட்டது ... 231
துரியோதனன் சகுனிக்கு மறுமொழி கூறியது ... 231–232
75 சகுனி துரியோதனனுக்குப் பொறாமை தகாதென்பதையும் அவனுக்கிருக்கும் சகாயங்களையும் கூறியது ... 232–233
துரியோதனனும் சகுனியும் பாண்டவர்களை ஜயிப்பதையும் சூதாட்டத்தையும்பற்றிப் பேசிக்கொண்டது ... 233–234
76 சகுனி திருதராஷ்டிரனுக்குத் துரியோதனனது இளைப்பைக் கூறியது ... ... ... ... 234–235
திருதராஷ்டிரன் துரியோதனனை இளைப்பின் காரணங் கேட்டது ... ... ... ... 235–236
துரியோதனன் தன் குறையைத் திருதராஷ்டிரனுக்குச் சொன்னது ... ... ... ... 236–238
சகுனி தான் பாண்டவர்களைச் சூதில் ஜயிப்பதாகச் சொல்லியது ... ... ... 239–258
திருதராஷ்டிரனும் துரியோதனனும் சூதைப்பற்றிப் பேசிக்கொண்டது ... ... ... 239
திருதராஷ்டிரன் சபை கட்டும்படி சிற்பிகளுக்குக் கட்டளையிட்டது ... ... ... ... 239–259
விதுரர் சூது வேண்டாமென்று திருதராஷ்டிரனுக்குச் சொல்லியது ... ... ... 240–260
திருதராஷ்டிரன் பாண்டவர்களை அழைத்துவரும்படி விதுரருக்குச் சொன்னது ... ... ... 240–260
விதுரர் பீஷ்மரிடம் சென்றது ... ... 240
77 ஜனமேஜயர் சூதுக்குக் காரண முதலியவற்றை விவரித்துச் சொல்லும்படி கேட்டது ... ... 240–241
வைசம்பாயனர் சூதின் காரண முதலியவற்றை விரிவாகக் கூறியது ... ... ... ... 241–242

| அத்தியாயம் | | பக்கம் |
| --- | --- | --- |
| | திருதராஷ்டிரன் சூது வேண்டாமென்று துரியோதனனுக்குச் சொல்லியது ... ... ... | 241–259 |
| | திருதராஷ்டிரன் துரியோதனனைத் துயரத்துக்குக் காரணம் கேட்டது ... ... ... ... | 241–242 |
| | துரியோதனன் ராஜசூய சபையில் தனக்கு நேர்ந்த அவமானங்களைத் திருதராஷ்டிரனுக்குச் சொன்னது ... | 242–243 |
| 78 | துரியோதனன் தர்மபுத்திரருக்கு வந்த காணிக்கைகளைத் திருதராஷ்டிரனுக்குச் சொன்னது ... ... | 243–252 |
| 79 | துரியோதனன் தர்மபுத்திரரின் ஸாம்ராஜ்ய பட்டாபிஷேக முதலியவற்றைக் கூறியது ... ... | 252–254 |
| 80 | திருதராஷ்டிரன் துரியோதனனுக்குப் பாண்டவர்களைப் பகையாமலிருக்கும்படி சொல்லியது ... ... | 254–255 |
| 81 | துரியோதனன் திருதராஷ்டிரனிடம் தன் கருத்தை வற்புறுத்திக் கூறியது ... ... ... | 256 |
| 82 | துரியோதனன் திருதராஷ்டிரனிடம் சூதுக்கு அனுமதி கேட்டது ... ... ... ... | 258 |
| | திருதராஷ்டிரன் சூதைப்பற்றி விதுரரிடம் யோசிப்பதாகச் சொல்லியது ... ... ... | 258 |
| | துரியோதனன் விதுரருடன் ஆலோசித்தல் தகாதென்று திருதராஷ்டிரனுக்குச் சொன்னது ... ... | 258–259 |
| | துரியோதனன் சூதைப் புகழ்ந்து கூறியது ... | 259 |
| | திருதராஷ்டிரன் பெரும் பயம் வந்திருப்பதாகத் துரியோதனனுக்குச் சொன்னது ... ... | 259 |
| | சிற்பிகள் சபை செய்தது ... ... ... | 260 |
| 83 | விதுரர் ஹஸ்திநபுரம் சென்றது ... ... | 261 |
| | தர்மபுத்திரர் விதுரரை எதிர்கொண்டு குசலப்பிரச்னஞ் செய்தது ... ... ... ... | 261 |
| | விதுரர் திருதராஷ்டிரன் கட்டளையைத் தர்மபுத்திரருக்குத் தெரிவித்தது ... ... ... | 261–262 |
| | தர்மபுத்திரர் சூதைப்பற்றி விதுரரின் அபிப்பிராயத்தைக் கேட்டது ... ... ... ... | 262 |
| | விதுரர் தர்மபுத்திரருக்கு மறுமொழி கூறியது ... | 262 |
| | தர்மபுத்திரர் தம்மோடு ஆடவந்திருக்கும் சூதர்கள் யார் யாரென்று வினவியது ... ... ... | 262 |
| | விதுரர் ஆட வந்திருக்கும் சூதர்களைத் தெரிவித்தது ... | 262 |
| | தர்மபுத்திரர் தமது விரதத்தை விதுரருக்குச் சொன்னது ... | 262 |
| | தர்மபுத்திரர் சகோதரர்களோடும் திரௌபதியோடும் புறப்பட்டு ஹஸ்திநபுரம் வந்தது ... ... | 262–264 |
| | தர்மபுத்திரர் நகருக்கு வெளியில் தங்கியது ... | 264 |
| | விதுரர் திருதராஷ்டிரன் எண்ணத்தைத் தர்மபுத்திரருக்குச் சொன்னது ... ... ... | 264 |
| | தர்மபுத்திரர் ஹஸ்திநபுரத்திற் பிரவேசித்தது ... | 264 |
| | தர்மபுத்திரர், திருதராஷ்டிரன் காந்தாரி முதலியோரைச் சந்தித்தது ... ... ... ... | 264–265 |

| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | பாண்டவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட விடுதிகளில் தங்கியது | 265 |
| | பாண்டவர்கள் மாலைக் கடன்களை முடித்து உண்டு துயின்றது ... ... ... | 265 |
| | பாண்டவர்கள் காலையில் எழுந்து சபாப்பிரவேசம் செய்தது | 265 |
| 84 | சகுனிக்கும் தர்மபுத்திரருக்கும் சம்வாதம் ... ... | 266–267 |
| | துரியோதனன் தான் பந்தயம் வைப்பதாகச் சொல்லியது | 267 |
| 85 | பீஷ்மர் துரோணர் முதலியோரும் மற்ற அரசர்களும் சபையில் வந்து உட்கார்ந்தது ... ... | 267–268 |
| | தர்மபுத்திரரும் சகுனியும் ஆடிய சூதில் தர்மபுத்திரர் பொருள்களைத் தோற்றது ... ... | 268–271 |
| 86 | விதுரர் சூதாட்டத்தை நிறுத்தச் செய்யும்படி திருதராஷ்டிரனுக்குச் சொன்னது ... ... ... | 271–273 |
| 87 | துரியோதனன் விதுரரை நிந்தித்துச் சொல்லியது ... | 274–275 |
| | விதுரர் துரியோதனனுக்கு இதமுரைத்தது ... | 275–276 |
| 88 | தர்மபுத்திரர் சூதில் பொருள்களையும் சகோதரர்களையும் தம்மையும் தோற்றது ... ... ... | 276–279 |
| | தர்மபுத்திரர் சூதில் திரௌபதியைப் பந்தயம் வைத்தது ... | 279 |
| | பீஷ்மர் முதலிய சபையோர்கள் துயரமடைந்தது ... | 279–280 |
| | திருதராஷ்டிரன் ஜயத்தைப்பற்றி அடிக்கடி கேட்டது ... | 280 |
| | கர்ணன் துரியோதனன் முதலியோர் மகிழ்ந்தது ... | 280 |
| | சகுனி திரௌபதியை ஜயித்துவிட்டதாகச் சொல்லியது ... | 280 |
| 89 | துரியோதனன் திரௌபதியை அழைத்துவரும்படி விதுரருக்குச் சொன்னது ... ... .... | 280 |
| | விதுரர் துரியோதனனைக் கோபித்துச் சொன்னது ... | 280–282 |
| | துரியோதனன் திரௌபதியை அழைத்துவரும்படி பிராதிகாமிக்குக் கட்டளையிட்டது ... ... | 282 |
| | பிராதிகாமி திரௌபதியை அழைத்தது ... ... | 282 |
| | திரௌபதி பிராதிகாமியைக் கேட்டது ... ... | 282 |
| | பிராதிகாமி, பந்தயம் வைக்கப்பட்ட விவரத்தைத் திரௌபதிக்குச் சொன்னது ... ... | 282 |
| | திரௌபதி தன்னைப் பந்தயமாக வைத்துத் தோற்ற விவரத்தைப்பற்றித் தர்மபுத்திரரைக் கேட்கும்படி பிராதிகாமிக்குச் சொல்லியது ... ... | 282 |
| | பிராதிகாமி திரௌபதியின் கேள்வியைத் தர்மபுத்திரருக்குத் தெரிவித்தது ... ... ... | 283 |
| | துரியோதனன், 'பாஞ்சாலி சபைக்கு வந்து கேட்கட்டும்' என்றது ... ... ... | 283 |
| | பிராதிகாமி துரியோதனன் எண்ணத்தைத் திரௌபதிக்குத் தெரிவித்தது ... ... ... | 283 |
| | திரௌபதி தன் கேள்வியைச் சபையோரிடம் கேட்கும்படி பிராதிகாமிக்குச் சொல்லியது ... ... | 283 |
| | பிராதிகாமி திரௌபதியின் கேள்வியைச் சபையோருக்குத் தெரிவித்தது ... ... ... | 283 |
| | சபையோர் மறுமொழி சொல்லாமல் மௌனமாயிருந்தது | 283 |

அத்தியாயம் பக்கம்


தர்மபுத்திரர் திரௌபதிக்குத் தூதனுப்பியது ... 283–284
துரியோதனன் மறுபடியும் பிராதிகாமிக்குக் கட்டளை யிட்டது ... ... ... 284
பிராதிகாமி சபையோரைத் திரும்பவும் கேட்டது ... 284
துரியோதனன் திரௌபதியைப் பிடித்துவரும்படி துச்சாஸனனுக்குக் கட்டளையிட்டது ... ... 284
துச்சாஸனன் திரௌபதியை அழைத்துச் சொல்லியது ... 284
துச்சாஸனன் திரௌபதியைக் கூந்தலைப் பிடித்திழுத்து வந்தது ... ... ... 284–285
திரௌபதி துச்சாஸனனைக் கோபித்துச் சொல்லியது ... 285
துச்சாஸனன் திரௌபதியைப் பரிகசித்து இகழ்ந்து சொல்லியது ... ... ... 285
துச்சாஸனன் இரைந்து சிரித்துத் திரௌபதியைத் தாஸியென்றழைத்தது ... ... ... 286
கர்ணனும் சகுனியும் துச்சாஸனனைப் புகழ்ந்தது ... 286
பீஷ்மர் திரௌபதிக்குச் சொல்லியது ... ... 286
திரௌபதி சபையோரைக் கேட்டது ... ... 287
துச்சாஸனன் திரௌபதியைத் தூஷித்தது ... 287
90 பீமஸேனன் திரௌபதியைப் பந்தயம் வைத்தது தகாதென்றது ... ... ... 287–288
அர்ஜுனன் பீமஸேனனைச் சமாதானஞ் செய்தது ... 288
விகர்ணன் சபையோரைத் திரௌபதிக்கு மறுமொழி சொல்லும்படி சொல்லித் தன் கருத்தையும் கூறியது ... 288–289
அரசருக்கு விசனங்கள் எவை என்பது ... 289
கர்ணன் விகர்ணனைக் கோபித்துச் சொல்லியது ... 289–290
துச்சாஸனன் திரௌபதியின் வஸ்திரத்தை இழுத்தது ... 290
திரௌபதி கிருஷ்ணனைத் துதித்தது ... ... 290–291
கிருஷ்ணனருளால் திரௌபதிக்கு அநேக வஸ்திரங்கள் உண்டானது ... ... ... 291
துச்சாஸனன் களைத்து உட்கார்ந்தது ... ... 291
பீமஸேனன் சபதஞ் செய்தது ... ... 291–292
விதுரர் கேள்விக்கு மறுமொழி சொல்வது அவசியமென்றது ... ... ... 292-294
தெரிந்தும் மறுமொழி சொல்லாதவனுக்கும், தப்பாக மறுமொழி சொல்கிறவனுக்கும் வரும் பலன்கள் யாவையென்பது ... ... ... 292
விரோசனனும் சுதன்வாவும் தம்மில் யார் பெரியவரென்று பிரஹலாதனைக் கேட்டது ... ... 292–293
பிரகலாதன் கசியபரிடம் சந்தேகங் கேட்டது ... 293
கசியபர் பிரகலாதனுக்கு மறுமொழி கூறியது ... 293–294
கேள்விக்கு மறுமொழி சொல்லாதவன், கண்டதை உள்ளபடி சொல்லாதவன், தப்பாக மறுமொழி சொல்லுகிறவன், பொய் சொல்லுகிறவன், உண்மை சொல்லுகிறவன் இவர்களுக்கு வரும் பாப புண்ணியங்கள் ... 293–294

| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | எப்படிப்பட்டவன் சாட்சியாவா னென்பது | ... 294 |
| | பிரகலாதன், 'சுதன்வா பெரியவன்' என்றது | ... 294 |
| | சுதன்வா விரோசனனை க்ஷமித்துவிட்டது | ... 294 |
| | துச்சாஸனன் திரௌபதியை இழுத்தது ... | .. 294–300 |
| 91 | திரௌபதி சபையில் புலம்பியது ... | ... 294–295 |
| | பீஷ்மர் திரௌபதிக்கு யுதிஷ்டிரரே மறுமொழி கூறவேண்டு மென்றது ... ... | ... 295–296 |
| 92 | துரியோதனன் திரௌபதிக்குப் பாண்டவர்களே மறுமொழி சொல்லட்டு மென்றது ... ... | ... 297 |
| | பீமஸேனன் சபையில் கோபித்துச் சொல்லியது | ... 297–298 |
| | பீஷ்மர் முதலியோர் பீமனை அடக்கினது | ... 298 |
| | கர்ணன், வேறு கணவனை அமையும்படி திரௌபதிக்குச் சொல்லியது ... ... | ... 298 |
| | துரியோதனன் திரௌபதிக்கு இடதுதொடையைக் காண்பித்தது ... ... | ... 299 |
| | பீமஸேனன் துரியோதனனது தொடையைப் பிளப்பதாகப் பிரதிஜ்ஞை செய்தது ... | ... 299 |
| | விதுரர் கௌரவர்களுக்கு அழிவுவந்த தென்றது | ... 299–300 |
| | அர்ஜுனன் தர்மபுத்திரரின் சுதந்திரத்தைப்பற்றிச் சொல்லியது ... ... | ... 300 |
| | கர்ணன் திரௌபதியை இஷ்டம்போல அனுபவிக்கும்படி துரியோதனனுக்குச் சொல்லியது ... | ... 300 |
| | சகுனி கர்ணனைப் புகழ்ந்தது ... ... | ... 300 |
| | திரௌபதி கதறியது ... ... | ... 300–301 |
| | விதுரர் தம் சொல்லைத் துரியோதனன் கேட்பானோ கேளானோ என்றது ... ... | ... 301 |
| | விதுரர் துரியோதனாதியரைத் தடுக்கும்படி திருதராஷ்டிரனுக்குச் சொல்லியது ... ... | ... 301 |
| | பீமஸேனன் முதலியோர் துரியோதனாதியரைக் கொல்வதாகச் சபதஞ் செய்தது ... ... | { 301–303<br>326–327 |
| | திரௌபதி துரியோதனாதியரைச் சபித்தது ... | ... 303 |
| | திரௌபதி சபித்தபோது பூமாரி பொழிந்தது | ... 303 |
| 93 | அர்ஜுனன் யுத்தஸங்காசஞ் செய்ததும், தர்மபுத்திரர் அடக்கியதும் ... ... | ... 303–304 |
| | திருதராஷ்டிரனது அக்னிஹோத்திரசாலையில் அபசகுனங்கள் உண்டானதைச் சொன்னது ... | ... 305 |
| | திருதராஷ்டிரன் திரௌபதிக்கு வரங்கொடுத்தது | ... 305–306 |
| | யார் யார் எத்தனை எத்தனை வரம் பெறத்தக்கவரென்பது... | 306 |
| 94 | கர்ணன் துரௌபதியால் பாண்டவர்கள் மீட்கப்பட்டார்களென்றது ... ... | ... 306 |
| | எப்படியிருப்பவன் மனித னென்பது ... | ... 306 |
| | மேலோர்களின் குணம் ... ... | ... 307 |
| 95 | திருதராஷ்டிரன் தர்மபுத்திரருக்கு இந்திரப்பிரஸ்தம் சென்று அரசாள விடைகொடுத்தது ... | ... 308–309 |

| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | **அநுத்யூத பர்வம்** | |
| 96 | துரியோதனன் பாண்டவர்களைச் சுயேச்சையாக விடக்கூடாதென்றது ... ... ... | 310–311 |
| | துரியோதனன், திருதராஷ்டிரனுக்குக் கார்த்தவீர்யார்ஜுனன் பரசுராமர் இவர்களுடைய சரித்திரத்தைச் சொல்லியது ... ... ... | 311–314 |
| 97 | துரியோதனன், அர்ஜுனன் பராக்கிரமங்களையும் அவனிடம் தனக்கிருக்கும் பயத்தையும் திருதராஷ்டிரனுக்குச் சொல்லியது ... ... ... | 314-319 |
| | துரியோதனன் மறுபடியும் சூதாடத் திருதராஷ்டிரனிடம் அனுமதி கேட்டது ... ... ... | 319–320 |
| | திருதராஷ்டிரன் மறுமுறை சூதுக்கு அனுமதி கொடுத்தது | 320 |
| | காந்தாரி மறுமுறை சூதுக்கு அனுமதி கொடாதிருக்கும்படி திருதராஷ்டிரனுக்குச் சொல்லியது ... ... | 320–321 |
| 98 | பிராதிகாமி தர்மபுத்திரரை அழைத்ததும், பாண்டவர்கள் திரும்பி வந்ததும் ... ... ... | 321–322 |
| | சகுனி சூதுக்குப் பந்தயத்தைச் சொன்னது ... | 322 |
| | தர்மபுத்திரர் மறுமுறை சூதாடித் தோற்றது ... | 323 |
| 99 | துச்சாஸனன் பாண்டவர்களையும் திரௌபதியையும் இகழ்ந்து கூறியது ... ... ... | 324–325 |
| | துச்சாஸனனும் துரியோதனனும் பீமனை அவமதித்ததும், அவன் அவர்களுக்கு மறுமொழி கூறியதும் ... | 325–326 |
| 100 | தர்மபுத்திரர் பீஷ்மர் முதலியோரிடம் வனஞ் செல்ல விடை கேட்டது ... ... ... | 327–328 |
| | விதுரர், குந்தி தமது கிருகத்திலிருக்கட்டும் என்றது ... | 328 |
| | விதுரர், தர்மபுத்திரருக்குப் புத்திகூறி விடைகொடுத்தது... | 328–329 |
| 101 | நகரத்து ஜனங்கள் பிரலாபித்து, 'பாண்டவர்களோடு வனஞ் செல்வோம்' என்றது ... ... | 330–331 |
| | குந்தி திரௌபதியிடமும் பாண்டவர்களிடமும் பலவாறு புலம்பித் திரும்பியது ... ... ... | 332–334 |
| | பாண்டவர்கள் வனஞ் சென்றது ... ... | 334 |
| 102 | விதுரர், பாண்டவர்கள் வனஞ்செலலும்போது செய்து சென்ற குறிகளையும், அவற்றின் கருத்தையும், ஜனங்கள் துக்கித்ததையும், அபசகுனங்கள் உண்டானதையும் திருதராஷ்டிரனுக்குக் கூறியது ... ... | 335–337 |
| | நாரதர், கௌரவர் அழிவாரென்றது ... ... | 337 |
| | துரோணர், யுத்தத்தில் கௌரவர்களும் தாமும் அழிவது நிச்சயமென்றது ... ... ... | 337–338 |
| 103 | ஸஞ்சயன் துரியோதனன் முதலியோர் அக்கிரமஞ் செய்தனரென்று திருதராஷ்டிரனுக்குச் சொன்னது ... | 339–340 |
| | திருதராஷ்டிரன், திரௌபதி அவதிக்கப்பட்டபோது உண்டான அபசகுனங்களையும், விதுரர் சொல்லைத் தான் கேளாமற்போனதையும் ஸஞ்சயனுக்குச் சொல்லியது ... | 340–341 |


**ஸபா பர்வ விஷய ஸூசிகை முற்றிற்று.**

ஸ்ரீ:

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம: ॥

ஸ்ரீ க்ருஷ்ணத்வைபாயனாய நம: ॥

# ஸ்ரீமஹா பாரதம்

## ஸபா பர்வம்

முதலாவது அத்தியாயம்

### மந்த்ர பர்வம்[1]

நாராயணம் நமஸ்க்ருத்ய நரம் சைவ நரோத்தமம் ।
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத் ॥

**(அர்ஜுனனுக்குப் பிரதியுபகாரத்தைச் செய்யக் கருதின மயனைப் பார்த்து, தர்மராஜருக்கு ஒரு ஸபை செய்யும்படி கிருஷ்ண பகவான் கட்டளையிட்டது)**

ஜனமேஜயர், "பிராமணோத்தமரே! ஜயிப்பவரிற் சிறந்தவனும் மஹா பராக்கிரமசாலியுமாகிய அர்ஜுனன், அப்போது மயனை விடுவித்த பிறகு, என்ன செய்தானென்பதை எனக்குச் சொல்லும்" என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லுகிறார்:

அரசரே! உமது கூடஸ்தருடைய சரித்திரத்தை ஊக்கத்துடன் கேளும். அரசர்க்கரசே! ஆயுதந்தரிப்பவர்களிற் சிறந்த மஹா வீரனான அந்த அர்ஜுனன், மயனை விடுவித்து, பூமியில் அரசர்கள் பெறுதற்கரிய காண்டீவமென்னும் சிறந்த வில்லையும், அம்புகள் வற்றாத இரண்டு தூணிகளையும், திவ்யாஸ்திரங்களையும், தேரையும், கொடியையும், வெள்ளைக் குதிரைகளையும் அக்னி பகவானிடமிருந்து பெற்றதனால் மிகுந்த ஸந்தோஷமுள்ளவனாகி மயனுடன்கூட அங்கே யிருந்தான். அப்போது அர்ஜுனனால் காப்பாற்றப்பட்ட மயன், அவன் செய்த நன்றியை நினைத்து அவனைப் பலமுறை மரியாதை செய்து, கண்ணபிரான் முன்னிலையில் கைகளைக் குவித்துக்கொண்டு இன்சொல்லால் பேசத் தொடங்கினான். 'குந்தியின் மைந்தனே! சீறின கண்ண,

1. உரை விசேஷத்தை ஆதி பர்வம் முதற் பக்கம் குறிப்பிற் காண்க.

பிராணிடத்திலிருந்தும் எரிக்கத் தொடங்கிய அக்னியிடத்தி லிருந்தும் உன்னால் நான் காக்கப்பட்டேன். உனக்கு என்ன செய்யக்கடவேன்? பகைவரைத் துயரப்படுத்துகிறவனே! யான் அஸுரர்களுக்கு விசுவகர்மாவன்றோ? அதனால், நான் மற்றவர் செய்யக்கூடாததும் நீ வியக்கத்தக்கதுமாகிய ஒன்றை உனக்குச் செய்வேன்' என்றான். அவனால் இவ்வாறு உரைக்கப்பட்ட மஹாவீரனான அர்ஜுனன், சற்றுநேரம் சிந்தித்து [1] மாயைகள் தெரிந்தவனாகிய மயனைப் பார்த்து நகைத்துக்கொண்டு, 'ஓ! அஸுர சிரேஷ்டனே! நீ எனக்கு எல்லாம் செய்ததுபோலவே (நினைக்கிறேன்). நீ ஸுகமாகச் செல். என்மேல் என்றும் அன்பு டையவனாயிரு. நாங்களும் உன்மேல் அன்புடையவராயிருப்போம். உதவிபெற்றவனிடத்தில் பிரயோஜனத்தை அங்கீகரியேனென் பது எனது விரதம்' என்று சொன்னான். அதைக் கேட்ட மயன், 'புருஷ சிரேஷ்டனும் பிரபுவுமான அர்ஜுனா! நீ சொல்வது உனக்குத்தகும். ஆனால், உன்னிடம் அன்பை முன்னிட்டு நான் உனக்கு ஒன்று செய்யக் கருதுகிறேன். பாண்டவனே! யான் அஸுரர்களின் விசுவகர்மாவான மஹா [2] கவியன்றோ. அப்படிப் பட்ட நான் உனக்காக ஏதாவது ஒன்றைச் செய்யவிரும்புகிறேன். அர்ஜுனா! முன்னம் அஸுரர்களுக்கு அரண்மனைகளும், அழகி யவையும், ஸுகமான உட்புறங்களுடையவையும், ராஜபோகங்க ளுக்குரிய அளவற்ற பொருள்கள் நிரம்பினவையுமான தோட்டங் களும், மனதைக் கவருகின்ற பலவகைத் தடாகங்களும், விசித்திர மான ஆடைகளும், நினைத்தபடி செல்லும் ரதங்களும், சிறந்த கோபுரங்களோடும் பிராகாரங்களோடுங்கூடிய பெரிய நகர்களும், அற்புதமான அனேகம் சிறந்த வாகனங்களும், ஸுகிப்பதற்கு மிகத் தகுதியான அழகிய குகைகளும் என்னால் செய்யப்பட்டன. பல்குனா! அதனால் உனக்கும் ஏதாவது ஒன்று செய்ய விரும்பு கிறேன்' என்று கேட்க, அர்ஜுனன், 'நீ உயிருக்கு நேர்ந்த அபாயத்திலிருந்து என்னால் விடுபட்டவனாக நினைத்துக்கொண் டிருக்கிறாய். இவ்வாறிருக்கையில், உன்னைக்கொண்டு ஒன்றைச் செய்வித்துக்கொள்ள என்னால் இயலாது. அஸுரனே! உனது எண்ணம் பயன்படாமற்போவதும் எனக்கு இஷ்டமில்லை. ஆதலால், நீ கிருஷ்ணருக்கு ஏதாவது செய்யலாம். அதனால், எனக்குப் பிரதியுபகாரம் செய்ததாகும்' என்று சொன்னான். புருஷ சிரேஷ்டரான ஜனமேஜயரே! பிறகு, மயனுக்காக (அர் ஜுனனால்) கேட்டுக்கொள்ளப்பட்ட கண்ணபிரான், 'இவனுக்கு

1. மாயை-அற்புதங்களைக் காட்டும் வித்தை.
2. விசித்திரமான கற்பனைகள் செய்யத்தக்கவன்.

என்ன கட்டளையிடலாம்?' என்று சிறிது நேரம் சிந்தித்தார். உலகநாதரும், பிரஜைகளைக் காப்பவருமாகிய மாதவர், 'இவனை ஒரு ஸபையைச் செய்யச்சொல்லலாம்' என்று தம் மனத்தில் நிச்சயித்துக்கொண்டு, அந்த மயனைப் பார்த்து, 'சிற்பிகளிற் சிறந்தவனே! நீ நம் விருப்பத்தைச் செய்ய எண்ணமுள்ளவனானால், இவ்வுலகத்திய எவ்வகையான ஸபை தர்மராஜருக்குப் பிரியமாயிருக்குமென்று நினைக்கிறாயோ, மானிட லோகம் அனைத்திலுமுள்ள மனிதர்கள் உன்னுடைய எந்த வேலையைக் கண்டு அதைப்போலச் செய்யமாட்டாமல் ஓய்ந்து நிற்பார்களோ, எதில் தேவர்களும் அஸுரர்களும் மனிதர்களும் எண்ணும் விஷயங்கள் உன்னாற் செய்யப்பட்டதை யாம் காண்போமோ அவ்வகையான ஸபையைச் செய்வாயாக' என்று கட்டளையிட்டார். அப்போது மயன் மனமகிழ்ச்சியுடன் அவர் சொல்லை ஏற்றுக்கொண்டு தேவஸபைக்கு ஒப்பான அழகிய ஸபையைத் தர்மராஜருக்குச் செய்யத் தொடங்கினான். பிறகு, கிருஷ்ணனும் அர்ஜுனனும் தர்மராஜரான யுதிஷ்டிரருக்கு நடந்தவற்றையெல்லாம் தெரிவித்து மயனைக் காண்பித்தனர். அப்போது யுதிஷ்டிரர் அந்த மயனுக்குத் தக்கபடி மரியாதைசெய்தார். ஜனமேஜயரே! அந்த மயன் அந்த மரியாதையைக் கொண்டாடிப் பெற்றுக்கொண்டான். ஜனமேஜய ராஜரே! அந்த மயன் அப்போது அந்தப் பாண்டவரிடத்தில் [1] விருஷபர்வாவென்னும் அஸுரனுடைய சரித்திரத்தைச் சொன்னான். அந்த அஸுர விசுவகர்மாவான மயன் கொஞ்சகாலம் ஓய்ந்திருந்து, மனதில் ஆலோசனைசெய்து மகாத்மாக்களான பாண்டவர்களுக்குச் சபை ஒன்று செய்யத் தொடங்கினான். சிறந்த ஸாமர்த்தியமுள்ள மயன், மகாத்மாவான கிருஷ்ணன், பாண்டவர்கள் இவர்களுடைய அனுமதியின்மேல் ஒரு சுபதினத்தில் ஆரம்பத்திற்குரிய மங்களங்களைச் செய்து, ஆயிரக்கணக்கான பிராமண சிரேஷ்டர்களுக்குப் பாயஸான்னம் அளித்து ஸந்தர்ப்பணை செய்து, அவர்களுக்கே மிக்க பொருள்களையும் தானஞ்செய்து, எல்லா ருதுக்களின் சிறப்புக்களும் நிரம்பினதும், பதினாயிர முழம் விசாலமுள்ளதும், தேவ ஸபையைப் போன்றதுமான அழகான சபையைச் செய்வதற்காகச் சுற்றிலும் அளவு எடுத்தான்.

---

1. ஆதி பர்வம் 262-ம் பக்கம் பார்க்க.

## இரண்டாவது அத்தியாயம்

## மந்த்ர பர்வம் (தொடர்ச்சி)

### (கண்ணபிரான் துவாரகைக்குச் செல்லுவதும், பாண்டவர்கள் வழி கொண்டுவிட்டதும்)

பூஜைக்குரியவரான கண்ணபிரான் காண்டவப்பிரஸ்தத்தில் அன்புள்ள பாண்டவராற் பூஜிக்கப்பெற்று சுகமாக வசித்திருந்த பிறகு, தமது தந்தையைப் பார்க்க ஆவலுள்ளவராய்த் தமது நகரம் செல்வதற்கு எண்ணங்கொண்டார். உலகமெல்லாம் வந்தனஞ்செய்வதற்குரியவரும், விசாலமான கண்களையுடையவருமான கண்ணபிரான் தர்மபுத்திரரிடத்திலும் குந்தியினிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு தம் தந்தையின் உடன்பிறந்தவளான குந்தியின் பாதங்களைத் தலையால் வணங்கினார். மிக்க புகழ்பெற்ற அந்தக் கிருஷ்ண பகவான் குந்தியினால் தழுவிக்கொண்டு உச்சியில் மோக்கப்பெற்ற பிறகு, தம் சகோதரியைப் பார்த்தார். அவளருகிற் சென்று அன்பினால் கண்ணீர் விட்ட கிருஷ்ணபகவான், அழுகியும் அழகாகப் பேசுகிறவளுமான அந்த சுபத்திரைக்குச் சிறந்த பயனைத் தருவதும் உண்மையும் நன்மையும் இனிமையும் நியாயமும் மிகச் சிறந்ததுமான வாக்கியத்தைக் கூறினார். அவள் தன் உறவினர்களுக்குச் செலுத்தும்படி சில வசனங்களை உரைத்துப் பலமுறை தலையால் வணங்கி வந்தனஞ்செய்து கிருஷ்ணரைப் பூஜித்தாள். அவளால் பூஜிக்கப்பெற்ற கோவிந்தர், அந்தப் பெண்ணரசிக்கு ஆசீர்வாதஞ்செய்து அவளிடம் விடைபெற்றுக்கொண்டு திரௌபதியையும் தௌம்ய முனிவரையுங் கண்டனர். புருஷோத்தமரான கண்ணபிரான் தௌம்யருக்கு முறைப்படி வந்தனஞ்செய்தார். வித்வானும் பலசாலியுமான கிருஷ்ண பகவான் திரௌபதிக்கு இனிய வார்த்தை சொல்லி, சுபத்திரையை அவளிடம் ஒப்புவித்து, அர்ஜுனனுடன் கூட அவனுடைய சகோதரர்களிடம் சென்றார். அவ்வைந்து சகோதரர்களாலும் சூழப்பட்டு, அமரர்களாற் சூழப்பட்ட தேவேந்திரன்போலிருப்பவரும், கருடக்கொடியையுடையவருமான மாதவர் யாத்திரைக்காலத்திற்குரிய சடங்குகளைச் செய்யக் கருதி, நீராடி நிர்மலராய் அலங்காரங்கள் செய்துகொண்டு தேவர்களையும் பிராம்மணர்களையும் நமஸ்காரஞ்செய்து பலவகைப் புஷ்ப சந்தனங்களினால் பூஜித்தார். நிலைதவரு தவரிற் சிறந்தவரான கிருஷ்ண பகவான் யாத்ரா காரியங்களெல்லாவற்றையும் செய்து புறப்பட்டார். அந்த வாஸுதேவர் வெளிக்கட்டை விட்டுப் புறப்

ட்டுவந்து யோக்கியர்களான பிராமணர்களால் ஸ்வஸ்திவாசனம் செய்வித்துத் தயிர்ப் பாத்திரங்களையும் கனிகளையும் அக்ஷதை களையும்தக்ஷிணையையும்கொடுத்தபிறகு அவர்களைப்பிரதக்ஷிணம் செய்தார். அதன்பின் தாமரைக்கண்ணராகிய கண்ணபிரான் நல்ல திதியும் நல்ல நக்ஷத்திரமுங்கூடிய சிறந்த லக்கினத்தில், சைப்யம், ஸுக்ரீவம் என்னும் குதிரைகள் பூட்டப்பட்டதும், கதை சக்கரம் கத்திசார்ங்கம் முதலிய ஆயுதங்கள் நிரம்பியதும், கருடக் கொடியுள்ளதும், விரைவாகச் செல்லுவதுமாகிய பொன் மயமான அழகிய தேரிலேறிப் புறப்பட்டார். ராஜாவாகிய யுதிஷ்டிரர் சாரதிகளிற் சிறந்தவனாகிய தாருகனென்னும் கிருஷ்ணஸாரதியை விலக்கிப் பிரேமையினால் தாமும் மாதவருடன் தேரிலேறினார். அப்போது யுதிஷ்டிரர் தாமே கடிவாளம் பிடித்தார். பருத்த கைகளையுடைய அர்ஜுனனும் கூட ஏறிப் பொற்காம்போடு கூடிய வெண்சாமரத்தைப் பிரதக்ஷிணமாகச் சுழற்றினான். அவ்வாறே, வீரனான பீமஸேனனும் அந்தத் தேரிலேறி நூறு கம்பிகளுள்ள தும், உயர்ந்த புஷ்பமாலைகளாலும் பொற்காசுகளினாலும் அலங்க ரிக்கப்பட்டதும், வைடூரியக் காம்புள்ளதுமான சிறந்த குடையை விரைவாகக் கிருஷ்ணருக்குப் பிடித்தான். சத்துருக்களை ஸம்ஹரிப்பவர்களாகிய பீமார்ஜுனர்களும், நகுல ஸஹதேவர் களும் புரோஹிதர்களாலும் நகரத்தோராலும் சூழப்பட்ட வர்களாகக் கிருஷ்ணரைப் பின்சென்றனர். சத்துருக்களான வீரர்களைக் கொல்பவராகிய அந்தக் கேசவர் அவ் வைந்து சகோதரர்களாலும் அனுஸரிக்கப்பட்டு, அன்புள்ள மாணுக்கர்களினால் தொடரப்பட்ட ஆசாரியன்போல் விளங்கினார். பிராமண சிரேஷ்டராகிய தௌம்ய முனிவரும் பெரியோர்களால் சூழப்பட்டவராய் சுபத்திரையின் புத்திரனை அபிமன்யுவை ரதத்திலேற்றிக்கொண்டு புறப்பட்டார். சிறந்த மகிமையுள்ள ஸ்ரீவாஸுதேவர் இந்திரப்பிரஸ்தத்தைக் கடந்து ஒரு குரோச தூரத்தில் அர்ஜுனனை நெருங்கத் தழுவி விடைபெற்றுக் கொண்டு தர்மராஜருக்கும் பீமஸேனனுக்கும் நகுல ஸஹதேவர் களுக்கும் மரியாதைசெய்து அவர்களால் திடமாக ஆலிங்கனம் செய்யப்பட்டார்; நகுல ஸஹதேவர்களால் அபிவாதனமும் செய் யப்பெற்றார். ஜனமேஜயரே! எதிரிகளின் நகரங்களை ஜயிப்ப வரும் தர்மம் தெரிந்தவருமாகிய கிருஷ்ண பகவான், அரை யோஜனை தூரம் சென்ற பிறகு யுதிஷ்டிரரிடம் விடைபெற்று, 'நீர் திரும்பலாம்' என்று சொல்லி அவருக்கு அபிவாதனத்தோடு பாதங்களைத்தொட்டு வந்தனஞ்செய்தார். தர்மராஜரான யுதிஷ் டிரர், யாதவ சிரேஷ்டரும் தாமரைக்கண்ணருமான அச்சுதரைத்

தூக்கியெடுத்து உச்சிமோந்து, 'செல்லலாம்' என்று அனுமதி கொடுத்த பிறகு, (ஸமயத்தில் உதவிசெய்வதாக) கிருஷ்ணரும் பாண்டவர்களுக்கு முறைப்படி வாக்குத்தத்தஞ்செய்து பரிவாரங்களுடன் தொடர்ந்துவரும் பாண்டவர்களை பிரயத்தனத்தினால் திரும்பச்செய்து, பிறகு, இந்திரன் அமராவதிக்குச் செல்வது போலத் தமது பட்டணத்திற்கு மகிழ்ச்சியுடன் சென்றார். அப்போது அந்தப் பாண்டவர்கள் அன்பின் மிகுதியினால் அந்தக் கிருஷ்ணரைக் கண்ணுக்கெட்டுகிறவரையில் கண்களாலும், அதன்பின் மனங்களாலும் தொடர்ந்தனர். அவர்களுக்குக் கிருஷ்ணரைக் காண்பதில் ஆசை தீராமலிருக்கையிலேயே கண்ணிறைந்த காட்சியுடைய கண்ணபிரான் விரைவில் கண்களுக்கு மறைந்தார். அந்தப் புருஷ சிரேஷ்டரான பாண்டவர்கள் திரும்ப மனமில்லாதவர்களாகவே கிருஷ்ணனிடம் மனஞ்சென்றவர்களாகி, விருப்பமில்லாமல் விரைவாகத் திரும்பித் தங்கள் நகரம் சேர்ந்தனர். பிறகு, கிருஷ்ணரும் தேரைச் செலுத்தி விரைவாகத் துவாரகைக்குச் சென்றார். எப்போதும் தம் பின்னே வருபவனும், யாதவ வீரனுமான ஸாத்யகியோடும் தாருகனென்னும் ஸாரதியோடுங்கூட விஷ்ணுவாகிய கிருஷ்ணர் கருடனைப்போல வேகமாகத் துவாரகைக்குச் சென்றார். தர்மபுத்திரரும், தர்மந் தவறாதவர்களான சகோதரர்களோடும் சிநேகிதர்களோடுங்கூடத் திரும்பித் தமது சிறந்த நகரத்தில் பிரவேசித்தார். ஜனமேஜய ராஜரே! புருஷ சிரேஷ்டரான தர்மராஜர், சகோதரர்கள், புத்திரர்கள், மித்திரர்கள் எல்லாரையும் அனுப்பிவிட்டுத் திரௌபதியுடன் சேர்ந்து மகிழ்ந்திருந்தார். அவ்வாறே, கிருஷ்ணரும், உக்ரசேனன் முதலிய யாதவ சிரேஷ்டர்களால் கொண்டாடப்பட்டவராக சந்தோஷத்துடன் தம்முடைய சிரேஷ்டமான துவாரகாபுரத்தில் பிரவேசித்தார். தாமரைக் கண்ணராகிய மாதவர் ஆஹுகனையும், முதிர்ந்தவரான தமது தந்தையையும், புகழ்பெற்ற தாயையும், பலராமரையும் நமஸ்கரித்து நின்றார். அந்த ஜனார்த்தனர் பிரத்யும்னனையும், ஸாம்பனையும், நிசடனையும், சாருதேஷ்ணனையும், கதனையும், அநிருத்தனையும், பானுவையும் தழுவிக்கொண்ட பிறகு, பெரியோர்களிடம் விடைபெற்றுக்கொண்டு ருக்மிணியின் கிருகத்துக்குச் சென்றார். எப்போதும் ஸுகியான அந்தக் கிருஷ்ணர் அந்தச் சிறந்த கிருகத்தில் சுகமாக மகிழ்ந்திருந்தார். ஜனமேஜய ராஜரே! அந்தச் சமயத்தில் அஸுர சிரேஷ்டனான மயனும் சிற்ப சாஸ்திரப்பிரகாரம் தர்மபுத்ரருக்கு ஸபா நிர்மாணஞ்செய்தான்.

---

## மூன்றாவது அத்தியாயம்

# மந்த்ர பர்வம் (தொடர்ச்சி)

### ஸபையை அமைத்த வரலாறு

**(மயன் பிந்துஸரஸுக்குச் சென்று ஸபைக்குரிய கருவிகளையும் பீமனுக்குக் கதாயுதத்தையும் அர்ஜுனனுக்குச் சங்கத்தையும் கொண்டுவந்து கொடுத்ததும் ஸபா நிர்மாணமும்)**

பிறகு மயன், ஜயிப்பவர்களிற் சிறந்தவனான அர்ஜுனனைப் பார்த்து, 'நான் உன்னிடத்தில் விடைபெற்றுக்கொள்ளுகிறேன்; சென்று திரும்பவும் வருவேன். தனஞ்சயனே! மூவுலகங்களிலும் பெயர்பெற்றதும் மனிதர்களுக்கு ஆச்சரியத்தையுண்டுபண்ணுவதும் உனக்கும் பாண்டவர்களனைவர்க்கும் சந்தோஷத்தை விருத்திசெய்வதுமாகிய ஒரு திவ்ய ஸபையைச் செய்யப்போகிறேன். பாரதனே! முன்னம் கைலாஸத்திற்கு வடபுறத்தில் மைநாக பர்வதத்தைச் சேர்ந்த பிந்துஸரஸினருகில் அஸுரர்கள் யாகஞ்செய்ய ஆரம்பித்தபோது ஸத்யந் தவறாத வ்ருஷபர்வா வென்னும் அஸுர ராஜாவின் ஸபையில் அழகும் அற்புதமும் ரத்னமயமுமான பொருள்கள் என்னாற் செய்யப்பட்டன. அவை இப்போதிருக்குமாயின் எடுத்துவருவேன். அதன் பிறகு பெயர் பெற்றதும் உள்ளத்தை மகிழ்விப்பதும் எல்லா ரத்னங்களினாலும் அலங்கரிக்கப்பட்டதுமான ஒரு விசித்ர ஸபையைத் தர்ம ராஜருக்கு நிர்மாணஞ்செய்வேன். கௌரவனே! யுவனாச்வன புத்திரனாகிய மாந்தாதாவென்னும் ராஜாவினால் போரில் பகைவரைக் கொன்று வைக்கப்பட்ட உக்ரமான கதாயுதம் ஒன்றும் பிந்துஸரஸில் இருக்கின்றது. பொற்புள்ளிகளினால் சித்ரமும் பெரிதும் பாரத்தைத் தாங்குவதும் உறுதியுள்ளதும் நூறாயிரம் கதாயுதங்களுக்குச் சரியானதும் சத்துருக்களைக் கொல்வதுமாகிய அந்தக் கதாயுதம் உனக்குக் காண்டீவம்போலப் பீமஸேனனுக்குத் தகுதியானது. அழகான சப்தமுள்ள தேவதத்தமென்னப்பட்ட வருணனுடைய மஹாசங்கம் ஒன்று இருக்கிறது. இவற்றை எல்லாம் உனக்காகக் கொடுப்பேன். இதில் சந்தேகமில்லை' என்று சொன்னான். அர்ஜுனனுக்கு இவ்வாறு சொன்னபின், அந்த மயனென்னும் அஸுரன் வடகிழக்கு திசைக்குச் சென்றான். கைலாசத்திற்கு வடக்கே மைநாக பருவதத்தினருகில் மிகப் பெரிதும் உயர்ந்த ரத்னமயமுமான ஹிரண்ய ச்ருங்கமென்னும் மலை இருக்கிறது. அதில் அழகான பிந்து ஸரஸென்னும் தடாகமிருக்கிறது. அங்கேதான் பகீரத மஹா

ராஜன் கங்கையைத் தரிசிப்பதற்காக அநேக வருஷங்கள் வசித்தான். எல்லாப் பூதங்களுக்கும் ஈச்வரராகிய மஹாத்மாவான [1] சங்கரரும் அங்கே அதில் யாகஞ் செய்தார். பரத சிரேஷ்டனே! யாகங்களில் முக்கியமான நூறு அச்வமேதங்களை அங்கே (இந்திரன்) செய்தான். அந்த யாகங்களில் இரத்தினங்களிழைத்த யூபஸ்தம்பங்களும், பொன்மயமான யாகசாலைகளும் சிறப்பில் ஒப்பில்லாதவைகளாகச் செய்யப்பட்டன. ஸஹஸ்ராக்ஷனான இந்திரன் அங்கே யாகஞ்செய்துதான் சித்திபெற்றான். நித்திய புருஷரும் உக்கிரமான தேஜஸுள்ளவருமாகிய [2] பிரம்மதேவர் எல்லா லோகங்களையும் அங்கிருந்து படைத்து அநேகம் பிராணிகளால் சேவிக்கப்பட்டிருக்கிறார். அங்கே நரநாராயணர்களும் பிரம்மாவும் யமனும் ஸ்தாணுவுமாகிய இந்த ஐவரும் ஆயிர யுகங்களாகப் பரப்பிரம்மத்தை உபாஸனை செய்கின்றனர். தர்மத்தைச் சாசுவதமாக நிலைநிறுத்துவதன்பொருட்டு விஷ்ணுவானவர் சிரத்தையோடு அநேக வருஷ காலங்கள் அவ்விடத்தில் ஸத்ர யாகங்கள் செய்தார். அங்குள்ள யூபஸ்தம்பங்கள் பொன்மாலைகளணிந்தவை. யாகசாலைகளும் மிக்க ஒளியுள்ளவை. நாராயணர் அங்கே அநேகமாயிரங்களையும் பத்து லக்ஷங்களையும் (ஸ்வர்ணம், கோ முதலியவை) தானம் செய்தார். ஜனமேஜயரே! அந்த மயன் அங்கே சென்று கதையையும் சங்கத்தையும் எடுத்துக் கொண்டான். அஸுர சிரேஷ்டனான மயன் அங்கே சென்று அம்மலையிலிருந்து மிக அழகான உருவமுள்ள கற்களையும் வ்ருஷபர்வாவின் சபையிலிருந்த ஸ்படிகக் கல் உருவங்களையும் அந்தப் பெரும்பொருள்களைக் காத்திருந்த கிங்கரர்களென்னும் அரக்கருடன் எடுத்துவந்தான். அவற்றையெல்லாம் கொண்டுவந்த பிறகு அவ் வஸுரன், நிகரற்றதும் மூன்று உலகங்களிலும் பெயர்பெற்றதும் தேவர்களுக்குரியதும் ஒப்பற்ற சிறந்த ரத்னங்களாற் சோபிக்கின்றதுமாகிய ஸபையை நிர்மாணஞ்செய்தான். அப்போது அந்தச் சிறந்த கதாயுதத்தைப் பீமனுக்கும், தேவதத்தமென்னும் சிறந்த சங்கத்தை அர்ஜுனனுக்கும் கொடுத்தான். அந்தச் சங்கின் ஒலியினால் பிராணிகள் நடுங்கின. அந்த அஸுர விசுவகர்மாவாகிய மயன் சற்றுநேரம் இளைப்பாறிப் புத்தியில் ஆராய்ந்து ஆயிரக்கணக்கான பிராமண சிரேஷ்டர்களைப் பாயஸான்னத்தினால் திருப்தி செய்வித்து மகாத்மாக்களான பாண்டவர்கள் மகாத்மாவான

---

1. ‘இவ்விடத்தில் பிரம்மா என்றும், பின்னே பிரம்மா என்று வருமிடத்தில், சங்கர’ என்றும் பழைய உரை கூறுகிறது.

2. ஸ்ருஷ்டியைச் சொன்னதனால் இவ்விடத்தில் பிரம்மதேவர் என்பதே பொருத்தம்.

கிருஷ்ணன் இவர்கள் அபிப்பிராயப்படி எல்லாப் பருவங்களின் சிறப்புக்களும் நிரம்பினதும் உயர்ந்த காட்சியும் அலங்காரங்களு முள்ளதுமான ஸபையைச் செய்யத் தொடங்கினன். ஜனமேஜய மஹாராஜரே! பொன்மயமான மரங்களோடு கூடிய அந்தச் சபை சுற்றிலும் பதினயிர முழம் விஸ்தாரமுள்ளதாகவிருந்தது; அக்னி ஸபையைப்போலவும் ஸூர்ய ஸபையைப்போலவும் சந்திர ஸபையைப்போலவும் பிரகாசிப்பதாக மிகச் சிறந்த வடிவத்தோ டிருந்தது. அந்தச் சிறந்த ஸபை பிரகாசமான கதிரோன் ஒளியைத் தன் ஒளியினல் தோற்கச்செய்வதுபோலவும் மேல்கிளம்புகிற ரத்ன கிரணங்களால் ஜொலிப்பது போலவும் விளங்கிற்று. அந்தச் சபை நீருண்ட மேகம்போல ஆகாயத்தை மறைத்து நிற்பதும், நீண்டதும், அகன்றதும், அழகியதும், குற்றமற்றதும், களைப்பைப் போக்குவதும், சிறந்த பொருள்கள் நிரம்பினதும், ரத்னமயமான மதில்களும் வாயில்களுமுடையதும், பற்பல அற்புதங்களமைந்ததும், செல்வம் நிரம்பினதுமாக மயனல் நன்ருகச் செய்யப்பட்டது. புத்திசாலியான மயன் செய்த ஸபையைப்போல அவ்வளவு அழகுள்ளவையாக விஷ்ணு ஸபையும் இந்திர ஸபையும் பிரம்ம ஸபையும் ஆகவில்லை. ஆகாசத்தில் ஸஞ்சரிப்பவர்களும் உக்கிரமான ரூபமும் பெரிய தேகமும் சிவப்பும் பொன்னிறமுமான கண்களும் முத்துச்சிப்பிபோன்ற காதுகளுமுள்ளவர்களும் எதிரிகளைக் கொல்லுகிறவர்களுமாகிய கிங்கரர்களென்னும் மகா பலசாலிகளான அரக்கர்கள் எண்ணுயிரவர்கள் மயனல் கட்டளையிடப்பட்டு அங்கே அந்தச் சபையைக் காத்தும் வகித்துமிருந்தனர்; அந்தச் சபையில் வைடூர்ய மயமான இலைகள் பரவினதும், ரத்ன மயமான காம்புகளுள்ளதும், தாமரை செங்கழுநீர் முதலிய நீலமலர்கள் மலர்ந்திருப்பதும், பலவகை நீர்ப்பறவைக் கூட்டங்களிருப்பதும், பொன்மயமான ஆமைகளும் மீன்களும் இருப்பதனுலும் தாமரைப் பூக்கள் மலர்ந்திருப்பதனுலும் சித்ர வர்ணமுள்ளதும், பல நிறமான படிகக்கற் படிகளுள்ளதும், தெளிந்த ஜலமுள்ளதுமாகிய ஒரு சிறந்த தடாகத்தை மயன் செய்தான். மந்த மாருதத்தினல் அசைக்கப்பட்டதும், முத்துப்புள்ளிகள் நிரம்பினதும், உயர்ந்த ரத்னப் பலகைகளினுல் சுற்றிலும் மேடைகள் கட்டப்பட்டதும், உயர்ந்த ரத்னங்கள் பதிப்பிக்கப்பட்டதுமான அந்தத் தடாகத்திற்கு வந்து அதைப் பார்த்தும் சில அரசர்கள் தெரிந்து கொள்ளவில்லை. அவர்கள் தெரியாமையால் விழவும் விழுந்தனர். அந்த ஸபையின் நாற்புறமும் என்றும் புஷ்பித்தவையும், காற்றினல் ஆடுகின்றவையும், குளிர்ந்த நிழலுள்ளவையும், மனத்தைக் கவருகின்றவையுமான பலவகைப்பெரிய மரங்களும், நல்ல வாஸனை

யுள்ள காடுகளும் அன்னங்கள் நீர்க்காக்கைகள் சக்கரவாகங்கள் இவைகளினால் விளங்கும் தடாகங்களும் நிரம்பியிருந்தன. நீரிலும் நிலத்திலும் முளைத்த தாமரை மலர்கள் எல்லாவற்றினுடைய மணத்தையும் எடுத்துக்கொண்டு அந்தக் காற்றானது பாண்டவர்களை அடைந்தது. ராஜரே! இவ்வாறான அந்தச் சபையைப் பதினான்கு மாத காலத்திற்கதிகநாள் வேலைசெய்து அது முடிந்ததைத் தர்மராஜருக்கு மயன் தெரிவித்தான்.

---

## நான்காவது அத்தியாயம்

## மந்த்ர பர்வம் (தொடர்ச்சி)

### (யுதிஷ்டிரர் ஸபாப் பிரவேசம் செய்தது)

அந்தச் சிறந்த ஸபையைச் செய்த பிறகு, மயன், அர்ஜுனனைப் பார்த்து, 'ஓ! ஸவ்யஸாசியே! எல்லாப் பூதங்களுள்ளும் மிகுந்த சக்தியுள்ள கிங்கரர்களென்னும் அரக்கர் கூட்டம் உன் கொடியின்மேல் இருக்கின்றது. அந்தக் கூட்டம் நீ நாணேற்றிடும் ஓசையினால் மேகம்போலக் கர்ஜிக்கும். அக்னி பகவான் கொடுத்த இந்தச் சிறந்த தேர் சூரியனைப்போலப் பிரகாசிக்கின்றது. தேவலோகத்திய இந்தச் சிறந்த வெண்மையான குதிரைகளும் மிக்க வேகமுள்ளவை. மாயையினாற் செய்யப்பட்ட இந்த வானரக் கொடி, மரங்களில் தடைப்படாமல் வால் நக்ஷத்திரம் போல் உயர்ந்திருக்கிறது. வானரத்தை அடையாளமாகவுடைய (இந்தக்) கொடியானது அநேக நிறங்களாகக் காணப்படும். இந்த உயர்ந்த கொடியானது யுத்தத்தில் எல்லாக் கொடிகளுக்கும் மேற்பட்டு நிற்பதை நீ காண்பாய். இந்த வீரரான அநுமார் (நிஜ உருவத்துடன்) துவஜத்தின்மேல் இருப்பார்' என்று சொன்னான். இவ்வாறு சொல்லி அர்ஜுனனைத் தழுவிக்கொண்டு அவனால் விடை கொடுக்கப்பெற்று மயன் சென்றான். பிறகு, தர்மராஜர் அந்த ஸபையில் பிரவேசித்தார். ஜனமேஜய ராஜரே! நெய்யும் பாலும் தேனும் சேர்ந்த அன்னத்தையும், பக்ஷணங்களையும், கிழங்குகளையும், கனிகளையும், எள்ளன்னத்தையும் [1] ஜீவந்திகையென்னும் புஷ்டியைத் தரும் ஓர் உணவையும், [2] ஹவிஷ்யமென்னும் உணவையும், பன்றிகள் மான்கள் முதலிய

---

1 இதை யவனர் விரிஞ்சி யென்பர், சர்க்கரையைப்போலத் தித்திக்கும் புஷ்பமுள்ள ஒரு மூலிகையென்றும், சீந்திக் கொடியென்றும் சிலர் சொல்லுவர்.

2 ஹவிஷ்யமானது - பனிக்காலத்திலுண்டானவையும் புழுக்காதவையுமான வெள்ளைத் தானியத்தையும் பச்சைப் பயறு, எள், யவை, அசேணுக்கம், இலை, சீரகம், குறுவை

வற்றின் பலவகை மாம்ஸங்களையும், கடித்து மெல்லத்தக்கவற்றையும், உறிஞ்சத்தக்கவற்றையும், குடிக்கத்தக்கவற்றையும் மிகுதியாகக் கொடுத்துப் பல தேசங்களிலிருந்து வந்த பிராமணர்கள் பதினாயிரவருக்குப் போஜனஞ் செய்வித்து, அனேக விதமான புதிய வஸ்திரங்களையும் புஷ்ப மாலைகளையும் அளித்து அவர்களைத் திருப்தி செய்வித்தார். அவர்களில் ஒவ்வொருவருக்கும் அநேகமாயிரம் கோதானஞ் செய்தார். ஜனமேஜயரே! அந்த ஸபையில் புண்யாகவாசனஞ்செய்த கோஷமானது தேவலோகத்தை எட்டினதுபோலிருந்தது. தர்மராஜாவானவர் பல வகை வாத்தியங்களோடும் அநேகம் சிறந்த வாசனைத் திரவியங்களோடும் தேவதைகளைப் பிரதிஷ்டைசெய்து பூஜித்தார். அவ்விடத்தில் மல்லர்களும் நாடகமாடுகிறவர்களும் [1] சல்லர்களும் [2] ஸூதர்களும் [3] வைதாளிகர்களும் மகாத்மாவான தர்மபுத்திரரை சேவித்தனர். அந்தத் தர்மராஜர், சகோதரர்களுடன்கூட அந்தப் பூஜையை அவ்வாறு நடத்தி அந்த அழகான ஸபையில் தேவலோகத்தில் இந்திரனிருப்பதுபோல் மகிழ்ந்திருந்தார். ரிஷிகளும் பற்பல தேசங்களிலிருந்து வந்த அரசர்களும் பாண்டவர்களுடன் அந்தச் சபையில் உட்கார்ந்திருந்தனர். தர்மங்கள் தெரிந்தவரும் இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கினவரும் வேதங்களிலும் வேதாங்கங்களிலும் கரைகண்டவரும் பரிசுத்தரும் குற்றமற்றவருமான அஸிதர், தேவலர், ஸத்யர், ஸர்ப்பிர்மாலி, மஹாசிரஸ், அர்வாவஸு, ஸுமித்ரர், மைத்ரேயர், சுனகர், பலி, தல்பர் புத்ரரான பகர், ஸ்தூலசிரஸ், வியாஸர், சுகர், வியாஸ சிஷ்யர்களாகிய ஸுமந்து, ஜைமினி, பைலர், நாம் (வைசம்பாயனர்), தித்திரி, யாஜ்ஞவல்க்யர், ரோமஹர்ஷணர், [4] அவர் புத்திரர், அப்ஸுஹோமிஷர், தௌம்யர், ஆணிமாண்டவ்யர், கௌசிகர், தாமோஷ்ணீயர், த்ரைபலி, பர்ணாதர், கடஜானுகர், மௌஞ்சாயனர், வாயுபக்ஷர், பாராசர்யர் (இவர் வியாஸரல்லர்), ஸாரிகர், பலிவாகர், ஸினீவாகர், ஸபதபாலா, க்ருதசரமா, ஜாதூகர்ணர், சிகாவான, ஆலம்பர்,

---

இவற்றையும் வாஸ்துகம், ஹிலமோசிகை, காலசாகம் என்னும் கீரைகளையும் கேசுசம் தவிர மற்ற கிழங்கு வகைகளையும், இகதுப்பு, கட்லுப்பு இவற்றையும், பசலின தயிர், பெய்ய ஆடை யெடுக்காத பால், பலாப்பழம், மாம்பழம், கடுக்காய், புளி, ஜீரகம், நாகரங்கம், திப்பிலி, வாழைப்பழம், லவலிப்பழம், தான்றிக்காய் இவைகளையும், வெல்லம் தவிர்க் கரும்பு ஸம்பந்தமான சர்க்கரை கற்கண்டு முதலியவற்றையும் சேர்த்துக் கலக்க பாகமில்லாமல் செய்யப்பட்டது. மேற்கூறியவற்றோடு தேங்காய், நெல்லிக்கனிகளையும் சேர்த்துக் கூறுவதுமுண்டு.

1 விகட்கவிகள். தடிச் சிலம்பம் செய்பவரென்பது பழையவுரை.

2 புராணஞ் சொல்லுகிறவர்கள்.

3 ஸங்கீதத்தினால் காலம் தெரிவிப்பவர். 4 உக்ரச்ரவா.

பாரிஜாதகர், பர்வதர், மஹானுபாவரான மார்க்கண்டேய மாமுனிவர், பவித்ரபாணி, ஸாவர்ணர், பாலுகி, காலவர், ஜங்காபந்து, ரைப்யர், கோபவேகர், ப்ருகு, ஹரிபப்ரு, கௌண்டின்யர், பப்ருமாலி, உசிக்கின் புத்திரரான கக்ஷீவான் என்னும் பழைய ரிஷி, நாசிகேதர், கௌதமர், பைங்கியர், வராஹர், சிறந்த தவமுள்ள சாண்டில்யர், குக்குரர், வேணுஜங்கர், கலாபர், கடர் முதலான ரிஷிச்ரேஷ்டர்கள் அந்தச் சபையில் புண்ய கதைகளைச் சொல்லிக் கொண்டு மகாத்மாவான தர்மராஜாவினிடம் இருந்தனர். அவ்வாறுகவே, க்ஷத்ரிய சிரேஷ்டர்களும் தர்மராஜரை அடுத்திருந்தனர். ஐசுவரியமுள்ளவனும் மகாத்மாவும் தர்மத்தில் மனமுள்ளவனுமாகிய முஞ்சகேது, விவர்த்தனன், ஸங்கிராமஜித், துர்முகன், வீரனான உக்ரஸேனன், கக்ஷஸேனராஜன், தோல்வியடையாதவனாகிய க்ஷேமகன், காம்போஜ தேசத்தரசனான கமடன், பலமும் உற்சாகமும் நிரம்பினவரும் அஸ்திரத் தேர்ச்சியுள்ளவரும் அளவற்ற பராக்கிரமமுள்ளவருமாகிய யவனர்களைக் காலகேயர்களென்னும் அஸுரர்களை வஜ்ராயுதந் தரித்த தேவேந்திரன் நடுங்கச்செய்ததுபோல் தானொருவனாகவே எப்போதும் நடுங்கச்செய்த மஹா பலசாலியான கம்பனன், ஜடாஸுரன், மத்ரதேசத்தரசன், குந்திராஜன், கிராதராஜனான புளிந்தன், அங்கன், வங்கன், புண்ட்ரகன், பாண்டியன், ஓட்ரராஜன், ஆந்த்ரன், ஸுமித்ரன், பகைவரை அழிப்பவனாகிய சைப்யன், கிராதர்களுக்கு அரசனாகிய ஸுமனஸ், யவனராஜன், சாணூரன், தேவராதன், போஜன், பீமரதன், களிங்கதேசத்தரசனான ச்ருதாயுதன், மகதராஜாவான ஜயஸேனன், ஸுகர்மா, சேகிதானன், பகைவரைக் குறைப்பவனாகிய புரு, கேதுமான், வஸுதானன், விதேஹ ராஜனாகிய க்ருதக்ஷணன், ஸுதர்மா, அனிருத்தன், மஹாபலசாலியான ச்ருதாயு, வெல்லமுடியாதவனாகிய அனூபராஜன், க்ரமஜித், ஸுதர்சனன், சிசுபாலன், அவன் புதல்வன், கரூச தேசத்தரசன், தேவதா ரூபமுள்ளவர்களும் வெல்ல முடியாதவர்களுமான ஆஹுகன், விப்ருது, கதன், ஸாரணன், அக்ரூரன், க்ருதவர்மா, சினியின் புத்ரனாகிய ஸத்யகன், பீஷ்மகன், ஆக்ருதி, வீரனான த்யுமத்ஸேனன் ஆகிய யாதவ குமாரர்கள் சிறந்த வில்லாளிகளான கேகய தேசத்தரசர்கள், ஸோமக குலத்தோனாகிய த்ருபதன், மஹாபலசாலியும் அஸ்திரங்களில் தேர்ந்தவனுமாகிய வஸுமான் முதலான அனேகம க்ஷத்ரியத் தலைவர்களும அந்த ஸபையில் குந்தியின் புத்ரரான யுதிஷ்டிரரை உபாஸித்தனர். ஜனமேஜய ராஜரே! அர்ஜுனனை அடைந்து புள்ளிமான் தோலாடையுடுத்து வில்

வித்தை கற்றுக்கொண்ட ப்ரத்யும்னன், ஸாம்பன், யுயுதானன், ஸாத்யகி என்னும் யாதவ குமாரர்களும், ஸுதர்மா, அனிருத்தன், புருஷச்ரேஷ்டனான சைப்யன் முதலான அனேக அரசர்களும் அங்கே இருந்தனர். ஜனமேஜய ராஜரே! தனஞ்சயனுக்கு நண்பனான தும்புருவென்னும் கந்தர்வன் அங்கே எப்போதும் இருந்தான். தன் மந்திரிகளோடுகூடிய சித்ரஸேனனென்னும் கந்தர்வனும் மற்றுமுள்ள இருபத்தேழு கந்தர்வர்களும அப்ஸரஸுகளும் அங்கே வீற்றிருந்த யுதிஷ்டிரரை சேவித்தனர். பாட்டிலும் வாத்தியத்திலும் ஸமர்த்தர்களும் சுருதியிலும் தாளத்திலும் [1] காலப்பிரமாணத்திலும் [2] லயத்திலும் [3] ஸ்தானத்திலும் தேர்ச்சியுள்ளவர்களுமான கின்னரர்கள் அப்போது தும்புருவினால் கட்டளையிடப்பட்டுக் கந்தர்வர்களுடன் சேர்ந்து மனத்தில் உத்ஸாஹத்துடன் சாஸ்திரப்படி தேவலோகத்திய [4] தானங்களைப் பாடிப் பாண்டவர்களையும் ரிஷிகளையும் மகிழ்வித்துக்கொண்டிருந்தனர். விரதம் தவறாதவரும் ஸத்யம் தவறாதவருமான அந்த ஸபையிலிருந்தவர்கள் பிரம்மலோகத்தில் தேவர்கள் பிரம்மாவை சேவிப்பதுபோலத் தர்மராஜரை சேவித்தனர்.

---

## ஐந்தாவது அத்தியாயம்

## மந்த்ர பர்வம் (தொடர்ச்சி)

---

**(நாரதர் ஸபைக்கு வந்து யுதிஷ்டிரரைக் குசலப்பிரச்னம் செய்தது)**

அரசர்க்கரசரான ஜனமேஜய ராஜரே! மகாத்மாக்களான பாண்டவர்களும் பெரியோர்களும் கந்தர்வர்களும் அந்தச் சபையில் அவ்வாறு வீற்றிருக்கையில், தேவக்கூட்டங்களினால் பூஜிக்கப்பட்டவரும், வேதங்கள் உபநிஷத்துக்கள் இதிஹாஸபுராணங்கள் யாகம் முதலிய கருமங்கள் செய்யும் விதிகளின் வேறுபாடுகள், [5] ஸ்துதம், ஸ்தோமம், க்ரஹம், ஸ்தோபம், பதம், கிரமம், சிக்ஷை, அக்ஷரம், இவற்றின் விசேஷங்கள், பூர்வ கல்ப சரித்திரங்கள், ஸ்ருஷ்டிக்கு முன்னுள்ள விஷயங்கள் இவற்றையெல்லாமறிந்தவரும், [6] கல்ப ஸூத்திரங்களின் பொருள்களைச் சரியாக

---

1 த்ருதம், மத்யம், விளம்பிதம் என்று மூன்று காலங்கள்.

2 பாட்டுக்களுக்கும் வாத்தியங்களுக்கும் இருக்கும் ஒற்றுமை.

3 மந்த்ரம், மத்தியம், தாரம் என்னும் மூன்று ஸ்தாயி.

4 ஸ்வரங்களின் ஆரோஹணவரோஹணங்கள்.

5 ஸ்துதம், ஸ்தோமம், க்ரஹம், ஸ்தோபம் இவை மந்த்ரங்கள்.

6 வேதமந்த்ரங்களின் பொருள்களை விளக்கி ஆபஸ்தம்பர் முதலியோர் செய்த ஸூத்ரங்கள்.

அறிந்தவரும், பிரம்மசாரி விரதம் தவறுதவரும், [1] ஊஹம் [2] அபோஹம் இவற்றில் தேர்ந்தவரும், நர்த்தனத்தையும் ஸங்கீதத்தையும் அனுஸரிப்பவரும, எல்லாவற்றிலும் ஒப்பற்றவரும் [3] பதினெண் வித்தைகளுக்கும் மோக்ஷம் போன்றவரும், சிறந்த கீர்த்தியுள்ளவரும், நியாய சாஸ்திரம் தெரிந்தவரும், தர்மங்களின் நுட்பத்தை அறிந்தவரும், ஆறு வேதாங்கங்களையும் அறிந்தவரில் தமக்குயர்வில்லாதவரும, [4] ஒருமை, [5] செயற்கை, [6] வேற்றுமை, [7] கூடுதல் இவற்றையறிந்தவரும, சொல்வன்மையும், தைரியமும், புத்திக்கூர்மையும், மறவாமையும உடையவரும், தந்திரந் தெரிந்தவரும், [8] கவியும், உயர்ந்தவை தாழ்ந்தவை இவற்றின் வித்தியாஸமறிந்தவரும், பிரத்யக்ஷம் அனுமானம் முதலிய பிரமாணங்களின் துணிபை அறிந்தவரும், [9] ஐந்து அங்கங்களோடு கூடிய [10] வாக்கியத்தின் குணதோஷங்களை அறிந்தவரும், ப்ருஹஸ்பதி பேசினாலும் மேன்மேலும் உத்தரம் சொல்ல வல்லவரும், தர்மார்த்த காம மோக்ஷங்களென்னும் புருஷார்த்தங்களின் லக்ஷணங்களை நன்றாக அறிந்தவரும் இந்தப் பிரம்மாண்டத்தின் மேலும் கீழும் மத்தியிலுமுள்ள உலகங்களெல்லாவற்றையும் பிரத்தியக்ஷமாகக் கண்ட மஹாஞ்ஞானியும், [11] ஸாங்கியம், [12] யோகம் இவற்றின் விசேஷங்களையறிந்தவரும், தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் விரோதஞ்செய்யக் கருதுகிறவரும், [13] ஸந்தி [14] விக்ரஹம் இவற்றின் உண்மையை அறிந்தவரும், இங்கிதங்களின் வேறுபாடுகளையறிந்தவரும், [15] ஆறு குணங்களைப் பிரயோகிப்பதில் ஜாக்கிரதையுள்ளவரும், சாஸ்திரங்களெல்லாவற்றிலும் ஸமர்த்தரும், சண்டை மூட்டுவதிலும் ஸங்கீதத்திலும் விருப்பங்கொண்டவரும், எவ்வுலகத்திலும்

---

1 கூட்டுவனவற்றைக் கூட்டிக்கொள்ளல்.

2 விலக்குவனவற்றை விலக்கல்.

3 நாலுவேதம், ஆறு வேதாங்கம், தர்க்கம், மீமாம்ஸை, புராணம், தர்மசாஸ்திரம், ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், ராஜநீதி.

4 ஒரு பயனைத் தலைமையாகக்கொள்வது.

5 அதற்குப் பல உபாயங்களைச் சேர்ப்பது.

6 ஒன்றோடொன்று மாறுபடுங் காரியங்கள்.

7 ஒருகாலத்தில் பல காரியங்கள் கூடுவது.

8 எதிர்கால உணர்ச்சியுடையவரென்பது பழைய உரை.

9 பிரதிஞ்ஞை, ஹேது, உதாஹரணம், உபநயம், நிகமனம்.

10 நியாய வாக்கியம். 11 ஞானயோகம்.

12 கர்ம யோகம். 13 ஸமாதானம். 14 விரோதம்

15 ஸந்தி-ஸ்நேகம், விக்ரஹம்-விரோதம், யானம்-யுத்தத்துக்குப் போவது, ஆஸனம்-தன்னிடத்திலிருப்பது, த்வைதீபாவம்-சேனைகளை இரண்டு வகுப்புக்களாகப் பிரிப்பது, ஸமாச்ரயம்-ஒரு பலவானை அடுப்பது.

ஞ்சரிக்கத் தடையில்லாதவரும், சொன்னவையும் சொல்லாதவையுமான அனேக குணங்கள் நிரம்பினவரும், மிகப்பெரிய மஹிமையும் ஒளியுமுள்ளவருமான தேவரிஷியாகிய நாரத முனிவர் பாரிஜாதர், சிறந்த ஞானமுள்ள பர்வதர், ஸுமுகர், ஸௌம்யர் ஆகியதேவரிஷிகளுடன்கூட எல்லா லோகங்களிலும் ஸஞ்சரித்து வரும்போது, ஸபையிலுள்ள பாண்டவர்களைக் காணவிரும்பி மனோவேகமாக அந்தச் சபைக்கு வந்தார். அந்தப் பிராமணரான நாரதர் ஜயத்தைப்பற்றிய ஆசீர்வாதங்களினால் அந்தத் தர்ம ராஜரைச் சிறப்பித்தார். எல்லாத் தர்மங்களுந் தெரிந்த தர்ம புத்திரர் அந்த நாரத முனிவர் வரக் கண்டு தம்முடைய தம்பிமாருடன்கூட விரைவாக எதிர்கொண்டு அழைத்துப் பக்தியுடன் தலைவணங்கி அபிவாதனஞ்செய்தார். தர்மந் தெரிந்தவரான தர்ம ராஜர் அந்த நாரதருக்குத் தகுதியான ஆஸனத்தைக் கொடுத்து, சாஸ்திரப் பிரகாரம் பசுவையும் [1] மதுவர்க்கத்தையும் அர்க்கியத்தையும் கொடுத்து, ரத்னங்களாலும் விரும்பத்தக்க பொருள்கள் எல்லாவற்றினாலும் அவரைப் பூஜித்தார். யுதிஷ்டிரரிடத்தில் சரியான மரியாதையைப் பெற்று நாரதர் சந்தோஷமடைந்தார். வேதங்களின் கரைகண்டவராகிய அந்த நாரத மகரிஷி பாண்டவர்களனைவராலும் பூஜிக்கப்பெற்றவராகிய யுதிஷ்டிரரைப் பார்த்துத் தர்மார்த்த காமங்களென்னும் புருஷார்த்தங்களைப்பற்றிப் பின்வருமாறு வினவினார் :

'ராஜனே! ராஜ்ய காரியங்கள் சரியாக நடக்கின்றனவா? உன் மனம் தர்மத்தில் விருப்பமுள்ளதாயிருக்கிறதா? சுகங்கள் அநுபவிக்கப்படுகின்றனவா? கருதினது தடைப்படாமலிருக்கிறதா? அறம் பொருள் இன்பமென்னும் மூன்றனுள் அறம் பொருள்களை விடாததும் முன்னோர்களான கூடஸ்தர்களால் நடத்திவரப்பட்டதுமான மேலான காரியத்தை நடத்திவருகிறாயா? பொருளினால் அறத்தையும், அறத்தினாற் பொருளையும், மனமகிழ்ச்சியை முதன்மையாகவுடைய சிற்றின்பத்தினால் அறம் பொருள் இரண்டையும் கெடுக்காமலிருக்கிறாயா? ஜயிப்பவரிற் சிறந்தவனே! வேண்டினவற்றை யெல்லாங் கொடுப்பவனே! காலத்தை அறிந்து தர்மார்த்தகாமங்களை அந்த அந்தக் காலத்தில் பகுத்து அநுஷ்டிக்கத் தவறாமலிருக்கிறாயா? குற்றமற்றவனே! அரசனுக்குரிய ஆறு குணங்களுடன்கூடத் தன் பக்கத்தில் [2] ஏழும், எதிரி பக்கத்தில் ஏழுமாகப் பதினான்காக

1 இனிய ஆகாரம். ஆதிபர்வம் 446-ம் பக்கத்திலும், இந்தப் பர்வம் 76-ம் பக்கத்திலும், வனபர்வம் 189-ம் பக்கத்திலும் குறிப்புக்களிற் காண்க.

2 மந்த்ரம், ஔஷதம், இந்திரஜாலம், ஸாமம், தானம், பேதம், தண்டம்.

கிற்கும் உபாயங்களின் பலாபலன்களைச் செம்மையாகப் பரீக்ஷிக்கிறாயா? ஜயிப்பவரிற் சிறந்தவனே! பாரதனே! தன் பலத்தையும் பிறர் பலத்தையும் ஆராய்ந்து பார்த்துப் பலவான்களுடன் ஸந்திசெய்துகொண்டு [1]எட்டுக் கருமங்களையும் நடத்துகிறாயா? பரதசிரேஷ்டனே! ராஜ்யத்தின் அங்கங்கள் [2]ஏழும் கெடுக்கப்படாமலிருக்கின்றனவா? தனிகர்கள் வறிஞர்கள் அனைவரும் உன்னிடத்தில் அன்புடனிருக்கின்றனரா? தூதர்களாலும் நம்பப்பட்ட வேறு எந்த மனிதர்களாலும் உன்னிடமிருந்தாவது உன் அமைச்சரிடமிருந்தாவது மந்த்ராலோசனை வெளிப்படாமலிருக்கிறதா? நண்பர்களும், பகைவர்களும், மத்தியஸ்தர்களும் செய்யக் கருதியதை நீ அறிகிறாயா? ஸந்தியையும் விக்கிரஹத்தையும் காலத்தை அனுஸரித்துச் செய்துவருகிறாயா? தன் பக்கத்திலும் எதிரி பக்கத்திலும் [3]சேராதவனுக்கும், இருவர்க்கும் [4]பொதுவாக இருப்பவனுக்கும் ஜீவனத்தைத் தடுக்காமலிருக்கிறாயா? வீரனே! உனக்குச் சரியானவர்களும் உன்னைவிட முதிர்ந்தவர்களும் பொருளாசையற்றவர்களாகப் பரிசோதிக்கப்பட்டவர்களும் உனக்குப் புத்தி சொல்லத் தக்கவர்களும், மேற்குலத்தோர்களும் அன்புள்ளவர்களுமான மந்திரிகள் ஏற்படுத்தப்பட்டனரா? பாரதனே! ராஜனுடைய ஜயத்துக்கு மந்திராலோசனை காரணமன்றோ? நண்பனே! மந்திரத்தை வெளிவிடாதவரும் சாஸ்திரங்களில் சமர்த்தருமாகிய அமைச்சர்களால் உனது ராஜ்யம் நன்றாக ரக்ஷிக்கப்பட்டு எதிரிகளால் கெடுக்கப்படாமலிருக்கிறதா? தூக்கத்துக்குட்படாமலிருக்கிறாயா? காலத்திற் கண்விழித்துக்கொள்கிறாயா? காரியங்களை அறிந்து அவற்றைப் பின்னிரவுகளிற் சிந்திக்கிறாயா? தனித்தும் பலருடன் சேர்ந்தும் மந்த்ராலோசனை செய்யாமலிருக்கிறாயா? நீ செய்த மந்த்ராலோசனை தேசமெங்கும் பரவாமலிருக்கிறதா? சிறிய உபாயமும் பெரிய பயனுமுள்ள காரியங்களை ஆராய்ந்தெடுத்து, அப்படிப்பட்டவற்றை இடையூறு வராமலிருக்கும்படி உடனே செய்யத் தொடங்குகிறாயா? சந்தேகிக்கப்பட்ட வேலைகளைத்தும் உன்னால் நேரில் பார்க்கப்படுகின்றனவா? (பார்த்த பிறகு) மறுபடியும் (வேலைக்காரரிடம்) ஒப்பிக்கப்படுகின்றனவா? இவற்றில் கலந்துகொள்வது சாதகம். வேண்டியவர்களும் பொருளாசையில்லாதவர்களும் குலக்கிரமமாக வந்திருப்பவர்களுமான வேலைக்காரர்களால் அந்த வேலைகள் நடத்தப்பட்டுவரு

---

1 பயிர், வர்த்தகம், கோட்டை, அணை, ஆனைபிடித்தல், புதையலெடுத்தல், பொன் மணிகள் எடுத்தல், வெற்றிடங்களில் ஜனங்களைக் குடியேற்றுதல்.

2 தலைவன், அமைச்சன், துணைவர், பொக்கிஷம், தேசம், கோட்டை, படை.

3 உதாஸீனன். 4 மத்யமன்.

கின்றனவா? அரசனே! வீரனே! உன் காரியங்களை யெல்லாம் முடிந்த பிறகும் முடியுந் தருணத்திலுமட்டுமே பிறர் அறிகின்றார்களா? முடியாதனவற்றை யாரும் அறியாமலிருக்கின்றனரா? தர்மங்களிலும் எல்லாச் சாஸ்திரங்களிலும் வித்வான்களான உபாத்தியாயர்கள் ராஜகுமாரர்களும் படைவீரர்களுமாகிய அனைவரையும் பழக்குகின்றனரா? [1] அநேகமாயிரம் மூர்க்கர்களுள் ஒரு கற்றவனை விலைக்கு வாங்குகிறாயா? கற்றவனன்றோ கார்ய சங்கடங்களில் சிறந்த நன்மையைச் செய்வான். துர்க்குணங்களனைத்தும் தனங்களினாலும், தான்யங்களினாலும், ஆயுதங்களினாலும், தண்ணீராலும், யந்திரங்களினாலும், சிற்பிகளாலும், வில்லாளிகளாலும் நிரப்பப்பட்டிருக்கின்றனவா? புத்திசாலியும் சூரனும் ஜிதேந்திரியனும் நன்றாகப் பேசத்தக்கவனுமாகிய மந்திரி ஒருவனே ராஜாவையும் ராஜகுமாரனையும் பெருஞ்செல்வமடையச் செய்வான். ஒருவர்க்கொருவர் தெரியாத மும்மூன்று [2] சாரர்களால் பிறர் பக்கங்களில் [3] பதினெண் தீர்த்தங்களையும் தன் பக்கத்தில் பதினைந்து தீர்த்தங்களையும் அறிகிறாயா? சத்ருக்களை ஸம்ஹரிப்பவனே! நீ எதிரிகளால் அறியப்படாமல் நம்பப்பட்டவனாகி ஊக்கத்தை விடாமல் எதிரிகளெல்லோரையும் எப்பொதும் அறிகிறாயா? கல்வியும், கேள்வியும் மிகுதியாகவுள்ளவனும், பொறாமையற்றவனும், மேன்மேலும் கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறவனுமாகிய மேற்குலத்தானான புரோகிதன் உன்னால் கௌரவிக்கப்பெற்றிருக்கிறானா? சாஸ்திரவிதிகளை அறிந்தவனும் நுண்ணறிவுள்ளவனும் உள்ளும் புறமும் ஒத்தவனுமான அந்தப் புரோகிதன் உனது அக்னி காரியத்தில் ஊக்கமுள்ளவனாகி ஹோமம் செய்ததையும், ஹோமம் செய்வதையும் காலந்தோறும் தெரிவிக்கிறானா? வேதாங்கங்களில் நிபுணனும் கிரஹ நக்ஷத்திரங்களை அறிந்தவனுமாகிய சோதிடன் எல்லா [4] அனிஷ்டங்களையும் பரிகரிக்கத்தக்கவனாக இருக்கிறானா? வேலைக்காரர்களில் உயர்தரத்தார் உயர்ந்த கருமங்களிலும், நடுத்தரத்தார் நடுத்தரக் கருமங்களிலும், தாழ்வானவர் தாழ்ந்த கருமங்களிலும் நியமிக்கப்

1 'அநேகருள் ஒரு கற்றவனைக் கண்டெடுக்கிறாயா?' என்பது கருத்து.

2 ஒற்றர்.

3 ஆதிபர்வம் 578, 579-ம் பக்கங்களிற் காண்க. இவர்களில் மந்திரி, இளவரசன், புரோகிதன் நீங்கலாக மற்றைப் பதினைவரைத் தன் பக்கத்தில் கொள்க. தன் பக்கத்தில் மந்திரி, இளவரசன், புரோகிதன் இவர்களுடன் ராஜாவே எப்பொழுதும் பழகுவதனாலும் அவர்கள் சாரர்களைக் கட்டளையிடும் நிலைமையுள்ளவர்களாதலாலும் அவர்களைச் சாரர்களைக் கொண்டு பரிசோதிப்பது ஒழுங்காகாதென்பது ராஜநீதி சாஸ்திரத்தின் துணிபு.

4 ஆகாயத்திலிருந்து எரிகொள்ளி விழுவது, வால் நக்ஷத்திரம் கிளம்புவது, பூகம்பம் உண்டாவது முதலியன.

பட்டிருக்கின்றனரா? பொருள் விஷயத்தில் பரிசுத்தர்களாகப் பரீக்ஷிக்கப்பட்டவர்களும், தந்தை பாட்டன் பரம்பரையாக வந்தவர்களுமான சிறந்த மந்திரிகளைச் சிறந்த காரியங்களில் நியமிக்கிறாயா? கடுமையான தண்டனையினால் பிரஜைகளை அதிகமாக அச்சப்படுத்தாமலிருக்கிறாயா? பரத சிரேஷ்டனே! உனது ராஜ்யத்தை மந்திரிகள் ஆளுகின்றனரா? யாகம் செய்பவர்கள் கர்மப்பிரஷ்டனை அவமதிப்பது போலவும், பெண்கள் நயமில்லாமல் பிடிக்கும் காமுகனை அவமதிப்பது போலவும் அந்த மந்திரிகள் உன்னை அவமதிக்காமலிருக்கின்றனரா? உனது சேனாபதி உற்சாகமுள்ளவனாகவும், சூரனாகவும், புத்திக்கூர்மையும் துணிவும் தூய்மையுமுள்ளவனாகவும், நற்குலத்தோனாகவும், அன்புள்ளவனாகவும், காரியங்களை முடிக்கும் திறமையுள்ளவனாகவும் இருக்கிறானா? எல்லா வகை யுத்தங்களிலும் தேர்ந்தவர்களும், அஞ்சாதவர்களும், பரிசுத்தர்களும், பராக்கிரமசாலிகளுமான படைத்தலைவர்கள் உன்னால் கௌரவமாக வெகுமதி செய்யப்பெற்று வருகின்றனரா? சேனைக்குக் கொடுக்கத்தக்க உணவையும் வேதனத்தையும் தகுதிப்படி சரியான காலத்தில் கொடுக்கிறாயா? குறைக்காமலிருக்கிறாயா? இந்த வேலைக்காரர்கள் வறுமையால் அன்னத்துக்கும் வேதனத்துக்கும் காலங்கடப்பது பற்றி அரசன் மேல்கோபிப்பார்கள்; அந்த அனர்த்தம் மிகப் பெரிதாக நினைக்கப்படுகிறது. தேசத்தில் பிரதானர்களாயுள்ள ராஜகுமாரர்கள் அனைவரும் உன்னிடத்தில் அன்போடிருக்கின்றனரா? யுத்தத்தில் உயிரையும் விடுவார்களா? தன் விருப்பத்தையே முக்கியமாகக்கொண்ட ஒருவன் உன் ஆஞ்ஞையை மீறியும் மற்ற அமைச்சருடன் சேராமலும், பெரும் பயன் தரத்தக்க அநேக காரியங்களை முழுவதும் தன்னிஷ்டப்படியே நடத்தாமலிருக்கிறானா? தன் முயற்சியினால் காரியங்களைச் சீர்ப்படுத்துகிற ஒரு மனிதன் விசேஷமான வெகுமானத்தையும், போஜனம் வேதனங்களின் அபிவிருத்தியையும் பெறுகிறானா? வித்தைகளில் பயின்று அறிவில் தேர்ந்த மனிதர்களின் குணங்களுக்குத் தக்கபடி திரவியங்கொடுத்து அனுக்கிரகிக்கிறாயா? பரதசிரேஷ்டனே! உன் காரியத்தில் மரணத்தையும் நஷ்டத்தையும் அடைந்த மனிதர்களின் குடும்பங்களைக் காப்பாற்றுகிறாயா? பார்த்தனே! பயந்தாவது இளைத்தாவது உன்னை அடைக்கலமாக அடைந்தவனும் யுத்தத்தில் தோற்றவனுமான சத்ருவைப் புத்ரனைப் போலக் காப்பாற்றுகிறாயா? அரசனே! நீ ஒருவனே புவனி முழுமைக்கும் தாய் போலவும் தந்தை போலவும் பக்ஷபாதமில்லாதவனாகவும் நம்பத்தக்கவனாகவும் இருக்கிறாயா? பரத சிரேஷ்டனே! உன்

னுடைய சத்ருக்கள் காமம், சூது, வேட்டை முதலிய [1] வ்யஸனங்களிலிருக்கக் கேட்டு [2] மூன்று விதமான பலங்களையும் ஆராய்ந்துகொண்டு விரைவாகவே எதிர்த்துச் செல்லுகிறாயா? பகைவரை ஜயிப்பவனே! அதிருஷ்டவசமாகக் காலம் நேர்ந்தபோது [3] பின் பலத்தையும், [4] மூலபலத்தையும், தன் உத்ஸாகத்தையும், எதிரியின் தோல்வியையும் தெரிந்துகொண்டு யுத்தயாத்திரைக்கு ஆரம்பிக்கிறாயா? பகைவரைப் பரிதபிக்கச்செய்யும் மகாராஜனே! முதலில் உன் சேனைக்குச் சம்பளங்கொடுத்துப் பிறகு பிறர் தேசத்தின் சேனைத் தலைவர்களுக்கு அவரவர்கட்கேற்றபடி விலைபெற்ற பொருள்களை ரகசியமாகக் கொடுக்கிறாயா? குந்தி புத்ரனே! முதலில் இந்திரியங்களை அடக்குவதனால் தன்னையே ஜயித்துக்கொண்டபிறகு புலன்களையடக்காமல் தவறி நடக்கும் பிறரை வெல்லக் கருதுகிறாயா? நீ சத்துருக்களை எதிர்த்துச் செல்லுகையில் நீதி சாஸ்திரப்படி நன்றாகப்பிரயோகிக்கப்பட்ட ஸாம தான பேத தண்டங்களென்னும் உபாயங்கள் முன் செல்லுகின்றனவா? மனிதர்க்கரசே! உன் தேசத்தை உறுதியுள்ளதாகச் செய்த பிறகு பிறரிடம் செல்கிறாயா? அவர்களை ஜயிப்பதற்குப் பராக்கிரமத்தைச் செலுத்துகிறாயா? ஜயித்தபின் அவர்களைக் காப்பாற்றுகிறாயா? [5] எட்டு அங்கங்களோடு கூடிய [6] நால்வகைச்சேனையும் உன் படைத்தலைவர்களால் நன்றாக நடத்தப்பட்டு எதிரிகளை எதிர்த்துக் கண்டிப்பதாயிருக்கிறதா? பகைவரைத் துன்புறச் செய்கிற மகாராஜாவே! அயல் ராஜ்யங்களில் பயிரறுக்குங்காலத்தையும், பயிரைக் காப்பாற்றுங்காலத்தையும் விட்டுவிடாமல் மாற்றரசர்களை வதஞ்செய்கிறாயா? உன்னுடைய அதிகாரிகளனேகர்கள் உன் தேசத்திலும் பிறர் தேசங்களிலுமுள்ள காரியங்களைச் சேர்ந்துநடத்தி ஒருவரையொருவர் காப்பாற்றி வருகின்றனரா? மகாராஜாவே! உணவுகளையும், உடம்பின்மேல் படத்தக்க சந்தனம் வஸ்திரமுதலியவற்றையும், மோக்கத் தக்கவற்றையும் உனக்கு நம்பிக்கையானவர்கள் [1] பாது

1 மன ஊக்கத்தைக் கெடுப்பது.

2 மூன்று விதமான பலங்கள்:-மந்த்ரம்-ராஜ்யாலோசனை, கோசம்-பொக்கிஷம், சேனை - படை.

3 பின்பலம்-தான் ஒரு தேசத்தை நோக்கி யுத்தத்துக்கு முன்செல்லும்போது பின் தேசத்தவர்கள் தன் தேசத்தை ஆக்ரமிக்காமலிருக்கும்படி எல்லைக் காவலாக வைக்கப்படும் சேனை.

4 மூலபலம்-தன் தேசத்தில் நிலைமையாக இருக்கும் சேனை.

5 தேர், யானை, குதிரை, காலாட்படைகள், படைத்தலைவர்கள், வேலைக்காரர்கள், வேவுகாரர்கள், அந்த அந்தத் தேசங்களின் தலைவர்கள்.

6 மூலபலம்-(பரம்பரையாக வந்த சேனை மந்திரி முதலியவர்கள்,) மித்ரபலம், ப்ருத்யபலம், ஆடவிக பலம்.

காக்கின்றனரா? பொக்கிஷமும், தான்யசாலையும், வாகனங்களும், வாயிலும், ஆயுதங்களும், திரவியத்தின் வரவும், உன்னால் நன்மை பெற்று உன்னிடம் பற்றுள்ளவரால் நடத்தப்படுகின்றனவா? மனிதர்களுக்கதிபதியே! (சமையற்காரன் முதலிய) சமீபத்தாராலும், (சேனை முதலிய) வெளியோராலும் உனக்குத் தீங்குவராமலும், உன் சுற்றத்தாரால் அவர்களுக்குத் தீங்குவராமலும், சுற்றத்தாருள்ளும் ஒருவராலொருவருக்குத் தீங்குவராமலும் பாதுகாக்கிறாயா? பானத்திலும், சூதாட்டத்திலும், (வேட்டை முதலான) விளையாட்டுக்களிலும், பெண்களிடத்தும் உன்மனம் பற்றினதனாலுண்டான செலவைக் காலையில் (கணக்கர்கள்) [1] தெரிந்துகொள்ளாமலிருக்கின்றனரா? [2] வரவின் காற்பாகத்திலாவது, அரைப் பாகத்திலாவது, முக்காற்பாகத்திலாவது உனது செலவு முடிந்துபோகிறதா? உறவினரையும், ஆசாரியர்களையும், மூத்தோரையும், வர்த்தகர்களையும், சிற்பிகளையும் அடுத்தவரையும், வறிஞர்களையும் தனங்களாலும், தான்யங்களாலும் அடிக்கடி அனுக்கிரகிக்கிறாயா? வரவு செலவு பார்க்க நியமிக்கப்பட்ட கணக்கர்கள் எழுத்துக்காரர்களனைவரும் ஒவ்வொரு நாளும் காலைவேளைகளில் வரவு செலவுகளை [3] நடத்துகின்றனரா? காரியங்களில் சமர்த்தர்களும் நன்மையைக் கருதுகிறவர்களும், நெடுநாளாக அன்பர்களுமான அதிகாரிகளை முன்னே குற்றத்தைக்காணாமல் அவர்களை அதிகாரங்களிலிருந்து விலக்காமலிருக்கிறாயா? பாரதனே! உயர்ந்தவர்களும், தாழ்ந்தவர்களும், நடுத்தரமானவர்களுமாகிய மனிதர்களை அறிந்து அவரவருக்குத் தக்க வேலைகளில் அவர் அவர்களை நியமிக்கிறாயா? அரசனே! உலோபிகளும், திருடர்களும், பகைவர்களும், வேலைப் பயிற்சியில்லாதவர்களும் உன் காரியங்களில் பிரவிர்த்திக்காமலிருக்கின்றனரா? திருடர்களாலும், பொருளாசைகொண்டவர்களாலும், பெண்களுக்கு வசப்பட்ட ராஜகுமாரர்களாலும், உன்னாலும் உனது ராஜ்யம் பீடிக்கப்படாமலிருக்கிறதா? பயிரிடுவோர்கள் திருப்தியோடிருக்கின்றனரா? உன் ராஜ்யத்தில் நீர் நிறைந்த பெரிய தடாகங்கள் ஒவ்வோரிடங்களிலும் இருக்கின்றனவா? பயிரானது வானத்தை எதிர்பாராமலிருக்கிறதா? பயிரிடுகிறவர்களுக்குச் சோறும் வித்

---

1 அவற்றில் விஷ சம்பந்தமில்லாமலிருக்கும்படி பார்க்கின்றனரா?

2 தெரிந்துகொள்ளாமலிருக்கின்றனரா? என்பதற்கு நடக்காமலிருக்கின்றதா என்பது கருத்து. 'பானம் முதலிய விஷயங்களைப் பற்றிய செலவைத் தர்மானுஷ்டான காலமான காலை வேளையில் தெரிவித்தால் அப்போது வந்திருக்கும் புரோகிதர் முதலான பெரியோர்கள் கெடுதலையறிந்து விட்டுவிடுவார்கள்' என்பது பழைய உரை.

3 வரவுக்குட்பட்டுச் செலவிருக்க வேண்டுமென்பது கருத்து.

4 'தெரிவிக்கின்றனரா?' என்பது பழைய உரை.

தும் நஷ்டப்படாமலிருக்கின்றனவா? ஒவ்வொருவனுக்கும் நூற்றுக்கணக்கான தனத்தை வட்டிக்குக் கடன்கொடுத்து உபகாரஞ் செய்கிருயா? அன்பனே! உன்தேசத்திய வர்த்தகம் யோக்கியர்களான மனிதர்களால் நன்ருக நடத்தப்பட்டு வருகிறதா? அன்பனே! வர்த்தகத்தைச் சார்ந்துதான் இவ்வுலகம் சுகமாக அபிவிருத்தியாகிறது. அரசனே! [1] உன்தேசத்தில் சூரர்களும் அறிவு முதிர்ந்தவர்களும் நன்னடக்கை யுள்ளவர்களுமாகிய [2] ஐந்துஐந்து பேர் சேர்ந்து தேசத்துக்கு க்ஷேமத்தைச் செய்கின்றனரா? நகரங்களைக் காப்பதற்காகக் கிராமங்கள் நகரங்கள் போலவும் கிராமங்களின் எல்லைகள் கிராமங்கள் போலவும் செய்யப்பட்டிருக்கின்றனவா? அவையெல்லாம் உன் வசத்திலிருக்கின்றனவா? உன் தேசத்தில் திருடரையடிப்பவர்கள் சேனையினுல் தொடரப்பட்டு ஸம பூமிகளிலும் மேடு பள்ளங்களிலும் நகரங்களிலும் சஞ்சரிக்கின்றனரா? மங்கையர்களை அன்பாக நடத்துகிருயா? அவர்கள் நன்ருகப் பாதுகாக்கப்பட்டிருக்கிருர்களா? அவர்களை நம்பாமலிருக்கிருயா? அவர்களிடம் ரகசியத்தைச் சொல்லாமலிருக்கிருயா? அரசனே! காலம் கடக்கத்தகாத காரியத்தைக் கேட்டு அதன் பயனையும் ஆராய்ந்து, பிறகு, அந்தப்புரத்தில் இன்பங்களை அனுபவித்துக்கொண்டு படுத்திராமலிருக்கிருயா? வேந்தனே! இரவின் [3] முதலிரண்டு யாமங்கள் தூங்கிப் பின் யாமத்திலெழுந்து அறம் பொருள்களைப் பற்றிச் சிந்திக்கிருயா? பாண்டவனே! ஒவ்வொரு நாளும் காலத்திலெழுந்து அலங்காரங்களைச் செய்துகொண்டு, காலந்தெரிந்த மந்திரிகளுடன்கூட ஜனங்களுக்குக் காட்சி கொடுக்கிருயா? பகைவரை அடக்குகிறவனே! சிவப்பு உடுப்புக்களைத் தரித்தும், கத்திகளைக் கையிற்பிடித்தும் செவ்வையாக அலங்காரங்களைச் செய்துகொண்டுமிருக்கும் மனிதர்கள் உன்னைக் காப்பதற்காகச் சூழ்ந்திருக்கின்றனரா? அரசனே! தண்டிக்கத் தக்கவர்களையும் பூஜிக்கத் தக்கவர்களையும் நன்ருகப் பகுத்தறிந்து நண்பராயினும் பகைவராயினும் அவர்கள் விஷயத்தில் யமனைப்போலச் சமமாக நடக்கிருயா? பார்த்தனே! உடம்பின் நோயை ஔஷதங்களாலும் பத்தியங்களாலும், மனத்தின் நோயைப் பெரியோர்களை

---

1 ஒவ்வொரு கிராமத்தினுடைய க்ஷேமகாரியங்களும்.

2 ப்ரசாஸ்தா (= உத்தரவு கொடுப்பவன்), ஸ்மாஹர்த்தா (= ஜனங்களிடம் தீர்வை வாங்கி ராஜாவுக்குக் கொடுக்கிறவன்), ஸம்விதாதா (= பிரஜைகளுக்கும் ஸ்மாஹர்த்தாவுக்கும் இடையிலிருந்து வேலை பார்ப்பவன்), லேககன் (= எழுதுகிறவன்), சாக்ஷி ஆக ஐவர்.

3 முதல் யாமம் ஸாயங்காலத்தைச் சேர்ந்ததாதலால், இரண்டாவது மூன்ருவது யாமமே முதலிரண்டு யாமங்களென்று கொள்க. பின் யாமம் என்பதற்கு நான்காம் யாமமென்று பழைய உரை கூறுகிறது. அதனுலும் இது துணியப்படும்:

அடுப்பதினாலும் எப்போதும் நிவிருத்தி செய்கிறாயா? [1] எட்டு அங்கங்களோடு கூடிய சிகித்ஸையில் சமர்த்தர்களும் வேண்டினவர்களுமான வைத்தியர்கள் உன் சரீரத்தில் எப்போதும் அன்பும் ஹிதமுமுள்ளவர்களாயிருக்கின்றனரா? அரசனே! உன்னிடம் வியவஹாரத்திற்காக வந்த வாதி பிரதிவாதிகளுக்குப் பொருளாசையினாலாவது, அறியாமையினாலாவது, கர்வத்தினாலாவது எவ்வகையிலும் நியாயவிரோதம் செய்யாமலிருக்கிறாயா? பொருளாசையாலாவது, அறியாமையாலாவது, பிறரை நம்பியாவது, பிறர் சிநேகத்தினாலாவது அடுத்த மனிதர்களின் பிழைப்பைக் கெடுக்காமலிருக்கிறாயா? பட்டணத்திலும் தேசத்திலு முள்ளவர்கள் எதிரிகளினால் பொருள்கொடுத்து வசப்படுத்தப்பட்டவர்களாக ஒன்று சேர்ந்து எவ்வகையிலும் உன்னுடன் பகைக்காமலிருக்கின்றனரா? உனது வலிமையினால் வெல்லப்பட்டுத் தன் வலிமை குறைந்த சத்ருவானவன் [1] மந்திரத்தினாலாவது மந்திரம் சைன்யம் இரண்டினாலுமாவது வலிமையுள்ளவனாக எவ்வகையிலும் ஆகாமலிருக்கிறானா? தலைவர்களாயுள்ள அரசர்கள் அனைவரும் உன்னை நேசிக்கின்றனரா? அவர்கள் உன்னால் அழைக்கப்பட்டு உன்காரியத்துக்காக உயிரையும் விடுவார்களா? [2] எல்லாவித்தைகளிலும், பிராமணர்கள் விஷயத்திலும் குணங்களை அனுசரித்து உன் மரியாதை நடந்து வருகிறதா? முனிவர்கள் விஷயத்திலும் உன் நன்மைக்குக் காரணமான சிறந்த பூஜை நடந்துவருகிறதா? சுவர்க்கத்தையும் மோக்ஷத்தையும் தருவனவாகிய நித்திய தக்ஷிணைகளை அவர்களுக்கு அளிக்கிறாயா? வேதத்தினாலறியப்பட்டவையும் முன்னோர்களால் ஆசரிக்கப்பட்டவையுமான வேதோக்த கர்மங்களை அவர்களைப்போலவே ஊக்கத்துடன் செய்துவருகிறாயா? குணங்கள் பொருந்தின பிராமணர்கள் உனது கிருகத்தில் சுவையுள்ள சிறந்த போஜனங்களை உன் முன்னிலையில் தக்ஷிணையோடு புசிக்கின்றனரா? வாஜபேயம் பௌண்டரீகம் முதலிய யாகங்களெல்லாவற்றையும் மன உறுதியோடும்

---

1 எட்டு அங்கங்களாவன. 1. சல்யம்—தேகத்துக்குள்ளிருக்கும் முள் முதலியவற்றை எடுப்பது. 2. சாலாக்யம்—குத்தி நீர் எடுப்பது. 3. காயசிகித்ஸை—நோய்க்கு மருந்து கொடுப்பது. 4. பூதவித்தை—பேய் முதலியவற்றை ஓட்டுவது. 5. கௌமாரப்ருத்யம்—குழந்தைகளுக்கும் ஸ்திரீகளுக்கும் வைத்தியம். 6. அகததந்திரம்—விஷவைத்தியம் 7. ரஸாயனதந்திரம்—தேகபுஷ்டி ஆயுள் முதலியவற்றை உண்டாக்குவது. 8. வாஜீகரணம்—போகங்களில் அதிக உத்ஸாஹப்படுத்துவது.

1 மந்திரம்—புத்திபலம்.

2 'நதிஷ்ட்தி' என்பதை மாற்றிப் பாட்ங்களை அனுசரித்தும் பழைய உரையை அனுசரித்தும் அனுதிஷ்ட்தி' என்று பாடம் கொள்ளப்பட்டது.

பக்தியோடும் பூர்ணமாக நிறைவேற்ற முயல்கின்றாயா? உறவினரையும், ஆசார்யர்களையும், மூத்தோரையும், தேவர்களையும், முனிவர்களையும், கிராமங்களின் முக்கியமான (அரசு முதலிய) புண்ணிய விருக்ஷங்களையும், பிராமணர்களையும் வணங்குகிறாயா? குற்றமற்றவனே! உன்னால் யாருக்கும் வியஸனமாவது கோபமாவது உண்டாக்கப்படாமலிருக்கின்றதா? மங்களத்திரவியங்களைக் கைகளில் வைத்துக்கொண்டு ஜனங்கள் உன் பக்கத்திலிருக்கின்றனரா? குற்றமற்றவனே! தர்மார்த்த காமங்களைப் பகுத்தறிவதும், ஆயுளையும் புகழையும தருவதுமாகிய இந்த (முற்கூறிய) புத்தியும் நடையும் உன்னிடத்திலிருக்கின்றனவா? இந்தப் புத்தியோடிருப்பவனுக்கு ராஜ்யம் கெடாது. அப்படிப்பட்ட அரசன் பூமியை ஜயித்து மிகவும் சுகமாக அபிவிருத்தியடைவான். பரிசுத்தமான மனத் தூய்மையுள்ளவனும் குற்றமற்றவனுமான யோக்கியன் திருட்டுத் தொழிலில் பழி சுமத்தப்பட்டபோது, அவன் சமர்த்தர்களான அதிகாரிகளினால் பொருளாசை கொண்டு சாஸ்திரங்களைப் பாராமலே கொல்லப்படாமலிருக்கிறானா? குற்றம் செய்யும்போது உளவறிந்தவர்களால் பார்க்கப்பட்டுத் திருட்டுப் பொருளுடன் பிடிக்கப்பட்ட குற்றவாளியான திருடன் பொருளாசையினால் விடப்படாமலிருக்கிறானா? பாரதனே! செல்வனுக்கும் வறிஞனுக்கும் உண்டான வியவகாரங்களை உனது நியாய சபையோர் பொருளுக்கிணங்கி வித்தியாசமாகப் பாராமலிருக்கின்றனரா? நாஸ்திகம், பொய், கோபம், ஊக்கமின்மை, காரியங்களை விளம்பித்தல், தெரிந்தவர்களைப் பாராமை, சோம்பல், ஐம்புலன்களில் ஈடுபாடு, ஒருவனாகவே காரியங்களை ஆலோசிப்பது, காரியம் தெரியாதவர்களுடன் ஆலோசிப்பது, நிச்சயிக்கப்பட்டவற்றைச் செய்யாமலிருப்பது, மந்த்ராலோசனையை ரகசியமாக வைத்துக்கொள்ளாமை, மங்களகாரியங்கள் முதலியவற்றைச் செய்யாமை, யாவர்க்கும் எதிர்கொண்டு எழுந்திருப்பது ஆகிய பதினான்கு ராஜதோஷங்களை நீ விட்டிருக்கிறாயா? வேரூன்றின அரசர்களும் இந்தக் குற்றங்களினால் பெரும்பாலுங் கெடுவர். உனது வேதங்கள் பயன்பட்டனவா? உன்னுடைய தனம் பயன்பட்டதா? உனது மனைவிகள் பயன்பட்டனரா? உனது கல்வி கேள்வி பயன்பட்டனவா?' என்று நாரதர் வினவினார்.

யுதிஷ்டிரர், 'வேதங்கள் பயன்படுவது எவ்வகை? பொருள் பயன்படுவது எவ்வகை? மனைவி பயன்படுவது எப்படி? கேள்வி பயன்படுவது எவ்வாறு?' என்றுகேட்க, நாரதர், 'அக்னிஹோத்ரத்தினால் பயன்படுவது வேதம். கொடுப்பதினாலும் அனுபவிப்

பதினாலும் பயன்படுவது பொருள். இன்பத்தினாலும் சந்ததியினாலும் பயன்படுபவள் மனைவி. வணக்கத்தினாலும் ஒழுக்கத்தினாலும் பயன்படுவது கேள்வி' என்று மறுமொழி உரைத்தார். சிறந்த தவமுள்ள நாரதமுனிவர் இவ்வாறு சொல்லியபிறகு, யுதிஷ்டிரரைத் திரவிய லாபத்தைப்பற்றித் திரும்பவும் வினவத் தொடங்கினார்: 'தூரதேசத்திலிருந்து வந்த வணிகர்களிடம் சுங்கம் வாங்குகிறவர்களால் குறிப்பிக்கப்பட்ட சுங்கம் வாங்கப் படுகின்றதா? அரசனே! உனது நகரத்திலும் தேசத்திலும் கௌரவிக்கப்பட்ட மனிதர்கள் மோசங்களில் அகப்படாமல் சரக்குக்களை வருவிக்கின்றனரா? நண்பனே! அர்த்த சாஸ்திரம் தெரிந்தவரும் தர்மத்துக் கொற்றுமையாகத் தமது லாபத்தைப் பார்ப்பவருமாகிய பெரியோர்களின் தர்மார்த்தங்களடங்கிய சொற்களை என்றும் கேட்கிறாயா? உழவுத் தொழிலினாலுண்டான பூக்களும் கனிகளுமாகிய பச்சைத் தான்யங்களிலும், உலர்ந்த தான்யங்களிலும், பசுக்களின் புஷ்பங்களும் பலங்களுமாகிய பால் நெய்களிலும், ஸாரமானவை தர்மத்திற்காகப் பிராமணர்களுக்குக் கொடுக்கப்படுகின்றனவா? எப்போதும் எல்லாச் சிற்பிகளுக்கும் நாலு மாதங்களுக்கு வேண்டிய பொருளையும் கருவிகளையும் குறித்த காலத்தில் நன்றாகக் கொடுக்கிறாயா? மஹாராஜனே! செய்த வேலையைப் பார்க்கிறாயா? செய்தவனைச் சிலாகிக்கிறாயா? தெரிந்தவர்களின் நடுவில் கௌரவித்து அவனுக்குப் பரிசளிக்கிறாயா? பரத சிரேஷ்டனே! பிரபுவே! யானை குதிரை தேர்களைப்பற்றிய முதல் நூல்களெல்லாவற்றையும் கிரகிக்கிறாயா? பரத சிரேஷ்டனே! உன் கிருகத்தில் தனுர் வேதத்தின் சூத்திரங்களும், நகரத்துக்குரிய யந்திர சாஸ்திரத்தின் சூத்திரங்களும் நன்றாகப் பயிற்சி செய்யப்படுகின்றனவா? குற்றமற்றவனே! எல்லா அஸ்திரங்களும்[1], பிரம்ம தண்டமென்று சொல்லப்பட்ட மந்த்ரசித்தியும், சத்துருக்களை அழிப்பனவாகிய விஷப் பிரயோகங்களனைத்தும் உனக்குத் தெரிந்திருக்கின்றனவா? அக்னிபயத்திலிருந்தும், ஸர்ப்ப பயத்திலிருந்தும், ரோகபயத்திலிருந்தும், பேய் பிசாசு பயத்திலிருந்தும் உன் தேசமனைத்தையும் காப்பாற்றுகிறாயா? தர்மந் தெரிந்தவனே! கண்ணில்லாதவர்களையும், ஊமைகளையும், முடவர்களையும், அங்கஹீனமுள்ளவர்களையும், ஆதரவற்றவர்களையும், சந்யாசிகளையும் தந்தைபோலக் காப்பாற்றுகிறாயா? மஹாராஜனே! உறக்கம், சோம்பல், பயம், கோபம், மிருதுத் தன்மை, காரியங்களை விளம்பித்தலென்னும் ஆறு தீங்குகளும்

---

1 ''ஆபிசார வித்தை' என்பது பழைய உரை.

உன்னால் விலக்கப்பட்டிருக்கின்றனவா?' என்றார். கௌரவ சிரேஷ்டரும் மஹாத்மாவுமான தர்மராஜன், பிராமணோத்தமரான நாரதருடைய சொற்களைக் கேட்டவுடன் சந்தோஷமடைந்து அவர் பாதங்களில் வணங்கி, அபிவாதனஞ்செய்து கடவுளுக்கொப்பான அந்த முனிவரைப் பார்த்து, 'நீங்கள் எவ்வாறு சொன்னீர்களோ அவ்வாறு செய்வேன். என் அறிவானது மிக்க மேன்மைபெற்றது' என்று சொல்லி அவ்வாறே செய்யவுந் தொடங்கினார். அதனால், அந்த ராஜா கடல் சூழ்ந்த புவனியையும் பெற்றார். நாரதர், 'எந்த அரசன் நான்கு வருணங்களையும் காப்பாற்றுவதில் இவ்வாறு நடக்கின்றானோ அவன் இம்மையிலும் மிகவும் இனிதாக மகிழ்ந்திருந்து, மறுமையிலும் இந்திரலோகத்தை அடைவான்' என்று சொன்னார்.

---

## ஆறாவது அத்தியாயம்

## மந்த்ர பர்வம் (தொடர்ச்சி)

**(தம்முடைய சபைக்கு ஒப்பான சபையைக் கண்டதுண்டாவென்று தர்மராஜன் கேட்க, நாரதர் தேவ ஸபைகளைக் கண்டிருப்பதாக மறுமொழி கூறியது.)**

தர்மராஜரான யுதிஷ்டிரர், நாரதமகரிஷி சொன்னபிறகு, அதைக்கொண்டாடி அவரால் அனுமதி கொடுக்கப்பெற்று முறைப்படி மறுமொழியுரைத்தார்: 'பகவானே! நீங்கள் இந்தத் தர்மத்தின் துணிபைச் சாஸ்திரப்பிரகாரமும் புக்தியுக்தமாகவும் உரைத்தீர்கள். இந்த ஒழுங்கானது என்னால் கூடியவரையில் சாஸ்திரத்தை அனுசரித்துச் செய்யப்படுகிறது. (முற்காலத்தரசர்கள் நியாயமாகத் தனங்களைச் சம்பாதித்துக் காரியங்களைச் செய்யவேண்டிய முறைப்படி உபாயங்களினால் பயன்படச் செய்தனர்.) அதில் சந்தேகமில்லை. பிரபுவே! யாமும் அவர்களின் நல்வழியிற் செல்ல விரும்புகிறோம்; ஆனால், அவர்கள் மனத்தைக்கட்டி நடந்ததுபோல நடக்க முடியாது' என்றார். தர்மாத்மாவும் சிறந்த மகிமையுள்ளவருமான யுதிஷ்டிரர், நாரதர் சொன்னதைச் சிறப்பித்து இவ்வாறுரைத்து அவர் சொல்லைக் கொண்டாடி, அளவற்ற மகிமையுள்ளவரும் திரிலோக சஞ்சாரியும் தேவரிஷியுமான அந்த நாரதமுனிவர் சுகமாக உட்கார்ந்து இளைப்பாறிச் சற்று நேரமானபின், சரியான காலமென்று கண்டு அவர் அருகிலிருந்து அரசர்களின்

நடுவில் வினவினர்: 'பிராமணரே! நீங்கள் ஆதியில் பிரம்மாவி னால் படைக்கப்பட்ட பலவகையான அநேக லோகங்களைப் பார்த் துக்கொண்டு மனோவேகமாக எப்போதும் சஞ்சரிக்கிறீர்கள். இந்த ஸபையைப் போன்றதாகவாயினும் இதற்கு மேற்பட்டதாக வாயினுமுள்ள ஒரு ஸபை [1] இதற்கு முன் எங்கேயாவது பார்க்கப் பட்டதா? இனியாவது உண்டாகுமா? கேட்கின்ற எனக்கு இதைச் சொல்வீராக' என்றார். தர்மராஜாவின் அந்தச் சொல்லைக்கேட்டு நாரதர் புன்னகையுடன் இன்சொல்லாகப் பின்வருமாறு அவருக்கு மறுமொழி கூறலானார்: 'அன்பனே! பரதவம்சத்தரசனே! உன்னுடைய இந்த சபையைப்போன்ற ரத்னமயமான சபை மானிடலோகத்தில் இதற்கு முன் காணப் பட்டதுமில்லை; கேட்கப்பட்டதுமில்லை. பரத சிரேஷ்டனே! உனக்குக் கேட்க விருப்பமிருக்குமாயின் யம சபையையும், வருண சபையையும், இந்திரசபையையும், குபேரசபையையும் பற்றிச் சொல்வேன். பரத சிரேஷ்டனே! எல்லாவற்றிலும் சிறந்ததும், களைப்பை நீக்குவதும், தேவலோகத்திற்கும் மற்ற லோகங்களுக்கு முரிய போகங்கள் பொருந்தியதும், எல்லா உலகங்களின் உருவங் களுமமைந்ததும், தேவர்களாலும், பிதிர் தேவதைகளாலும், ஸாத்தியர்களாலும், இந்திரியங்களை ஜயித்துச் சாஸ்திரப்படி யாகங்கள் செய்தவர்களாலும், சாந்தர்களான முனிவர்களாலும் வேதங்களாலும், தக்ஷிணைகளோடுகூடிய யாகங்களாலும் அடை யப்பெற்றதுமான பிரம்ம சபையைப்பற்றியும் சொல்லுவேன்' என்றார்.

சிறந்த மனமுள்ள தர்மராஜாவான யுதிஷ்டிரர், நாரதரால் இவ்வாறுரைக்கப்பெற்றபின், தம்முடைய சகோதரர்களோடும், அங்குள்ள எல்லாப் பிராமணோத்தமர்களோடும் நாரதரைப் பார்த் து, கைகூப்பிக்கொண்டு சொல்லலானார்: 'பிராமணரே! அந்தச் சபைகள் எல்லாவற்றையும் சொல்லுங்கள். நாங்கள் கேட்க விரும்புகிறோம். அந்தச் சபைகளிலுள்ள பொருள்கள் யாவை? அவற்றின் அகலமென்ன? நீளமென்ன? அந்தப் பிரம்ம சபை யில் பிரம்மாவை ஸேவிப்பவர் யார்? மற்றச்சபைகளில் தேவராஜா வான இந்திரனையும், சூரிய புத்திரனான யமனையும், வருணனையும், குபேரனையும் ஸேவிப்பவர் யார்? பிரம்ம ரிஷியே! இவற்றையெல் லாம் கிரமமாக நீங்கள் சொல்லக் கேட்க எங்களுக்கு மிக்க விருப்ப மிருக்கிறது' என்றார். இவ்வாறு தர்மராஜரால் கேட்கப்பட்ட

1 'பவதா' என்ற பாடம் கொள்ளப்பட்டது. 'பவிதா' என்னும் பாடத்திற்கும் 'காணப்பட்டிருக்கிறதா' என்பதற்குப் பிறகு, 'இனியாவது உண்டாகுமா?' என்று சேர்த்துக்கொள்க.

நாரதர், 'அரசனே! அந்தத் தேவ சபைகளைப்பற்றி இப்போது வரிசையாக நான் சொல்லுகிறேன்; கேள்' என்று சொல்லினர்.

---

## ஏழாவது அத்தியாயம்

## மந்த்ர பர்வம் (தொடர்ச்சி)

### (இந்திர ஸபைச் சிறப்பு)

நாரதர், 'கௌரவ ராஜனே! உயர்ந்த சிற்பவேலை செய்யப்பட்டதும், இந்திரன் தன சக்தியினால் அடைந்ததும், சூரியனுக்கு ஒப்பான ஒளியோடு விளங்குவதுமான இந்திரனது திவ்ய சபை நூறுயோஜனை அகலமும், நூற்றைம்பதுயோஜனை நீளமும், ஐந்து யோஜனை உயரமுமுள்ளதும், அந்தரத்திலிருப்பதும், நினைத்தபடி செல்வதும், மூப்பு துன்பம் களைப்பு அச்சம் இவைகளைப் போக்குவதும், சுகத்தையும் நன்மையையும் தருவதும், வீடுகளும் ஆசனங்களுமுள்ளதும, மனத்திற்கினியதும, கற்பகவிருக்ஷங்களினால் சோபிப்பதுமாயிருக்கிறது. பாரதனே! குந்திபுத்ரனே! அந்தச் சபையில் தேவேந்திரன் கிரீடத்தையும், சிவப்பு ரத்தினமிழைத்த தோளவளைகளையும், தூய ஆடைகளையும், விசித்திரமான புஷ்ப மாலைகளையும தனது திவ்ய சரீரத்தில் தரித்துச் [1] சசி, மஹேந்திராணி, ஸ்ரீ, லக்ஷ்மி, ஹ்ரீ, கீர்த்தி, காந்தியென்னும ஸ்திரீகளுடன உயர்ந்த சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறான். அரசனே! அந்தச் சபையில் [2] ஸப்த மருத்துக்களும், சித்தர்களும, தேவரிஷிகளும், ஸாத்யர்களும், தேவக்கூட்டங்களும, இந்திர பதத்துக்குரியவர்களும, ஆதித்யர்களும் ஆகிய இவர்களனைவரும் திவ்விய ரூபங்க

---

1 'சசியென்னும பெயரையுடைய மஹேந்திராணி' என்பது பழைய உரை. சசி — இந்திரன மனைவி; மஹேந்திராணி — தேவேந்திரபதத்தின அதிஷ்டான தேவதை; ஸ்ரீ — அழகின தேவதை; லக்ஷ்மி — செல்வத்தின தேவதை; ஹ்ரீ — லஜ்ஜை (அதாவது குற்றங்களில விலகுதல) அதன தேவதை; கீர்த்தி — புகழின தேவதை; காந்தி — ஒளியின தேவதை; இந்தத் தேவதைகள பெண வடிவங்களாக இந்திரனுடன இருக்கின்றனா என்பது கருத்து.

2 காற்றின ஏழுபிரிவுகள: 1. ஆவஹம (— மேகம முதலியவற்றை நடத்துவது) 2. பரவஹகம (— ஸூர்ய மணடலத்தை நடத்துவது) 3. ஸமவஹம (— சந்திரமணடலத்தை நடத்துவது) 4: உத்வஹம (— நக்ஷத்திரங்களை நடத்துவது) 5. விவஹம (— அங்காரகன முதலிய கிரகங்களை நடத்துவது) 6. பரிவஹம் (— ஆகாசகங்கையையும ஸப்தரிஷிகளையும நடத்துவது) 7. பராவஹம (— துருவனை நடத்துவது) என்பன. 'கிருகஸ்தர்களான மருத்துக்கள்' என்பது பழைய உரை.

ளோடு பொன்மாலைகள் முதலான அலங்காரங்களை அணிந்து கொண்டு, பாரியைகளோடும் வேலைக்காரர்களோடும் சேர்ந்து மகாத்மாவும், பகைவரை அடக்குகிறவனுமாகிய தேவேந்திரனை உபாசிக்கின்றனர். பாவங்களை நீக்கி ஜொலிக்கின்ற அக்னிகள் போலப் பரிசுத்தர்களும், மகிமையுள்ளவர்களும், ஸோம லதையைப் பிழிந்தவர்களும், துயரமும் அச்சமும் அற்றவர்களும், காற்றையும் ஹோம சேஷத்தையும் புசிப்பவர்களுமான பராசரர், பர்வதர், ஸாவர்ணி, காலவர், ஏகதர், த்விதர், சிறந்த அறிவுள்ள த்ரிதர், சங்கர், லிகிதர், கௌரசிரரென்னும் முனிவர், கோபமுள்ள துர்வாஸர், ச்யேனர், தீர்க்கதமஸ் என்னும் முனிவர், பவித்ரபாணி, ஸாவர்ணி, யாக்ஞவல்கியர், பாலுகி, உத்தாலகர், சுவேதகேது,[1] தாண்டர், பாண்டாயினி, ஹவிஷ்மான், கரிஷ்டர், அரிச்சந்திரனென்னுமரசன், ஹ்ருத்யர், உதர சாண்டல்யர், வியாசர், க்ருஷீவலர், வாதஸ்கந்தர், விசாகர், விதாதா, காலர், கராலதந்தர், த்வஷ்டா, விச்வகர்மா, தும்புரு, ஆகிய கர்ப்பத்திற் பிறந்தவர்களும் பிறவாதவர்களுமான ரிஷிகள், எல்லா உலகங்களுக்கும் ஈச்வரனான வஜ்ரபாணியை சேவிக்கின்றனர். பாரதனே! பாண்டவனே! ஸஹதேவர், ஸுநீதர், சிறந்த தவமுள்ள வால்மீகி, பொய்யா மொழியரான ஸமீகர், பிரதிஞ்ஞை தவறாதவரான ப்ரசேதஸ், மேதாதிதி, வாமதேவர், புலஸ்தியர், புலஹர், க்ரது, மருத்தர், மரீசி, சிறந்த தவமுள்ள ஸ்தாணுவென்பவர், கக்ஷீவான், கௌதமர், தார்க்ஷ்யர், வைச்வானரமுனி, காலகவ்ருக்ஷீயரென்னும் முனிவர், ஆச்ராவ்யர், ஹிரண்மயர், ஸம்வர்த்தர், தேவஹவ்யர், தவவன்மையுள்ள விஷ்வக்ஸேனர் ஆகிய இந்த முனிவர்களும், தேவதாரூபங்களையுடைய தீர்த்தங்கள், ஓஷதிகள், சிரத்தை, மேதை, ஸரஸ்வதி, தர்மார்த்தகாமங்கள், மின்னல்கள், முழங்குகின்ற நீருண்டமேகங்கள், காற்றுக்கள், யாகங்களை நடத்தும்[2] இருபத்தேழு அக்நிகள்,[3] அக்னீஷோமர்கள், இந்திராக்னிகள், மித்திரன், ஸவிதா, அர்யமா, பகன், விச்வே தேவர்கள், ஸாத்யர்கள், ப்ருஹஸ்பதி, சுக்கிரர், விச்வாவஸு, சித்ரஸேனன், ஸுமனன், தருணன், யஜ்ஞபுருஷர்கள், தக்ஷிணை

1 'தாண்டியர்' என்பதும் பாடம்.

2 கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணம், நிர்மந்த்யம், வைத்யுதம், சூரம், ஸம்வர்த்தம, லௌகிகம், ஜாடரம், விஷகம், கரவ்யாத், க்ஷேமவான், வைஷ்ணவம், தஸ்யுமான், பலதம், சாந்தம், புஷ்டம், விபாவஸு, ஜ்யோதிஷ்மான், பரதம், பத்ரம், ஸ்விஷ்டக்ருத், வஸுமான், க்ரது, ஸோமம், பித்ருமான், அங்கிரஸ் என்பன.

3 சந்திரனோடு சேர்த்தும் இந்திரனோடு சேர்த்தும் அக்னியை இரண்டுதரம் கூறியது ஹவிஸுகளை வெவ்வேறாகக் கொடுக்கவேண்டுமென்பது.

கள், க்ரஹங்கள், ஸ்தோபங்கள் என்னப்பட்ட ஸாமவேத ஸ்வரங்கள், யாகங்களை நடத்தும் மந்த்ரங்கள் இவர்க ளனைவரும் அந்தச் சபையில் சேர்ந்திருக்கின்றனர். அரசனே! ரம்பை, ஊர்வசி, மேனகை, க்ருதாசி, பஞ்சசூடை, விப்ரசித்தி முதலான அப்ஸரஸுகளும், வித்யாதரர்களும், அழகான கந்தர்வர்களும் நர்த்தனங்களாலும், வாத்தியங்களாலும், பாட்டுக்களாலும், பலவகை ஹாஸ்யங்களாலும் தேவராஜாவான இந்திரனை சந்தோஷப் படுத்துகின்றனர். பிரம்மரிஷிகள், ராஜரிஷிகள், தேவரிஷிக ளனைவரும் சரித்திரங்களையும் பராக்ரமத்தையும் பற்றிய துதிகளையும் மங்களங்களையும் சொல்லி வலாஸுரனையும் விருத்திரனையுங் கொன்ற மகாத்மாவான தேவேந்திரனைச் சிறப்பிக்கின்றனர். மற்றவர்க ளெல்லாரும் பூமாலைகளைச் சூடி, ஆபரணங்களை அணிந்து, திவ்ய விமானங்களி லேறி ஜொலிக்கின்ற அக்நிகள் போலப் போக்கும் வரவுமாக இருக்கின்றனர். பிருஹஸ்பதியும் சுக்ரரும் எப்போதும் அங்கேயே இருக்கின்றனர். அரசனே! மகாத்மாக்களும், உறுதியான தவமுள்ளவரும், சந்திரனைப் போலக் காட்சிக்கினியவருமான இவர்களும்,பிருகுவும், சப்தரிஷிகள் முதலான மற்றும் அனேகர்களும் பிரம்மாவின் ஆஞ்ஞையினால் அங்கே வந்து போகின்றனர். சிறந்த கைகளையுடைய அரசனே! இந்தப் புஷ்கரமாலினி என்னும் இந்திர சபையை நான் பார்த்திருக்கிறேன். யம சபையைப்பற்றிக் கேள்.

---

## எட்டாவது அத்தியாயம்

## மந்த்ர பர்வம் (தொடர்ச்சி)

---

### (யம சபைச் சிறப்பு)

'யுதிஷ்டிரா! யம சபையைச் சொல்லப் போகிறேன். அதைத் தெரிந்துகொள். பார்த்தனே! யமனுக்காக அந்தச் சபையை விசுவகர்மா செய்தான். அரசனே! பாண்டவனே! ஒளியே உருக்கொண்ட அந்தச் சபை நூறு யோஜனைக்கு மேலே அகல நீளமுள்ளதும், சூரியனைப் போன்ற ஒளியினால் எங்கும் பிரகாசிப்பதும், நினைத்த உருவம் அமைவதும், மிக்க குளிர்ச்சியும் அதிக வெப்பமு மில்லாமல் மனத்தை மகிழ்விப்பதுமாக உள்ளது. துயரம், மூப்பு, பசி, தாகம், வெறுப்பு, மனச் சோர்வு,

களைப்பு, கெடுதல் இவற்றில் ஒன்றும் அச்சபையில் இல்லை. தேவர்க்கும் மானிடர்க்குமுரிய போகங்களனைத்தும் அதில் உள்ளன. பகைவரை யடக்குகிறவனே! சுவையுள்ளவையும், பலத்தைத் தருகின்றவையும், மனத்தைக் கவருகின்றவையும், தெவிட்டாதவையுமான [1] பக்ஷ்யம், போஜ்யம், லேஹ்யம், சோஷ்யம், பேயம் இவை மிகுதியாக இருக்கின்றன. சிறந்த மணமுள்ள பூமாலைகளும், நினைத்த பலன்களைத் தரும் மரங்களும், சுவையுள்ள தண்ணீரும் வெந்நீரும் எக்காலமுமிருக்கின்றன. அன்பனே! அந்தச் சபையில் புண்ணியஞ் செய்த ராஜரிஷிகளும், பரிசுத்தர்களான பிரம்மரிஷிகளும் மகிழ்ச்சியுடன் சூரியபுத்ரனான யமனை சேவிக்கின்றனர். அரசர்க்கரசே! யயாதி, நஹுஷன், பூரு, மாந்தாதா, ஸோமகன், ந்ருகன், திரஸதஸ்யு வென்னும் ராஜரிஷி, க்ருதவீர்யன், சுருதஸ்ரவன், அரிஷ்டநேமி, ஸித்தன், கிருதவேகன், கிருதி, நிமி, ப்ரதர்த்தனன், சிபி, மச்ஸ்யன், ப்ருதுலாக்ஷன், ப்ருஹத்ரதன், வார்த்தன், மருத்தன், குஷிகன், ஸாங்காச்யன், ஸாங்க்ருதி, த்ருவன், சதுரச்வன், ஸதஸ்யூர்மி, கார்த்தவீர்யார்ஜுனனென்னும் ராஜா, பரதன், ஸுரதன், ஸுநீதன், நிசடன், அனலன், திவோதாஸன், ஸுமனஸ், அம்பரீஷன், பகீரதன், [2] வியசுலன், ஸத்ச்வன், வாத்ரியச்வன், ப்ருதுவேகன், ப்ருதுச்ரவஸ், பிருஷதஸ்வன், வஸுமனன், மிக்க அதிக பலசாலியான க்ஷுபன், ருஷத்ரு, ப்ருஷஸேனன், புருகுத்ஸன், த்வஜி, ரதி, ஆர்ஷ்டிஷேணன், திலீபன், மஹாத்மாவான உசீநரன், உசீநரன் புதல்வனான புண்டரீகன், சர்யாதி, சரபன், சுசி, அங்கன், ரிஷ்டன், வேனன், துஷ்யந்தன், ஸ்ருஞ்சயன், ஜயன், பாங்காஸுரி, ஸுநீதன், நிஷதன், வஹீநரன், கரந்தமன், பாஹ்லீகன், ஸுத்யும்னன், பலவானாகிய மது, [3] ஐளன், பலவானான மருத்தராஜன், கபோதரோமன், த்ருணகன், ஸஹதேவன், அர்ஜுனன், வியசுவன், ஸாச்வன், கிருசாசுவன், சசபிந்து என்னுமரசன், தசரத புத்திரர்களான [4] ராமலக்ஷ்மணர்கள், ப்ரதர்த்தனன், அளர்க்கன், கக்ஷஸேனன், கயன், கௌராசுவன், பரசுராமர், நாபாகன், ஸகரன், பூரித்யும்னன், மஹாச்வன், ப்ரதாசுவன், ஜனகன், வேனபுத்திரனான ப்ருது, வாரிஸேனன், புருஜித், ஜனமேஜயன், பிரம்மதத்தன், த்ரிகர்த்தி, ராஜாவாகிய உபரிசரவஸு, இந்திரத்

1 பக்ஷ்யம் முதலிய ஐந்தும் உணவின வகைகள்.

2 சில பெயர்கள் இரண்டுமுறை வருகின்றன.

3 இளையென்பவளின் புத்திரனான புரூரவன்.

4 இராம லக்ஷ்மணர்கள் தம்முருவத்துடன் யம சபையிலிருப்பது உத்தர ராமாயணத்தில் அவதாரஸமாபனகாலத்தில் ராமலக்ஷ்மணர்களை யமன் வந்து கண்டதாகச் சொல்வதனாலும் விளங்குகின்றது.

யும்னன், பீமஜானு, கௌரப்ருஷ்டன், அனகன், லயன், பத்மன், முசுகுந்தன், பூரித்யும்னன், ப்ரஸேனஜித், அரிஷ்டநேமி, ஸுத்யும்னன், ப்ருதுலாசுவன், அஷ்டகன் இவர்களும், மத்ஸ்யராஜர்கள் நூற்றுவரும், நீபர்கள் நூற்றுவரும், ஹயர்கள் நூற்றுவரும், த்ருதராஷ்ட்ரர்கள் நூற்றொருவரும், ஜனமேஜயர்கள் எண்பதின்மரும், பிரம்மதத்தர்கள் வீரிகள் ஈரிகள் நூறு நூறு பேர்களும், இருநூறு பீஷ்மர்களும், நூறு பீமர்களும், நூறு பிரதி விந்த்யர்களும், நூறு நாகர்களும, நூறு ஹயர்களும், நூறு [1] பலாசங்களும், நாணல் தர்ப்பை முதலியவை நூறும், அங்கிருப்பனவாக அறியத்தக்கவை. சந்தனு, உனது பிதாவாகிய பாண்டு, உசங்கவன், சதரதன், தேவராஜன், ஜயத்ரதன், புத்திமானுகிய விருஷதர்ப்பனென்னும் ராஜரிஷி, அவனுடைய மந்திரிகள், நிரம்பின தக்ஷிணைகளோடு கூடின அநேகஞ் சிறந்த அசுவமேத யாகங்களைச் செய்து (இவ்வுலகை விட்டுச்) சென்ற இன்னுமநேக மாயிரம் [2] சசபிந்துக்களாகிய இந்தப் புண்ணியசாலிகளும், புகழ்பெற்றவர்களும் கல்வி கேள்வி மிகுந்தவருமான ராஜரிஷிகளும் அந்தச் சபையில் யமதர்மராஜனை சேவிக்கின்றனர். முறைப்படி யாகஞ் செய்தவர்களும தவத்தில் சித்தி பெற்றவர்களும் யோக சரீரம் பெற்றவர்களுமாகிய அகஸ்தியர், மதங்கர், காலர், ம்ருத்யுவென்னும் முனிவர்களும், தேகமெடுத்திருக்கும் அக்னிஷ்வாத்தர்கள், [3] பேனபர்கள், [4] ஊஷ்மபர்கள், [5] ஸுதாவந்தர்கள், [6] பர்ஹிஷதர்கள் முதலான பிதுருக்களும், காலசக்ரமும் பிரத்யக்ஷ ரூபியான அக்னிபகவானும், பாவஞ்செய்து தக்ஷிணுயனத்தில் மரணமடைந்த மனிதர்களும, காலத்தை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட யமகிங்கரர்களும் சரீரமெடுத்துக் கொண்டு வந்த சிம்சுபை மரம், பலாச மரம், நாணல், தர்ப்பை முதலிய தாவரங்களும் இந்தச் சபையில் தர்மராஜனை உபாசிக்கின்றனர். இவர்களும் இன்னும் அநேகர்களுமாகிய தர்மராஜ சபையோரின் பெயர்களையும் செய்கைகளையும் கணக்கிட முடியாது. பார்த்தனே! அழகியதும் நினைத்தபடி செல்வதுமாகிய அந்தச் சபை நெருக்கமில்லாம லிருக்கிறது; விச்வகர்மா நெடுங்காலந் தவஞ்செய்து நிருமாணஞ் செய்தது. பார்த்தனே! அது தன்னொளியினுல் ஜொலித்துக்கொண்டு பிரகாசிக்கின்றது. நியமந் தவறுதவரும், பொய் சொல்லாதவரும், சாந்தரும், சுத்தருமான சந்யாசிகள் தமது நற்கருமங்களினுல் துலக்கப்பட்டு அந்தச்

---

1 பலாச, நாணல, தர்ப்பம் முதலிவவற்றின அதிஷ்டான தேவதை.

2 சசபிந்து வம்சத்தில் பிறந்தவர்கள். 3 நுரையை உண்பவர்கள். 4 சூரோவியை உண்பவர்கள். 5 அமிர்தமுண்பவர்கள். 6 தீயிலிருப்பவாகள்.

சபைக்குச் செல்லுகின்றனர். எல்லாரும் ஒளியோடு கூடிய தேகங்களை உடையவர்களும், தூய ஆடைகளைத் தரித்தவர்களும்,விசித்திரமானதோள்வளைகளையும்,பூமாலைகளையும்,ஜொலிக்கின்ற குண்டலங்களையும் முத்தாரங்களையும் அணிந்தவர்களும், மகாத்மாக்களுமான கந்தர்வக்கூட்டங்களும், அப்ஸரஸுகளின் கூட்டங்களும் அவரவர்கள் செவ்வையாகச் செய்த புண்ணிய கர்மங்களினால் அச்சபைக்குப் போகின்றனர். பார்த்தனே! அந்தச் சபையில் எங்கும் வாத்தியமும்,ஆட்டமும்,பாட்டும்,சிரிப்பும்,விளையாட்டும், இனிய வாசனைகளும், இனிய ஒலிகளும் இருக்கின்றன. தேவலோகத்திய மாலைகள் அங்கே தினந்தோறும் வருகின்றன. தர்மமும், அழகும், சிறந்த மணமுமுள்ள நூறுலக்ஷம் பெயர்கள், பிரஜைகளுக்கு ஈச்வரனும் மகாத்மாவுமாகிய யமனை உபாசிக்கின்றனர். ராஜனே! மகாத்மாவான பிதிருவி ராஜனுடைய அந்தச் சபை இவ்வகையானது. [1] புஷ்கரமாலினியென்னும் வருண ஸபையையும் சொல்வேன்.

---

## ஒன்பதாவது அத்தியாயம்

## மந்த்ரபர்வம் (தொடர்ச்சி)

### (வருணஸபைச் சிறப்பு)

"யுதிஷ்டிரனே! வருணனுடைய திவ்ய ஸபையும் யம ஸபையைப்போலவே விஸ்தாரமுள்ளதும், மிக்க ஒளியுள்ளதும், அழகிய பிராகாரங்களையும் தோரணங்களை யுடையதுமாக ஜலத்துக்குள் விசுவகர்மாவினால் நிர்மாணஞ் செய்யப்பட்டது. கனிகளையும் மலர்களையும் கொடுக்கின்றவைகளும், நீலமும் பொன்மையும் பச்சையும் வெளுப்பும் சிவப்புமான ரத்தினங்களின் வடிவங்களை யுடையவைகளுமான கற்பகத் தருக்களாலும், பூங்கொத்துகளை மிகுதியாகவுடைய கொடிகளாலும், புதர்களாலும் சூழப்பட்டிருக்கிறது. அச்சபையில் இனிய குரலும் அழகிய உருவங்களுமுள்ள விசித்திரமான எண்ணிறந்த பறவைகள் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவு மிருக்கின்றன. வருணனால் ஆளப்பட்ட அச்சபை வீடுகளும் ஆசனங்களும் நிரம்பினதும், சுகமான காற்றுள்ளதும், குளிரும் வெப்பமு மில்லாததும், வெண்

---

1 'புஷ்கரமாலினி' என்பதை விசேஷணமாக்கி, 'தீர்த்த விசேஷங்களால் சோபிப்பது' என்பது பழைய உரை.

ணிறமுள்ளதுமாக அழகாயிருக்கிறது. வருணன் சிறந்த ஆடைகளையும் ரத்தினாபரணங்களையும் அணிந்துகொண்டு வாருணியென்னும் தன் மனைவியுடன் அந்தச் சபையிலிருக்கிறான். அந்த வாருணி கௌரியென்னும் இரண்டாவது பெயரால் உலகத்தில் வழங்கப்படுகிறாள். அந்த வருணன் மகிழ்ந்து அம்மனைவியுடன் சுகமாக விளையாடுகிறான். அந்தச் சபையில் ஆதித்தர்கள் மாலைகளோடும் சிறந்த சந்தனம் முதலிய பூச்சுக்களோடும் நல்ல மணம் வீச ஜல தேவதையான வருணனை உபாசிக்கின்றனர். ராஜனே! வாசுகி, தக்ஷகன், ஐராவதன், கிருஷ்ணன், லோஹிதன், பத்மன், சக்திமானாகிய சித்ரன், கம்பலன், அசுவதரன், திருதராஷ்டிரன், வலாஹகன், மணிமான், [1] குண்டதாரன், கார்க்கோடகன், தனஞ்சயன், பலவானான பாணிமான், குண்டதாரன், பிரஹ்ராதன், மூஷிகாதன், ஜனமேஜயன் ஆகிய நாகர்கள் எல்லாரும் தந்தங் கொடிகளோடு மண்டலமிட்டுப் படமெடுத்துக்கொண்டிருக்கின்றனர். தர்மார்த்த காமங்களும் அஷ்ட வசுக்களும் கபில முனிவரும் அங்கே இருக்கின்றனர். நாகராஜரான ஆதிசேஷரும் அங்கிருக்கிறார். அவரைக் கண்டு நீர்ப்பிராணிகளுக்கு அதிபதியான வருணன் (அருக்கியம் முதலிய) உபசாரங்களைச் செய்து ஆசனமளித்து மரியாதை செய்கிறான். வாசுகி முதலிய நாகர்களனைவரும் அஞ்சலிசெய்து, ஆதிசேஷரால் அனுமதி கொடுக்கப்பெற்றபிறகு தந்தம் தகுதியின்படி உட்கார்ந்திருக்கின்றனர். யுதிஷ்டிரனே! இவர்களும் மற்றும் பல நாகர்களும் வினதையின் புத்திரரான கருடரும் அவர் வேலைக்காரரும் அந்தச் சபையில் மஹாத்மாவான வருணனைச் சலிப்பின்றிப் பணிகின்றனர். விரோசனன் மகனான பலியென்னும் அசுரராஜன், பூமியை ஜயித்தவனாகிய நரகாசுரன், ஸம்ஹ்ராதன், விப்ரசித்தி, காலகஞ்சர்களென்னும் அசுரக் கூட்டத்தார், ஸுஹனு, துர்முகன், சங்கன், ஸுமனஸ், ஸுமதி, கடோதரன், மகாபார்சுவன், கிரதனன், பிடரன், விசுவரூபன், சுவரூபன், விரூபன், மகாசிரன், தசக்ரீவன், வாலி, மேகவாசன், தசாவரன், டிட்டிபன், விடபூதன், ஸம்ஹ்லாதன், இந்திரதாபனன் ஆகிய தவம்புரிந்து வரம்பெற்றவர்களும் சூரர்களும் மரணமில்லாதவர்களுமான அசுரகுலத்தோரனைவரும், அழகான குண்டலங்களையும் கிரீடங்களையும் திவ்ய வஸ்திரங்களையும் தரித்து மலர் மாலைகள் சூடித் தர்மரூபமான பாசாயுதத்தைத் தரித்திருக்கும் மகாத்மாவான வருணனை அந்தச் சபையில் சேவிக்கின்றனர். அரசர்க்கரசே! பரத குலத்தோனே! யுதிஷ்டிரனே! நான்கு சாகரங்களும்,

1 இஃது இரண்டு முறை வந்திருக்கிறது.

பெயர்பெற்ற கங்கா நதி, யமுனை, விதிசை, வேணை, நர்மதை, வேகவாகினி, விபாசை, சதத்ரு, சந்திரபாகை, ஸரஸ்வதி, இராவதி, விதஸ்தை, தேவநதியாகிய ஸிந்து, கோதாவரி, கிருஷ்ணவேணி, நதிகளிற் சிறந்த காவேரி, கிம்புனை, விசல்யை, வைதரணி, திருதீயை, ஜ்யேஷ்டிலை, சோணமென்னும் பெரிய[1] நதம், சர்மண்வதி, பர்ணாசை யென்னும் மகா நதி, ஸரயு, வாரவத்யை, நதிகளிற் சிறந்த லாங்கலி, கரதோயை, ஆத்ரேயி, லௌஹித்யமென்னும் மகாநதம், லங்கதி, கோமதி, ஸந்தியை, த்ரிஸ்ரோதஸி முதலிய உலகத்தில் பெயர்பெற்ற புண்ணிய தீர்த்தங்களுள்ள ஆறுகளும் புண்ணிய தீர்த்தங்களும் தடாகங் கிணறுகளும் அருவிகளும் குளங்களும் குட்டைகளும் திசைகளும் பூமியும் மலைகளும் ஜலஜந்துக்களனைத்தும் தேகமெடுத்து மகாத்மாவான வருண பகவானை உபாஸிக்கின்றன. கந்தர்வர்கள் அப்ஸரஸுக்களின் கூட்டங்கள் அனைத்தும் சங்கீத வாத்தியங்களோடு அந்தச் சபையில் வருணனைத் துதிசெய்துகொண்டிருக்கின்றனர். இரத்தினங்களோடு கூடிய மலைகளும் ஜலங்களும் அந்தச் சபையில் தேவரூபிகளாக மிக்க இனிய கதைகளைச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. வருணனுடைய மந்திரியான ஸுநாபனென்பவன் தன் பிள்ளைகளாலும் பேரர்களாலும் கோவென்னும் புஷ்கரனாலும் சூழப்பட்டவனாக வருணனை உபாஸிக்கின்றான். மேற்கூறிய எல்லோரும் திவ்ய சரீரங்களோடு தங்களுக்கதிபதியான வருணனை உபாஸிக்கின்றனர். பாரதனே! முன்னே நான் சஞ்சரித்தபோது இந்த அழகான வருண சபை என்னால் காணப்பட்டது; குபேரன் சபையைப்பற்றியும் கேள்.

---

## பத்தாவது அத்தியாயம்

## மந்திர பர்வம்—(தொடர்ச்சி)

---

### (குபேரசபைச் சிறப்பு)

ராஜனே! குபேரனுடைய சபை நூறு யோஜனை நீளமும், எழுபது யோஜனை அகலமுமுள்ளது; வெண்மை நிறமானது. ராஜனே! அந்தச் சபை குபேரன் தன் தவத்தினால் சம்பாதித்தது. சந்திரனுடைய ஒளியையும் மறைப்பதும், கயிலைமலையின் சிகரம் போன்றதுமான அந்தச் சபை யக்ஷர்களால் வகிக்கப்பட்டு ஆகா

1 மேல்கட்டில் விழும் ஆறு.

யத்தில் பறப்பதுபோல விளங்குகின்றது. பொன்மயமான உயர்ந்த மாளிகைகளினால் சோபிப்பதும், உயர்ந்த ரத்தினங்களினால் விசித்திரமானதும் மனத்தைக் கவருவதும் சிறந்த மணமுள்ளதும் வெண்மேகம் போன்ற சிகரத்தையும் உருவத்தையுமுடையதுமான அந்தத் திவ்ய சபை ஆகாயத்தில் மிதப்பதுபோலக் காணப்படுகின்றது; பொன்மயமான உறுப்புக்களோடு கூடியிருப்பதனால் மின்னற் கொடிகளாலேயே புதுமையாக அமைக்கப்பட்டதுபோலிருக்கின்றது. ஸ்ரீமானாகிய குபேரனென்னும் அரசன் அற்புதமான ஆபரணங்களையும் ஆடைகளையும் ஜ்வலிப்பவைபோன்ற குண்டலங்களையும் தரித்து அநேகமாயிரம் மங்கையர்களால் சூழப்பெற்று அந்தச் சபையில் வீற்றிருக்கிறான். மகாராஜனே! தனங்களுக்கெல்லாம் ஈசுவரனான குபேரன் எல்லா ஆபரணங்களினாலும் அலங்கரிக்கப்பெற்றவளும் அழகிய தேகமுள்ளவளுமாகிய ரித்தியென்னும் மனைவியுடன் கூடி உயர்ந்த விரிப்புக்கள் போடப்பட்டதும் உயர்ந்த[1] காலணைகளுடையதும் சூரியனைப்போலப் பிரகாசிப்பதுமான உயர்ந்த சிம்மாசனத்தில் வீற்றிருந்து விளங்குகிறான். [2] நந்தனவனத்தில் வேண்டியவற்றை வழங்குகின்ற மந்தாரமென்னும் கற்பக மரங்களின் சோலைகளை அசைத்துக்கொண்டும் அலகையென்னும் பெயருள்ள ஓடையிலுள்ள தாமரை மலர் செங்கழுநீர் மலர்களின் கந்தங்களை எடுத்துக்கொண்டும் உள்ளத்தை மகிழ்விக்கும் குளிர்ந்த காற்று குபேரனை அடைகின்றது. மகாராஜனே! தேவர்களும் கந்தர்வர்களும அப்ஸரஸுக்களின் கூட்டங்களும் அந்தச் சபையைச் சேர்ந்து அங்கே தேவலோகத்திய [3] தானங்களைப் பாடுகின்றனர். மிச்ரகேசி, ரம்பை, சித்திரசேனை, சுசிஸ்மிதை, சாருநேத்ரை, கிருதாசி, மேனகை, புஞ்சிகஸ்தலை, விசுவாசி, ஸஹஜன்யை, பிரம்லோசை, ஊர்வசி, இரை, வர்க்கை, ஸௌரபேயி, சமீசி, புத்புதை, லதை முதலாகிய ஆட்டத்திலும், பாட்டிலும் நிபுணர்களான ஆயிரக்கணக்கான அப்ஸரஸுக்களும் கந்தர்வர்களும் குபேரனைச் சேவிக்கின்றனர். தேவலோகத்திய வாத்தியங்களும் ஆட்டங்களும் பாட்டுக்களும் எக்காலமும் இடைவிடாத அந்தச் சபை கந்தர்வர்கள் அப்ஸரஸுக்களின் கூட்டங்களினால் நிறைந்து அழகாக விளங்குகின்றது. பாரதனே! கின்னரர்களென்றும் நரர்களென்றும் சொல்லப்பட்ட கந்தர்வ ஜாதியாரும் மாணிபத்ரன், தனதன், சுவேதபத்ரனென்னும் யக்ஷன், கசேரகன், கண்டகண்டு, மகாபலசாலி

1 கால்கொட்டை. 2 சைத்ரரதமெனனும அவனுடைய தோட்டம். 3 ஒருவகை ஸ்வர வரிசை.

யான பிரத்யோதன், குஸ்தும்புரு, பிசாசன், கஜகர்ணன், விசாலகன், வராஹகர்ணன், தாம்ரோஷ்டன், பலகக்ஷன், பலோதகன், ஹம்ஸசூடன், சிகாவர்த்தன், ஹேமநேத்ரன், விபீஷணன், புஷ்பானனன், பிங்களகன், சோணிதோதன், பிரபாலகன், விருக்ஷவாஸி, அனிகேதன், சீரவாஸன் முதலான அநேக லக்ஷக் கணக்கான யக்ஷர்களும் பெருமைபொருந்திய லக்ஷ்மிதேவியும் நளகூபரனும் எப்போதும் அங்கேயே இருக்கின்றனர். நாமும் மற்றுமுள்ள எம்மைப்போன்றவர் அநேகரும் அந்தச் சபையில் இருப்போம். அந்தச் சபையில் பிரம்ம ரிஷிகளும் தேவ ரிஷிகளும் இருக்கின்றனர். மகா பலசாலிகளான ராக்ஷஸர்களும் கந்தர்வர்களும் அந்தச் சபையில் பிரபுவும் மகாத்மாவுமாகிய குபேரனை உபாஸிக்கின்றனர். அரசர்களிற் சிறந்தவனே! உமாபதியும் [1] பசுபதியும் சூலாயுததாரியும் பக தேவதையின் நேத்திரத்தைக் கெடுத்தவரும் முக்கண்ணரும் உக்கிரமான வில்லைத் தரித்தவரும் மகா பலசாலியும் பகவானுமாகிய சங்கரர் இரத்தம்போற் சிவந்த கண்களும் பேரிரைச்சலுமுடையவர்களும் கொழுப்பையும் மாமிசத்தையும் உண்பவரும் கொடியவரும் பலவித ஆயுதங்களைத் தரித்துப் பயங்கரமாயிருப்பவரும் காற்றைப்போலக் கடிய வேகமுள்ளவரும், குட்டையும் உயரமும் கூனுமான பூதக் கூட்டங்களினால் சூழப்பெற்றவராகத் தமது தோழனாகிய குபேரனிடத்தில் எப்போதுமிருக்கிறார். விசுவாவசு, ஹாஹா, ஹூஹூ, தும்புரு, பர்வதன், சைலூஷன், கானம் தெரிந்த சித்திரசேனன், சித்ரரதன் முதலான கந்தர்வ ராஜர்கள் அநேகரும் மற்றுமுள்ள கந்தர்வர்களும் தம் பரிவாரங்களுடன் மகிழ்ந்து தானேசுவரனைப் பணிகின்றனர். வித்தியாதரருக்கரசனான சக்ரதர்மனென்பவன் தன் தம்பிமார்களுடன் கூட அந்தச் சபையில் பிரபுவான தானேசுவரனைப் பூஜிக்கிறான். நூற்றுக்கணக்கான கின்னரர்களும் அங்கே பிரபுவான குபேரனைப் பூஜிக்கின்றனர். பகதத்தன் முதலிய அரசர்களும் அச் சபையிலிருக்கின்றனர். கிம்புருஷர்க்கு அரசனாகிய த்ருமனும், ராக்ஷஸர்களுக்கு அரசனாகிய மகேந்திரன் கந்தமாதனன் இவர்களும் குபேரனை உபாசிக்கின்றனர். தர்மிஷ்டரான விபீஷணரும், இயக்கர் கந்தர்வர் அனைவரோடுங்கூடத் தம் சகோதரனும் பிரபுவுமான குபேரனை அடுத்திருக்கிறார். ஹிமாலயம், பாரியாத்ரம், விந்தியம், கைலாசம், மந்தரம், மலயம், தர்த்துரம், மகேந்திரம், கந்தமாதனம், தேவ பர்வதங்களாகிய இந்திரகீலம், ஸுநாபம் ஆகிய இவைகளும், மேரு முதலான மற்றுமுள்ள

1 பசுபதி = பசுவென்னும் ஆத்மாக்களுக்குப் பதி.

அநேக மலைகளும், பிரபுவும் மகாத்மாவுமான தனபதியைச் சேவிக்கின்றன. பகவானாகிய நந்திகேசுவரர், மகா காலன், காஷ்டன், குடமுகன், தந்தி, விஜயன், தபோதிகன், சங்கு கர்ணன் முதலிய சிவ கணங்களனைவரும் குபேரனை யடுத்திருக்கின்றனர். மிகுந்த பலமுள்ள வெள்ளை ரிஷபமும் அங்கே கர்ஜித்துக்கொண்டிருக்கிறது. இன்னும் அநேகம் ராக்ஷஸர்களும் பிசாசர்களும் தனதனிடம் காத்திருக்கின்றனர். தேவதேவர்க்கும் ஈசுவரரும் மூவுலகங்களைப் படைப்பவரும் பல ரூபங்கள் எடுப்பவரும் உமாபதியுமாகிய சிவபெருமான் தம் கூட்டத்தாரால் சூழப்பட்டுவரும்போது தனேசுவரனான குபேரன் அவரைத் தலையால் வணங்கி அந்த மகாதேவரிடம் அனுமதிபெற்ற பின்புதான் உட்காருகிறான். தனபதியின் சிநேகிதரும் பகவானுமான சிவபெருமானும் சில சமயம் உட்காருவார். நவ நிதிகளுக்கும் முதன்மையான சங்கம் பத்மமென்னும் இரண்டு சிறந்த நிதிகள் மற்ற நிதிகளை யெல்லாம் அழைத்துக்கொண்டு குபேரனைச் சேவிக்கின்றன. ஆகாயத்திற் சஞ்சரிக்கும் அப்படிப்பட்ட அழகான அந்தச் சபை என்னால் காணப்பட்டது. ராஜனே! பிரம்ம சபையைச் சொல்வேன்; அதையுங் கேள்.

---

## பதினோராவது அத்தியாயம்

## மந்திர பர்வம்—(தொடர்ச்சி)

---

### (பிரம்மசபைச் சிறப்பு)

அன்பனே! பரதகுலத்தோனே! இவ்வகையான உருவமுள்ளதென்று உரைக்கமுடியாததாகிய பிரம்ம சபையைப்பற்றி நான் சொல்வதை நீ கேள். ராஜனே! களைப்பில்லாதவரான சூரிய பகவான், முந்திய [1]தேவ யுகத்தில் மானிட லோகத்தைப் பார்க்க விருப்பமுற்றவராக ஆகாயத்திலிருந்து வந்தார். பாண்டவனே! பரதரேறே! மனத்தினால் சொல்லத்தக்கதும் அறிவுக்கும் சொல்லுக்கும் எட்டாத பெருமை பொருந்தியதும் எல்லாப் பிராணிகளின் மனங்களையும் கவருவதுமாகிய பிரம்மதேவருடைய திவ்ய சபையைப் பார்த்த பிறகு, அவர் மானிட வடிவத்தோடு

---

1 மனிதர்களுக்கு ஒரு வருஷம்—தேவர்களுக்கு ஒரு நாள். மானிட வருஷம் முந்நூற்றறுபது சேர்ந்தது தேவர்களுக்கு ஒரு வருஷம். பன்னீராயிரம் தேவ வருடம் மானிடர்களுக்கு நாலு யுகங்கள். அவை தேவர்களுக்கு ஒரு யுகம். தேவ யுகம் ஆயிரம் பிரம்மாவுக்கு ஒரு தினம். இங்கு தேவ யுகத்தில் என்பதற்கு, 'கிருத யுகத்தில்' என்பது பழைய உரை.

சஞ்சரித்துவருகையில் என்னைக் கண்டு, அந்தச் சபையைப்பற்றி எனக்கு உரைத்தார். பாண்டவ சிரேஷ்டனான ராஜனே! நான், அந்தச் சபையின் சிறப்புக்களைக் கேட்டு அதைப் பார்க்க விருப்ப முள்ளவனாகச் சூரியனை நோக்கி, 'பகவானே! அழகான பிரம்ம சபையை யான் காண விரும்புகிறேன். கிரகங்களுக்கு அதிபதியே! என்ன தவம், என்ன கருமம் அல்லது எந்த ஔஷதப் பிரயோ கஞ் செய்வதனால், பாவங்களை யொழிப்பதாகிய அந்தச் சிறந்த சபைக்கு நான் போகமுடியும்? எவ்வகையாக அதை யான் காண் பேன்? அதை எனக்குச் சொல்லும்' என்று கேட்டேன். பாரத சிரேஷ்டனே! ஆயிரம் கதிர்களையுடையச் அந்தச் சூரியன், என் னுடைய இந்தச் சொல்லைக் கேட்டு, 'நீ மனத்தை அடக்கி ஆயி ரம் வருஷ காலம் பிரம்மவிரதமென்னும் தவம்புரிவாயாக' என்று கூறினர். உடனே, நான் இமயமலையின்மேல் அந்தப் பெருந்தவம் செய்தேன். அதன் பிறகு, பாவமற்றவரும் களைப் பில்லாதவரும் மகிமையுள்ளவருமான சூரிய பகவான் என்னை அழைத்துக்கொண்டு அந்தப் பிரம்ம சபைக்குச் சென்றார். ராஜனே! அந்தச் சபை இவ்வகை உருவமுள்ளதென்று சொல்ல முடியாது. அது நிமிஷத்துக்கு நிமிஷம் சொல்லுக்கெட்டாத வெவ்வேறு வடிவங்களை அடைகிறது. பாரதனே! அதன் அள வையும் வடிவத்தையும் நான் அறியேன். அவ்வகையான உரு வத்தையும நான் ஒரு காலத்திலும கண்டதில்லை. குளிர்ச்சியும் வெப்புமுமில்லாமல் எப்போதும் மிக்க சுகமாகவே யிருக்கிறது. அச்சபையைச் சார்ந்தவர்கள் பசி தாகங்களையும் களைப்பையும் அடைவதில்லை. அது மிக்க ஒளியுள்ள பல நிறமுள்ள ரத்தினங் களினால் அமைக்கப்பெற்றது. அது தூண்களினால் தாங்கப் படுவதில்லை; என்றும் கெடாமலிருக்கிறது; மிக்க ஒளியுள்ள பலவகைத் தெய்வலோகப் பொருள்களுடன் கூடியது. சந்திரனை யும் சூரியனையும் அக்னியையும் மிஞ்சிப் பிரகாசிக்கின்ற அந்தச் சபையானது சுவர்க்கலோகத்திற்கு மேலிருந்துகொண்டு சூரியனைப் பயமுறுத்துவதுபோல விளங்குகின்றது. ராஜனே! எல்லா உலகங்களுக்கும் தாதையான அந்தப் பிரம்ம தேவர் எப் போதும் தமது ஈசுவர சக்தியினால் எல்லாவற்றையும் படைத் துக்கொண்டு அந்தச் சபையில் தாம் ஒப்பற்றவராயிருக்கிறார். தக்ஷர், பிரசேதஸ், புலஹர், மரீசி, சமர்த்தரான கசியபர், பிருகு, அத்ரி, வசிஷ்டர், கௌதமர், அங்கிரஸ், புலஸ்தியர், க்ரது, பிரக லாதர், கர்த்தமர் ஆகிய பதினன்கு சிருஷ்டிகர்த்தர்களும், அதர் வாங்கிரஸர், வாலகில்லியர், மரீசிபர் என்னும் ரிஷிகளும், பிரபுவான பிரம்மதேவரை அடுத்திருக்கின்றனர். பாரதனே!

மனம், ஆகாயம், வித்தைகள், வாயு, தேயு, நீர், நிலம், சப்தம், பரிசம், ரூபம், ரஸம், கந்தம், மூலப்பிரகிருதி, (மகத்து அகங்கார முதலிய) விகாரங்கள் இவைகளும் பூமிக்குக் காரணமான மற்றுமுள்ளவையும், பெரிய மகிமையுள்ள அகஸ்தியர், தவ வன்மையுள்ள மார்க்கண்டேயர், ஜமதக்நி, பரத்வாஜர், ஸம்வர்த்தர், சியவனர், மகானுபாவரான துர்வாஸர், தர்மிஷ்டரான ரிஷியசிருங்கர், யோக சாஸ்திர ஆசாரியரும், சிறந்த தவமுள்ளவருமான மகிமை பொருந்திய ஸனத்குமாரர், அஸிதர், தேவலர், தத்துவஜ்ஞானியான ஜைகீஷவ்யர், ஐம்புலன்களென்னும் சத்துருக்களை ஜயித்தவரான ரிஷியர், சிறந்த மகிமையுள்ள மணியென்பவர் இவர்களும் அங்கே பிரம்மதேவரை உபாஸிக்கின்றனர். பார்த்தனே! எட்டு அங்கங்களோடு கூடிய ஆயுர்வேதமும் தேகமெடுத்துக்கொண்டு அங்கேயே இருக்கிறது. சந்திரனும் சூரியனும் நக்ஷத்திரங்களும் கிரணங்கள் நிரம்பின ஆதித்தனும் காற்றுக்களும் யாகங்களும் ஸங்கல்பமும் பிராணனும் அறம்பொருளின்பங்களும் மகிழ்ச்சியும் பகையும் தவமும் இந்திரிய ஐயமும் மற்றுமுள்ள இவ்வகையான அநேகங்களும் தேகங்களெடுத்துப் பெருந்தவஞ் செய்துகொண்டு மகாத்மாக்களாகப் பிரம்மதேவரை ஆசிரயித்திருக்கின்றன.[1] கந்தர்வர்கள், அப்ஸரஸுகள் இவர்களின் இருபத்தேழு வகையார்களும், திக்குப்பாலகரனைவரும் அந்தச சபையில் வந்து சேர்ந்திருக்கின்றனர். பாரதனே! பாண்டவனே! ராஜனே! சுக்கிரன், பிருகஸ்பதி, புதன், அங்காரகன்,[2] சனைச்சரன், ராகு முதலான எல்லா கிரகங்களும் மந்திரமும் ரதந்தரமென்னும் ஸாமமும் ஹரிமான் வஸுமானென்பவர்களும பன்னிரண்டு ஆதித்தர்களும் அவர்களுக்குத் தலைவனை சூரியனும் அக்னீஷோமர் மித்ரா வருணர் முதலிய இரட்டைத்தேவர்களும் ஸப்த மருத்துக்களும் அஷ்ட வஸுக்களும், விசுவகர்மாவும், பிதிர்தேவரனைவரும், ஹோமத் திரவியங்களனைத்தும், ருக்வேதம், ஸாமவேதம், யஜுர்வேதம், அதர்வண வேதமென்னும் நான்கும் எல்லா சாஸ்திரங்களும், இதிகாசங்களும்,[3] உபவேதங்களும், வேதாங்கங்களனைத்தும், கிரகங்களும், யாகங்களும், ஸோமலதையும், எல்லா தேவர்களும், துன்பங்களைக் கடத்திவைக்கும் ஸாவித்திரியும், அவ்வாறே கற்பனை சக்தி, ஞாபக சக்தி, சொல் வன்மை, திரிகால ஞானம், உலக அறிவு, புகழ்,

---

1 சிலர் இருபத்தேழு நக்ஷத்திரங்களென்றும, வேறு சிலா கந்தர்வர் அப்ஸரஸுக்களின் கணங்கள் இருபதும், கந்தர்வத் தலைவர்கள் எழுவரும என்றும் அபிப்பிராயப்படுவதாகப பழைய உரை கூறுகிறது.

2 சனி.

3 தனுர்வேதம் முதலியன.

பொறுமையென்னும் எழுவகையான [1] ஸரஸ்வதியும், ஸ்தோத்தி ரங்கள் சஸ்திரங்கள் என்னப்பட்ட ஸாமங்களும், பலவகைக் [2] காதைகளும், தர்க்கங்களோடுகூடிய பாஷியங்களும், பலவகை நாடகங்களும், காவியங்களும், [3] கதைகளும் ஆக்யாயிகைகளும், [4] காரிகைகளும், தேகங்களெடுத்துக்கொண்டு அங்கே இருக் கின்றன. குருவுக்குப் பூஜைசெய்த புண்ணியசாலிகளும் அங்கே இருக்கின்றனர். பாரதனுன யுதிஷ்டிரனே! [5] க்ஷணங்கள், லவங் கள், [6] முகூர்த்தங்கள், பகல் இரவுகள், பக்ஷங்கள், மாதங்கள், ஆறு ருதுக்கள், வருஷங்கள், ஐந்து [7] யுகங்கள், [8] நாலுவகைத் தினங்கள், என்றும் அழியாததும் மாறுததுமான அந்த முதன்மையான கால சக்கரம் தாம சக்ரம் ஆகிய இவை அங்கே எப்போதும் இருக்கின்றன. [9] தேவமாதர்களாகிய அதிதி, திதி தனு, ஸுரஸை, வினதை, இரை, காலிகை, ஸுரபி தேவி, ஸரமை, கௌதமி, பிரபை, கத்ரு, ருத்ராணி, ஸ்ரீதேவி, லக்ஷ்மி, பத்ரை, ஷஷ்டி தேவி, பிருதிவி தேவி, ஹ்ரீ தேவி, ஸ்வாஹா தேவி, கீர்த்தி, ஸுரா தேவி, இந்திராணி, புஷ்டி, அருந்ததி, ஸமவிருத்தி, ஆசை, நியதி, ஸ்ருஷ்டி, ரதி தேவி முதலிய தேவப் பெண்களும் பிரம்மதேவரைச் சேவிக்கின்றனர். ஆதித்தியர்களும் வஸுக்களும் ருத்திரர்களும் மருத்துக்களும் அசுவினீதேவர்களும் விசுவேதேவர்களும ஸாத்தியர்களும் மனோவேகமுள்ள பிதிர் தேவர்களும் பிரமமதேவரை சேவிககின்றனர். புருஷ சிரேஷ்டனே! பிதிர்தேவதையின் கூட்டங்கள் ஏழு வகைகளென்று அறி. அவர் களுள், நான்கு வகையார் [10] கடின சரீரமுள்ளவர்கள்; மற்ற மூன்று வகையார் [11] உருவங்கள்மட்டும் உள்ளவர்கள். பாரதனே!

---

1 அகரம், உகரம், மகரம், அரைமாத்திரை, நாதம், பிந்து, சக்தி என்னும் எழுவகை யான பிரணவம் என்றும், அல்லது ஸம்ஸ்கிருதம், பிராகிருதம், பைசாசம், அபப்ரம்சம், லலிதம், மாகதம், கத்யம் என்னும் எழுவகைப் பாஷைகளென்றும் உரைப்பது பழைய உரை. அதில் கற்பனு சக்தி முதலிய மேற்சொல்லிய ஏழையும் வேருகக் கொள்ள வேண்டும்.

2 தேச பாஷையிலுள்ள பாட்டுககள்.

3 ஆக்யாயிகை, கதை இரண்டும் வசன பிரபந்தங்கள். அவற்றுள், கதாநாயகனே நேரில் சொல்லுவதும் உச்சுவாஸங்களென்னும் பிரிவுகளுள்ளதும், ஒவ்வோர் உச்சுவாஸங் களிலும் அவ்வவற்றின் விஷயங்களைக் குறிப்பிக்கும் சுலோகம் இருப்பதும் ஆக்யாயிகை. இவ்வாறின்றிச் சரித்திரங்களை வசன நடையாகச் சொல்லுவது கதை.

4 சாஸ்திர விஷயங்களைச் சுருக்கிச்சொல்லும் சுலோகங்கள்.

5 நொடிகள்.

6 மூன்றேமுக்கால் நாழிகை.

7 கிருதயுகம், திரேதா யுகம், துவாபர யுகம் கலியுகம், யுக சந்தியை ஆக ஐந்து.

8 மனுஷ்ய தெய்வ பிதிர் பிரம்ம தினங்கள்.

9 இங்கே அசுரர் நாகர் முதலியோரும் தேவஜாதியிற் சேர்க்கப்பட்டனர்.

10 ஸ்பரிசிக்கத்தக்க தேகமுள்ளவர்கள்.

11 ஸ்பரிசிக்கக்கூடாமல் காணப்படுபவர்.

மகானுபாவர்களான வைராஜர்களும் அக்னிஷ்வாத்தர்களும் சுவர்க்கத்தில் சஞ்சரிப்பவரும் உலகங்களில் பெயர்பெற்றவரு மான கார்ஹபத்தியர்களென்னும் பிதிருக்களும் ஸோமபர்களும் ஏகசிருங்கர்களும் சதுர்வேதர்களும் கலர்களுமாகிய இந்த எழு வகைப பிதிருக்களும், பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென் னும் நான்கு வருணங்களிலும் பூஜிக்கப்படுகின்றனர். இந்தப் பிதிருக்களை முதலில் புஷ்டிசெய்வதனால், சந்திரன் விருத்தி செய்யப்படுகிறான். அப்படிப்பட்ட பிதிருக்களெல்லோரும் பிரம்மாவின் அருகிலிருந்துகொண்டு அளவற்ற மகிமையுள்ள பிரம்மதேவரைச் சந்தோஷமாகப் பணிகின்றனர். ராக்ஷஸர்கள், பிசாசர்கள், அசுரர்கள், யக்ஷர்கள், நாகர்கள், கருடர்கள, பசுக் கள் ஆகிய இவர்களும் ஜங்கமங்களும் தாவரங்களும் பூமி முதலிய ஐந்து மகா பூதங்களும் பிரம்மதேவரை உபாஸிக்கின்றனர். தேவர்களுக்கு ராஜாவான இந்திரன், வருணன், குபேரன், யமன், பார்வதியுடன்கூடிய மகாதேவர் இவர்களனைவரும எப்போதும அங்கே போகின்றனர். ராஜசிரேஷ்டனே! சுப்ரமணியரும் எப் போதும் பிரம்மதேவரை உபாஸிக்கின்றனர். ராஜனே! பகவா னை நாராயணரும் தேவரிஷிகளும் வால்கில்ய ரிஷிகளும் கர்ப் பத்தில் ஜனித்தவர்களும் ஜனிக்காதவர்களுமான ரிஷிகளும் பிரம்மதேவரைச் சேவிக்கின்றனர். ராஜனே! இவ்வுலகத்தில் காணப்படும் மற்றுமுள்ள ஜங்கம தாவரங்களும் அந்தச் சபை யில் என்னால் காணப்பட்டனவென்று அறி. பாண்டவனே! நித்தியப் பிரம்மசாரிகளான ரிஷிகள் எண்பத்து எண்ணாயிர வரும் சந்ததியுள்ள ரிஷிகள் ஐம்பதினாயிரம் பேர்களும் அங்கே இருக்கின்றனர். அந்தத் தேவர்களனைவரும் அவ்விடத்தில் இஷ்டப்பிரகாரம் பிரம்மதேவரைக் கண்டு அவருக்குத் தலை வணங்கி, நமஸ்காரஞ்செய்து வந்தவாறே செல்லுகின்றனர். அளவற்ற ஞானமுள்ளவரும் உலகங்களுக்குத் தாதையும் எல்லாப் பிராணிகளிடத்தும் தயையுள்ளவருமாகிய பிரம்மதேவர் அதிதிகளாக வந்த மகானுபாவர்களான தேவர்களையும் அசுரர் களையும் நாகர்களையும் பிராமணர்களையும் யக்ஷர்களையும் கருடர் களையும் காலேயர்களையும் கந்தர்வர்களையும் அபஸரஸுக்களையும் அவரவர் தகுதிப்படி அழைக்கிறார். ராஜனே! அளவற்ற மகிமை யுள்ளவரும் உலகங்களுக்கு ஆத்மாவுமான பிரம்மதேவர் அவர் களை அழைத்து இன்சொல்லினாலும் வெகுமதியினாலும் அவர் கள் காரியத்தை நிறைவேற்றுவதனாலும் ஆனந்தத்தை உண்டு பண்ணுகிறார். அன்பனே! பரத குலத்தோனே! அவ்வாறு வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருக்கும் அவர்களால்

நிரம்பியிருக்கும் அந்தச் சபை ஆனந்தத்தை அளிப்பதாயிருக்கிறது. எல்லா ஒளிகளும் நிரம்பினதும் பிரம்ம ரிஷிகளின் கூட்டங்களால் அடையப்பட்டதும் களைப்பில்லாததுமான அந்தத் திவ்ய சபை பிரம்மதேவருடைய பெருமையினால் சிறப்பாக விளங்கிற்று. ராஜசிரேஷ்டனே! மானிட லோகத்தில் இந்த உன் சபை எப்படியோ அப்படியே மேலுலகங்களில் காண அரிதாகிய அப்படிப்பட்ட அந்தச் சபை என்னால் காணப்பட்டது. பாரதனே! தேவலோகங்களில் இந்தச் சபைகளையே நான் முன்னம் கண்டிருக்கிறேன். உன்னுடைய இந்தச சபை மானிட லோகத்திலுள்ள எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது'' என்றார்.

---

## பன்னிரண்டாவது அத்தியாயம்

### மந்திர பர்வம் (தொடர்ச்சி)

**(தர்மபுத்திரர் அரிச்சந்திரனைக் குறித்துக் கேட்டதன்மேல் நாரதர் ராஜசூய யாகத்தின் பெருமையைப்பற்றி அவருக்குச் சொன்னது.)**

இவ்வாறு நாரதர் சொல்லக் கேட்ட தர்மபுத்திரர், 'பேசுகிறவரிற் சிறந்தவரே! வல்லமையுள்ளவரே! யமனுடைய சபையில் அரசர்களின் கூட்டம் பெரும்பாலும் உம்மால் கூறப்பட்டது. நீங்கள் சொல்வதே எனக்குச் சரி. சமர்த்தரே! வருணனுடைய சபையில் நாகர்களும் அசுரசிரேஷ்டர்களும் நதிகளும் சமுத்திரங்களும் மிகுதியாகக் கூறப்பட்டனர். அவ்வாறே குபேர சபையில் யக்ஷர்களும் குஹ்யகர்களும் ராக்ஷஸர்களும் கந்தர்வர்களும் அப்சரஸுக்களும் சிவபெருமானும் கூறப்பட்டுளர். பிரம்மதேவருடைய சபையில் மகரிஷிகளும தேவர்கள் கூட்டத்தாரனைவரும் சாஸ்திரங்களனைத்தும் இருப்பதாகச் சொன்னீர். முனிவரே! இந்திரனுடைய சபையில்மட்டும் தேவர்களையும் அநேக கந்தர்வர்களையும் மகரிஷிகளையும் பெயரெடுத்துரைத்தீர். மகாமுனிவரே! ராஜ ரிஷிகளில் அரிச்சந்திரன் ஒருவன்மட்டுமே மகாத்மாவான தேவேந்திரன் சபையிலிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறான். தவறாத தவமுடையவரே! மிக்க பெரும்புகழ் பெற்றவனான அந்த அரிச்சந்திரன் தேவேந்திரனுக்கு எதிராயிருக்கும்படியாக என்ன வினை செய்தான்? என்ன தவம்புரிந்தான்? பிராம்மணரே! பித்ருலோகத்திலிருக்கும் என் தந்தையும் மகானுபாவருமான பாண்டு உம்மால் எவ்வாறு காணப்பட்டார்? உம்முடன் எப்படிச் சந்தித்தார்? என்ன சொன்னார்? பகவானே! சிறந்த தவமுடையவரே! அதனை எனக்குச் சொல்லும். இவற்றையெல்லாம் உம்மிடத்தில்

கேட்க விருப்பமுள்ளவனாக இருக்கிறேன்' என்று கூற, நாரதர் சொல்லலானார்.

"அரசர்க்கரசனே! பிரபுவே! அரிச்சந்திரனைப்பற்றி என்னைக் கேட்டபடியால் சிறந்த புத்தியுள்ள அவனுடைய மகிமையை யான் உனக்குச் சொல்வேன். இக்ஷ்வாகு குலத்தில் பிறந்தோனும் அயோத்தி நகருக்கு அதிபதியும் விசுவாமித்திரரால் காப்பாற்றப்பட்டவனும் வீரனுமான திரிசங்கு வென்னும் அரசன் ஒருவன் இருந்தான், அவனுக்கு, கேகய ராஜவம்சத்திற் பிறந்தவளான ஸத்தியவதி யென்னும் மனைவி யிருந்தாள். கௌரவ புத்திரனே! அவளுக்குத் தர்மமாகக் கர்ப்பம் உண்டாயிற்று. அரசனே! அந்த மகாபாக்கியவதி பிரசவ மாதம் வந்தபோது, அரிச்சந்திரனென்னும் குற்றமற்ற குமாரனை ஈன்றாள். அந்த அரிச்சந்திர ராஜன திரிசங்குவின் மைந்தனென்று சொல்லப்படுகிறான். மிகுந்த பலசாலியான அவ்வரசன் எல்லா அரசர்களுக்கும் அரசனாக இருந்தான். அரசர்களனைவரும் அவன் கட்டளைக்கு அடங்கியிருந்தனர். ராஜனே! அவ்வரசன் பொன்னணிகள் பூண்ட ஒரே ஜயத்தேரிலேறி (வேறு துணையின்றிச்) சஸ்திரவன்மையினால் [1]ஏழு தீவுகளையும் ஜயித்தான். மகாராஜனே! அவன் மலைகளும நீர்களும் காடுகளும் அடங்கிய புவனி முழுமையும் வென்று ராஜசூயமென்னும் மகா யாகத்தைப் புரிந்தான். எல்லா அரசர்களும அவன் கட்டளைப்படி திரவியங்களைக் கொணர்ந்தனர். அவர்களே அந்த யாகத்தில் பிராமணர்களுக்குப் போஜனம் பரிமாறுகிறவர்களாயிருந்தனர். பராக்கிரமசாலியான அரிச்சந்திர மகாராஜன சாஸ்திரப்படி ராஜசூய யாகத்தை நிறைவேற்றினபின் அரசர்க்கரசனாக அபிஷேகஞ் செய்யப்பெற்று விளங்கினான். சிறந்த தக்ஷிணைகளோடுகூடிய ராஜசூய யாகத்தில் முடிசூட்டப்பெற்ற அவ்வரசன், மகிழ்ச்சியுடன, யாசகர்கள் தன்னிடம் கேட்டதற்கு ஐந்துமடங்கதிகமாக அவர்களுக்குப் பொருள் அளித்தான். பிறகு, அக்னியை விசர்ஜனஞ்செய்யுங்காலம் வந்தபோது, பற்பல தேசங்களினின்றும் வந்த பிராமணர்களுக்கு விருப்பப்படி மரியாதையோடு பலவகைப் பட்சணங்களையும் போஜனங்களையும் பொருள்களையும் கொடுத்துத் திருப்தி அடைவித்தான். ரத்தினங்களின் குவியல்களினால் திருபதி யடைவிக்கபபெற்று மகிழ்வுற்ற அந்தணர்களின் ஆசீர்வாதங்களினால் பராக்ரமத்திலும் புகழிலும் மற்ற அரசர்களைக் காட்டிலும் மேலாக இருந்தான். ராஜனே! பரதரேறே! இந்தக்

1 ஸப்த த்வீபங்களாவன :—1. ஜம்புத் தீவு. 2. ப்லக்ஷத் தீவு. 3. குசத் தீவு. 4. க்ரௌஞ்சத் தீவு. 5. சாகத் தீவு. 6. சால்மலித் தீவு. 7. புஷ்கரத் தீவு.

காரணம்பற்றித்தான் அந்த அனேகமாயிரம் அரசர்களைக் காட்டிலும் அரிச்சந்திரன் சிறப்புற்று விளங்குகிறானென்றறி. மனிதர்க்கதிபதியே! வெற்றிபெற்ற அரிச்சந்திரன் அம்மகா யாகத்தை நிறைவேற்றினபின் ஸம்ராட்டாக முடிசூட்டப்பெற்று விளங்கினான். பரத சிரேஷ்டனே! மற்றுமுள்ள அரசர்களில் எவர்கள ராஜசூய யாகத்தைச் செய்கின்றனரோ அவர்கள் இந்திரனுடன்கூடி மகிழ்கின்றனர். பரதசிரேஷ்டனே! யுத்தத்தில் ஓடாமல் மரணமடைந்தவர் எவரோ அவரும் அந்த இந்திர லோகத்தைச் சேர்ந்து மகிழ்கின்றனர். எவர்கள் இவ்வுலகத்தில் கடுந்தவத்தினால் தேகத்தை விடுகின்றனரோ அவர்களும் அவ்விடம் சேர்ந்து எக்காலமும் சிறப்புற்று விளங்குகின்றனர். கௌரவர்களைச் சிறப்பிக்கிறவனே! குந்திபுத்ரனே! ராஜனே! அரிச்சந்திர ராஜனிடத்திலுள்ள மேன்மையைக் கண்டு வியப்புற்ற உன் தந்தையாகிய பாண்டு நான் மானிட லோகத்திற்கு வருவதை அறிந்து, என்னை வணங்கி, 'ஐயா! நீர் யுதிஷ்டிரனுக்கு, 'பாரதனே! நீ புவனியை வெல்ல வல்லவனாயிருக்கிறாய்; உன் சகோதரர்கள் உனக்கு அடங்கியிருக்கின்றனர். நீ யாகங்களிற் சிறந்த ராஜசூய யாகத்தைச் செய்வாயாக. எனது புதல்வனாகிய நீ ராஜசூய யாகஞ் செய்தால் நான் வெகு சீக்கிரத்தில் இந்திர சபைக்குச் சென்று அரிச்சந்திரனைப்போல அனேக வருஷகாலம் நித்திய சந்தோஷமாயிருப்பேன் என்று சொல்லக் கடவீர்' என்று கூறினான். 'அப்படியே யாகட்டும். நான் பூலோகத்திற்குப் போவேனாயின் ராஜாவான உன் புத்திரனுக்குச் சொல்வேன்' என்று அவனுக்கு மறுமொழி கூறினேன். பாண்டவனே! புருஷ சிரேஷ்டனே! அந்தப் பாண்டுவின் எண்ணத்தை நீ நிறைவேற்றக்கடவாய். நீயும் உன் முன்னோர்களும் தேவேந்திரலோக வாசத்தைப் பெறுவீர்கள். அரசனே! இந்தப் பெரிய யாகம் இடையூறுகள் மிகுதியாக உள்ளதென்று நினைக்கப்பட்டது. யாகங்களைக் கெடுக்கும் பிரம்ம ரக்ஷஸுகள் இதில் தவறுகளைத் தேடிக்கொண்டிருக்கின்றன. க்ஷத்திரியர்களை அழிப்பதும் பூமியை யொழிப்பதற்குக் காரணமும் மரணத்தை யுண்டு பண்ணுவதுமான யுத்தம் ஏதாவது ஒரு காரணம்பற்றி இந்த யாகத்தில் உண்டாகும். அரசர்க்கரசனே! இதனைச் செம்மையாக ஆராய்ந்து எது கூடுமோ அதைச் செய்வாயாக. நான்கு வருணங்களையும் காப்பதில் எப்போதும் ஊக்கமும் உற்சாகமுமுள்ளவனாக இரு! அபிவிருத்தியை அடை; மகிழ்ந்திரு; திரவியங்களினால் பிராமணர்களைத் திருப்தியடையச் செய். நீ என்னைக் கேட்ட விஷயத்தைப்பற்றி உனக்கு விரிவாக உரைத்தேன். உன்

னிடம் விடைபெற்றுக்கொள்ளுகிறேன். கண்ணனுடைய நகரத்திற்குச் செல்வேன்' என்றார். ஜனமேஜயரே! நாரதர் பாண்டவர்களுக்கு இவ்வாறு சொல்லியபின், எந்த ரிஷிகளுடன் சேர்ந்து வந்தனரோ அவர்களுடன் கூடவே சென்றார். அவர் சென்ற பிறகு, கௌரவரான தர்மராஜர் சகோதரர்களுடன் கூடி ராஜசூயமென்னும் சிறந்த யாகத்தைப்பற்றி ஆலோசனை செய்தார்.

---

## பதின்மூன்றுவது அத்தியாயம்

### மந்திர பர்வம் (தொடர்ச்சி)

**(யுதிஷ்டிரர் ராஜசூயஞ்செய்ய ஆலோசித்துக் கிருஷ்ணனுக்குத் தூதுவிடுத்ததும், வந்துசேர்ந்த கிருஷ்ணனிடம் காரியத்தைத் தெரிவித்ததும்.)**

ஜனமேஜயரே! நாரத மகரிஷி சொல்லியதைக் கேட்டு யுதிஷ்டிரர் பெருமூச்செறிந்தார். ராஜசூய யாகத்தைப்பற்றி நினைத்து மனத்தில் ஆறுதலில்லாமலிருந்தார். மகாத்மாக்களான ராஜரிஷிகளின் அந்த மகிமையைக் கேட்டும், முறைப்படி யாகஞ் செய்தவர்கள் தமது புண்ணிய கர்மங்களினால் மேலுலகம் பெறுவதை ஆராய்ந்தும், அரிச்சந்திரனென்னும் ராஜரிஷி சாஸ்திரப்பிரகாரம் யாகஞ் செய்து மேன்மையாக விளங்குவதைக் கேட்டும், தர்மபுத்திரர் தாமும் ராஜசூய யாகஞ் செய்யக் கருதினார். பிறகு, யுதிஷ்டிரர் சபையோரனைவரையும் மரியாதை செய்து, அவர்கள் அனைவராலும் எதிர்மரியாதை செய்யப்பெற்ற பிறகு, யாகத்திலேயே நினைவாக இருந்தார். அரசர்க்கரசரான ஜனமேஜயரே! அந்தக் கௌரவ சிரேஷ்டரான தர்மராஜர் பல முறை ஆராய்ந்து பார்த்து ராஜசூயம் செய்வதிலேயே உறுதிப்படுத்திக்கொண்டார். வியக்கத்தக்க பராக்கிரமமும் மகிமையுமுள்ள அவர் மறுபடியும் தர்மத்தையே நினைத்து, எஃது எல்லாப பிரஜைகளுக்கும் நன்மையா யிருக்குமென்பதிலேயே மனத்தைச் செலுத்தினார். எல்லாப் பிரஜைகளையும் வேற்றுமையின்றிப் பரிபாலனஞ் செய்பவரும் தர்மத்தைக் காப்பவரெல்லாரிலும் சிறந்தவருமான யுதிஷ்டிரர் யாவருக்கும் நன்மையைச் செயதார். கோபம் மதம் இரண்டையும் ஒழித்து யாவருக்கும் தானம் கொடுக்கும்படி கட்டளையிட்டார். 'தர்மம் நல்லது, தர்மம் நல்லது' என்றதைத் தவிர வேறு சொல்லை யாரும் கேட்டதில்லை. இவ்வாறு நடக்கையில், ஜனங்கள் 'தந்தையினிடம் அன்பு வைப்பதுபோல அவர்மேல் அன்பு வைத்தனர். அவரைப் பகைப்பவ

னில்லை. அதனால் அவர் அஜாதசத்ருவானார். ராஜாவின் அனுக்கிரகத்தினாலும் பீமசேனன் பாதுகாப்பினாலும் ஸவ்யஸாசியான அர்ஜுனன் பகைவரை ஒழிப்பதனாலும் புகழ்பெற்ற நகுலனால் கப்பங்கள சரியாக வருவதனாலும் புத்திசாலியான சகதேவன் தர்மங்களை விதிப்பதனாலும நகுலன் இயற்கையாக எல்லோரிடத்திலும் பணிவோடிருப்பதனாலும் அந்தத் தேசம் கலகமில்லாமலும், அச்சமில்லாமலும், நிரம்ப மழை பொழிவதனால் செழுமையாகவும இருந்தது. ஜனங்கள் தம் தம் தொழில்களை விடாமற செய்தனர். வட்டிக்குக் கொடுக்கல் வாங்கலும் யாகச் சிறப்புக்களும, பசுக் காத்தலும் உழுதொழிலும் வர்த்தகமுமாகிய இவையனைத்தும ராஜாவின் பரிபாலனத்தினால் மிக ஓங்கியிருந்தன. யுதிஷ்டிரர் தர்மந் தவறாமலிருந்ததனால் அத்தேசத்தில் கபடம வராமல் நிற்றலும், அதற்காகப் பிரஜைகளைப் பீடிப்பதும, ரோகங்களின் மிகுதியும தீப்பிடித்தலுமாகிய இவையொன்றும உண்டாகவில்லை. திருடர்களாலும் மோசக்காரர்களாலும் அரசர்கள் ஒருவர்க்கொருவர் விரோதத்தினாலும் ராஜாவின் அபிமானம பெற்றவர்களாலும் தீங்கு நடந்ததாகக் கேட்கப்படவில்லை. அரசர்கள் ஆறு குணங்களிலும் ராஜாவின் பிரியத்தைச் செய்யவும் கப்பங்களைச் செலுத்தவும தாங்கள செய்த முயற்சியின் பயனைத் தெரிவிக்கவும், பல ஜாதியாரான வர்த்தகர்களோடு ஒத்திருந்தனர். ஜனமேஜய ராஜாவே ! ஆவு மேய்ப்பவர் முதல் அந்தணரீறாகப் பத்துத் திசைகளிலுமுள்ள ஜனங்களால் தம தந்தை தாய்போல அன்பு வைக்கப்பட்டவரும எங்கும் பிரகாசிப்பவரும் எல்லாக் குணங்களும் பொருந்தினவரும் எல்லாவற்றையும் பொறுப்பவரும் எல்லாருக்கும் மேலாகப் பெரும்புகழ்பெற்று விளஙகுபவரும் அரசர்க்கரசருமான தர்மராஜாவினால் ஆளபபட்ட அந்தத் தேசமானது, அவர் தர்மத்தில் நிலைபெற்றிருந்ததனால், ஜனங்கள் பொருளாசையினால், லௌகிக விருத்திகளைச் செய்து அப்பொருள்களை நினைத்தபடி அனுபவித்தும செல்வம் மிகுந்ததாகவே யிருந்தது. பேசுகிறவரிற் சிறந்தவரான அந்தத் தர்மராஜர் அக்காலத்தில் அமைச்சரையும் சகோதரரையும் வருவித்து ராஜசூய யாகத்தைப்பற்றிப் பல முறை வினவினார். அவராற் கேட்கப்பட்ட அந்த மந்திரிகள் சேர்ந்து அப்போது யாகஞ் செய்ய விரும்பின சிறந்த பிரக்ஞையுள்ள யுதிஷ்டிரரை நோக்கி யதார்த்தமான சொல்லைப் பின்வருமாறு சொல்லலானார்கள் :

'எந்த ராஜசூய யாகத்தைச் செய்து பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்ற அரசன் வருணனுடைய சிறப்பை யடைவனோ அந்த ராஜ

சூய யாகத்தினால் அந்த அரசர்க்கரசனுடைய மேன்மையனைத்தையும் ராஜாவாகிய நீங்களும் பெற விரும்புகிறீர்கள். கௌரவ சிரேஷ்டரே! அவ்வாறு அரசர்க்கரசனுடைய மேன்மைக்குரிய உங்களுக்கு ராஜசூயஞ் செய்ய இது தருணமென்று உமது நண்பர்கள் நினைக்கின்றனர். எந்த யாகத்தில் சிறந்த நியமமுள்ள ரித்விக்குக்களால் ஸாமவேத மந்திரங்களைச் சொல்லி ஆறு அக்னிகள் மூட்டப்படுகின்றனவோ அந்த யாகஞ் செய்யுங் காலம், உமது க்ஷத்திரிய சக்தியின் மிகுதியினால் சுவாதீனமாயிருக்கிறது. [1]தர்வி ஹோமம முதலாக ராஜசூய அங்கமான எல்லா யாகங்களையும் நிறைவேற்றி ராஜசூய யாகத்தின் முடிவில் ராஜ்யாபிஷேகஞ் செய்துகொண்ட அரசன் அந்த யாகஞ்செய்ததனாலே [2] சர்வஜித் என்று சொல்லப்படுகிறான். சிறந்த கைகளுள்ளவரே! நீர் சமர்த்தர். நாங்களனைவரும் உமது சொற்படி நடக்கிறவர்கள். மகாராஜரே! நீர் ராஜசூய யாகத்தைச் சீக்கிரத்தில் முடிக்கலாம். மகாராஜரே! சங்கிக்காமல் ராஜசூய யாகத்தில் மனம் வைக்கக்கடவீர்' என்று மித்திரர்களனைவரும் தனித்தனியாகவும் சேர்ந்தும் உரைத்தனர். ஜனமேஜய ராஜரே! பகைவரையழிப்பவரான தர்மராஜர் அச்சமில்லாமலும் அன்போடும அவர்கள் சொன்ன தர்மமுள்ள சிறந்த சொல்லைக் கேட்டு மனத்தில் ஏற்றுக்கொண்டனர். அந்த வேண்டினவர்களுடைய சொல்லைக் கேட்ட பின், தமது சக்தியை அறிந்திருந்தும் சிலாக்கியமான காரியத்தை ஆரம்பிக்கப்போகின்ற தர்மராஜர் (மற்றவர்களையும) பரீட்சிக்கத் தொடங்கினர். பீமசேனன் முதலிய சகோதரர்கள நால்வரையும் சந்தித்து அவர்களாலும் ராஜசூயம் நல்லதென்று சொல்லப்பெற்ற தர்மராஜர், அந்தத் தர்மத்திலேயே எண்ணங் கொண்டார். அரசர்க்கரசரும் கௌரவ சிரேஷ்டருமாகிய அந்த யுதிஷ்டிரர் ராஜசூய யாகஞ் செய்வதற்குத் தம் மனத்தில் உடனே நிச்சயஞ்செய்துகொண்டார். ஜனமேஜயரே! ஆச்சரியப்படத்தக்க சக்தியுள்ளவராயிருந்தும் தர்மத்தையே அனுசரித்து ராஜசூய யாகஞ்செய்யத் திரும்பவும் பலமுறை மனத்தை உறுதிப்படுத்திக்கொண்டார். ஆலோசனைகள் தெரிந்த புத்திசாலியான அந்தத் தர்மராஜரான யுதிஷ்டிரர், திரும்பவும் சகோதரர்களோடும் மகாத்மாக்களாகிய ரித்விக்குக்களோடும் மந்திரிகளோடும தௌமியர் வியாசர் முதலானவர்களோடும் ஆலோசித்தார். விராடன், த்ருபதன், புத்திசாலியான ஸாத்யகி, யுதாமன்யு, உத்தமோஜன், புத்திமானான அபிமன்யு, சூரர்களான திரௌபதி புத்ரர்கள் இவர்களோடு சேர்ந்தும் முக்கியமாக

1 பலாச இலையினால் ஹோமம் செய்வது.
2 எல்லாவற்றையும் ஜயித்தவன்.

ஆலோசனை செய்தார். 'அரசர்க்கரசன் செய்யத்தக்க சிறந்த யாகமாகிய ராஜஸூயமென்னும் மகா யாகம் சிரத்தையுள்ள எனக்கு எப்படி முடியும்? நீங்கள் சொல்லுங்கள்' என்று கேட்டார். தாமரைக்கண்ணராகிய ஜனமேஜயரே! அந்த ராஜாவினால் இவ்வாறு வினவப்பட்ட சபையோர்கள், அக்காலத்தில் தர்ம ராஜாவான யுதிஷ்டிரரை நோக்கி, 'தர்மத்தை அறிந்தவரே! ராஜஸூயமென்னும் மகா யாகத்தைச் செய்ய நீர் தகுதியுள்ளவர்' என்று மறுமொழி கூறினார்கள். ரித்விக்குக்களும் ரிஷிகளும் ராஜாவுக்கு இவ்வாறு சொன்னபின், அவர்கள் சொன்ன சொல்லை ராஜாவின் மந்திரிகளும் சகோதரர்களும் கொண்டாடினர். அறிவிற் சிறந்தவரும் அடக்கமுள்ளவருமாகிய அந்தத் தர்மராஜர் உலகங்களின் நன்மையைக் கருதி மறுபடியும் தம்முள்ளத்திலேயே மேன்மேலும் ஆராய்ந்தார். 'தனது திறமையைச் செவ்வையாக அறிந்து தேச காலங்களையும் செலவையும் வரவையும் செம்மையாக ஆராய்ந்து புத்தியோடு செய்யும் அறிவுடையோன் துயரப்படான். தன் மனத்தின் நிச்சயம் ஒன்றினால் மாத்திரம் இந்த யாகம் ஆரம்பிக்கத்தகாது' என்றறிந்து முயற்சியினால் காரியத்தைச் சிறப்பிப்பதற்காக அந்தக் காரியத்தை நிச்சயிக்கும் விஷயத்தில் ஜனார்த்தனராகிய கிருஷ்ணரே யாவருக்கும் மேற்பட்டவரென்றெண்ணித் தர்மராஜர் மனத்தினால் அவரைத் தியானித்தார். தர்மபுத்திரர் தேவர்களால் மதிக்கப்பெற்ற செய்கைகளினால் கேசவர் அறியக்கூடாதவரென்றும் சிறந்த கைகளையுடையவரென்றும் ஜனனமில்லாதவராயினும் தமது இச்சையினால் மனிதர்களில் அவதரித்தவரென்றும் அவரறியாதது ஒன்றுமில்லையென்றும் அவர் செய்கைக்கு எட்டாதது ஒன்றுமில்லையென்றும் அவர் எதையும் தாங்கக்கூடாதவரல்லர் என்றும் அவரைப்பற்றி ஊகித்து நினைத்தார். குந்தி புத்திரரான அந்த யுதிஷ்டிரர் இவ்வகையான உறுதியுள்ள நிச்சயத்தைச் செய்து உலகங்களுக்குத் தந்தையான மாதவருக்கு, தமது ஆசாரியனுக்கு அனுப்புவதுபோல உடனே தூதனை அனுப்பினார். அந்தத் தூதன், விரைவாகச் செல்லுகின்ற ரதத்தினால் உடனே துவாரகையில் யாதவர்களை அடைந்து, அங்கே வாசஞ்செய்யும் கண்ணபிரானிடம் சேர்ந்தான். அவன் பிரபுவான மாதவரிடம் கைகூப்பிக்கொண்டு விண்ணப்பஞ் செய்யலானான்: 'சிறந்த கைகளையுடைய ஹ்ருஷீகேசரே! தர்மராஜரான அந்த யுதிஷ்டிரர் தௌம்யர் வியாசர் முதலானவர்களோடும் த்ருபதன் விராடன் இவர்களுடன் சேர்ந்த தம் சகோதரர் எல்லாரோடும் உமது தரிசனத்தை விரும்புகிறார்' என்றான். ஜனமேஜயராஜரே! அந்த இந்திரஸேன

னென்னும் தூதனது சொல்லைக் கேட்டு யாதவ சிரேஷ்டரும் சிறந்த சக்தியுள்ளவரும் ஸ்ரீயப்பதியுமான அச்சுதர், தம்மைப் பார்க்க விரும்புகிற யுதிஷ்டிரரைத் தாமும் பார்க்கக் கருதினவராகி, வேண்டினவர்களிடமும் வசுதேவரிடமும் விடைபெற்றுக் கொண்டு, உடனே இந்திரசேனனுடன்கூட இந்திரப்பிரஸ்தம் சென்றார். ஜனார்த்தனர் ஆவலுள்ளவராய் வேகமான குதிரைகளைக் கட்டிக்கொண்டு அநேக தேசங்களைத் தாண்டி இந்திரப்பிரஸ்தத்திலிருக்கும் தர்மராஜனிடம் சேர்ந்தார். தம் சகோதரர் முறையிலிருக்கும் தர்மராஜராலும் பீமனாலும் அந்தக் கிருகத்தில் பிதாவைப்போலப் பூஜிக்கப்பெற்ற கிருஷ்ணர் உடனே தம் தந்தையின் சகோதரியான குந்தியை அன்புடன் பார்த்தார். சந்தோஷமடைந்திருக்கும் சிநேகிதனான அர்ஜுனனுடன் சேர்ந்து தாமும் சந்தோஷமடைந்து விளையாடினார். நகுல சகதேவர்களால் ஆசாரியரைப்போலப் பூஜிக்கப்பெற்றார். சமர்த்தரான அச்சுதர் சிறந்த ஸ்தானத்தில் உட்கார்ந்து இளைப்பாறி ஒழிவாயிருக்கும்போது தர்மராஜர் அவரைச் சந்தித்துத் தம் காரியத்தை விண்ணப்பஞ்செய்யத் தொடங்கினார்.

'அச்சுதரே! நான் ராஜசூய யாகஞ்செய்ய விரும்புகிறேன். ஆனால், அதை வெறும் விருப்பத்தினால் மாத்திரம் நிறைவேற்ற முடியாது. எதனால் அதனை அடையலாமென்பது உமக்கு நன்றாகத் தெரியும். எவனிடத்தில் (உலகம்) எல்லாம் அடங்கியிருக்கிறதோ, எவன் எல்லா இடங்களிலும் பூஜிக்கப்படுகிறானோ, எவன் எல்லாவற்றிற்கும ஈசுவரனோ அந்த ராஜா ராஜசூயஞ் செய்யத்தக்கவன். அந்த ராஜசூயம் நான் செய்யக்கூடியதென்று சிநேகிதர்கள் சேர்ந்து சொல்லுகின்றனர். மாதவரே! அந்த விஷயத்தில் எனக்குத் தேர்ந்த நிச்சயம் உமது வாக்கினாலேதான் வரும். சிலர் சிநேகத்தினாலேயே குற்றத்தைக் கண்டறிவதில்லை. மற்றும் சிலர், தமது லாபத்திற்காக இன்சொல்லை மாத்திரமே சொல்லுகின்றனர். சிலர் தமக்கு நன்மையானதைப் பிறருக்கும் பிரியமானதாகவே நினைக்கின்றனர். காரிய விஷயங்களில் ஜனங்களின் வாக்கியங்கள் இவ்வாறாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன. நீர்மட்டுமே இந்தக் காரணங்களைக் கடந்து காமக்குரோதங்களை நீக்கி உலகத்தில் எது மேலான தகுதியுள்ளதோ அதனை உள்ளபடி உரைக்கத்தக்கவர்' என்றார்.

---

## பதினான்காவது அத்தியாயம்

## மந்திர பர்வம்—(தொடர்ச்சி)

(ஜராசந்தன் முதலிய பகைவரிருக்கையில் ராஜசூயம் முடித்தலாகாதென்று கண்ணபிரான் தர்மராஜருக்கு விளம்பியது)

யுதிஷ்டிரர் அப்படிச் சொல்லியதைக் கேட்டு, மாதவர் சொல்லுகிறார்: 'பரத வம்சத்திய மகாராஜாவே! எல்லாக் குணங்களாலும் நீர் இராஜசூய யாகத்துக்குத் தகுதியுள்ளவர். ஆனால், உமக்கு எல்லாம் தெரிந்திருக்கையிலேயும் யான் ஒன்று சொல்வேன். இப்போது உலகத்தில் க்ஷத்திரியர்களென்று வழங்கப்படுபவ ரனைவரும் ஜமதக்னியின் புத்திரரான பரசுராமரால் கொல்லாமல் விடப்பட்ட க்ஷத்திரியர்களின் சந்ததிகளா யிருக்கிறார்கள். பரதசிரேஷ்டரே! பூமிக்கரசரே! இந்த க்ஷத்திரியர்கள் வம்ச பரம்பரைக்கே ஒரு நிச்சயஞ் செய்து அதை [1] உபதேச வாக்கியமாகக் கொண்டிருக்கின்றனர். அஃது உமக்கும் தெரியும். பூமியிலுள்ள அரசர்களாகிய மற்ற க்ஷத்திரியர்கள் புரூரவ வம்சத்திற்கும் இக்ஷ்வாகு வம்சத்திற்கும் (அடங்கின) குடிகளாகத் தம்மை நினைக்கின்றனர். பரதசிரேஷ்டரே! ராஜரே! புரூரவ வம்சத்து அரசர்களும் இக்ஷ்வாகு வம்சத்தரசர்களுமாகிய ராஜாக்களின் குலங்கள் நூற்றொன்றிருப்பதாக அறியும். மகாராஜரே! யயாதியின் வம்சத்தாராகிய போஜர்களின் அபிவிருத்தியானது குணங்களாற் சிறப்புற்றிருக்கிறது. அஃது இப்போது நாற்றிசைகளிலும் பரவியிருக்கிறது. அவர்களின் அந்த ஐசுவரியத்தை முன் செய்த உடன்பாட்டின்படியே எல்லா க்ஷத்திரியர்களும் அனுசரித்திருந்தனர். ராஜரே! இப்போதுதான் ஜராசந்தனென்னு மரசன் தன் பராக்கிரமத்தினால் எல்லாரையும் வென்று அந்தப் போஜ குலத்தோரின் ஐசுவரித்தைக் கீழ்ப்படுத்தி அரசர்களுக்குத் தானே தலைமையா யிருக்கும்படி பட்டாபிஷேகம் செய்யப்பெற்றிருக்கிறான். அவன் [2] மத்திய தேசத்தை ஆண்டுகொண்டு அரசர்களுள் விரோதம் செய்ய நினைத்தான. மகாராஜரே! எந்த அரசன் (பொருள் படைகளின் வன்மையாகிய) பிரபுசக்தியிற் சிறந்தவனோ, உலகம் எவனொருவனுக்கு அடங்கியிருக்கிறதோ அவன்தான் தன் சக்தியினால் சாம்ராஜ்யத்தை அடைந்தவனாகிறான். ராஜரே! சிறந்த பராக்கிரமசாலியென்று பெயர் பெற்ற சிசுபாலனென்னும் அரசனும் அந்த ஜராசந்தனையே

1 அதிகப் பலவானுக்கு மற்றவர் அடங்கியிருக்கவேண்டு மென்பது.

2 போஜர்களின் தேசமாகிய மதுரையைச் சேர்ந்த தேசம்.

முழுதும் அடுத்து அவன் படைத்தலைவனாக ஆனானன்றோ? மகா ராஜரே! கபட யுத்தம்செய்பவனும் மகா பலசாலியும் கரூச தேசாதிபதியுமான [1] வக்ரன் என்பவனும் அந்த ஜராசந்தனிடத்திலேயே சிஷ்யன்போலக் காத்திருக்கிறான். மகா வீரர்களும் மகாத்மாக்களுமான ஹம்ஸ [2] டிம்பகர்களென்று பெயர்பெற்ற இரண்டரசர்களும் ஜராசந்தனைத்தான் அடுத்திருக்கின்றனர். கரூச தேசாதிபதியான வக்ரதந்தனும் கரபனும், ஆச்சரியமணியென்று சொல்லப்படும் திவ்ய ரத்தினத்தைத் தலையிலணிந்திருக்கும் மேகவாகனனும், [3] முருவையும நரகனையும் அடக்குகின்றவனும் அளவற்ற சேனையுள்ளவனும் வருணன்போல மேற்றிசையில் விளங்குகிறவனும் யவன ராஜனுமாகிய காலயவனனும் ஜராசந்தனை ஆசிரயித்திருக்கின்றனர். மகாராஜரே! வயது முதிர்ந்தவனான பகதத்தன் உமது பிதாவுக்கு நண்பன். அவன், சொல்லினாலும் செய்கையினாலும் ஜராசந்தனிடம் விசேஷமான பணிவுட னிருக்கிறான். உள்ளன்பினால் கட்டப்பட்டு உம் பிதாவினிடத்திலிருப்பதுபோல உம்மிடம் பற்றுள்ளவனா யிருக்கிறான். மேற்றிசையிலுந் தென்றிசையிலுமுள்ள பூமியின் கோடிகளுக்கரசனும் உமக்கு மாதுலனும் சூரனும் குந்தி தேசத்தை விருத்திசெய்பவனும் சத்துருக்களைச் சங்கரிப்பவனுமாகிய புருஜித் என்பவன் ஒருவன்மட்டும் சிநேகத்தினால் உமக்கு உட்பட்டிருப்பவன்.

இவ்வுலகத்தில் தானே புருஷோத்தமனென்று சொல்லிக்கொண்டும் மூடத்தனத்தினால் எனது சின்னங்களாகிய சங்கு சக்கரம் முதலியவற்றை எப்பொழுதும் சுமந்துகொண்டும் பௌண்டரக வாசுதேவனென்று உலகத்தில் பெயர்பெற்றும் வங்கதேசம் புண்டர தேசம் கிராத தேசங்களுக்கு அதிபதியாகச் சேனைகளுடன் சேதி தேசத்திலிருக்கும் அறிவுகெட்டவன் முன்னர் என்னால் கொல்லாமல் விடப்பட்டபோதே ஜராசந்தனை அடைந்தான். மகாராஜரே! எவன் தன் அஸ்திர வித்தை வன்மையினால் பாண்டியர்களையும் கிருதகைசிகர்களையும் வென்றானோ எவனது சகோதரனான ஆகிருதி யென்பவன் பரசுராமருக்கு ஒப்பான சூரனாக இருந்தானோ இந்தப் புவனியில் நாலிலொரு பாகம் பெற்றவனும் இந்திரனுக்கு நண்பனும் பகைவர்களான வீரர்களை அதஞ்செய்யும் பலசாலியுமாகிய அந்தப் பீஷ்மகனென்னும் போஜ குலத்தரசன் மாகதனைச் சார்ந்திருக்கிறான். நாம் உறவினராக இருந்தும்

1 தந்தவக்ரன்.

2 டிம்பகனென்பவனுக்கு டிபிகனென்றும் டிம்பிகனென்றும், பெயர் காணப்படுகிறது.

3 'முரன்' என்பதும் பாடம்.

பிரியங்களைச் செய்தும் வணங்கியும் அடுத்திருந்தும் நம்மிடம் அவன் சார்வதில்லை; நமக்கு இன்னாதவை செய்வதிலும் நிச்சயத்தோடிருக்கிறான். அரசரே! அவன் தன் குலத்தையும் பலத்தையும் அறியவில்லை; ஜராசந்தனுடைய புகழ் விளங்குவதைக் கண்டு அவனை அடுத்திருக்கிறான. பிரபுவே! அப்படியே வடதிசையிலுள்ள பதினெண்குலத்தோராகிய போஜர்களும் ஜராசந்தனுக்கு அஞ்சியே மேற்றிசை சேர்ந்தனர். சூரசேனர், பத்திரகாரர், போதர், ஸால்வர், படச்சரர், ஸுஸ்தலர், ஸுகுட்டர், குலிந்தர், குந்திகள், ஸார்வாயனர், தென் பாஞ்சால தேசத்தார், கிழக்குக் குந்தி தேசத்தார், கோசலர், மத்ஸியர், ஸங்யஸ்தபாதரென்னும் பல தேச அரசர்களும் சகோதரர்களோடும் வேலைக்காரர்களோடும்கூட வட திசையை விட்டுப பயந்து தென் திசை சேர்ந்தனர். இவ்வாறே, பாஞ்சால தேசத்தார் யாவரும் ஜராசந்தனிடம் பயத்தினால் கலக்கமுற்றவர்களாகத் தஙகள் ராஜ்யத்தை விட்டுவிட்டு நாற்றிசைகளிலும் ஓடிவிட்டனர். அந்த யுத்தத்தில், மகத தேசத்திலுள்ள கிரிவ்ரஜ மென்னும் நகரத்திலிருந்து முதற் படை வெளிபபடாமலிருக்கையிலேயே மகாத்மாவான ஜராசந்தன் முன்னிலையில் பாஞ்சாலர்கள பறந்தோடினர். முன்னர் உக்ரசேனன் புத்ரனாகிய மதிகெட்ட கம்ஸன், தன் சுற்றத்தவரை அடக்கி ஜராசந்தன் பெண்களிருவரை மனைவிகளாக எடுத்துக்கொண்டான்; ஜராசந்தன் புதல்விகளும் [1] சகதேவன் தங்கைகளுமான அஸ்தியென்றும பிராஸ்தி யென்றும் பெயருள்ள இரண்டு ராஜகுமாரிகளையும மணம்புரிந்தான். அறிவு கெட்டவனாகிய அந்தக் கமஸன் அந்த ஜராசந்தன் பலததினால் தன் சுற்றத்தவரை அடக்கி மேன்மையை அடைந்தான். அவனிடத்தில் அது மிகப் பெரிய அநீதியா யிருந்தது. போஜ ராஜர்களில் முதிர்ந்தவர்கள் துராத்மாவான கமஸனால் பீடிக்கப்பட்டுத் தம் குலத்தோரைக் காப்பாற்றக் கருதி அழகுள்ள அந்த ஆருகன் பெண்ணை அப்போதே அக்ரூரனுக்குக் கொடுத்து (அந்த அக்ரூரனால்) நம்மை அழைப்பித்துக் கௌரவித்தனர். நானும் சங்கர்ஷணரைத் துணையாகக்கொண்டு சுற்றத்தாரின் காரியத்தைச் செய்தேன். கம்ஸனும் ஸுநாமாவும் முறையே என்னாலும் பலராமராலும் கொல்லப்பட்டனர். கம்ஸனைக் கொன்றபிறகு ஜராசந்தனுக்கு அஞ்சின என் குலத்தோரை முதலில் பலராமரும் நானும் சேர்ந்து காபபாற்றினோம். அரசரே! ஜராசந்தன் எதிர்க்க, கரைகடந்த பயம் நேர்ந்தபோது நாங்கள் பதினெண் குலத்தோர்கள் சேர்ந்து [2] இவ்வாலோசனை செய்தோம்.

---

1 ஜராசந்தன் புத்திரன். 2 ஊரைவிட்டுப் போகிற ஆலோசனை.

சத்துருக்களை அழிக்கும் சிறந்த அஸ்திரங்களினால் நாங்கள் ஓயாமல் யுத்தஞ்செய்து முந்நூறுவருஷங்களாகத் தோன்றும் மூன்று வருஷங்களாகியும் அந்த ஜராசந்தன சேனையைக் கொல்லாமற் போனோம். ஏனெனில், தேவர்களுக்கு ஒப்பான வன்மையுள்ளவர்களும் வீரர்களிற்சிறந்தவர்களும அஸ்திரங்களால்மரணமில்லாதவர்களுமாகிய ஹம்ஸ டிம்பகர்களென்னும் பெயருள்ளவர்கள் இருவரும் ஜராசந்தன பட்சததில் இருந்தனர். இணைபிரியாத அவ்விரண்டு வீரர்களும் சூரனான ஜராசந்தனுமாகிய இம்மூவரும் லோகங்களுக்குமபோதுமானவ ரென்பது என் கருத்து. புத்திசாலிகளிற் சிறந்தவரே! நமக்கு மாத்திரமே யனறு. மற்றுமுள்ள அரசர்கள் எவ்வளவு பேர் இருக்கின்றனரோ அனைவர்க்கும் இதே எண்ணந்தான் உண்டாயிற்று வேந்தரே! நானே ஜராசந்தனுக்கு (பார்ப்பவர்க்கு) மயிர் சிலிர்க்கும்படியான பயங்கரமான பதினெட்டு யுத்தங்களைத் தொடுத்தேன். ஆகிலும், மகா பலசாலியான ஜராசந்தன் கொல்லப்படவில்லை. பிறகு, ஹம்ஸனென்று பிரசித்திபெற்றிருந்த அந்தச் சிறந்த அரசன அந்தப் பதினெட்டாவது யுத்தத்தில் பலராமரால் அடிக்கப்பட்டான். பாரதரே! அரசரே! அப்போது ஹம்ஸன் கொல்லபபட்டானென்று யாரோ சொனனதைக் கேட்டு, டிபிகன் யமுனையாற்றில் முழுகினான். 'இவ்வுலத்தில், ஹமஸனைவிட்டு நான் ஜீவிக்க மாட்டேன்' என்று நிச்சயஞ்செய்து அவன் மரணமடைந்தான் அவன் அவ்வாறானதைக் கேட்டுப் பகைவரின் நகரங்களை ஜயிப்பவனாகிய அந்த ஹம்ஸனும் யமுனைக்கே சென்று அதில் அமிழ்ந்தான். பரதசிரேஷ்டரே! அந்த ராஜாவான ஜராசந்தன் அவ்விருவரும் இறந்துபோனதைக் கேள்வியுற்றுச் சோர்வடைந்த மனத்துடன் தன் நகரத்திற்குச் சென்றான். சத்துருக்களைச் சங்கரிப்பவரே! அந்த ஜராசந்தனென்னும் ராஜா அவ்வாறு திரும்பிப்போன பிறகு நாஙகளெல்லாரும் மகிழ்ந்து மறுபடியும் மதுரையில் வசித்தோம். அரசர்க்கரசரே! பகைவரை அடக்குகிறவரே! தாமரைமலர் போன்ற கண்களை யுடைவர்களான கம்ஸன் மனைவிகள் தம் கணவனின் மரணத்தினால் துயரமுற்றுத் தங்கள் தந்தையும் மகத ராஜனுமான ஜராசந்தனிடம் சென்று, 'எங்கள் கணவனைக் கொன்றவனைக் கொல்' என்று தூண்டும்போதெல்லாம் முன் செய்த ஆலோசனையையே நினைத்து மனத்துயரத்துடன் ஓடிப்போனோம். மகாராஜரே! நாங்களெல்லாரும் ஜராசந்தன் பயத்தினால் தன சம்பத்தைச் சேர்த்தெடுத்துக்கொண்டு புத்திரர்கள் குலத்தோர் சுற்றத்தார்களுடன் ஊரைவிட்டுத் தனித்துப் போகவேண்டுமென்று நினைத்து மேற்றிசையில் ரைவ

தக மென்னும் குன்றினால் விளங்கும் குசஸ்தலி யென்னும் அழகான நகரத்தை அடைந்து அதில் வீடுகள் கட்டினோம்; தேவர்களாலும் அணுக முடியாத கோட்டை யரண்களையும் செய்தோம். அந்த நகரத்தில் பெண்களும் யுத்தஞ்செய்யலாம். மகாரதர்களான யாதவர்களுக்குச் சொல்லுவாயேனன். பகைவரை அழிப்பவரே! நாங்கள் அந்தச் சிறந்த மலையைப் பார்த்தபிறகு ஜராசந்தனைக் கடந்தோமென்று நினைத்து ஒரு பயமுமின்றி அந்நகரத்தில் வசிக்கிறோம். கௌரவ சிரேஷ்டரே! பிறகு, யாதவர்கள் மேலான சந்தோஷத்தை அடைந்தனர். இவ்வாறு ஜராசந்தனால் எல்லா வகையாலும் தீங்கு செய்யப்பட்ட நாங்கள் சமர்த்தர்களாயிருந்ததனால் ஒன்றுசேர்ந்து மூன்று யோஜனை நீளமும் ஒவ்வொரு யோஜனை விஸ்தாரமுமுள்ள மூன்று சிகரங்களுள்ளதும் ஒவ்வொரு யோஜனையின் கோடியிலும் நூறு வாயில்களுள்ளதும் வீரர்களின் பராக்கிரமத்தினால் காக்கப்பட்ட தோரணங்களையுடையதும் யுத்தத்தில் அடங்காத மதமுள்ள பதினெட்டு க்ஷத்திரியர்களால் காக்கப்பட்டதுமான கோமந்தமென்னும் மலையை ஆசிரயித்தோம். எங்கள் குலத்தில் பிறந்தவர்கள் பதினெண்ணாயிரம் சகோதரர்கள் இருக்கின்றனர். ஆகுகன் புதல்வர்கள் நூற்றுவர். ஒவ்வொருவனும் தேவர்களுக்கு மேலானவன். சகோதரனோடு கூடிய சாருதேஷ்ணன், சக்ரதேவன், ஸாத்யகி, நான், பலராமர், ஸாம்பன், பிரத்யும்னன் ஆகிய எழுவரும் மகாரதர்கள். மன்னரே! மற்றவரையும் சொல்லுகிறேன்; கேளும். கிருதவர்மா, அநாதிருஷ்டி, ஸமீகன், ஸமிதிஞ்சயன், கங்கன், சங்கு, குந்தி இவ்வேழு பேர்களும் மகாரதர்கள். [1] [பிரத்யும்நன், அநிருத்தன், பானு, அக்ரூரன், ஸாரணன், நிசடன், கதன் இவர்கள் ஏழு பேரும் மகாரதர்கள்.] விக்ரமன், ஜில்லி, பப்ரு, உத்தவன் விதூரதன், வசுதேவர், உக்ரசேனன் ஆகிய இந்த ஏழு மந்திரி சிரேஷ்டர்களும் அந்தக போஜன் குமாரர்களாகிய பிரஸேனஜித், சியமந்தக மென்னும் மணி மிகுதியாக சுவர்ணத்தை யளிப்பதனால் குபேரனுடைய சிறப்பை யடைந்த யமலன் இவ்விருவரும் அவர்களின் தந்தையாகிய அந்தக போஜராஜனும் ஆகப் பதின்மர் இருக்கின்றனர். வஜ்ரம்போன்ற தேக வன்மையுள்ளவர்களும் சிறந்த பராக்கிரமமும் பருத்த சேனையுமுள்ளவர்களுமாகிய யாதவ வீரர்கள் மலைகளின் இடைத் தேசமாகிய குசஸ்தலியை நினைத்து அச்சமற்றவர்களாயிருக்கின்றனர்; மன்னரே! பாண்டவர்களாலும் நாங்கள் எப்போதும் காப்புள்ளவர்கள். பாரதரே! இவ்வாறு எல்லாச் செல்

1. இந்த அதிகப் பாடத்தில் பிரத்யும்நன் இரட்டித்து வந்திருக்கிறது.

வச் சிறப்புக்களும் அமைந்த அந்த ஜராசந்தன் வேரூன்றி யிருக்கையில் க்ஷத்திரியர்களுள் உம்மை அரசர்க்கரசராகச் செய்யத் தகுமா? துரியோதனன், பீஷ்மர், துரோணர், அசுவத்தாமா, கிருபர், கர்ணன், சிசுபாலன், வில்லாளியான ருக்மி, ஏகலவ்யன், த்ருமன், சுவேதன், சைப்யன், சகுனி இவர்களைப் போரில் வெல்லாமல் யாகத்தை எவ்வாறு செய்யமாட்டுவீர்? இவ்வரசர்கள் பெருந்தன்மையினால் யுத்தஞ் செய்யாமலிருப்பாராயினும் இவர்களில் பலத்தினாலும் சிறந்த அஸ்திர பலத்தினாலும் கர்வங்கொண்டவனும் மிக்க பொறுமைக்காரனும் வீர சிரேஷ்டனும் சூரியபுத்திரனுமான கர்ணனொருவன்மட்டும் யுத்தஞ் செய்வான். ராஜரே! மகா பலசாலியான ஜராசந்தன் ஜீவித்திருக்கையில் ராஜசூயயாகத்தை நீர் நிறைவேற்ற முடியாதென்பதுதான் எனது அபிப்பிராயம். அந்த ஜராசந்தன் சிங்கம் மகா கஜங்களை வெல்வதுபோல அரசர்களனைவரையும் வென்று கிரிவிரஜ மென்னும் ஊரில் மலைக்குகையில் (அவர்களை) அடைத்திருக்கிறான். அந்த ஜராசந்த னென்னும் ராஜா இந்த யாகஞ் செய்ய நினைத்துப் பூமியை யாளுகின்றவர்களாகிய எண்ணூயிரம் அரசர்களால் பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்றான். பகைவரை வெல்லுகிறவரே! அவன் உமாபதியும் மகாத்மாவுமான மகாதேவரை உக்கிரமான தவத்தினால் ஆராதனஞ்செய்து அரசர்களை ஜயித்தான். ராஜ சிரேஷ்டரே! அவன் செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றினான். அவன், சேனைகளோடு வந்த அரசர்களை ஜயித்து ஜயித்துத் தன் நகரத்திற் கொண்டுவந்து அடைத்துக் [1] கிரிவ்ரஜத்தைப் [2] புருஷவ்ரஜமாகச் செய்தான். மகாராஜரே! நாங்களும் அப்போது ஜராசந்தனுக்குப் பயந்துதான் மதுரையை ஒழித்துத் துவாரகாபுரி சேர்ந்தோம். மகாராஜரே! இந்த யாகத்தை நீர் செய்யக் கருதினால் அந்த ராஜாக்களை விடுவிக்கவும் ஜராசந்தனை வதஞ் செய்யவும் முயலவேண்டும். கௌரவரே! புத்திமான்களிற் சிறந்தவரே! அவ்வாறின்றி ராஜசூய யாகத்தைப்பற்றிய இந்த ஆரம்பம் முழுதும் நிறைவேற்றுவதற்கு முடியாது. குற்றமற்ற ராஜரே! இதுதான் என் ஆலோசனை. நீர் எவ்வாறு நினைக்கிறீரோ? காரியம் இவ்வாறிருக்கையால், விஷயத்தைப்பற்றி நீரும் யுக்திகளைக் கொண்டு நிச்சயஞ்செய்து எனக்குச் சொல்லும்' என்றார்.

---

1. மலைக் கூட்டம். 2. ஆள் கூட்டம்.

## பதினைந்தாவது அத்தியாயம்

## மந்திர பர்வம் (தொடர்ச்சி)

(கிருஷ்ணன் சொல்லைக் கேட்டுத் தர்மபுத்திரர் ராஜசூயம் செய்யாது ஒழிவதே நலமென்று நினைத்துக் கிருஷ்ணனைக் கேட்டதும், பீமன் தான் ஜராசந்தனை ஜயிப்பதாகச் சொன்னதை அனுசரித்துக் கிருஷ்ணன் ஜராசந்த வதம் முதற் காரியமென்று சொன்னதும்)

அதைக் கேட்டு யுதிஷ்டிரர் சொல்லலானார்:—'ஓ! விருஷ்ணி குலசிரேஷ்டரே! மற்றவர் சொல்லமுடியாத சொல் மேதாவியான உம்மால் உரைக்கப்பட்டது. சந்தேகங்களை விடுவிப்பவர் உம்மை விட வேறொருவரும் இப்புவியி லில்லை. தம் தம் விருப்பத்தைச் செய்துகொள்ளும் அரசர்கள் வீட்டுக்கு வீடு இருக்கிறார்கள். அவர்கள் சாம்ராஜ்யத்தை அடைந்தவர்களல்லர். ஸம்ராட் என்னும் பெயர் பெறுவது கடினம். பிறர் சக்தியை யறிந்தவன் தன்னைச் சிறப்பித்துப் பேசமாட்டுவனா? பிறருடன் சேர்ந்த போது எவன் சிலாக்கியமாயிருக்கிறானோ அவன் பூஜிக்கப்பெறுகிறான். [1]பூமி விரிவாகவும் அநேக கண்டங்களுள்ளதாகவும் அநேக ரத்னங்கள் நிரம்பினதாகவு மிருக்கிறது. மனிதன் வெகு தூரம் சென்ற பிறகுதான் லாபத்தைப பார்ககிறான். ஒழிவடைதலையே சிறந்ததாக நினைக்கிறேன. ஒழிவை யடைவதனால் எனக்கு நன்மை யுண்டாகும். ராஜசூயத்தில் இறங்குவதனால் மேன்மை பெறமுடியாதென்பது என கருத்து. ஜனார்த்தனரே! உயர்ந்த மனமுள்ள இந்த என் [2]குலத்தோர் தமமில் ஒருவர் இவ்வரசர்க ளெல்லாரிலும் மிகச் சிறந்தவனாகலா மென று நினைக்கின்றனர். மகானுபாவரே! குற்றமறறவரே! நாமும் அக் காலத்தில் ஜராசந்தனுடைய துஷ்டத்தனத்தைப் பார்த்து

---

1. 'பூமியென்னப்பட்ட மந்திராலோசனையின் விஷயம் உபாயங்கள், அபாயங்கள முதலிய பலவகைக ளடங்கியது; பொன், பெண், சேனை, ரத்னம முதலிய அநேகம் உயர்ந்த பயன்கள் நிரம்பினது. அந்த மந்திராலோசனையின் விஷயத்தில வேண்டின சாதகங்களைக் கூட்டியும் பாதகங்களை விலக்கியும விடாமுயறசி முதலியவற்றால் மேலே வெகுதூரம் சென்றபின் சிரேயஸ் என்று சொல்லப்பட்ட காரியசித்தியை மனிதன் அறிகிறான்' என்பதும், 'பூமியைப்போல ஸ்திரமான நிச்சய புத்தியானது அந்த அந்த விஷயங்களுக்கேற்றபடி அநேக விதமாகவும் தடையற்றதாகவும் ரத்னங்கள் போன்ற பல உயர்ந்த பயன்கள் நிரம்பினதாகவும் இருக்கிறது. மனிதன் வெகுதூரஞ் சென்ற பிறகுதான் தனது நன்மையை அறிகிறான்; அதாவது, மனத்தைக் கவரும் சப்தாதி விஷயங்களைக் கடந்ததான தனது ஆத்மசுவரூபமாகிய சிரேயஸைக் கண்டறிகிறான்' என்பதும் பழைய வுரை.

2. பீமன் முதலானவர்கள்.

அவனுக்கு அஞ்சியே யிருந்தோம். யார்க்கும் வெல்லக்கூடாத பிரபுவே! யான் உமது கைவன்மையைச் சார்ந்தவனன்றோ? நீரே அவனுக்கு அஞ்சினபோது என்னைப் பலவானென்று நான் நினையேன். விருஷ்ணி குலத்தவரே! சிறந்த கைககளை யுடையவரே! மாதவரே! உம்மாலாவது பலராமராலாவது பீம சேனனாலாவது அர்ஜுனனாலாவது அவன் கொல்லப்படக்கூடிய வனோ கூடாதவனோவென்று சந்தேகித்துத் திரும்பத் திரும்ப ஆராய்ந்துகொண்டிருக்கிறேன். கேசவரே! எல்லாக் காரியங்களி லும் எனக்கு நீர்தாம் நியமிப்பவராயிருக்கிறீர்' என்றார். அதைக் கேட்டுப் பேசுவதில் சமர்த்தனான பீமன் பேசத் தொடங்கினான்.

'முயற்சியைக் கடைப்பிடியாத அரசனும் தான் பலவீனனா யிருந்து தக்க உபாயமின்றிப் பலவானை எதிர்ப்பவனும் புற்றுப் போல உட்கார்ந்துபோகின்றனர். பலம் குறைந்தவனும், சோம்ப லின்றி அரசுநீதி தவறாமல் உபாயங்களைத் திருத்தமாகச் செய் வதினால் அதிகப் பலமுள்ள சத்துருவையும் வென்று தனக்கு வேண்டிய காரியங்களையும் பெரும்பாலும் சாதிப்பான். கிருஷ்ண னிடத்தில் உபாயமும் என்னிடத்தில் பலமும் தனஞ்சயனிடத்து ஜயமும் இருக்கின்றன. நாங்கள் மூவரும் மூன்று அக்னிகள யாகத்தை முடிப்பதுபோல ஜராசந்தனை முடித்துவிடுவோம். கோவிந்தரே! உமது புத்தி பலத்தைப் பற்றுவதனால் தர்மராஜர் எல்லா நன்மைகளையும் அடைவர். உம்மை நாதராகப் பெற்ற எங்களுக்கு எபபோதும் ஜயந்தானே?' என்றான். அதற்குக் கண்ணபிரான், 'பால்யனானவன் காரியங்களை ஆரம்பித்துவிடு வான்; பின் வருவதைப் பாரான். ஆதலால் பால்யனும பொரு ளையே நாடினவனுமாகிய பகைவனைப்பற்றி க்ஷத்திரியர்கள் [1] பொறுப்பதில்லை. ஜயிக்கக்கூடிய அகப் புறப் பகைவர்களை ஜயித்ததனால் மாந்தாதாவும், பிரஜைகளைப் பரிபாலித்ததனால் பகீரதனும், தவ வன்மையினால் கார்த்தவீரியார்ஜுனனும, நீதி பலத்தினால் பரதனென்னு மரசனும், செல்வத்தினால் மருத்த னும் ஆகிய இந்த ஐந்து ஸம்ராஜர்கள் தங்கள் குலத்தோரெல் லோரையும் (தங்கள புகழால் வியாபித்துத்) தழுவிக்கொண்டு இருந்தனரென்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஒவ்வொரு யுகத்தி லும் ஸம்ராஜர்களிருப்பதில்லை. யுதிஷ்டிரரே! ஜயிக்கவேண்டிய வர்களை ஜயிப்பது, பரிபாலனஞ் செய்வது, தவம்புரிவது,பொருள் விருத்தி செய்வது, உபாயங்களைப் பிரயோகிப்பது ஆகிய ஐந்து வகைகளாலும் ஸம்ராட்டாக விரும்புகிற உமக்குப் பிருகத்ரதன் புத்திரனான ஜராசந்தன் ஜயிக்க முடியாதவனாக இருக்கிறான்.

1 அவன் பெரியவனாவதற்கு முன்னமே ஒழித்துவிடுகின்றனர்.

பரதசிரேஷ்டரே! அதை அறியும் நூற்றொரு குலத்தோராகிய அரசர்களும் அவனுக்கு எதிர் யுத்தஞ் செய்யாமற்போயினர். ஆதலால், அவன் தன் பலத்தினாலேயே இவ்வுலகத்தில் சாம்ராஜ்யத்தை நடத்துகிறான். ராஜாக்கள் ரத்னங்களை எடுத்துக் கொண்டு ஜராசந்தனிடம் காத்திருக்கின்றனர். சிறுபிள்ளைத் தனத்தினால் அநீதியைக் கடைப்பிடித்த அவன் அதனாலும் சந்தோஷப்படுவதில்லை. மனிதர்களில் முதன்மையான ஜராசந்தன் ராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்யப்பட்ட அரசனைப் பலவந்தமாக பலிக்கு எடுத்துக்கொண்டு போகிறான். மனிதர்களில் ஜராசந்தனுக்குப் [1]பாகமாயிராதவனை நாம் எங்கும் காணவில்லை. ஜராசந்தன் நூற்றுக்குட்பட்டவராகிய அரசர்களை இவ்வாறு முழுதும் வசப்படுத்தினான். குந்தி புத்திரரே! மிகவும் பலக் குறைவுள்ள அரசன் அவனிடம் அணுகுவது எவ்வாறு? தண்டுலபிரஸ்தமென்னும் இடத்தில் ராஜாவான ஜராசந்தன் சிவபெருமானைக் குறித்துத் தவஞ் செய்கிறான். பரத சிரேஷ்டரே! பசுபதியின் ஆலயத்தில் பசுக்களைப் போலப் பலிகொடுப்பதற்காகக் குறிப்பிட்டுப் புரோக்ஷணஞ் செய்யப்பட்ட அந்த அரசர்களுக்கு உயிர் விருப்பம் ஏது? க்ஷத்திரியன் எப்போது சஸ்திரத்தினால் மரணத்தை யடைகிறானோ அப்போது கௌரவிக்கப்படுகிறான். ஆதலால், நாம் யுத்தத்தில் ஜராசந்தனை எதிர்த்துத் தடுப்போம். அரசரே! எண்பத்தாறு ராஜாக்கள் ஜராசந்தனால் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டனர்; பதினால்வர் குறைவு. அவர்களையும் கொண்டுபோன பிறகு, கொடிய செய்கை நடக்கப் போகிறது. அதற்குத் தடை எவன் செய்வனோ அவன் உலகமெல்லாம் வியாபிக்கும் புகழைப் பெறுவான். ஜராசந்தனை எவன் ஜயிப்பனோ அவன் நிச்சயமாக ஸம்ராஜனாவான்' என்று சொன்னார்.

---

## பதினாறாவது அத்தியாயம்

## மந்திர பர்வம் (தொடர்ச்சி)

**(ஒழிவடைகிறதைப்பற்றித் தர்மராஜர் சொல்ல, அர்ஜுனன் அதனை மறுத்துப் பராக்கிரமத்தின் சிறப்பைக் கூறியது)**

யுதிஷ்டிரர், 'கிருஷ்ணா! நான் ஸம்ராஜனுடைய சிறப்பை அடையக் கருதித் தன் லாபத்தையே முதன்மையாகக்கொண்டு முற்றும் சாகசமாக உங்களை எவ்வாறு அனுப்புவேன்? பீமன் அர்ஜுனன் இருவரும் இரண்டு கண்களென்றும் ஜனார்த்தனர்

---

1 வசப்படுத்தப்படாதவன்.

மனமென்றும் நினைத்திருக்கிறேன். மனமும் கண்களுமில்லாதவனுடைய உயிர்வாழ்க்கை எவ்வாறிருக்கும்? பயங்கரமான பராக்கிரமமுள்ளதும் கரை காண முடியாததுமான ஜராசந்தனுடைய சேனையை எதிர்த்துச் சென்று யுத்தத்தில் யமனும் வெல்லான். அந்த விஷயத்தில் உங்கள் செய்கை எவ்வளவு? இந்த வேறு லாபத்தில் பிரவிருத்தித்த எனக்கு அனர்த்தம் வந்துசேருகிறது. ஆதலால், நான் இதற்கு அங்கீகாரம் கொடுப்பது யுக்தமாகாதென்று நினைக்கிறேன். கிருஷ்ணா! என் மட்டில் நான் ஆலோசிப்பதைச் சொல்லுகிறேன்; அதைக் கேட்கவேண்டும். இந்தக் காரியத்தில் ஒழிவடைதலே நலமென்று நினைக்கிறேன். செய்வதற்குக் கடினமான ராஜசூய யாகமானது இப்போது என் மனத்தைத் தடுக்கிறது' என்று சொன்னார். சிறந்த வில்லையும் சிறந்த தூணிகளையும் ரதத்தையும் கொடியையும் குதிரைகளையும் பெற்றவனான அர்ஜுனன் யுதிஷ்டிரரிடம் பேசலானான்.

'வேந்தரே! விரும்பத்தக்கவையும் பெறுவதற் கரியவையுமான வில், அஸ்திரங்கள், அம்புகள், பராக்கிரமம், துணை, பூமி, கீர்த்தி, திறமை முதலியவைகள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. நன்றாகக் கற்றுத் தேர்ச்சியடைந்தவர்கள் உயர்குலத்திற் பிறப்பதைச் சிறப்பாகக் கூறுகின்றனர். பராக்கிரமத்திற்கு ஒப்பானது ஒன்றுமில்லை. பராக்கிரமஞ் செய்வதே எனக்கு உசிதமாகத் தோன்றுகிறது. பராக்கிரமசாலிகளின் குலத்தில் பிறந்தும் பராக்கிரமமில்லாதவன் என்ன செய்வான்? பராக்கிரமமில்லாத குலத்திற் பிறந்தாலும் பராக்கிரமமுள்ளவன் சிறந்தவனாகிறான். அரசரே! எவன் செய்கை சத்துரு ஜயத்திலேயே முழுதும் பிரவிருத்திக்கிறதோ அந்தப் பராக்கிரமமுள்ள க்ஷத்திரியன் மற்ற குணங்கள் ஒன்றுமில்லாதவனானாலும் பகைவரை மிஞ்சுவான். பராக்கிரமமில்லாதவன் எல்லாக் குணங்களும் பொருந்தினவனாயிருந்தும் என்ன செய்வான்? எல்லாக் குணங்களும் பராக்கிரமத்தைச் சேர்ந்தவையாக வல்லவோ இருக்கின்றன. ஜயத்திற்குக் காரணம் உற்சாகந்தான். அது செய்கையையும் பாக்கியத்தையும் பற்றியிருக்கிறது. ஒருவன் சாதனங்களுள்ளவனாயிருந்தும் ஊக்கமின்மையினால் அவற்றை உபயோகப்படுத்துவதில்லை. அந்த வழியாகத்தான் ஒருவன் பலமுள்ளவனாக இருந்தும் எதிரிகளிடம் தோல்வியடைகிறான். பலமுள்ளவனுக்கு உற்சாகக் குறைவிருப்பதுபோலவே தன் பலம் அறியாமையும் உண்டு. அவ்விரண்டும் கெடுப்பதற்குக் காரணங்கள். வெற்றியை விரும்பும் அரசன் அவ்விரண்டினையும் விடவேண்டும். யாகத்திற்காக ஜராசந்தனை அழிப்பதையும் அரசர்களைக்காப்பதையும் செய்வோ

மாயின் அதைவிட மேலானதென்ன இருக்கும்? அரசரே! ஒரு காரியத்தைத் தொடங்காமலிருப்பதற்கு நம்மிடத்தில் தகுதியில்லையென்ற நிச்சயம் அவசியமாயிருக்கவேண்டும். நமகுத் தகுதியிருப்பதில் சந்தேகமில்லாமலிருக்கும்போது தகுதியில்லையென்று நீர் நினைப்பதேன்? பிற்காலத்தில் நாம ரிஷிகளாகிச் சாந்தியை விரும்புமபோது காஷாய வஸ்திரம் சுலபம். இப்போது ஸம்ராஜாவாவது நமக்கு முடியும். நாம் எதிரிகளுடன் யுத்தஞ் செய்வோம்'' என்றான்.

---

## பதினேழாவது அத்தியாயம்
## மந்திர பர்வம் (தொடர்ச்சி)

---

(அர்ஜுனன் சொன்னதை அனுசரித்துக் கிருஷ்ணன் சொல்லியதும், அவர், தர்மராஜர் கேட்டதன் பின், ஜராசந்தன் பிறப்பைப்பற்றிக் கூறியதும்)

அதன் பிறகு, கிருஷ்ண பகவான் சொல்லலானார்:—''பரத வம்சத்திற் பிறந்து குந்தியின் புத்திரனாயிருப்பவனுக்குத் தகுதியான புத்திதான் இப்போது அர்ஜுனனால் வெளியிடப்பட்டது. மரணம் நேருவது இரவிலோ பகலிலோ நாமறியோம். யுத்தஞ் செய்யாமையினால் ஒருவன் மரணமில்லாமலிருந்ததையும நாம் கேட்டதில்லை. நீதி சாஸ்திரங்களினால் அறியப்பட்ட உபாயங்களினால் பிறரை வசப்படுத்தி அதனால் தன மனத்திற்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணிக்கொளவதுதான் மனிதர்களால் செய்யக்கூடியது. தீங்குகளை விலக்கி நல்ல உபாயங்களைச் சேர்ப்பதனால் ஆரம்பம் உயர்ந்ததாகிறது. சகாயம் சேர்வதனால் விசேஷமுண்டாகிறது. அப்போது இரண்டு பக்ஷங்களும் சமமாவதில்லை. உபாயங்களுமஆலோசனையுமில்லாதவனுக்கு யுத்தத்தில் தோல்வி நிச்சயம். இருவரும் சமமாயிருபபதனால் சந்தேகம் உண்டாகிறது. ஜயமென்பது இருதிறத்தாருக்கும உண்டாகாதே. ஆதலால், நாம் தந்திரமாக ஆற்றுபபெருக்கு மரத்தினருகிற் செல்வதுபோலச் சத்துரு இருக்குமிடத்திற்குச் சென்று நமது ரகசியம் வெளிப்படவொட்டாமல் அவன் பலக்குறைவைக் கண்டு பராக்கிரமஞ் செய்வோமாயின் ஏன் காரியசித்தியை அடையோம? அதிகப் பலவான்களான சத்துருக்கள் சேனைகளை வகுத்து நிற்கும்போது அவர்களுடன் போர் செய்யலாகாதென்பது புத்திசாலிகளின் நீதி. அஃது எனக்கும் இப்போது சரியாகத்தோன்றுகிறது. நாம சத்துருவுக்குத்தெரியாமல்

அவன் வீட்டில் பிரவேசித்தோமாயின் அபாயமின்றி அந்தச் சத்துருவின் தேசத்தைப் பிடித்துக்கொண்டு நம்முடைய இஷ்டத்தை அடையலாம். புருஷர்களில் சிரேஷ்டனாகிய ஒருவன் தான, ஐந்து பூதங்களின் சேர்க்கையாகிய தேகத்தை ஆத்மா தாங்குவதுபோல ராஜ்யலக்ஷ்மியை எப்போதும் தாங்குகிறான். அவன் ஓய்ந்திருப்பதை நாம் பார்க்கவில்லை. அல்லது, குலத்தோர்களைக் காப்பதையே தலைமையாகக்கொண்ட நாம் ஜராசந்தனைக் கொன்ற பிறகு, மிச்சமுள்ள சேனையினால் யுத்தத்திலடிபட்டாலும் அதனால் சுவர்க்கஞ் செல்வோம்' - என்றார். யுதிஷ்டிரர், 'கிருஷ்ணா! ஜராசந்தன் என்பவன் யாவன்? எத்தகைய சக்தியும் பராக்கிரமமு முடையவன்? அவன் அக்கினிக்கொப்பான உம்மை எதிர்த்து விட்டிற்பூச்சிபோல எரிக்கப்படாம லிருக்கிறானே!' என்று கேட்க, கண்ணபிரான் சொல்லுகிறார்.

'அரசரே! ஜராசந்தன் எவ்வகையான சக்தியுள்ளவன்? எப்படிப்பட்ட பராக்ரமமுள்ளவன்? பலமுறை தீங்குசெய்தும் எம்மால் ஏன் விடபபட்டானென்பதைச் சொல்லுகிறேன்; கேளும். மூன்று அக்ஷௌஹிணி சேனைகளுக்கு அதிபதியும் யுத்தத்தில் தனக்குச் சமனானவனில்லையென்று கர்வித்தவனும் பலசாலியும் மகத தேசாதிபதியுமான பிருகத்ரதனென்னும் அரசன் ஒருவனிருந்தான். அழகும் பலமும் செல்வமும் நிரம்பினவனும், ஒப்பற்ற பராக்கிரமமுள்ளவனும், எக்காலமும சரீரத்தில் யஜ்ஞ தீக்ஷைக் குறிகளை வகித்தவனும், இரண்டாவது இந்திரனைப போன்றவனும், எல்லாவற்றிற்கும் மேலாகப் பிரகாசிப்பதில் சூர்யனுக்கும், பொறுமையில் பூமிக்கும், கோபத்தில் யமனுககும், பொருட்செல்வத்தில் குபேரனுக்கும் ஒப்பானவனுமாகிய அவ்வரசன் மகததேசத்தில் கிரிவ்ரஜமென்னும் நகரத்திலிருந்து தனது அரசாட்சியை நடத்தினான. பரதசிரேஷ்டரே! அவனது உயர் குலத்துக்குரிய [1]குணங்கள் சூர்யகிரணங்கள் போலப் பூமியெல்லாம் பரவின. பரதசிரேஷ்டரே! அந்த மகாவீரன் அழகும் செல்வமுமுள்ளவர்களும் இரட்டையாகப் பிறந்தவர்களுமான காசிராஜன் பெண்களை மணம்புரிந்தான். புருஷசிரேஷ்டனாகிய அந்தப் பிருகத்ரதன் அவ்விரு மனைவிகளின முன்னிலையிலும், 'நான, உங்களில் யார்க்கும் ரகசியத்தில் பக்ஷபாதமாக நடவேன்' என்று வாக்குத்தத்தஞ் செய்தான். அவ்வரசன் தனக்கு ஒத்த அன்பினர்களான அவ்விரண்டு மனைவிகளோடும் சேர்ந்து இரண்டு [2]பிடிகளோடு சேர்ந்த யானைபோல விளங்கினான். அவ்

1 'கணை:' என்ற பாடத்தைவிட்டு 'குணை:' என்ற பாடம் கொள்ளப்பட்டது.
2 பெண் யானை.

விருவர்க்கும் நடுவிலிருந்த அவ்வரசன் கங்காதேவி யமுனாதேவி களுக்கு நடுவில் தேகமெடுத்திருக்கும் சமுத்திரராஜன் போலச் சோபித்தான். சிற்றின்பங்களில் ஆழ்ந்திருக்கையிலேயே அவனுக்கு இளமைப்பருவம் தாண்டிற்று. அவனுக்கு சந்ததியை விருத்திசெய்ய ஒரு புத்திரன்கூடப் பிறக்கவில்லை. அந்த ராஜசிரேஷ்டன் மங்களகரமான அநேக ஓமங்களையும் புத்திர காமேஷ்டிகளையுஞ் செய்தும் வம்சத்தின் விருத்திக்குக் காரணமான ஒரு புத்திரனை அடையவில்லை. அவன் தன் இரண்டு மனைவிகளோடும் மிகவும் வெறுப்புற்றான். அரசரே! ராஜபக்தியுள்ள மந்திரி முதலியவர்களால் தடுக்கப்பட்டும் அவன் ராஜ்யத்தைவிட்டு உடனே தபோவனத்தைச் சேர்ந்தான். பிறகு, மகாத்மாவும் கௌதம வம்சத்தவருமான கக்ஷீவானுடைய புத்திரரும் தவத்திற் சிறந்தவரும் உதார குணமுள்ளவருமான சண்டகௌசிகரைப்பற்றிக் கேள்விப்பட்டான். தற்செயலாக வந்து ஒரு மரத்தடியைச் சார்ந்திருந்த அம்முனிவரை அவ்வரசன் மனைவிகளுடன்கூட எல்லாவகைச் சிசுருஷைகளினாலும் சந்தோஷப்படுத்தினான். அந்த ரிஷியும் பிருகத்ரதனுக்குத் தகுதிப்படி மரியாதைசெய்தார். அவ்வரசன் அந்த மகாத்மாவினால் அனுமதி கொடுக்கப் பெற்று உட்கார்ந்தான். அப்போது அம்முனிவர் அந்த ராஜாவைப் பார்த்து 'நீ பிராம்மணர்களால் அனுசரிக்கப்பட்டும் மனைவிகளுடன் சேர்ந்தும் வந்திருப்பது எதற்காக?' என்று வினவினார். அவ்வரசன் அம்முனிவரைப் பார்த்து, 'பகவானே! எனக்குப் புத்திரனில்லை; சந்ததியில்லாதவனுக்கு முதிர்ந்த பிராயத்தில் ராஜ்யத்தால் ஆவதென்ன? ஆதலால், நான் பார்யைகள் இருவருடனுஞ் சேர்ந்து வனத்தில் தவஞ்செய்யப் போகிறேன் முனிவரே! சந்ததியில்லாதவனுக்குப் புகழும் பிதிர்சிராத்தமும் அழியாமலிரா' என்று சொன்னான். அந்த அரசன் இவ்வாறு சொல்லலும், தைரியம் தவறாதவரும் சத்தியவாக்குள்ளவருமான அந்த ரிஷிசிரேஷ்டர் தயை கூர்ந்து, அவனைப் பார்த்து, 'அரசர்க்கரசே! நல்ல தவமுள்ளவனே! உன்மேல் நான் சந்தோஷமடைந்திருக்கிறேன்; வரம் கேள்' என்று சொன்னார். உடனே பிருகத்ரதன் பார்யைகளுடன் கூடி அவரை நமஸ்காரஞ்செய்து, புத்ரனைக்காணுவோமென்ற எண்ணமில்லாமையினால் கண்ணீர் சொரிந்து, பேச்சுத் தழுதழுத்து, 'பகவானே! ராஜ்யத்தைவிட்டுத் தபோவனத்துக்கு வந்த பாக்யஹீனனுக்கு வரம் எதற்கு? சந்ததியில்லாதஎனக்கு ராஜ்யத்தினாலாவதென்ன?' என்று சொன்னான். அதைக் கேட்டு மனங்கரைந்த அந்த முனிவர் தியானஞ்செய்ய

அந்த மாமரத்தின் நிழலிலேயே உட்கார்ந்தார். உட்கார்ந்த அம்முனிவரின் மடியில் உலராமலும் கிளியினால் கடிக்கப்படாமலுமிருக்கும் ஒரு மாங்கனி விழுந்தது. அம்முனிசிரேஷ்டர் அதனை எடுத்து மனத்தைச்செலுத்தி மந்திரித்துப்புத்ரலாபத்திற்கு நிகரற்ற சாதனமான அதை அரசனுக்கு அளித்தார். சிறந்த ஞானமுள்ள அந்த மஹரிஷி, ராஜாவைப் பார்த்து, 'அரசனே! மனிதர்க்கதிபதியே! உன்னிஷ்டம் நிறைவேறிற்று; திரும்பிச் செல். அரசனே! இதுதான் உனக்குப் புத்திரன்; இந்தத் தபோவனத்தில் தவஞ்செய்யாதே; தர்மமாகப் பிரஜைகளைப் பரிபாலனஞ் செய். ராஜாக்களுக்கு அதுதான் தவம்; அனேக யாகங்களைச் செய்து ஸோமரஸத்தினால் இந்திரனுக்குத் திருப்திசெய். உன் புத்திரனுக்கு ராஜ்யபட்டாபிஷேகஞ்செய்தபிறகு, நீ தபோவனத்திற்கு வா. பூமிக்கரசே! உன் புதல்வனுக்குஎட்டு வரங்கள் கொடுக்கிறேன். பிராம்மண பக்தியோடிருப்பது, யுத்தங்களில் பிறரால் வெல்லக்கூடாமை, புத்திக் கூர்மை, அதிதிகளிடம் அன்புடைமை, ஏழைகளைக் கவனிப்பது, மிக்க அதிகமான தேகபலம் உலகத்தில் என்றுமிருக்கும் கீர்த்தி, பிரஜைகளுக்கு இவனிடத்து அன்பு ஆக இந்த எட்டு வரங்களையும் கொடுத்தேன். அரசனே! உன் காரியம் நிறைவேறிற்று; திரும்பிச்செல்லலாம்' என்று சொன்னார். அந்த ரிஷியினால் விடைகொடுக்கப்பெற்ற அந்த அரசன் தன் நகரத்தாரால் பின்செல்லப்பட்டவனாகி மனைவிகளுடன் அந்தத் தபோவனத்திலிருந்து தன் நகரத்திற்குச் சென்றான்.

பரதசிரேஷ்டரே! அந்த ராஜசிரேஷ்டன் முன்னே தான் வாக்களித்திருந்ததை நினைத்து அந்த ஒரு பழத்தை இரண்டு மனைவிகளுக்கும் கொடுத்தான். அந்தப் பெண்ணரசிகள் அம்முனிவரிடத்துள்ள கௌரவத்தினாலும் தங்கள் காலவித்தியாசத்தினாலும் அந்தமாங்கனியை இரண்டுபாகங்களாகச்செய்து புசித்தனர். ரிஷியின் சொல் தவறாதாகையாலும் அந்தக் காரியம் அவசியம் நேரிட வேண்டியதாயிருந்ததனாலும் கனியுண்டதே காரணமாக அவ்விருவருக்கும் கர்ப்பம் உண்டாயிற்று. அவ்விருவரையும் கண்ட அவ்வரசன் பெருமகிழ்ச்சியடைந்தான். சிறந்த புத்தியுள்ள தர்மராஜரே! அதன்பிறகு, கிரமமாகப் பிரசவகாலம் நேர்ந்தபோது இரண்டு ஸ்திரீகளும் ஒரு தேகத்தின் இரண்டு கண்டங்களைப் பெற்றனர். ஒருகண், ஒருகை, ஒருகால், அரைவயிறு, அரை முகம், அரைப்பிருஷ்டமாகவிருந்த இரண்டு தேககண்டங்களைக் கண்டு மிகநடுங்கினர். சகோதரிகளான அவ்விரண்டுபெண்களும் பயந்து ஒருவரோடொருவர் ஆலோசனைசெய்து உயிருள்ள இரண்டு தேகபாகங்களையும் மிகத் துயரத்தோடு விட்டுவிட்டனர். அவர்களின்

தாதிமார்களிருவரும் அவ்விரண்டு துண்டங்களையும் நன்றாக மூடி அந்தப்புரத்தின் வாயிலிலிருந்து வெளியேகொண்டுபோய் எறிந்து விட்டுவந்தனர். அந்தத் தாதிகள் வெண்பட்டுக்களினால் மூடப்பட்ட அவ்விரண்டினையும் யார்க்குந்தெரியாமல் நாற்சந்தியில் போட்டு விட்டு உடனே மறுபடியும் அந்தப்புரத்துக்குப் போய்ச் சேர்ந்து அவ்விரண்டு அரசிகளுக்கும் தனித்தனியே தெரிவித்தனர். புருஷ சிரேஷ்டரே! அப்போது மாமிசத்தையும் ரத்தத்தையும் புசிப் பவளான ஜரையென்னும் ராக்ஷஸி நாற்சந்தியில் போடப்பட்ட அவ்விரண்டு கண்டங்களையும் எடுத்தாள். எடுப்பதற்கு எளிதா யிருக்கும்படி செய்யக்கருதின அவ்வரக்கி விதியின் வன்மையினால் மதிகொடுக்கப்பெற்று இரண்டுகண்டங்களையும் கூட்டினாள். புருஷ சிரேஷ்டரே! அவ்விரு துண்டங்களும் கூட்டப்பட்டவுடன் ஓர் உருவமுள்ள வீரனாகிய ஒரு ராஜகுமாரன் உண்டானான். அரசரே! உடனே, ஆச்சரியத்தினால் கண்மலர்ந்த அவ்வரக்கி, வஜ்ராயுதத்தின[1] வயிரத்தினாற்செய்யப்பட்டவன்போன்ற அந்தக்குழந்தையை எடுக்கமுடியாமற்போனாள். அந்தக் குமாரன் சிவந்த உள்ளங்கை களோடுகூடிய கரத்தைப் பிடியாகப் பிடித்து வாயில் வைத்துக் கொண்டு மிகுந்த கோபத்துடன் நீருண்டமேகம் கர்ஜிப்பதுபோற் கூவினான். புருஷஸிம்மமே! வீரரே! அந்தச் சப்தத்தினால் அந்தப் புரத்து ஜனங்கள் பரபரப்படைந்து ராஜாவுடன்கூட விரைவாக வெளிப்பட்டனர். பால்நிரம்பின கொங்கைகளையுடையவரும் புத்ர லாபத்தில் எண்ணம்விட்டுத் துயரமுற்றவருமான அவ்விரண்டு மங்கையர்களும் விரைவாகவே வந்தனர். அவ்விரண்டு துண்டங்களும் அவ்வாறு சேர்ந்ததையும் அரசன் சந்ததியில் விருப்பமுற்றவனாயிருத்தலையும் அந்தக்குழந்தை மிக்கபலமுள்ளதாயிருப்பதையும் கண்டு, அரக்கி, 'இந்த ராஜாவின் தேசத்தில் வசிக்கும் நான் புத்திரனை விரும்பினவனும் மகாத்மாவும் தர்மிஷ்டனுமான இவ்வரசனது புத்ரனான இந்தக் குழந்தையைக் கொல்லத்தகாது' என்று நினைத்தாள். அவள் மானிட ரூபமெடுத்து மேகம் சூரியனைத் தரிப்பதுபோல அந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு அரசனை நோக்கி, 'பிருகத்ரதனே! உனக்கு இந்தப் புத்திரனைக் கொடுக்கிறேன்; வாங்கிக்கொள். பிராமணசிரேஷ்டருடைய கட்டளையினால் உன்னிரு மனைவிகளுக்கும் பிறந்து தாதிமார்களால் எறியப்பட்ட இந்தக் குமாரன் என்னால் காப்பாற்றப்பட்டான்' என்று சொன்னாள். பரத சிரேஷ்டரான தர்மராஜரே! உடனே காசிராஜன பெண்களாகிய அந்தப் பெண்ணரசிகள் அந்தக் குழந்தையை விரைவாக வாங்கிக்கொண்டு முலைப்

1 'வஜ்ரஸாரம்' என்பது மூலம்.

பால் பெருக்கினால் நனைத்தார்கள். பிறகு, அதையெல்லாம் கண்டு மகிழ்வுற்ற அவ்வரசன், பொன்னிறமுள்ளவளும் ராக்ஷஸத் தன்மை இல்லாதவளுமான அந்த அரக்கியைப் பார்த்து, 'தாமரை மலரின் உட்காய்போன்ற நிறமுள்ளவளே! எனக்குப் புத்திரதானம் செய்த நீ யாவள்? மங்களரூபியே! நீ சொல்லாமற் போனாலும் சரி; தேவதை யென்று எனக்குத் தோன்றுகிறாய்' என்று சொன்னான்.

---

## பதினெட்டாவது அத்தியாயம்

## மந்திர பர்வம் (தொடர்ச்சி)

**(ஜரையென்னும் ராக்ஷஸி பிருகத்ரத ராஜாவுக்குத் தன் வரலாற்றைக் கூறிப் பிள்ளைக்குத் தன் பேரிடும்படி சொல்லிப்போனதும், அரசன் அவ்வாறே செய்ததும்)**

ராக்ஷஸி, 'அரசர்க்கரசே! உனக்குச் சுகமுண்டாகட்டும். நான் ஜரையென்னப்பட்ட ராக்ஷஸி; நினைத்த ரூபமெடுப்பவள்; உன் அரண்மனையில் பூஜிக்கப்பெற்று சுகமாக வசித்தேன். முன்னர்ப பிரம்மதேவரால் கிருஹதேவி யென்னும் பெயரோடு படைக்கப்பட்ட ராக்ஷஸியாகிய நான் மனிதர்களின் வீடுகள் தோறும் எப்போதும் இருக்கிறேன். அசுரர்களை அழிப்பதற்காக உயர்ந்த அழகுடன் நான (வீடுகளில்) வைக்கப்படுகிறேன். யௌவனப் பிராயததினளாயும் புத்திரவதியுமாக என்னை எவன் பக்தியுடன சுவரில் எழுதிவைப்பனோ அவன வீடு தழைத்து விளஙகும்; இதற்கு மாறாயிருந்தால் கெடும். பிரபுவே! உன வீட்டில் அநேகபுததிரர்களால் சூழபபட்டவளாகச் சுவர்களில் எழுதப்பட்டுக் கந்தங்கள புஷ்பஙகள தூபம பட்சணம போஜனம் முதலியவற்றினால் எபபோதும நனறாகப பூஜிக்கப்பட்டிருக்கிறேன். தர்மிஷ்டனான ராஜாவே! இதற்குப் பிரதியுபகாரம் செய்வதற்காக எபபோதும நினைத்துக்கொண்டிருக்கிற நான் உன் புத்திரனுடைய இவவிரண்டு கண்டங்களையும கண்டேன். மகாராஜாவே! என்னால் கூட்டப்பட்ட இவ்விரண்டு கண்டங்களும தெய்வச்செயலினாலும் உனது பாக்கியத்தினாலும் ஒரு குமாரனாயின இந்த விஷயத்தில் நான் ஒரு வியாஜமாத்திரமே. நான் மேரு மலையையும் தினனத் திறமையுளளவள. உன் குழந்தையைத் தின்பது எவ்வளவு! உன் வீட்டிற் செய்த பூஜையினால் சந்தோஷமடைந்த நான உனக்குப் புத்திரனைத் திருமபக் கொடுத்தேன். இவன் இவ்வுலகத்தில் என் பேரினால் புகழபெற்றிருக்கப் போகிறான' என்று மறுமொழி சொன்னாள். தர்மராஜரே! இவ்

வாறு சொன்னபின் அவ்வரக்கி அங்கேயே அந்தர்த்தானமானாள். அவ்வரசன் அந்தக் குமாரனை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான். அவ்வரசன் அப்போதே அந்தக் குழந்தைக்குச் செய்யவேண்டிய ஜாதகர்மம் முதலியவற்றைச் செய்தான். அந்த ராக்ஷஸிக்கு மகத தேசமெங்கும் மகோற்சவம் செய்யும்படி கட்டளையிட்டான். பிரம்மதேவருக்குச் சமானமான பிருகத்ரதன், 'இந்தக் குழந்தை ஜரையென்னும் அரக்கியினால் சேர்க்கப்பட்டதனால் ஜராசந்தன் என்று வழங்கப்படட்டும்' என்று அந்தப் புத்திரனுக்கு நாமகரணஞ்செய்தான். மகத தேசாதிபதியின் அந்தக் குமாரன் நெய்யினால் ஆகுதிசெய்யப் பட்ட அக்னியைப்போல வளர்ச்சியும் பலமும் சிறந்த சக்தியுமுள்ளவனாக வளர்ந்தான். அரசரே! தாமரை மலர்போன்ற கண்களையுடைய அந்தக் குமாரன் இவ்வாறு தாய் தந்தையர்களுக்கு ஆனந்தத்தைச் செய்துகொண்டு வளர்பிறைச் சந்திரன் போல் விருத்தியடைந்து வெகுகாலத்திற்குப் பின் யௌவனம் அடைந்தான்.

---

## பத்தோன்பதாவது அத்தியாயம்

## மந்திர பர்வம் (தொடர்ச்சி)

**(சண்டகௌசிக முனிவர் ஜராசந்தனுக்கு வரங்கொடுத்ததை அனுசரித்து இதுவரையில் அவனைக் கொல்லவில்லையென்று கிருஷ்ணன் சொல்லியது)**

சில காலத்திற்குப் பிறகு, சிறந்த தவமுள்ள பகவானாகிய சண்டகௌசிக முனிவர் (ஒருமுறை) மகத தேசத்திற்கு வந்தார் அவர் வரவினால் சந்தோஷமடைந்த பிருகத்ரத ராஜன அமைச்சரோடும் கட்டியங்கூறுபவரோடும் மனைவிகளோடும் புத்திரனோடுங் கூடப் புறப்பட்டான். பாரதரே! அவ்வரசன் அர்க்கிய பாத்ய ஆசமனீயங்கள் கொடுத்து அந்த முனிவரைப் பூசித்து ராஜ்யத்தையும் புத்திரனையும் அவருக்கு ஒப்புவித்தான். வேந்தரே! பகவானான அந்த ரிஷி அரசன் செய்த அந்தப் பூஜையைப் பெற்றுக்கொண்டு உள்ளம் மகிழ்ந்து பிருகத்ரத ராஜனைப் பார்த்துச் சொல்லலானார்.

'ஓ! அரசனே! எனக்கு ஞானக்கண்ணினால் இஃதெல்லாம் முன்னமே தெரியும். அரசர்க்கரசனே! இந்தப் புத்திரன் எப்படிப் பட்டவனாவனென்பதைக் கேள். இவனுடைய அழகும் தைரியமும் தேகபலமும் ஸ்திரமானவை. உன்னுடைய இந்தப் புத்திரன் எல்லாச் சிறப்புக்களும் சேர்ந்து உண்டாயிருக்கிறானென்பதில்

சந்தேகமில்லை. இவன் முன் சொல்லியவற்றையெல்லாம் அடைவன். பறக்கும் கருடனுடைய கதியை மற்றப் பறவைகள் எவ்வாறு அனுசரிக்கமாட்டாவோ அவ்வாறே சிறந்த சக்தியுள்ள இவனுடைய செய்கையை மற்ற அரசர்கள் அனுசரிக்கமாட்டார்கள். இவனுக்கு எவர் விரோதிகளோ அவர்கள் நாசமடைவார்கள். ராஜாவே! ஆற்றின் வெள்ளம் எப்படி மலைக்குத் தீங்கு செய்யமாட்டாவோ அப்படியே தேவர்களால் விடுக்கப்பட்ட அஸ்திரங்கள்கூட இவனுக்குத் தீங்குசெய்யமாட்டா. பட்டாபிஷேகஞ் செய்யபெற்ற அரசர்கள் எல்லாருக்கும் மேல் இவன் பிரகாசிப்பான். சூரியன் மற்ற கிரக நக்ஷத்திர முதலியவற்றின் ஒளியை வாங்குவதுபோல மற்றெல்லா அரசர்களுடைய சக்தியையும் இவன் வாங்கிக்கொள்வான். சேனைகளும் வாகனங்களும் நிரம்பப் பெற்ற அரசர்களும் இவனைச் சந்தித்தபின் தீயைக் கிட்டின விட்டிற்பூச்சிகள்போல நாசமடைவார்கள். வருஷாகாலத்தில் தண்ணீர்ப் பெருக்கு மிகுந்த நதிகளைக் கடல் இழுத்துக்கொள்வதுபோல இவன் எல்லா அரசர்களுடைய விபவங்களையும் சேர்த்தெடுத்துக்கொள்வான். செல்வமுள்ளதும் எல்லாப் பயிர்களும் நிரம்பினதும் க்ஷேமமுள்ளதுமாகிய சிறந்த பூமியையும் நான்கு வருணங்களையும் நன்றாகக் காப்பாற்றப்போகிறான். எல்லாப் பிராணிகளுக்கும் ஆத்மாவைப்போன்ற பிராணவாயுவுக்குப் பிராணிகள் வசப்பட்டிருப்பதுபோல இவன் கட்டளைக்கு எல்லா அரசர்களும் வசபபட்டிருப்பர். எல்லா லோகங்களுக்கும் மேறபட்ட பலசாலியான இந்த மகத ராசன, திரிபுர சம்ஹாரஞ் செய்தவரும் பாபத்தைப் போக்குகிறவரும் மகாதேவருமான சிவபெருமானைப் பிரத்தியட்சத்திற் காண்பான்' என்றார்.

சத்துருக்களை யழிப்பவரான தர்மராஜரே! அம்முனிவர் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையிலேயே தம் சொந்தக் காரியத்தை (= தவத்தை) நினைத்துப் பிருகத்ரத ராஜனுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டார். பிறகு, பிருகத்ரதன் பந்துக்களாலும் சிநேகிதர்களாலும் சூழப்பட்டவனாகி ஜராசந்தனுக்கு நகரப் பிரவேசஞ் செய்வித்துப் பட்டாபிஷேகஞ்செய்து மிகுந்த சந்தோஷத்தை அடைந்தான். ஜராசந்தனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்தவுடனே, பிருகத்ரத ராஜன் இரண்டு மனைவிகளாலும் பின்தொடரப்பெற்றுத் தபோவனஞ் சென்றான். பாரதரே! தன் தாய்மார்களுடன் கூடத் தகப்பன் வனத்திலிருக்கையில் ஜராசந்தன் தன் பராக்கிரமத்தினால் அரசர்களை வசப்படுத்தினான். பிறகு, வெகு காலத்திற்குப்பின் தபோவனத்திலிருந்த பிருகத்ரத ராஜன் பாரியைகளுடன்கூடத் தவஞ்செய்து சுவர்க்க

மடைந்தான். ராஜாவான ஜராசந்தனும் சண்டகௌசிகர் கொடுத்த வரங்களை யெல்லாம் அவர் சொன்னவாறே பெற்று ராஜ்ய பரிபாலனமுஞ் செய்தான். நான் முன்னே கம்ஸனையும் [1]ஹம்ஸடிம்பகர்களையும் வதஞ்செய்தபொழுது ஜராசந்தனுடைய பெண்கள் தம் தந்தையி னருகிற் சென்று அழுதுகொண்டிருந் தனர். பாரதரே! அப்போது அவனுக்கு என்னுடன் நீங்காத விரோதம் உண்டாயிற்று. பாரதரே! அந்தப் பலவானான ஜரா சந்தன் கதாயுதத்தைத் தொண்ணூற்றொன்பது சுற்றுக்கள் சுற்றிக் கிரிவிரஜத்திலிருந்து எறிந்தான். நான் மதுரையிலிருக் கையில் யாவரும் வியக்கத்தக்க ஜராசந்தனுடைய அந்தச் சிறந்த கதாயுதம் தொண்ணூற்றொன்பது யோஜனை தூரத்தில் வந்து விழுந்தது. அப்போது மதுராபுரத்து ஜனங்கள் அந்தக் கதாயுதத்தை நன்றாகப் பார்த்து எனக்குத் தெரிவித்தனர். மதுரையின் சமீபத்திலுள்ள அந்த இடத்துக்கு, [2] கதாவஸானம் என்று பெயர் வழங்குகிறது. அஸ்திரங்களினால் மரணமில்லாத வர்களும் புத்திமான்களிற் சிறந்தவர்களும் ராஜநீதி சாஸ்திரத் தில் தேர்ந்தவர்களுமான ஹம்ஸடிம்பகர்கள் அவனுக்கு மந்திரி களாயிருந்தனர். இந்த மகா பலசாலிகளிருவரையும்பற்றி முன் னமே உமக்குச் சொல்லியிருக்கிறேன். ஜராசந்தனும் ஹம்ஸ டிம்பகர்களுமாகிய அம்மூவர்களும் மூன்று உலகங்களுக்கும் போதுமானவர்களென்பது என் அபிப்பிராயம். வீரரான மகா ராஜாவே! பலசாலிகளான குகுரர்களும் அந்தகர்களும் விருஷ் ணிகளும் இவ்வாறு ரிஷியின் வரதானத்தை மாற்றத் தகா தென்பதாகிய நீதி காரணமாகத்தான் முன்னே ஜராசந்தனை விட்டுவிட்டனர்.

மந்திர பர்வம் முற்றிற்று

---

## இருபதாவது அத்தியாயம்

# ஜராசந்த வத பர்வம்

**(ஸ்ரீகிருஷ்ணனும், பீமார்ஜுனர்களும் தர்மராஜாவினிடம் விடைபெற்றுக்கொண்டு ஸ்நாதகப்பிராமண வேஷம் பூண்டு மகத ராஜதானிக்குச் சென்றது)**

ஹம்ஸடிம்பகர்களிருவரும் விழுந்துபோயினர். கம்ஸனும் அவன் கூட்டத்தாருடன் கொல்லப்பட்டான். ஜராசந்தனைக்

---

1 டிபிகன் என்றும் பெயர் உண்டு. 2 கதாயுதத்தின் முடிவு.

கொல்வதற்கு இது தருணம் நேர்ந்திருக்கிறது. தேவாசுரர்கள் யாவரும் சேர்ந்தாலும், அவனை யுத்தத்தில் வெல்லமுடியாது. தேகபலத்தைப்பற்றிய யுத்தத்தினாலேதான் அவனை ஜயிக்க வேண்டுமென்று நினைக்கிறோம். என்னிடத்தில் உபாய மிருக்கிறது; பீமனிடத்தில் பல மிருக்கிறது. எங்களிருவரையும் காப்பவனாக அர்ஜுனனிருக்கிறான். நாங்கள் மூவரும், மூன்று அக்னிகள் யாகத்தை முடிப்பதுபோல ஜராசந்தனை முடித்துவிடுவோம். சகாயமில்லாத சமயத்தில் எங்கள் மூவராலும் பிடிக்கப்பட்ட அவ்வரசன் ஒருவனோடாயினும் யுத்தஞ்செய்வானென்பதில் சந்தேகமில்லை. அவமானந் தாங்காமையாலும் ஜயிக்கும் ஆசையினாலும் கைவன்மையினாலும் கர்வித்து எங்களில் பீமஸேனனோடு அவசியம் யுத்தத்துக்கு வருவானென்பது நிச்சயம். விருத்தி அடைந்த உலகங்களை அழிப்பதற்கு யமனெப்படியோ அப்படியே அவனை அழிப்பதற்குச் சிறந்த கைகளையுடையவனும் மகா பலசாலியுமான பீமஸேனன் போதுமானவன். பீமனுடைய பலமும் உமக்குத் தெரிந்து, என்னிடத்தில் உமக்கு நம்பிக்கையுமிருக்குமாயின் உடனே பீமஸேனனையும் அர்ஜுனனையும் என்னிடம் அடைக்கலமாக ஒப்புவியும்' என்றார். இவ்வாறு பகவானால் சொல்லப்பட்ட யுதிஷ்டிரர், பீமார்ஜுனர்கள் முகமலர்ச்சியோடிருக்கக் கண்டு, கிருஷ்ண பகவானுக்கு மறுமொழி கூறலானார்.

'அச்சுதரே! அச்சுதரே! பகைவரை அழிப்பவரே! நீர் இவ்வாறு சொல்லாதீர்; சொல்லாதீர். பாண்டவர்களுக்கு நீர் தாம் நாதர். உம்மையே நாங்கள் அடுத்திருக்கிறோம். கோவிந்தா! நீர் சொல்லுகிறபடியே எல்லாம் பொருத்தமுள்ளது. கிருஷ்ணா! எவர்களுக்கு லக்ஷ்மி முகங்கொடாமலிருப்பளோ அவர்களுக்கு நீர் முன்னிற்பதில்லை. எவர்களுக்கு லக்ஷ்மி முகங்கொடுப்பாளோ அவர்களுக்கே நீர் முன்னிற்பவர். உமது கட்டளைப்படியிருக்கும் எனக்கு ஜராசந்த வதமும், அவனிடத்திலிருந்து அரசர்களை விடுவிப்பதும் ராஜசூய யாகத்தை முடிபபதும் நடந்தவை போலவே ஆயின. ஜகத்துக்கு நாதரே! புருஷோத்தமரே! எவ்வகையில் இந்தக் காரியம் சீக்கிரமாகக் கூடிவருமோ அவ்வகையை ஜாக்கிரதையாகச் செய்வீர். நான் உங்கள் மூவரையும் விட்டுத் தர்மார்த்தகாமங்களை இழந்த ரோகியைப்போலத் துக்கத்துடன் ஜீவிக்கக் கருதேன். அர்ஜுனன் கிருஷ்ணனை விட்டிரான். கிருஷ்ணனும அர்ஜுனனை விட்டிரார். இவ்விரண்டு கிருஷ்ணர்களாலும் ஜயிக்கப்படத்தகாதவன் உலகத்திலிலலை யென்று நான் நினைக்கிறேன. வீரரே! பலவான்களிற் சிறந்தவனும் ஜயலக்ஷ்மி பொருந்தினவனும் பெரும புகழ்பெற்றவனு

மாகிய இந்த விருகோதரன் உங்களிருவருடனும் சேர்ந்து எதைத் தான் செய்யான்? பெருஞ் சேனையும் நன்றாக நடத்தப்பட்டுத் தானே சிறந்த காரியத்தைச் செய்யும்; சேனை கண்ணில்லாததென்றும் அறிவில்லாததென்றும் தெரிந்தவர்களால் நடத்தப்படவேண்டுமென்றும் சொல்லுகிறார்களன்றோ? புத்தியிற் சிறந்தவர்கள் எங்கே பள்ளமிருக்கிறதோ அங்கேயன்றோ ஜலத்தைப் போக்குகின்றனர். எவ்விடத்தில் துவாரமிருக்கின்றதோ அந்த வழியாகவும் ஜலத்தைப் போக்குகின்றனர். ஆதலால், ராஜ்ய தந்திரங்களின் முறையை நடத்தத் தெரிந்தவரென்று உலகத்தில் பெயர்பெற்ற புருஷனாகிய கோவிந்தனை (= உம்மை)ச் சார்ந்து நாம் காரியத்தைச் சாதிக்க முயல்வோம். கிருஷ்ணா! காரியங்கள் செய்யும்போது எடுத்த காரியத்தின் பயனைப் பெறுவதற்காகச் செய்கையோடும் உபாயத்தோடுங் கூடிய புத்தி பலத்தையும் யுக்தி பலத்தையும் இவ்வாறு முன்னிட்டுக் கொள்ளவேண்டும் யாதவ சிரேஷ்டரே! இவ்வாறாகவே செய்யத்தக்க காரியங்களெல்லாவற்றையும் முடிப்பதற்கு அர்ஜுனன் கிருஷ்ணனை அநுசரித்தும், பீமன் அர்ஜுனனை அநுசரித்தும் இருக்கக்கடவர். நீதியும் ஜயிக்கிற சக்தியும் தேகவன்மையும் சேர்ந்தால்தானே யுத்தத்தில் பயனைத் தரும்' என்றார். பெருஞ் சக்தியுள்ளவர்களான கிருஷ்ண பீமார்ஜுனர்களாகிய பிராதாக்கள் அனைவரும் தர்மபுத்திரரால் இவ்வாறு சொல்லப்பட்ட பிறத ஜராசந்தனை நோக்கிப் புறப்பட்டனர். கிருஷ்ண பீமார்ஜுனர்கள் உயர்ந்த பிரம்ம தேஜஸுள்ள [1] ஸ்நாதகப் பிராமணர்களின் உடைகளை யுடுத்துத் தவ வேஷந் தரித்து நண்பர்களின் இன்சொற்களினால் ஆசீர்வதிக்கப் பெற்றவர்களாய்ப் புறப்பட்டனர். தங்கள் குலத்தோரான க்ஷத்திரியர்கள் அடைந்திருக்கிற துயரத்தைப்பற்றிய கோபத்தினால் கொதிப்புற்றவர்களும் சூரியன் சந்திரன் அக்னி இம்மூவரைப்போலச் சிறந்த சக்தியுள்ளவர்களுமாகிய அவர்களின் தேகங்கள் அப்போது சூரிய சந்திராக்கினிகள் போல ஜ்வலித்தன. யுத்தத்தில் தோல்வியடையாத கிருஷ்ணார்ஜுனர்கள் பீமனை முன்னிட்டுக் கொண்டு ஒரு காரியத்தில் முயல்வதைக் கண்டு ஜராசந்தன் கொல்லப்பட்டதாகவே தர்மராஜர் நினைத்தார். அவ்விரண்டு மகாத்மாக்களும் எல்லாக் காரியங்களையும் நடத்துகிறவரும் தர்மார்த்த காமங்களையும் உலகங்களையும் பிரவிர்த்திக்கச் செய்பவருமான ஈசுவரர்களன்றோ? அந்தக கிருஷ்ணபீமார்ஜு-

1 பிரம்மசாரி விரதம் முடித்துக் குருவினால் விடை கொடுக்கப்பெற்ற பிறகும் கிருகஸ்தாசிரமம் எடுத்துக்கொள்வதற்கு முன்னும் ஸ்நாதகர் ஆவர். அவர்களுக்கு ராஜாவுக்கு மேற்பட்ட மரியாதை செய்யும்படி தர்மசாஸ்திரம் விதிக்கிறது.

னர்கள் புறப்பட்டுக் குருக்ஷேத்திரத்திலிருந்து குருஜாங்கல மென்னும் இடத்தின் வழியாய் அழகான பத்மஸரஸுக்குச் சென்று காலகூட மலையையும் ஏக பர்வதத்திலுள்ள கண்டகி நதியையும் மகாசோணமென்னும் நதத்தையும் ஸதாநீரை யென்னும் நதியையும் முறையே தாண்டிச் சென்றனர். அழகான ஸரயூ நதியைத் தாண்டிக் கோசல தேசத்தின கிழப்பாகங்களைக் கண்டு அவற்றைத் தாண்டி மிதிலைக்குச் சென்றனர். மாலா, சர்மண்வதி, கங்கை, சோணம் என்னும் ஆறுகளையும் தாண்டி அம்மூவரும் கிழக்கு நோக்கிச் சென்றனர். தோல்வியடையாதவர்களாகிய அவர்கள் தர்பைகளையும் மரவுரிகளையும் தரித்துக் கொண்டு ஜராசந்தனிடம் சென்றனர். அவர்கள் இடத்துக்கிடம் [1]கோதனங்கள் நிரம்பியிருப்பதும் நீர்வளமுள்ளதும் அழகிய மரங்களுள்ளதுமான கோரத மென்னும் மலையைச் சேர்ந்து மகத தேசத்து ராஜதானியைக் கண்டனர்.

---

## இருபத்தோராவது அத்தியாயம்

## ஜராசந்த வத பர்வம் (தொடர்ச்சி)

### (கிருஷ்ண பீமார்ஜுனர்கள் ஜராசந்தன் வீட்டுக்குச் சென்று அவனிடம் பேசியது)

அப்போது கிருஷ்ணன் அர்ஜுனனை நோக்கி, 'அர்ஜுனா! இந்த மகத தேசத்தின் பெரிய நகரம் பசுக்கள் நிரம்பவுள்ளதும் எப்போதும் நீர்வளமுள்ளதும் அழகான வீடுகள் நிரம்பினதும் ரோகங்களில்லாததுமாய் விளங்குகிறது. கிளைகளின் நுனிகள் புஷ்பங்களினால் மறைக்கப்பட்டு இனிய மணமுள்ளவையும் மனத்தைக் கவருகின்றவையும் யௌவனப் பிராயததிலிருப்பவர் விரும்பத்தக்கவையுமான லோத்திரமென்னும் மரக்காடுகளினால் மறைக்கப்பட்டனவும் உயர்ந்த கொடுமுடிகளும் குளிர்ந்த மரங்களுமுள்ளனவுமான விளையாட்டிற்குரிய விபுல மலை, வாராக மலை, விருஷப மலை, ரிஷி மலை, சைத்யக மலை என்னும் இவ்வைந்து அழகிய மலைகள் ஒன்றுசேர்ந்து கிரிவ்ரஜமென்னும் ஊரைக் காப்பவைபோ லிருக்கின்றன. இவ்விடத்தில் மகாத்மாவும் கடுந்தவமுள்ளவரும் ஐம்புலன்களையும் மிகவும் அடக்கியவரும் கோதம கோத்திரத்திற் பிறந்த

---

1. பசுக்கள்

வருமான [1] தீர்க்கதமஸ் என்னும் ரிஷி உசீநரன் புத்திரியும் மகத ராஜன் மனைவியுமான ஸுதேஷ்ணையினிடமும் அவள் தாஸியினிடமும் கக்ஷீவான் முதலிய புத்திரர்களை உண்டுபண்ணினார். அந்த முனிவர் அந்த சிநேகத்தினால் அந்தக் கிருகத்தி லிருந்து கொண்டு மகதராஜர்களின் வம்சத்தை விருத்திசெய்தது அந்த அரசர்களுக்கு அவர் செய்யும் அருள்தான். அர்ஜுனா! முற்காலத்தில் மிகச் சிறந்த பலசாலிகளாயிருந்த அங்கர் வங்கர் முதலிய ராஜாக்களும் கௌதமராகிய தீர்க்கதமஸ் இருக்குமிடத்துக்கு வந்து மகிழ்ந்திருந்தனர். பார்த்தனே! கௌதமருடைய கிருகத்திற்கு அருகில் உண்டாயிருக்கும் அரச மரங்களும் லோத்திர மரங்களும் செழுமையாகவும் அழகாகவும் வரிசையாகவு மிருக்கின்றன. இந்தக் காடுகளைப் பார். சத்துருக்களுக்குத் தாபமுண்டுபண்ணுபவர்களாகிய அர்ப்புதன் சக்ரவாபி என்னும் இரண்டு [2] நாகர்கள் இங்கிருக்கின்றனர் ஸ்வஸ்திகன மணிநாகன் இவ்விரண்டு நாகர்களுடைய சிறந்த கிருகங்களும் இங்கிருக்கின்றன. மேகங்கள் மகத தேசத்தைவிட்டுப் போகமலிருக்கும்படி மனுவே செய்திருக்கிறார். கௌசிகன் மணிமான் என்னும் நாகர்களிருவரும் [3] அனுக்ரகஞ் செய்திருக்கின்றனர். [4] பாண்டரம், விபுலம், வாராகம், சைத்யகம், மாதங்கம் என்னும் இவ்வைந்து சிறந்த பர்வதங்களிலும் சகல சித்தர்களின் கிருகங்களும் மகாத்மாக்களான சந்நியாசிகள் ரிஷிகள் இவர்களின் ஆசிரமங்களும் விருஷபன், தமாலன், மகாவீர்யன் என்னும் நாகர்களுடைய கிருகங்களும் கந்தர்வர்கள் ராக்ஷஸர்களின் வீடுகளும் இருக்கின்றன. கக்ஷீவானென்னும் முனியின் தவபெருமையினால் [5] தபோதங்கள் என்று பெயர்பெற்ற புண்ணியதீர்த்தங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் சித்த தீர்த்தங்களெனவும் சொல்லப்படுகின்றன. மணிமானென்னும் நாகனைக் கண்ட மாத்திரத்தினாலேயே மனிதன் க்ஷேமத்தையும் சுகத்தையும் அடைவான். இப்படி நாற்புறங்களிலும் வெல்லமுடியாத அழகிய நகரத்தை யடைந்துதான் ஜராசந்தன் ஒப்பற்ற காரியசித்தியை நினைக்கிறான். நாம் இப்போது சமீபத்தில் போய் அவன் கர்வத்தைப் போக்கிவிடுவோம்' என்று சொன்னார்.

---

1. இக்கதையின் விரிவை ஆதி பர்வம் 418-ம் பக்கத்தில் காண்க.

2. நாகர்கள் புருஷரூபியா யிருப்பவர்கள்.

3. காப்பாற்றுகின்றனர்.

4. விருஷப மலை, ரிஷி மலை என்றவை பாண்டரம், மாதங்கம் என்று கூறப்பட்டிருக்கின்றன.

5. தவத்தைக் கொடுப்பவை.

இவ்வாறு கிருஷ்ணன் சொன்ன பிறகு, கிருஷ்ணனும் பாண்டவர்களுமாகிய பெருஞ் சக்தியுள்ள பிராதாக்களனைவரும் ஜராசந்தனுடைய நகரத்துக்குச் சென்றனர். மகிழ்ச்சியும் செல்வமுமுள்ள ஜனங்கள் நிரமபினதும் நானகு வருணத்தாரும் நிறைந்திருப்பதும் உற்சவச் சிறப்புக்களுள்ளதும் வெல்ல முடியாததுமான கிரிவ்ரஜத்தைச் சேர்ந்தனர். அபபோது அந்நகரத்தின வாயில் வழியே செல்லாமல் பிருகத்ரதன் வம்சத்தாராலும நகரத்து ஜனஙகளாலும் பூஜிக்கபபடுவதும் மகத தேசத்திற்கு அலங்காரமாயிருப்பதுமான உயர்ந்த குன்றாகிய சைத்யகத்தின சந்து வழியாகச் சென்றனர். அந்த இடத்திலேதான், பிருகத்ரத ராஜன், மாமிசத்தைத் தின்னும் விருஷப ரூபமாக வந்த அசுரனைப பிடித்துக் கொனறு ஒரு மாதம் வரையில் நாதம காக்கினற மூன்று பேரிகைகளைச் செய்வித்து அவன் தோலினால் அவற்றைக் கட்டித் தன் நகரத்தில் ஸ்தாபித்திருந்தான். அந்தப் பேரிகைகள் எங்கே முழங்கினவோ அஙகே தேவர்களால் மலர்மாரி பொழியப்பட்டது. அந்தக் கிருஷ்ணபீமார்ஜுனர்கள் அம்மூன்று பேரிகைகளையும உடைத்து, அந்த ஊருக்கு மதிலாயிருக்கும் சைத்யக மலையினிடம் செல்லத் தொடங்கினர். அப்போது அவர்களனைவரும் கோட்டை வாயிலை விட்டு மகத தேசத்திற்கு மிக்க அலங்காரமான அந்தச் சைத்யக மலையை நோக்கி விரைவாக நெருங்கிச் சென்றனர். ஜராசந்தனைக் கொல்லக் கருதின அந்த வீரர்கள் வெகு காலமாக அழியாமலிருப்பதும் மிக்க அகலமும் உயரமுமுள்ளதும் சந்தனங்களாலும் புஷ்பங்களாலும் எப்போதும் பூஜிக்கப்பட்டதும் திடமாக நிலைபெற்றிருப்பதுமாகிய அம்மலைச்சிகரத்தைப் பெரிய கைகளினாலேயே அவன் தலையை உடைப்பதுபோல உடைத்து வீழ்த்தினர். அதன் பிறகு, அவர்கள் உற்சாகத்துடன் அந்நகரத்துக்குள் பிரவேசித்தனர். வேதங்களில் கரைகண்டவரான பிராமணர்கள் அதே காலத்தில் அபசகுனங்களைக் கண்டு ஜராசந்தனுக்குத் தெரிவித்தனர். புரோகிதர்கள் யானைமேலிருந்த ராஜாவுக்குத் தீபஆரத்தி சுழற்றினர். பராக்ரமசாலியான ஜராசந்த ராஜா அப்போது அந்தத் தோஷங்களுக்குச் சாந்தி செய்வதற்காகத் தீக்ஷையெடுத்துக்கொண்டு விரதத்தையும் உபவாசத்தையும் நடத்தினான். ஜனமேஜயரே! ஸ்நாதக விரதம் எடுத்துக்கொண்ட கிருஷ்ணனும் அர்ஜுனனும் பீமனும் ஆயுதங்களை விட்டுக் கைகளையே ஆயுதங்களாகக் கொண்டு ஜராசந்தனிடம் யுத்தஞ்செய்யக் கருதினவர்களாய் (நகரத்தில்) பிரவேசித்தனர். எல்லாக் குணங்களுமுள்ளதும் வேண்டியவெல்லாம் நிரம்பினதும் விலைபெற்றதுமாயுள்ள பட்ச

ணக்கடை பூக்கடைகளின் மிகுந்த சிறப்பைக் கண்டனர். புருஷோத்தமர்களும் மகாபலசாலிகளும் மகாரதர்களுமான அந்தக் கிருஷ்ணபீமார்ஜுனர்கள் ராஜ மார்க்கமாகப் போய்க்கொண்டே அந்த வீதியிலுள்ள அந்தச் சிறப்பைக் கண்டு புஷ்பக்காரனிடமிருந்து புஷ்பமாலைகளையும் கடையினுள் இருக்கும் வர்த்தகனிடமிருந்து கர்பூரச் சிமிழையும் கோஷ்டத்தையும் கனிகளையும் பலவந்தமாக எடுத்துப் பூமாலைகளை அணிந்து வெண்மையான வஸ்திரங்களையும் பிரகாசமான குண்டலங்களையுந் தரித்து, இமயமலையிலுள்ள சிங்கங்கள் மாட்டுத் தொழுவத்தைப் பார்ப்பதுபோலப் புத்திமானுன ஜராசந்தன் வீட்டைப் பார்த்துக்கொண்டே சென்றனர். ஜனமேஜய ராஜாவே! யுத்தத்தில் பிரகாசிப்பவர்களான அவர்களுடைய ஆச்சா மரங்களைப் போன்ற கைகள் சாந்தையும் அகிலையு மணிந்து அழகாக விளங்கின. ஆனைகளைப் போன்றவர்களும் பெருமரங்களின் தண்டுகள்போல் வளர்ந்தவர்களும் அகன்ற மார்புகளை யுடையவர்களுமான அவர்களைக் கண்டு மகத தேசத்தவர்கள் வியப்புற்றனர். அவர்கள் வாயில் வழியை விட்டு ஏறிக் குதித்து ஜராசந்தன் வீட்டிற் புகுந்தனர். புருஷசிரேஷ்டர்களான அவர்கள் ஜனங்கள் நிரம்பின மூன்று கட்டுகளைத் தாண்டி அச்சமின்றித் தாம் உயர்குலத்தோரென்னும் கர்வத்தோடு ராஜாவினிடம் சென்றனர். மகாரதர்களான அவர்கள், 'ஓ!' என்னும் சொல்லினாலேயே ராஜாவை அழைத்தனர். அர்க்கிய பாத்தியங்களையும் [1]மதுபர்க்கமென்னும் சிற்றுணவோடு [2]பசுவையும் கொடுத்து உபசரிக்கத் தகுதியுள்ளவர்களும் விசேஷ மரியாதை பெற்றிருப்பவர்களுமான அவர்களை ஜராசந்தன் எதிர்கொண்டழைத்துச் சாஸ்திரப்படி பூஜித்தான். சமர்த்தனுன அவ்வரசன், அவர்களைப் பார்த்து 'உங்களுக்கு நல்வரவு ஆகுக' என்று சொன்னான். ஜனமேஜயரே! அப்போது பீமனும் அர்ஜுனனும் மௌனமாக இருந்தனர். அவர்களுக்குள் சிறந்த புத்திசாலியான கிருஷ்ணன் ஜராசந்தனைப் பார்த்து, 'அரசர்க்கரசே! இவர்களிருவரும் இப்போது ஒரு விரதம் வகித்திருப்பதனால் நடு இரவுக்கு முன் பேசலாகாது. அதன் பிறகு உன்னுடன் பேசுவார்கள்' என்று சொன்னார். ஜராசந்தன் அவர்களைத் தன் யாகசாலையில் இருக்கச்செய்து தன் அரண்மனைக்குச் சென்றான். பிறகு, அர்த்தராத்திரி காலம் வந்த

1 மதுபர்க்கமென்பது ஜலம் சொற்பமும், தயிர் நெய் சர்க்கரை சமனும், தேன் எல்லாவற்றிலும் அதிகமுமாகச் சேர்த்துச் செய்யப்பட்டது.

2 யோகியர்களான வேதவித்துக்கள் வந்தபோது கன்றையாவது பெரிய விருஷபத்தையாவது ஆட்டுக்கடாவையாவது மதுபர்க்கத்தோடு கொடுக்கவேண்டுமென்று ஆபஸ்தம்பர் சொல்லுகிறார்.

போது, அந்தப் பிராம்மணர்க ளிருக்குமிடத்திற்குச் சென்றான். ஜனமேஜய ராஜாவே! யுத்தங்களில் ஜயிப்பவனான அந்த ஜராசந்தன், ஸ்நாதகர்களான பிராமமணர்கள் வந்திருப்பதாக அர்த்தராத்திரி வேளையிற் கேட்டாலும் அவர்களை எதிர்கொண்டழைப்பதை விரதமாக வைத்திருந்தானென்பது உலகப்பிரசித்தம். அந்த ராஜசிரேஷ்டனான ஜராசந்தன அவர்கள் அற்புதமான வேஷத்தோடிருப்பதைக் கண்டு மரியாதை செய்து திகைத்து நின்றான். பரதசிரேஷ்டரும ராஜசிரேஷ்டருமான ஜனமேஜயரே! சத்துருக்களை அழிப்பவரான அந்தப புருஷசிரேஷ்டர்க ளெல்லாரும் ஜராசந்த ராஜாவைக் கண்டவுடன், 'ராஜாவே! மங்கள முண்டாகட்டும; க்ஷேம முண்டாகட்டும' என்று சொல்லி, அவவரசனைப் பார்த்தும தமமில் ஒருவரையொருவர் பார்ததும் அஙகே நின்றனர். ஜனமேஜயரே! ஜராசந்தன் அவ்வாறு பிராமமண வேஷத்தில் மறைந்திருக்கும் அந்தப பாண்டவர்களையும கிருஷ்ணனையும பார்த்து, 'உட்காரலாம்' என்று சொன்னான. உடனே, அம்மூன்று புருஷ சிரேஷ்டர்களும் மகாயாகத்தின் மூன்று அக்னிகளைபபோல ஒளியினால் மிகப் பிரகாசித்துக்கொணடு உட்கார்ந்தனர். ஜனமேஜயரே! சத்தியந் தவறாதவனான ஜராசந்தன், தகாத அலஙகாரங்களைச் செய்து வேஷ மெடுத்துக்கொண்டதனால் உருமாறியிருந்த அவர்களை இகழ்ந்து பேசலானான். 'இம்மானிட லோகத்தில் ஸ்நாதக விரதம் வகித்திருக்கும பிராமணர்கள் வெளிப்படையாகப பூமாலை சூடிச் சாந்து அணிந்திராரென்று எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் யாவர்? பூமாலைகளை யணிந்தும் கைகளில் நாண் உரைந்த காய்பபுக்களினால் க்ஷத்திரிய சக்தியின் குறிப்புக்களைத் தாஙகியு மிருக்கிறீர்கள்? பிராமணர்களென்று சொல்லுகிறீர்கள்? இவ்வுலகத்தில் இவ்வாறு வெள்ளாடையுடுத்து வெளிப்படையாகப புஷ்ப சந்தனங்களைத் தரித்திருப்பவர்கள் க்ஷத்திரியர்கள்தாமென்று எனக்குச் செவ்வையாகத் தெரியும். நீங்கள் யார்? உண்மையைச் சொல்லுங்கள; ராஜாககளிடத்தில் உண்மைதான மேனமையாகும்; ராஜாபராதத்தில் அச்சமின்றிச் சைத்யக மலையின் சிகரத்தை யுடைத்து வாயிலை விட்டு வேறு வழியால் இந்த வீட்டில் ஏன நுழைந்தீர்கள்? மேலும், பிராமணருக்குச் சொல்லின் வன்மை யதிகம; உங்களுடைய இந்தச் செய்கை உங்கள் வேஷத்துக்கு மாறாயிருக்கிறது. இபபோது உங்களெண்ணம் யாது? சொல்லுஙகள்; இவ்வாறு என்னிடம் வந்தும், சாஸ்திரப்படி நான் செய்த மரியாதையை நீங்கள் ஏன் பெற்றுக்கொள்ளவில்லை? என்னிடம்

வந்த காரியம் யாது?' என்றான். அவன் இவ்வாறு சொல்ல, சிறந்த அபிப்பிராயமுள்ளவரும் பேசுவதில் சமர்த்தருமான வாசுதேவர் மதுரமும் கம்பீரமுமான மறுமொழி கூறலானார்.

'ராஜாவே! மனிதர்களுக்குப் பிரபுவே! நீ, எங்களை[1] ஸ்நாதகப் பிராமணர்களென்றே அறி. ராஜாவே! ஸ்நாதக விரதமுள்ளவர்கள் பிராமணராகவும் க்ஷத்திரியராகவும் வைசியராகவும் இருக்கலாம். இவர்களில் ஒவ்வொரு வகுப்பாருக்கும் சிறப்பான நியமங்களும் யாவருக்கும் பொதுவான நியமங்களுமுண்டு. சிறப்பான நியமமுள்ள க்ஷத்திரியன்தான் எப்போதும் ஐசுவரியத்தை யடைவான். புஷ்பங்கள் தரித்தவரிடத்தில் லக்ஷ்மி ஸ்திரமாயிருக்கிறாள். அதனால், நாங்கள் புஷ்பங்களைத் தரித்திருக்கிறோம். க்ஷத்திரியன் கைவன்மையுள்ளவன்தான்; சொல்வன்மையுள்ளவனாகான். பிருகத்ரத புத்திரனே! ஆதலால், க்ஷத்திரியன் வாக்குக் கம்பீரமாயிராதென்று சொல்லப்படுகிறது. பிரமதேவர் தமது சக்தியை க்ஷத்திரியர்களின் கைகளில் வைத்திருக்கிறார். ராஜாவே! அதை நீ பார்க்க விரும்புகிறாயாயின் இப்போதே பார்க்கலாம்; சந்தேகமில்லை. தைரியமுள்ள புருஷர்கள் சத்துருவின் வீட்டில் வாயிலல்லா வழியாலும் மித்திரர்கள் வீட்டில் நேர்வழியாலும் பிரவேசிக்கின்றனர். அந்தத் தர்மப்படி இவையெல்லாம் வழிகள்தாம். நாங்கள் காரியத்தோடு சத்துருவின் வீட்டிற்கு வந்து அவனிடத்தில் அதிதி பூஜையைப் பெற்றுக்கொள்ளமாட்டோம். இஃது எங்கள் உறுதியான விரதமென்று நீ அறி' என்றார்.

---

## இருபத்திரண்டாவது அத்தியாயம்

## ஜராசந்த வத பர்வம் (தொடர்ச்சி)

**(கிருஷ்ணனுக்கும் ஜராசந்தனுக்கும் சம்பாஷணம் நடந்தபிறகு ஜராசந்தன் யுத்தத்துக்கு ஆரம்பம் செய்தது)**

ஜராசந்தன், 'ஓ! பிராமணர்களே! உங்களோடு நான் விரோதஞ்செய்துகொண்டது எப்பொழுதென்று எனக்கு நினைவில்லை. ஆராய்ந்து பார்த்தும் உங்களுக்கு நான் தீங்குசெய்ததாக எனக்குத் தெரியவில்லை. தீங்குசெய்திருந்தால் என்னைக் [2]குற்றமில்லாதவனாக நீங்கள் நினைப்பதெவ்வாறு? [3] சத்துருவென்றே

1 மூலத்தில், 'ஸ்நாதகப் பிராம்மணர்களையும் எங்களையும் நீ பகுத்தறி' என்ற கருத்தும் அடங்கியிருக்கிறது.

2 ஆசீர்வாதம் செய்ததனால் குற்றமில்லாதவனாக நினைத்ததாகிறது.

3 சத்துருவான என்னைக் குற்றமற்றவனாக நினைப்பதெவ்வாறு? அதைச் சொல்லுங்களென்பது பழைய உரை.

சொல்லுங்கள்.'[1] இதுதானே சான்றோர் ஒழுக்கம். அர்த்தத்தை யும் தர்மத்தையும் கெடுப்பதனாலன்றோ மனம் கொதிப்பது. தர்மந்தெரிந்தவனும் மகாரதனுமாயிருக்கும் க்ஷத்திரியன் இதற்கு மாறாக நடந்து குற்றமில்லாதவனிடத்தில் குற்றத்தை ஏற்படுத்துவானாயின், அவன் தனது புண்ணிய லோகங்களைக் கெடுத்துக் கொண்டு பாப கதியை யடைகிறான்; சந்தேகமில்லை. ஒழுங்காக நடப்பவர்களுக்கு க்ஷத்திரிய தர்மந்தான் மூன்று லோகங்களிலும் சிலாக்கியமானது. தர்மந் தெரிந்த யாவரும் (க்ஷத்திரிய தர்மந் தவிர) மற்ற தர்மத்தைச் சிலாகிப்பதில்லை. அப்படியே மன வுறுதியோடு என் க்ஷத்திரிய தர்மத்திலிருந்துகொண்டு பிரஜை களுக்குத் தீங்குசெய்யாமலிருக்கும் என்னைபபற்றி நீங்கள்(பேசல்) தவறுதலாகப் பிதற்றுவதுபோ லிருக்கிறது' என்று சொல்ல, கிருஷ்ணன் சொல்லலானான். 'சிறந்த கைகளையுடையவனே! குலத்தைத் தாங்குகிறவனாகிய ஓர் ஒப்பற்ற மனிதன் தன் குலத் தோரின் காரியத்தைத் தானெடுத்துக்கொண்டிருக்கிறான். அவ னுடைய கட்டளையினால் நாம் உன்னை யெதிர்த்து வந்திருக் கிறோம். ராஜாவே! இந்த உலகத்திலுள்ள க்ஷத்திரியர்களை நீ பலியாக்கக் கொண்டுவந்திருக்கிறாய். அந்தக் கொடிய குற் றத்தை யுண்டாக்கியபின் நீ குற்றமில்லாதவனாக நினைத்துக் கொள்வது எப்படி? ராஜ சிரேஷ்டனே! ராஜாவாயிருப்பவன் சாதுக்களான ராஜாக்களைத் துன்பஞ் செய்யலாமா? நீ அந்த ராஜாக்களைப் பிடித்து ருத்திர பகவானுக்குப் பலியாகக் கொடுக்க நினைத்திருக்கிறாய். பிருகத்ரத புத்திரனே! உன்னாற் செய்யப்பட்ட அந்தப் பாவம் எங்களையும் சேரும். ஏனெனில், நாங்கள் தர்மத்தைச் செய்பவர்கள். தர்மத்தை ரட்சிப்பதில் சக்தியுள்ளவர்கள். பிருகத்ரத புத்திரனே! அதற்காக இப்போது உன்னிடம் வந்திருக்கிறோம். மனிதர்களைக் கொன்று யாகம் செய்வதை ஒருகாலும் கண்டதில்லை. அவ்வாறிருக்க, நீ மனிதர் களைத் தேவரான சங்கரருக்குப் பலிகொடுக்க நினைப்பதெப்படி? ஜராசந்தா! பயன்படாத அறிவுள்ள நீ செய்வதுபோல வேறு எவன் ஒரே குலத்திற் பிறந்து தன் குலத்தோருக்கே பசுக்க ளென்று பெயரிடுவான்? எவனெவன் எந்த எந்தக் காலத்தில் என்னென்ன கர்மத்தைச் செய்கிறானோ அவனவன் அதனதன் பயனை அந்தந்தக் காலத்திலேயே அடைவான். ஆதலால், துக்கப்பட்டவரிடத்தில் பரிதாபமுள்ள நாங்கள், குலத்தோர் விருத்தியின் நிமித்தமாகவே குலத்தோரை நாசஞ்செய்கிற உன் னைக் கொல்ல இங்கே வந்தோம். ராஜாவே! இவ்வுலகத்தில்

---

1 சத்தியம் சொல்வது.

க்ஷத்திரியர்களுக்குள் வேறு ஆண்பிள்ளை யில்லை யென்று நீ நினைத்துக்கொண்டிருக்கிறாயே! அஃது உன்னுடைய பெரும் புத்திமாருட்டம். ராஜாவே! தன் குலத்தை அறிந்த உயர்ந்த மனமுள்ள எந்த க்ஷத்திரியன் யுத்தத்தினால் நேரிடுவதும் சாசுவதமானதும் ஒப்பற்றதுமான சுவர்க்கத்தை விரும்பமாட்டான்? மனிதர்களிற் சிறந்தவனே! க்ஷத்திரியர்கள் சுவர்க்கத்தைக் கருதியேதான் யுத்தங்களென்னும் யாகங்களில் தீக்ஷை செய்துகொண்டு உலகங்களை ஜயிக்கின்றனரென்பதை நீ அறி. விரிவான வேதமும் சுவர்க்கத்திற்குக் காரணம். பெரும் புகழும் சுவர்க்கத்திற்குக் காரணம். தவமும சுவர்க்கத்திற்குக் காரணம். ஆனால், யுத்தத்தில் மரணம் சுவர்க்கத்திற்குத் தவறாத காரணம். இந்த [1]யுத்த மரணந்தான் வைஜயந்த மென்னும இந்திரனுடைய அரணமனை. இதனாலுண்டான குணஙகள் நிரம்பின தேவேந்திரன அசுரர்களை வென்று எப்போதும உலகங்களைக் காப்பாற்றுகிறான். உனக்கு நேர்ந்திருப்பதுபோல் சுவர்க்கத்துக்கு மார்க்கமாய் (எங்களோடு இப்போது நேர்ந்திருக்கிற) யுத்தம் மற்ற எவனுக்கு நேரிடும? ராஜாவே! மகததேசத்துச் சேனைகள் மிகுதியாயிருப்பதனால் அச்சேனை மிகுதியையே பலமாக நினைத்துக் கர்வங்கொண்டு பிறரை அவமதிக்காதே. ஒவ்வொரு மனிதனிடத்தும் சக்தி யிராது ராஜாவே! உனக்குச் சரியானதும் உனக்கு மேற்பட்டதுமாகிய பராக்கிரம மிருக்கிறதை எதுவரையில் நீ அறியவில்லையோ அதுவரையில்தான் பராக்கிரமம உன்னுடையது. ராஜாவே! உன் பராக்கிரமம எங்களால் தாங்கக்கூடியதுதான். அதனால் உனக்குச் சொல்லுகிறேன். மகத ராஜாவே! உனக்குச் சரியானவர்களிடத்தில்மட்டும் கோபத்தையும அகங்காரத்தையும் ஒழித்துவிடு பிள்ளைகளுடனும் அமைச்சர்களுடனும சேனைகளுடனுஞ் சேர்ந்து யமலோகம் போகாதே. இவ்வுலகத்தில் தம்போத்பவன, கார்த்தவீரியன், உத்தரன், பிருகத்ரதன் என்னும இவ்வரசர்கள் தமக்கு மேற் சிறந்தவரை அவமதித்துத்தான் சேனைகளோடு அழிந்து போனவர்கள். நாங்கள் உன்னை மோசமாகக கொல்லக் கருதினவர்கள்; உண்மையில் பிராமணர்க ளல்லோம. நான் ஐம்பொறிகளுக்கும ஈசுவரனான வாசுதேவன. இவ்விரண்டு வீர புருஷர்களும் பாண்டுபுத்திரர்கள். இவர்களுக்கு மாமன மகனும் உனக்குப பகைவனுமான கிருஷ்ணனென்று என்னை அறி. மகத ராஜனே! உன்னைச் சண்டைக்கு அழைக்கிறோம். நின்று சண்டைசெய்; ராஜாக்களெல்லாரையுமாவது விடு; நீயாவது யமலோகத்திற்குச் செல்' என்று சொன்னார்.

---

1 மரணத்துக்கு அஞ்சாமல் யுத்தஞ் செய்பவன் இந்திர பதத்தையும் ஜயத்தையும் அடைவானென்பது கருத்து.

ஜராசந்தன் இதைக் கேட்டுக் கோபங்கொண்டு பேசத் தொடங்கினான். 'நான் கம்ஸனல்லேன்; பிரலம்பனல்லேன்; பாணனல்லேன்; முஷ்டிகனல்லேன்; நரகனல்லேன்; இந்த்ர தபனனல்லேன்; கேசியல்லேன்; பூதனையுமல்லேன்; காலயவனனுமல்லேன்; அவர்களல்லவோ உன்னால் யுத்தத்தில் கொல்லப்பட்டவர். நீ இடைக்குலத்திற் பிறந்தவன். உன் முன் ஜாதியை நினை. நீ நம்மிடம் பயந்தோடி நாடோடி மனிதனைப் போலப் பிறப்பிடமான மதுரையைவிட்டுக் கடல் தீவைச் சார்ந்தாயன்றோ? கிருஷ்ண! அப்படிப்பட்ட நீ, இப்போது, கார்காலம் கடந்தபிறகு மேகம் கர்ஜிப்பதுபோல் வீணாகக் கர்ஜிக்கிறாய். மாதவா! உன்னைக் கொன்று என் மருமகனும் உக்ரசேனன் புத்திரனும் சிறந்த புத்திமானுமாகிய கம்ஸன் கடனை இப்போதே தீர்க்கப்போகிறேன். உன்னையும் உனக்கு வேண்டினவர்களையும் கொல்வதற்காக உன்னுடன் யுத்தஞ் செய்ய எனக்கு நெடுநாளாக விருப்பமிருந்தது. நல்ல காலமாதலால் இந்திராதி தேவர்கள் என் ஆரம்பத்தைப் பயன்படச் செய்தனர். கோவிந்தா! இந்தப் பீமசேனனும் அர்ஜுனனுமாகிய இருவரும் அசக்தர்கள். நான் இவர்களை யுத்தத்தில் பிடித்து ஒரு சிங்கம் சிறிய மிருகங்களைக் கொல்வதுபோலக் கொல்வேன்' என்றான். அந்த ஜராசந்தன் கோபமூண்டு காஜித்தபோது அங்கிருந்த எல்லாப் பிராணிகளும் நடுங்கின. அப்போது ஸ்ரீ பகவான், 'ஜராசந்தா! ஏன் கர்ஜிக்கிறாய்? நீ சொல்வதைச் செய்கையால் நடத்து. ராஜாக்களுள் இழிவானவனே! அமைச்சர்களுடனும் புத்திரர்களுடனும் உன்னை நான் இப்போது சண்டையில் எனது கட்டளையைச் செய்பவர்களான இவ்விரு பாண்டவர்களால் கொல்லுவிக்கப் போகிறேன். நீ, எப்பாடு பட்டாலும் உயிரோடு உன் நகரத்தில் பிரவேசிக்கமாட்டாய்' என்று சொன்னார். அதைக் கேட்ட ஜராசந்தன், 'நான், ராஜாக்களில் எவரையும் ஜயிக்காமல் கொண்டு வந்திருக்கவில்லை. என்னால் ஜயிக்கப்படாத எதிரி யார்? கிருஷ்ண! க்ஷத்திரியன் பராக்கிரமத்தினால் பிறரை ஜயித்து அவர்கள் விஷயத்தில் தன் இஷ்டப்படி நடப்பதே அவனுக்கு நியாயமான விருத்தி யென்று தெரிந்தவர் சொல்லுகின்றனர். கிருஷ்ண! க்ஷத்திரியர்களின் விரதத்தை மறவாத நான் ராஜாக்களைத் தேவதைக்குப் பலியாக நிச்சயஞ்செய்து இப்போது பயத்தினால் விடுவதேது? நான் சேனையை வகுத்துக்கொண்டு எதிரி சேனையோடு யுத்தஞ் செய்வேன்; ஒருவனோடொருவனாகவும் யுத்தஞ்செய்வேன்; இருவர் அல்லது மூவரும் தனித்தனியே வந்தாலும் சேர்ந்து வந்தாலும் யுத்தஞ்செய்வேன்' என்று சொன்னான்.

ராஜாவான ஜராசந்தன் இவ்வாறு சொன்ன பிறகு, பயங்கரமான செய்கையையுடைய கிருஷ்ண பீமார்ஜுனர்களோடு யுத்தஞ்செய்யக் கருதி, உடனே தன் புத்திரனாகிய சகதேவனென்பவனுக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்யக் கட்டளையிட்டான். ஜனமேஜய ராஜாவே! அந்த ஜராசந்தன் அந்த யுத்தம் நேர்ந்தபோது மானிடலோகத்திலுள்ள மனிதரால் கௌரவிக்கப்பெற்ற ஹம்ஸன் டிம்பகன் என்னும் இரண்டு பெயர்கள் உமக்குச் சொன்னேனே, அந்தப் பெயர்களுள்ள கௌசிகன், சித்ரசேனனென்னும் இரண்டு சேனாதிபதிகளையும் நினைத்தான். ஜனமேஜய ராஜாவே! பிரபுவும் புருஷோத்தமரும் மதுவென்னும் அசுரனைச் சங்கரித்தவரும் பலராமருக்கு இளையவரும் சத்தியசந்தரும் ஞானவான்களிற் சிறந்தவருமான கிருஷ்ண பகவான் பலவான்களிற் சிறந்தவனும் புலியைப்போலப் பூமியில் பயங்கரமான பராக்கிரமமுள்ளவனுமாகிய ஜராசந்த ராஜன் யாதவ வம்சத்தாரால் கொல்லப்படத்தகாதவனும் வேறொருவனுக்குப் பாகமாகக் குறிப்பிடப்பட்டவனுமா யிருப்பதை நினைத்து, பிரம்மதேவரின் கட்டளையைக் கௌரவிப்பதற்காகத் தாமே அவனைக் கொல்ல யத்தனிக்கவில்லை" என்று சொன்னார்.

---

## இருபத்துமூன்றாவது அத்தியாயம்

## ஜராசந்த வத பர்வம் (தொடர்ச்சி)

**(கிருஷ்ணனுக்கும் ஜராசந்தனுக்கும் துவேஷம் வந்த காரணத்தை ஜனமேஜயர் கேட்க, வைசம்பாயனர் சொல்லியது)**

ஜனமேஜயர், "வைசம்பாயனரே! கிருஷ்ணனும் ஜராசந்தனுமாகிய இருவருக்கும் யாது காரணம்பற்றி ஒருவருக்கொருவர் விரோதமுண்டாயிற்று? கிருஷ்ணன், ஜராசந்தனால் யுத்தத்தில் எவ்வாறு ஜயிக்கபபட்டனர்? கம்ஸன ஜராசந்தனுக்கு என்ன முறையாகிறான்? கம்ஸன் நிமித்தமாகவனறோ ஜராசந்தன் கிருஷ்ணனுக்குப் பகையாளியானான். இவற்றை யெல்லாம் எனக்குத் தெளிவாகச் சொல்லக்கடவீர்" என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லுகிறார்.

"உக்கிரசேனனுக்கு மந்திரியும் மகாபுத்திசாலியுமான வாசுதேவரென்பவர் யாதவ வமசத்திற் பிறந்தவர். கௌரவரே!

அவனுடைய புத்திரர்கள் அநேகர்களில் ஜ்யேஷ்ட புத்திரனான கம்ஸன் சிறந்த பலசாலியும் எல்லா அஸ்திரங்களும் தெரிந்தவனுமா யிருந்தான். மிக்க புகழ்பெற்றவனாகிய ஜராசந்தன் புதல்வி கம்ஸனுக்கு மனைவியானாள். புத்திசாலியான ஜராசந்தன் ராஜ்யத்தையே பரிசமாக வாங்கிக்கொண்டு அவளைக் கன்னிகா தானஞ் செய்தான்.. அந்த ஜராசந்தனுக்காக அந்தக் காலத்தில் உக்கிரசேனனுடைய மந்திரிகள் அவன் மைந்தனான கம்ஸனுக்கு மதுரையில் பட்டாபிஷேகஞ் செய்தனர். அந்தக் கம்ஸன் கொடிய பராக்கிரமமுள்ளவனா யிருந்தான். ஐசுவரியத்தின் மிகுதியினால் கர்வமடைந்தும் தேக பலத்தினால் விவேகமறறுமிருந்த அந்தக் கம்ஸன் அப்போதே தன் தந்தையை நிக்ரகித்து மந்திரிகளுடன் அந்த ராஜ்யத்தை ஆண்டான். மதியீனனாகிய அந்தக் கம்ஸன் வசுதேவரிடம் ராஜ்ய காரியத்தைக் கேட்கவுமில்லை; அவருடன் சேர்ந்து அந்த ராஜ்யத்தை நியாயமாகப் பரிபாலனஞ் செய்யவுமில்லை. ஆகிலும், அசுர ராஜாவான அந்தக் கம்ஸன், தேவகன் பெண்ணாகிய தேவகியை வசுதேவருக்குப் பாரியையாக அன்புடன் விவாகஞ் செய்வித்தான். ஜனமேஜயரே! அவளை ரதத்திலேற்றி அழைத்துக்கொண்டு போகும் போது ராஜாவான கம்ஸன், தானும் வசுதேவருடன் ரதத்திலேறினான். அப்போது, 'கம்ஸா! எந்தத் தேவகியை இப்போது விவாகஞ் செய்விதது நீ அழைத்துக்கொண்டு போகிறாயோ அவளுடைய எட்டாவது புத்திரன் உனக்கு யமனாகப போகிறான்' என்று ஒரு தேவதூதனுடைய வாக்கு ஆகாயத்தி லுண்டாயிற்று. அந்த வாக்கை வசுதேவரும் கேட்டார். ராஜாவான கமஸன் உடனே தேரை விட்டிறங்கிக் கூரான கத்தியை உருவிக்கொண்டு தேவகியின் தலையைத் துணிக்க யத்தனித்தான். ஜனமேஜயரே! அப்போது சிறந்த புத்தியுள்ள அந்த வசுதேவர் சிரித்துக்கொண்டு, கோபத்தினால் பரவசங்கொண்ட கம்ஸனை நயமாகச் சமாதானப்படுத்தத் தொடங்கினார். 'ராஜாவே! பெண்ணைக் கொல்லத்தகாதென்று தர்ம சாஸ்திரங்களெல்லாம் கூறுகின்றன. குற்றமற்றவளும் மெல்லியவளுமான இந்தப் பெண்ணை நிஷ்காரணமாகக் கொல்லுகிறாய். ராஜாவே! இவளிடத்தில் உனக்குண்டான பயத்தை நிவர்த்திசெய்துகொள்ளவும் இவளையும் உன் தர்மத்தையும் காப்பாற்றவும் கூடும். ராஜாவே! அக்காலத்தில் இவளுடைய எட்டாவது கர்ப்பத்தைப் பிரசவமானவுடன் நீ அழித்துவிடலாம். அப்படிச் செய்வதனால் உனக்கு நேரும் ஆபத்தை விலக்கினதாகும்' என்றார். ஜனமேஜயரே! இவ்வாறு வசுதேவரால் உரைக்கப்பட்ட அந்தச் சூர சேனபதியான கமஸன் அப்போது அவர் சொல்லை அங்கீகரித்

தான். பிறகு, தேவகிக்கு சூரியனுக்கொப்பான ஒளியுள்ள குமாரர்கள் பிறந்தார்கள். கம்ஸன் அந்தக் குமாரர்களை யெல்லாம் பிறக்கப் பிறக்கக் கொன்றான். பிறகு, [1] பலராமர் அந்தத் தேவகிக்கு ஏழாவது கர்ப்பமாக உண்டானார். ராஜாவே! ராஜாவான யமன் தனது மாயையினால் அந்தத் தேவகியின் ஒப்பற்ற கர்ப்பத்தை [2] இழுத்து ரோகிணியின் வயிற்றில் வைத்தான். செவ்வையாக இழுக்கப்பட்டதனால் அவர் சங்கர்ஷணரென்றும் பலத்திற் சிறந்தவராதலால் பலதேவரென்றும் சொல்லப்படுகிறார். பிறகு, கண்ணன் அவளுடைய எட்டாவது கர்ப்பமாக உண்டானார். ராஜாவான கம்ஸன் அந்தக் கர்ப்பத்தின் விஷயத்தில் அதிகமாகக் காவலைச் செய்தான். பிரசவ காலத்தில், வசுதேவரைத் தவறிப்போகாமல் காவல் காப்பதற்காகக் கொடிய வேலைசெய்பவனாகிய உக்கிரனென்னும் மந்திரி கம்ஸனால் நியமிக்கப்பட்டான். பிறந்த மாத்திரத்தில் கண்ணனை அவர் பிதாவான வசுதேவர் எடுத்துக்கொண்டுபோய் ஒரு யாதவனுக்குக் கொடுத்துவிட்டு, அவன் பெண்ணை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்தார். ராஜாவான கம்ஸன் தேவதூதன் சொன்ன சொல்லைப் பொறாமலிருந்ததனால், வசுதேவர் மகாத்மாவான கிருஷ்ணனை இடைச்சேரியிற் கொடுத்துவிட்டார். கிருஷ்ணனும் நீருக்குள் தாமரைபோலவும் கட்டைக்குள் தீப்போலவும் கம்ஸனால் அறியப்படாமல் ஆயர்களிடம் ஒளிந்துவந்தார். சிறந்த கைகளையுடையவனும் பராக்கிரமத்தினாலும் பலத்தினாலும் விருத்தியடைகிறவனுமான கம்ஸன் இடையர்களெல்லோரையும் பிடித்தான். அவனால் பிடிக்கப்பட்ட கோபாலர்களில் கம்ஸன் பயத்தினால் சிலரும், கண்ணன்மேல் விருப்பத்தினால் மற்றவரும் கூட்டங் கூட்டமாகத் தாமரைக் கண்ணனாகிய கண்ணனைச் சூழ்ந்து கொண்டனர். ஜனமேஜய ராஜாவே! உக்கிரசேனனுக்கு அன்புள்ளவரும் மகா பலசாலியுமான அந்த வாசுதேவர், பலராமரைச் சகாயமாக அடைந்து போஜராஜாவான கம்ஸனையும் அவன் சகோதரர்களையும் யுத்தத்தில் கொன்று வெற்றியடைந்து, அந்த ராஜ்யத்தில் உக்கிரசேனனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்தார். ராஜாவே! கண்ணனால் யுத்தத்தில் கம்ஸன் கொல்லப்பட்டதைக் கேட்டவுடன் ஜராசந்தன் கம்ஸன் மகனைச் சூரசேன ராஜ்யத்திற்கு [3] அதிபதியாகச் செய்தான்.

---

1 இந்த இடத்தில் உத்தரதேச பாடம் கொள்ளப்பட்டது; கிருஷ்ணாசாரியர் பதிப்பின்படி 'மிகச் சிறந்தவரான பலராமர்' என்பது பொருள்.

2 பகவான் தமது யோக மாயையினால் இழுத்து ரோகிணியின் கர்ப்பத்தில் வைத்தாரென்று ஸ்ரீ பாகவதத்திலும், ஹரிவம்சத்திலும் சொல்லப்படுகிறது.

3 இந்தக் கதை பாகவதம், ஹரிவம்சங்களில் இல்லை.

ஜனமேஜயரே! அந்த ஜராசந்தன் பெரிய சேனையைக் கிளப்பிக் கிருஷ்ணனைத் தடுத்துத் தன் பெண்ணின் மகனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்தான். சிறந்த பராக்கிரமமுள்ள அந்த ஜராசந்தன் பெருஞ் சேனையைச் சேர்த்துக்கொண்டு அங்கே உக்கிரசேனனையும் யாதவர்களையும் பிடித்தான். கௌரவரே! இதுபற்றித்தான் ஜராசந்தனுக்குக் கிருஷ்ணன்மேல் விரோத முண்டாயிற்று. அரசர்க்கரசே! செல்வம் நிரம்பிய அந்த ஜராசந்தன் தான் பிரார்த்தித்துக்கொண்ட விஷயத்துக்காக, பட்டாபிஷேகஞ் செய்துகொண்ட அரசர்களைப் பலிகொடுத்து, தேவசிரேஷ்டரும் தோலாடை யுடுத்தவரும் முக்கண்ணருமாகிய மகாதேவரை ஆராதிப்பதற்காகத் தன்னால் ஜயிக்கப்பட்ட அரசர்களைச் சிறையில் வைத்தான். பரத சிரேஷ்டரே! இவையெல்லாம் நடந்தவாறு உமக்குச் சொல்லப்பட்டன. அந்த ஜராசந்த ராஜா பீமசேனனால் எவ்வாறு கொல்லப்பட்டானென்பதைக் கேளும்.

---

## இருபத்துநான்காவது அத்தியாயம்

## ஜராசந்த வத பர்வம் (தொடர்ச்சி)

### (பீமனுக்கும் ஜராசந்தனுக்கும் நடந்த கைச்சண்டையில் ஜராசந்தன் சோர்ந்தது)

பிறகு, ஐம்புலன்களின் அறிவுக்கும் எட்டாதவரும் யது வமிசத்தில் அவதரித்தவரும் சிறந்த வாக்குள்ளவருமாகிய கண்ணபிரான், யுத்தஞ்செய்ய மனத்தில் நிச்சயஞ் செய்து கொண்ட அந்த ஜராசந்தனைப் பார்த்து, 'ஓ! ராஜாவே! எங்கள் மூவரில் எந்த ஒருவனோடு யுத்தஞ்செய்ய உன் மனத்தில் விருப்பமிருக்கிறது? எவன் யுத்தத்திற்குச் சித்தமாயிருக்கலாம்?' என்று கேட்டார். இவ்வாறு அவர் சொன்னபின் சிறந்த பராக்கிரமமுள்ளவனும் மகத தேசாதிபதியுமான ஜராசந்த ராஜன் கிருஷ்ணனைக் கோபாலனென்றும் அர்ஜுனனைச் சிறுவனென்றும் நினைத்து அவ்விருவரையும் விட்டுவிட்டுப் பீமசேனன் உயர்ந்த கதாயுதத்தைத் தரித்திருப்பதையும் அவன் தேக பலத்தையும் கேட்டிருந்ததனால் சந்தோஷமடைந்து அவனுடன் யுத்தத்தை வேண்டினான். புரோகிதர் கோரோசனை, பூமாலை முதலான மங்களத் திரவியங்களையும் களைப்பைத் தீர்க்கின்றவையும் மூர்ச்சையைத் தெளிவிக்கின்றவையுமான சிறந்த ஔஷதங்களையும் எடுத்துக்கொண்டு, யுத்தஞ்செய்யக் கருதின ஜராசந்தனிடம் வந்தார். புகழ்பெற்ற அந்தப் பிராம்மணரால்

மங்கள காரியங்கள் செய்யப்பெற்ற ஜராசந்த ராஜன் க்ஷத்திரிய தர்மத்தை நினைத்து யுத்தஸன்னகம் செய்தான். அந்த ஜராசந்தன் கிரீடத்தைக் கழற்றித் தலைமயிரை வாரிக்கொண்டு கரை புரளும் கடல்போலெழுந்தான். பயங்கரமான பராக்கிரமமுள்ளவனும் சிறந்த புத்தியுள்ளவனுமான ஜராசந்தன், பீமனை நோக்கி, 'பீமா! உன்னுடன்கூட யுத்தஞ்செய்வேன். மேலானவனிடத்தில் தோற்பதும் சிலாக்கியம்' என்று சொன்னான். பகைவரை யடக்கும் சிறந்த பராக்கிரமசாலியான ஜராசந்தன் இவ்வாறு சொல்லிப் பலாசுரன் இந்திரனை யெதிர்த்ததுபோலப் பீமசேனனை எதிர்த்தான். அப்போது பலவானான பீமசேனன் கிருஷ்ணனுடன் கலந்து ஆலோசனை செய்து, அவரால் மங்கள காரியங்கள் செய்யப்பெற்று, ஜராசந்தனோடு யுத்தஞ்செய்யச் சேர்ந்தான். அதன்பிறகு, புருஷ சிரேஷ்டர்களாகிய அவ்விரண்டு வீரர்களும் மிகுந்த உற்சாகத்துடன் ஒருவரையொருவர் ஜயிக்கக் கருதிக் கைகளையே ஆயுதங்களாகக்கொண்டு யுத்தஞ்செய்ய ஆரம்பித்தனர். அப்போது ஒருவர்க்கொருவர் முதலில் கைபிடித்துப் பிறகு பாத வந்தனஞ்செய்து தோளிற் கட்டின கச்சை அசையும்படி அடிக்கைகளினால் விலாப்புறங்களில் தட்டிக்கொண்டனர். ஜனமேஜயரே! இரு கைகளாலும பலமுறை தோள் தட்டி ஒருவரையொருவர் இடித்து அங்கத்தினால் அங்கத்தைக் கட்டி மறுபடியும் தோள் தட்டிச் [1] சித்ரஹஸ்தங்கள் முதலியவற்றைச் செய்து ஒருவர்க்கொருவர் கச்சைகளுக்குள் கைகளை நுழைத்தனர். கழுத்திலும் கன்னத்திலும் நெருப்புப் பொறி பறிக்க அடிப்பதனால் இடி முழக்கத்தை உண்டாக்கினர். கயிற்றினாற் கட்டுவதுபோலக் கைகளினால் கட்டுவதாகிய பாகு பாசம் முதலிய கட்டுக்களைக் கட்டிக் கால்களினால் [2] தலையில் உதைத்து மார்பில் கையாலறைந்து இரு கரங்களையும் கோத்துத் தலையில் அறைவதாகிய பூர்ணகும்பமென்னும் அடியையும் இருவரும் செய்தனர். கையினால் கையை நெருக்கி யானைகள்போலவும் மேகங்கள் போலவும் கர்ஜித்துக்கொண்டு, கைகளையே ஆயுதங்களாகவைத்துக்கொண்ட இருவரும் கையறை விழும்பொழுது சிங்கங்களைப்போலக் கோபித்துப் பார்த்து ஒருவரையொருவர் இழுத்திழுத்து யுத்தஞ்செய்தனர். அவ்விருவரும் உடம்பினால் உடம்பைக் கசக்கியும் கைகளோடு கைகளைப் பின்னியும் வயிற்றிலும் இடுப்பிலும் விலாப்புறங்களிலும் ஒருவரையொருவர் பிடித்தெறிந்தனர். நன்றாகப் பயின்ற அவ்விருவரும் உடம்பைச்

---

1 மிகுந்த பயிற்சியினால் வெகு விரைவாகக் கைகளை மேலும் கீழும் குறுக்கிலும் நீட்டல் மடக்கல் முதலியவை.

2 நரம்புகளை உதைத்து என்பது பழைய உரை.

சுருக்கிக்கொண்டு தமது வயிற்றிற்குக் கீழேயும் கழுத்திலேயும் மார்பிலேயும் கையைப போட்டுத் தள்ளினர். உலகத்திலுள்ள சிறந்த கைச்சண்டைகள் எவலாவற்றிற்கும் மேலாக [1]ப்ருஷ்ட பங்கத்தையும் செய்தனர். இரண்டு கைகளினாலுண்டாகும் [2]சம பூர்ண மூர்ச்சையையும், பூர்ணகும்பம், [3]திருணபீடம், [4]பூர்ண யோகம், [5]முஷ்டிகம் முதலான யுத்தங்களையும தங்கள் சாமர்த்தியத்தை ஒருவர்க்கொருவர் காண்பிப்பதற்காக நினைத்தபடியெல்லாஞ் செய்தனர். ராஜசிரேஷ்டரே! அபபோது அந்நகரத்தில் வசிக்கும் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்க ளனைவரும் பெண் பிள்ளைகள் கிழவர்களுள்பட ஆயிரக்கணக்காக அவர்களுடைய யுத்தத்தைக் காண்பதற்கு வந்துசேர்ந்தனர். அந்த ஜனக்கூட்டங்கள் நிரம்பியிருந்ததனால் அவ்விடம் நெருக்கமாயிருந்தது. அப்போது கைகளின அடியினாலும் பிடித்தலாலும் விடுத்தலாலும் மலையும் இடியும் சந்தித்தாறபோல அவ்விருவரும சந்தித்தனர். பலவான்களிற் சிறந்தவரான அவ்விருவரும், தம் தம் பலத்தினால் மிக்க உற்சாகமுளளவர்களாய் ஒருவரை யொருவர் ஜயிக்கக் கருதி ஒவ்வொருவரும் மற்றொருவர் இளைக்கும் சமயத்தை எதிர்பார்த்துககொண்டு, தலைகளினால் ஆடுகளும் விருட்சங்களினால் ராக்ஷஸர்களும் கால்களினால் உயர்ந்த குதிரைகளும் மூக்குகளினால் தித்திரிப் பறவைகளுமபோல (கைகளால்) சண்டைசெய்தனர். அரசரே! அந்தப் போர்க்களத்தில் அவ்விரண்டு பலசாலிகளுடைய அந்தப் பயங்கரமான யுத்தம், விருத்திராசுரனுக்கும் இந்திரனுக்கும் நடந்த யுத்தமபோல, ஜனங்கள் விலகியோடும்படி நடந்தது. தூரத்தில் தள்ளியும் சமீபத்தில் இழுத்தும் பின்னோடி யிழுத்தும் சுற்றி யிழுத்தும் பலவகையாக ஒருவரையொருவர் இழுத்தனர். முழங்கால்களினால் இடித்தனர். பிறகு, பெருங் கர்ஜனையினால் ஒருவரையொருவர் பயமுறுத்திப் பெரும்பாறைகள் விழுவதுபோன்ற அறைகளினால் அறைந்தனர். பிறகு, ஜராசந்தன் தனது முஷ்டியினால் பீமசேனனை மார்பிலடித்தான். அந்தப் பீமசேனனும் ஜராசந்தனை மார்பிலேயே அடித்தான். அகன்ற மார்பும் நீண்ட கைகளுமுடையவர்களும் கைச்

1 முதுகைத் தரையிற் படும்படி செய்வதனால் உண்டாகும் அவமானம் என்பது.

2 வயிறு முதலான இடங்களில் கசக்குவதனால் உண்டாகும் மூர்ச்சை என்பது பழைய உரை.

3 நார் முதலியவற்றினால் கயிறு திரிப்பதுபோல ஒருவரோடொருவர் கைகால்களைப் பின்னிக்கொள்வது.

4 தலை முதல் கால் வரையில் முழு உடம்பையும் சேர்த்தணைப்பது. 'அசதியிலடித்தல்' என்பது பழைய உரை.

5 ஓரிடத்தில் குத்துவதாகக் காட்டி மற்றோரிடத்தில் குத்துவது.

சண்டையில் தேர்ந்தவர்களுமாகிய அவ்விருவர்களும் இருப்புலக் கைகள் போன்ற கைகளினால் போர் செய்தனர். கார்த்திகை மாதம் முதல் தேதி ஆரம்பித்த அந்த யுத்தம் பதினைந்து தினங்கள இரவும பகலும ஆகாரமில்லாமலும் ஓய்வில்லாமலும நடந்து கொண்டிருந்தது. மகாத்மாக்களான பீம-ஜராசந்தர்களின் யுத்தம் திரயோதசி (= பதின்மூன்றாவது நாள்) வரையில் அவ்வாறே நடந்தது. சதுர்த்தசி தினம் (= பதினான்காவது நாள்) ராத்திரி ஜராசந்தன் களைப்பினால் யுத்தஞ்செய்யாமல் நின்றான். ஜனமேஜய ராஜாவே! அவ்வரசன் அவ்வாறு களைத்திருந்ததைக் கண்டு ஜனார்த்தனர் பயங்கரமான செய்கையைச் செய்த பீமசேனனைத் தூண்டுவதற்காக, 'ஓ குந்தியின் மைந்தனே! யுத்தத்தில் ஓய்ந்துபோன சத்துருவைப் பீடிப்பது எளிது; முற்றிலும் பீடிக்கப்படுவதனால் அவன் தன்னுயிரை விட்டுவிடுவான். குந்தி புத்திரனே! ஆதலால், இவ்வரசனை இப்போதே நீ பீடிக்கவேண்டும். பரத சிரேஷ்டனே! கைகளால் இவனுடன் யுத்தஞ்செய்' என்று சொன்னார். வீரர்களான பகைவர்களை அதஞ்செய்பவனாகிய அந்தப் பீமசேனன், கிருஷ்ணன் இவ்வாறு சொன்னவுடன் ஜராசந்தனுக்கு அது தருணமென்று அறிந்து அவனைக் கொல்ல எண்ணங்கொண்டான். பிறகு, பலவான்களிற் சிறந்தவனும் கௌரவர்களை மகிழ்விப்பவனுமான விருகோதரன் யாவராலும் ஜயிக்கமுடியாத ஜராசந்தனை ஜயிப்பதற்காக அவனைக் கோபத்துடன் பிடித்தான்.

---

## இருபத்தைந்தாவது அத்தியாயம்

## ஜராசந்த வத பர்வம் (தொடர்ச்சி)

**(ஜராசந்த வதமானபிறகு கிருஷ்ணன் சிறையிலிருந்த க்ஷத்திரியர்களை விடுவித்ததும், ஜராசந்த புத்திரனுக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்வித்தலும், பீமார்ஜுனர்களோடு ஜராசந்தனுடைய ரதத்திலேறி இந்திரப்பிரஸ்தம் சென்று யுதிஷ்டிரருக்கு ஜயத்தைச் சொன்னதும், பிறகு பாண்டவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு துவாரகைக்குச் சென்றதும்)**

அதன் பிறகு பீமசேனன், ஜராசந்தனை வதஞ் செய்வதற்காகச் சிலாக்கியமான எண்ணத்தை யடைந்து கிருஷ்ணனைப் பார்த்து, 'யாதவ சிரேஷ்டரே! கிருஷ்ணா! உமக்கு வேண்டினவரைப் பெரும்பாலும் அழித்தவனாகிய இந்தப் பாவியின் விஷயத்

தில் யான் காலம் போக்கத்தகாது' என்று சொன்னான். இவ்வாறு அவனால் சொல்லப்பட்ட புருஷ சிரேஷ்டரான கண்ணபிரான் ஜராசந்த வதஞ் செய்ய விருகோதரனைத் துரிதப்படுத்தி மறு மொழி கூறலானார். 'பீமா! உன்னிடத்திலிருக்கும் தெய்வீக சக்தியையும் வாயு பகவானுடைய பலத்தையும் இப்பொழுது ஜராசந்தனிடத்தில் காண்பி. மகாரதனும் கெட்ட புத்தியுள்ள வனுமான இந்த ஜராசந்தன் உன்னாலேதான் கொல்லப்படத் தக்கவனென்பதைக் கோமந்தமென்னும் சிறந்த பர்வதத்தில் காற்று வழியாக வந்த ஆகாயவாணியினால் கேட்டேன். அதனால் இவன் (அப்போது) விடப்பட்டான். மாகதனைத் தவிர மற்றெ வன் பலதேவருடைய பலத்தில் அகப்பட்டுப் பிழைப்பான்? மகாபலசாலியே! ஆதலால், உன்னைவிட வேறு யாவராலும் இவனுக்கு மரணம் விதிக்கப்படவில்லை. சிறந்த கைகளையுடைய வனே! வாயு பகவானைத் தியானித்து இம்மகதராஜனைக் கொல்' என்று சொன்னார். மகா பலசாலியும் எதிரிகளை ஜயிப்பவனு மாகிய பீமன், கிருஷ்ணனால் இவ்வாறு சொல்லப்பட்டவுடன், கிருஷ்ணனை நமஸ்கரித்து அர்ஜுனனைத் தழுவி வாயு பகவானை மனத்தில் தியானித்து வாயு பகவானுடைய பலத்தினால் பூரிக்சப் பெற்றவனாகிச் சிறந்த பலசாலியான ஜராசந்தனைத் தூக்கிச் சுழற்றினான். பரத சிரேஷ்டரான ஜனமேஜயரே! அவனை நூறு சுற்றுச் சுற்றி முழங்கால்களால் முதுகை யழுத்தி ஒடித்தான்; அவனை அரக்கிக் கர்ஜனை செய்தான். மகா பலசாலியான பீமன் கையினால் அவன் காலைப் பிடித்து இரண்டாகக் கிழித்தான். ஜராசந்தன் கசக்கப்படுவதனாலும் பீமன் கர்ஜிப்பதனாலும் எல்லாப் பிராணிகளும் பயங்கரமான பெரிய கோஷத்தைச் செய் தன. பீமசேனனும் ஜராசந்தனுமாகிய இருவருடைய கூச்சலி னாலும் மகத தேசத்தவ ரனைவரும் நடுங்கினர். ஸ்திரீகளின் கர்ப்பங்கள் கரைந்து விழுந்தன. பீமசேனன் கர்ஜனையைக் கேட்ட மாகதர்கள், 'இமயமலை வெடிக்கிறதா? அல்லது பூமி பிளக்கிறதா?' என்று நினைத்தனர். அதன் பிறகு, கிருஷ்ண பகவான் ஜராசந்தனைக் கொல்வதற்காகப் பீமனை நோக்கி, கை யினால் கோரையை யெடுத்து ஜராசந்த வதத்தைக் குறிப்பித்து அதை இரண்டாகக் கிழித்தார். உடனே, பீமசேனன் தெரிந்து கொண்டு ஜராசந்தன் காலைப்பிடித்துத் தூக்கி அவன் தேகத்தை இரண்டாகக் கிழித்துப் போட்டுக் கர்ஜித்தான். பராக்கிரமசாலி யான ஜராசந்தன் மறுபடியும் தன் இரண்டு பாகங்களும் ஒன்று சேர்ந்து பீமனுடன் கைச்சண்டை செய்தான். எல்லாப பிராணி களுக்கும் பயத்தை யுண்டுபண்ணி மயிர்சிலிர்க்கச் செய்வதும எல்லா உலகங்களையும அழிப்பதுமான கடுஞ்சண்டை அவ்விரு

வருக்கும் நடந்தது. ஸ்ரீய:பதியான கண்ணபிரான் ஜராசந்த வதத்தின் உபாயத்தைக் குறிப்பிடுவதற்காகத் திரும்பவும் பீமசேனனுக்கு ஒரு கோரையை இரண்டாகக் கிழித்துக் கால் மாற்றிப் போட்டார். பீமசேனன் உடனே அறிந்துகொண்டு ஜராசந்தனை இரண்டாகக் கிழித்துக் கால் மாற்றிப் போட்டு விட்டுக் கர்ஜித்தான். ராஜாவே! அப்போது ஜராசந்தன் மாமிசமும் எலும்பும் கொழுப்பும் தோலும் உலர்ந்து மூளை வெளிப்பட்டுப் பிணமாகி உண்டைபோலானான். சத்துரு வதஞ்செய்த வீரர்கள் அந்த இரவில் உயிர்நீங்கித் தூங்கினவன்போலிருந்த ஜராசந்தனை அரண்மனை வாயிலிற் போட்டுவிட்டு வெளிப்பட்டனர். கிருஷ்ணன், கொடி கட்டின ஜராசந்தனுடைய தேரைப் பூட்டிப் பீமார்ஜுனர்களை அதில் ஏற்றிக்கொண்டு தமது குலத்தோரான க்ஷத்திரியர்களை விடுவித்தார். பெரும் பயத்தினின்றும் விடுவிக்கப்பட்ட அவ்வரசர்கள் ரத்தினங்களைப் பெறத்தக்கவரான கண்ணனை யடைந்து, ரத்தினங்களைக் காணிக்கையாக அளித்து, அவரைத் தங்களுக்கு ராஜாவாகச் செய்தனர். இரண்டு கைகளாலும் யுத்தஞ் செய்பவனும் பிறருடைய கைப் பயிற்சியைத் தடுப்பவனும் அழகிய உருவமுள்ளவனும் மற்ற அரசர்கள் எவராலும் வெல்ல முடியாதவனுமான பெயர்பெற்ற அர்ஜுனன், ஆயுதங்கள் செலவில்லாமலும் புண்படாமலும் சத்துருவை ஜயித்துக் கிருஷ்ணனைச் சாரதியாக அடைந்து தன் சகோதரனான பீமனுடன்கூட அந்தத் திவ்ய ரதத்திலேறி ராஜாக்களுடன் கிரிவ்ரஜத்திலிருந்து புறப்பட்டான். பீமார்ஜுனர்களென்னும் யுத்தவீரர்களால் ஏறப்பெற்றதும் கிருஷ்ணன் சாரத்தியம் செய்யப்பெற்றதுமான அந்தச் சிறந்த ரதம் எந்த வில்லாளிகளும் வெல்லக்கூடாததாக விளங்கிற்று. தாரகாமயமெனனும் தேவாசுர யுத்தத்தில் இந்திரனும் விஷ்ணுவும் ஏறிச் சஞ்சரித்ததாகிய அந்த ஜராசந்தனுடைய ரதத்தில் கிருஷ்ணன் ஏறிச் சென்றார். காற்றுக்கு ஒப்பான வேகமுள்ள குதிரைகளை நடத்தும் புருஷோத்தமரான கண்ணபிரானைக் கண்ட ஜராசந்தனுடைய நகரத்து ஜனங்கள், 'இவ்வாறு கிருஷ்ணனால் நடத்தப்பட்டவர்களும் பிறர் செயற்கரிய காரியத்தைச் செய்தவர்களுமாகிய இந்தத் தேரிலிருக்கும் இந்த மகாவீரர்களிருவரையும் கண்ணெடுத்துப் பார்க்கத்தக்கவன் உலகத்தில் யார்?' என்று பேசிக்கொண்டனர்.

புடம்போட்ட பொன்னினால் பிரகாசிப்பதும் சதங்கைகளின் சரங்களை மாலைகளாக அணிந்திருப்பதும் மேக முழக்கம்போன்ற சப்தமுள்ளதும் பகைவரைக் கொன்று ஜயித்துவருவதுமான

எந்த ரதத்திலேறித் தேவேந்திரன் (தாரகாமய யுத்தத்தில்) எண்ணூற்றுப் பத்து அசுரர்களைக் கொன்றானோ அந்த ரதத்தை யடைந்து அந்தப் புருஷசிரேஷ்டர்கள் மிகவும் சந்தோஷமடைந்தனர். சகோதரர்களான பீமார்ஜுனர்களுடன்கூட ரதத்திலிருந்த கண்ணனைக் கண்டு மகத தேசத்தவர் வியப்புற்றவராயினர். ஜனமேஜயரே! தெய்வக் குதிரைகள் பூட்டப்பட்டு வாயுவேகமாகச் செல்லும் அந்த ரதம் கிருஷ்ணனால் ஏறப்பெற்று மிகவும் சோபித்தது. அந்தச் சிறந்த தேரில் தேவர்களாற் செய்யப்பட்டதும் எங்கும் தடையில்லாததும் வானவிற்போலப் பிரகாசிப்பதுமான அழகுள்ள கொடியானது ஒரு யோஜனை தூரம் வரையில் காணப்பட்டது. பிறகு, கிருஷ்ணன் கருடனை நினைக்க, கருடனும் அந்த நிமிஷத்திலேயே வந்தார். அந்தக் கருடனால் அக்கொடியானது உயர்ந்த பெரிய விருட்சம்போலிருந்தது. அந்தச் சிறந்த ரதத்தின் கொடியில் வாய்திறந்து பேரிரைச்சலிட்டுக்கொண்டிருக்கும் பூதங்களுடன் கூட நாகங்களைப் பட்சிப்பவரான கருடனும் இருந்தார். அவர் நடுப்பகலில் ஆயிரங் கிரணங்களும் சேர்ந்த ஆதித்தன்போலத் தம்மொளியினால் எந்தப் பிராணிகளும் கண்ணெடுத்துப் பார்க்கக் கூடாதவராகப் பிரகாசித்தார். அரசரே! அந்த உயர்ந்த தெய்வக் கொடியானது மரங்களில் தடைப்படாததாகவும் ஆயுதங்களால் அடிக்கப்படாததாகவும் இவ்வுலகத்தில் மானிடர்களால் காணப்பட்டது புருஷோத்தமராகிய கண்ணபிரான், பீமார்ஜுனர்களுடன்கூட மேகமுழக்கமபோன்ற சப்தமுள்ள அந்தத் திவ்ய ரதத்திலேறிப் புறப்பட்டார். அந்த ரதத்தை இந்திரனிடத்திலிருந்து வசுவென்னும் அரசனும், வசுவினிடமிருந்து பிருகத்ரதனும், பிருகத்ரதனிடமிருந்து அவன் புதல்வனான ஜராசந்தனும் வரிசையாக அடைந்தனர். சிறந்த கைகளுள்ளவரும் பெரும புகழ்பெற்றவருமாகிய தாமரைக் கண்ணர் அந்தக் கிரிவ்ரஜமென்னும ஊரிலிருந்து வெளியிற் சென்று மேடுபள்ளமில்லாத சமனான இடத்தில் நின்றார். வேந்தரே! அப்போது அவ்விடத்தில் அந்த நகரத்தோரனைவரும் பிராம்மணர்களை முன்னிட்டுக்கொண்டு சாஸ்திரத்திற் சொன்னபடி பூஜைக்குரிய காரியங்களைச் செய்து கிருஷ்ணனை எதிர்கொண்டழைத்தனர். சிறையிலிருந்து விடுபட்ட அரசர்களும் கிருஷ்ணனைப் பூஜித்துத் துதித்துப பினவருமாறு பேசலுற்றார்கள் :

'சிறந்த கைகளையுடையவரே! துயரமென்னும் சேற்றோடு கூடிய ஜராசந்தனென்னும் பயங்கரமான மடுவில் முழுகியிருக்கும் அரசர்களை இப்போது கைதூக்கிவிட்டுத் தருமத்தைக்

காப்பாற்றினது, பீமனையும் அர்ஜுனனையும் உதவியாகக் கொண்டவரும் தேவகி புத்திரருமான உமக்கு அரிதனறு. யாதவராக அவதரித்த விஷ்ணுவே! மிக்க கொடியதான மலைக் கோட்டையில் துயரப்பட்டிருந்தவர்களை விடுவித்ததனால் எங்கும் விளங்கும் புகழை அடைந்தீர்; சந்தோஷம். புருஷோத்தமரே! நாங்கள் என்ன செய்யவேண்டும்? வணங்கி நிற்கும் எங்களுக்குக் கட்டளையிடும்; நீர் கட்டளையிடுவது செயற்கரியதாயினும் அரசர்கள் அதைச் செய்தானதுபோலவே நினையும்' என்றனர். சிறந்த மனமுள்ள கண்ணபிரான் அவர்களைத் தைரியப்படுத்தி, 'யுதிஷ்டிரர் ராஜசூய யாகஞ்செய்ய விரும்புகிறார். அரசர்க்கரசராயிருக்க விரும்பித் தர்மத்தில் பிரவிருத்தித்த யுதிஷ்டிரரை அறிந்து நீங்களெல்லோரும் அவருக்கு உதவிசெய்யவேண்டும்' என்று சொன்னார். அரசர்களிற் சிறந்த ஜனமேஜயரே! உடனே அவ்வரசர்களெல்லாரும் கிருஷ்ணனுடைய அந்தச் சொல்லை மிக்க அன்புள்ள மனத்துடன் ஏற்றுக்கொண்டு, 'அப்படியே செய்கிறோம்' என்று கூறினர். அவ்வரசர்கள் கிருஷ்ணனுக்கும் இரத்தினங்களைச் சேர்ப்பித்தனர். கண்ணபிரான் பெற விருப்பமில்லாமலிருந்தும் அவர்களிடமிருந்த தயையினால் அவற்றைப் பெற்றுக்கொண்டார். ஜராசந்தன் புத்திரனான பெரிய மனமுள்ள சகதேவனென்பவன பிரஜைகளோடும் மந்திரிகளோடுங் கூடத் தன் புரோகிதரை முன்னிட்டுக்கொண்டு வெளிப்பட்டு வந்தான். அந்தச் சகதேவன் அநேக ரத்தினங்களை முன்னே வைத்து மிக்க வணக்கத்தோடு நமஸ்காரஞ்செய்து புருஷோத்தமராகிய வாசுதேவரை அடைந்தான். புருஷோத்தமரான கிருஷ்ணன் அப்போது பயத்தினால் வருந்தின அவனுக்கு அபயமளித்து அதன் பிறகு அவனது விலைபெற்ற இரத்தினங்களைப் பெற்றுக்கொண்டார். அந்தச் சகதேவன், 'சிறந்த கைகளையுடைய புருஷோத்தமரான ஜனார்த்தனரே! மகாபுருஷரே! என் பிதா செய்த அபராதத்தை நீர் மனத்தில் வைக்கத்தகாது. கோவிந்தா! உம்மைச் சரணமடைந்திருக்கிறேன். பிரபுவே! என் மீது அனுக்ரகஞ் செய்யக்கடவீர். தேவகி புத்திரரே! உம்மிடத்திலும் பீமார்ஜுனர்களிடத்திலும் அனுமதி பெற்றுக்கொண்டு என் பிதாவின் தேக சம்ஸ்காரஞ்செய்ய விரும்புகிறேன். இனி நான் அச்சமற்று விரும்பினபடி சுகமாகச் சஞ்சரிக்கக் கடவேன்' என்று சொன்னான். ஐயா! இவ்வாறு விண்ணப்பஞ் செய்துகொண்ட சகதேவன்மேல் அன்புகூர்ந்த கண்ணபிரானும் மகாரதர்களான பீமார்ஜுனர்களும், 'அரசனே! உன் பிதாவுக் சம்ஸ்காரஞ் செய்யலாம்' என்று கூறினர். ஜனமேஜயரே!

கண்ணனும் பீமார்ஜுனர்களும் அவ்வாறு சொல்லக் கேட்டு, மகத தேசத்தரசனுகிய அந்தச் சகதேவன் மந்திரிகளுடன்கூட விரைவாக நகரத்துக்குள் சென்று, சந்தனக்கட்டைகள், காலேயம், சரளம், காரகில் முதலிய கட்டைகளினுல் சிதைசெய்து, பலவகைச் சுகந்த தைலங்களையும் பெரு நெய்த்தாரைகளையும் பொழிந்து நாற்புறங்களிலும் மலர்களை இறைத்து ஜராசந்தனைத் தகனஞ் செய்தான். பிறகு, சகதேவன் சுவர்க்கத்துக்குச் சென்ற தன் பிதாவை உத்தேசித்துத் தம்பிமார்களுடன் ஜல தர்ப்பணஞ் செய்தான். அந்தச் சகதேவன், கண்ணனும் பெரும் பாக்கியம் பெற்ற பீமார்ஜுனர்களும் இருக்குமிடத்திற்குப் புறப்பட்டு வந்து கண்ணபிரானை வணங்கிக் கைகூப்பி, 'கோவிந்தா! மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள், எருமைகள் முதலியவைகளும், யானைகளும், குதிரைகளும், பலவகை வஸ்திரங்களும், மிகுதியான ரத்தினங்களும இதோ இருக்கின்றன. தர்மராஜாவுக்குக் கொடுக்கலாம்; அல்லது தாங்கள் எவ்வாறு நினைக்கிறீர்களோ அவ்வாறு செய்யலாம்' என்று விண்ணப்பஞ் செய்தான். புருஷோத்தமரான கிருஷ்ணன் பயத்தினுல் வருந்தின அந்தச் சகதேவனென்னும் ஜராசந்தன் புத்திரனுக்கு அபயமளித்து அவனை மகத ராஜனுகப் பட்டாபிஷேகஞ்செய்து அதன் பிறகு விலைபெற்ற இரத்தினங்களைப் பெற்றுக்கொண்டார். புத்திசாலியான அவ்வரசன் கிருஷ்ணனேடு சிநேகத்தை யடைந்து பீமார்ஜுனர்களாலும் மிக மதிக்கப்பெற்றுத் திரும்பவும் பிருகத்ரதன் நகரத்தில் பிரவேசித்தான். பீமார்ஜுனர்களோடு கூடிய கண்ணபிரான் அரசர்களனைவரையும் அவரவர் பிராயத்துக்குத் தக்கபடி மரியாதை செய்து, 'தர்மராஜாவின் அன்பை விரும்புகிற மகாத்மாக்களான நீங்கள், ராஜசூய யாகத்திற்கு வரவேண்டும்' என்று சொல்லி, அவர்களெல்லாருக்கும் கட்டளையிட்டு விடைகொடுத்தார். கிருஷ்ணனுல் இவ்வாறு சொல்லப்பெற்ற அந்த வீரர்களான அரசர்களனைவரும மகிழ்ந்து, 'அப்படியே ஆகட்டும' என்று சொல்லி, மிகுந்த உற்சாகத்தினுற் பிரகாசிப்பவர்களாகி அளவற்ற இரத்தினங்களை எடுத்துக்கொண்டு கிருஷ்ண பீமார்ஜுனர்களோடு சேர்ந்து புறப்பட்டனர். சிறந்த ஜயலக்ஷ்மியோடு கூடிய புருஷசிரேஷ்டரான கிருஷ்ணன் மிகுதியான இரத்தினங்களைப் பெற்றுக்கொண்டு பீமார்ஜுனர்களுடன் கூடப் புறப்பட்டார். அச்சுதர் பீமார்ஜுனர்களுடன் இந்திரப்பிரஸ்தத்திற்குச் சென்று தர்மராஜாவைச் சந்தித்து அன்புடன், 'அரசர்க்கரசரான தர்மராஜாவே! பலவானுன ஜராசந்தன் பீமனுல் கொல்லப்பட்டதும இந்த அரசர்கள் சிறையிலிருந்து விடு

விக்கப்பட்டதும் நற்காலம். பாரதரே! இந்தப் பீமார்ஜுனர்களிருவரும் புண்படாமல் க்ஷேமமாகத் திரும்பித் தமது நகரம் சேர்ந்ததும் நல்ல காலம்' என்று சொன்னார். பிறகு, யுதிஷ்டிரர் மகிழ்ந்து கிருஷ்ணனைத் தக்கபடி பூஜித்துப் பீமசேனனையும் அர்ஜுனனையும் தழுவிக்கொண்டார். அவ்வாறு ஜராசந்தனை அடித்துத் தம் இரு சகோதரர்களால் உண்டாக்கப்பட்ட ஜயத்தை யடைந்து தம்பிமார்களுடன் கூடித் தர்மராஜர் மகிழ்ந்தார். மகிழ்வுற்ற தர்மராஜர், ஜனார்த்தனரைப் பார்த்து, 'ஓ! புருஷசிரேஷ்டரே! பலத்தினால் கொழுத்தவனும் சிறந்த பராக்கிரமசாலியும் மகத ராஜாவுமான ஜராசந்தன் பீமசேனனால் கொல்லப்பட்டது உண்மை அடைந்ததனாலன்றோ? இனிக் கவலையற்று ராஜசூயமென்னும் சிறந்த யாகத்தை நிறைவேற்றுவேன். ஜனார்த்தனரே! உமது புத்தி பலத்தை மேற்கொண்டுதான நான் இந்த யாகத்துக்குரியவனாகிறேன். புருஷோத்தமரே! ஜராசந்தன் கோபித்து உமது கீர்த்தியைப பூமியிலிருந்து [1]குடித்துவிட்டான். ஜராசந்தனை வதஞ்செய்ததினாலேயே உமக்கு மிகுந்த சிறப்புக்கள் வந்தன' என்று சொன்னார். இவ்வாறு சம்பாஷணஞ் செய்தபின், தர்மராஜர் அந்த உயர்ந்த தேரைப பிரபுவான கிருஷ்ணனுக்குக் கொடுத்தார். இவ்வாறு தர்மராஜரால் கௌரவிக்கப்பெற்ற அந்தக் கிருஷ்ண பகவான சந்தோஷமடைந்து அவர்மேல் அன்புவைத்து அந்த ஜராசந்த ரதத்தைப பெற்றுக்கொண்டு அர்ஜுனனுடன் மகிழந்திருந்தார். தர்மராஜர் சகோதரர்களுடன்கூட அரசர்களை அவரவர் வயதுக்குத் தகக படி சந்தித்துக் கௌரவித்துப் பூஜித்து விடைகொடுத்தனுப்பினார். யுதிஷ்டிரரால் விடைகொடுக்கபபெற்ற அவ்வரசர்கள் மனமகிழ்ந்து பலவகைகளான வாகனங்களிலேறி அங்கிருந்து விரைவாகத் தம்தம் தேசங்களுக்குச் சென்றனர். ஜனமேஜயரே! பேரறிவாளருமான புருஷ சிம்மமுமான கண்ணபிரான் தமக்குப் பகைவனான ஜராசந்தனைப் பாண்டவர்களால் இவ்வாறு கொல்வித்தார். பகைவரை யடக்குகிறவராகிய கண்ணபிரான் தம் புத்தியை முன்னிட்டு ஜராசந்த வதஞ் செய்வித்த பிறகு தர்மபுத்திரர், குந்தி, திரௌபதி, சுபத்திரை, பீமசேனன, அர்ஜுனன், நகுல சகதேவர்கள் இவர்களிடம சொல்லிக்கொண்டு தௌமய முனிவரிடம் விடைபெற்றுத தமது நகரத்திற்குப் புறப்பட்டார். யுதிஷ்டிரர் முதலான பாண்டவர்களால் பின் செல்லப்பட்டு நிகரற்ற புகழ்பெற்று மிகுந்த மகிழச்சியோடு கூடிய கண்ணபிரான மனோவேகமாகச் செல்வதும்

---

1 இல்லாமற் செய்துவிட்டான்.

தர்மராஜரால் கொடுக்கப்பட்டதுமான அந்தச் சிறந்த தெய்வத் தேரிலேறித் திசைகளெல்லாம் ஒலிக்கும்படி துவாரகா நகரத்திற்குச் சென்றார். பரதசிரேஷ்டரான ஜனமேஜயரே! அப்போது யுதிஷ்டிரர் முதலான பாண்டவர்கள் சிறந்த காரியம் செய்பவரான கிருஷ்ண பகவானைப் பிரதட்சிணஞ் செய்தனர். ஜனமேஜயரே! தேவகி புத்திரரான கிருஷ்ண பகவான் மிகப் பெரிய ஜயத்தை அடைந்து அரசர்களுக்கு அபயமளித்துச் சென்றபோது அந்தச் செய்கையினால் மறுபடியும அவர் புகழ் மிகப் பெருகிற்று. அரசரே! பாண்டவர்கள் திரௌபதிக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டுபண்ணினார். தர்மராஜர் அந்தக் காலத்தில் அறமபொருளின்பங்களை யுடையதாகப் பிரஜாபரிபாலனஞ் செய்வதற்கு எது தகுந்ததோ அந்த க்ஷத்திரிய தர்மத்தைப் பற்றிப பேசினார்.

ஜராசந்த வத பர்வம் முற்றிற்று.

---

## இருபத்தாறுவது அத்தியாயம்

## திக்விஜய பர்வம்

---

**(அர்ஜுனன் பீமன் நகுல சகதேவர் முதலானவர்கள் தர்மராஜாவினிடம் விடை பெற்றுக்கொண்டு தனித்தனியே திக்விஜயத்துக்குச் சென்றார்களென்று வைசம்பாயனர் சுருக்கமாகச் சொல்லியது)**

தர்மவான்களிற் சிறந்தவரும் தர்மத்தைச் செய்ய விரும்புகிறவரும் பகைவரைத் துன்புறச் செய்கிறவருமான தர்மபுத்திரர் நாரதர் சொன்னதை நினைத்துப் பெருமூச்செறிந்தார். ஆயுதந் தரித்தவரெல்லாரிலும் சிறந்தவனும் [1]அக்னி பகவானால் சிறந்த வில்லையும் அம்புவற்றாத பெருந்தூணிகளையும் ரதத்தையும் கொடியையும் [2]சபையையும் அடைந்திருப்பவனும் இந்திர புத்திரனும் குந்தியின் புத்திரனுமாகிய அர்ஜுனன், தர்மராஜாவினுடைய குறிப்பை யறிந்து அவர் எண்ணினதை முடிக்கக் கருதி அவரிடம பேசலானான் :

'வேந்தரே! வில், அஸ்திரம், அம்புகள், பராக்கிரமம், சகாயம், பூமி, கீர்த்தி, சேனை இவை யெல்லாம் என்னால் அடையப்

---

1 இங்கு 'பார்த்த : ப்ராப்ய' என்ற உத்தரதேச பாடம் கொள்ளப்பட்டது. 'ப்ராப்தம் ப்ராப்ய' என்பதற்கு அக்கினியினால் கிடைத்த வில் முதலியவற்றை யடைந்து என்பது பொருள்.

2 அக்கினியிலிருந்து காப்பாற்றப்பட்ட மயன் செய்ததாதலால் சபையும் அக்கினி பகவானால் கிடைத்ததாகச் சொல்லப்பட்டது.

பட்டிருக்கின்றன. உம்முடைய எந்த அபீஷ்டம் சாதிக்கக்கூடாமலிருக்கிறதோ அதைச் செய்வதற்கு உபாயம் பொக்கிஷத்தை நிரப்புவதுதானென்று நான் நினைக்கிறேன். அரசர்களுக்குத் தலைமையானவரே! எல்லா அரசர்களையும் கப்பங்கொடுக்கச் செய்வேன். சிறந்த திதியிலும், சிறந்த நக்ஷத்திரத்திலும், சிறந்த லக்கினத்திலும் குபேரனால் ஆளப்பட்ட திசையை ஜயிக்கப் புறப்படுவேன்' என்றான். தனஞ்சயன் சொல்லைக் கேட்டுத் தர்மராஜர் அழகும் கம்பீரமுமான குரலுள்ள வாக்கினால் அவனுக்கு மறுமொழி கூறலானார். 'பரத சிரேஷ்டனே! யோக்கியர்களான பிராம்மணர்களைக்கொண்டு [1] ஸ்வஸ்திவாசனஞ் செய்வித்துப் பகைவர் துயருறும்படியும் அன்பர் களிக்கும்படியும் புறப்படு. பார்த்தா! உனக்கு ஜயம் நிச்சயம். நீ விரும்பின பலனை யடைவாய்' என்றார். அவர் இவ்வாறு சொன்னவுடன், அர்ஜுனன் பெரிய சைனியத்தினால் சூழப்பெற்று அக்னி பகவானால் கொடுக்கப்பட்டதும் ஆச்சரியமாகச் செல்வதுமாகிய திவ்ய ரதத்திலேறிச் சென்றான். அவ்வாறே, பீமசேனனும் புருஷசிரேஷ்டர்களான நகுல சகதேவர்களும் தர்மராஜரால் கௌரவிக்கப் பெற்றுச் சேனைகளுடன் சென்றனர். ஜனமேஜயரே! குபேரனுக்கு இஷ்டமான வடதிசையை அர்ஜுனனும், கீழ்த்திசையைப் பீமசேனனும், தென்திசையைச் சகதேவனும், மேற்றிசையை அஸ்திரங்களை அறிந்த நகுலனும் ஜயித்தனர். பிரபுவான தர்மராஜர் நண்பர்களின் கூட்டங்களினால் சூழப்பெற்றுச் சிறந்த ஐசுவரியத்தோடு காண்டவப்பிரஸ்தத்தின் நடுவில் இருந்தார்" என்றார்.

---

## இருபத்தேழாவது அத்தியாயம்

## திக்விஜய பர்வம் (தொடர்ச்சி)

**(திக்விஜயத்தைப்பற்றி விரிவாகச் சொல்லும்படி ஜனமேஜயர் கேட்க, வைசம்பாயனர் முதலில் அர்ஜுனன் வடதிசையை ஜயித்ததைச் சொல்லத் தொடங்கிப் பகதத்த ஜயம் வரையிற் சொல்லியது)**

ஜனமேஜயர், "பிராம்மணரே! திக்விஜயத்தைப்பற்றி விரிவாகச் சொல்லக்கடவீர். என் முன்னோர்களின் சிலாக்கியமான சரித்திரத்தைக் கேட்பதில் என் விருப்பந் தீரவில்லை" என்று கேட்க, வைசம்பாயனர் கூறுகின்றார்.

"தனஞ்சயனுடைய ஜயத்தை உமக்கு முதலிற் சொல்வேன். பாண்டவர்களால் ஒரே காலத்திலன்றோ இப்புவனி ஜயிக்கப்பட்

1 ஜயகரமான வேதமந்திரங்களை ஜபித்தல்.

டது. பெரிய மனமுள்ளவரும் குந்தி புத்திரரும் ராஜாவுமான யுதிஷ்டிரர் அர்த்த ராஜ்யத்தை யடைந்த பிறகு, மகாராஜா வென்னும் பெயரை யடைவதில் எண்ணங்கொண்டார். அப்போது பூமியை ஆண்டுகொண்டிருந்த க்ஷத்திரியர்கள் இவர் பூமியை ஜயிக்க இருப்பதை யறிந்து எதிர்த்துவந்தனர். அரசரே! பூமியிலுள்ள அந்த க்ஷத்திரியர்களனைவரும் அர்ஜுனனைப் பயன் படாமற் செய்வதற்காக ஒன்றுசேர்ந்து ரதகஜதுரகபதாதிகளுடன் தர்மராஜரை எதிர்த்துச் சென்றனர். சிறந்த கைகளையுடையவனும் இந்திரபுத்திரனுமான அர்ஜுனன் யுத்தஞ்செய்யக் கருதின அந்த அரசர்களைப் பெரும் போரில் தன் பராக்கிரமத்தினால் எதிர்த்தான். புஜபலத்தையுடைய அர்ஜுனனால் தோற்கச் செய்யப்பட்ட அவ்வரசர் கூட்டம் காற்றினா லடிக்கப்பட்ட மேகக்கூட்டம்போல நாற்றிசைகளிலும் பஞ்சாய்ப் பறந்தது. எதிரிகளான வீரர்களை வதஞ்செய்கிறவனான அர்ஜுனன் அந்த க்ஷத்திரியர்களை யுத்தத்தில் வென்ற பிறகு வடதிசையை வசப்படுத்தச் சென்றான். சிறந்த கைகளையுடைய அர்ஜுனன் முதலில் [1]குலிங்க தேசத்தரசனை எளிதாகவே வசப்படுத்தினான். அவனுடன் சேர்ந்தே அர்ஜுனன் சால்வ தேச நகரத்துக்குச் சென்றான். சிறந்த மனமுள்ள அந்தத் தனஞ்சயன் ஸால்வ நகரத்தைச் சேர்ந்து தனது பராக்கிரமத்தினால் சால்வ தேசத்தரசனாகிய உக்ரதனவா என்பவனை வசப்படுத்தினான். வீரனான அர்ஜுனன் துயுமத்சேன னென்னும் அந்த அரசனை ஜயித்து உடனே அவனைத் தனது படைத்தலைவனாகச் செய்துகொண்டு கடகதேசத்துக்குச் சென்றான். குந்தி புத்திரனான அர்ஜுனன் அந்தத் தேசத்தரசனாகிய சுநாபனைப் பராக்கிரமத்தினால்யுத்தத்தில் வசப்படுத்தி இரண்டாவது சேனாதிபதியாகச் செய்தான். வேந்தரே! பகைவரைப் பீடிப்பவனாகிய ஸல்யஸாசியானவன் அவனுடன் கூடவே சாகலத்வீபத்தில் பிரதிவிந்தியனென்னும் அரசனை ஜயித்தான். சாகலத்வீபத்தவர்களும் சப்தத்வீபத்தவர்களுமான அரசர்களுக்கு அர்ஜுனன் சேனைகளோடு பெரும்போர் உண்டாயிற்று. அர்ஜுனன் தர்மராஜாவினுடைய இஷ்டத்தை நிறைவேற்றுவதற்காக அவர்கள் அனைவரையும் ஜயித்து அவர்களுடன் சேர்ந்தே பிராக்ஜ்யோதிஷ மென்னும் நகரத்துக்குச் சென்றான். அரசரே! அந்த நகரத்தில் பகதத்தனென்னும் மகாராஜ னிருந்தான். மகாத்மாவான அர்ஜுனனுக்கு அவனுடன் மிகப்பெரிய போர் நேர்ந்தது. அந்த பிராக்ஜ்யோதிஷராஜன் கிராதர்களாலும் சீனர்களாலும் கடலிலுள்ள தீவுகளில் வசிக்கும்

---

1 'குளிர்ந்த தேசம்' என்பது உத்தரதேச பாடம்.

மற்றுமுள்ள அநேக யுத்தவீரர்களாலும் சூழப்பட்டிருந்தான். அவ்வரசன் எட்டு நாள் யுத்தஞ்செய்த பிறகு, யுத்தத்தில் சோர் வில்லாத தனஞ்சயனை நோக்கி நகைத்துக்கொண்டு பேசலானன். 'சிறந்த கைகளையுடைய கௌரவ புத்திரனே! தேவேந்திரனுடைய குமாரனும் யுத்தத்தில் பிரகாசிப்பவனுமாகிய உனக்கு இந்தச் சூரத்தனம் தகும். நண்பனே! நான் மகேந்திரனுக்குச் சிநேகிதன். யுத்தத்தில் இந்திரனுக்குத் தாழாதவன். ஆகிலும், யுத்தத்தில் உனக்கெதிர் நிற்க என்னால் முடியாது. பாண்டவனே! உனக்கு எந்த விருப்பத்தை நான செய்யக்கடவேன்; சொல். சிறந்த கைகளையுடைய [1] புத்திரனே! நீ, எதைச் சொல்வாயோ அதைச் செய்வேன்' என்று சொன்னான். அதற்கு அர்ஜுனன் கௌரவர்களிற் சிறந்தவரும தர்மதேவதையின் புத்திரரும தர்மந் தெரிந்தவரும சத்தியசந்தருமான யுதிஷ்டிரரென்னும் ராஜா மிகுதியாகத் தட்சிணைகள் கொடுத்துச் சாஸ்திரப்படி யாகஞ் செய்கிறார். அவர் பூமிக்கு அரசராயிருப்பதை விரும்புகிறேன். அவருக்குக் கப்பங்கொடுக்கவேண்டும். நீர் எனது பிதாவான தேவேந்திரனுக்கு சிநேகிதர்; என்னிடத்திலும் அன்புள்ளவராயிருக்கிறீர். ஆதலால், உம்மை நான் கட்டளையிடுவதில்லை. பிரீதியை முன்னிட்டுக் கொடுக்கவேண்டும்' என்று சொன்னான். பகதத்தன், 'குந்தியின் மைந்தனே! எனக்கு நீ எப்படியோ அப்படித்தான் ராஜாவான யுதிஷ்டிரரும்; நீ சொன்னதை யெல்லாம செய்வேன; உனக்கு மற்றுமென்ன செய்யக்கடவேன்?' என்றான்.

---

## இருபத்தெட்டாவது அத்தியாயம்

## திக்விஜய பர்வம் (தொடர்ச்சி)

---

### (அர்ஜுனன் வடதிசையில் சுவேத பர்வதம் வரையில் ஜயித்தது)

இவ்வாறு சொல்லப்பட்ட தனஞ்சயன், பகதத்தனைப் பார்த்து, 'நீர் இதனை அங்கீகரித்ததினாலேயே எல்லாம செய்ததாகும்' என்று மறுமொழி சொன்னான். சிறந்த கைகளையுடையவனும குந்தி புத்திரனுமான தனஞ்சயன பகதத்தனை ஜயித்த பிறகு, அங்கிருந்து குபேரனால் ஆளப்பட்ட வடதிசைக்குச் சென்றான. புருஷ சிரேஷ்டனான அர்ஜுனன் அந்தர்க்கிரி, பஹிர்க்கிரி, உபகிரி யெனனும மலைநாடுகளை ஜயித்தான். ஜனமேஜய ராஜரே! மலைநாடுகளெல்லாவற்றையும் ஜயித்து அவற்றி

---

1 சிநேகிதனுடைய புத்திரன்தல்பற்றிப 'புத்திரனே!' என்றான்.

லுள்ள அரசர்களை உட்படுத்தி நிலைநிறுத்தி மிகுதியான தனங்களைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு விருப்பமுண்டாக்கி அவர்களனைவர்களோடுஞ் சேர்ந்து சிறந்த பேரிகைகளின் முழக்கத்தினாலும் தேருருளைகளின் கோஷத்தினாலும் யானைகளின் கர்ஜனையினாலும் பூமியெல்லாம் நடுங்கச் செய்துகொண்டு [1]உலூக தேசத்தில் வசிக்கும் பிருகந்தனிடஞ் சென்றான். அப்போது பிருகந்தன் சதுரங்க தளத்தோடு தனது நகரத்திலிருந்து விரைவாகப் புறப்பட்டு அர்ஜுனனுடன் போர் செய்தான். தனஞ்சயனுக்கும் பிருகந்தனுக்கும் பெரிய யுத்தம் நடந்தது. பிருகந்தன் அர்ஜுனனுடைய பிரதாபத்தைத் தாங்கமாட்டாமற் போனான். வெல்லமுடியாத மலை அரசனான பிருகந்தன் அர்ஜுனனைத் தாங்குவது மிகக் கடினம் என்று நினைத்து ரத்தினங்களெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு அர்ஜுனனிடம் வந்தான். ஜனமேஜய ராஜாவே! அர்ஜுனன் அவனுக்கு ராஜ்யத்தை நிலைக்கச் செய்து அவனுடன் சேர்ந்து சேனாபிந்து வென்னும் அரசனை விரைவில் ராஜ்யத்தைவிட்டு விலக்கினான். அர்ஜுனன் அந்த சேனாபிந்துவின் ராஜ்யத்திலிருந்துகொண்டே மோதாபுரம், வாமதேவம், சுதாமம், சுசங்குலம், உலூக தேசத்தின் வடபாகங்கள் இவைகளிலுள்ள அரசர்களைத் தர்மராஜர் கட்டளையிடுவதாகத் தூதர்களை யனுப்பி வருவித்தான். ராஜாவே! அதன்பிறகு, கிரீடி பஞ்சகணமென்னும் தேசத்தை ஜயித்தான். பிரபுவான அர்ஜுனன சேனாபிந்துவின் நகரத்தினருகிலுள்ள தேவபரஸ்த நகரத்தை யடைந்து சதுரங்க தளத்தோடு அங்கே வாசஞ்செய்தான். புருஷசிரேஷ்டரே! சிறந்த சக்திமானான அர்ஜுனன் அவ்வரசர்களனைவராலும் சூழப்பெற்றுப் பூரு வம்சத்தவனாகிய விஷ்வகசுவ னென்னும் அரசனை எதிர்த்தான். அரசரே! சூரர்களும் மகாரதர்களுமான மலையரசர்களைப் போரில் வென்ற பிறகு விஷ்வகசுவனால் ஆளப்பட்ட நகரத்தைச் சேனையினாலேயே ஜயித்தான். அர்ஜுனன் பௌரவனான விஷ்வகசுவனை ஜயித்தபின, மலைநாடுகளில் வசிக்கும் கொள்ளைக்காரர்களாகிய உற்சவ சங்கேதரென்னும் ஏழு கூட்டத்தாரை ஜயித்தான். அதன்பிறகு, க்ஷத்திரிய சிரேஷ்டனான அர்ஜுனன், வீரர்களான காச்மீர தேசத்தரசர்களையும் சிற்றரசர்கள் பதின்மருடன் கூடிய லோகிதனென்னும் அரசனையும ஜயித்தான். அரசரே! அதன் பிறகு, திரிகர்த்தர். தார்வர், கோகநதர் என்னும் பல தேசத்து க்ஷத்திரியர்களெல்லோரும் அர்ஜுனனிடம் வந்துசேர்ந்தனர். அதன்பிறகு, அர்ஜுனன் அபிஸாரி யென்னும் அழகான

1 குலூக தேசமென்று சில பிரதிகளில் காணப்படுகிறது.

பட்டணத்தை ஜயித்தான். உரகாபுரியில் வசிக்கும் ரோசமான னென்பவனையும் யுத்தத்தில் ஜயித்தான். அதன்பிறகு, அவன் பலவகை ஆயுதங்களினால் நன்றாகக் காக்கப்பட்ட அழகான சிம்மபுரத்தைத் தன் பராக்கிரமத்தினால் யுத்தத்தில் பிடித்தான். பாண்டவ சிரேஷ்டனும் கௌரவர்களை விருத்திசெய்பவனு மாகிய அர்ஜுனன், பிறகு எல்லாச் சேனைகளோடுங்கூட ஸும்ஹ தேசத்தையும் [1]சோள தேசத்தையும் ஜயித்தான். சிறந்த பராக்கிரமசாலியும் இந்திரபுத்திரனுமான அர்ஜுனன் அணுகமுடியாத பாஹ்லீக தேசத்தைப் பெரிய யுத்தத்தினால் பின்பு வசப்படுத்தினான். இந்திரபுத்திரனும் பாண்டவனுமான பல்குனன் முக்கியமான சேனையை அழைத்துக்கொண்டு தரத தேசத்தாரையும் காம்போஜ தேசத்தாரையும் ஜயித்தான். வட கிழக்குத் திசையைச் சார்ந்திருப்பவரும் காட்டில் வசிப்பவரு மான [2]தஸ்யுக்களனைவரையும் சமர்த்தனான அர்ஜுனன் வென் றான். மகாராஜாவே! லோகர்களும் பரமகாம்போஜர்களும் ரிஷி கர்களும் உத்தரர்களும் ஒன்றுசேர்ந்து வர, அவர்களையும் அர்ஜுனன் ஜயித்தான். ரிஷிக தேசத்தில் ரிஷிகர்களுக்கும் அர்ஜுனனுக்கும் நடந்த சண்டை தாரகாமய மென்னும் தேவா சுர யுத்தம்போல மிகப் பயங்கரமாயிருந்தது. ராஜாவே! அந்த அர்ஜுனன் போர்முனையில் ரிஷிகர்களை வென்று அங்கே அவர்க ளிடமிருந்து கிளி வயிற்றுக்குச் சமானமான (நிறமுள்ள) எட்டுக் குதிரைகளைக் கொண்டுவந்தான். மயில் வர்ணமுள்ளவை சிலவும் அவற்றிற்கு மேலானவை சிலவுமான, வேகமாகவும் சோராமலும் ஓடத்தக்க குதிரைகளைக் கப்பமாகக் கொண்டுவந்தான். புருஷ சிரேஷ்டனான அர்ஜுனன் இமயமலையையும் நிஷ்குட மலையை யும் யுத்தத்தில் ஜயித்து சுவேத பர்வதத்தை அடைந்து அதில் வாசஞ்செய்தான்.

---

## இருபத்தோன்பதாவது அத்தியாயம்
## திக்விஜய பர்வம் (தொடர்ச்சி)

---

**(அர்ஜுனன் திக்விஜயத்தை முடித்துக்கொண்டு இந்திர பிரஸ்தம் வந்து சேர்ந்தது)**

பாண்டவசிரேஷ்டனும் சிறந்த சக்தியுள்ளவனுமான அர்ஜுனன், சுவேத பர்வதத்தைத் தாண்டித் துரும னென்னும் கிம்புருஷனுடைய புத்திரனால் காக்கப்பட்டதும் கிம்புருஷர்க ளென்னும் தேவஜாதியாருக்கு இருப்பிடமு

---

1 இந்தப் பெயருடைய தேசமொன்று வடக்கே யிருந்திருக்கவேண்டும்.
2 கொள்ளைக்காரர்கள்.

மாகிய தேசத்தை க்ஷத்திரியர்களை முடிக்கும் பெரிய யுத்தத்திருல் ஜயித்து அந்தத் துருமபுத்திரனைக் கப்பங் கட்டச் செய்தான். அவனை ஜயித்தபிறகு, இந்திரபுத்திரனுன அர்ஜுனன் யக்ஷர்களால் ரட்சிக்கப்பட்ட ஹாடகமென்னும் தேசத்தைச் சேனையுடன் அச்சமின்றி அடைந்தான். கௌரவ சிரேஷ்டனுன அர்ஜுனன் அந்த ஹாடக தேசத்தாரைப் போர் செய்யாமலே வசப்படுத்தி மானஸஸரோவரத்தையும் ரிஷி குல்யைகளென்று சொல்லப்பட்ட கால்வாய்களெல்லாவற்றை யும் கண்டான். சமர்த்தனுன அர்ஜுனன், மானஸஸரோ வரத்தை அடைந்தபிறகு, ஹாடக தேசத்தின் சமீபத்தில் கந்தர் வர்களால் ரட்சிக்கப்பட்ட தேசத்தை ஜயித்தான். அப்போது அந்தக் கந்தர்வ நகரத்தில் தித்திரிப்பட்சிகள்போலச் சித்திர வர்ணமுள்ளவையும் மண்டூகங்களென்று பெயருள்ளவையுமான உத்தமமான குதிரைகளையெல்லாம் கப்பமாகப் பெற்ருன். அதன்பிறகு, பல்குணன் ஹேமகூட மலையை யடைந்து அதில் வாசஞ் செய்தான். ராஜசிரேஷ்டரான ஜனமேஜயரே! பெருஞ் சேனையிருற் சூழப்பட்டவனுன அவன் அந்த ஹேமகூட மலை யைத் தாண்டி ஹரிவர்ஷமென்னும் கண்டத்தில் பிரவேசித் தான். அங்கே, இவ்வுலகம் முழுவதிலும் அழகான அனேக நக ரங்களையும் வனங்களையும் தெளிந்த ஜலமுள்ள நதிகளையும் தேவர்களைப் போன்ற புருஷர்களையும் பார்ப்பதற்கினிய பெண் களையும் கண்டான். தனஞ்சயன் அவர்களெல்லாரையும் கண்டு களித்து அவர்களை வசப்படுத்திக்கொண்டான்; மிக்க அதிக மான இரத்தினங்களையும் பெற்றுக்கொண்டான். சமர்த்தனுன அவன் அங்கிருந்து நிஷதமெனனும் மலைக்குச் சென்று அம் மலையிலுள்ளோரை ஜயித்தான. அரசரே! அர்ஜுனன், அதன் பிறகு, நிஷதமென்னும் பெரிய மலையைத் தாண்டித் தேவபூமி யாகிய இலாவ்ருதமென்னும் நடுக்கண்டத்தில் பிரவேசித்தான். அந்தத் தனஞ்சயன் அவ்விடத்தில் தேவர்களைப் போன்றவரும் பூமியில் நிகரற்றவரும் இதற்குமுன் காணபபடாதவரும் அழ குள்ளவருமான சிறந்த மனிதரையும் வெண்மையான வீடுகளை யும் அப்ஸரசுகளுக்கொப்பான பெண்களையும் கண்டான்; அழ கான அவர்களைக் கண்டு வசப்படுத்திருன். அவன அவர்க ளாலும பார்க்கப் பெற்ருன. ராஜ சிரேஷ்டரே! சிறந்த பாக்கிய முளள அர்ஜுனன் அவர்களை வசப்படுத்திக் கப்பங்கட்டுவித்து உயர்ந்த இரத்தினங்களையும் ஆபரணஙகளையும ஆசனஙகளையும் பெற்றுக்கொண்டு சந்தோஷத்துடன அஙகிருநது வடக்கே சென்ருன. அஙகே, மலைகளுட் சிறநத மேருமலையைக் கண் டான். பொன்மயமானதும் நான்கு நிலஙகளுடையதும (மனிதர்)

அணுகமுடியாததும் லட்சம் யோஜனை உயரமுள்ளதும் பூமியில் ஆழ்ந்திருப்பதும் ஒளிகளின் கூட்டமாக ஜ்வலிப்பதும் மிகச் சிறந்ததும் பொன்மயமாகப் பிரகாசிக்கின்ற கொடுமுடிகளினால் சூரியன் ஒளியை விலக்குவதும் பொன் ஆபரணங்கள் நிரம்பினதும் சுவர்க்கத்திலுள்ள தேவர்களாலும் கந்தர்வர்களாலும் அடையப்பட்டதும் அளவிடக்கூடாததும புண்ணிய மிகுதியில்லாத ஜனங்களால் அடையமுடியாததும் கொடிய சர்ப்பங்கள சஞ்சரிப்பதும் உயர்ந்த ஔஷதாதிகள் விளங்குவதும் உயரத்தினால் சுவர்க்கத்தை மறைத்து நிற்பதும் மனத்தினாலும் மற்றவர்கள் செல்லக்கூடாததும் நதிகளும் செடிகளும் நிரம்பினதும் மிக்க அழகான பல பறவைக்கூட்டங்கள் கூவுவதுமான அந்த மேரு மலையைக் கண்டு அர்ஜுனன் மகிழ்வுற்றான். தேவபூமியான இலாவ்ருத கண்டம் மேருவினால் எங்கும அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேருவின் தென்பக்கத்தில் எந்தக் காலத்திலும் பூக்களும் கனிகளும் நிரம்பினதும் சித்தர்கள் சாரணர்கள் என்னும் தேவர்களால் நெருங்கப்பட்டதுமான நாவல் மரம் இருக்கிறது. அரசரே! அம்மரத்தின் கிளைகள் சுவர்க்கம்வரையில் மேலே வியாபித்திருக்கின்றன. அதன் பெயரை வைத்துத்தான் இந்தக் கண்டத்தை [1]ஜம்பூத்வீப மென்பர். சூரனான சவ்யஸாசி அந்த ஜம்பு மரத்தைக் கண்டான். வேந்தரே! அவன் இவ்வுலகத்தில் நிகரில்லாமலிருந்த அந்த ஜம்பு மரத்தையும் மேரு மலையையும் சுற்றிலும் பார்த்து மகிழ்ந்தான். அப்போது அர்ஜுனன் அங்குள்ள சித்தர் சாரணராகிய தேவர்களால் அளிக்கப்பட்ட அனேகம் ஆயிரம் இரத்தினங்களையும் ஆபரணங்களையும் பெற்றுக்கொண்டான். அர்ஜுனன் அங்கே அதிக விலைபெற்ற வஸ்திரங்களையும் பெற்றுக்கொண்டு தன் ஜ்யேஷ்டராகிய தர்மராஜாவின் யாகத்துக்காக அனேக இரத்தினங்களையும் வாங்கிக் கொண்டு அவர்களிடம் விடைபெற்றுச் செல்லத் தொடங்கினான். சமர்த்தனான அவன் சிறந்த மலையாகிய மேருவைப் பிரதட்சிணஞ் செய்து நதிகளிற் சிறந்த ஜம்பூ நதியைப் பார்த்துக் கொண்டு அதன் கரை வழியாகச் சென்றான். ராஜசிரேஷ்டரே! மதுரமான நாவற்பழச்சாறு பிரவாகமாக ஓடுவதும் பொன்மயமான பறவைக்கூட்டங்களால் அடையப்பட்டதும் பொற்றாமரைகளும் பொனனிறமான சேறும் பொன்னிறமான ஜலமும் மணலுமுள்ளதும் சிலவிடங்களில் மலர்ந்த பொன்மயமான நெய்தல்கள் நிரம்பினதும் சிலவிடங்களில் பொன்மயமான புஷ்பங்களைப் புஷ்பித்த மரங்கள் கரைகளில்

1 நாவல்

நிரம்பினதும் பொற்படிகளோடு கூடிய துறைகளினால் எங்கும் அலங்கரிக்கப்பட்டதும் குற்றமற்ற இரத்தினக் குவியல்களுள்ளதும் வாத்தியங்கள் பாட்டுக்களின் முழக்கங்களோடு கூடியதும் பிரகாசிக்கின்ற பொன் [1]விதானங்களினால் எல்லா இடங்களிலும் சோபிப்பதும் அதற்குமுன் காணப்படாததுமான அந்தச் சிறந்த நதியைக் கண்டு புகழ்ந்தான். அந்த நதியின் ஜலத்தை உட்கொள்வதனால் மிக்க அழகானவர்களும் எப்போதும் சுகமும் சந்தோஷமுள்ளவர்களும் எல்லா அலங்காரங்களாலும் சோபிப்பவர்களும தேவருக்கு ஒப்பானவர்களுமான மனிதர்கள் சம்சாரங்களுடன் அந்த நதிக்கரையிலிருக்கக் கண்டு மனமகளித்தான். தனஞ்சயன் அவர்களிடத்தில் அனேக இரத்தினங்களையும் பொன்மயமான நாவற்பழங்களையும ஆபரணங்களையும் நயமாகப் பெற்றுக்கொண்டான். பெறுதற்கு அரியவையான அவற்றைப் பெற்றுக்கொண்டு அவன் மேற்றிசைக்குச் சென்றான். அங்கேயும் நாகர்களால் ரட்சிக்கப்பட்ட தேசத்தை ஜயித்தான்.

ஜனமேஜய மகாராஜரே! சமர்த்தனான அர்ஜுனன் அங்கிருந்து மேற்கே சென்று கந்தமாதன மலையைச் சேர்ந்து, அங்குள்ளவர்களை ஜயித்தான். அரசரே! அந்தக் கந்தமாதனத்தைத் தாண்டின பிறகு, அவன் இரத்தினங்களுள்ளதும, பார்ப்பதற்கு இனியவர்களும் தேவர்களுக் கொப்பானவர்களுமான ஸ்திரீ புருஷர்கள் வசிப்பதுமான கேதுமால மென்னும கண்டத்தைக் கண்டான். அரசரே சவ்யஸாசியான தனஞ்சயன் அதை ஜயித்துக் கப்பங்கட்டச்செய்து அங்குள்ள அருமையான இரத்தினங்களைக் காணிக்கையாக வாங்கிக்கொண்டு மறுபடியும் மத்திய தேசமாகிய இலாவ்ருதத்திற்குத் திரும்பிவந்து அங்கிருந்து கிழக்கே சென்று மேருமலைக்கும் மந்தரமலைக்கும் இடையில் சைலோதை யென்னும ஆற்றின் இருபுறங்களிலும மூங்கில்களின் சுகமான நிழலை அடுத்திருப்பவராகிய கஷர், ஜஷர், நத்யௌதர், பிரகஸர், தீபதவேணிபர், பசுபர், குலிந்தர், தங்கணர், பரதங்கணர் என்னும் ஜாதியாரனைவரையும ஜயித்துக கப்பங்கட்டச்செய்து அவரெல்லாரிடத்திலுமிருந்து ரத்னங்களைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்து மால்யவானென்னும் மலைக்குச் சென்றான். அர்ஜுனன் அந்த மால்யவா னென்னும் பெரிய மலையைத் தாண்டிப பரிசுத்தமும் தேவலோகம் போன்றதுமான பத்ராசுவ மென்னும் கண்டத்தில் பிரவேசித்தான். அவ்விடத்தில் சிறப்புற்றவர்களும் தேவர்களைப் போன்றவர்களுமான புருஷ சிரேஷ்டர்களை ஜயித்து உட்படுத்திக் கப்பங்கட்டச் செய்து ஆங்காங்

1 மேற்கட்டி.

குள்ள எண்ணிறந்த ரத்னங்களை அவரவர்களிடமிருந்து காணிக் கையாக வாங்கிக்கொண்டு, பிறகு நீலமென்னும் மலைக்குச் சென்று அங்குள்ளவரை ஜயித்தான். பிறகு, அர்ஜுனன் பெரிய தாகிய நீலமலையைத் தாண்டி அழகிய ஆண்பெண்கள் நிரம்பி யிருக்கும் ரம்யகமென்னும கண்டத்தில் பிரவேசித்தான். அந்த அர்ஜுனன் அந்தத் தேசத்தை ஜயித்துக் கப்பங் கொடுக்கச் செய்து குஹ்யகர்களால் ரட்சிக்கப்பட்ட தேசத்தையும் ஜயித் தான. அரசர்க்கரசே! மகாபலசாலியான அர்ஜுனன் அந்தத் தேசத்தில் ராஜசூய யாகத்தின் சிறப்புக்காக மனத்தைக் கவரத் தக்க அழகான பொன்மானகளையும் பொற்பறவைகளையும் இன் னும் அனேக ரத்னங்களையும் காணிக்கையாக வாங்கிக்கொண் டான். அதன்பிறகு, கந்தர்வர்களால் ரட்சிக்கப்பட்ட தேசத்தை யும் அதிலுள்ள கந்தர்வக் கூட்டத்தையும் ஜயித்தான். வேந்தரே அதன்பிறகு, அர்ஜுனன் அங்குள்ள உயர்ந்த ரத்தினங்களைப் பெற்றுக்கொண்டு உடனே ஹிரண்வத மென்னும் கண்டத்தில் பிரவேசித்தான். அரசரே! அவன் அந்த அழகான இடங்களில் நட்சத்திரங்களின் நடுவில் சந்திரன் பிரகாசிப்பதுபோல மாளிகை வரிசைகளுக்கிடையே சஞ்சரிக்கத் தொடங்கினன். அரசர்க்கரசே! அங்கே பராக்கிரமத்தினலுண்டான சிறந்த அழகோடும் புகழோடும் ராஜமார்க்கங்கள் எங்கும் சஞ்சரிக்கும் அவனை உயர்ந்த மாளிகைகளில் மேற்கட்டுகளிலிருந்த மங்கை யர்களனைவரும் கண்டனர். இரதத்தில் ஏறித் தூணிகளைத் தாங்கிக் கவச கிரீடங்களை அணிந்து கையும் வில்லுமாக யுத்த சன்னைத்தோடிருப்பவனும் விருதுகளுள்ளவனும் மிருது சரீர முள்ளவனும் மிகுந்த பலசாலியும சக்திகளெல்லாம் சேர்ந்தவ னும் எதிரிகளை அதஞ்செய்பவனும் எதிரிகளுடைய யானைகளைத் தடுப்பவனும் தனக்கு உயர்வற்றவனும் இந்திரனுக்கொப்பான வனுமான அந்த அர்ஜுனனைக் கண்ட அங்குள்ள பெண் கூட் டங்கள் 'வேலாயுதத்தையுடைய முருகக் கடவுளோ' என நினைத் தன. 'யுத்தத்தில் வியக்கத்தக்க பராக்கிரமமுள்ள அந்தப் புருஷப் புலி இவன்தான். இவன் கைவன்மையில் அகப்பட்ட பகைவர் கூட்டங்கள் நிற்பதில்லை' என்ற சொற்களைச் சொல்லிக் கொண்டு அந்தப் பெண்கள் அன்புடன் தனஞ்சயனைத் துதித்து அவன் சிரசில் பூமாரி பொழிந்தனர். அங்குள்ளவர்க ளனைவரும் அவனை விருப்பத்துடன் பார்த்து அவனமேல இரத்தி னங்களையும் பூஷணங்களையும வாஷித்தனர். அர்ஜுனன் அவர் களையெல்லாம் ஜயித்துக் கப்பங்கொடுக்கச்செய்து முத்து, பொன், பவழம், ஆயுதம், ஆபரணம் முதலியவற்றை அவர்களிடம்

பெற்றுக்கொண்டு, சுருங்கவானென்னும் மலைக்குச் சென்றான். மகாத்மாவும் கௌரவனும் பாண்டவனுமாகிய பல்குனன் சிருங்கவானென்னும் மலையையும் கடந்து அதற்கு வடக்கிலுள்ள ஹரிவர்ஷமென்னும் கண்டத்தை அடைந்து அங்குள்ள வித்யாதரர்களின் கூட்டங்களையும் யக்ஷராஜாக்களையும் ஜயித்து எல்லாவற்றிலும் சிறந்த திவ்ய வஸ்திரங்களையும் கல்பக விருட்சங்களின் இலைகளையும் யாகத்திற்குரிய பலவகையான உயர்ந்த கிருஷ்ணாஜினங்களையும் பெற்றுக்கொண்டான். இந்திரபுத்திரனான அர்ஜுனன் ஹரிவர்ஷமென்னும் கண்டத்தின் வடபாகத்திற் சென்று அந்தத் தேசத்தை ஜயிக்க விரும்பினான். அங்கே பெரிய தேகமும் மிகுந்த வன்மையுமுள்ள துவாரபாலகர்கள், மகாவீரனான அர்ஜுனனை வந்து கண்டு, 'அர்ஜுனா! இந்த நகரத்தை நீ எவ்வகையிலும் ஜயிக்கமுடியாது. நல்லவனே! திரும்பிச் செல். தோல்வியடையாதவனே! இதுவரையிற் போதும். இந்தப் பட்டணத்தில் எந்த மனிதன் பிரவேசிப்பானோ அவன் இருக்கமாட்டான். வீரனே! உன்னிடத்தில் நாங்கள் அன்புள்ளவராயிருக்கிறோம். நீ ஜயித்தது போதும். அர்ஜுனா! இந்த இடத்தில் நீ ஜயிக்கக்கூடியது ஒன்றும் காணப்படவில்லை. இஃது உத்தர குருக்ஷேத்திரம். இவ்விடத்தில் யுத்தம் நடவாது. குந்திபுத்திரா! நீ இங்கே பிரவேசித்தாலும் ஒன்றையும் காணமாட்டாய். மானிட தேகத்தோடு இங்கே எதையும் பார்க்கமுடியாது. புருஷ சிரேஷ்டனே! அல்லது, இவ்விடத்தில் உனக்கு வேறு காரியம் ஏதாவது ஆகவேண்டியிருந்தால் அதைச் சொல். பாரதனே! உன் சொல்லின்படி நாங்கள் செய்வோம' என்று சொன்னார்கள். அரசரே! பிறகு, அர்ஜுனன் நகைத்துக்கொண்டு அவர்களைப் பார்த்து, 'சிறந்த அறிவுள்ள தர்மராஜாவைப் பூமி முழுவதுக்கும் அரசராகச் செய்ய விரும்புகிறேன். மானிடர்கள் பிரவேசிப்பது விரோதமாயிருந்தால் உங்கள் தேசத்தில் நான் பிரவேசியேன். யுதிஷ்டிரருக்கு ஏதாவது ஒரு திரவியத்தைக் கப்பமாகக் கொடுங்கள். இல்லாவிட்டால் கிருஷ்ணனுடன் சேர்ந்து பாண யுத்தஞ்செய்வேன்' என்று சொன்னான். அதன் பிறகு, அவர்கள் திவ்ய வஸ்திரங்களையும் திவ்யாபரணங்களையும் தேவர்க்குரிய பட்டுக்களையும் தோல்களையும் அவனுக்குக் கப்பமாகக் கொடுத்தனர். அந்தப் புருஷ சிரேஷ்டனான அர்ஜுனன் இவ்வாறு க்ஷத்திரியர்களோடும் கொள்ளைக்காரர்களோடும் அனேக யுத்தங்கள் செய்து அவர்களெல்லாரையும் ஜயித்துக் கப்பங்கட்டும்படி செய்து வடதிசை முழுமையும் வசப்படுத்தி எல்லாரிடத்திலும் தனங்களையும் பலவகை ரத்தினங்களையும் சிட்டுக்குருவி

போலச் சித்திர வர்ணமும் கிளியிறகு நிறமும் மயில் நிறமுமுள்ளவையும் காற்றுக்குச் சமானமான வேகமுள்ளவையுமான பல வகைக் குதிரைகளையும் வாங்கிக்கொண்டு பெரிய சதுரங்க சேனையுடன் இந்திரபிரஸ்த நகரத்துக்குத் திரும்பிவந்தான். அவன் அந்த வாகனங்கள் தனங்கள் அனைத்தையும் தர்மராஜாவிடம் ஒப்புவித்தான். அவரிடம் விடைபெற்றுக்கொண்டு தன் கிருகத்திற்குச் சென்றான்.

---

## முப்பதாவது அத்தியாயம்

## திக்விஜய பர்வம் (தொடர்ச்சி)

### (பீமசேனன் திக்விஜயத்தில் சேதி தேசத்தை ஜயித்தது)

பலமும் பராக்கிரமமுமுள்ளவனும் எதிரிகளுக்குத் துயரத்தை விளைவிப்பவனும் பரதசிரேஷ்டனுமான பீமசேனனும் அர்ஜுனன் புறப்பட்டபோதே தர்மராஜரிடம் விடைபெற்றுக்கொண்டு அயல் தேசங்களை அழிப்பதும் யானைகள், குதிரைகள், தேர்கள் நிரம்பினதும் கவசங்களைத் தரித்ததுமாகிய பெருஞ்சேனைக் கூட்டத்தினால் சூழப்பெற்றுக் கீழ்த்திசையை நோக்கிச் சென்றான். புருஷ சிரேஷ்டனாகிய அந்தப் பீமன் பாஞ்சால தேசத்தின் முதன்மையான இராஜதானிக்குச் சென்று பாஞ்சால ராஜர்களைப் பலவகையான உபாயங்களினால் சமாதானஞ் செய்து அவர்களிடத்தில் ஒரு கப்பத்தை வாங்கிக்கொண்டு விதேக தேசத்தின் ராஜதானிக்குச் சென்றான். சூரனும் சமர்த்தனும் பரதசிரேஷ்டனுமான அந்தப் பீமன் கண்டகர்களென்னும் விதேக தேசத்தாரை ஜயித்து, உடனே தசார்ண தேசத்தை ஜயித்தான். அங்கே சுதர்மாவென்னும் தசார்ண தேசத்தரசன் பீமசேனனுடன் ஆயுதங்களில்லாமல் பயங்கரமான பெருஞ்சண்டை செய்தான். மகாத்மாவான சுதர்மாவின் அந்தச் செய்கையைக் கண்டு பீமசேனன் மகா பலசாலியான அவனைத் தனது முதன்மையான சேனாபதியாகச் செய்துகொண்டான். அரசரே! பயங்கரமான பராக்கிரமமுள்ள பீமன் பெருஞ்சேனையினால் பூமியை அதிரச் செய்பவன்போல் அங்கிருந்து கிழக்குத் திக்கிற் சென்றான். அரசரே! பலவான்களிற் சிறந்தவனும வீரனுமான அந்தப் பீமன் சேனையுடன் விளங்கும அசுவமேதேசுவரனென்னும் அரசனைப் போரில் வென்றான. குந்தி புத்திரனும கௌரவனும் மகா பராக்கிரமசாலியுமான அந்தப பீமன, அதிகச் சிரமமில்லாமலே, அவனை ஜயித்து அதன் கீழ்த் தேசததையும் ஜயித்தான். அங்கிருந்து தெறகே [1] புளிந்தர்களின் பெரிய நகரத்திற்கு வந்து, சுகுமாரன்,

---

1 ஒருவகை மிலேச்ச ஜாதியார்.

சுமித்ரனென்னும் இரண்டு அரசர்களையும் வசப்படுத்திக்கொண்டான். ஜனமேஜயரே! பரதசிரேஷ்டனான பீமசேனன் தர்மராஜாவின் கட்டளையின்படி அங்கிருந்து மகாபராக்கிரமசாலியான சிசுபாலனை எதிர்த்துச் சென்றான். வீரரே! சேதி தேசத்தரசனான சிசுபாலனும் பீமசேனன் ஆரம்பத்தைக் கேட்டு நகரத்திலிருந்து வெளியில் வந்து பீமசேனனை எதிர்கொண்டழைத்தான். மகாராஜாவே! அப்போது அந்தக் கௌரவராஜனும் சேதி தேசத்தரசனுங் கூடித் தங்கள்இரண்டு குலங்களையும்பற்றிக் குசலப்ரச்னஞ்செய்துகொண்டனர். அரசரே! அப்போது சேதிராஜன் தன் தேசத்தைப் பீமனிடம் ஒப்பித்துப் பீமனைப் பார்த்து நகைத்துக்கொண்டே, 'குற்றமற்றவனே! இதென்ன செய்கிறாய்?' என்று கேட்டான். அப்போது, பீமன் தர்மராஜர் செய்ய விருமபியிருப்பதை அவனுக்குச் சொன்னான். அவ்வரசனும் அவன் சொன்னதை அங்கீகரித்து அப்படியே செய்தான். அரசரே! அப்போது பீமசேனன் சேனைகளோடும் வாகனங்களோடும் பதின்மூன்று இராத்திரி அங்கே வசித்து, சிசுபாலனால் மரியாதைசெய்யப்பெற்றுச் சென்றான்.

---

## முப்பத்தோராவது அத்தியாயம்

## திக்விஜய பர்வம் (தொடர்ச்சி)

### (பீமசேனன் திக்விஜயம் முடித்துக்கொண்டு இந்திரப்பிரஸ்தம் வந்து சேர்ந்தது)

எதிரிகளை யடக்குகிறவனாகிய பீமன், பிறகு, அங்கிருந்து குமார விஷயமென்னும் தேசத்தரசனான சிரேணிமானென்பவனையும கோசல தேசாதிபதியான பிருகத்பலனென்பவனையும் ஜயித்தான். பாண்டவ சிரேஷ்டனான பீமன் தர்மந் தெரிந்தவனும் இடைவிடாமல் யாகஞ்செய்பவனும் மகாபலசாலியுமான அந்த பிருகத்பலனென்பவனை அயோத்தியில் எளிதில் வென்றான். அதனபிறகு, சமர்த்தனான பீமன் கோபாலகக்ஷனென்னும் அரசனையும் வடகோசலத்தோடு சேர்ந்த கோசல தேசத்தையும் மல்ல தேசத்தரசனையும் ஜயித்தான். பலசாலியான பீமன், அதன் பிறகு இமயமலையின் பக்கம் சென்று ஜலக்கரையிலுள்ள தேசமனைத்தையும் சீக்கிரத்தில் வசப்படுத்திக்கொண்டான். மிகச் சிறந்த பராக்கிரம முள்ளவனும் பலவான்களிற் சிறந்தவனும் பரதசிரேஷ்டனுமான அந்தப் பீமன் தன் வலிமையினால் பற்பல தேசங்களை இவ்வாறு ஜயித்துப் பல்லாட தேசத்தினருகிலுள்ள சுக்திமானென்னும் மலையையும் ஜயித்தான். சிறந்த கைகளையுடையவனும் அச்சத்தைத் தரும் பராக்கிரமமுள்ள

வனுமாகிய பீமன் யுத்தத்தில் புறங்காட்டாதவனுகிய சுபாஹு வென்னும் காசிராஜாவைக் கீழ்ப்படுத்தினன். பாண்டவ சிரேஷ்டனான பீமன் அதனபிறகு சுபார்சுவமென்னும் மலைக்கரு கில் எதிர்த்து யுத்தஞ்செயயவந்த கிரதனென்னும் ராஜ சிரேஷ் டனைத் தன பலத்தினல் யுத்தத்தில் வென்முன். சிறந்த பராக் கிரமமுளள அவன், பிறகு. மிக்க பலமுள்ள மத்ஸ்ய தேசத்தை யும் மலத தேசத்தையும் அநக தேசத்தையும் அபய தேசத்தை யும் பசுபூமியென்னும் தேசத்தையும் முழுதும் ஜயித்தான். சிறந்த கைகளையுடைய பீமன் அங்கிருந்து திரும்பி மததாரமென் னும் மலையையும் ஸோமதேயமெனனும் தேசத்தையும் ஜயித்து வடக்குநோககிச் சென்முன். பலவானுன பீமன் தன் பலத்தினல் வத்ஸ தேசத்தையும் ஜயித்துப் பர்க்க தேசத்தரசனையும் நிஷாத தேசத்தரசனையும் மணிமான் முதலிய அனேக ராஜர்களை யும் ஜயித்தான். அதன்பிறகு, தக்ஷிண மல்ல தேசத்தையும் போகவானென்னும் மலையையும் தன் பராக்கிரமத்தினல் பீமன் எளிதில் வென்முன். புருஷசிரேஷ்டனுன பீமன் சர்மகர்களையும் வர்மகர்களையும் சமாதானமாகவே வசப்படுத்தி [1]விதேகதேசாதி பதியான ஜனகனென்னும் அரசனை எளிதாக ஜயித்தான். பாண்டு புத்திரனும் குந்தியின் புத்திரனுமான பீமன் விதேக தேசத்திலிருந்துகொண்டே சகர்களையும் பர்ப்பரர்களையும் இந்திரபர்வதத்தி னருகிலுள்ள கிராதராஜாக்கள் எழுவரையும் தந்திரமாக ஜயித்தான். சிறந்த பலமும் பராக்கிரமுமுள்ள பீமன் அதன் பிறகு சேனைகளோடுகூடிய ஸும்ஹர்களையும் பிரஸும் ஹர்களையும் யுத்தத்தில் வென்று மகத தேசத்தாரை எதிர்த் துச் சென்முன். தண்டன தண்டதாரன் முதலிய அரசர்களை ஜயித்து அவர்களெல்லாருடனும் சேர்ந்து கிரிவ்ரஜத்திற்குச் சென்முன். ஜராசந்தன் புதல்வனைச் சமாதானமாகவே கப்பங் கட்டச் செய்து அவர்களெல்லாருடனுங்கூடக் கர்ணனை எதிர்த் துச் சென்முன். அந்தப் பாண்டவசிரேஷ்டனுன பீமன் சது ரங்க தளத்தினல் பூமியை அதிரச்செய்பவன்போலச் சென்று சத்துருக்களை அதஞ்செய்பவனுகிய கர்ணனுடன் போர்புரிந் தான். ஜனமேஜயரே! அந்தப் பலவானுன பீமன் கர்ணனைப் போரில் வென்று உட்படுத்தின பிறகு மலைகளில் வசிக்கும் அரசர்களை ஜயித்தான். அப்போது மோதாகிரி யென்னும் மலையிலுள்ள மிக்க பலசாலியான அரசனைப் பெரும் போரில் தன் புஜபலத்தினல் கொன்முன். அதன் பிறகு, புண்ட்ர தேசத்தரசனும் வீரனுமான அந்தப் பௌண்ட்ரக வாசுதேவ

1 இவன் வேறு.

னென்னும் அரசன் கிருஷ்ணனுடைய கைகளின் பயத்தினால், 'நான் இப்போது யாதவ வீரனான கிருஷ்ணனுடன் யுத்தஞ்செய்யேன்' என்று சொல்லிக் கப்பங்கொடுத்தான். கௌசிகி நதிக் கரையிலிருக்கும் மஹௌஜஸன் என்னும் அரசனையும் சந்தித்தான். ஜனமேஜய மகாராஜாவே! மிகுந்த சேனைகளையுடையவர்களும் கொடிய பராக்கிரமமுள்ளவர்களுமாகிய அவ்விரண்டு வீரர்களையும் யுத்தத்தில் ஜயித்து வங்க தேசத்தரசனிடம் சென்றான். பரத சிரேஷ்டனான பீமன் சமுத்திரசேனன் சந்திரசேனனென்னும் அரசர்களையும் கர்வட தேசாதிபதியான தாமிரலிப்தனென்னும் அரசனையும் ஸும்ஹ தேசத்து இராஜாவையும் ஜயித்துக் கடற்கரைகளில் வசிக்கும் மிலேச்சக்கூட்டத்தாரெல்லாரையும் வென்றான். வாயு புத்திரனும் பலசாலியுமான பீமன் இவ்வாறு பற்பல தேசங்களையும் ஜயித்த பிறகு அவர்களிடம் பொருள்களைப் பெற்றுக்கொண்டு லௌஹித்யமென்னும் நதத்துக்குச் சென்றான். அவன் கடலிலுள்ள தீவுகளில் வசிக்கும் மிலேச்ச ராஜாக்களெல்லாரையும், சந்தனம், அகில், வஸ்திரங்கள், ரத்தினங்கள், முத்துக்கள், சால்வைகள், பொன், வெள்ளி, பவழம் ஆகிய விலைபெற்ற உயர்ந்த பொருள்களைக் காணிக்கைகளாகக் கொடுக்கச் செய்தான். அவர்கள் நூறு கோடிக்கணக்கான பெரும் பொன்மாரியை மகாத்மாவும் குந்தி புத்திரனுமான பீமனுக்குப் பொழிந்தனர். பயங்கரமான பராக்கிரமமுள்ள பீமன் இந்திரப்பிரஸ்தத்திற்கு வந்து சேர்ந்து உடனே அந்தத் தனத்தைத் தர்மராஜாவுக்கு ஒப்புவித்தான்.

---

## முப்பத்திரண்டாவது அத்தியாயம்

## திக்விஜய பர்வம் (தொடர்ச்சி)

### (சகதேவன் தட்சிண திக்விஜயத்துக்குச் சென்றதும் விபீஷணர் காணிக்கை அனுப்பியதும்)

ஜனமேஜய ராஜாவே! சகதேவனும் அவர்களைப்போலவே தர்மராஜாவினால் சிறப்பிக்கப்பெற்றுப் பெருஞ்சேனையுடன் தென்திசைக்குச் சென்றான. சமர்த்தனான சகதேவன் சூரசேன தேசத்தை முன்னமே முழுதும ஜயித்திருந்தான. பலவானான சகதேவன தன் பலத்தினால் மத்ஸ்ய தேசத்தரசனை வசபபடுத்தினான். அரசாக்கரசனும மகா பலசாலியுமான தந்தவக்ரனை ஜயித்துக் கப்பங் கட்டுவித்து அவனை அவன ராஜ்யததில் நிலைநிறுத்தினான். சுகுமாரன சுமித்திரனென்னும அரசர்களை

வசப்படுத்தினன். அப்படியே, மத்ஸ்ய தேசத்தின் மேற்பக்கத்தாரையும் படச்சரர்களென்னும் திருடர்களையும் அவன் ஜயித்தான். புத்திமானான சகதேவன் நிஷாதர்களின் தேசத்தையும் கோசிருங்கமென்னும் சிறந்த மலையையும் அதன்பிறகு சிரேணிமானென்னும் அரசனையும் பராக்கிரமத்தினால் ஜயித்தான். நராராஷ்டிரமென்னும் தேசத்தை ஜயித்துக் குந்திபோஜனிடஞ் சென்றான். அந்தக் குந்திபோஜன் அவன் கட்டளையை அன்புடன் அங்கீகரித்தனன். அதன்பிறகு, சர்மண்வதி நதிக்கரையில் தன் பிதாவுக்குச் சத்துருவும் கிருஷ்ணனால் (கொல்லாமல்) மிகுத்து வைக்கப்பட்டிருப்பவனும் ஜம்பக புத்திரனுமான அரசனைக் கண்டான். ஜனமேஜயரே! அவ்வரசன் சகதேவனோடு யுத்தஞ்செய்தான். அந்த யுத்தத்தில் சகதேவன் அவனை ஜயித்துத் தென்றிசை நோக்கிச் சென்றான். மிகச் சிறந்த பலசாலியான சகதேவன் அந்த ஜம்பக புத்திரனுடன் கூடவே ஸேகர்கள் அபரஸேகர்களென்னும் தேசத்தாரை ஜயித்து, அவர்களிடமிருந்து பலவகை ரத்தினங்களைக் கப்பமாகப் பெற்றுக்கொண்டு நர்மதை நதியை நோக்கிச் சென்றான். அங்கே, நரகாசுரன் மகனும் சிறந்த கைகளையுடையவனுமாகிய பகதத்தனென்னும் அரசன் அர்ஜுனனுக்குக் கப்பங்கொடுத்ததாகக் கேட்டுத் திரும்பினன். அசுவினீ தேவர்களின் புத்திரனும் சிறந்த பராக்கிரமசாலியுமான சகதேவன் பெரும்படையினால் சூழப்பட்டவர்களும் வீரர்களுமாகிய விந்தன் அனுவிந்தனென்னும அவந்தி தேசத்தரசர்களைப் போரில் வென்று அவர்களிடம் ரத்தினங்களைப் பெற்றுக்கொண்டு போஜகடமென்னும் நகரத்துக்குச் சென்றான். ஓ! சத்தியந் தவறாத ஜனமேஜய ராஜாவே! அந்த நகரத்தில் இரண்டு நாள் யுத்தம நடந்தது. மாத்ரியின் புதல்வனும மகாபலசாலியுமான அந்தச் சகதேவன் யார்க்கும் வெல்ல முடியாத பீஷ்மக ராஜனையும் கோசல தேசத்தரசனையும் வேணா நதிக்கரையிலுள்ள அரசனையும் ஜயித்து, அதனபிறகு காட்டிலுள்ள அரசர்களையும், பிராகோடகர்கள் நாடகேயர்கள் ஹேரம்பகர்களென்னும் அரசர்களையும், மாருதம் ரம்மியக்ராமமென்னும் ஊர்களையும, நாசினர்கள் அர்புகர்கள் முதலான பற்பல காட்டரசர்களனைவரையும் பலத்தினால் ஜயித்தான். மகாபலசாலியான அந்தச் சகதேவன் வாதாதிபனென்னும் அரசனை வசப்படுத்தினன். புளிந்தர்களென்னும் ஜாதியாரைப் போரில் வென்று தென்திசை நோக்கியே சென்றான். சிறந்த கைவன்மையுள்ள அந்தச் சகதேவன் பாண்டிய தேசததரசனோடு ஒரு நாள் போர் செய்து அவனை ஜயித்துத் தென்திசை மார்க்க

மாகச் சென்று கிஷ்கிந்தை யென்று உலகத்தில் பெயர்பெற்ற குகையை அடைந்தான். வாலியெனனும் வானரராஜனால் முன்னர் ஆளப்பட்டதும் பிறகு கோசல தேசாதிபதியான ஸ்ரீ ராம பிரானை அடுத்த சுக்ரீவனால் காப்பாற்றப்பட்டதுமான அந்தக் குகையிற் பிரவேசித்து அவ்வரசனை அழைத்தான். அந்தக் குகையில் மைந்தன் துவிவிதனென்னும் இரண்டு வானர அரசர் களோடும் ஏழு நாள் யுத்தஞ் செய்தான். அவர்களும் சோர் வடையவில்லை. மகாத்மாக்களாகிய அவ்விரண்டு வானரர்களும் அந்த யுத்தத்தினால் சகதேவன்மேல் திருப்தியடைந்து மனம் மகிழ்ந்து அன்புடன், 'ஓ பாண்டவ சிரேஷ்டனே! இங்குள்ள ரத்தினங்க ளனைத்தையும் எடுத்துக்கொண்டு செல். சிறந்த அறிவாளரான தர்மராஜாவின் யாக காரியம் இடையூறில்லாம லிருக்கவேண்டும்' என்று சொன்னார்கள். அந்த ரத்தினங்களைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்து மாஹிஷ்மதி யென்னும் நகரத் துக்குப் போனான். புருஷ சிரேஷ்டனும் பகைவர்களான வீரர் களை அழிக்கும் பராக்கிரமசாலியும் பாண்டு புத்திரனுமான சகதேவன் அங்கே நீலனென்னும் அரசனுடன் போர்புரிந்தான். அப்போது பயமுள்ளவர்களுக்குப் பயங்கரமும் சகதேவனுடைய சேனைக்குச் சேதத்தையும் உயிருக்கே சந்தேகத்தையு முண்டாக் குவதுமாகிய பெரிய யுத்தம் உண்டாயிற்று. அந்த நீல ராஜ னுக்கு அக்னி பகவான் சகாயஞ் செய்தார். அதனால், சகதேவ னுடைய சேனையிலுள்ள தேர்களும் குதிரைகளும் யானைகளும் காலாட்களும் கவசங்களும் எரிந்தவைபோலக் காணப்பட்டன. ஜனமேஜயரே! அதனால், கௌரவ சிரேஷ்டனான சகதேவன் மனத்தில் மிகப் பரபரப்புள்ளவனாகி மறுமொழி சொல்லவும் சகதியற்றவனானன்" என்று வைசம்பாயனர் சொல்ல, கேட்ட ஜனமேஜயர், "ஓ! பிராம்மணரே! யாக காரியத்துக்காக ஆரம் பித்த சகதேவனுக்கு அக்னி பகவான் யுத்தத்தில் எதிராக நின்றது என்ன காரணத்தினாலே?" என்று கேட்க, வைசம்பாய னர் சொல்லத் தொடங்கினார்.

"ஜனமேஜய ராஜாவே! முன்னம் அக்னி பகவான் அந்த மாஹிஷ்மதி நகரத்தில் வாசஞ் செய்துகொண்டு பரஸ்திரீயி னிடம் விருப்பம் வைத்தவனாகக் கண்டுபிடிக்கப்பட்டானென்று கேட்டிருக்கிறீரல்லவா? நீலனென்னும் ராஜாவின் மகள் மிக்க அழகுள்ளவளாயிருந்தாள். அவள் தன் தந்தைக்கு ஹோம காலத்தைத் தெரிவிப்பதற்காக எப்பொழுதும் அக்னிஹோத்தி ரத்தைக் காத்திருந்தாள். அந்த அக்னி பகவான் அவளுடைய அழகான இதழ்க் குவிவின் வழியாக வரும் காற்றினால் ஊதப்

படும் வரையில், விசிறப்பட்டாலும் ஜ்வலிப்பதில்லை. [1]அந்த அழகிய பெண்ணின்மேல் விருப்பமுற்ற அந்த அக்னி பகவான் நீலராஜாவினாலும் மற்றவர்களாலும் குறிப்பாக அறியப்பட்டான். அதன பிறகு அக்னி பகவான், பிராமண வடிவமெடுத்து யதேச்சையாக உல்லாசமாய் உலாவிக்கொண்டு, கருநெய்தல் மலர்போன்ற கண்களை யுடையவளும் அழகிய நிதம்பமுள்ளவளு மாகிய அந்தப் பெண்ணினமேல ஆசையைக் காண்பித்தான். அபபோது தர்மிஷ்டனான நீலராஜன் அந்த அக்னி பகவானைச் சாஸ்திரபபிரகாரம தடுத்தான். உடனே அக்னி பகவான் கோபத்தினால் ஜ்வலித்ததைக் கண்டு வியப்புற்ற அரசன் தன் தலை தரையில் படுமபடி வணங்கினான். அதன் பிறகு, சில காலத்துக்கெல்லாம அவ்வரசன் அந்தப் பெண்ணைப் பிராம்மண வடிவமாக வந்த அக்னி பகவானுக்குக் கன்னிகாதானஞ் செய்தான். அழகிய புருவங்களை யுடையவளாகிய அந்த நீலராஜன் புதல்வியைப பெற்றுக்கொண்டபின், ஒளியைத் தனமாகவுடைய அக்னி பகவான், அவ்வரசனுக்கு அனுக்கிரகஞ் செய்தான். யாகங்களை மிகச் சிறப்பாகச் செய்பவனாகிய அக்னி பகவான் வரம் கேட்கும்படி அவ்வரசனைத் தூண்டினான். அவ்வரசன் தன் சேனைக்கு அபயத்தையே வரமாகப் பெற்றுக்கொண்டான். அது முதல் எந்த அரசர்களாவது அறியாமையினால் தம் வலிமையைக் கொண்டு அந்த நகரத்தை ஜயிக்க யத்தனிப்பார்களாயின் அவர்கள் தீயினால் எரிக்கப்படுவர். கௌரவ சிரேஷ்டரான ஜனமேஜயரே! அந்தக் காலத்தில் அந்த மாகிஷ்மதி நகரத்துப் பெண்கள அதிகக் கட்டுக்குட்படாதவர்களாய்த் தம மனம போனபடி இருந்தனர். பெண்களுக்குக் கட்டுப்பாடில்லாமலிருக்கும்படி அக்னி வரம் கொடுத்தான். அங்கே மங்கையர்கள் சுதந்திரர்களாகத் தங்கள் விருப்பப்படி நடப்பது வழக்கம். பரத சிரேஷ்டரான ஜனமேஜய மகாராஜாவே! அக்காலம் தொடங்கி அரசர்கள் அக்னி பயத்தினால் அந்த நகரத்தை எப்போதும் விட்டு விடுவது வழக்கம். அரசரே! தர்மத்தில் மனம் வைத்த சகதேவன் தன் படை தீபபிடித்து பயத்தினால் கலங்கினதைக் கண்டு மலை போல் அசையாமலிருந்தான. பிறகு, அவன் ஆசமனஞ்செய்து பரிசுத்தனாகி அக்னியைத் துதித்தான்.

'ஓ! அக்னிபகவானே! உனக்கு நமஸ்காரம். இந்த எனது

---

1 'அக்னி பகவான் மானிட வடிவத்தோடு தன் விருப்பத்தை வாய்விட்டுச் சொன்னான். எல்லாருடைய கிருகங்களிலும் இவ்வாறே சொன்னான். அந்தப் பெண்ணினாலும் அவன் அங்கீகரிக்கப்பட்டான்' என்பதும் 'இது நீலராஜனுக்குத் தெரியாது என்று வருவித்துக்கொள்க' என்பதும் பழைய உரை.

முயற்சி உனக்காகத்தான். பாவகனே! நீ தேவர்களுக்கு [1]முகமா யிருக்கிறாய். நீ, யக்ஞ புருஷனா யிருக்கிறாய். எல்லாவற்றையும் பரிசுத்தஞ் செய்வதனால் பாவகனாகிறாய். ஹோமஞ் செய்தனவற்றைத் தேவர்களுக்குச் சேர்ப்பிப்பதனால் ஹவ்யவாகனனாகிறாய். உனக்காக வேதங்கள் உண்டாயினவாதலின் நீ ஜாதவேதனாகிறாய். அக்னியே! நீ [2]சித்ரபானு; தேவர்களிற் சிறந்தவன். நீ அனலன்; சுவர்க்கத்தின் வாயிலைத் திறப்பவன்; ஹோமங்களைப் புசிப்பவன்; ஜ்வலிப்பவன்; [3]சிகி; நீ [4]வைசுவாநரன்; [5]பிங்கேசன்; [6]பிலவங்கன்; [7]பூரிதேஜன்; நீ சுப்பிரமணியக் கடவுளை யீன்றவன்; மகிமையுள்ளவன்; [8]ருத்திர கர்ப்பன்; பொன்னுக்குக் காரணமானவன; அக்னி பகவான் எனக்குச் சக்தியையும், வாயு பகவான் உயிரையும், பூமிதேவி வன்மையையும், ஜலம் சுகத்தையும் தரவேண்டும். ஜலத்தின் [9]கர்ப்பமாக இருப்பவனே! பெருஞ்சக்தியுள்ளவனே; ஜாதவேதனே! தேவர்க்கரசனே! தேவர்களுக்கு முகமாகிய நீ இந்த சத்தியத்தினால் என் முன்னின்று என்னைப் பரிசுத்தஞ்செய். ரிஷிகளாலும் பிராம்மணர்களாலும் தேவர்களாலும் அசுரர்களாலும் யாகங்களில் எப்போதும் நன்றாக ஹோமஞ் செய்யப்பட்டவனே! இந்த சத்தியத்தினால் என்னைக் காப்பாயாக. புகைக்கொடியுள்ளவனும் ஜ்வாலையுள்ளவனும் பாவங்களை யழிப்பவனும் காற்றினால் விருத்தியாகிறவனும் எல்லாப் பிராணிகளிடத்தும் எப்போதுமிருப்பவனுமாகிய நீ இந்த சத்தியத்தினால் என்னைக் காப்பாற்றக்கடவாய். அக்னி பகவானே! நான் பரிசுத்தனாகப் பக்தியுடன் உன்னைத் துதித்திருக்கிறேன். சந்தோஷத்தையும் தேகபுஷ்டியையும் சாஸ்திர ஞானத்தையும் மேன்மேலும் பக்தியையும் எனக்குத் தருவாயாக' என்றான். அக்னி பகவானுக்குரிய இந்த மந்திரத்தை இவ்வாறு படித்து அக்னியில் ஹோமஞ் செய்பவன் நீங்காத செல்வத்துடன் எப்போதும் ஜிதேந்திரியனாகி எல்லாப் பாவங்களாலும் விடபபடுவான். ஜனமேஜயரே! புருஷ சிரேஷ்டனான சகதேவன, 'யக்ஞங்களை நடத்துகிற அக்னியே! நீ யாகத்திற்கு இந்த இடையூற்றைச் செய்யத்தகாது' என்று சொல்லிப் பயத்தினால் நடுங்கின அந்தச் சேனையின முன்னிலையில் பூமி மறையத் தர்பபைகளைப் பரப்பிச் சாஸ்திரப்பிரகாரம்

---

1 அக்னியில் ஹோமஞ்செய்வதனால் தேவர்களுக்குத் திருப்தி யுண்டாகிறது.

2 பல வர்ணங்களான கிரணங்களையுடையவன்.

3 ஜ்வாலையுள்ளவன். 4 எல்லா மனிதர்களிடத்தும் இருப்பவன்.

5 பசுமை நிறமுள்ளவற்றுள் சிறந்தவன். 6 தாண்டிச் செல்லுகிறவன்.

7 பேரொளியுள்ளவன். 8 சிவனுக்குள் ளிருப்பவன்.

9 வடவாமுகாக்னி.

அக்னியைக் குறித்துத் தவஞ்செய்தான். அக்னியும் கருங்கடல் கரைகடவாமலிருப்பதுபோல சகதேவன் பிரார்த்தனையை அதிக்கிரமியாமலிருந்தான். அக்னி கௌரவர்களில் சிரேஷ்டனும் மனிதர்களுக்குப் பிரபுவுமான அந்தச் சகதேவனிடம் வந்து மௌனமையாகவும், இன்சொல்லாகவும், 'கௌரவனே! எழு, எழு; உனக்கு இந்தப் பரீட்சையை நான் செய்தேன். உனக்கும் தர்மராஜருக்குமுள்ள அபிபிராயங்களெல்லாவற்றையும் நான் அறிவேன். பரதசிரேஷ்டனே! நீலராஜாவின் குலத்தைச் சேர்ந்த சந்ததிகளுள்ள வரையிலும் நான் இந்த நகரத்தைக் காக்கவேண்டியவனாக இருக்கிறேன். பாண்டவனே! ஆனாலும், உன் மனத்தின் விருப்பத்தைச் செய்வேன்' என்று சொன்னான். ஜனமேஜயரே! உடனே, சகதேவன் மனமகிழ்ந்து எழுந்து கரங்கள் குவித்துத் தலை வணங்கி அக்னி பகவானைப் பூஜித்தான். அக்னி பகவான் திரும்பிச் சென்ற பிறகு நீலராஜன் அக்னி பகவானுடைய கட்டளையினாலேயே புருஷசிரேஷ்டனும் யுத்த வீரருக்குத் தலைவனுமாகிய சகதேவனை மரியாதையாக எதிர்கொண்டழைத்துப் பூஜித்தான். சகதேவன் அவன செய்த மரியாதையைப் பெற்றுக்கொண்டு அவனைக் கப்பங்கட்டுவித்த பிறகு, அங்கிருந்து தென் திசையை ஜயிக்கச் சென்றான்.

சிறந்த கைவன்மையுள்ள அந்தச் சகதேவன், அளவற்ற சக்தியுள்ள திரைபுரனென்னும் அரசனை உட்படுத்தி, பராக்கிரமத்தினால் பௌரவ ராஜனை ஜயித்தான். சிறந்த கைகளையுடைய சகதேவன், பிறகு, கௌசிகரை ஆசாரியராகவுடைய ஆகிருதி யென்னும் ஸௌராஷ்டிர தேசாதிபதியைப் பெருமுயற்சியினால் வசப்படுத்தினான். தர்மாத்மாவான அந்தச் சகதேவன் ஸௌராஷ்டிர தேசத்திலிருந்துகொண்டே சிறந்த கௌரவமுள்ளவனும் சிறந்த புத்திமானும் போஜகடமெனனும் நகரத்திலிருப்வனும் இந்திரனுக்கு நேரில் சிநேகிதனுமான பீஷ்மகனுக்கும் அவன் புத்திரனான ருக்மி யென்பவனுக்கும் தூதனுப்பினான். ஜனமேஜய மகாராஜாவே! பீஷ்மகனும் அவன் மகனான ருக்மியும் சகதேவனிடம் அன்புபற்றியும் கிருஷ்ணனை நினைத்தும் சகதேவனுடைய கட்டளையை ஏற்றுக்கொண்டனர். சிறந்த பலமும பராக்கிரமமுமுள்ளவனும் யுத்த வீரரிற் சிறந்தவனும் சிறந்த புத்திசாலியுமான சகதேவன் அவர்களிடம் ரத்தினங்களைப பெற்றுக்கொண்டு மறுபடியும் சென்று சூர்ப்பாரகம் தாலாகடமென்னும் தேசங்களையும் தண்டகாவனத்தையும் கடலிலுள்ள தீவுகளில் வசிக்கும் மிலேச்ச ஜாதியிற் பிறந்த நிஷாதர்கள் புருஷாதர்கள் கர்ணப் பிராவர்ணர்கள் காலமுகர்க

ளென்னும் நர ராக்ஷஸருக்குப் பிறந்த அரசர்களேயும் கோலகிரி முழுவதையும், சுரபி பட்டணத்தையும், தாமிரமென்னும் பெயருள்ள தீவையும், ராமகமென்னும் பர்வதத்தையும், திமிங்கிலனென்னும் ராஜாவையும் வசப்படுத்தி, ஒற்றைக்காலையுடைய மனிதர்களேயும், கேரளர்களேயும், காட்டிலுள்ளவர்களேயும் ஸஞ்சயந்தி பாஷண்டம் கரஹாடகமென்னும் நகரங்களேயும் தூதர்களாலேயே வசப்படுத்தி, அவர்களேக் கப்பங் கட்டுவித்தான். பாண்டியர்கள், திராவிடர்கள், ஒட்ரர்கள், கேரளர்கள், ஆந்திரர்கள், தாளவனர்கள், கலிங்கர்கள், [1]உஷ்டிரகர்ணிகர்கள் ஆகிய இவர்களேயும், அழகான காடுகளேயும், நகரங்களேயும், யவனர்களின் பட்டணத்தையும் தூதர்களேக்கொண்டே உட்படுத்தி அவர்களேக் கப்பங் கட்டுவித்தான். அதன்பிறகு தாமிரபர்ணி நதிக்குச் சென்று கன்யா தீர்த்தத்தைக் கடந்து தென்தேசமெல்லாம் ஜயித்தபின், சகதேவன், அலேகள் நிரம்பின கடலின் வடகரையை அடைந்து பீமசேனனுடைய புத்திரனை கடோத்கசனே நினைத்தான். நினைத்தவுடன், ராக்ஷஸனை கடோத்கசன் எதிரிற் காணப்பட்டான். பகைவரையழிப்பவனும் சிறந்த புத்திமானுமாகிய சகதேவன் கடற்கரையிலுள்ள அந்தத் தாழ்வரையிலிருந்துகொண்டே மேரு மலேச் சிகரம்போல வந்த கடோத்கசனேப் பார்த்துத் தர்மராஜருடைய கட்டளேக்காக வரவேண்டுமென்று இன்சொல்லாகச் சொன்னான். உடனே, கடோத்கசன் ராக்ஷஸ சேவகர்களோடு சகதேவனே வணங்கி நின்றான். தர்மாத்மாவும் பகைவரை ஜயிப்பவனுமாகிய சகதேவன் அங்கிருந்துகொண்டே மிக்க தைரியமும் பயங்கரமாகிய உருவமுமுள்ளவனுகிய கடோத்கசனேப் புலஸ்திய குலத்தோரும் மகாத்மாவுமாகிய விபீஷணருக்கு சிநேகத்தை முன்னிட்டுத் தூதுவிடுத்தான். சிறந்த புத்தியுள்ளவரும் பிரபுவுமான விபீஷணரும், அது கிருஷ்ணனுற் செய்யப்பட்டதென்று நினைத்து, சகதேவனுடைய கட்டளேயை அன்புடன் அங்கீகரித்தார்; அதன்பிறகு, சந்தனக் கட்டைகளேயும் அகிற்கட்டைகளேயும் உயர்ந்த ஆபரணங்களேயும் பெருவிலே பெற்ற ஆடைகளேயும் மணிகளேயும் இன்னும் பலவகையான சிறந்த பொருள்களேயும் அனுப்பினர்" என்றார்.

---

1 ஒட்டகக்காதர்கள்.

## முப்பத்துமூன்றாவது அத்தியாயம்

## திக்விஜய பர்வம் (தொடர்ச்சி)

**(ஜனமேஜயர் மறுபடியும் கேட்க, வைசம்பாயனர் சகதேவன் சோழநாட்டுக்கும் பாண்டியநாட்டுக்கும் சென்றதைச் சொல்லியது)**

ஜனமேஜயர், "பிராம்மணோத்தமரே! கடோத்கசன் வரவையும் அவன் இலங்கைக்குப் போனதையும் விபீஷணரைக் கண்டதையும் காவேரியைப் பார்த்ததையும் கேட்க விரும்புகிறேன். வரிசையாக எனக்குச் சொல்லும்" என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லுகிறார்.

"ஜனமேஜயரே! சகதேவன் பராக்கிரமத்தை நடந்தவாறு சொல்லுகிறேன்; கேளும். அவன் தன் பராக்கிரமத்தினால் காடுகளிலும் தீவுகளிலுமுள்ளவர்களைப் போரில் வென்று, தென் திசையை வசப்படுத்திக்கொண்டு சோழநாடு சென்றான். அப்போது, சகதேவன், புண்ணிய தீர்த்தமுள்ளதும், பலவகைப் பறவைக் கூட்டங்களினால் அடையப்பட்டதும், முனிவர்களினால் அலங்கரிக்கப்பட்டதும், ஆச்சா, லோத்திரம், மருதம், வில்வம், நாவல், இலவு, முருக்கு, கடம்பு, ஏழிலம்பாலை, குமிழ், நெல்லி, பெருங்கிளைகளுள்ள ஆல், புளி, அத்தி, வன்னி, பலாசம், அரசு, கருங்காலி, இலந்தை, அசுவகர்ணம், மா, புண்ட்ரகம், வாழை முதலிய மரங்களினால் வியாபிக்கப்பட்டு விளங்குவதும்,சக்ரவாகம், வாத்து, நீர்க்காக்கை, கடற்காக்கை, அன்றில், நீர்க்கோழி முதலிய நீர்ப்பறவைகள் அனேகம் கூவப்பெற்றதும், அனேக ரிஷி ஆசிரமங்களினாலும் பூஜிப்பதற்குரிய மரங்களினாலும் விளங்குவதும், வேதங்களிலும் வேதாங்கங்களிலும் கரைகண்ட பரிசுத்தரான பிராம்மணர்களினால் விளங்குவதும், சிலவிடங்களில் கரையில் முளைத்திருக்கும் மரங்கள் நிரம்பப் பூத்திருப்பதனால் மாலைகளை அணிந்திருப்பதுபோன்றதும், சிலவிடங்களில் செங்கழுநீர், குவளை, செவ்வல்லி, ஆம்பல், தாமரை முதலியவைகள் மலர்ந்து அழகாயிருப்பதுமாகிய நதிகளிற் சிறந்த காவிரியைக் கண்டு, 'நமது தேசத்தில் கங்கை எவ்வாறோ அவ்வாறே இந்தக் காவேரி சிறந்தது' என்று சந்தோஷமடைந்தான். சகதேவன் அந்நதியைச் சேனைகளுடன் தாண்டி, தென்கரை சேர்ந்து செல்லத் தொடங்கினான். பாண்டவன் அந்தத் தேசத்தில் வந்திருப்பதைக் கேட்டு அத்தேசத்திலுள்ளவர்கள் விருப்பத்துடன் அவனைக் காணச் சென்றனர். காண்பதற்கு அழகான [1]தமிழ்நாட்டாராகிய ஆடவரும் மங்கையரும் அங்கே சென்று

1 மூலத்தில், 'த்ரமிடா:' என்றிருக்கிறது.

அந்தப் பாண்டவனைச் சந்தோஷத்துடன் கண்டனர். மிருதுவான தேகமும் விசாலமான கண்களுமுள்ளவனும் தேவதைக்கு ஒப்பானவனும் இவ்வுலகத்துள் மிக்க அழகுள்ளவனும் ஆச்சரியப்படத்தக்கவனுமாகிய சகதேவன் போகும்போது அந்தத் தமிழ் நாட்டார்கள் கூடிக் கண்ணிமை கொட்டாமற் பார்த்தனர். குமாரக்கடவுளுக்கொப்பான அந்தச் சகதேவனைக் கண்டு மங்கள கானங்களோடு கூடிய தோத்திரங்களைச் செய்து, விரும்பத்தக்க பற்பல உயர்ந்த பொருள்களையும், மற்றும் விரும்பத்தக்க பல சௌக்கியங்களையும் அளித்து உபசரித்தனர். சிறந்த கைகளையுடைய சகதேவனும் சந்தோஷத்தோடு அந்தத் தமிழர்களைக் கண்டு அவர்களுக்கு விடைகொடுத்தனுப்பித் தென்திசைக்குப் புறப்பட்டான். தமிழ்நாட்டரசனாகிய சோழராஜனைத் தனது தூதனாலேயே விரைவில் வசப்படுத்தி அவனிடமிருந்து ரத்தினங்களைப் பெற்றுக்கொண்டு பாண்டியநாடு சென்றான். சோழநாட்டிலுள்ள மற்ற மனிதர்கள் சகதேவனைக் காண்பதில் ஆசை தீராதவர்களாக அவன் செல்லும்போது சந்தோஷத்துடன் பின் சென்றுகொண்டே பாண்டிய தேசம் போயினர். ஜனமேஜய ராஜாவே! பிறகு, சகதேவன் காட்டிற் சஞ்சரிக்கும் யானைகளையும், புலிகளையும், மான்களையும், மற்றுமுள்ள அனேக மிருகக் கூட்டங்களையும், கிளிகளையும், மயில்களையும், கழுகுகளையும் காட்டுக் கோழிகளையும் பார்த்துக்கொண்டு, பாண்டிய நாட்டைச் சேர்ந்து, அர்ஜுனனுக்கு மாமனாகிய பாண்டிய ராஜனுக்குத் தூதர்களை [1]அனுப்பினான். மலயத்துவஜனாகிய பாண்டியன் சகதேவன் கட்டளையை அன்புடன் அங்கீகரித்தான். அர்ஜுனன் மனைவியும் பாண்டியராஜ புத்திரியும் அழகிற் சிறந்தவளும் நல்ல லட்சணங்கள் பொருந்தினவளும் பெண்களிற் சிறந்தவளுமாகிய சித்திராங்கதை யென்று பெயர்பெற்ற தமிழ்ப்பெண் சகதேவன் வந்ததைத் தன் தந்தையினால் அந்தப்புரத்திற் கேள்வியுற்று மரியாதைக்காக மிகுதியான ரத்தினங்களை அன்புடன் அனுப்பினாள். புகழ்பெற்ற பாண்டியராஜனும் பலவகையான விலையுயர்ந்த பொருள்களையும் மணிகளையும் முத்துக்களையும் பவழங்களையும் தூதர்களையும் சகதேவனுக்கு அனுப்பினான். ஜனமேஜய ராஜரே! அந்த நிகரற்ற மரியாதையைக் கண்டு சகதேவனும் சந்தோஷத்தோடு தனது சகோதரன் புதல்வனாகிய பப்ருவாகனனுக்கு ரத்தினங்களை மிகுதியாக அளித்து, அர்ஜுனன் மாமனும் திராவிட தேசத்துக்கும் மணலூர் நகரத்திற்கும்

---

1 ஆதிபர்வம் 836-வது பக்கத்தில் சித்திரவாகனனென்று பெயர் கூறப்பட்டிருக்கிறது.

ராஜாவுமான மலயத்வஜ பாண்டியனைத் தூதர்களைக்கொண்டே வசப்படுத்தி, அவனிடத்திலிருந்து ரத்தினங்களைப் பெற்றுக் கொண்டு தமிழர்களால் சூழப்பட்டவனாக அகஸ்தியருக்கு இருப்பிடமும் தேவலோகத்துக்குச் சமானமுமான சிறந்த மலையைச் சேர்ந்தான். ஜனமேஜயரே! அந்த மலய மலையைப் பிரதட்சிணஞ் செய்து தெளிவும் குளிர்ச்சியுமுள்ள தீர்த்தமுடையதும், மனத்தைக் கவர்கின்றதுமான தாமிரபர்ணி என்கிற சிறந்த நதியைக் கடந்து கடற்கரை சேர்ந்து அங்கே தங்கினான்.

---

முப்பத்துநான்காவது அத்தியாயம்

## திக்விஜய பர்வம் (தொடர்ச்சி)

(சகதேவனால் அனுப்பப்பட்ட கடோத்கசன் விபீஷணரிடம் சென்று காணிக்கை வாங்கி வந்து கொடுத்ததும், சகதேவன் இந்திரப் பிரஸ்தம் சேர்ந்து தர்மராஜருக்கு ஒப்பித்ததும்)

அரசர்க்கரசரும் பாரதருமான ஜனமேஜய ராஜாவே! அதன் பிறகு, சிறந்த கைகளையுடைய ராஜாவான சகதேவன் புத்திமான்களுட் சிறந்தவரும் நல்ல ஆலோசனை யுள்ளவருமான மந்திரிகளுடன் கூட ஆலோசனை செய்து நிச்சயித்துக் கொண்டு ஆவலோடு தனது சகோதரன் மைந்தனாகிய கடோத்கசனை நினைத்தான். நினைத்த மாத்திரத்தில், அந்த ராக்ஷஸன் காணப்பட்டான். மிக்க உயரமும், பெருங் கைகளுமுள்ளவனும், இருண்ட மேகம் போன்றவனும். மாற்றேறின பொற்குண்டலங்களையும் விசித்திரமான முத்தாரங்களையும் தோள்வளைகளையும் ரத்தினச் சதங்கைகளையும் பொன் மாலையையும் அரைக்கட்டையையும் கடகங்களையும் தோள்வளைகளையும் கிரீடத்தையும் மற்றுமுள்ள ஆபரணங்களெல்லாவற்றையும் அணிந்துகொண்டவனும், நீண்ட கோரப்பற்களும் சிவந்த கூந்தலும் செம்பட்டை நிறமான மீசையுமுள்ளவனும்,பயங்கரமான தேகமுள்ளவனும்,செஞ்சந்தன மணிந்தவனும், மெல்லிய ஆடை தரித்தவனும், பலசாலியுமான அந்தக் கடோத்கசனைக் கண்டு, அங்குள்ள ஜனங்களனைவரும் சிங்கத்தைக் கண்ட அற்ப மிருகங்கள்போலப் பயந்தோடினர். ராவணன் புலஸ்தியரிடம் வருவதுபோல் அவன் சகதேவனிடம் வந்தான். அரசரே! பிறகு, கடோத்கசன் சகதேவனை நமஸ்கரித்துக் கரங்குவித்து வணக்கமாக நின்று, 'யான் செய்யத்தக்கது யாது?' என்று கேட்டான். மேரு மலையின் சிகரம்போல வந்து

நிற்கும் அந்தக் கடோத்கசனை, பாண்டவனான அந்தச் சகதேவன், இரண்டு கைகளாலும் தழுவி உச்சிமோந்து மந்திரிகளுடன் கூடி அவனுக்கு மரியாதை செய்து அன்புடன், 'மகா பலசாலியான குழந்தாய்! கப்பத்தின் பொருட்டு நான் அனுப்பினதாக லங்கா புரிக்குச் சென்று அங்கு ராக்ஷஸர்களுக்கு அரசரும் மகாத்மாவு மான விபீஷணரைக் கண்டு ராஜசூய யாகத்திற்காகப் பலவகை யான ரத்தினங்களை மிகுதியாகப் பெற்றுக்கொண்டு திரும்பி வா' என்று சொன்னான்.

ஜனமேஜயரே! சகதேவனால் இவ்வாறு உரைக்கப்பட்ட கடோத்கசன் மனமகிழ்ந்து 'அவ்வாறே ஆகட்டும்' என்று சொல்லித் தென்திசை நோக்கிச் சென்றான். வேந்தரே! சகதேவனைப் பிரதட்சிணஞ் செய்து லங்கையை நோக்கிப் புறப்பட்ட அந்தக் கடோத்கசன் ஆமைகளும் முதலைகளும் சிறு மீன்களும் பெரு மீன்களும் நீர்யானைகளும் சிப்பிகளும் சங்குகளும் மிகுதியாக நிரம்பியிருக்கும் கடலைக் கண்டான். அரசர்க்கரசே! அந்தக் கடோத்கசன், ஸ்ரீராமபிரானுடைய திருவணையைக் கண்டு, அவ ருடைய சக்தியை நினைத்துக்கொண்டே கடலின் தென்கரையைச் சேர்ந்து சுவர்க்கம்போல அழகானதும், சுற்றுமதிலுள்ளதும், அழகான கோபுர வாயில்களினால் விளங்குவதும், வெண்மை யும் செம்மையுமான அநேக மாடமாளிகைகள் நிரம்பியதும், அழகான மிருதங்க சப்தமுள்ளதும், எக்காலத்திலும் காய்த்தும் பூத்துமிருக்கும் மரங்களுள்ள தோட்டங்களினால் அழகாயிருப்ப தும், மலர்களின் மணம் நிரம்பிய அழகான ராஜ மார்க்கங்களுள் ளதும், அனேக ரத்தினங்கள் நிரம்பினதும், இந்திரனுடைய அமராவதி நகருக்கு நிகராயிருப்பதும், ராக்ஷஸர்களால் அடையப் பட்டதுமான லங்கா நகரத்தைக் கண்டு அதில் பிரவேசித்தான். அந்தக் கடோத்கசன், சூலம், பிராஸம் முதலிய ஆயுதங் களைத் தரித்துப் பலவித அலங்காரங்களை அணிந்திருக்கும் வீரர் களான அநேக ராக்ஷஸர்களையும், தெய்வலோகத்துப் பூமாலைகள் சூடியும் திவ்யாபரணங்களை யணிந்தும் மதுபானத்தினால் கடைக் கண்கள் சிவந்துமிருப்பவரும் பருத்த நிதம்பங்களும் கொங்கை களுமுள்ளவர்களான அழகிய பெண்களையும் கண்டான். பீம சேனன் புதல்வனான கடோத்கசனைக் கண்டு அவர்கள் மகிழ்ச்சி யையும் வியப்பையும் அடைந்தனர். அந்தக் கடோத்கசன் இந்திர கிருகத்திற்கு நிகரான ராஜகிருகத்தைச் சேர்ந்து துவார பாலகனைச் சந்தித்து, 'பாண்டுவென்று பெயர் பெற்றவரும் மகா பலசாலியும் கௌரவ சிரேஷ்டருமான அரசர் ஒருவர் இருந்தார். அவருடைய இளைய மைந்தர் சகதேவரென்பவரைக் கேள்வியுற்

திருக்கலாம். நான் தர்மராஜாவின் கப்பத்திற்காக அவரால் அனுப்பப்பட்ட தூதன். அரசர்க்கரசரான விபீஷணரைப் பார்க்க விரும்புகிறேன். நீ சீக்கிரம் என்னைப்பற்றித் தெரிவி' என்று சொன்னான்.

ஜனமேஜய ராஜரே! அந்தத் துவாரபாலகன் அவனுடைய அந்தச் சொல்லைக் கேட்டு, 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லித் தெரிவிப்பதற்காக அரண்மனைக்குட் போனான். அவன், கைகூப்பி நின்று தூதனுடைய சொல்லை முழுதும் ராஜாவுக்குச் சொன்னான் தர்மாத்மாவும் ராக்ஷஸ ராஜாவுமான விபீஷணர், துவாரபாலகன் சொன்னதைக் கேட்டு, 'அந்தத் தூதனை என்னிடம் அழைத்து வா' என்று சொன்னார். தர்மந் தெரிந்த மகாத்மாவாகிய ராஜாவினால் இவ்வாறு கட்டளையிடப் பட்ட அந்தத் துவாரபாலகன் விரைவாக வெளியில் வந்து கடோத்கசனைக் கண்டு, 'தூதனே! சீக்கிரம் ராஜாவைப் பார்க்க லாம்; நேரே உள்ளே செல்லலாம்' என்று சொன்னான். துவார பாலகனுடைய சொல்லைக் கேட்டுக் கடோத்கசன் உள்ளே சென்று, கைலாசகிரிக்கு ஒப்பானதும், மாற்றுயர்ந்த பொன்மய மான தோரணங்களுள்ளதும், சுற்றுமதிலுள்ளதும், கோபுரங் களினால் சோபிப்பதும், நிலா முற்றங்களும் தேவதா கிருகங் களும் நிரம்பியதும், அநேக ரத்தினங்கள் விளங்குவதும், பொன்னினாலும் தங்கத்தினாலும் படிகத்தினாலும் வெள்ளியி னாலும் வச்சிரங்களினாலும் வைடூரியங்களினாலும் செய்யப்பட்ட மிக்க அழகான தூண்களும் பலவகைக் கொடிகளும் கொடிமரங் களுமுள்ளதும், ரத்தினங்கள் இழைத்துப் பல நிறமாயிருப்பதும், எங்கும் மலர்மாலைகள் தொங்குவதும், உயர்ந்த தங்கமேடைக ளுள்ளதுமான அழகிய அந்தக் கிருகத்தை முழுவதும் பார்த்தான். பீமசேனனுக்குப் பிரியம் இடிப்பிக்கும் புதல்வனான கடோத்கசன், தந்தி நாதமும் ஸ்வரமும் சேர்ந்து சமதாளமும் அக்ஷர கால அளவு முள்ள தேவதுந்துபி வாத்தியங்கள் இடைவிடாமல் முழங்கு வதுமான இனிய சங்கீதத்தைக் கேட்டுச் சந்தோஷமடைந்தான். பாரதரான ஜனமேஜயரே! அதன் பிறகு அந்தக் கடோத்கசன், அந்தத் துவாரபாலகனுடன் கூடவே அழகான அநேகக் கட்டுக்க ளுள் பிரவேசித்து, ஆகாயத்தில் சூரியனிருப்பதுபோலச் சிறந்த சிம்மாசனத்தில் வீற்றிருப்பவரும், முத்துக்களும் ரத்தினங்களும் பற்பல உயர்ந்த ஆபரணங்களும் அணிந்துகொண்டவரும், தேவ ரைப் போன்ற உருவமுள்ளவரும், தேவலோகத்திய சிறந்த புஷ்ப மாலைகளையும் ஆடைகளையும் தரித்து உயர்ந்த சாந்தணிந்து கொண்டு சூரியனைப்போலவும் அக்னியைப்போலவும் ஒளியுள்ள

தேகத்தினால் விளங்குகின்றவரும், தேவர்களுடன் தேவேந்திரன் இருப்பதுபோல மந்திரிகளுடன் கூடியிருப்பவரும், மகாத்மாக்களான யக்ஷர்களும் அழகிய ஒளியுள்ள தெய்வப் பெண்களும் மங்கள கானங்கள் செய்து சுவர்க்கத்திலிருப்பவர்போலக் கொண்டாடப்பெற்றவரும், இரண்டு சிறந்த பெண்களினால் பொற்காம்புள்ளவையும் உயர்ந்த விலைபெற்றவையுமான இரண்டு சாமரங்களைப் பிடித்துத் தலைக்குமேல் வீசப்பெற்றவரும், குபேரனைப் போலவும் வருணனைப்போலவும் மகிமையும் ஐசுவரியமும் பெற்றவரும், எக்காலமும் தர்மத்திலேயே இருப்பவரும், ஆச்சரியமான ராக்ஷஸ ராஜாவும், இக்ஷ்வாகு குலநாதராகிய ஸ்ரீராமபிரானை என்றும் மனத்தில் நினைத்திருப்பவரும், மகாத்மாவுமான விபீஷணரைக் கண்டு கைகூப்பி வந்தனஞ் செய்தான். மகாவீரனான கடோத்கசன் இந்திரனிடத்தில் சித்ரரதனென்னும் கந்தர்வன் நிற்பதுபோல அவரிடத்தில் வணங்கி நின்றான். ராக்ஷஸ ராஜாவான அந்த விபீஷணர் தூதனாக வந்த அந்தக் கடோத்கசனைக் கண்டு முறைப்படி மரியாதை செய்து இன்சொல்லாக, 'கப்பத்தை விரும்புகின்ற அவ்வரசன் யாருடைய வம்சத்தில் பிறந்தவன்? அவன் உடன் பிறந்தவர்கள் அனைவரையும் அவனுடைய நகரத்தையும் தேசத்தையும் உன்னையும் நீ வந்த காரியத்தையும் எல்லாவற்றையும்பற்றித் தெளிவாகக் கேட்க விரும்புகிறேன். இவற்றையெல்லாம் தனித்தனியே எனக்கு விரித்துச் சொல்' என்று கேட்டார். மகாத்மாவான விபீஷணரால் இவ்வாறு வினவப்பெற்ற கடோத்கசன் கைகூப்பி நின்று பின் வருமாறு பொருத்தமான மறுமொழி சொல்லலானான் :

'சந்திர வம்சத்திற் பிறந்த மகாபலசாலியான பாண்டுவென்னும் ஓர் அரசர் இருந்தார். பாண்டுவுக்கு இந்திரனுக்கொப்பான பராக்கிரமமுள்ள ஐந்து குமாரர்கள் பிறந்தனர். அவர்களுள் மூத்தவர் யுதிஷ்டிரரென்றும், அஜாதசத்ருவென்றும் பெயர்பெற்றவர்; தர்மத்திலேயே மனமுள்ளவர்; தர்மமே உருவங்கொண்டது போன்றவர். அந்த யுதிஷ்டிரரென்னும் ராஜா கங்கைக்குத் தென்கரையில் அஸ்தினபுரி நகரத்தில் ராஜ்யாதிபத்யம் அடைந்து ராஜ்யத்தை ஆண்டார். ஓ! ராஜசிரேஷ்டரே! அந்த ராஜ்யத்தைத் திருதராஷ்டிரனுக்குக் கொடுத்துவிட்டுப் பிறகு இந்திரப்பிரஸ்தம் சென்றார். அந்த இரண்டு நகரங்களும் கங்கைக்கும் யமுனைக்கும் இடையிலிருக்கின்றன. ராஜசிரேஷ்டரான விபீஷணரே! அந்த இந்திரப்பிரஸ்தத்தில் தமது சகோதரர்களுடன் மகிழ்ச்சியோடிருந்து எங்கள் ராஜா அரசு நடத்துகிறார். அவருக்கு இளையவர் சிறந்த கைகளையுடையவர், பீமசேனரென்று கியாதி பெற்றவர்; பெருஞ் சக்தியும்

கீர்த்தியும் உள்ளவர் ; இந்திரனுக்கு ஒப்பான பராக்கிரமமுள்ள வர். அந்தப் பாண்டு புத்திரர் பலத்தினால் பதினாயிரம் யானைகளுக்குச் சமமானவர். அவருக்கு இளையவர் அர்ஜுனனென்பவர் ; சிறந்த பராக்கிரமமுடையவர். மிருதுவான தேகமும் சிறந்த சக்தியுமுள்ளவர் ; சூரத்தனத்தில் உலகத்தில் பெயர் பெற்றவர் , சூரத்தனத்தில் கார்த்தவீரியனுக்கும், பலத்தில் கடலுக்கும், அஸ்திர வித்தையில் பரசுராமருக்கும், யுத்தஞ் செய்வதில் ஸ்ரீராமபிரானுக்கும், வடிவில் இந்திரனுக்கும், பிரகாசத்தில் சூரியனுக்கும் ஒப்பானவர். அந்தப் பல்குனர், தேவர்கள், தானவர்கள், கந்தர்வர்கள், பிசாசர்கள், நாகர்கள், அரக்கர்கள், மனிதர்களாகிய இவர்களனைவரும் சேர்ந்தாலும் யுத்தத்தில் (அவர்களால்) வெல்லமுடியாதவர். அவர் தேவக் கூட்டங்களோடு யுத்தத்திற்கு வந்த இந்திரனைத் தம் பராக்கிரமத்தினால் ஜயித்துக் காண்டவ வனத்தை அக்னிக்கு எரிக்கக் கொடுத்து அக்னியைத் திருப்திசெய்வித்தவர். அக்னியைத் திருப்தி செய்வித்ததினால் அவருக்குத் திவ்யாஸ்திரங்கள் கிடைத்தன. அரசரே ! தேவர்களும் அடைவதற்கரிய சுபத்திரையென்று பெயர் பெற்ற கிருஷ்ண சகோதரி அவரால் அடையப்பெற்றாள். அரசரே ! அர்ஜுனனுக்கு இளையவர் நகுலர் என்று பெயர் பெற்றவர் ; அவர் உருவமெடுத்து வந்த மன்மதன்போல் உலகத்தில் மிக்க அழகானவர். அவருக்கு இளையவர் சகதேவனென்று கியாதி பெற்றவர் ; மகா பராக்கிரமசாலி ; யுத்தத்தில் குமாரக் கடவுளுக்கு நிகரானவர். நான் அவரால் உம்மிடம் அனுப்பப் பட்டவன். எனக்குக் கடோத்கசனென்று பெயர். நான் பீமசேன ராஜாவின் புத்திரன் ; மிக்க பலசாலி. என் தாயார் மகா பாக்கியசாலியான ஹிடிம்பை யென்னும் அரக்கி. நான் பாண்டவர்களுக்கு உபகாரஞ் செய்வதற்காக இந்தப் புவனியெல்லாம் சஞ்சரிக்கிறேன். யுதிஷ்டிரர் இந்தப் பூமி முழுமைக்கும் அரசராய்விட்டார். அவர் ராஜசூய மென்னும் சிறந்த யாகத்தைச் செய்ய ஆரம்பித்துக் கப்பம் வாங்குவதற்காகத் தம் சகோதரர்களை எல்லாத் திசைகளிலும் அனுப்பியிருக்கிறார். அவர் கிருஷ்ணனுடன் சேர்ந்து (யோசித்துத்) தம்பிமாரை அனுப்பினார். அரசரே ! அவர்களில் மகாரதரும் மகாபலசாலியுமான அர்ஜுனர் விரைவாக வடக்கே சென்று மேருமலையைத் தாண்டி லக்ஷம் யோஜனை தூரம் சென்று அரசர்களெல்லாரையும் தமது பராக்கிரமத்தினால் யுத்தத்தில் ஜயித்தும், கொன்றும் வசப்படுத்தி, சுவர்க்கத்தின் அருகே சென்று அதிகமான ரத்தினங்களையும் உயர்ந்த குதிரைகளையும் பலவகையான தனங்களையும் கொண்டுவந்து அவற்றையெல்லாம் தர்மராஜருக்குக் கொடுத்

தார். அரசர்க்கரசரே! பீமசேனரும் தம் வலிமையினால் கீழ்த் திசையை ஜயித்து அரசர்களை வசப்படுத்தித் தர்மராஜாவுக்குத் தனத்தை அளித்தார். அவ்வாறே, நகுலரும் கப்பத்திற்காக மேற்றிசைக்குப் புறப்பட்டார். ராஜ சிரேஷ்டரே! சகதேவர் தென் திசையைச் சேர்ந்து எல்லா அரசர்களையும் ஜயித்து அவர்களால் மரியாதை செய்யப்பெற்றுக் கப்பத்திற்காக என்னை இங்கே அனுப்பினார். பாண்டவர்களுடைய சரித்திரத்தை உமக்குச் சுருக்கமாகச் சொன்னேன். மகாராஜாவே! தர்மந் தெரிந்தவரே! தர்மராஜாவான யுதிஷ்டிரரையும் பரிசுத்தமான ராஜசூய யாகத்தையும் ஜகத்பிரபுவான கிருஷ்ண பகவானையும் நினைத்துப் பார்த்து இப்போது நீர் கப்பம் கொடுப்பதற் குரியவராகிறீர்' என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டு, ராக்ஷஸர்களுக்கு ராஜாவும் தர்மாத்மாவுமாகிய விபீஷணர் ராக்ஷஸர்களுடன் அந்த ஆக்ஞையை அங்கீகரித்தார். சிறந்த அறிவாளரான அந்தப் பிரபு அது கண்ணபிரான் செய்ததென்று நினைத்தார். பிறகு, அனேக விதமான சால்வைகளையும், விரிப்புக்களையும், மணியினாலும் பொன்னினாலும் அலங்கரிக்கப்பட்ட தந்தக் கட்டில்களையும், பொற் கட்டில்களையும், பெரிய விலைபெற்ற ஆபரணங்களையும், பவழங்களையும், முத்துக்களையும், பொற்பாண்டங்களையும், பொற் கலசங்களையும், பொற்குடங்களையும், விசித்திரமான அண்டாக்களையும், கொப்பரைகளையும், வெள்ளிப் பாத்திரங்களையும், ரத்ன குண்டலங்களையும், பொன்மலர்களையும், சிறந்த பொன்னால் செய்யப்பட்ட மற்றும் அனேகம் பொருள்களையும், விசித்திரமான சுழிகளோடு கூடியவையும் சந்திரனைப் போன்றவையுமான சங்குகளையும், யாகசாலையின் தோரண ஸ்தம்பங்களாக இருக்கத்தக்க பதினான்கு பனைமரங்களையும், பொற்றாமரை மலர்களையும், ரத்ன மயமான பல்லக்குகளையும், மிகுந்த விலைபெற்ற கிரீடங்களையும், ரத்னங்கள் இழைத்த வளைகளையும், உயர்ந்த சந்தனங்களையும், பலவகை வஸ்திரங்களையும் ராஜாவான விபீஷணர் சகதேவனுக்கு அளித்தார். மதுபானம் செய்த மதத்தினால் கண்கள் சிவந்த எண்பத்தெண்ணாயிரம் அரக்கர்கள் அந்த விலையுயர்ந்த பொருள்கள் அனைத்தையும் கொணர்ந்தனர். அந்த ரத்தினங்களெல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு கடோத்கசன் புறப்பட்டான். அவன் ராஜாவான விபீஷணருக்கு வந்தனஞ்செய்து கைகூப்பிப் பிரதட்சிணஞ் செய்து புறப்பட்டான். கடோத்கசன் ராக்ஷஸர்களோடு கூட ரத்தினங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு லங்கையிலிருந்து சகதேவனிருக்குமிடத்திற்கு விரை

வாகச் சென்றான். அவர்களனைவரும் கடலைக் கடந்து சகதேவனிடம் சேர்ந்தனர். ஜனமேஜய ராஜாவே! ரத்தினங்களைக் கொண்டுவந்திருக்கும் பயங்கரமான அரக்கரையும் கடோத்கசனையும் சகதேவன் கண்டான். அங்குள்ள தமிழர்கள் அரக்கரைக் கண்டு பயந்தோடினர். பிறகு, கடோத்கசன் சகதேவனையடைந்து கரங்குவித்து நின்றான். சகதேவனும் ரத்தினக் குவியலையும் கடோத்கசனையும் கண்டு களிப்புற்றான். தன் இருகரங்களினாலும் கடோத்கசனைத் தழுவியும் மற்ற அரக்கரைப் பார்த்தும் அன்பு பாராட்டினான். தமிழர்களனைவருக்கும் விடை கொடுத்தனுப்பின பிறகு தான் புறப்படத் தொடங்கினான். புத்திமானான சகதேவனென்னும் அரசன் அங்கிருந்து திரும்பினான். இவ்வாறு பராக்கிரமத்தினாலும் இனிய சொல்லினாலும் ஜயலக்ஷ்மி பொருந்தியிருப்பதனாலும் ராஜாக்களை ஜயித்துக் கப்பங் கட்டுவித்து அந்த வீரன் திரும்பிவந்தான். ராக்ஷஸர்களுடன் கூட ரத்தினமயமான பனைமரங்களை எடுத்துக்கொண்டு பூமியை அதிரச்செய்கிறவன்போல இந்திரப்பிரஸ்தத்தில் பிரவேசித்தான். ஜனமேஜய ராஜாவே! சகதேவன் யுதிஷ்டிரரைக் கண்டு கரங்குவித்து வணங்கி வந்தனஞ்செய்து நின்று அவரால் கொண்டாடப்பெற்றான். யாருக்கும் கிடைக்காத மிகுதியான தனக்குவியல்கள் இலங்கையிலிருந்து வந்தனவற்றைக் கண்டு தர்மராஜர் மிகுந்த சந்தோஷத்தையும் மிக்க வியப்பையும் அடைந்தார். பரத சிரேஷ்டரான ஜனமேஜய ராஜாவே! ஆயிரங் கோடிகளுக்கு மேற்பட்ட பொன்களையும், பலவகை ரத்தினங்களையும், பசுக்களையும், வெள்ளாடு செம்மறியாடு எருமைகளையும் மகாத்மாவான தர்மராஜருக்கு ஒப்பித்துத் தன் காரியத்தைச் செய்து சகதேவன் சுகமாக வசித்தான்.

---

முப்பத்தைந்தாவது அத்தியாயம்

## திக்விஜய பர்வம் (தொடர்ச்சி)

### (நகுலன் மேற்றிசையை ஜயித்துக் காணிக்கையுடன் இந்திரப்பிரஸ்தம் வந்து தர்மராஜருக்கு ஒப்பித்தது)

சமர்த்தனான நகுலன் [1] வாசுதேவனென்னும் அரசனால் ஜயிக்கப்பட்ட திக்கை ஜயித்த வகையையும் அவனுடைய செய்கைகளையும் சொல்வேன். புத்தியிற் சிறந்த நகுலன் காண்டவப்பிரஸ்தத்திலிருந்து புறப்பட்டு மேற்றிசையை நோக்கிப் பெருஞ் சேனையுடன் சென்றான். தனது பெரிய சிம்மநாதத்தினாலும் படை வீரர்களின் கர்ஜனைகளினாலும் தேருருளைகளின் ஒலியினாலும்

---

1 பௌண்ட்ரக வாசுதேவன்.

இந்தப் பூமியை அதிரச் செய்துகொண்டு தனங்களும் தானியங்களும் பசுக்களும் மிகுதியாக நிரம்பினதும் சுப்பிரமணியக் கடவுளுக்குப் பிரியமுள்ளதுமான ரோஹீதக தேசத்துக்குச் சென்றான். அவ்விடத்தில் சூரர்களான மத்த மயூரக ரென்னும் அரசர்களோடு அவனுக்குப் பெரிய சண்டை நடந்தது. சிறந்த சக்தியுள்ள அந்த நகுலன் நீரில்லாக் காடான தேச மனைத்தையும் தானியங்கள் மிகுதியாகவுள்ள சைரீஷகம், மகேத்தமென்னும் தேசங்களையும் ஆக்ரோச னென்னும் ராஜரிஷியையும் வசப்படுத்தினான். ஆக்ரோசனோடு நகுலனுக்குப் பெருஞ் சண்டை நடந்தது. அந்தப் பாண்டவன் ஆக்ரோசனுடைய தேசமாகிய தசார்ண தேசத்தை ஜயித்து அங்கிருந்து புறப்பட்டான். சிறந்த பராக்கிரமமுள்ள புருஷசிரேஷ்டனான நகுலன் சிவிகள், திரிகர்த்தர்கள், அம்பஷ்டர்கள், மாலவர்கள், நர்ப்படர்களென்னும் ஐந்து தேசத்தரசர்களையும் மத்தியமகேயர்கள், வாடதானர்களென்னும் [1]பிராம்மணர்களையும் ஜயித்து மறுபடியும் திரும்பி வந்து புஷ்கர க்ஷேத்திரமாகிய வனத்தில் வசிக்கும் உத்ஸவ சங்கேதர்களின் கூட்டத்தாரை ஜயித்தான். சிந்து நதிக்கரையிலிருக்கும் மகாபலசாலிகளான கிராமணீய ரென்பவரையும் சரஸ்வதி நதியைச் சார்ந்து மத்ஸ்யங்களினால் ஜீவிக்கும் சூத்திரர்கள் இடையர்களின் கூட்டங்களையும் மலைகளில் வசிப்பவரையும் ஜயித்துப் பஞ்சநத மென்னும் தேசத்தையும் அமர பர்வத மென்னும் மலையையும் உத்தரஜ்யோதிஷம், திவ்யகட மென்னும் நகரங்களையும் ஜயித்து, அவற்றின் [2]துவாரபாலகனைப் பராக்கிரமத்தினால் வசப்படுத்தினான். அந்த நகுலன் ராமடர்களையும் ஹாரர்களையும் ஹூணர்களையும் மற்றுமுள்ள மேற்றிசை ராஜாக்களனைவரையும் தன் கட்டளையினாலேயே கீழ்ப்படுத்தினான். பாரதரான ஜனமேஜயரே! அங்கிருந்துகொண்டே வாசுதேவனுக்குத் தூதனை அனுப்பினான். அரசரே! அச்சமற்றவனான அவ்வரசன் இவன் கட்டளையை ஏற்றுக்கொண்டான். அதன்பிறகு, பலவானான நகுலன் மத்ர தேசத்து ராஜதானியாகிய சாகல நகருக்குச் சென்று தனது மாதுலனான சல்யனைச் சிநேகத்தினால் வசப்படுத்திக்கொண்டான். ஜனமேஜய ராஜாவே! மரியாதைக்குரியவனும் யுத்த வீரரிற் சிறந்தவனுமாகிய நகுலன் அந்தச் சல்லிய ராஜனால் மரியாதை செய்யப்பெற்று மிகுதியான ரத்தினங்களைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டான். கௌரவசிரேஷ்டனும் விசித்ரமான யுத்தங்கள் தெரிந்தவனுமான நகுலன், அதன்பிறகு,

1. மூலத்தில், 'த்விஜாங்' என்றிருக்கிறது.
2. தேசங்களின் வழிக்காவலான அரசன்.

கடலின் உள்தீவுகளில் வசிக்கும் மிகக் கொடியவரான பஹ்லவர், பர்ப்பரர், கிராதர், யவனர், சகரென்னும் மிலேச்ச ராஜாக்களை வசப்படுத்தி அவர்களிடமிருந்து ரத்னங்களைப் பெற்றுக்கொண்டு திரும்பினான். மகாராஜரே! அந்த மகாத்மாவினுடைய பொக்கிஷமாகிய பெருந்தனத்தைப் பதினாயிரம் ஒட்டகங்கள் கஷ்டப்பட்டுச் சுமந்தன. பரதசிரேஷ்டரான ஜனமேஜயரே! ஜயலக்ஷ்மி பொருந்தியவனும் மாத்ரி புத்திரனுமான நகுலன் வருணனால் ரட்சிக்கப்பட்டதும் (பௌண்ட்ரக) வாசுதேவனால் ஜயிக்கப்பட்டதுமாகிய மேற்றிசையை ஜயித்து இந்திரப்பிரஸ்தத்திலிருக்கும் வீரரான யுதிஷ்டிரரிடம் வந்து அந்தத் தனத்தை அவருக்கு ஒப்பித்தான்.

**திக்விஜய பர்வம் முற்றிற்று.**

---

## முப்பத்தாறாவது அத்தியாயம்

## ராஜஸூய பர்வம்

---

### (ராஜஸூய யாகத்தின் ஆரம்பம்)

தர்மபுத்திரர் ஜனங்களை ரட்சித்ததினாலும் சத்தியத்தைக் காப்பாற்றினதினாலும் பகைவர்களை யொழித்ததினாலும் பிரஜைகள் தத்தம் கருமங்களில் தவறாமலிருந்தனர். வரிகளைச் சரியாக வாங்குவதினாலும் தாமமாக ஆளுவதினாலும் மேகம் நிரம்ப வர்ஷித்தது தேசம் செழிப்பாயிருந்தது. எல்லாத் தொழில்களும் நன்றாக நடந்தன. பசுக் காத்தல், பயிர்செய்தல், வர்த்தகம் இவையெல்லாம் ராஜாவின் ஆளுகையினால் சிறப்பாக நடந்தன. ஜனமேஜய ராஜாவே! திருடர்கள், மோசஞ் செய்பவர்கள், ராஜாவின் அபிமானம் பெற்றவர்கள் ஆகிய இவர்களிடத்திலும், ஜனங்களில் ஒருவர்க்கொருவரிடத்திலும் வஞ்சகப்பேச்சுகள் யாராலும் கேட்கப்படவில்லை. யுதிஷ்டிரர் தர்மந் தவறாமலிருந்ததனால் அந்தக் காலத்தில் அனாவிருஷ்டி, அதிவிருஷ்டி, வியாதிகள், தீப்பிடித்தல் இவையெல்லாம் இருக்கவில்லை. அரசர்கள், பிரியத்தைச் செய்வதற்கும், அடுப்பதற்கும், வழக்கமாயுள்ள கப்பத்தைக் கொடுப்பதற்கும் யுதிஷ்டிரரிடம் சென்றார்களே யல்லாது வேறு காரியங்களைப்பற்றிச் சென்றதேயில்லை. தர்மராஜருடைய பொக்கிஷம் நியாயமாக வந்த பொருள்களினாலேயே அனேக நூற்றாண்டுகள் செலவு செய்தாலும் அழியாதபடி பெருகியிருந்தது. தர்மராஜாவானவர் தமது தானியம் முதலியவற்றின் அளவையும் பொக்கிஷத்தின் அளவையும் அறிந்து யாகஞ் செய்வதற்கே

நிச்சயஞ் செய்தார். அவருக்கு வேண்டியவ ரனைவரும் தனித் தனியாகவும் சேர்ந்தும், 'பிரபுவே! நீர் யாகஞ் செய்வதற்கு இது தருணம்; இப்போதே செய்வது யுக்தம்' என்று உரைத்தனர். அவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையிலேயே பழமை யான ரிஷியும் வேதமூர்த்தியும்[1], ஞானிகள் மாத்திரமே காணக் கூடியவரும், அழிவில்லாதவரும் சிறந்தவரும், உலகத்தின் உற்பத்திக்கும பிரளயத்துக்கும் காரணரும். சென்றன வருவன நிகழ்வனவாகிய அனைத்துக்கும் ஈசுவரரும், கேசியென்னும் அசுரனைச் சம்ஹாரஞ் செய்தவரும், யாதவர்கள் அனைவர்க்கும் விரோதிகளைக் கொன்று ஆபத்துக் காலங்களில் அபயங் கொடுத்து மதில்போலக் காப்பவரும், புருஷோத்தமருமாகிய கண்ணபிரான், வசுதேவரை மரியாதையுடன் சேனைத்தலைவராக ஏற்படுத்திப் பெருஞ் சேனையினால் சூழப்பெற்றவராகத் தர்ம ராஜாவுக்கு அளவற்ற தனக்குவியலை எடுத்துக்கொண்டுவந்தார். முடிவில்லாததும் அழியாததுமாகிய ரத்தினக்கடலான அந்தத் தனக் குவியலை எடுத்துக்கொண்டு தமது தேரினொலியினால் எங்கும் முழங்கச் செய்து இந்திரப்பிரஸ்தத்தில் பிரவேசித்தார். முன்னமே நிரம்பின அந்த நகரத்தை மறுபடியும் நிரப்புவதனால் பாண்டவர்களின் பகைவர்களுக்குத் துயரஞ் செய்பவரானார். கிருஷ்ண பகவான் எழுந்தருளினதினால் பாண்டவர்களின் நகர மானது, சூரியனில்லாத இடத்தில் சூரியோதயமானதுபோலவும் காற்றில்லாதவிடத்தில் காற்றடித்ததுபோலவும் மகிழ்ந்திருந் தது. அந்தப் புருஷ சிரேஷ்டரான யுதிஷ்டிரர், தௌமியர், வியாசர் முதலிய புரோகிதர்களோடும், பீமார்ஜுன நகுல சக தேவர்களோடும் கூடி, மனக்களிப்புடன் கண்ணபிரானை எதிர் கொண்டழைத்து, சாஸ்திரப் பிரகாரம் அதிதி ஸத்காரஞ் செய்து சுகமாக உட்கார்ந்த பிறகு, குசலப்பிரச்னம் செய்து பின் வருமாறு பேசலுற்றார் :

'கிருஷ்ண! உம்மாலேதான் இந்தப் புவனி முழுவதும் என் வசத்திலிருக்கிறது. யாதவரே! மிகுந்த தனம் உமது அனுக் கிரகத்தினால் சம்பாதிக்கப்பட்டது. தேவகி புத்திரரே! மாத வரே! உமது அனுக்கிரகம் பெற்ற நான் இவற்றையெல்லாம் சாஸ்திரப்பிரகாரமாகப் பிராமண சிரேஷ்டர்களுக்கும் அக்னி பகவானுக்கும் உபயோகப்படுத்தக் கருதுகிறேன். பகவானே! சிறந்த கைகளை யுடையவரே! அதற்காக உம்மோடும் என் தம்பிக ளோடும் சேர்ந்து யாகஞ்செய்ய விரும்புகிறேன். அது விஷயத் தில் நீர் அனுமதி கொடுக்கக்கடவீர். சிறந்த புஜங்களையுடைய

1. 'தெரிந்தவர்களாக நினைப்பவருக்குத் தெரியாதவரும்' என்பது பழைய உரை.

கோவிந்தரே! நீர் உமக்குத் தீக்ஷையைச் செய்வித்துக்கொள்ளக் கடவீர். பகவானே! நீர் யாகஞ் செய்தால் நான் பாவம் நீங்கின வனுவேன். பிரபுவே! அல்லது இந்தத் தம்பிகளுடன் வேள்வி செய்யும்படி எனக்கே உத்தரவு கொடும். கிருஷ்ணு! உம்மால் அனுமதி கொடுக்கப்பெற்றுத்தான் நான் சிறந்த யாகத்தைச் செய்வேன்' என்ருர். அதைக் கேட்ட கண்ணபிரான், தர்ம ராஜாவின் குணங்களின் மிகுதியைப்பற்றி நிரம்பப் பேசி 'ராஜ சிரேஷ்டரே! நீர்தாம் அரசர்க்கும் அரசர்; இந்த மகா யாகத் திற்குத் தகுதியுள்ளவர். நீரே யாகதீக்ஷை செய்துகொள்ளும். நீர் செய்வதனுலேயே நாங்கள் கிருதார்த்தராவோம். உமது நன்மைக்கு நாங்களிருப்பதனுல் நீர் நினைத்த யாகத்தைச் செய்யும். என்னையும் காரியங்களில் கட்டளையிடும். நீர் சொல்லுவன வற்றை யெல்லாம் செய்வேன்' என்று யுதிஷ்டிரருக்கு மறு மொழி கூறினுர். யுதிஷ்டிரர், 'கிருஷ்ணு! ஹிருஷீகேசா! நான் நினைத்தபடி நீர் வந்து சேர்ந்ததனுல் என் எண்ணம் பயன் பட்டது. எனக்குக் காரியசித்தி நிச்சயம்' என்று சொன்னுர். கிருஷ்ணனுல் அனுமதி கொடுக்கப்பெற்ற தர்மராஜர் சகோதரர் களுடன்கூட ராஜசூய யாகம் செய்வதற்கு வேண்டிய சாதனங் களைச் சேகரித்தார். அப்போது சத்துருக்களை அடக்குகிறவ ராகிய தர்மராஜர், யுத்த வீரர்களிற் சிறந்தவனுகிய சகதேவனை யும் மந்திரிகளனைவரையும் பார்த்து, 'இந்த யாகத்தின் அங்கங் களையும் கருவிகளையும் மங்களத் திரவியங்களையும் ஹோமத்துக் குரிய பதார்த்தங்களையும் தௌமிய முனிவர் முதலிய பிராம் மணர்களின் சொற்படி பூரணமாகவும் விரைவாகவும் மனிதர்கள், அவரவர் தகுதிக்குத் தக்கபடி முறைப்படியே கொண்டுவரக் கடவர். என் விருப்பப்படி இந்திரசேனன், விசோகன், அர்ஜுன னுடைய சாரதியாகிய பூரு இவர்கள் அன்னம் முதலியவற்றைக் கொண்டுவருவதற்கு நியமிக்கப்படக்கடவர். கௌரவ சிரேஷ்ட னுன சகதேவனே! பிராம்மணர்களுடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்யத்தக்கவையும் ருசியும் மணமுமுள்ளவையுமாக எல்லா உணவுகளும் செய்விக்கப்படவேண்டும்' என்று கட்டளை யிட்டார். யுத்தவீரர்களிற் சிறந்தவனுன சகதேவன் தர்மராஜ ரான யுதிஷ்டிரர் சொன்னபோதே, 'எல்லாம் சித்தமாயிருக்கி றது' என்று அவருக்குத் தெரிவித்தான். ஜனமேஜய ராஜாவே! பிறகு, வியாச மகரிஷி வேதங்கள் உருக்கொண்டு வந்ததுபோன்ற மகானுபாவர்களான பிராமணர்களை ரித்விக்குக்களாக அழைத்து வந்தனர். சத்தியவதி புத்திரரான அவர் தாமே அந்தத் தர்ம ராஜாவுக்குப் பிரம்மாவின் ஸ்தானத்தை வகித்தார். தனஞ்சய

கோத்திரத்தாரிற் சிறந்தவரான ஸுஸாமா என்பவர் ஸாமகானம் செய்யும் உத்காதாவா யிருந்தார். பிரம்மஞானிகளிற் சிறந்தவ ரான யாக்ஞவல்கிய மாமுனிவர் சிறந்த அத்வர்யுக்களில் தலைவ ராயிருந்தார். வசுவின் புத்திரரான பைலர் தௌமியருடன் சேர்ந்து ஹோதாவா யிருந்தார். ஜனமேஜய ராஜாவே! வேதங் களிலும் வேதாங்கங்களிலும் கரைகண்டவர்களாகிய இவர்க ளுடைய புத்திரர்கள் சிஷ்யர்க ளனைவரும் ஹோதாவின் வேலை யைச் செய்துகொண்டிருந்தனர். அவர்கள் புண்ணியாகவாசனஞ் செய்வித்துச் சாஸ்திரோக்தப்பிரகாரம் அந்த யாகத்துக்குச் சங் கற்பஞ்செய்துகொண்டு அந்த யாகத்துக்குக் குறிப்பிடப்பட்ட பெரிய யாக பூமியைப் பூஜைசெய்தனர். அந்தப் பூமியில் ராஜா வினல் அனுமதி கொடுக்கப்பெற்ற சிற்ப வேலைக்காரர்கள் தேவ கிருகங்களைப்போல நல்ல வாசனையுள்ளவையும் விசாலமுமான கிருகங்களைக் கட்டினர். அரசர்களிலும் மனிதர்களிலும் சிறந்தவ ரான அந்தத் தர்மராஜர் தமக்கு அந்தச் சமயத்துக்கு மந்திரியா யிருந்த சகதேவனைப் பார்த்து, 'நீ ராஜாக்களை அழைப்பதற்கு விரைவாகச் செல்லும் தூதர்களை உடனே அனுப்பு' என்று கட்டளையிட்டார். ராஜாவின் சொல்லைக் கேட்டவுடன் சகதேவன் தூதர்களை யழைத்து, 'தேசங்களிலுள்ள பிராம்மணர்கள் க்ஷத் திரியர்கள் வைசியர்கள் கௌரவிக்கத்தக்க சூத்திரர்கள் எல்லா ரையும் அழைத்துவாருங்கள்' என்று கட்டளையிட்டான். அந்தத் தூதர்கள் சகதேவன் கட்டளைப்படி எல்லா ராஜாக்களையும் அழைத்தனர். இன்னும் அனேக தூதர்களையும் சகதேவன் அனுப்பினன். தூதர்கள் குதிரைகளிலேறிப் பல தேசங்களுக்குஞ் சென்றனர். ஜனமேஜய ராஜாவே! ராஜாவான யுதிஷ்டிரர் பீஷ் மரையும் துரோணரையும் திருதராஷ்டிரனையும் விதுரரையும் கிருபரையும் தமது பிராதாக்களான துரியோதனன் முதலியோ ரையும் தம் அன்பர்களையும் அழைப்பதற்காக நகுலனை அஸ்தின புரத்துக்கு அனுப்பினர். பாரதரே! அதன் பிறகு, அந்தப் பிராம்மணர்கள் குந்தி புத்திரரான யுதிஷ்டிரருக்குக் குறித்த காலத்தில் ராஜசூய யாக தீக்ஷை செய்வித்தனர். தர்மமே யுருவ மெடுத்ததுபோன்றவரும் புருஷ சிரேஷ்டரும் தர்மத்தில் மன முள்ளவருமான யுதிஷ்டிரர், கேட்டையும் மூலமும் சேர்ந்த அமா வாசையில் மான்தோலைப் போர்த்துப் புள்ளிமான் தோலை உடுத் துத் தேகத்தில் வெண்ணெயைத் தடவித் தீக்ஷை செய்து கொண்டு ஆயிரக்கணக்கான பிராம்மணர்களால் சூழப்பட்டவ ராகித் தம் சகோதரர்களோடும் சுற்றத்தாரோடும் சிநேகிதர்க ளோடும் மந்திரிகளோடும் பல தேசங்களிலிருந்து வந்த க்ஷத்

திரிய ஜாதியாரான அரசர்களோடும் சபையாரோடுங் கூடி யாக சாலைக்குச் சென்றார். எல்லா வித்தைகளிலும் தேர்ந்தவர்களும் வேத வேதாங்கங்களிற் கரைகண்டவர்களுமாகிய பிராம்மணர்கள் பற்பல தேசங்களிலிருந்து அங்கே வந்தனர். உடனே, ஆயிரக் கணக்கான சிற்பவேலைக்காரர்கள் தர்மராஜாவின் கட்டளையினால் அவர்களுக்கும் அவர்களுடன்கூட வந்தவர்களுக்கும் தனித் தனியே மிகுதியான போஜனங்களும் வஸ்திரங்களுமுள்ளவையும் எல்லாப் பருவங்களின் பலன்களும் நிரம்பினவையுமான வீடு களைக் கட்டினர். அரசரே! ராஜாவினால் பூஜிக்கப்பெற்ற அந்தப் பிராமணர்கள் நாட்டியங்களையும் நர்த்தனங்களையும் பார்த்துக் கொண்டும் பல கதைகளைச் சொல்லிக்கொண்டும் அந்த வீடு களில் வசித்தனர். சந்தோஷத்துடன் பூஜித்துக்கொண்டும் பேசிக் கொண்டுமிருக்கும் மகாத்மாக்களான பிராம்மணர்களின் பெருங் கோஷம் அங்கே எப்போதும் கேட்கப்பட்டது. 'இவர்களுக்குக் கொடுங்கள், கொடுங்கள்' என்றும், 'நீங்கள் புசியுங்கள், புசியுங் கள்' என்றும் இவ்வகையான பேச்சுக்களே அங்கே எப்போதும் கேட்கப்பட்டன. பாரதரே! லட்சக்கணக்கான பசுக்களையும் படுக்கைகளையும் பொன்களையும் வேலைக்காரிகளையும் ஒவ்வொரு வருக்கும் தர்மராஜா கொடுத்தார். சுவர்க்கத்துக்கு இந்திரனைப் போலப் பூமிக்கு ஒப்பற்ற வீரரும் மகாத்மாவுமான தர்மராஜா வின் அந்த யாகம் இவ்வாறு நடந்தது.

## முப்பத்தேழாவது அத்தியாயம்

## ராஜசூய பர்வம் (தொடர்ச்சி)

### (அழைக்கப்பட்டவர்கள் எல்லோரும் யாகத்துக்கு வந்து சேர்ந்தது)

ஜனமேஜய ராஜாவே! அதன்பிறகு, மரியாதைசெய்து அழைக்கப்பட்ட அரசர்கள், தேவ விமானங்களிலிருந்து தேவர் கள் புறப்படுவதுபோலத் தம் தம் கிருகங்களிலிருந்து புறப்பட்ட னர். பாரதரே! அந்த ராஜாக்கள் மிக்க விலைபெற்ற பலவகை ரத்தினங்களை எடுத்துக்கொண்டு அந்த அந்தத் திசைகளி லிருந்து அங்கே வந்தனர். புருஷசிரேஷ்டரே! அந்த யாகத்தைப் பற்றித் தெரிந்த அநேக அரசர்கள் தூதர்கள் சொன்னதைக் கேட்டு மனமகிழ்ச்சியுடன் பலவகைத் திரவியங்களை மிகுதியாக எடுத்துக்கொண்டு தர்மராஜரையும் அவருடைய சபையையும் பார்க்க விரும்பி அவருடைய யாகத்துக்குச் சென்றார்கள். யுத்தங்

களில் ஜயிப்பவனுகிய அந்த நகுலன் அஸ்திஞபுரம் சேர்ந்து பீஷ்மரையும் திருதராஷ்டிரனையும் அழைத்தான்; கரங்களைக் குவித்து வணங்கி நின்று பரதகுலத்தோராகிய திருதராஷ்டிரனை யும் பீஷ்மரையும் சிறந்த புத்திமானுன விதுரரையும் அழைத் தான்; பிறகு, துரியோதனன் முதலான பிராதாக்களனைவரை யும் அழைத்தான். துரோணுசாரியர் முதலான அனைவரும் மரி யாதையோடு அழைக்கப்பட்டனர். அதன் பிறகு, திருதராஷ்டிர னும் பீஷ்மரும் புத்தியிற் சிறந்த விதுரரும் துரியோதனன் முத லான சகோதரர்கள் அனைவரும் மனமகிழ்ந்து பிராம்மணர்களை முன்னிட்டுக்கொண்டு யாகத்துக்குச் சென்றனர். காந்தார தேசத் தரசனுகிய சுபலன், மகாபலசாலியான சகுனி, அசலன், விரு ஷகன், ரதயுத்தஞ்செய்பவரில் சிறந்தவனுகிய கர்ணன், பலவா னுன சல்லியன், மிக்க பலசாலியான பாஹ்லீகன், குரு வம்சத்தவ னுன சோமதத்தன், பூரி, பூரிசிரவன், சலன், அசுவத்தாமா, கிருபர், துரோணர், சிந்துதேசத் தரசனுன ஜயத்ரதன், புத்தி ரர்களுடன் கூடிய துருபதன், சால்வ ராஜன், பிராக்ஜ்யோதிஷ நகரத்தரசனும் மகாரதனுமான பகதத்த ராஜன் இவர்களும் சென்றனர். அந்தப் பகதத்த ராஜன் கடலிலுள்ள தீவுகளில் வசிக்கும் மிலேச்ச அரசரெல்லாருடனும் சென்றுன். மலைநாட் டரசர்களும் பிருகத்பல னென்னும் அரசனும், பௌண்ட்ரக வாசுதேவனும், வங்கம், கலிங்கம், ஆகர்ஷம், குந்தலம், கால வம், ஆந்திரம், திராவிடம், சிங்களம், காச்மீர மென்னும் தேசத் தரசர்களும், மகா பராக்கிரமசாலியான குந்திபோஜன், கௌர வாகனனென்னு மரசன், மற்றுமுள்ள சூரர்களான பாஹ்லீக தேசத்தரசர்கள், இரண்டு புத்திரர்களுடன் விராடன், மகா பல சாலியான மாவேல்லன், மகா வீரனுன சிசுபாலன் ஆகிய இவர் களும், யுத்தத்தில் அடங்காத கொழுப்புள்ள பலராமர், அனிருத் தன், கங்கன், சாரணன், கதன், பிரத்யும்னன், சாம்பன், சூரனுன சாருதேஷ்ணன், உல்முகன், நிசடன், வீரனுன அங்காவகன் முதலான மகாரதர்களான யாதவர்களனைவரும், மத்திய தேச முதலான அனேக தேசங்களுக்கு அதிபதிகளான அரசர்களும், தர்மராஜாவின் ராஜசூய யாகத்திற்கு வந்தனர்.

அரசரே! தர்மராஜாவின் கட்டளையினுல் பலவகைப் பட்ச ணங்களுள்ளவையும் வாவிகளாலும் சோலைகளாலும் சோபிப்ப வையுமான விடுதிகளை அவர்களுக்கு மந்திரிகள் கொடுத்தனர். தர்மபுத்திரர் அந்த மகாத்மாக்களுக்குச் சிறந்த மரியாதை செய்தனர். மரியாதை செய்யப்பெற்ற அரசர்கள் கைலாச

மலையின் சிகரங்களுக்கொப்பானவையும் மனத்திற்கினியவையும் சிறந்த பொருள்களினால் அலங்கரிக்கப்பட்டவையும் செவ்வையாகக் கட்டப்பட்ட உயர்ந்த வெண்மையான மதில்களினால் நாற்புறமும் சூழப்பட்டவையும் பொன்மயமான பலகணிகளுள்ளவையும் ரத்தினத் தளவரிசைகளினால் அலங்கரிக்கப்பட்டவையும் ஏறுதற்குச் சுகமான படிகளுடையவையும் உயர்ந்த ஆசனங்கள் முதலிய சாமான்களுள்ளவையும் புஷ்பமாலைகளால் மறைக்கப்பட்டவையும் உயர்ந்த அகில் மணம் கமழ்கின்றவையும் ஹம்ஸத்திற்கும் சந்திரனுக்கும் ஒப்பான நிறமுள்ளவையும் ஒரு யோசனை தூரத்திலேயே எளிதாகக் காணப்படுகின்றவையும் விசாலமானவையும் நேருக்கு நேரான வாயில்களுள்ளவையும் இன்னும் அனேகம் சிறப்புக்களுள்ளவையும் பலவகைத் தாதுக்கள் சேர்ந்த இமயமலைச் சிகரங்கள் போன்றவையுமான அவரவர்களுடைய விடுதிகளுக்குச் சென்றனர். அவ்வரசர்கள் அங்கங்கே சிரமபரிகாரஞ் செய்துவிட்டு, பெருந் தட்சிணை கொடுப்பவரும் சபையோர்கள் அனேகரால் சூழப்பட்டவரும் தர்மராஜாவுமான யுதிஷ்டிரரைக் கண்டனர். அப்போது அரசர்களும் பிராம்மணர்களும் மகரிஷிகளும் நிரம்பின அந்தச் சபை தேவர்கள் நிரம்பின தேவலோகம்போல விளங்கிற்று.

---

### முப்பத்தெட்டாவது அத்தியாயம்

## ராஜஸூய பர்வம் (தொடர்ச்சி)

### (ராஜஸூய யாகம் நடத்தியது)

அரசரே! பிறகு யுதிஷ்டிரர், பீஷ்மரையும் துரோணரையும் எதிர்கொண்டழைத்து அபிவாதனஞ்செய்து, பீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமா, துரியோதனன், விவிம்சதி இவர்களைப் பார்த்து, 'நீங்கள் எல்லோரும் இந்த யாகத்தில் என்னைச் சிறப்பிக்கக்கடவீர்; இங்கே எனக்குள்ள செல்வங்களெல்லாம் உங்களுடையனவே. என்னால் அழைக்கப்பட்ட நீங்கள் உங்கள் இஷ்டப்படி என்னை நடத்தக்கடவீர்' என்று சொன்னார். தீக்ஷை செய்துகொண்ட அந்தப் பாண்டவ ஜ்யேஷ்டரான தர்மராஜர் அவர்களெல்லோரையும் பார்த்து இவ்வாறு சொல்லி உடனே அவரவர்க்கு ஏற்ற வேலைகளில் அவரவர்களை நியமித்தார். போஜனத்துக்கு வரிசையாக உட்காரவைப்பதிலும் எச்சிலைச் சுத்திசெய்விப்பதிலும் போஜனங்களை விசாரிப்பதிலும் யுயுத்ஸுவையும், பட்சணங்களையும் போஜனங்களையும்பற்றிய வேலைகளில் துச்சாஸனனையும், பிராம்மணர்களை யழைப்பதில் அசுவத்தாமாவையும், ராஜாக்களுக்கு

மரியாதை செய்வதில் ஸஞ்சயனையும், செய்தவற்றையும் செய்யவேண்டிய காரியங்களையும் செம்மையாகப் பார்ப்பதில் பீஷ்ம துரோணர்களையும், பொன்னையும் பொன் நாணயங்களையும் ரத்தினங்களையும் பார்த்துக்கொள்ளுவதிலும் தட்சிணை கொடுப்பதிலும் கிருபாசாரியரையும் ஏற்படுத்தினர். அவ்வாறே, மற்ற புருஷ சிரேஷ்டர்களையும் அவரவருக்குத் தகுதியான காரியங்களில் பிரவிருத்திக்கச் செய்தார். நகுலனால் அழைத்து வரப்பட்ட பாஹ்லீகன், திருதராஷ்டிரன், சோமதத்தன், ஜயத்ரதன் முதலானவர்கள் அங்கே யஜமானர்போல விளங்கினர். எல்லாத் தர்மங்களும் தெரிந்தவரான க்ஷத்தாவென்னப்பட்ட விதுரர் பொருட்செலவு செய்பவராயிருந்தார். துரியோதனன், எல்லாரிடங்களிலுமிருந்து வரும் காணிக்கைகளை வாங்கினன். பதிவ்ரதைகளான குந்தியும் காந்தாரியும் ஸ்திரீகளுக்கு மரியாதைசெய்தனர். அவர்களுடைய மருமக்கள்மாரனைவரும் அவர்களின் கட்டளைகளை விரைவாகச் செய்தனர். அர்ஜுனன் காரியம் நிறைவேற்றுவதற்காகக் கிருஷ்ணன் சமீபத்திலேயே இருந்தான். எல்லா உலகங்களாலும் பூஜிக்கப்பட்ட கிருஷ்ண பகவான் மேலான பலனைப்பூரணஞ்செய்ய விரும்பி பிராம்மணர்களின் பாதப்ரக்ஷாளன காரியத்தில் தாமே அமர்ந்தார். தர்மராஜரையும் அவர் சபையையும் பார்க்க விரும்பி வந்தவர்கள் எவரும் ஆயிரத்துக்குத் தாழ்ந்த காணிக்கையை அங்கே கொண்டுவரவில்லை. அந்த யாகத்தில் அனேக ரத்னங்களினால் ராஜாக்கள் தர்மராஜரைச் சிறப்பித்தனர். நாம் கொடுக்கும் ரத்தினங்களினலேயே தர்மராஜர் யாகத்தை முடிக்கவேண்டுமே யென்று தாம் மற்றவர்களிலும் மேற்போக விரும்பி அரசர்கள் திரவியங்களை அளித்தனர். மகாத்மாவான தர்மராஜாவின் சபையானது மேல் மாளிகைகளும் சிகரங்களுமுள்ளவையும் சேனைகளால் சூழப்பட்டவையும் அனேக ரத்தினங்களினால் விசித்திரமானவையும் சிறந்த ஐசுவரியமும் மிக்க அழகும் பொருந்தியவையும் தேவ விமானங்களைப்போலச் செய்யபட்டவையுமான ராஜகிருகங்களாலும் பல தேசங்களிலிருந்து வந்திருக்கும் அரசர்களின் சிறந்த அரண்மனைகளாலும் யாகத்துக்காக வந்த திக்பாலர்களின் விமானங்களென்னும் ரதங்களாலும் பிராம்மணர்கள் வசிக்கும் கிருகங்களாலும் மிக்க அழகாயிருந்தது. ஐசுவரியத்தினல் வருணபகவானை வெல்லுகிற யுதிஷ்டிரர், [1] ஆறு அக்னிகளும் நிரம்பின தட்சிணைகளுமுள்ள யாகத்தைச் செய்தார். வேண்

1 ஆறு அக்னிகளாவன : 'ஆரம்பணீயம், க்ஷத்திரம், த்ருதி, வியுஷ்டி, த்விராத்திரம், தசபேயம்' என்பது பழைய வுரை.

டினவற்றை எல்லாம் நிரம்பக் கொடுத்து எல்லா ஜனங்களையும் திருப்திசெய்வித்தார். அன்னமும் அனேக பட்சணங்களுமுள்ளதும் புசித்துத் திருப்தியடைந்த ஜனங்கள் நிரம்பினதும் ரத்னங்களாகிற காணிக்கைகள் மிகுந்ததுமாக அந்தச் சபை யிருந்தது. மந்திர தந்திரங்களிலும் ஸ்வர லட்சணங்களிலும் தேர்ந்தவர்களான மகரிஷிகளால் நடத்தப்பட்ட அந்த யாகத்தில் [1] இடா ஹோமம், ஆஜ்ய ஹோமமென்னும் கிரியைகளால் தேவர்கள் திருப்தியடைந்தனர். தேவர்களைப்போலவே பிராம்மணர்கள் முதலான எல்லா வருணத்தாரும் தட்சிணைகளாலும் போஜனங்களாலும் மிக்க பொருள்களாலும் அந்த யாகத்தில் மிகுந்த சந்தோஷத்தோடு திருப்தி அடைந்தனர்.

ராஜசூய பர்வம் முற்றிற்று

---

முப்பத்தொன்பதாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம்

### (தர்மபுத்திரர் கிருஷ்ணனுக்கு முதல் மரியாதை செய்ததைப்பற்றிச் சிசுபாலன் ஆட்சேபித்தது)

பிறகு, அபிஷேசனியமென்னும் ராஜசூயத்துக்கு அங்கமான சோம பாகஞ்செய்யுங்காலத்தில் பூஜிக்கத்தக்க மஹரிஷிகளும் பிராம்மணர்களும் ராஜாக்களுடன் கூட அந்தர்வேதி யென்னும் யாகசாலையில் பிரவேசித்தனர். அப்போது மகாத்மாவான யுதிஷ்டிரருடைய அந்த அந்தர்வேதியில் ராஜரிஷிகளுடன் கூட உட்கார்ந்திருந்த நாரதர் முதலிய தேவரிஷிகளும் தேவர்களும் பிரம்மசபையில் சேர்ந்திருப்பதுபோல விளங்கினர். மிகுந்த மகிமையுள்ள அவர்கள் யாக காரியங்களின் இடையில் ராஜாவினருகில் வாதங்கள் செய்தனர். இஃது இவ்வாறே ஆகுமென்றும் இவ்வாருகாதென்றும் இஃது இவ்வாறும் ஆகலாமென்றும் இது வேறுவித மாகக்கூடாதென்றும் பலர் ஒருவருக்கொருவர் [2]விதண்டாவாதம் பேசினர். அப்போது, அவர்களில் சிலர் தர்க்க சாஸ்திரத்தினல் நிச்சயிக்கப்பட்ட யுக்திகளைக்கொண்டு சிறிய விஷயங்களைப் பெரியவைகளாகவும் பெரிய விஷயங்களைச் சிறியவைகளாகவும் செய்தனர். அவர்களில் சில மேதாவிகள் பருந்துகள் ஆகாயத்திலுள்ள மாமிசத்தை யடிப்பதுபோலப் பிறர்

---

1. அன்னமாகிய ஹவிஸினல் செய்யும் கிரியை.

2. விதண்டாவாதம் = தன் மதத்தை வலியுறுத்தாமலே பிறர் சொல்வதைக் கண்டிப்பது.

சொன்ன விஷயங்களை [1]அடித்தனர். சிலர் தர்ம சாஸ்திரங்களி லும் சிலர் ராஜநீதி சாஸ்திரங்களிலும் சமர்த்தரும் சிலர் சிறந்த தவமுள்ளவரும் எல்லாப் பாஷ்யங்களையும் கற்றுணர்ந்தவர் களில் சிறந்தோருமாகிய அந்தச் சபையோர் வாதஞ்செய்து மகிழ்ந்தனர். வேதங்களெல்லாம் தெரிந்த மகரிஷிகளும் பிராம் மணர்களும் தேவர்களும் நிரம்பின அந்தப் பெரிய அந்தர் வேதியானது நட்சத்திரங்கள் நிரம்பின ஆகாயம்போல விளங் கிற்று. ஜனமேஜய ராஜாவே! அப்போது யுதிஷ்டிரருடைய கிருகத்தில் அந்த அந்தர்வேதியிலுள்ள சபையில் சூத்திரனுவது அனுஷ்டானம் தவறினவனுவது ஒருவனும் இல்லை. சிறந்த ஐசுவரியமுள்ளவரும் சிறந்த ஞானமுள்ளவருமான தர்மராஜா வின் யாக காரியத்திலுண்டான அந்தச் சிறப்பைப் பார்த்து நாரதர் மகிழ்ந்தார். ஜனமேஜய ராஜாவே! அப்போது க்ஷத் திரியர்கள் எல்லாரும் வந்துசேர்ந்திருப்பதைக் கண்டு அந்த நாரத முனிவர் ஒரு சிந்தையுற்ருர். புருஷசிரேஷ்டரே! முன்பு தேவர்கள் தங்கள் அம்சங்களினுல் பூமியில் அவதரிக்கும் தரு ணத்தில் பிரம்மலோகத்தில் நடந்த பூர்வ கதையை நினைத்தார். ஜனமேஜயரே! அது தேவர்களின் சேர்க்கை யென்று அறிந்து நாரதர் தாமரைக்கண்ணராகிய திருமாலை மனத்தில் தியானித் தார். 'எல்லாவற்றையும் படைப்பவராகிய எவர் முன்பு தேவர் களைக் கட்டளையிட்டாரோ அந்தப் பிரபுவும் அரசர்களை அழிப்ப வருமாகிய மகாவிஷ்ணு அசுரர்களைக் கொன்று தம் பிரதிஞ்ஞை யைக் காப்பதற்காகத் தாமே க்ஷத்திரிய வம்சத்தில் வீரராகப் பிறந்திருக்கிருர். சிவசுரூபியும் பிரம்மதேவரூபியுமான பகவான் நாராயணன், தேவர்கள் எல்லாரையும் பார்த்து, 'நீங்கள் ஒரு வரையொருவர் கொன்றுவிட்டுத் திரும்பவும் உங்கள் லோகங்களை அடைவீர்கள்' என்று கட்டளையிட்டுத் தாமும் யது வம்சத் தில் அவதரித்தார். வம்சத்தை விருத்திசெய்கிறவரிற் சிறந்த வரான பகவான் பூமியிலுள்ள அந்தகர்களும் விருஷ்ணிகளுமாகிய இவர்களின் வம்சத்தில் நக்ஷத்திரங்களுக்கிடையில் சந்திரன் போல மிகச் சிறப்புற்று விளங்கினுர். இந்திராதி தேவரனைவரும் எவருடைய கைவன்மையைப் பற்றிக்கொண்டிருக்கின்றனரோ சத்துரு சம்ஹாரம் செய்பவரான அந்தத் திருமால் மனிதனைப் போலிருக்கிருர். பெரும்பொருளும் தாமே அவதரிப்பவருமான பகவான் இவ்வளவு பலமுள்ள இந்த க்ஷத்திரிய ஜாதியைத் திரும் பவும் தாமே சம்ஹரிக்கப்போகிருரே! ஓ! ஓ! ஆச்சரியம்' என்று எல்லாந் தெரிந்த நாரதர் சிந்தித்தார். தர்மந் தெரிந்தவர்களில்

1. ஜயித்தனர்.

சிரேஷ்டரும் சிறந்த புத்தியுள்ளவருமான அந்த நாரத முனிவர் யாகங்களால் ஆராதிக்கத்தக்க ஈசுவரரான நாராயணனே கண்ணபிரான் என்றறிந்து விவேகமுள்ள தர்மராஜருடைய அந்தப் பெருவேள்வியில் கௌரவத்தோடு இருந்தார்.

அதன்பிறகு, சிறந்த குணங்களெல்லாம் பொருந்தினவரும் குணசாலிகளிற் சிறந்தவரும் பரிசுத்தமான மனமுடையவரும் பகைவரை வெல்லுகிறவரும் பாஞ்சால சேனைகளின் முன்னே செல்லுகிறவருமான யாதவர்கள் அனைவரும் தங்கள் கடமையென்று நினைத்துத் தங்கள் மனைவிகளோடும் சுற்றத்தாரோடும் மந்திரிகளோடுங்கூட ரத்னக் குவியல்களை எடுத்துக்கொண்டு வந்தனர். தூரதேசமாயிருந்ததனாலும் பாரம் அதிகமாயிருந்ததனாலும் சந்தோஷமுள்ள அவர்கள் பகவானுக்குப் பின் வந்து சேர்ந்தனர். பகைவர் கூட்டங்களை யழிப்பவரும் ஜனனமில்லாதவரும் சக்ராயுததாரியும் யாதவசிரேஷ்டருமான கண்ணன் பின் வந்துசேர்ந்த சேனையை யழைத்து வசுதேவரைச் சேனக்கதிபதியாக வைத்து யாகஞ்செய்யும் யுதிஷ்டிரரிடம் சென்றார். மாதவர் தர்மராஜாவுக்காக அளவற்ற தனக்குவியலை முன்னிட்டுக் கொண்டு காண்டவப்பிரஸ்தத்துக்கு வந்தார். அவ்விடத்தில் யக்ஞத்திற்காக வந்து மின்னலோடுகூடிய மேகங்கள் போன்ற தேகமுள்ளவர்களும் சிம்மங்கள் போன்ற பலசாலிகளுமாகப் பூமியை மறைத்து நிற்கும் சிசுபாலன் பட்சத்திற் சேர்ந்த அரசக் கூட்டங்களை யெல்லாம் யூதபதியானது யூதபதிகளைப் பார்ப்பது போலப் பார்த்துக்கொண்டும் ஜனக்கூட்டங்கள் வற்றாத கடல் போன்ற ராஜக்கூட்டத்தைத் தம் ரதகோஷத்தினால் கலக்கிக் கொண்டும் கண்ணபிரான் வந்தார். கிருஷ்ணன் வந்ததனால், பாண்டவர்களின் நகரம் சூரியனில்லாத விடத்தில் சூரியன் உதயமானாற்போலவும் காற்றில்லாதவிடத்திற் காற்றடித்தாற் போலவும் சந்தோஷமடைந்தது.

ராஜநீதியும் தர்மசாஸ்திரமும் தெரிந்தவனும் மனிதர்களின் தராதரம் அறிந்தவனும் மாத்திரி புத்திரனுமான சகதேவன் பிராம்மணர்களையும் க்ஷத்திரியர்களையும் பூஜிப்பதற்கு நியமிக்கப் பட்டிருந்தான். உலகங்களுக்கு சூரியனைப்போலத் தம் ஒளியோடு விளங்கிக்கொண்டு யாக பூமியில் பிரவேசிப்பவரும், பலராமருக்கு இளையவரும், ஈசுவரரும் சக்திகளின் சேர்க்கையுள்ளவரும், பிரம்ம ரிஷியும், அறிந்தோமென் றிருப்பவருக்குக் காணப்படாதவரும், பிரம்ம நிஷ்டர்களான வயதில் முதிர்ந்த பெரியோர்களுக்கு உய்யும் வழியாகவும் தாவர ஜங்கமங்கள் அனைத்திற்கும் பிறப்பிறப்புக்களுக்கு இடமாகவுமிருப்பவரும், அடுத்தவரைத்

தவற விடாதவரும், முடிவில்லாதவரும், பகைவர்க்கு முடிவைச் செய்பவரும், காமக்குரோத முதலிய உட்பகைகளின் கூட்டங்களைக் கெடுப்பவரும், எல்லாவற்றிற்கும் பிரபுவும், ஆபத்தில் தவருமல் அபயம் கொடுப்பவரும், எதிர்காலத்திலும் நிகழ்காலத்திலும் இறந்தகாலத்திலுமிருப்பவரும், துவாரகா நகரத்தில் வெற்றிபெற்றிருப்பவரும், அளவற்ற மகிமையுள்ளவருமாகிய கிருஷ்ண பகவான் வரக் கண்டு தர்மபுத்திரர் அவருக்குத் தக்க மரியாதை செய்தார். பெருமை சிறுமை யென்பவை குணங்களினாலும் குற்றங்களினாலும் ஏற்படுகின்றவையென்றறிந்த தர்மராஜர் பிராமணர்களைப் பூஜித்த பிறகு கண்ணனை ஆராதிக்கக் கருதி இதற்குமுன் யாரும் உட்காராததும் சூரியனைப்போலப் பிரகாசிப்பதுமான சிறந்த ஆசனத்தை லோகநாதரான கிருஷ்ணனுக்கு அளிக்க, கிருஷ்ண பகவான் அதில் உட்கார்ந்தார்.

அதன் பிறகு, பீஷ்மர், தர்மராஜாவான யுதிஷ்டிரரைப் பார்த்து, 'அரசனே! பாரதனே! ராஜாக்களுக்குத் தகுதியின் படி மரியாதை செய்யலாம்; யுதிஷ்டிரனே! ஆசாரியன், ரித்விக்கு, சம்பந்தி, ஸ்நாதகன், சிநேகிதன், அரசன் இவ்வறுவரும் பூஜைக் குரியவரென்று கூறுகின்றனர். இவர்கள் வந்து ஒரு வருஷ காலமிருந்தபின் மரியாதை செய்யவேண்டுமென்று சொல்லுகின்றனர். இவர்கள் நீண்ட காலமாக நம்மிடம் வந்திருக்கின்றனர். ராஜாவே! இவர்களில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே மரியாதை கொண்டுவரத்தக்கது. முதலில் இவர்களுக்குள் சிரேஷ்டனும் சக்தியுள்ளவனுமா யிருப்பவனுக்கு மரியாதை செய்யவேண்டும்' என்று சொன்னார். அதற்கு யுதிஷ்டிரர், 'கௌரவசிரேஷ்டரே! எவருக்கு முதல் மரியாதை செய்கிறதென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? யாருக்குச் செய்தால் தகுதியாயிருக்கும்? பிதாமகரே! அதனை எனக்குச் சொல்லுங்கள்' என்று கேட்க, உடனே சந்துனுவின் புத்திரரும் வீரருமான பீஷ்மர், தமது புத்தியில் ஆராய்ந்து புவனிக்குள் கிருஷ்ண பகவான் ஒருவரே யாவராலும் பூஜிக்கத் தக்கவரென்று நினைத்து, 'இந்தக் கிருஷ்ணன் கிரக நட்சத்திரங்கள் முதலியவற்றுள் சூரியன்போல இங்குள்ள எல்லாரிலும் சூரத்தனத்திலும் பலத்திலும் மகிமையிலும் ஜ்வலிப்பவர்போல விளங்குகிருர். இந்தக் கிருஷ்ணன் வந்த பிறகு இந்த நமது ஸதஸ் சூரியனில்லாதவிடத்தில் சூரியோதயமானுற்போலவும் காற்றில்லாதவிடத்தில் காற்றடித்தாற்போலவும் ஒளியும் மகிழ்ச்சியும் பெற்றது' என்று சொன்னர். பிறகு, பீஷ்மரால் அனுமதி கொடுக்கப்பெற்ற வீரனை சகதேவன் அந்தக் கண்ணபிரானுக்கு

முறைப்படி உயர்ந்த மரியாதையைச் செய்தான். பசுவையும் அர்க்கியத்தையும் மதுபர்க்கத்தையும் கிருஷ்ணனுக்கு சகதேவன் கொடுத்தான்.

ஜனமேஜய ராஜாவே! அந்தச்சமயத்தில் ஓர் ஆச்சரியம் நடந்தது. கிருஷ்ணனுக்கு நடந்த அந்தச் சிறந்த மரியாதையைக் கண்டு க்ஷத்திரியர்களனைவரும் ஒருவரை யொருவர் பார்த்து அதைத் தங்களுள்ளங்களில் ஏற்றுக்கொண்டனர். சாஸ்திரப் பிரகாரம் செய்யப்பட்ட அந்தப் பூஜையைக் கிருஷ்ணன் பெற்றுக்கொண்டார். கண்ணபிரானுக்கு அந்தப் பூஜை செய்ததைச் சிசுபாலன் பொறுக்கவில்லை. மகாபலசாலியான அந்தச் சிசுபாலன், சபையில் பீஷ்மரையும் தர்மராஜரையும் இகழ்ந்து கிருஷ்ணனைத் தூஷித்தான். அவர்களுடைய இங்கிதத்தையும் கருத்தையு மறிந்த சகதேவன் கோபித்தான். அபிமானமுள்ளவர்களும் பலசாலிகளுமான அரசர்களுக்குமுன் சகதேவன் பாதத்தைத் தூக்கிக் காண்பித்தபோது சகதேவன் தலையில் பெரும் பூமாரி பொழிந்தது. பிறந்தது முதல் யாதவர்களுக்கு விரோதியான சிசுபாலன் சொல்லலானான்.

'கேட்டவன் [1]குற்றமுள்ள கர்ப்பத்தில் பிறந்த அரசன்; மறுமொழி சொன்னவன் [2]நதியின் மகன்; பூஜையைப் பெற்றுக்கொண்டவன் இடையன்; கொடுத்தவன் குற்றமுள்ள கர்ப்பத்தில் பிறந்தவன். இங்குள்ள சபையோ ரனைவரும் ஊமைபோலிருக்கின்றனர். என்ன சொல்வது!' என்றான். அவன் இவ்வாறு சொல்லி நகைத்து உடனே தர்மராஜாவை நோக்கி, மறுபடியும் பேசலானான். 'பாண்டவனே! பூஜைக்குரிய மற்றவர்களிருக்க' இடையனைப் பூஜித்தாயே! நீ அவனை எல்லாருக்கும் மேற்பட்டவனாகப் பார்க்கிறாயா? மற்றவர்களைப் பார்க்கவில்லையா? நண்பனே! அதிகமாகப் பார்ப்பதும் பாராமலிருப்பதும் இவ்விரண்டும் காரியத்தைக் கெடுப்பவைகள்; இவற்றுள் நீ எதை எடுத்துக்கொண்டாய்?

---

நாற்பதாவது அத்தியாயம்

## அர்க்கஹரண பர்வம் (தொடர்ச்சி)

**(கிருஷ்ணனுக்கு யுதிஷ்டிரர் பூஜைசெய்தது பிழையென்று கண்டித்துச் சிசுபாலன் சபையைவிட்டுச் செல்லத் தொடங்கியது)**

ஓ! கௌரவ ராஜனே! இவ்விடத்தில் மகாத்மாக்களான ராஜாக்கள் இருக்கும்போது இந்த விருஷ்ணி குலத்தோன்

---

1. அன்னிய புருஷ சம்பந்தத்தா லுண்டான கர்ப்பம்.
2. தாழ்ந்த இடத்திற் செல்வது நதியின் இயற்கை.

அரசர்க்குரிய மரியாதையைப் பெறத் தகுந்தவனல்லன். பாண்டவனே! நீ உன் விருப்பத்தினால் தேவகி புத்திரனைப் பூஜித்தது மகாத்மாக்களான பாண்டவர்களுக்குத் தகுந்த ஒழுக்கமுமன்று. பாண்டவர்களே! நீங்கள் சிறுவர்கள். தர்மம் நுட்பமானது, நீங்கள் அறியீர் இந்த விஷயத்தில் அறிவு குறைந்த இந்தப் பீஷ்மர் தவறி நடந்திருக்கிறார் உன்னைப்போன்ற தர்மிஷ்டன் பிறர் பிரியத்திற்காக ஒரு காரியம் செய்யலாமா? பீஷ்மர் உலகத்திலுள்ள பெரியோர்களால் மிகவும் அவமதிக்கப்படுகிறார். அரசனல்லாத கிருஷ்ணன் தகுதியுள்ள ராஜாக்கள் அனைவர்களின் நடுவிலும் நீங்கள் செய்ததுபோன்ற பூஜைக்கு எவ்வாறு உரியவன்? கௌரவ சிரேஷ்டனே! அல்லது, கிருஷ்ணன் பிராயத்தில் முதிர்ந்தவனென்று நினைக்கிறாயா? ஆகிலும், பெரியவராகிய வசுதேவரிருக்கையில் அவர் மகன் பூஜைக்கு எவ்வாறு தகுதியுள்ளவன்? கிருஷ்ணனும் உன் விருப்பத்தை அனுசரித்து ஒப்புக்கொண்டானோ? ஆகிலும், த்ருபதனிருக்கையில் மாதவனைப் பூஜிப்பதெவ்வாறு தகும்? கௌரவனே! அல்லது, கிருஷ்ணனை ஆசாரியனாக நினைக்கிறாயா? அப்படியானால், துரோணர் இருக்கும்போது விருஷ்ணி குலத்தோனை நீ பூஜித்தது ஏன்? கௌரவனே! கிருஷ்ணனை யாகத்தை நடத்திவைக்கும் ரித்விக்கென்று நினைக்கிறாயா? அங்ஙனமாகில், பெரியவரான வியாசரிருக்கையில் கிருஷ்ணனை ஏன் பூஜித்தாய்? அரசனே! புருஷ சிரேஷ்டரும் தாம் நினைத்தபோது மரணத்துக்குரியவரும் சந்தனு புத்திரருமான பீஷ்மர் இருக்கையில் நீ ஏன் கிருஷ்ணனைப் பூஜித்தாய்? கௌரவ ராஜனே! வீரரும் எல்லாச் சாஸ்திரங்களிலும் தேர்ந்தவருமான அசுவத்தாமா இருக்கையில் கிருஷ்ணன் உன்னால் பூஜிக்கப்பட்டது எதனாலே? புருஷர்களில் சிறந்தவனும் அரசர்க்கரசனுமாகிய துரியோதனனும் பாரத வம்சத்தவருக்கு ஆசாரியரான கிருபருமிருக்க நீ கிருஷ்ணனைப் பூஜித்த தெவ்வகை? கிம்புருஷர்களுக்கு ஆசாரியரான த்ருமனென்னும் கின்னரனையும் விட்டு, கிருஷ்ணனை பூஜித்தாயே? பாண்டுவைப்போல யாருக்கும் வெல்லமுடியாதவரும் குணங்களினால் பிரக்யாதிபெற்றவருமாகிய பீஷ்மக ராஜாவும் ராஜாக்களில் சிரேஷ்டனான ருக்மியும் ஏகலவ்யனும் மத்ர தேசாதிபதியான சல்லியனுமிருக்க நீ கிருஷ்ணனை ஏன் பூஜித்தாய்? பாரதனே! இந்தக் கர்ணன் பராக்கிரமத்தில் எல்லா ராஜாக்களிலும் சிறந்தவன்; மகா பலசாலி; பிராமணரான பரசுராமருக்கு அன்புள்ள சிஷ்யன். தன் பராக்கிரமத்தைக்கொண்டே யுத்தத்தில் அரசர்களை ஜயித்தவன். இந்தக் கர்ணனையும் தாண்டி நீ கிருஷ்ணனைப் பூஜித்தது எவ்வாறு? கௌரவ சிரேஷ்டனே! கிருஷ்ணன்

ரித்விக்கும் அல்லலன்; ஆசாரியனுமல்லன்; ராஜாவுமல்லன்; உன்னால் பூஜிக்கப்பெற்றிருக்கிறான். அவன் பிரியத்தை நீ விரும்பினது தவிர வேறு காரணம் யாது? பாரதனே! (அல்லது) இந்தக் கிருஷ்ணன் உங்களுக்குப் பூஜ்யனாகவே யிருந்தால் மற்ற ராஜாக்களை அவமதிப்பதற்காக இங்கே வரவழைத்தாயா? என்ன? நாங்களெல்லாரும் பயத்தினாலாவது பிரயோசனத்தை விரும்பியாவது எங்களைக் கேட்டுக்கொண்டதற்காவது இந்த மகாத்மாவான தர்மராஜாவுக்குக் கப்பங்கள் கொடுக்கவில்லை. இவர் தர்மத்தில் பிரவர்த்தித்துப் பூமிக்கு அதிபதியாயிருக்க விரும்பினதால் நாங்கள் இவருக்குக் கப்பங்கள் கொடுக்கிறோம். இவர் நம்மை மதிக்கவில்லை. ராஜசபையில் ராஜலட்சணங்கள் பெறாத இந்தக் கிருஷ்ணனை இவர் அர்க்கியம் கொடுத்துப் பூஜித்தது நம்மை அவமதித்ததைத் தவிர வேறு என்ன? தர்மபுத்திரருக்குத் தர்மாத்மாவென்னும் புகழ் திடீரென்று போய் விட்டது. எந்தத் துராத்மாவானவன், விருஷ்ணி குலத்திற் பிறந்து, ராஜாவும் மகாத்மாவுமான ஜராசந்தனை அநியாயமாகக் கொன்றானோ தர்மந் தவறின அந்தக் கிருஷ்ணனுக்கு இந்தச் சிறந்த பூஜையை எவன் செய்வான்? இப்போது கிருஷ்ணனுக்கு அர்க்கியங் கொடுத்ததனால் தர்மாத்மாவென்னும் பெயர் யுதிஷ்டிரரிடமிருந்து விலகிப்போயிற்று. அசக்தனென்பது வெளியிடப்பட்டது. கிருஷ்ணா! பரிதாபப்படத்தக்க இந்தக் குந்தி புத்திரர்கள் அசக்தர்களாகவும் பயந்தவர்களாகவு மிருந்தால் நீயாவது இந்தப் பூஜை உனக்குத் தகுமாவென்பதை அறிந்திருக்கவேண்டும். ஜனார்த்தனா! அசக்தர்களினால் கொடுக்கப்பட்ட பூஜையைத் தகுதியற்ற நீ ஏன் அங்கீகரித்தாய்? யாருமில்லாதவிடத்தில் சிந்திப்போன ஹவிஸை நாய் தின்பதுபோல உனக்குக் கிடைக்கத்தகாத பூஜையை நீ கொண்டாடுகிறாய். ஜனார்த்தனா! இது ராஜசிரேஷ்டர்களுக்கு அவமானஞ்செய்ததாகாது. உண்மையில் கௌரவர்கள் உன்னை ஏமாற்றுகின்றனர். மதுசூதனா! ஆண்மையில்லாதவன் விவாகஞ் செய்துகொள்வதும், கண்ணில்லாதவன் உருவத்தைப பார்ப்பதும் எவ்வாறோ அவ்வாறேதான் ராஜாவாயில்லாத உனக்கு ராஜாக்களுக்குரிய மரியாதை செய்வதும், ராஜாவான யுதிஷ்டிரர் எப்படிப்பட்டவரென்பதையும் பீஷ்மர் எப்படிப்பட்டவரென்பதையும் வாசுதேவன் எவ்வகையானவனென்பதையும் கண்டோம். இவையெல்லாம் ஒற்றுமையாகவே யிருக்கின்றன' என்றான். சிசுபாலன் அவர்களைப் பார்த்து இவ்வாறு சொல்லி உயர்ந்த ஆசனத்திலிருந்து எழுந்து அப்போதே அரசர்களுடன்கூட அந்த ஸதஸினின்று வெளியிற் சென்றான்.

---

## நாற்பத்தோராவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (பீஷ்மர் சிசுபாலன் சொன்னதைக் கண்டித்துக் கிருஷ்ணனைப் பூஜித்தது நியாயமென்று ஸ்தாபித்தது)

பின்பு, ராஜாவான யுதிஷ்டிரர் சிசுபாலன் பின் ஓடிச் சமாதானஞ்செய்து இனிமையாகப் பேசத் தொடங்கினார். 'அரசனே! நீ எவ்வகையான பேச்சைப் பேசினாயோ அவ்வகையானது நியாயமன்று அரசனே! இதில் பாவம் அதிகம்; கடுமை பயனற்றது. தர்மம் பெரிதென்பதை அரசர் அறியாமலிருத்தல் தகாது. பீஷ்மர் சந்தனுவின் புத்திரர். அவரை நீ மரியாதைசெய்வதற்குமாறாக அவமதிக்கலாகாது. உன்னை விட வயதில் மிக முதிர்ந்த அனேகம் அரசர்களை இதோ பார். இவர்கள் கிருஷ்ணனுக்குப் பூஜைசெய்ததைப் பொறுத்திருக்கின்றனர். அவர்களைப்போலவே நீயும் பொறுக்கக்கடவாய். சேதி ராஜனே! பீஷ்மர் கிருஷ்ணனுடைய உண்மையை நன்றாக அறிந்தவர். கிருஷ்ணனை, பீஷ்மர் அறிந்திருப்பதுபோல நீ அறியாய்' என்றார். அப்போது பீஷ்மர் சொல்லத் தொடங்கினார்.

'உலகத்துக்கெல்லாம் மிகப் பெரியவரான கிருஷ்ணன் விஷயத்தில் செய்த மரியாதையை ஒப்புக்கொள்ளாத இவனுக்கு நல்வார்த்தை சொல்லத்தகாது; இன்சொற் சொல்லத்தகாதவன். யுத்தஞ்செய்கிறவர்களிற் சிறந்தவனான எந்த க்ஷத்திரியன் மற்றொரு க்ஷத்திரியனை யுத்தத்தில் ஜயித்து உட்படுத்தினபிறகு அவனை விட்டுவிடுகிறானோ அவன் அவனுக்குக் குருவாகிறான். இந்தச் சபையிலுள்ள அரசர்களில் கிருஷ்ணனுடைய பராக்கிரமத்தினால் யுத்தத்தில் ஜயிக்கப்படாத அரசன் எவனையும் நான் பார்க்கவில்லை. சிறந்த கைகளையுடைய இந்தக் கிருஷ்ணன் நமக்கு மாத்திரமே மிகப் பூஜ்யர் அல்லர்; மூன்று லோகங்களுக்கும் பூஜ்யர். க்ஷத்திரிய சிரேஷ்டர் அநேகர் கிருஷ்ணனால் யுத்தத்தில் ஜயிக்கப்பட்டனரல்லரோ? உலகமெல்லாம் இந்த விருஷ்ணி குலத்தோரிடம் முழுதும் நிலைபெற்றிருக்கிறது. ஆதலால், முதியவர்களிருப்பினும் கிருஷ்ணனையே பூஜிப்போம்; மற்றவரைப் பூஜியோம். சேதி ராஜனே! நீ இவ்வாறு சொல்லத் தகாது. இவ்வகையான புத்தி உனக்கு இருக்கலாகாது. ஞான விருத்தர்களில் அனேகரை நான் அடுத்திருக்கிறேன். அரசனே! கண்ணனால் முன்னம் காப்பாற்றப்பட்டவரும் அவர் மகிமையையறிந்தவருமான அந்தப் பெரியோர் கூடி ஸ்ரீ கிருஷ்ண பகவா

னுடைய அனேக குணங்களை சாதுக்களான அவர்கள் சொல்லிக் கொண்டாடுவதை நான் கேட்டிருக்கிறேன். இந்தச் சிறந்த ஞானவானாகிய கிருஷ்ண பகவான் அவதரித்தது முதல் செய்த காரியங்களையும் மனிதர்கள் பலமுறை விசேஷமாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஓ! சேதி ராஜனே! இந்தப் பூமியில் பிராணி களுக்கெல்லாம் சௌக்கியத்தைச் செய்பவரும் சாதுக்களால் ஆராதிக்கப்பட்டவருமான ஜனார்த்தனரை நாம் நமது உறவை முன்னிட்டு எப்படியாவது பயன்பெறச் செய்யவேண்டுமென்று அபிமானத்தில் பூஜித்தோமல்லோம். அவருடைய புகழை யும் சூரத்தனத்தையும் ஜயத்தையும் அறிந்து பூஜையைச் செலுத்துகிறோம். இந்தச் சபையில் மிகச் சிறியவனானாலும் நாம் ஆராய்ந்துபாராதவன் எவனுமில்லை. குணங்களைப்பற்றித்தான் விருத்தர்களையும் தாண்டிக் கிருஷ்ணனே முதலில் பூஜிக்கத் தக்கவரென்று நாங்கள் நினைக்கிறோம். பிராம்மணர்களுக்குள் அறிவில் மிகுந்தவனும், க்ஷத்திரியர்களுக்குள் பலத்தில் மிகுந்த வனும், வைசியர்களுக்குள் தனதானியங்களில் மிகுந்தவனும் பூஜ்யர். சூத்திரர்களில்மட்டுமே வயதில் முதிர்ந்தவன் பூஜ்யன். பிராமணர்களுக்குரிய வேதவேதாங்கங்களின் ஞானமும் க்ஷத் திரியர்களுக்குரிய சக்தியுமாகிய இரண்டு காரணங்களும் இவ ரைப் பூஜைசெய்வதற்குச் சேர்ந்தன. கேசவனைத் தவிரச் சிறந் தவன் வேறு யார் இம்மானிட லோகத்திலிருக்கிறான்? கொடை, காரியஞ்செய்யும் திறமை, கல்வி, கேள்வி, சூரத்தனம், நாணம், புகழ், உயர்ந்த புத்தி, வணக்கம், லக்ஷ்மி, தைரியம், சந்தோஷம் இவையெல்லாம் கிருஷ்ணனிடத்தில் தவறுமலிருப்பவை. உல கங்களுக்கெல்லாம் சிறந்த ஆசாரியரும் தந்தையும் பெரியவருமா யிருப்பதனால் பூஜைக்குரியவரும் பூஜிக்கப்படுகிறவருமான அந்தக் கிருஷ்ண பகவானை இதோ பூஜிக்கிறோம். நீங்களனை வரும் பொறுக்கவேண்டும். ரித்விக்கு, ஆசாரியன், கல்யாணப் பிள்ளை, ஸ்நாதகன், அரசன், நண்பன் ஆகிய எல்லாருமா யிருப்பவர் கிருஷ்ணன். ஆதலால், (அந்த) அச்சுதர் பூஜிக்கப் பட்டார். உலகங்களின் சிருஷ்டிக்கும் சம்ஹாரத்திற்கும் கிருஷ் ணனே காரணம். ஜங்கமமும் தாவரமுமாகிய இந்த உலகம் கிருஷ்ணனாலேதான் நிலைபெற்றிருக்கிறது. சிஷ்யருக்கு முன் சூட்சுமமாயிருந்த பிரகிருதியும் இவரே. அதைப் படைத்த ஆதி புருஷரும் இவரே. எல்லாவற்றிற்கும் எட்டாதவரும் இவரே. ஆதலால், அச்சுதர்தாம் பூஜைக்கு மிகவும் உரியவர். புத்தி, மனம், (மூலப்பிரகிருதியின் விகாரமான) மகத் என்னும் தத்துவம், வாயு, தேயு, ஜலம், ஆகாயம், பூமி, (அண்டஜம், ஸ்வேதஜம்

உத்பிஜ்ஜம், ஜராயுஜம் என்னும்) நால்வகைப் பொருள்கள் இவை யனைத்தும் கிருஷ்ணனையே ஆதாரமாகவுடையவை. ஆதித்யன், சந்திரன், நட்சத்திரங்கள், நவக்கிரகங்கள், திசைகள், திசைகளின் மூலைகள் இவை யனைத்தும் கிருஷ்ணனிடத்தில் நிலைபெற்று நிற்பவை. எல்லோருக்கும் ஆத்மாவான ருத்திர பகவானும் என்றுமுள்ள பிரம்மதேவரும் இவரே. அரூபியான பொருள், ரூபத்தை எடுத்துக்கொண்டு மானிட வடிவத்துடன் வந்திருக்கிறது. வேதங்களுக்கு [1]முகம் அக்னிஹோத்திரம்; மந்திரங்களுக்கு முகம் காயத்ரி; மனிதர்களுக்கு முகம் அரசன்; நதிகளுக்கு முகம் சாகரம்; நட்சத்திரங்களுக்கு முகம் சந்திரன்; ஒளிகளுக்கு முகம் ஆதித்யன்; மலைகளுக்கு முகம் மேரு மலை; பறவைகளுக்கு முகம் கருடன்; கீழ்மேலாகவும் குறுக்காகவுமுள்ள உலகத்தின் விஸ்தாரம் எவ்வளவோ அவ்வளவிலுமுள்ள தேவலோக முதலான எல்லா உலகங்களுக்கும் கிருஷ்ண பகவானே முகம். ஆனால் சிறு பிள்ளையான இந்தச் சிசுபாலன் அறியான். அதனால் எங்கும், எக்காலமும் கிருஷ்ணனை இவ்வாறு பேசுகிறான். புத்தியுள்ள எந்த மனிதன் எல்லாவற்றிலும் சிறந்த தர்மத்தைத் தேடுவனோ அவன் தர்மத்தை யறிவதுபோல இந்தச் சேதி ராஜன் அறியான். அல்லது முதிர்ந்தவர்களும் சிறுவர்களுமாயுள்ள மகாத்மாக்களான அரசர்களில் எவன் கிருஷ்ணனைத் தகுந்தவராக நினையாதவன்? எவன் இவரைப் பூஜிக்கமாட்டான்? அல்லாமலும், இந்தப் பூஜை தவறாகச் செய்யப்பட்டதென்று சிசுபாலன் நினைப்பானாகில், குற்றம் நடந்தால் எப்படிச் செய்வது நியாயமோ அப்படி இவன் செய்யலாம்' என்றார்.

---

நாற்பத்திரண்டாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (கிருஷ்ண பூஜையில் பொறாமையுற்ற அரசர்களைச் சகதேவன் மறுபடியும காலைக் காண்பித்து வீரவாதம் செய்தது)

காங்கேயரால் இவ்வாறு உரைக்கப்பட்ட சிசுபாலன் அவர் மீது கோபித்தான். அவன் கோபித்ததைக் கண்டு அப்போது சகதேவன் பேசத் தொடங்கினான்.

'சேதிராஜாவே! இப்போது நடந்ததெல்லாம் நான் புத்தியினால் ஆராய்ந்து நடத்தினது. அதன் உண்மையைக் காரணத்தோடு நான் இங்கே சொல்லுகிறேன், கேள். அரசர்களனைவருக்கும் கிருஷ்ணன் ஒருவரே பெரியவர். வேறு யாருமில்லை.

1. முகம் - தலைமை.

ஆதலால், அவர் எங்களால் பூஜிக்கப்பெற்றார். நீங்களெல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டியவர்கள். இந்த ராஜாக்களுக்குள் எவன் அதைப் பொறுக்கவில்லையோ அவன் உடனே சேனைகளோடும் வாகனங்களோடும் யுத்தத்துக்குப் புறப்படட்டும். அவன் தலையில் இதோ என் கால் வைக்கப்படுகிறது. இவ்வாறு பூஜித்த காரணம் என்னால் சொல்லப்பட்டது. எனக்கு எவனுவது மறுமொழி சொல்லட்டும்' என்றான். அதன்மேல், புத்திமான்களும் கௌரவமுள்ளவர்களும் பலசாலிகளுமாயிருந்த ராஜாக்களின் நடுவில் அவ்வாறு காலைக் காண்பித்தபோது அவர்களில் யாரும் ஒன்றும் பேசவில்லை. இவ்வாறு சகதேவன் கண்ணனைப்பற்றிச் சொன்னபோது சுபாவமாகச் சிவந்திருந்த சிசுபாலன் கண்கள் கோபத்தினால் அதிகமாகச் சிவந்தன. அவனுக்குக் கோபமுண்டானதைக் கண்டு பராக்கிரமசாலியான பீஷ்மர் மறுபடியும் அவனுக்குக் கிருஷ்ணனுடைய சிறந்த குணங்களையே சொன்னார் பேசுகிறவர்களிலும் புத்திமான்களிலும் சிறந்தவரான பீஷ்மர், சிசுபாலனையும் சபையோரான எல்லா அரசர்களையும் கூப்பிட்டு, 'அரசர்களே! கிருஷ்ணனைக் குறித்து சகதேவன் சொன்னது எதுவோ அது சரிதான் என்று அறியுங்கள். இன்னமும் அவரைப்பற்றிச் சொல்லுகிறேன்; கேளுங்கள்' என்றார்.

---

நாற்பத்துமூன்றாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

**(கிருஷ்ணன் மகிமையைப்பற்றி யுதிஷ்டிரர் கேட்க, பீஷ்மர் அவருடைய நாராயண ரூபத்தையும் உலக சிருஷ்டியையும் கூறியது)**

யுதிஷ்டிரர், பீஷ்மர் சொல்லியதைக் கேட்டவுடன், அக்காலத்தில் யாவர்க்கும் கிருஷ்ணனைத் தெரிவிப்பதற்காகத் திரும்பவும் பீஷ்மரைக் கேட்கத் தொடங்கினார். 'பிதாமகரே! தேவதையும் பகவானுமாகிய கண்ணபிரானுடைய செய்கைகள் எல்லாவற்றையும் விரிவாகக் கேட்க விரும்புகிறேன். அவற்றை விவரித்துச் சொல்லும். பிதாமகரே! பகவானான கிருஷ்ணனுடைய அவதாரங்களைப்பற்றியும், செய்த காரியங்களைப்பற்றியும், கிருஷ்ண பகவானிடத்தில் பிரகிருதியானது எவ்வாறு இருக்கிறதென்பதைப்பற்றியும் எனக்குச் சொல்லக்கடவீர்' என்றார். பரத சிரேஷ்டரான ஜனமேஜய ராஜாவே! யுதிஷ்டிரரால் இவ்வாறு கேட்கப்பட்ட பீஷ்மர், அந்த ராஜசபையில் தேவேந்திரனைப் போல விளங்குகின்ற கண்ணபிரான் முன்னிலையில் சத்துருக்களை

ஸம்ஹரித்தவரான யுதிஷ்டிரரை நோக்கி மற்றவர் செய்தற்கரிய கண்ணபிரான் செய்கைகளைச் சொல்லத் தொடங்கினார். அரசர்க் கரசரான ஜனமேஜய ராஜாவே! அறிஞர்களில் சிறந்தவரும் பிறருக்குப் பயத்தைத் தரும் செய்கைகளை உடையவருமான அந்தப் பீஷ்மர், தர்மராஜரிடத்திலிருக்கும் அரசர்கள் கேட்க எதிரிகளை ஜயிப்பவனான சேதிராஜனைப் பெயர் சொல்லி அழைத்து, கிருஷ்ணனைப்பற்றிப் பின்வருமாறு சொல்லலானார் :

'ராஜனே! யுதிஷ்டிரா! எல்லார்க்கும் மேற்பட்ட ஈசுவரருடைய செய்கைகளின் முறை யார்க்கும் அறியக்கூடாதது. அது நிகழ்கிறதையும் சென்றதையும்பற்றிச் சொல்லுகிறேன் ; கேள். யார்க்கும் புலப்படாத பிரபுவான பகவான் இங்கே புலப்படும் வடிவத்தோடு இருக்கிறார். தமமாலேயே தாம் நிலைபெற்றிருப்பவரும் பிரம்மதேவருக்குத் தந்தையும் அசைவற்றவரும் அளவில்லாதவரும் எப்போது மிருப்பவரும் ஆயிரம் தலைகளும் ஆயிரம் வாய்களும் ஆயிரம் கண்களுங் ஆயிரம் கால்களும் ஆயிரம் கைகளும் ஆயிரம் நாமங்களும் ஆயிரம் கிரீடங்களுமுள்ளவரும் ஸர்வ வியாபியும் ஸர்வக்ஞரும் விசுவரூபியும் ஒளியுள்ளவரும் அனேகம் நிறங்களுள்ளவரும் தேவர்களுக்கு முதன்மையுமான பகவான் நாராயணர் சிருஷ்டிக்கு முன் மூலப் பிரகிருதியைக் கடந்திருந்தார். அந்தப் பிரபுவான நாராயணர், முதலில் ஜலத்தைப் படைத்தார். அதன்பிறகு, பகவான் அந்த ஜலத்தில் தாமே பிரம்மதேவரைப் படைத்தார். நான்முகரான பிரம்மதேவர் மற்ற லோகங்கள் எல்லாவற்றையும் தாமே படைத்தார். ஆதி காலத்தில் எல்லா லோகங்களின் உற்பத்தியும் இவ்வாறுதான். முதலில் பிரளயம் வந்து தாவரங்களும் ஜங்கமங்களும் அழிந்து தாவர ஜங்கமங்க ளடங்கிய உலகங்களும் அழிந்து பிரம்மாதி தேவர்களும் லயமாகிப் பஞ்சபூதங்களும் மூழ்கி மகத்தானது பிரகிருதியில் லயமானபோது, எல்லாவற்றிற்கும் ஆத்மாவும் ஸர்வேசுவரருமான அந்த நாராயணர் ஒருவரே நின்றார். தர்மராஜாவே! எல்லாத் தேவர்களும் நாராயணருடைய அங்கங்கள். ராஜாவே! மேலுலகம் அவருக்குத் தலை ; [1]ஆகாயம் நாபி ; பூமி கால்கள் ; அசுவினி தேவர்கள் செவிகள் ; சந்திரனும் சூரியனும் கண்கள் ; இந்திரனும் அக்னியுமாகிய இரண்டு தேவர்களும் அந்த மகாத்மாவுக்கு முகம் ; மற்றுமுள்ள தேவர்களனைவரும் அம்மகாத்மாவின் மற்றெல்லா உறுப்புக்களும் ; நூலிழையில் கோக்கப்பட்ட மணிகள்போல எல்லாப் பொருள்களும்

1 இடைவெளி.

அவரை ஆசிரயித்திருக்கின்றன. மகாயோகியும் ஸர்வக்ஞரும் பரமாத்மாவும் பரப்பிரம்மமுமான நாராயணர் மகாப் பிரளயம் முடிந்த பிறகு எல்லாம் தமஸ் என்னப்பட்ட மூலப்பிரகிருதியில் லயித்திருப்பதைக் கண்டு தாமே தம்மைப் பிரம்மதேவராகச் சிருஷ்டித்தார். பரப்பிரம்மத்தினிடத்திலேயே பிறந்தவரும் எல்லாப் பிராணிகளுக்கும் ஈசுவரரும் குற்றமற்றவருமான அந்தப் பிரம்மதேவர் ஸநத்குமாரரையும் ருத்திரரையும் தவமே தனமாகக்கொண்ட ஸப்த ரிஷிகளையும் ஏழுலகங்களையும் ஜனங்களையும் மற்றுமுள்ள எல்லாவற்றையும் படைத்தார். யுதிஷ்டிரா! அவர்கள் அந்த அந்தக் காலங்களில் அந்த அந்த இடங்களில் பற்பல பொருள்களை உற்பத்தி செய்தனர். அந்த மகாத்மாக்களிடமிருந்து அழிவில்லாத பிரகிருதியானது பல உருவங்களாக உண்டாயிற்று. பாரதனே! அநேக கோடி கல்பங்களும் அநேகம் பிரளயங்களும் வரிசையாகக் கடந்துபோயின. ராஜனே! [1]மன்வந்தரங்களும் தேவ யுகங்களும் மனுஷ்ய யுகங்களும் பிரளயங்களும் சக்கரம்போலச் சுழல்கின்றன. உலகம் அனைத்தும் முகத்தில் [2]விஷமுள்ளது. லோகநாதராகிய அந்தப் பகவான் நாராயணர் நான்முகக் கடவுளைப் படைத்து எல்லா லோகங்களுக்கும் நன்மைக்காகத் திருப்பாற்கடலில் இருக்கிறார். எல்லா லோகங்களுக்கும் ஜனங்களுக்கும் பிரம்மதேவர் பிதாமகர். ஆதலால் அவருக்கும் பிதாவான நாராயணர் எல்லாவற்றிற்கும் பிரபிதாமகரா யிருக்கிறார்.

---

நாற்பத்துநான்காவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (மதுகைடவருடைய ஸம்ஹாரத்தைப்பற்றிச் சொல்லியது)

யுதிஷ்டிரா! யார்க்கும் புலப்படாதவரும் புலப்படத்தக்க திவ்ய மங்களமூர்த்தியா யுள்ளவரும் ஸர்வேசுவரருமான பகவானே நரநாராயணர்களாகிக் கிருஷ்ணனுனர். எப்பொழுதும் உள்ளவரும் எல்லாப் பிராணிகளுக்கும் அந்தர்யாமியுமாகிய அந்தப் பகவான் காரியங்களுக்குத் தக்கபடி பிரம்மா, இந்திரன், சூரியன், தர்மதேவதை யெனப் பல ரூபங்களாக அவதாரம் செய்கிருர். தேவலோகத்தில் தேவக் கூட்டங்களுடன் சேர்ந்திருக்கும் அவதாரங்களைச் சொல்வேன். ஆயிர யுக காலம்

---

1 மன்வந்தரம் = தேவ யுகங்கள் எழுபத்தொன்று சேர்ந்தது.

2 நாசத்தையே முடிவாக வுடையது

தூங்கினபிறகு, காரியங்களுக்காகத் தேவர்க்குந் தேவரும் லோக நாதருமான பகவான் அவதரிக்கிறார். தேவருக்குந் தேவரும், லோகநாதரும், ஆதிதேவரும், ஜ்வலிக்கின்ற அக்னிக்கு ஒப்பான ஒளியுள்ளவருமான பகவான், அனேக ஆயிர வருஷங்களுக்குப் பிறகு பிரம்மாவையும் கச்யபரையும் கபிலரையும் பரமேஷ்டியையும் தேவர்களையும் ஸப்த ரிஷிகளையும் சங்கரரையும் ஸநத்குமாரரையும் பிரஜைகளைச் சிருஷ்டிப்பவராகிய மனுவையும் முதலில் படைத்தார். தாவரங்களும் ஜங்கமங்களும் தேவர்களும் அசுரர்களும் நாகர்களும் ராக்ஷஸர்களும் அழிந்துபோன பிரளய காலத்தில், கடல் நடுவிலிருப்பவரும் யாராலும் ஜயிக்க முடியாதவரும் யுத்தஞ்செய்ய விருப்பமுள்ளவருமான மதுகைடவரென்னும் அண்ணன் தம்பிகளிருவர் அந்தப் பகவானால் கொல்லப்பட்டனர். அசுரர்களுக்கு முதன்மையான அவ்விரண்டு மகா அசுரர்களும் ஆதியில் அந்தப் பகவானால் மண்ணைப் பிடித்து, யாராலும் வெல்லப்படாமலிருக்கும்படி வரன் கொடுத்துப் படைக்கப்பட்டனர். அவர்கள் இருவரும் கருங்கடலில் துயின்ற அந்த மகாத்மாவான விஷ்ணுவின் காதுக்குறும்பியிலிருந்து பிறந்து இரண்டு பெரு மலைகளைப்போல நின்றனர். பிரம்மாவினால் நன்றாக ஏவப்பட்ட வாயுதேவன் தானே அவர்களுக்குள் பிரவேசித்தான். அதனால், அந்தப் பெரிய அசுரர்கள் ஆகாயத்தை மறைத்துக்கொண்டு வளர்ந்தனர். காற்றளவாக விருத்தியடைந்த அவ்வசுரர்களைக் கண்டு பிரம்மதேவர் மெல்லத் தடவினார். அவர்களில் ஒருவனை மிக மிருதுவாகவும் மற்றொருவனைக் கடினமாகவும் உணர்ந்தார். ஜலத்தில் பிறந்தவரான பிரம்மதேவர் மிருதுவாயிருந்தவனுக்கு மதுவென்றும், கடினமாயிருந்தவனுக்குக் கைடவனென்றும் தாமே அவ்விருவருக்கும் பெயரிட்டார். தர்மராஜாவே! இவ்வாறு பெயரிடப்பட்ட அவ்விரண்டு அசுரர்களும் பலத்தினால் கர்வங்கொண்டு திரிந்து ஆகாயமெல்லாம் வியாபித்தனர். முற்றிலும் அச்சமற்ற அந்த மதுகைடவர்கள் ஆகாய முழுமையும் மறைத்து யுத்தஞ்செய்ய விரும்பி எல்லா உலகத்தின் பிரளயமாகிய சமுத்திரத்தில் திரிந்தனர். அந்த அசுரர்கள் வருவதைக் கண்டு உலகங்களுக்குக் கர்த்தாவான பிரம்மதேவர் உலகமெங்கும் ஒரே நீராக இருக்கும் அந்தக் கடலுக்குள் மறைந்தனர். அந்தப் பிரம்மதேவர் பத்மநாபருடைய நாபியிலிருந்து கிளம்பின தாமரை மலரினின்றும் தாமாகவே ஜனித்தார் அந்தக் கமலம் சேற்றில் உண்டாகாதது. லோக கர்த்தாவான பிரம்மதேவர் தாமிருந்த விட

மாகிய அந்தக் கமலத்தைப் பூஜித்தார். அந்த நாராயணரும் நான்முகனுமாகிய இருவரும் அனேகம் பதினாயிர வருஷங்கள் ஜலத்துக்குள் அசையாமல் படுத்திருந்தனர். வெகு காலத்திற்குப் பிறகு பிரம்மா இருந்த இடத்திற்கு அந்த மதுகைடவரென்னும் இரண்டு அசுரர்களும் வந்தனர். லோகநாதரும் பேரொளியுள்ளவருமான பத்மநாபர் அவர்களைக் கண்டு கோபத்தால் சிவந்த கண்களோடு படுக்கையிலிருந்து எழுந்தார். யுதிஷ்டிரா! மூன்று லோகங்களும் ஜலமாகவிருந்த அந்தப் பயங்கரமான கருங்கடலில் அந்தப் பத்மநாபருக்கும் அவ்விரண்டு அசுரர்களுக்கும் பயங்கரமான யுத்தம் உண்டாயிற்று. அந்தக் கடுஞ்சண்டை ஆயிரக்கணக்கான வருஷங்கள் நடந்தது. அந்த யுத்தத்தில் அவ்வசுரர்கள் சோர்வை அடையவில்லை. யுத்தத்தில் அடங்காத கொழுப்புள்ள அவ்வசுரர்களிருவரும், நெடுங்காலமான பிறகு சமத்தரான நாராயணரைப் பார்த்து மனத்தில் சந்தோஷத்துடன், 'ஐயா! உம்முடைய யுத்தத்தினால் நாங்கள் மகிழ்ந்தோம், நீர் எங்களுக்குச் சிறந்த நமனாயிருக்கிறீர். ஜலத்தினால் நனைக்கப்படாத இடத்தில் எங்களைக் கொல்லும். தேவசிரேஷ்டரே! உம்மால் கொல்லப்பட்ட நாங்கள் உமக்குப் புத்திரர்களாகக்கடவோம். எவன் எங்களை யுத்தத்தில் ஜயிப்பானோ அவனுக்குப் பிள்ளைகளாகும்படி நாங்கள் கட்டளையிடப்பட்டிருக்கிறோம்' என்று கூறினர். ஈசுவரரான நாராயணர், அவர்கள் சொன்னதைக் கேட்டவுடன் நகைத்துக்கொண்டே யுத்தத்தில் மதுகைடவர் என்னும் அந்த இரண்டு அசுரர்களையும் தமது இரு புஜங்களாலும் தொடைகளாலும் கசக்கி வதஞ்செய்தார். கொல்லப்பட்டுத் தண்ணீரில் கரைக்கப்பட்ட அவ்விரண்டு தேகங்களும் ஒன்றாகப்போயின. ஜலத்தின் அலைகளினால் அடிக்கப்பட்ட அந்த அசுர தேகங்களிலிருந்து கொழுப்பு வெளிப்பட்டது. அந்த ஜலம் அவ்விருவர் கொழுப்பினாலும் வியாபிக்கப்பட்டு மறைந்தது. பகவானாகிய நாராயணர் பிறகு பலவகைப் பிராணிகளைப் படைத்தார். தர்மராஜாவே! பூமி முழுதும் அவ்வசுரர்களின் கொழுப்பினால் மூடப்பட்டதனால் அப்போதுமுதல் பூமி, [1] மேதினி என்று சொல்லப்படுகிறது. பத்மநாபருடைய பிரபாவத்தினால் பூமியானது மனிதர்களுக்குச் சாசுவதமான இடமாகச் செய்யப்பட்டது.

---

1 மேதஸ் என்னும் கொழுப்பை யுடையது.

நாற்பத்தைந்தாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (வராகாவதாரம்)

கௌரவ சிரேஷ்டனே! அனேகமாயிரம் அவதாரங்கள் நடந்திருக்கின்றன. கூடியவரையில் அவற்றைக் குறித்துச் சொல்லுவேன்; கேள்.

ஆதிகாலத்தில் கடல் நீரில் துயின்ற பத்மநாபருடைய அந்தத் தேகத்தின் நாபீகமலத்தில் தேவர்களும் ரிஷிக்கூட்டங்களும் பிறந்தனரோ அந்த அவதாரம்[1] பௌஷ்கரிகம் என்று கூறப்படுகிறது. மந்திரங்களும் பிராம்மணங்களுமாகிய வேதங்கள் உருக்கொண்டதாகிய பகவானுடைய வராகாவதாரம் புராணங்களில் சொல்லப்பட்டிருப்பது செவிகளுக்கின்பமாக இருக்கிறது. அப்போது தேவர்களுக்கெல்லாம் சிரேஷ்டரும் பெருந்தவமுள்ளவரும் மாயைக்கு மேற்பட்டவரும் மகிமை பொருந்தியவரும் தர்மமும் சத்தியமும் உருக்கொண்டவரும் திருமகளை விட்டு அகலாதவரும் தமது சரித்திரத்திலும் பராக்கிரமத்திலும் பூஜிக்கப்பெற்றவருமான விஷ்ணு நான்கு வேதங்களே நாலு கால்களும், யூபஸ்தம்பமே கோரப்பல்லும், யாகங்களே பற்களும், சயனம் என்னப்பட்ட அக்னியின் மேடையே முகமும், அக்னியே நாவும், தர்ப்பங்களே ரோமங்களும், பிரம்மா என்னும் ரித்விக்கே தலையும், இரவு பகல்கள் கண்களும், வேதம் அங்கமும், ஸ்வரங்கள் அணிகளும், நெய் [2]நாசியும், நெய் எடுக்கும் பாத்திரமான ஸ்ருவமே அடிமூக்கும், ஸாமவேத கோஷமே ஒலியுமாக விளங்கும் வராகரூபத்தை யெடுத்து மலைகளும் செடிகளும் காடுகளும் அடங்கிய பூமியை ஜலத்திலிருந்து தூக்கினார். வெளிப்பொருள்களாகிய ஜடங்களுக்கும் உட்பொருள்களாகிய ஜீவன்களுக்கும் ஆத்மாவும், காண்பதற்கினியவரும், சிறந்த ஒளியுள்ளவரும், யோகியும், முதன்மையான சாஸ்திரங்களே உருக்கொண்டவரும், எல்லாவற்றிற்கும் மேற்பட்டவரும், நிலைதவறாதவருமான அந்த வராகமூர்த்திக்கு, பிராயச்சித்தமே முகமும், யாகப் பசுவாகிய ஆடே முழங்கால்களும், தர்மமே உருவமும், [3]உத்காதா என்பவன் செய்யும் ஸாமகானத்தோடுகூடிய ஹோமமே ஆண்குறியும், பசுக்களும் ஸோமலதையுமே பீஜங்களும், மந்திரங்களே எலும்புகளும், யாகவேதிகையே தோள்களும், நெய்ம்மணமே தேகவாசனையும்,

---

1 புஷ்கரம் என்னும் கமலத்திலிருந்து உலகத்தைப் படைத்ததுபற்றி அந்த அவதாரத்துக்கு 'பௌஷ்கரிகம்' என்று பெயர்.

2 நுகரும் புலன்.

3 யாகத்தின் ஒரு ரித்விக்கு.

ஹவ்யமும் கவ்யமுமே மலமூத்திரங்களும், பிராக்வம்சமென்னும் யாகசாலையின் முன்பாகமே தேசத்தின் முன்பாகமும், யாகதீக்ஷைகளே பலமும் தக்ஷிணையே மனமுமாயிருந்தன. மேலும், உபாகர்மமென்னும் அத்தியயன ஆரம்பமே அழகிய உதடும், ப்ரவர்க்யம் என்னும் யாகாங்கமான கிரியையே அலங்காரமான சுழியும், யக்ஞசாலையே தனக்குத் துணையான பத்நியும், (சொறிவதற்குள்ள ரத்னமயமான கொம்பே உயரமான கொம்புமாக இருந்தன. என்றுமழியாத ஈசுவரரான விஷ்ணுவானவர் இவ்வாறு யக்ஞவராகரராகி சமுத்திரத்தில் அழுந்தி, குன்றுகளும் செடிகளும் காடுகளும் அடங்கிய பூமி முழுவதையும் தூக்கினர். அந்தத் தண்ணீரில் முழுகிப்போன தமது தேவியான பூமியை, மார்க்கண்டேயர் பார்த்திருக்கையில் கொம்பினுல் தூக்கினர். தேவர்க்கும் ஈசுவரரும் ஆயிரந் தலைகளுள்ளவருமாகிய பிரபு உலகங்களின் நன்மையைக் கருதித் தம் கொம்பினுல் பூமியைத் தூக்கி நிலை நிறுத்தினர். கடலை ஆடையாக உடுத்தவளும் பூஜிக்கத்தக்கவளுமாகிய பூமி தேவி நடந்ததும் நடக்கின்றதும் இனி நடப்பதுமான எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியான யக்ஞவராகரால் இவ்வாறு எடுக்கப்பட்டாள்? தேவர்க்கும் தேவரான விஷ்ணுவினுல் தானவர்கள் அனைவரும் கொல்லப்பட்டார்கள். இவ்வாறு வராகாவதாரத்தைப்பற்றிச் சொன்னேன். இனிச் சிங்க வடிவமெடுத்து ஹிரணியகசிபுவைக் கொன்ற நரசிம்மாவதாரத்தைக் கேள்.

---

நாற்பத்தாறுவது அத்தியாயம்

## ஆர்க்காரண்ய பர்வம் (தொடர்ச்சி)

### (நரசிம்மாவதாரம்)

தர்மராஜனே! மிகுந்த பலசாலியும் பலத்தினுல் கர்வம் அடைந்தவனும் தேவர்களுக்குப் பகைவனும் மூன்று லோகங்களுக்கும் முள்ளைப் போன்றவனும் அசுரர்களுக்கு மூல புருஷனும் பராக்கிரமத்தில் ஒப்பற்றவனுமான ஹிரணியகசிபு என்னும் அசுர ராஜன் ஒருவனிருந்தான். அரசனே! அவன் கடலுக்குள் பிரவேசித்துப் பதினுயிரத்து ஐந்நூறு வருஷ காலம் சிறந்த தவஞ்செய்தான். அவன் மௌன விரதத்தை வகித்து அனுஷ்டானத்திலும் உபவாசத்திலும் உறுதியாக அசைவற்று இருந்தான். குற்றமற்றவனே! அவன் மனத்தையும் ஐம்புலன்களையும் அடக்கிப் பிரம்மசரிய விரதத்துடன் செய்த தவத்தினுலும் நியமத்தினுலும் பிரம்மதேவர் அவன்மீது சந்தோஷமடைந்தார். ராஜனே! அப்போது, தாமே உண்டானவரும், ஜங்கமங்களுக்

கும் தாவரங்களுக்கும் தந்தையும், பிரம்மஞானிகளிற் சிறந்தவரும், மகிமையும் ஐசுவரியமும் பொருந்தினவரும், சூரியயனைப்போலப் பிரகாசிப்பதும் ஹம்ஸங்கள் கட்டினதுமாகிய விமானத்திலேறியவருமான பிரம்மதேவர், ஆதித்தியர்களும் வசுக்களும் ஸாத்தியர்களும் மருத்துக்களும் ருத்திரர்களும் விசுவர்களும் யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் கின்னரர்களுமாகிய தேவர்களாலும் திசைகளாலும் திசைக்கோணங்களாலும் நதிகளாலும் கடல்களாலும் நட்சத்திரங்களாலும் முகூர்த்தங்களாலும் ஆகாயத்திற் சஞ்சரிக்கும் மற்றைக் கிரகங்களாலும் தவத்திற் சிறந்த தேவரிஷிகளாலும் சித்தர்களாலும் ஸப்தரிஷிகளாலும் மிக்க புண்ணியவான்களான ராஜரிஷிகளாலும் கந்தர்வர்களாலும் அப்ஸரஸுக்களின் கூட்டங்களாலும் மற்றுமுள்ள எல்லாத் தேவர்களாலும் சூழப்பட்டவராக அந்த அசுரனிடம் தாமே வந்து, 'நற்றவமுள்ளவனே! பக்தியுள்ள உனது இந்தத் தவத்தினால் நான் சந்தோஷமடைந்தேன். வரம் கேள். உனக்குச் சுகமுண்டாகட்டும். நீ நினைத்த பயனை அடைவாய்' என்று சொன்னார். அதனைக் கேட்ட ஹிரணியகசிபு, 'தேவசிரேஷ்டரே! தேவர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், நாகர்கள், ராக்ஷஸர்கள், மனிதர்கள், பிசாசர்கள் இவர்கள் யாரும் என்னைக் கொல்லவல்லவராகாமலிருக்கவேண்டும். உலகங்களுக்கெல்லாம் கர்த்தாவே! சிறந்த தவமுள்ள ரிஷிகளும் கோபித்து என்மேலிடும் சாபங்கள் பயன்படாமலிருக்கக் கடவன. ஆயுதத்தினாலும் அஸ்திரத்தினாலும் உலர்ந்ததனாலும் ஈரமுள்ளதனாலும் மற்றொன்றினாலும் என்னை வதஞ்செய்யக்கூடாமலிருக்கவேண்டும். பிதாமகரே! ஆகாயத்திலும் பூமியிலும் இரவிலும் பகலிலும் உள்ளேயும் வெளியிலேயும் எனக்கு வதம் நேரிடாமலிருக்கவேண்டும். [1] பசுக்களாலும் [2] மிருகங்களாலும் பறவைகளாலும் ஊர்வனவற்றாலும் எனக்கு மரணம் வராமலிருக்கவேண்டும். இந்த வரந்தான் நான் விரும்புவது. தேவர்க்குந் தேவரே! நீங்கள் கொடுக்கிறதாயிருந்தால் நான் இந்த வரங்களைக் கேட்கிறேன்' என்று சொன்னான். 'அப்பா! மேலானவையும் புதுமையானவையுமான இந்த வரங்களை உனக்கு நான் கொடுத்தேன். நீ விரும்பின வரங்களெல்லாவற்றையும் நிச்சயமாகப் பெறுவாய்' என்று சொல்லி, அந்தப் பகவானான பிரம்மதேவர் ஆகாய மார்க்கமாகவே சென்று பிரம்மரிஷிகளின் கூட்டங்களினால் பூஜிக்கப்பட்டவராகப் பிரம்மலோகத்தில் விளங்கினார். அவர் வரம் கொடுத்ததைக் கேட்டவுடன், தேவர்களும் நாகர்களும் கந்தர்வர்

1. நாட்டு மிருகங்கள் 2. காட்டு மிருகங்கள்.

களும் முனிவர்களும் பிரம்மாவினிடம் சென்று, பகவானே! இந்த வரத்தினால் அந்த அசுரன் எங்களைப் பீடிப்பான். பகவானே! அதனால் தயைசெய்து அவனை வதஞ்செய்வதற்கு உபாயத்தை ஆலோசிக்கக்கடவீர்' என்றனர். உலகங்களுக்கு அனுகூலமான அவர்களுடைய சொல்லைக் கேட்டு மகிமை பொருந்திய பிரம்மதேவர், தேவக்கூட்டங்களனைவரையும் பார்த்து, 'தேவர்களே! அவன் செய்த தவத்தின் பயனை அவன் பெறவேண்டியது அவசியம்தான். தவப்பயன் முடியும்போது பகவானான விஷ்ணு அவனை வதஞ்செய்வார்' என்று சொன்னார். இவ்வாறு அவன் வதத்தைப்பற்றிப் பிரம்மதேவர் சொன்னதைக் கேட்டபின் அந்தத் தேவர்களனைவரும் சந்தோஷத்துடன் தம்தம் திவ்ய லோகங்களுக்குச் சென்றனர். வரம் கிடைத்தவுடனே அந்தவரத்தினால் கர்வங்கொண்ட ஹிரணியகசிபுவென்னும் அசுரன் அந்த ஜனங்களெல்லாரையும் துன்பப்படுத்தினான். அந்த அசுர ராஜன் அசுரக் கூட்டங்களினால் சூழப்பட்டு ராஜ்யாதிபத்தியஞ் செய்தான். லோகாலோகம் என்னப்பட்ட சக்கரவாள பர்வதத்திற்கு உட்பட்ட ஏழு தீவுகளையும் தன் பலத்தினால் உட்படுத்தினான். தேவலோகத்திற்குரிய போகங்களெல்லாவற்றையும் இவ்வுலகத்தில் அவன் பூர்ணமாக அடைந்தான். தானவனாகிய அந்த அசுர ராஜன் மூன்று லோகங்களிலுமுள்ள தேவர்களை வென்று மூன்று லோகங்களையும் தன் வசப்படுத்தி சுவர்க்கத்தில் வாசஞ்செய்தான். வரத்தினால் மதங்கொண்ட அந்த மகா பலசாலியான அசுரன், தேவலோகத்தில் வாசஞ்செய்து எல்லா உலகங்களையும் ஜயித்து, இந்திரன், சந்திரன், அக்னி, வாயு, சூரியன், ஜலம், ஆகாயம், நட்சத்திரங்கள், பத்துத் திசைகள், அஹம், கோபம், கர்மம், குரோதம், வருணன், வஸுக்கள், [1] அரியமன், யக்ஷர்களுக்கும் கின்னரர்களுக்கும் ராஜாவும் தனங்களுக்கு அதிபதியுமான குபேரன் ஆகிய இவர்கள் எல்லோருமாக நானே இருப்பேன்' என்று சொல்லி அப்படியே பலவந்தமாக அவர்களுடைய இடங்களை ஆக்ரமித்து அவர்கள் அதிகாரங்களையும் எடுத்துக்கொண்டான். தேவசிரேஷ்டர்களாலும் கின்னர சிரேஷ்டர்களாலும் உயர்ந்த யாகங்கள் செய்து பூஜிக்கப்படவேண்டியவனானான். அவன் நரகத்திலிருப்பவர்களைக் கொண்டுவந்து சுவர்க்கத்திலிருக்கச் செய்தான். பலசாலியான அந்த அசுர ராஜன் இவ்வாறான காரியங்களைச் செய்தபிறகு, ரிஷியாசிரமங்களில் மகானுபாவர்களும் சிலாக்கியமான தவமுள்ளவர்களும், சத்தியமும் தர்மமுந்

1. துவாதசாதித்யர்களில் ஒருவன்.

தவருதவர்களும், ஜிதேந்தியர்களுமான முனிவர்களைப் பீடித்தான். அசுரர்களை யாகங்களின் ஹவிர்ப்பாகங்களுக்கு உரியவர்களாகவும் தேவர்களை யாகஞ்செய்பவர்களாகவும் செய்தான். தேவர்கள் போன இடங்களெல்லாம் அவனும் போய்க்கொண்டிருந்தான். தேவர்களின் ஸ்தானங்களை ஆக்ரமித்து அரசு புரிந்தான். இவ்வாறு அந்தத் துராத்மாவுக்கு ஐந்து கோடியே எழுபதினாயிரத்து அறுபத்தொரு வருஷங்கள் சென்றன. அவ்வளவு வருஷ காலமும் அந்த அசுர ராஜன் எல்லாச் சுகங்களோடும் ஐசுவரியத்தை அடைந்திருந்தான். அதிகப் பலசாலியான அசுர ராஜாவினால் மிகத் துன்புறுத்தப் பட்ட அந்தத் தேவர்கள் சிவனையும் இந்திரனையும் முன்னிட்டுக் கொண்டு பிரம்மலோகம் சென்றனர். பிரம்மதேவரை யடைந்து விசனப்பட்டுக் கைகூப்பி, 'பகவானே! சென்றதற்கும் வருவதற்கும் ஈசுவரரே! இங்கே வந்திருக்கும் எங்களைக் காப்பாற்றக் கடவீர். எங்களுக்கு இப்போது அல்லும் பகலும் கொடிய அசுரன் பயமே இருக்கிறது. பகவானே! நீர் சுயமாக உண்டானவர்; எல்லா அசுரர்களையும் ஆதியில் உண்டுபண்ணினவர்; எல்லாவற்றிற்கும் ஈசுவரர்; ஹவ்யங்களையும் கவ்யங்களையும் படைத்தவர்; யாருக்கும் புலப்படாத மூலபுருஷர்; அழிவில்லாதவர்' என்று சொன்னார்கள். அதைக் கேட்டுப் பிரம்மதேவர், 'தேவர்களே!' கேளுங்கள். இந்த ஆபத்து இப்படி நேருமென்று என்னாலும் அறியமுடியவில்லை. [1]புருஷரும் விசுவரூபரும் பேரொளி பொருந்தினவரும் எல்லாப் பிராணிகளுக்கும் சிந்திக்கவுங்கூடாதவரும் பிரபுவும் அழிவில்லாதவருமான நரநாராயணர்தான் இந்த விசன காலத்தில் எனக்கும் உங்களுக்கும் முக்கியமான ஆதாரம். நாராயணர் அவ்யக்தம் என்று சொல்லப்பட்ட மூலப்பிரகிருதிக்கும் மேற்பட்டவர். நான் அந்த அவ்யக்தத்திலிருந்து பிறந்தவன். ஜனங்கள், லோகங்கள், தேவர்கள், அசுரர்கள் எல்லாரும் என்னிடம் பிறந்தவர்கள். தேவர்களே! உங்களுக்கு நான் எவ்வாறோ, அவ்வாறே எனக்கு நாராயணர்;' எல்லாருக்கும் நான் பிதாமகன். அந்த விஷ்ணு எல்லாருக்கும் பிரபிதாமகர். அந்த விஷ்ணு அவ்வசுரனைக் கொல்வது திண்ணம். அவருக்கு முடியாதது ஒன்றுமில்லை. ஆதலால், விரைவாக அவரிடம் செல்லுங்கள்' என்று சொன்னார். பரத சிரேஷ்டனான யுதிஷ்டிரா! பிதாமகர் சொன்னதைக் கேட்டவுடன், அந்தத் தேவர்களனைவரும் பிரம்மதேவருடன் கூடவே திருப்பாற்கடலுக்குச் சென்றனர்.

---

1 ஆத்மா. 2 எல்லாம் தாமாக இருப்பவர்.

ராஜனே! ஆதித்தியர்கள், வஸுக்கள், ஸாத்யர்கள், விசுவே தேவர்கள், மருத்துக்கள், ருத்திரர்கள், மகரிஷிகள், அழகுள்ள அசுவினி தேவர்கள் முதலான தேவர்களனைவரும் தங்கள் கூட்டத்தாருடன் நான்முகனை முன்னிட்டு [1] சுவேத த்வீபம் சேர்ந்தனர். தேவர்களுக்கெல்லாம் ஈசுவரரே! ஹிரணியகசிபுவை வதஞ் செய்து இப்போது எங்களைக் காப்பாற்றக்கடவீர். தேவர்களுக் கெல்லாம் உத்தமரே! பிரம்மா முதலான எங்கள் எல்லாருக்கும் முதல் சிருஷ்டிகர்த்தா நீர்தாம். மலர்ந்த தாமரையின் இதழ் போன்ற கண்களையுடையவரே! பகைவர்களுக்குப் பயங்கரரே! அசுர வமிசத்தை அழிப்பதற்கு நீரே எங்களுக்குச் சரணமாவீர்' என்று தேவர்கள் சொன்னார்கள். பரிசுத்தமான புகழுள்ளவரும் காணக்கூடாதவரும் எல்லாப் பிராணிகளுக்கும் ஆத்மாவுமான மகாவிஷ்ணு, தேவர்களின் அந்தச் சொல்லைக் கேட்டவுடனே, மறுமொழி சொல்லத் தொடங்கினார்.

அமரர்களே! பயத்தை விடுங்கள். உங்களுக்கு நான் அபயம் தருகிறேன். தேவர்களே! அதே சுவர்க்கத்தைத் திரும்பவும் சீக்கிரத்தில் பெறுவீர்கள். வரம்பெற்றதனால் கர்வமடைந்தவனும் இந்திராதி தேவர்களால் வதஞ்செய்யமுடியாதவனும் அசுர ராஜாவுமான ஹிரண்யனை அவன் இனங்களுடன் நான் இதோ கொல்லுகிறேன்' என்றார். அது கேட்ட பிரம்மா, 'பகவானே! தேவர்க்கும் தேவரானவர்களுக்கும் ஈசுவரரே! இந்தத் தேவர்கள் மிக வருந்தியிருக்கின்றனர். ஆதலால், அந்த அசுர ராஜனைச் சீக்கிரத்தில் கொல்லுவீராக; அவனைக் கொல்ல இது காலம்; தாமதம் செய்யலாகாது; வரம்பெற்றுக் கர்வங்கொண்ட அசுரனை அவன் இனத்தாருடன் நீர் கொல்லும்' என்று சொல்ல விஷ்ணு, 'அவ்வசுரனைத் துரிதமாகவே அழித்துவிடுவேன். ஆதலால், தேவர்களும் நீரும் உங்கள் உலகங்களுக்குச் செல்லுங்கள்' என்று மறுமொழி கூறினார். ராஜனே! இவ்வாறு சொல்லித் தேவர்களை அனுப்பினபிறகு, ஈசுவரரும் பகவானுமான அந்த மகாவிஷ்ணு, பாதி உடம்பு மனித வடிவமாகவும், பாதி உடம்பு சிங்க வடிவமாகவுமுள்ள நரசிம்ம ரூபம் எடுத்துப் பயங்கரமான ரூபமும் பேரொளியுமுள்ளவராகக் கையினால் கையைப் பிசைந்து வாயைத் திறந்துகொண்டு நமனைப்போல ஹிரண்யகசிபுவினிடம் போனார். மிகுந்த பலமுள்ள நரசிம்ம ரூபத்தோடு வந்த அந்த மகாவிஷ்ணுவைக் கண்டு, அவ்வசுரர்கள் மிகக் கோபித்து ஆயுத

1. திருப்பாற்கடலிலுள்ள தீவு.

அவர்மேல் வர்ஷித்தனர். அவர்களால் விடப்பட்ட ஆயுதங்களெல்லாவற்றையும் ஹரியானவர் விழுங்கிவிட்டார். யுத்தத்துக்கு வந்த அனேகமாயிரம அசுரர்களைக் கொன்றார்; கோபங்கொண்ட மகா பலசாலிகளான அவ்வசுரர்களனைவரையும் கொன்றபிறகு, மிக்க கோபத்துடன் பலத்தினால் கர்வங்கொண்ட ஹிரண்யனை எதிர்த்தோடினார். இருண்ட மேக நிறமுள்ளவரும் நீருண்ட மேகம்போலக் கர்ஜிப்பவரும் மேகத்தின் மின்னலைப் போலப் பிரகாசிக்கும் ஒளியுள்ளவரும் மேகம்போல வேகமுள்ளவரும் சிறந்த சக்தியுள்ளவருமாகிய அந்தப் பகவான், அதிகப் பலமும் கொழுப்புமுள்ளவனும் கொழுத்த புலிபோன்ற பராக்கிரமமுள்ளவனும் கர்வித்த அசுரக்கூட்டங்களினால் காப்பாற்றப் பட்டவனுமாகிய அந்த ஹிரண்யகசிபுவென்னும் அசுரனுடன் நகங்களாலும் பற்களாலும் யுத்தஞ்செய்து ஸந்தியாகாலத்தில் வீட்டுத் தலைவாயிலில் அந்த ஹிரண்யனைத் தமது தொடைமேல் வைத்துக்கொண்டு விரைவாக நகங்களால் கிழித்தார். சிறந்த பலமும் பராக்கிரமம் உள்ளவனும் வரம்பெற்றதனால் கர்வித்தவனுமாகிய அந்த அசுர சிரேஷ்டனைத் தேவசிரேஷ்டரான விஷ்ணு தம் பராக்கிரமத்தினால் கொன்றார். மகா மகிமையுள்ள பகவான் ஹிரண்யகசிபுவையும் மற்றுமுள்ள அசுரர்கள் அனைவரையும் கொன்று தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் நன்மையைச் செய்து பூமியில் தர்மத்தை நிலைநிறுத்திச் சந்தோஷம் அடைந்தார். பாண்டு புத்திரனே! இந்த நரசிம்மாவதாரம் என்னால் உனக்குச் சொல்லப்பட்டது. மகாத்மாவான விஷ்ணுவின் வாமனாவதாரத்தைப்பற்றியும் கேள்.

---

நாற்பத்தேழாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

(வாமனாவதாரம்)

தர்மராஜனே! முன்னொரு திரேதாயுகத்தில் சூரனும் பலத்தில் ஒப்பற்றவனும் மனோதீரமுள்ளவனும் விரோசனன் மைந்தனுமான பலி என்னும் அசுர ராஜன் ஒருவன் இருந்தான். மகாராஜாவே! அந்தக் காலத்தில் அந்தப் பலியானவன் தன் பராக்கிரமத்தினால் இந்திரனை ஜயிப்பதற்காக அசுரக் கூட்டங்களினால் சூழப்பட்டவனாக இந்திரலோகம் சேர்ந்தான். அந்தக் காலத்தில் அந்தப் பலியினால் அஞ்சும்படி செய்யப்பட்ட இந்திராதி தேவர்கள் அனைவரும் சேர்ந்து பிரம்மாவை முன்னிட்டுக் கொண்டு திருப்பாற்கடலுக்குச் சென்று ஈசுவரரான நாராயண

ரைத் துதிசெய்தனர். அப்போது அந்த ஹரியானவர் அந்தத் தேவர்களுக்குத் தம் தரிசனத்தைக் கொடுத்தார். அந்தப் பிரபுவுக்குத் தேவர்களின்மேலுள்ள கருணையினால் அதிதியினிடம் ஜனனம் நேர்ந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கண்ணபிரான் அதிதியின் புத்திரராகவும் பிறந்து விஷ்ணுவென்று இயாதிபெற்று இந்திரனுக்கு இளைய சகோதரராயிருந்தார். அதேகாலத்தில் பலத்திலும் பராக்கிரமத்திலும் சிறந்த அந்த அசுரனான பலி யாகங்களில் சிறந்த அசுவமேதத்தைச் செய்யத் தொடங்கினான். யுதிஷ்டிரா! அசுர ராஜாவின் அந்த யாகம் நடந்துகொண்டிருக்கையில் அந்த விஷ்ணு பிராம்மண வேஷத்தால் மறைந்து க்ஷௌரம்செய்துகொண்டு குடுமியுடன் யக்ஞோபவீதத்தையும் கிருஷ்ணாஜினத்தையும் தரித்துப் பலாச தண்டத்தைப் பிடித்து ஆச்சரியமான காட்சியுள்ள குள்ளமான பிரம்மசாரியாகப் பலியின் யாகசாலையில் தட்சிணை கொடுக்கும் காலத்தில் புகுந்து, 'எனக்கு இவ்விடத்திலேயே மூன்று அடி நிலத்தைத் தட்சிணையாகக் கொடு' என்றும், 'மூன்றடி மாத்திரமே கொடுக்கவேண்டும்' என்றும் அசுர ராஜாவான பலியினிடம் யாசித்தார். அவன் அந்த விஷ்ணுவுக்கு 'அப்படியே ஆகட்டும்' என்று வாக்குத்தத்தஞ்செய்து உடனே கொடுத்தான். விஷ்ணுவானவர் அவனிடம் பூமியைப் பெற்றுக்கொண்டவுடன் மிகவும் வளர்ந்தார். அரசனே! சிறு குழந்தையாயிருந்த அந்த விஷ்ணுவானவர் அவனை ஜயித்து மூன்று அடிகளாலேயே மேலுலகம், இடையிலுள்ள ஆகாயம் இவை எல்லாவற்றையும் வசப்படுத்தினார். முன்னர் மகா பலசாலியான பலியினுடைய யாகத்தில் யாராலும் அசைக்கமுடியாத அந்த அசுர சிரேஷ்டர்கள் அதிகப் பலசாலியான விஷ்ணுவினால் கலக்கப்பட்டனர்.

பரத வம்சத்தரசே! பலவிதமான முகங்களும் பற்பல வேஷங்களும், பற்பல ஆயுதங்களும் பலவகைப் புஷ்பங்களும் சாந்துகளும் உடையவரும் பெரிய தேகங்களுடையவரும் பயங்கரருமான விபபிரசித்தி முதலான அசுரத் தலைவர்கள் கோபித்து எல்லாச் சேனைகளையும் கூட்டிக்கொண்டு பராக்கிரமத்தினால் ஜ்வலிப்பவர்போலத் தங்கள் ஆயுதங்களை எடுத்து அங்கே அடி அளக்கும் பகவானிடம் ஓடிவந்தனர். அந்தப் பகவான் மிக்க பயங்கரமான உருவமெடுத்து உள்ளங்கால் உள்ளங் கைகளினாலேயே அவ்வசுரர்களனைவரையும் மர்த்தனஞ்செய்து உடனே பூமியை வாங்கிக் கொண்டார். எல்லாப் பிராணிகளுக்கும் ஆத்மாவான அந்தப் பகவான் மேலுலகத்தையும் ஆகாயத்தையும் வியாபித்துப்

பிறகு தாமிருக்குமிடமான சூரியனிருக்குமிடத்திலிருந்து தம் ஒளியினால் ஆதித்யனை மிஞ்சிப் பிரகாசித்தார். நீண்ட கைகளை யுடையவரும் பெரும்புகழ்பெற்றவருமாகிய அந்தப் பகவான் எல்லாத்திசைகளையும் மூலைகளையும் எல்லா லோகங்களையும் பிரகாசப் படுத்தினார். அவர் பூமியை அளக்குங்காலத்தில் சந்திரனும் சூரியனும் ஸ்தனங்களின் ஸ்தானங்களில் இருந்தனர்; திரும்பவும் விருத்தியாகும்போது அவருக்கு நாபிஸ்தானத்தில் இருந்தனர். அதற்குமேல் விருத்தியாகும்போது அவர்கள் முழங்கால்களிலிருந்தனர். அளவில்லாத மகிமையுள்ள விஷ்ணுவைப்பற்றிப் பிராமணர்கள் இவ்வாறு உரைக்கின்றனர். யுதிஷ்டிரா! அதன் பிறகு, அவர் காலைத் தூக்கினதால் அண்டம் பிளந்தது. அந்தப் பிளப்பின் வழியாய் அவருடைய பாகத்திலிருந்து ஒரு நதி பெருகிச் சமுத்திரத்தில் போய் விழுந்தது. கடலோடு கலந்த அந்த நதியானது பரிசுத்தமான நதியாயிற்று. அந்தப் பகவான் அசுரத் தலைவர்களைக் கொன்று அசுரர்களுடைய ஐசுவரியத்தையும் மூன்று லோகங்களையும் பூமி யனைத்தையும் எடுத்துக்கொண்டார். நமுசி, சம்பரன், உயர்ந்த மனமுள்ள பிரகலாதர் ஆகிய இந்த அசுரர்களைமட்டும் மனைவி மக்களுடன் பாதாள லோகத்தில் நிலை பெறச் செய்தார். ராஜனே! எல்லாப் பிராணிகளுக்கும் ஆத்மாவான ஹரியானவர் தம் தம் குணங்களோடுகூடிய ஐந்து பூதங்களையும் காலமனைத்தையும் தம் உறுப்புக்களாகக் காண்பித்தார். எல்லா உலகங்களும் அவருடைய சரீரத்தில் சேர்த்துவைக்கப் பட்டதை ஜனங்கள் கண்டனர். அம்மகாத்மாவினால் வியாபிக்கப் படாதது ஒன்றும் உலகங்களில் இல்லை. உபேந்திரனுடைய அவ்வுருவத்தைக் கண்டு தேவர், தானவர், மானவர் அனைவரும் விஷ்ணுவின் மகிமையினால் பீடிக்கப்பட்டு மூர்ச்சித்தனர். கர்வமுள்ள பலியானவன் மகாத்மாவான விஷ்ணுவினால் யாகசாலையிலேயே கட்டப்பட்டான். விரோசனன் குலமனைத்தும் பாதாளத்தில் அமிழ்த்தப்பட்டது. கருடவாகனராகிய விஷ்ணு தமது ஈசுவர சக்தியினால் இவ்வகையான செய்கைகளைச் செய்தும் கர்வப் படவில்லை. அசுரர்களைச் சங்கரிப்பவரான விஷ்ணு அசுரர்களின் செல்வம் அனைத்தையும் மூன்று உலகங்களையும் இந்திரனுக்கு அளித்தார். மகாத்மாவான விஷ்ணுவின் இந்த வாமனவதாரத்தையும் உனக்குச் சொன்னேன். விஷ்ணுவினுடைய இந்தக் கீர்த்தியானது வேதம் அறிந்த அந்தணரால் ஓதப்படுகிறது. இனி, விஷ்ணுவின் மனுஷ்யாவதாரங்களைக் கேள்.

## நாற்பத்தெட்டாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (தத்தாத்ரேய அவதாரம்)

பெருங்கீர்த்தியுள்ள தத்தாத்ரேய ரென்னும் ரிஷி யிருந்தாரன்றோ? அவர் மகாத்மாவான விஷ்ணுவின் மற்றோர் அவதாரம். வேதங்களும் நல்லொழுக்கங்களும் யாகங்களும் கெட்டு நான்கு வருணங்களும் கலந்து தர்மம் தளர்ந்து பாவம் வளர்ந்து உண்மை யழிந்து பொய் மிகுந்து பிரஜைகள் குறைந்து தர்ம சாஸ்திரங்களும் ஒழிந்துபோன காலத்தில் அந்தத் தத்தாத்ரேயரால் யாகங்களும் நல்லொழுக்கங்களும் வேதங்களும் திரும்பவும் கொண்டுவரப்பட்டன. அவர் ஹேஹய தேசத்தரசனுகிய கார்த்தவீர்யார்ஜுனனுக்கு வரமளித்தபோது அம்மகாத்மாவினுல் நான்கு வருணங்களும் ஒன்றேடொன்று தனித்தனியே நிலைநிறுத்தப்பட்டன. ஹேஹய தேசாதிபதியான கார்த்தவீர்யார்ஜுனன் தத்தாத்ரேயருடைய அனுக்கிரஹத்தைப் பெறுவதற்காக வனத்திலிருந்துகொண்டு கோபத்தையும் 'நான்', 'எனது' என்ற எண்ணங்களையும் ஒழித்து நீண்ட காலம் நன்ருகப் பணிவிடை செய்து அவரைச் சந்தோஷப்படுத்தினுன். எல்லாம் தெரிந்தவனுகிய அந்தக் கார்த்தவீர்யார்ஜுனன் தத்தாத்ரேயருக்குச் சிசுரூஷைசெய்து தனக்கு வேண்டினவரும் வித்வான்களினுல் பூஜிக்கப் பெற்றவருமாகிய அந்தப் பிராம்மணரிடம் பின் சொல்லப்போகிற தனக்கு மிகவும் வேண்டின வரங்களைப் பெற்றுன். சிறந்த ஞானமுள்ள பிராம்மணராகிய தத்தாத்ரேயரால் மரணமில்லாமையைத் தவிர வேறு நான்கு வரங்களைக் கேட்கும்படி சொல்லப்பட்ட அவ்வரசன், 'நான் செல்வமுள்ளவனுகவும் சிறந்த மனமுள்ளவனுகவும் பலவானுகவும் சத்தியமுள்ளவனுவும் பொறுமையில்லாதவனுகவும் ஆயிரம் கைகளுள்ளவனுகவும் இருக்கக்கடவேனென்பது எனது முதல் வரம். கருப்பையில் பிறப்பனவும் முட்டைகளில் பிறப்பனவும் மற்றுமுள்ள சராசரங்களுமான எல்லாவற்றையும் நான் தர்மத்தினுல் ஆள விரும்புகிறேன். இஃது எனது இரண்டாவது வரம். பிதிர்க்களையும் தேவர்களையும் ரிஷிகளையும் பிராம்மணர்களையும் பெருவேள்விகளாலும் பகைவர்களைக் கூரம்புகளாலும் வசப்படுத்தக் கடவேன். இஃது எனது மூன்றுவது வரம். இவ்வுலகத்திலும் சுவர்க்க லோகத்திலும் எவனுக்கீடான புருஷன் முன்னும் பின்னும் இப்போதும் இல்லையோ அவன்தான் என்னை வதஞ்செய்

பவனாக இருக்கவேண்டும்' என்று இந்நான்கு வரங்களையும் கேட்டான். 'கிருதவீர்யன் புத்திரனாகிய அந்த அர்ஜுனன் யுத்தத்தில் சிறந்தவனாக இருந்தான். அவன் அனேகமாயிர வருஷ காலம் மாஹிஷ்மதி நகரத்தில் விருத்தியடைந்தான். அந்த அர்ஜுனன் பூமி முழுமையையும் கடல் சூழ்ந்த தீவுகளையும் வென்று ஆகாயத்தில் சூரியன் பிரகாசிப்பதுபோலத் தனது புண்ணிய கர்மங்களினால் பிரகாசித்தான். அளவற்ற பராக்கிரமமுள்ள அர்ஜுனன் முன்னிருந்தவர்களால் ஜயிக்கப்படாதவையான இந்திரத்வீபம், கசேருத்வீபம், காமத்வீபம், கபஸ்திமத் என்னும த்வீபம், கந்தர்வத்வீபம், வருணதவீபம், ஸௌஹிருஷ்டம் என்னும த்வீபம ஆகிய தீவுகளை ஜயித்தான். கார்த்தவீர்யார்ஜுனன கடலில் சென்றபோது ஆடை நனைகிறதில்லையென்பது அவனுக்கு மனிதர்களில் ஒப்பற்ற செய்கையா யிருந்தது. அவன் போன வழியை முந்திய அரசர்களும் அனுசரிக்கவில்லை; பிந்திய அரசர்களும் அனுசரிப்பதில்லை. அவன் வீடுகளெல்லாம் உயர்ந்த பொன்மயமா யிருந்தன. அவன் தன்னை நான்கு பாகங்களாக வகுத்து ராஜ்ய பரிபாலனஞ் செய்தான். அவற்றில், ஒரு பாகத்தினால் சேனையை நடத்தினான்; இரண்டாவது பாகத்தினால் அரண்மனையில் வசித்தான்; இனியதும் மிக்க நன்மையைத் தருவதுமான அவ்வரசனுடைய மூன்றாவது பாகம் ஜனங்களை வசபபடுத்திக்கொண்டிருந்தது. அந்தப பாகத்தினால் யாகங்களைச் செய்தான். கிராமங்களிலும் வனங்களிலும் இருக்கும் துஷ்டர்கள் அனைவரையும் நாலாவது பாகத்தினால் தடுத்தான். அவனுடைய அந்தப்புரங்களிலும் வாயில்கள் மூடப்படுவதில்லை. அரசனே! அந்த அர்ஜுனன் தானே ராஜ்யத்தையும் ஸ்திரீகளையும் ஆடுமாடுகளையும் காப்பவனாக இருந்தான். அந்த அர்ஜுனன் தத்தாத்ரேயரின் அனுக்ரகத்தினால் இவ்வாறு அனேகம ஆயிர வருஷ காலம் பூமியை ஆண்டு ராஜ்ய பரிபாலனஞ் செய்தான். அவன் உலகத்தின் நன்மைக்காக இவ்வகையான அனேக காரியங்களைச் செய்தான். பரதசிரேஷ்டனே! தத்தாத்ரேய ரென்று சொல்லப்பட்ட இந்த விஷ்ணுவின் அவதாரத்தை உனக்குச் சொன்னேன். இன்னும் அம்மகாத்மாவின் அவதாரத்தைக் கேள்.

---

நாற்பத்தோன்பதாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

(பரசுராமாவதாரம்)

மகாத்மாவான விஷ்ணு ஜமதக்னியர் என்று பெயர்பெற்றுப் பிருகு வம்சத்தில் ஜனித்த அவதாரம் எதற்காக வென்று சொல்லுகிறேன்.

அரசனே! ஜமதக்னியின் புத்திரரான அந்த ராமரென்பவர் சிறந்த பராக்கிரமமுள்ளவர். ராஜனே! அப்போது பலசாலிகளிற் சிறந்த அந்த ராமர் ஹேஹய ராஜாவான கார்த்தவீர்யார்ஜுனனை முடித்தவர். மகாவீரனும் வலிமையில் ஒப்பற்றவனுமாகிய கார்த்தவீர்யன் பிழைசெய்ததனால் ஜமதக்னி புத்திரரான ராமரால் கொல்லப்பட்டான். பரசுராமர், ஹேஹய தேசத்தரசனும் பூமிக்கு ஈசுவரனும் பகைவரை அடக்கினவனுமாகிய அந்தக் கார்த்தவீர்யனை யுத்தத்தில் தேரிலிருந்தபடியே கீழே தள்ளிக் கொன்றார்; ஜம்பனென்னும் அரசனுடைய யாகத்தைக் கெடுத்து அவன் யாக காரியத்திலிருந்த ரித்விக்குகளை அடித்து அவன தலையைப் பிளந்தார். சததுந்துபி என்பவனையும் கொன்றார். கோவிந்தர் என்று சொல்லப்பட்ட சிறந்த சக்தியுள்ள இந்தக் கிருஷ்ணர் தாம் யுத்தத்தில் ஆயிரம் பேரை ஜயிப்பவனும் ஆயிரங் கைகளையுடையவனுமான கார்த்தவீர்யார்ஜுனனைக் கொல்லப் பிருகு வம்சத்தில் அவதரித்தார். பெரும் புகழ்பெற்றவராகிய இவர் சரஸ்வதி நதிக்கரையில் சேர்ந்த ஆறு லக்ஷத்து நாற்பதினாயிரம் க்ஷத்திரியர்களை வில்லைக்கொண்டு ஜயித்தார். அதிகக் கொடியவரும் மகாரதருமான அந்தப் பரசுராமர் பிராமமணத்வேஷிகளான க்ஷத்திரியர்களை வதஞ்செய்த அந்தத் தருணத்தில் பின்னும் பதினாலாயிரம் சூரர்களைக் கொன்றார். அந்த வீரர், முதலில் ஆயிரம் அரசர்களை முறித்துப் பின்னும் ஆயிரவர்களை உலக்கையாலடித்துக் கொன்று மற்றும் ஆயிரம் பேரை (கத்தியால்) வெட்டினார்; பதினாலாயிரம் பேரை நெருப்புப் பொறியையும் புகையையும் குடிபபித்தார். அந்தப் பரசுராமர் மிச்சமுள்ள பிரம்மத்வேஷிகளான க்ஷத்திரியர்களையும் ஜயித்த பிறகு ஸ்நானஞ்செய்தார். க்ஷத்திரியர்களால் பீடிக்கப்பட்டு, துயரத்துடன் பிராம்மணர்கள், 'ராமா ராமா' என்று உரக்கக் கூவ, அந்தச் சொல்லைப் பொறுக்காமல் லட்சககணககான ராஜாக்களைக் கோடாலியினாற் கொன்று ஜயித்தார். 'பிருகுராமரே! ஓடிவாரும்' என்று பிராம்மணர்கள் கதறினபோது காஷ்மீரர், தரதர்,

குந்திகள், க்ஷுத்திரகர், மாலவர், சகர், சேதிகள், காசி தேசத்தவர், கரூசர், ரிஷிகள், விதர்ப்பர், அங்கர், வங்கர், கலிங்கர், மாகதர், காசிகோசலர், ராத்ராயணர், வீதிஹோத்ரர், கிராதர், கார்த்திகாவதர் முதலான பற்பல தேசத்து ராஜாக்களை ஆயிரக்கணக்காகக் கூரம்புகளால் அறுத்து, [1]சூரியனுக்குக் கொடுத்து, மேரு மலையையும் மந்தர மலையையும் பூஷணங்களாகவுடைய இப்புவனி அனேகம் கோடி க்ஷத்திரியப் பிணங்களால் நிரப்பப்பட்டது. அந்தப் பரசுராமரால் மூவேழு முறை க்ஷத்திரியர்கள் அழிக்கப்பட்டனர். பெருங்கீர்த்தியுள்ள வீரரான அந்தப் பரசுராமர், க்ஷத்திரியர்களில்லாமற் செய்த பிறகு பட்டுப்பூச்சி நிறமும் சகோதர பட்சி நிறமுமுள்ள ரகத்தினால் நதிகளையும் தடாகங்களையும் நிரப்பி அவற்றில் பிதிர்க்களுக்குத் தர்ப்பணஞ்செய்தார். அந்தப் பரசுராமர் பதினெட்டென்னும் கணக்கான தீவுகளனைத்தையும் வசப்படுத்தி அனேகமாயிரம் அசுவமேத யாகங்களையும் அனேக நூறு நரமேதங்களையுஞ் செய்து கடல் சூழ்ந்த புவனியைக் காசியபருக்குக் கொடுத்தார். இவ்வாறு பூமியில் துஷ்டர்களில்லாமற் செய்துவிட்டு அதன் கோடியைப் பிரதட்சிணம் செய்தார். அதுமுதல் பூர்வ கதை தெரிந்த ஜனங்கள் மகாத்மாவான பரசுராமரைப்பற்றி அக்காலத்திற் செய்யப்பட்டதும உண்மையான பொருளுள்ளதுமான ஒரு சுலோகத்தைச் சொல்லுகின்றனர். அதன் பொருளாவது: 'பதினெட்டடி அகலமுள்ளதும் புருஷப் பிரமாணத்திற்கு மேற்பட்டதுமான பொன்யாகவேதிகையைப் பரசுராமரிடம் காசியபர் வாங்கிக்கொண்டார்' என்பது. சிறந்த கைகளையுடைய பரசுராமர் இவ்வாறு நிரம்பின தடசிணைகளுள்ள யாகங்களைச் செய்து பின்னும் நூறு வருஷகாலம் ஸௌப ராஜாவான சால்வனோடு யுத்தஞ்செய்தார். பரதசிரேஷ்டரான தர்மராஜனே! சமர்த்தரான அந்தப் பரசுராமர் மிக்க அழகான ரதத்திலேறி ஸௌப ராஜனோடு யுத்தஞ்செய்தபோது, பருவமடையாத கன்னிகைகள், 'ராமா ராமா! சிறந்த கைகளையுடையவரே! பிருகு வம்சத்தாருக்குப் புகழை வளர்ப்பவரே! ஆயுதங்களெல்லாவற்றையும விட்டுவிடும். நீர் ஸௌபனைக் கொல்லமாட்டீர். சங்க சக்கர கதாயுதங்களைக் கைகளிலேந்தியவரும் தேவர்க்கு அபயம் அளிபபவருமாகிய கண்ணபிரான் பிரத்யும்ன சாம்பர்களுடன் சேர்ந்து யுத்தத்தில் ஸௌபனைக் கொல்லபபோகிறார்' என்று பாடியதைக் கேட்டார். புருஷசிரேஷ்டரும் பெருங்கீர்த்திபெற்றவருமான பரசுராமர், அதைக்

---

1 யுத்தத்தில் இறபபவர் சூரியமண்டல வழியாக விரசுவர்க்கம் போகிறார்களென்பதுபற்றி இங்ஙனம் கூறப்பட்டது.

கேட்டவுடன் காலத்தை எதிர்பார்த்து ஆயுதங்களெல்லாவற்றையும் எறிந்துவிட்டு ஸந்யாஸஞ் செய்துகொண்டு அங்கிருந்தே வனத்திற்குச் சென்றார். பரசுராமர் தேர், ஆயுதங்கள், அம்புகள், கோடாலி, விற்கள் இவையெல்லாவற்றையும் ஜலத்தில் வைத்துவிட்டுச் சிறந்த தவஞ்செய்தார். பகைவரை யழிப்பவரும் தர்மாத்மாவுமான பரசுராமர், நாணம் மதி சக்தி புகழ் பாக்கியம் இவ்வைந்தை மட்டும் கைக்கொண்டு அந்த ரதத்தை விட்டுவிட்டார். ஈசுவரரான பரசுராமர் ஆதிகாலத்தில் ஏற்பட்ட [1] பாகத்தை(கிருஷ்ணனுக்கு)ப் பகுத்துக் கொடுத்தார். பெரும்புகழுள்ள பரசுராமர் விதியின் நம்பிக்கையினாலேதான் அப்போது ஸௌபனைக் கொல்லவில்லை. அவர் சக்தியில்லாதவரல்லர். ஜமதக்னியரென்று பேர்பெற்ற பகவானாகிய ரிஷி இந்தக் கிருஷ்ணனுடைய அம்சந்தான். உலகங்களில் பெயர்பெற்ற அந்தப் பரசுராமர் பிறகு தவஞ்செய்தார்.

---

## ஐம்பதாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (இராமாவதாரமும் கிருஷ்ணாவதாரச் சுருக்கமும்)

அரசனே! மகாத்மாவான விஷ்ணுவின் பின் அவதாரத்தையும் கேள். அழிவில்லாதவரும் சிறந்த கைகளுள்ளவருமான விஷ்ணுவானவர் இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் மார்க்கண்டேயரை முன்னிட்டுத் தமமை நான்கு பாகங்களாகச் செய்துகொண்டு நவமி திதியில் தசரத புத்திரராக அவதரித்தார். குந்தி புத்திரா! அழிவில்லாத விஷ்ணுவானவர் பராக்கிரமத்தில் சூரியனுக்கு ஒப்பானவரும் பெரும்புகழ் பெற்றவருமான ராமபிரானென்று உலகத்தில் பெயர்பெற்றுத் தர்மத்தைக் காப்பதற்காகவும் உலகத்தை அனுக்கிரகிப்பதற்காகவும் தசரதரிடத்தில் அவதரித்தார். அந்த மகாராஜாவையும் எல்லா உலகங்களுக்கும் ஈசுவரரான பகவானுடைய தேகமென்று கூறுகின்றனர். பாரதனே! அந்த அவதாரத்தில் விசுவாமித்திரருடைய வேள்விக்கு இடையூறு செய்த சுபாகுவென்ற ராக்ஷஸன் அந்த ராமபிரானால் கொல்லப்பட்டான். மாரீசன் அதிகமாக அடிக்கப்பட்டான். சிறந்த ஞானமுள்ள விசுவாமித்திரர் சத்துருக்களையெல்லாம் வதஞ்செய்வதற்காகத் தேவர்களாலும் தடுக்கமுடியாத அஸ்திரங்களை அவருக்கு அளித்தார். மகாத்மாவான ஜனகருடைய பெருவேள்வி நடக்கும்போது விளையாடிக்கொண்டிருந்த

1 ஸௌப ராஜனைக் கொல்லாமல் விட்டது.

ராமபிரானால் மகேசுவரருடைய உறுதியான வில்லானது விளையாட்டாக ஒடிக்கப்பட்டது. அந்தப் பிரபு, அதன்பிறகு, ஜனக புத்ரியான ஸீதையைத் தமது பாரியையாக விவாகஞ்செய்து கொண்டார். மறுபடியும், ஸீதையுடன்கூட அயோத்தி நகர் சேர்ந்து அங்கே மகிழ்ந்திருந்தார். பின்பு, சில காலத்துக்குப் பிறகு, தம பிதாவினால் கட்டளையிடபபட்டுக் கைகேயியின் விருப்பத்தைச் செய்யக் கருதி வனத்துக்குச் சென்றார். எல்லாத் தர்மங்களுந் தெரிந்தவரும் எல்லாப பிராணிகளுக்கும் நன்மை செய்வதிலேயே ஊக்கமுள்ளவருமாகிய அந்த ராமபிரான் லட்சுமணருடன்கூடப் பதினன்கு வருஷ காலம் வனத்தில் வாசஞ்செய்தார். பாரதனே! ஸ்ரீ மகாலக்ஷ்மியானவள், எப்போதும் அகலாமலிருப்பவளாதலால், ஜனங்களால் ஸீதையென்று சொல்லப்பட்டு மானிட வடிவத்துடன் அவர் பக்கத்திலேயே இருந்துகொண்டு, பதினனகு வருஷ காலத்தையும் வனத்தில் போக்கித் துயரப்பட்டுக்கொண்டிருந்தாள். தர்மாத்மாவான அந்த ராமபிரான ஜனஸ்தானத்தில் வாசஞ்செய்யும்போது மாரீசனையும் தூஷணனையும கரனையும திரிசிரஸையும கொடிய செய்கையுள்ள பதினலாயிரம ராக்ஷஸர்களையும ஜனங்களின் நன்மைக்காகக் கொனறு தேவகாரியத்தைச் செய்தார். அப்போது ராமர், சாபத்தினல் கெடுக்கப்பட்டுக் கொடிய செய்கையுள்ள ராக்ஷஸர்களாயிருந்த விராதன கபந்தனென்னும இரண்டு கந்தர்வர்களையும் கொனறார். அவா, ராவணன் சகோதரியான சூர்ப்பணகையை மூக்கரியச் செய்தார். பின்னர், தம மனைவியைக் காணுமல் அவளைத் தேடி வனமெல்லாம் திரிந்தார். அவர் ஜனஸ்தானத்திலிருந்து பம்பை யென்னும் தடாகத்தைக் கடந்து ரிசியமூக மலைக்குச் சென்று சுக்ரீவனையும், ஆஞ்சநேயரையும் கண்டு அவர்களுடனும சிநேகஞ் செய்துகொண்டார். ராமபிரான் உடனே சுக்ரீவனுடனகூடவே கிஷ்கிந்தைக்குச் சென்று மகா பலசாலியும வானர ராஜாவுமான வாலியை யுத்தத்திற் கொன்று உடனே சுக்ரீவனை வானர ராஜாவாகப் பட்டாபிஷேகஞ் செய்தார். அரசனே! பிரிவாற்றுத அம்மகா வீரருக்கு வாயு புத்திரரான ஆஞ்சநேயர் லங்கையில் ஸீதையைத் தேடி விரைவாகத் தெரிவிததார். பிரிவாற்றுத ஸ்ரீ ராமர், வானரர்களால் சமுத்திரத்தில் அணை கட்டுவிதது ஸீதையிருக்குமிடந் தேடி லங்கையில் பிரவேசித்தார். அவர், அஙகே தேவர்களாலும் நாகர்களாலும் பட்சிகளாலும கொல்லவும வெல்லவும கூடாதவனும் அநேக ராக்ஷஸர்களோடு கூடியவனும உடைக்கப்பட்ட மைத்திரள் போனறவனும தேவர்களால் கண்ணெடுத்துப் பார்க்க முடியாதவனும வரமபெறறதனல், கர்வமுடைந்தவனுமான

ராவணனென்னும் ராக்ஷஸ ராஜாவை மந்திரிகளுடனும் குலத்தோர்களுடனும் போரில் வதைத்தார். எல்லாவற்றிற்கும் ஈசுவரரான ஸ்ரீ ராமபிரான் மூன்று லோகங்களுக்கும் முட்போன்றவனும், வீரனும், பெரிய தேகமும் மிகுந்த வலிமையுமுள்ளவனுமான ராவணனையும் அவன் சேனையையும் கொன்று மகாத்மாவென்று பெயர்பெற்ற விபீஷணரை லங்கையில் ராக்ஷஸர்களுக்கு ராஜாவாகப் பட்டாபிஷேகஞ் செய்வித்துப் பிறகு அவருக்கு [1]அமரத்வத்தையும் அளித்தார். பாண்டவனே! ராமபிரான் ஸீதையை யழைத்துக்கொண்டு புஷ்பக விமானம் ஏறிச் சேனையுடன் தமது ராஜதானியான அயோத்திக்குச் சென்று தர்மமாக ராஜ்ய பரிபாலனஞ் செய்தார். அரசனே! அப்போது மதுவின் புத்திரனும் மகாபலசாலியுமான லவணனென்னும் அசுரனை ஸ்ரீ ராமபிரானுடைய கட்டளையினால் சத்ருக்னர் வதஞ்செய்தார். தர்ம பரிபாலனஞ் செய்கிறவர்களிற் சிறந்தவராகிய அந்த ஸ்ரீ ராமபிரான் உலகங்களின் நன்மைக்காக இவ்வகையான அநேக காரியங்களைச் செய்து நீதியாக ராஜ்ய பரிபாலனஞ் செய்தார். விளங்குகின்ற ஸாமகோஷங்களையுடைய நூறு அசுவமேத யாகங்களை இடையூறின்றிச் செய்தார். ஸ்ரீ ராமர் அரசாட்சி செய்யுங் காலத்தில் அழுகுரல்கள் கேட்கப்படவில்லை. பிராணிகளுக்கு அகால மரணம் இல்லை. திருடர்களின் பயமுமில்லை. ஸ்ரீ ராமர் அரசு புரியும்போது பூமியிலுள்ள எல்லா ஜனங்களும் [2]ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் செய்யுங் கடமைகள் தவறாமலிருந்தனர். ராமராஜ்யம் நடக்கும்போது எவ்விடத்திலும், எந்த மனிதனும் பிராணிகளுக்குத் தீங்குசெய்யவில்லை. [3]பிராணனும் [4]அபானனும் [5]சமமாக இருந்தன. பூர்வ கதையைத் தெரிந்த ஜனங்கள் ஸ்ரீ ராமராஜ்யத்தைப்பற்றி பின்வரும சுலோகங்களையும சொல்லுகின்றனர். அவற்றின் பொருள்: 'இளமைப் பருவமுள்ளவரும் சிவந்த கண்களும் கருநிறமும் அழகிய முகமும் சிங்கம போன்ற தோள்களுமுடையவரும் யானைக்கூட்டத்தரசு போல மகாபலசாலியுமான இராமபிரான் பதினோராயிரம் வருஷ காலம் ராஜ்யாதிபத்யத்தையும் சுகத்தையும் அடைந்து இப்பூமியை ஆண்டார்' என்பது. ஸ்ரீராமர் ராஜ்யபரிபாலனஞ் செய்யுங் காலத்தில் 'ராமர், ராமர், ராமர்' என்றே பிரஜைகள் பேசினர்.

---

1 மரணமில்லாமை.

2 ரிஷிகள் கடமை=வேதமோதல் முதலியவை; தேவர் கடமை=வேள்வி முதலியவை; மனிதர் கடமை—விருந்தோம்பல் முதலியவை.

3 வேண்டிய நன்மையை வெளியிலிருந்து கிரகிப்பது.

4 இருக்கும் கெடுதலை விலக்கி வெளிப்படுத்துவது.

5 இதனால் ஜனங்களுக்கு வியாதியில்லை யென்பது கருத்து.

இவ்வுலகம் ராமமயமாக இருந்தது. அக்காலத்தில் அந்தணர்கள் ரிக்வேதத்தையும் யஜுர்வேதத்தையும் ஸாமவேதத்தையும் ஓதாமலிருக்கவில்லை. அவர் தண்டகவனத்தில் வசித்த போது தேவர்களின் காரியத்தைச் செய்தார். தமக்கு முதலில் தீங்கு செய்தவனும் தேவர்களுக்கும் கந்தர்வர்களுக்கும் நாகர்களுக்கும பகைவனும் வீரர்களில் சிறந்தவனுமான ராவணனைக் கொன்றார். தைரியமும் குணங்களுமுள்ளவரும் தம் பராக்கிரமத்தினால் பிரகாசிப்பவரும் சிறந்த கைகளையுடையவரும் இக்ஷ்வாகு குலத்தைச் சிறப்பிப்பவருமான ராமபிரான் ராவணனையும் அவன் இனங்களையும் கொன்று எல்லாவற்றையும் ஜயித்துத் தம்முடைய மேலுலகத்திற்குச் சென்றார். இவ்வாறு மகாத்மாவான தாசரதியின் அவதாரம் சொல்லப்பட்டது.

அரசனே! இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் அந்த அவதாரத்திற்குப் பிறகு சிறந்த கைகளையுடையவரும் பயந்தவர்க்கு அபயமளிப்பவரும் மார்பிலுள்ள ஸ்ரீவத்ஸமென்னும் மச்சத்தை அடையாளமாகவுடையவருமான விஷ்ணுவானவர் கிருஷ்ணவதாரஞ் செய்தார். காட்சிக்கினியவரும் வள்ளலும் இவ்வுலகத்திலுள்ள மனிதர்களால் கொண்டாடப்பெற்றவரும் அடுத்தவரை மறவாதவருமதேசகாலங்களை யறிந்தவரும் சங்கம் சக்கரம் கதை நந்தகமென்னும் கத்தி முதலிய ஆயுதங்களைத் தரித்தவரும் எப்போதும் உலகங்களுக்கு நன்மையே செய்பவருமாகிய அந்தப் பகவான் பூமிக்கு நன்மையைச் செய்யக் கருதி [1]வாசுதேவரென்று பிரசித்திபெற்று யாதவ குலத்திற் பிறந்தார். எதிரிகளுக்குப் பயத்தைச் செய்கிறவரும், வேண்டினவற்றை அளிப்பவரும், மதுவென்ற அசுரனைக் கொன்றவரென்று பேர்பெற்றவருமாகிய அந்தக் கிருஷ்ண பகவான் சகடாசுரன், மருத மரங்கள், பூதனையென்னும் அரக்கி இவர்களின் உயிரை மாய்த்தார். மானிட தேகத்தோடுகூடிய கம்ஸன் முதலான அசுரர்களைப் போரில் கொன்றார். மாகாத்மாவான பகவானுடைய இந்த அவதாரமும் உலகங்களின் க்ஷேமத்துக்காகத்தான். பரதசிரேஷ்டனே! இனியும் கலியுகத்தின் முடிவு வந்து தர்மம் தளரும்போது பாஷண்டர்களின் கூட்டங்களைக் கொல்லவும், கர்மத்தைப் பெருகச்செய்யவும், பிராம்மணர்களின் நன்மைக்காகவும் விஷ்ணுவானவர் 'விஷ்ணுயசஸ்' என்று பெயர்பெற்ற கல்கியாக அவதரிக்கப் போகிறார். விஷ்ணுவுக்கு இந்த அவதாரங்களும் தேவகூட்டங்களுடன் சேர்ந்த இன்னும் அனேக அவதாரங்களும் பிரம்மநிஷ்டர்களால் புராணங்களில் சொல்லப்படுகின்றன' என்று சொன்னார்.

---

1 வசுதேவ புத்திரர்.

## ஐம்பத்தோராவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (கிருஷ்ணாவதாரத்தின் காரணம்)

பீஷ்மர் இவ்வாறு சொன்னபோது, குந்தி புத்திரரும் கௌரவர்களை விருத்திசெய்கிறவரும் தர்மராஜாவுமான யுதிஷ்டிரர், திரும்பவும் பீஷ்மரை நோக்கி, 'மனுஷ்யர்களில் சிரேஷ்டரே! பேசுகிறவரில் சிறந்தவரே! புகழ்பெற்ற விஷ்ணு யாதவ் வம்சத்தில் அவதரித்ததைப்பற்றி மறுபடியும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பிதாமகரே! சிறந்த ஞானமுள்ள கிருஷ்ண பகவான் இப்புவியில் யது வம்சத்தில் எவ்வாறு அவதரித்தாரென்பதைப் பற்றி எனக்குச் சொல்லக்கடவீர்' என்று கேட்டார். யுதிஷ்டிரரால் இவ்வாறு கேட்கப்பட்ட வீரரான பீஷ்மர், மகாத்மாவான விஷ்ணு யாதவர்களில் அவதரித்ததைப்பற்றிச் சொல்லலானார்.

'ஓ! கௌரவனான யுதிஷ்டிரனே! சந்தோஷம். நாராயணர் இவ்வுலகத்தில் யாதவர்களுக்குள் எதற்காக அவதரித்தாரென்பதை நடந்தவாறு உனக்குச் சொல்லுவேன். ஓ! மகாராஜனே! முன்னர் இவ்வுலகத்தில் கிருதயுகம் நடந்துகொண்டிருக்கையில் மூன்று லோகங்களிலும் பேர்பெற்றதான தாரகாமயமென்னும் ஓர் யுத்தம் நடந்தது. அரசனே! விரோசனன், மயன், தாரன், வராகன், சுவேதன், விப்பிரசித்தி, பிரலம்பன, விருத்திரன், ஜம்பன், பலன் முதலானோர்களும் நமுசி, காலநேமி, பிரகலாதனென்று பேர்பெற்றவன், லம்பன், கிசோரன், சுவர்ப்பானு, அரிஷ்டனென்னும் ராக்ஷஸ ராஜனை முதலியோருமான திதி புத்திரர்களும் தனு புத்திரர்களுமாகிய அனேகமாயிரம் அசுரக் கூட்டங்கள் பற்பல ஆயுதங்களைத் தரித்துப் பலவகை அணிகளை அணிந்துகொண்டு பற்பல வாகனங்களிலேறித் தேவர்களுக்கு எதிராக நின்றனர். அந்த யுத்தத்தில் தேவர்களும் யுத்தஞ் செய்துகொண்டே அசுரர்களை எதிர்த்துச் சென்றனர்: ஆதித்யர்கள், வஸுக்கள், ருத்திரர்கள், ஸாத்யர்கள், விசுவேதேவர்கள், மருத்துக்கள், இந்திரன், யமன், வருணன், சந்திரன், குபேரன், மிகுந்த சக்தியுள்ள அசுவினி தேவர்கள முதலான தேவக்கூட்டத்தார் அசுரர்களுடன் வரிசையாகச் சேர்ந்து மிக்க பயங்கரமான யுத்தத்தைச் செய்தனர். தேவர்கள், தைத்யர்களையும் தானவர்களையும் யுத்தத்தில் சந்தித்தனர். தேவர்களும் அசுரர்களும் கிரமபின அந்தச் சண்டை பயங்கரமாக இருந்தது. அவ்விரண்டு சேனைகளுக்கும் முதலில் பொதுவான சண்டை நடந்தது. கூர்மையான ஆயுதங்களை இறைத்துக்கொண்டே

தேவாசுரர்கள் ஒருவரையொருவர் எதிர்த்துச் சென்றனர். தேவர்களையும் கந்தர்வர்களையும் யக்ஷர்களையும் நாகர்களையும் சாரணர்களையும் அசுரர்கள் கொன்றனர். அந்தப்போரில் அசுரர்களால் கொல்லப்படும் தேவக்கூட்டத்தார் சமர்த்தரும் ஈசுவரருமாகிய நாராயணரையே சரணமாக மனத்திஞல் பற்றினர். அந்தச் சமயத்தில் ஈசுவரரான மகாவிஷ்ணு தம் ஒளியினுல் போர்க்களத்தைப் பிரகாசப்படுத்திக்கொண்டு சங்க சக்ர கதா பாணியாக அவ்விடத்தில் ஆவிர்ப்பவித்தார். உலகங்களால் நமஸ்கரிக்கப்பெற்ற அந்த மகாவிஷ்ணு கருடவாகன மேறிவந்ததைக் கண்டு தேவர்கள் அனைவரும் யுத்தத்தில் பயத்தைவிட்டு உற்சாகத்தோ டிருந்தனர். திரும்பவும் தேவர்களனைவரும் தைத்யதானவர்களுடன் போர்புரிந்தனர். அந்த யுத்தம் பயங்கரமும் நினைக்கவும் கூடாததும் மயிர்பொடிக்கச் செய்வதுமா யிருந்தது. உக்ரமுள்ளவர்களான இந்திரன் முதலான தேவர்க ளனைவரும் யுத்தத்தில் அசுரர்களை அடித்தனர். தேவர்களால் பீடிக்கப்பட்ட தைத்யதானவர்கள் ஓடினர். பாரதனே! அந்த யுத்தத்தில் அசுரர்கள் ஓடக் கண்டு, காலநேமியென்று பிரசித்தி பெற்ற அசுரன் எதிரில் தோன்றினன். நூறு கைகளும் நூறு வாய்களும் நூறு தலைகளுமுள்ளவனும் சிறப்புள்ளவனும் கொடியவனுமான காலநேமி நூறு கொடுமுடிகளை உடைய மலைபோலச் சத்ருக்களை அடிப்பதற்காக நின்றன். சூரியனைப் போல ஜ்வலிக்கின்ற கிரீடமும் ஒலிக்கின்ற தோள்வளைகள் முதலிய ஆபரணங்களும் புகை நிறமான கொடியும் செம்பட்டை நிறமான மீசையுமுடையவனுக வாயால் உதடுகளைக் கடித்துக் கொண்டு மூன்று லோகங்களின் இடத்தையும் மறைக்கும் பெருந் தேகத்தை எடுத்துக்கொண்டு யுத்த பூமியிலிருக்கும் தேவர்களைப் பயமுறுத்திப் பத்துத் திசைகளையு மறைத்து யமனைப்போலக் கோபித்து வாய்திறந்து எதிர்த்தோடி வந்தான். அந்த யுத்தத்தில் ஆயுதங்களை மிகுதியாகப் பிரயோகித்துத் தேவர்களைப் பீடித்தான். ஓடிப் போன தைத்யர்களும் தானவர்களும் திரும்பவும் தேவர்க ளனைவரையும் எதிர்த்துவந்தனர். யுதிஷ்டிரா! பிறகு, அவர்கள் கோபித்து யுத்தத்தில் தேவர்களைத் துன்பப்படுத்தினர். மகாராஜாவே! காலநேமியினுலும் அசுரர்களாலும் யுத்தத்தில் அடிக்கப்பட்ட அந்தத் தேவர்கள் பத்துத் திசைகளிலும் ஓடினர். தேவர்கள் ஓடக் கண்டு அசுர சிரேஷ்டனுன காலநேமி இந்திரன், யமன், வருணன், வாயு, குபேரன், சூரியன் முதலான தேவர்களைத் தன் வன்மையினுல் ஜயித்து அவர்களின் வேலைகளை எடுத்துக்கொண்டான்.

காலநேமி யென்னும் பெரிய அசுரன் அவர்களெல்லாரையும் விரைவில் வென்றபின், கருட வாகனமேறிப் பேரொளியோடு இருக்கும் விஷ்ணுவை ஆகாயத்திற் கண்டான். அவரைக் கண்டவுடன் கோபத்தினால் சிவந்த கண்களுடன் பயமுறுத்தி எதிர்த்துச் சென்றான். பாரதனே! அந்த யுத்தத்தில் அவ்வசுர ராஜன் கோபத்துடன் நூறு கைகளையும் ஓங்கி எல்லா அஸ்திரங்களையும் விஷ்ணுவின் மார்பில் எறிந்தான். மயன் முதலான தைத்யர்கள் தானவர்களனைவரும் தம் தம் ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு விஷ்ணுவைத் தொடர்ந்தனர். அதிக பலசாலிகளான அசுரர்களால் எல்லா ஆயுதங்களாலும் ஓங்கி யடிக்கப் பட்டும் மலை அசையாமலிருப்பதைப்போல விஷ்ணு யுத்தத்திலிருந்து அசையாமலிருந்தார். அரசனே! காலநேமி மறுபடியும் கோபித்து வேறு ஓர் உறுதியான கதையை ஓங்கி அக்கதையினால் விஷ்ணுவையும் கருடனையும் அடித்தான். மகாவிஷ்ணுவானவர் கருடன் களைத்திருந்ததைக் கண்டு சக்ராயுதத்தை யெடுத்துக் காலநேமியின நூறு தலைகளையும் கைகளையும் அறுத்தார்; யுத்தத்திற்கு வந்த மற்றத் தைத்யதானவர்களனைவரையும் அடித்தார்; தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் அவரவர் பதங்களை அளித்தார். பாரதனே! அப்போது ஹரியானவர் மிக்க அன்புடன் அவரவர்க்குரிய அதிகாரங்களைத் தேவர்களுக்குக் கொடுத்துப் பிரமமாவுடன் கூடப் பிரம்மலோகத்துக்குச் சென்றார். பிரபுவான நாராயணர் பிரம்மலோகத்தில் பிரவேசித்த பிறகு பழமையான பரபிரமம ஸ்தானமும எல்லாவற்றிற்கும மேற்பட்டதுமான [1] நாராயணாசிரயத்தில் பிரவேசித்து மகரிஷிகளால் துதிக்கப்பெற்று ஆயிரம சிரங்களுள்ளவராகி யோகநித்திரைக்கு ஆரம்பித்தார். அழிவற்றவரும் முதல் தேவரும் நித்திய சரீரமுள்ளவருமான மகாவிஷ்ணு உலகத்தை மாயையில் மயங்கச் செய்துகொண்டு நித்திரையில் பரவசமடைந்தவர் போல எக்காலமும சுகமாகச் சயனித்திருந்தார். அம்மகாத்மா அவ்வாறு சயனித்திருக்கையில் மானிட வருஷ எண்ணினால் முப்பத்தாறு லட்சம் வருஷங்கள் சென்றன. கிருதயுகமும் திரேதாயுகமும் சென்று துவாபர யுகத்தின் முடிவில் விழித்துக்கொண்டார். பிரம்மா முதலான தேவர்களாலும மகரிஷிகளாலும் துதிக்கப்பட்ட மகாவிஷ்ணு சயனத்திலிருந்து எழுந்து பிரமமாதி தேவர்களோடுங்கூடத் தேவகாரியத்திற்காகத் தேவ சபைக்குச் சென்றார். பாரதனே! மேருவின் சிகரத்தில் ஏற்படுத்தப்பட்டதும் ஒளி மிகுந்ததுமான அந்தச் சிறந்த சபையில் அந்தத்

1. வைகுண்டம்.

தேவர்களனைவரும் பிரம்மதேவருடன் கூடப் பிரவேசித்தனர். அங்கே போய் அந்தச் சபையில் அவர்கள் உட்கார்ந்தனர். அப்போது. அந்தச் சபை இரைச்சல் அடங்கியிருந்தது. அந்தச் சபையில் பூமிதேவி துயரத்தினால் மெலிந்த குரலோடு பேச லுற்றாள். 'தேவர்களே! பலசாலிகளான அரசர்களின் சேனை களினால் மிகவும் நெருக்கப்பட்டு நான் துயரப்பட்டவளாக இருக் கிறேன். எக்காலமும் பாரத்தினால் சிரமமடைந்த நான் ஜீவிப் பதே கடினமாயிருக்கிறது. ஒவ்வொரு நகரத்திலும் கோடிக் கணக்கான சேனைகள் சூழ்ந்த அரசனிருக்கிறான். தேசந்தோறும் ஆயிரம் ஆயிரம் வீடுகள் அடங்கின கிராமங்கள் நூற்றுக்கணக் காக இருக்கின்றன. பலசாலிகளான அவ்வரசர்களின அநேக மாயிரம் சேனைகளாலும் கிராமங்களாலும் நகரங்களாலும் தேசங் களாலும் நான் நெருக்கப்பட்டிருக்கிறேன். ஆதலால், என் சக்தியினால் நான் ஜனங்களைத் தாங்கமுடியவில்லை. அந்தப் பிர ஜைகளும் துராத்மாக்களான அசுரர்களால் எக்காலமும் இம்சிக் கப்படுகின்றனர்' என்றாள். பூமிதேவி சொல்லைக் கேட்டுப் பக வானான நாராயணர் அப்போதே அந்தத் தேவர்களனைவருக்கும் பூமியில் அவதரிக்கும்படி கட்டளையிட்டுத் தாமும் பூமியில் வசிக்க மனத்தில் நினைத்தார்.

---

ஐம்பத்திரண்டாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

(கிருஷ்ணாவதாரத்தின் பாலிய சரித்திரம்)

பிறகு, பகவானான விஷ்ணு வசுதேவ குமாரராயிருந்து செய்த காரியங்களை யெல்லாம் உனக்குத் தெளிவாகச் சொல் வேன்; முழுதுங் கேள். மகாத்மாவான வாசுதேவருடைய மகி மையும் சரித்திரமும், தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் உலகங் களுக்கும் நன்மையைத் தருவன. அப்பா! சர்வவியாபியும் பிரபு வும் விசாலமான கண்ணுள்ளவரும் ஈசுவரருமான அந்த விஷ்ணு தமது வைகுண்டத்தில் எப்போது திருபதி யடையவில்லையோ அப்போது பூமிக்குச் சுகத்தைச் செய்யவும் அசுரர்களை யழிக்க வும் (கருதி) மருத்துக்கள், வஸுக்கள், சூரியன், சந்திரன், கந்தர் வர்கள், அப்ஸரஸுகள், ருத்திரர்கள், ஆதித்யர்கள், அசுவினி தேவர்கள் ஆகிய தேவர்களை, 'உலகங்களுக்கெல்லாம் ஈசுவரர் களே! நீங்கள் மானிடலோகத்தில் பிறவுங்கள்' என்று கட்டளை யிட்டுத் திரியக் ஜாதி முதலான எல்லா ஜங்கமப் பிராணிகளையும் இவை உண்டாகக்கடவன வென்று சங்கற்பித்துத் தமக்காகப் படைத்தார். ஸர்வக்ஞரான தாமும் யது குலத்தில் பிறந்தார்.

குழந்தாய்! புருஷோத்தமரான விஷ்ணு தம்மைத் தாமாகவே பல உருவங்களாகச் செய்துகொண்டு விளையாட்டிற்காக இவ்வுலகத்தில் பசுக்களை மேய்த்தார். அஜாதசத்ருவே! அரசனே! அவர் தம் இச்சையினால் பூமியில் அவதரித்தவர். பரத சிரேஷ்டனே! குழந்தாய்! நான் உரைப்பதைக் கேள். ஜனார்த்தனர் அவதரிக்கும்போது சந்தோஷத்தினால் கடல்கள் கொந்தளித்தன; மலைகள் அசைந்தன; அக்னிகள் புகையில்லாமல் ஜ்வலித்தன; சுகமான காற்றுக்கள் வீசின; புழுதி அடங்கியிருந்தது; கிரகங்களும் நட்சத்திரங்களும் நன்றாகப் பிரகாசித்தன; ஆகாயத்தில் தேவர்களின் துந்துபி வாத்தியங்கள் மிக முழங்கின. அக்காலத்தில் தேவர்கள் வந்து பூமாரிகள் பொழிந்தனர்; மங்கள வாக்கியங்களினால் மதுஸூதனரைத் துதித்தனர். அந்த அவதார காலத்தில் மகரிஷிகள் சந்தோஷத்துடன் வந்தனர். அப்போது நாரதர் முதலான அந்த ரிஷிகளைக் கண்டு கந்தர்வ அப்ஸரஸ்ஸுகளின் கூட்டங்கள் ஆடிப்பாடின. அப்போது ஆயிரம் கண்களையுடையவனும் சிறந்த மகிமையுள்ளவனுமான தேவேந்திரன் கோவிந்தனிடம் வந்து அந்த மகரிஷிகளைப் பூஜித்து, 'உலகங்களைப் படைத்தவரான பகவான் தமது திவ்ய சக்தியினால் தேவர்கள் செய்யவேண்டிய காரியங்களையும் தேவர்களுக்கு ஆகவேண்டிய நன்மைகளையுஞ் செய்து திரும்பவும் தமது லோகத்துக்குச் செல்வர்' என்று சொன்னான்; இவ்வாறு சொல்லி ரிஷிகளுடன்கூட மறுபடியும் சுவர்க்கத்துக்குச் சென்றான். கண்ணபிரான் அவர்கள் எல்லாருக்கும் விடைகொடுத்தனுப்பித் தமது திவ்ய பிரபாவத்தை மறைத்துக்கொண்டு நந்தகோபன் வீட்டில் அநேக வருஷங்கள் வசித்தார். பிறகு, ஒரு காலத்தில் யசோதை வண்டியின்கீழே தூங்கிக்கொண்டிருந்த அந்தக் குழந்தையை விட்டுவிட்டு யமுனையாற்றிற்குச் சென்றாள். அப்போது ஸ்ரீ கிருஷ்ண பகவான, குழந்தை விளையாட்டை நடித்துத் தமது கைகால்களை உதறிக்கொண்டு கால்களை மேலே தூக்கி, காலின் பெருவிரலால் சகடத்தை யுடைத்து இனிய குரலாக அழுதார். அந்தச் சிசுவான கண்ணன் ஒற்றைக்காலால் சகடத்தை அங்கே தள்ளிவிட்டு முலை உண்ண விரும்பிக் கவிழ்ந்து படுத்து அழுதார். அங்குள்ள ஜனங்கள் அந்தக் குழந்தையினால் உடைக்கப்பட்டுக் குடமும் அச்சும் பாயும் முறிந்த சகடத்தைக் கண்டு மிக்க வியப்படைந்தனர். கம்ஸன் பட்சத்தைச் சேர்ந்த சகடாசுரனை உக்ரமான சக்தியுள்ள அந்தக் குழந்தை படுத்திருந்தே கொன்றதென்னும் பெரிய ஆச்சரியத்தைச் சூரசேனதேசத்தார் நேரில்

கண்டனர். பேருடலும் பருத்த ஸ்தனங்களுமுடைய பூதனை யென்பவளும் கொல்லப்பட்டாள். மகாராஜனே! அதன்பிறகு, கிருஷ்ண பலராமர் இருவரும் ஆகாயத்தில் சந்திரசூரியர்கள் கிரணங்களால் ஒருவர்க்கொருவர் சேருவதுபோலச் சேர்ந்து தவழத் தொடங்கினர். ராஜனே! அப்போது, மகா சர்ப்பங்களைப் போன்ற புஜங்களையுடைய ராமகிருஷ்ணர்கள் அவ்வனத்தில் சிலவிடங்களில் முழங்கால்களினால் தவழ்ந்தும் சிலவிடங்களில் விளையாடியும் எங்கும் போவதனால் அங்கங்களில் புழுதிகளைப் பூசிக்கொண்டு விளங்கினர். பாரதனே! கடையும்போது தயிர்ப் பெருக்குக்களைக் குடித்துக்கொண்டு அந்தப் பாலகோபாலர் ஒரு கால் அவ்விடத்தில் மிகுதியான வெண்ணெயை விழுங்கிக்கொண் டிருக்கையில் கோப ஸ்திரிகளால் காணப்பட்டனர். பின்பு, அவர் கள், கண்ணனைக் கயிற்றினால் உரலில் கட்டுவித்தனர். அந்த உரலை அப்படியே இழுத்துக்கொண்டுபோன அந்தச் சிசுவினால் இரண்டு மருத மரங்கள் வேரோடும் கிளைகளோடும் முறிக்கப் பட்டன. அஃது ஆச்சரியமாயிருந்தது. அதன்பிறகு, ராம கிருஷ்ண ரிருவரும் குழந்தைப் பருவத்தைத் தாண்டி அதே இடைச்சேரியில் ஏழு வயதுப் பிள்ளைகளாயினர். [1] காகபக்ஷங் களோடுகூடிய அழகிய முகங்களையுடைய ராமகிருஷ்ணர்கள் ஒருவர் நீலாம்பரத்தையும், மற்றொருவர் பீதாம்பரத்தையும் தரித்தும், ஒருவர் பொன்னிறமான சாந்தும், மற்றொருவர் வெண்ணிறமான சாந்தும் அணிந்தும், இலையினால் காதுக் கினிமையாக வாத்தியம் வாசித்தும் கன்றுகளை மேய்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள், காட்டில் [2] மூன்றுதலை நாகங்கள் போல விளங்கினர். காதில் மயில் தோகையையும், சிரசில் இளந் தளிர்களைகளையும், மார்பில் [3] வனமாலையையும் தரித்த அவ்விரு வரும் கிளைத்திருக்கும் இரண்டு ஆச்சா மரத்தின் போத்துக்கள் போல விளங்கினர். ராஜனே! தலையில் தாமரைமலர் சூடிக் கயிற்றை யக்ஞோபவீதமாகப் போட்டுக்கொண்டும், கையில் தூக்கோடு சுரைக்காய்களை வைத்துக்கொண்டும், இடையர்க் குரிய புல்லாங்குழல்களை ஊதிக்கொண்டும், வனத்தில் சில விடங்களில் தங்கியும், சிலவிடங்களில் சேர்ந்து விளையாடியும் தூங்கவேண்டியபோது ஓரிடத்தில் இலைப்பரப்புக்களில் படுத் தும், சந்தோஷமாகப் பல இடங்களில் ஓடியும், அழகான பெரு வனத்திற்கு அலங்காரமாகக் கன்றுகளை மேய்த்துக்கொண் டிருந்தனர். குந்திபுத்திரனே! அதன் பிறகு, வசுதேவ புத்தி ரர்கள் இருவரும் பிருந்தாவனத்திற்குச் சென்று அங்கே ஆநிரை மேய்த்து விளையாடினர்.

1 பக்கக்குடுமி; சிலுப்பா வென்பது உலக வழக்கு.

2 இருபுறம் சிலுப்பாக்களைச் சேர்த்து மூன்று தலை யென்றது.

3 பகவானுக்குரிய வைஜயந்தி யென்னும் மாலை.

## ஐம்பத்துமூன்றுவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (கிருஷ்ண சரித்திரத்தில் கம்ஸ வதம் வரையில் சொல்லியது)

பின்பு ஒருகால், அழகிய உருவமும் சிறந்த முகமுமுள்ள கண்ணபிரான, அந்த அழகான வனத்தில், மூத்தவரான பலராமரின்றிச் சஞ்சரித்தார். காகபக்ஷத்தைத் தரித்தவரும் நீல நிறமுள்ளவரும் தாமரைமலர்போன்ற கண்களையுடையவரும் சந்திரன் நடுவில் களங்கமிருப்பதுபோலத் திருமார்பினில் ஸ்ரீவத்ஸமென்னும் மறுவுள்ளவரும், கயிற்றை யக்ஞோபவீத மாக வுடையவரும பீதக ஆடை உடுத்தவரும் உடம்பில் வெண் சாந்தை அணிந்தவரும் கறுத்தும் சுருண்டுமிருக்கும் குழல்க ளோடு கூடியவரும் அழகும் ஒளியுமுள்ளவருமான யௌவனப் பருவத்திலிருந்த அந்தப் பிரபு, கார்காலத்தில் ஒரு வனத்தில் தென்றற்காற்றினல் அசையும் அழகான மயிலிறகோடு சில விடங்களில் பாடியும், சிலவிடங்களில் ஆடியும, சிலவிடங்களில் விளையாடியும், சிலவிடங்களில் நகைத்தும், பசுக்களை உற்சாகப் படுத்துவதற்காக அந்த இடையர்க்குரிய புல்லாங்குழலை மிக்க இனிமையாக ஊதியும் கோகுலத்தைச் சேர்ந்த பசுக்கூட்டத்தில் சஞ்சரித்தார். பரத சிரேஷ்டனே! மஹா பிரபுவும் விஷ்ணுவு மாகிய கிருஷ்ண பகவான், மிக்க அழகான அந்த வனப்பிர தேசத்தில் வரிசைகளான காடுகளில் சந்தோஷமாக விளையாடிக் கொண்டு பசுக்களுடன் கூடப் போய்க்கொண்டிருக்கையில், அவ்வனத்திலுள்ள பாண்டீரமென்னும் ஆலமரத்தைக் கண்டு அதன் நிழலில் தங்க மனங்கொண்டார். குறறமற்றவனே! முன் கன்று மேய்த்தவர்களும் தமக்கு ஒத்த பிராயமுள்ளவர்களு மான இடைப்பிள்ளைகளுடன் கூட அந்தத் தினமெல்லாம் முன்பு தமது திவ்யலோகத்திலிருந்ததுபோல மகிழ்ந்திருந்தார். அவ்வாறு விளையாடிககொண்டிருந்த கண்ணனைப் பாண் டீரமெனனும் ஆலமரத்தின்கீழ் வசிக்கும் இடையர்கள் பலர் உயர்ந்த விளையாட்டுக்களினல் மகிழ்வித்தனர். வனத்தில் விருப்பமுள்ள ஆயர்களில் சிலர் மனங்களித்துப் பாடினர், மற்றும் சிலர் கோபாலராகிய கிருஷ்ண பகவானைப்பற்றியே கீதஙகள் பாடினர். அங்கே அவர்கள் பாடிக்கொண்டும் இலை வாத்தியம் வாசித்துக்கொண்டு மிருக்கும் சமயத்தில், கிருஷ் ணன் குழலையும் சுரைக்காய் வீணையையும் வாசித்தார். இவ்வாறு அந்தக் கிருஷ்ண பகவான் இடையர்களுடன் அநேக விளையாட் டுக்கள் விளையாடினுர். குந்திபுத்திரனே! அந்த யௌவனப் பருவ

முள்ள கண்ணால் அந்த விளையாட்டுக் காலத்திலும் உலகங்களுக்கு நன்மைசெய்யப்பட்டது. பாரதனே! எல்லாப் பிராணிகளும் பார்க்கையில் வாசுதேவர் மடுவில் குதித்து அங்குள்ள அரவின் படத்தின்மேல் நடனஞ்செய்தார். எல்லா ஜனங்களும் பார்த்திருக்கையில் காளியனென்னும் நாகத்தை யடக்கிப் பின்பு கண்ணன் பலராமருடன் விளையாடினர். ராஜனே! அப்போது கழுதை உருவமாக வந்த தேனுகனென்னும் கொடிய அசுரன் பனங்காட்டில் பலராமரால் கொல்லப்பட்டான். குந்திபுத்திரனே! பின்பு ஒருகால், அழகிய முகங்களோடுகூடிய ராமகிருஷ்ணர்கள் மிக விருத்தியடைந்த கோதனங்களை மேய்த்துக்கொண்டு வனத்துக்குப் போயினர். சத்துருக்களைத் துயரப்படுத்துகிறவர்களும் தோல்வியடையாதவர்களுமான அவ்விருவரும் சந்தோஷமாக உலகவழக்கப்படி விளையாடிக்கொண்டும் காடுகளைப் பார்த்துக்கொண்டும் களித்துக்கொண்டும் பாடிக்கொண்டும் மரங்களிலுள்ள இலை காய் முதலியவற்றைப் பறித்துக்கொண்டும் கன்றுகளையும் பசுக்களையும் பேரிட்டு அழைத்துக்கொண்டும் சஞ்சரித்தனர். தேவர்களாலும் பூஜிக்கப்பெற்ற அவ்விரு தேவர்களும் மானிடப் பிறப்பென்னும் தீக்ஷையை வகித்து அந்த ஜாதிக்குரிய குணங்கள் பொருந்தின விளையாட்டுக்களுடன் வனத்தில் திரிந்தனர். இளமையில் கோபாலர்களுடன் இவ்வாறு விளையாடித் திரிந்தனர். சிறந்த மகிமை பொருந்தியவரும் எல்லாப் பிராணிகளையும் படைப்பவருமாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான், அதன்பிறகு, கோகுலத்திற்குச் சென்று அங்கே இடைப்பிள்ளைகளாற் செய்யப்பட்ட கிரியக்ஞமென்னும் கோவர்த்தனகிரி பூஜையில் தேவதாரூபத்தோடு பாயஸான்னத்தைப் புசித்தார். அந்த ரூபத்தைக் கண்ட கோபாலர்களனைவரும் கிருஷ்ணனையே பூஜித்தனர். அப்போது திவ்ய ரூபத்தைத் தரித்துத் தேவர்களால் பூஜிக்கப்பெற்றார். பகைவரைப் பீடிப்பவனே! பசுக்களைக் காப்பதற்காகக் கோவர்த்தனமென்னும் குன்றம் இளைஞரான வாசுதேவரால் ஏழு நாள் தூக்கிப் பிடிக்கப்பட்டது. அப்போது, அந்தச் செயற்கரிய காரியத்தைக் கிருஷ்ணன் விளையாட்டாகச் செய்தார். பாரதனே! அஃது எல்லா உலகங்களுக்கும் மிக்க ஆச்சரியமாயிருந்தது. தேவர்களுக்கு ராஜாவான இந்திரன் பூமிக்கு வந்து கிருஷ்ணனுக்கு வந்தனமளித்து, சந்தோஷத்துடன் அவரைக் '[1]கோவிந்தர்' என்று சொல்லி அவருக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்தான். இந்திரன் கிருஷ்ணனை, 'கோவிந்தா!' என்று அழைத்துத் தழுவிக்கொண்டு சுவர்க்கத்திற்குச் சென்றான். அதன் பிறகு,

1 கோக்களைக் காப்பவர்.

காளை வடிவமாக வந்த அரிஷ்டனென்று பெயர்பெற்ற அசுரனைக் கிருஷ்ணன் பசுக்களின் நன்மைக்காகப் பராக்கிரமத்தினுற் கொன்றார். ராஜனே! அதன்பிறகு, கேசி என்னும் அசுரன் குதிரை யுருவமாக வந்தான். பார்த்தனே! அவ்வாறு, பதினுயிரம் யானைப் பலமுள்ளதாக வனத்திற்கு வந்த அந்தக் குதிரையைத் தமது தாமரைமலர் போன்ற கையையே வஜ்ராயுதமாகக் கொண்டு மதுஸூதனர் கொன்றார். அதன்பிறகு, மல்லனாக இருந்த சாணூரனென்னும் பெரிய அசுரனைக் கொன்றார். பகைவரை யழிப்பவனே! பாரதனே! எல்லாச் சேனைகளாலும் சூழப்பட்டுவந்த சுதாமனென்னும் அரசனைக் கோவிந்தன் சிறுபிரயத்தினத்திற் கொன்றார். முஷ்டிகனென்பவன் பலராமரால் கம்ஸ சபையில் எளிதாகக் கொல்லப்பட்டான். பாரதனே! கம்ஸன் மந்திரிகளுடன்கூடவே கிருஷ்ணனால் அடிக்கப்பட்டான். பகைவர்களை அழிப்பவரான கண்ணபிரான், எல்லாரும் பார்த்திருக்கையில், கம்ஸனைக் கொன்று உக்ரசேனனுக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்து தமது தாய் தந்தையரின் அடிபணிந்தார். கண்ணபிரான் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தவர்.

---

ஐம்பத்துநான்காவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (கிருஷ்ண சரித்திரத் தொடர்ச்சி)

அதன் பிறகு, ராமகிருஷ்ணர்கள் சாந்தீபினி யென்னும் ஆசாரியரிடம் சென்றனர். தர்மந் தெரிந்தவரும் தர்மத்தை யனுஷ்டிப்பவருமாகிய அவ்விரண்டு மகாத்மாக்களும் அவந்தி தேசத்தில் கடுமையான பிரமசரிய விரதத்தை யனுஷ்டித்துக் குருவுக்குப் பணிவிடைசெய்து அறுபத்து நான்கு இரவு பகல்களில் வேத வேதாங்கங்களைக் கிரகித்தனர். அந்த யாதவர்களிருவரும் எழுத்து, எண், சங்கீதம், வைத்தியம், யானைப் பயிற்சி, குதிரைப் பயிற்சி இவற்றை யெல்லாம் பன்னிரண்டு நாட்களில் கற்றுக்கொண்டனர். தர்மந் தெரிந்தவரும் தர்மத்தை யனுஷ்டிப்பவருமாகிய அவ்விரண்டு வீரர்களும தனுர்வேதங் கற்றுக் கொள்வதற்காகத் திரும்பவும சாந்தீபினி யென்னும ஆசாரியரை அடைந்தனர். ராஜனே! அவ்விருவரும் வில் வித்தையிற் சிறந்த ஆசாரியரான சாந்தீபினியிடம் சென்று நமஸ்கரித்து அவரால் கௌரவிக்கப் பெற்று அவந்தி தேசத்திலிருந்துகொண்டே ஐம்

பது இராப் பகல்களில் *பத்து அங்கங்களோடுகூடிய தனுர் வேதத்தை ரகசியங்களுடன்கூட மனத்தில் செவ்வையாகப் பதியும்படி முற்றும் கற்றனர். பிராமணசிரேஷ்டரான சாந்தீபினி, அவர்கள் காரியம் நிறைவேறினதைக் கண்டு அவர்களிடம் குரு தட்சிணை கேட்டார். சாந்தீபினியானவர், சமர்த்தரான கிருஷ்ணனைப் பார்த்து, 'எனது புத்திரன் இந்தக் கடலில் மச்சத்தினால் இழுத்துக்கொண்டு போகப்பட்டான்; திமிங்கிலத்தினால் விழுங்கப்பட்டஎன் புதல்வனைக் கொண்டுவா; உனக்கு நன்மை உண்டாகட்டும்' என்று தமது பிரயோசனத்தைக் கேட்டுக்கொண்டார். புத்திரனைப்பற்றித் துயரப்பட்ட குருவுக்காகக் கிருஷ்ணன், எவ்வுலகிலும் மற்றெவராலும் செயற்கரிய காரியத்தைபபற்றியும் பிரதிக்ஞை செய்தார். பரதேசிரேஷ்டனே! சாந்தீபினியின் புத்திரனை இழுத்துக்கொண்டுபோன மத்ஸ்யமாகிய அசுரன ராமகிருஷ்ணர்களால் கடலில் கொல்லபபட்டான. வெகுகாலத்துக்கு முன இறந்து போயிருந்த சாந்தீபினி புத்திரன அளவற்ற மகிமையுள்ள கிருஷ்ணனுடைய அநுக்கிரகத்தினால் அப்போது மறுபடியும் சரீரத்துடன் பிழைத்துவந்தான். செய்யவும நினைக்கவும் முடியாத அந்த மிகப பெரிய புதுமையைக் கண்டு எல்லா ஜனங்களுக்கும் ஆச்சரியம் உண்டாயிற்று. ராமகிருஷ்ணர்கள் குருவுக்கு உயர்ந்த ஆசனங்களையும் பசுக்களையும் குதிரைகளையும் தனமுதலிய எல்லாவற்றையும் தக்ஷிணையாகக் கொடுத்தனர். கதாயுத்தத்திலும பரிகாயுதச் சண்டையிலும் எல்லா அஸ்திர வித்தைகளிலும கிருஷ்ணன் எல்லாருக்கும முதன்மை யடைந்து எல்லா உலகங்களிலும பெயர்பெற்றார். எல்லா ரத்தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டு ஆதித்தனைப்போலப் பிரகாசிக்கும் தேவேந்திர ரதத்தில் நாராயணரைத் தவிர வேறு யார் ஏறலாம்?, இந்திரனுடைய ஒப்பற்ற சாரதியும் அனபுள்ள சிநேகிதனுமாகிய மாதலி புருஷோத்தமரைத் தவிர வேறு யாருக்குக் கடிவாளம் பிடித்து ஓட்டுவான்?

அப்பா! யுதிஷ்டிரா! போஜராஜன் மகனான கம்ஸனும், அஸ்திர வித்தையிலும் தேக வனமையிலும் சூரத்தனத்திலும்

---

* 1. சாரி = ஒற்றைக்காலால் நடப்பது. 2. ஸ்தானம் = வில்லாளி நிறுதல். 3. நியாயம் = கத்திச்சண்டையில் கைகளைப பலவிதமாக மாற்றுவது. 4. பிரவிசாரம் = அஸ்திரங்களையும் பாணங்களையும் விடும்போது தக்கபடி அங்கங்களை அமைத்துக்கொள்வது. 5. ஸௌஷ்டவம் = இடுப்பு, முழங்கால், முழங்கை, தோள், தலை இவைகள் சமமாக நிற்பதும் மார்பு உயர்ந்திருப்பதும். 6. கரணம் = பாணத்தை எடுப்பது விடுப்பது முதலியன. 7. வியாயாமம் = தேகப்பயிற்சி. 8. மண்டலம மேலே சொன்ன சாரிகளைக் கூட்டுவது. 9. கதி = நடை. 10. ஆசனம் = இலக்கைப் பார்ப்பதற்காகப் பலவகைகளாக உட்காருதல்.

கார்த்தவீர்யார்ஜுனனுக்குச் சமானமாயிருந்தவன். போஜ ராஜனான உக்ரசேனன் புதல்வனும் போஜ ராஜர்களின் வமிசத்தைச் சிறப்பித்தவனுமாகிய அந்தக் கமஸனைக் கண்டு மற்ற அரசர்கள் கருடனைக் கண்ட நாகங்களைப்போல நடுங்கினர். பாரதனே! விற்களாலும் கத்திகளாலும் கூர்மையான பிராஸாயுதங்களாலும் சிதரயுததம் செய்பவர்களான காலாட்கள் நூறு லக்ஷம் பேர் அவனிட மிருந்தனர். யுத்தத்தில் பின்வாங்காத சூராகள் எட்டு லக்ஷம் பேர்கள கம்ஸனிட மிருந்தனர். யுதிஷ்டிரா! அவனுடைய கொடிகள் பொன் மயமானவை; அவனுடைய தேர்கள் உயர்ந்த பொறகச்சை கட்டினவைகள்; யானைகளும அவ்வாறே; அவன் சேனை அவ்வளவு பெரியது. விற்களாலும் கத்திகளாலும் கூர்மையான பிராஸாயுதங்களாலும் சித்ர யுத்தஞ்செய்யும் வீரர்கள் ஏறும் குதிரைகள், பலாச மலர்போலச் சிவந்த நிறமுள்ளவை, பதினயிர மிருந்தன. யுதிஷ்டிரா! கம்ஸனுக்குச் சகோதரனான ஸுநாமா என்பவனைச் சேர்ந்ததும் யாராலும் புஜவலிமையினல் ஜயிக்கமுடியாததும் சிறந்த குதிரைக்காரர்கள் ஏறியதுமாகிய குதிரைக்குட்டிகளின் மற்றொரு பெரிய சேனை இருந்தது. அந்த ஸுநாமா வென்பவன் கம்ஸனை நாற்புறமுங் காத்தான். அவன் சேனை [1]மிசிரகம் என்னப்பட்டது; அறுபதினயிரமென்று கணக்கிடப்பட்டது. யுதிஷ்டிரா! கம்ஸனுடைய கோபமே பெரிய வேகமாகவும், கொடிகளே தீவுகளிலுள்ள பெரு மரங்களாகவும், மதயானைகளே பெரிய முதலைகளாகவும் ஆயுதக் கூட்டங்களே நுரைக் கூட்டங்களாகவும், குதிரைக்காரரின் ஓட்டமே பெருவெள்ளமாகவும், கதைகளும் பரிகாயுதங்களுமே மீன்களாகவும், பலவகைக் கவசங்களே பாசிகளாகவும் தேர்களும் யானைகளுமே பெருஞ் சுழல்களாகவும், பலவகை உதிரங்களே சேறுகளாகவும், விசித்திரமான விற்களே அலைகளாகவும், தேர்க்குதிரைகளே கலங்கின மடுக்களாகவும், யுத்தவீரர்களின் கர்ஜனமே சத்தமாகவுமுடையதும் யம னென்னுங் கடலிற் சேருவதும் பயங்கரமுமான போரென்னும் மகாநதியைத் தாண்டிக் கம்ஸனைக் கொல்லுகிறவன் நாராயணரைத் தவிர மற்றவன் எவன் இருக்கிறன்? பாரதனே! இந்தக் கிருஷ்ணன் இந்திரனுடைய ரதத்திலிருந்து கமஸனுடைய அந்தச் சேனைகளை மகா மேகங்களைக் காற்று அடிப்பதுபோல ஊதிவிட்டார்; பிறகு, மந்திரிகளுடன்கூட சபையில் வீற்றிருந்த கம்ஸனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் கொன்று ஜயத்தைக் கொண்டுவந்தார். இந்திரனுக்கு இளையவரான கிருஷ்ண பகவான் வெகுமானிக்கத்

1 நாலவகைச சேனைகளும் கலந்தது.

தக்க தேவகியையும் மற்றுமுள்ள சுற்றத்தாரையும் யசோதை யையும் ரோகிணியையும் பலமுறை நமஸ்கரித்து உக்ரசேனனுக்கு ராஜ்யாபிஷேகஞ் செய்வித்து யாதவத் தலைவர்களால் பூஜிக்கப் பெற்றார். புருஷோத்தமரான கண்ணன், அதன்பிறகு, எல்லா அரசர்களோடும் ஒன்று சேர்ந்து யுத்தத்திற்கு வந்த ஜராசந்த னென்னும் அரசனை ஸரஸ்வதியாற்றி னருகில் ஜயித்தார்.

---

ஐம்பத்தைந்தாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (நரகாசுர வதம்)

பாரதனே! அதன்பிறகு, யாதவ வம்சத்தில் அவதரித்த கிருஷ்ண பகவான் மதுராபுரியைவிட்டுத் துவாரகாபுரியைச் சேர்ந்தார். அதன்பிறகு, மகாத்மாவான தாமரைக்கண்ணர் நரகாசுரனிடமிருந்து தமக்குத் தக்க வாகனங்களையும் பலவகை ரத்னங்களையும் பெற்றுக்கொண்டார். அப்போது, தைத்யர்களும் தானவர்களும் தடைசெய்தனர். சிறந்த கைவன்மையுள்ள கிருஷ்ண பகவான், வரம்பெற்று மதங்கொண்ட அந்த அசுரத் தலைவர்களை ஹதஞ்செய்தார். அந்த நரகனென்னும அசுரன் அவருக்கு விரோதஞ்செய்தான். யுதிஷ்டிரா! குண்டலத்துக் காக அதிதி யென்னும தேவமாதாவைப் பிடித்தான். அப்போது நரகாசுரன செய்த அந்த மிகக் கொடிய காரியத்தை இதற்கு முன் அசுரக்கூட்டங்களெல்லாம் ஒன்றுசேர்ந்தும செய்யவில்லை. அந்த நரகாசுரன் பூமிதேவிக்குப் பிறந்தவன. அவனுக்கு இருப் பிடம் ப்ராக்ஜ்யோதிஷபுர மென்பது. யுத்தத்தில் அடங்காத மதமுள்ளவர்களும் தேவக் கூட்டங்களுக்கு அச்சத்தை உண்டு பண்ணுகிறவர்களுமாகிய ஹயக்ரீவன், நிசும்பன், கொடியவனான பஞ்சஜனன், ஆயிரம் புத்திரர்களோடு கூடியவனும வரம்பெற்ற தனால் கர்வித்தவனுமான முரனெனனும அசுரசிரேஷ்டன் ஆகிய இந்நால்வரும் அவன தேசத்தின் நான்கு எல்லைகளையும் காப் பவராயிருந்து ஆகாய மார்க்கம் வரையில் தகைந்து நின்றனர். சிறந்த கைவன்மையுள்ளவரும் சக்ரத்தையும கதையையும் சக்தி யையும தரிப்பவருமான இந்தக் கிருஷ்ணன் நரகாசுரனை வதஞ் செயவதற்காக யது வம்சத்தவரான வசுதேவருக்குத் தேவகியி னிடத்தில் ஜனித்தார். உலகங்களில் பிரசித்தமான மகிமை யுள்ள இந்தப் புருஷோத்தமருககுத் துவாரகாபுரிதான் முக்கிய மான இருபபிடமெனபது உங்களுக்குத் தெரியுமே. யுதிஷ்டிரா! அந்தத் துவாரகாபுரியானது இந்திரனுடைய அமராவதி பட்ட

ணத்தைக் காட்டிலும் குபேரனுடைய வைராஜ மென்னும் பட்டணத்தைக் காட்டிலும் மிக்க அழகுள்ள தென்பதும் உனக்கே தெரியும். தேவநகருக்கு நிகரான அந்தத் துவாரகாபுரியில் ஒரு யோசனை தூரம் நீளமும் அகலமுமுள்ளதும் சுதர்மை யென்று பெயர்பெற்றதும் யாதவர்களிருப்பதுமாகிய ஒரு சபை இருக்கிறது. விருஷ்ணிகளும் அந்தகர்களுமாகிய அனைவரும் ராம கிருஷ்ணர்களை முன்னிட்டுக்கொண்டு இந்த உலகத்தின இயல்பு முழுமையையும் காப்பாற்றிக்கொண்டு அந்தச் சபையி லிருக்கின்றனர். பரதசிரேஷ்டனே! ஒருகால் அவர்க ளனைவரும் அந்தச் சபையினகண் வீற்றிருக்கையில், சிறந்த மணமுள்ள காற்றடித்துப் பூமாரியும் பொழிந்தது. உடனே, ஆயிரம் சூரியர்களுக்கு நிகராக மிக்க ஆச்சரியமான ஒரு பேரொளி சற்றுநேரம் ஆகாயத்திலிருந்தது அஃது அங்கிருந்து பூமியில் இறங்கியது. அந்த ஒளியின மத்தியில வெள்ளை யானையினமேலேறித் தேவக் கூட்டங்க ளனைவராலும் சூழப்பெற்ற தேவேந்திரன காணப்பட்டான். பலராமரும் கிருஷ்ணனும் ராஜாவான ஆஹுகனும் விருஷ்ணிகள் அந்தகர்களின கூட்டங்களோடு கூட விரைவாக எழுந்து இந்திரனுக்கு நமஸ்காரஞ்செய்தனர். அந்த இந்திரன் உடனே யானையிலிருந்து இறங்கிக் கிருஷ்ணனைத் தழுவிக்கொண்ட பிறகு, பலதேவரையும் ராஜாவான ஆஹுகனையும் வசுதேவரையும் உத்தவரையும் சிறந்த புத்திசாலியான விகத்ருவையும் தழுவிக்கொண்டான். அப்பா! மகாராஜனே! மகிமை பொருந்தியவனும பிராணிகளைக் காப்பவனும பாகனென்ற அசுரனைக் கொன்றவனுமாகிய அந்தத் தேவேந்திரன் பிரத்யும்னன், ஸாம்பன், நிசடன், அனிருத்தன, ஸாத்யகி, கதன், சாரணன், அக்ரூரன், பானு, ஜல்லி, விடுரதன், கிருதவர்மா, மகா பலசாலியான சாருதேஷ்ணன் ஆகிய தேவர்களுக்கொப்பான யாதவ சிரேஷ்டர்களையும் மற்றுமுள்ள விருஷ்ணிகள் அந்தகர்களிலுள்ள பெரிய மனிதர்களையுங் கண்டு தழுவிக்கொண்டு அவர்களால் அளிக்கப்பட்ட பூஜையைப் பெற்றுக்கொண்டு மிக்க அன்புடன் கண்ணபிரானைப் பார்த்து, 'மனிதர்களுக்கெல்லாம ஈசுவரரே! குண்டலத்திற்காக நரகாசுரனைக் கொல்லும் என்று அதிதி சொல்லச் சொன்னாள்' என்று சொன்னான். கோவிந்தர், 'பூமியின் புத்திரனான நரகனைக் கொன்று உடனே குண்டலங்களைக் கொண்டுவருவேன' என்று தேவேந்திரனுக்குச் சொல்லிப் பலராமரை அழைத்தார். பெருங் கீர்த்தியுள்ளவரும ஐம்புலன்களையும் நடத்துகிறவருமான வாசுதேவர், பிரத்யும்னன், அனிருத்தன் பலத்தில் ஒப்பற்ற ஸாம்பன்

இவர்களுக்கும் அவ்வாறே சொல்லி உடனே கருடன் மேலேறி, சங்கத்தையும் சக்கரத்தையும் கதையையும் கத்தியை யும் தரித்துக்கொண்டு தேவகாரியம் செய்யச் சென்றார். அடுத்த வரைக் கைவிடாத விஷ்ணுவாகிய அந்தக் கிருஷ்ண பகவான் சத்ருவைக் கொல்வதற்காகச் செல்லும்போது இந்திரன் முத லான தேவர்கள் மனமகிழ்ந்து துதித்துக்கொண்டே பின்சென்ற னர். நரகாசுரனைச் சேர்ந்த அசுரத் தலைவர்களையும் கொடிய ராக்ஷ ஸர்களையும் கொன்றபிறகு, முரனுடைய அருகில் கத்தி கட்டின வலைகள் ஆறாயிரத்தைக் கண்டார். அந்த வலைகளை அஸ்திரத் தினால் துணித்து முரனையும் அவன் புத்திரர்களையும் கொன்று மலைக்கூட்டங்களைக் கடந்து நிசும்பனை அடித்தார். ஆயிரம்பேரை ஒருவனாக எதிர்க்கத் திறமையுள்ளவனும் எல்லாத தேவர்களை யும் அடித்தவனும் சிறந்த பலபராக்கிரமமுள்ளவனுமான ஹயக் ரீவனென்னும் அசுரனைக் கொன்றார். அளவற்ற சக்தியுள்ள வரும் யாராலும் வெல்ல முடியாதவரும் யாதவர்களெல்லாரையும் சிறப்பிக்கின்றவரும் தேவகி புத்திரருமான கிருஷ்ண பகவான், எங்கும் ஜலப்பிரவாகம் நிரம்பின லோஹித கங்கையின் நடுவில் விரூபாக்ஷனென்னும் அசுரனைக் கொன்றார்.

அதன்பிறகு, ஒளியினால் ஜ்வலிப்பது போன்ற ப்ராக்ஜ்யோ திஷமென்னும் நகரை அடைந்தார். அங்கே யுத்தம் நடந்தது. பாரதனே! சிறந்த சக்தியுள்ளவனும் பூமி புத்திரனுமாகிய அந்த நரகாசுரனுடன் தேவேந்திரனுடைய குண்டலத்துக்காக அந்தப் பயங்கரமான சண்டை நடந்தது. பலத்தில் மிகுந்த மதுஸூத னர் தமது சக்தியினால் சற்று நேரம் நரகாசுரனை விளையாடவிட்டு அவன் சக்ராயுதத்தை எடுத்தவுடன் தம் சக்ராயுதத்தினால் கொன்றார். வஜ்ராயுதத்தினால் அடிபட்ட நரகாசுரனுடைய தலை தேகத்தைவிட்டு உடனே கீழே விழுந்தது. பூமிதேவி தன் மகன் விழுந்துபோனதைக் கண்டு, தானே குண்டலங்களைக் கொடுத்துச் சிறந்த கைகளையுடைய கண்ணனைப் பார்த்து, 'மதுவைக் கொன்றவரே! இந்த நரகன் உம்மாலேயே படைக்கப் பட்டான்; உம்மாலேயே கொல்லப்பட்டான். நீர் எப்படி நினைக் கிறீரோ அப்படி விளையாடும். அவனுடைய சந்ததிகளை மட்டும் காப்பாற்றும்' என்று சொன்னாள். அதற்கு வாசுதேவர், 'மகாத் மாக்களான தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பித்ருக்களுக்கும் மற்றுமுள்ள பிராணிகளுக்கும் பயங்கரனும் பிராமணத்வேஷியும் மனிதர்களில் இழிவானவனும் உலகத்தினால் வெறுக்கப்பட்டவ னும் தேவர்களுக்கும் உலகங்களுக்கும் முள்ளைப்போல உறுத்து கிறவனுமான உன் புதல்வன் உலகமெல்லாம் நமஸ்கரிக்கத்தக்க

அதிதி தேவியைத் தன் பலத்தினால் பீடித்தான்; அவளுடைய குண்டலங்களைக் கர்வத்தினால் அபகரித்தான். அதனால் அவன் கொல்லப்பட்டான். பெண்ணரசியே! நான் செய்ததைப்பற்றி நீ வருத்தப்படவேண்டாம். உன் புத்திரன் உன்னுடைய மகிமையினால் மேலான கதியை அடைந்தான். மேன்மை பொருந்தியவளே! உன்னுடைய சுமையைத்தான் இறக்கினேன்; ஆதலால், நீ செல்' என்று சொன்னார்.

---

## ஐம்பத்தாறுவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (கிருஷ்ணன் துவாரகைக்குத் திரும்பி வந்தது)

ஸத்யபாமையைத் துணையாகவுடைய கிருஷ்ணன் பூமியின் புத்திரனாகிய நரகனைக் கொன்று திக்பாலகர்களுடன்கூட நரகனுடைய பட்டணத்தைப் பார்த்தார். பிறகு, சிறந்த சக்தியுள்ள அந்த நரகனுடைய கிருகத்தை யடைந்து அளவற்ற தனங்களையும், அக்னிபோலவும் சந்திரன் போலவும் பிரகாசிக்கும் மணிகளும் முத்துக்களும் பவழங்களும் வைடூரியங்களும் முதலான பலவகை ரத்தினங்களையும், பெரியவும் சிறியவுமான சூர்யகாந்தக் கற்களையும், படிகக்கற்களையும், ஜாம்பூநதமென்றும் சாதகும்பமென்றும் சொல்லப்படும் பொன்வகைகளையும் பார்த்தார். அவனுடைய அந்தப்புரம் பொன்னிறமும் வெண்ணிறமுமாக அழகாயிருந்தது. நரகன் கிருகத்தில் அளவற்ற தனம் மிகுதியாகக் காணபபட்டது. அவ்வளவு தனபபெருக்கை யக்ஷராஜாவான குபேரனுடைய கிருகத்திலும் தேவேந்திரனுடைய கிருகத்திலும இதற்குமுன் யாருங் கண்டதில்லை. தேவக்கூட்டங்களோடு கூடிய தேவேந்திரன், நரகனும் நிசும்பனும கொல்லப்பட்ட பிறகு, அதிதியின் ரத்னகுண்டலங்களை வாங்கிக்கொண்டு, வீற்றிருந்த யதுநாதரிடம், 'ஜனார்த்தனரே! பொற்கச்சைகள் கட்டி அங்குசங்களோடு கூடியவையும் சிறந்த பராக்கிரமமுள்ளவையும் பயத்தைத் தரும் உருவமுள்ளவையுமான இருபதினாயிரம் யானைகள் இருக்கின்றன. பலவகையான வெள்ளை வஸ்திரங்களினால் செய்யப்பட்ட கொடிகளோடும் பவழங்களினால் செய்யப்பட்ட சேணங்களோடுங்கூடிய நாற்பதினாயிரம் யானைகளும் பல தேசங்களிலுண்டான எட்டு லட்சம் உயர்ந்த குதிரைகளும் இருக்கின்றன. பகைவரைச் சங்கரிப்பவரே! ஜனார்த்தனரே! உமக்கு விருப்பமிருந்தால் நீர் தர்மமாகச் சம்பாதித்த மூன்று

லோகங்களுக்கும் சிறந்த இந்தத் தனங்களையெல்லாம் பழக்கப் பட்ட காளைமாடுகளின் மேலேற்றி உமது துவாரகாபுரியில் சேர்ப் பிக்கிறேன்' என்று சொன்னான். தேவர்களிடத்திலும் கந்தர்வர் களிடத்திலும் அசுரர்களிடத்திலுமுள்ள பொன்களும் மணிகளும் நரகன் அரண்மனையிலிருந்தன. இந்திரன் அவைவையெல்லாவற்றை யும் மணிபர்வதத்தையும் கருடன்மேலேற்றிக் கிருஷ்ணனுடன் கூடத் திரும்பிச் சென்றான். பொன்னினால் அலங்கரிக்கப்பட்ட விதானங்களோடுகூடிய மாளிகைகள் விளங்கும் அந்த மணிக் குன்று பலநிறங்களான மேகங்கள் சேர்ந்தாற்போல விளங்கிறது. அதில் ரத்தினப்படிகள் கட்டின பெரிய மாளிகைகள் இருந்தன. கந்தர்வ சிரேஷ்டர்களும் தேவ சிரேஷ்டர்களுமாகிய இவர்க ளுடைய அன்புள்ள புத்திரிகளாகிய பெண்ணரசிகள் அவற்றி லிருந்துகொண்டு மதுஸூதனரைக் கண்டனர். ஒற்றைப் பின்ன லான சடையைத் தரித்துக் காஷாய முடுத்துத் தவத்திலிருப் பவரான அந்தப் பெண்களனைவரும் சுவர்க்கத்துக்கு நிகரான இடத்திலிருப்பவரும் தோல்வியடையாத மகாவீரருமான கிருஷ் ணனைச் சூழ்ந்துகொண்டனர். அப்போது, தவத்தின் கடுமையினா லுண்டான துயரம் எவ்வளவும் அவர்களைப் பாதிக்கவில்லை. தாமரை மலருக்கொப்பான கண்களையுடைய அந்தப் பெண்களனை வரும் வெண்மையான வஸ்திரங்களையும் பட்டுக்களையும் உடுத்திக் கொண்டு, புலன்களை நடத்துகிறவரும் இந்த யாதவ சிங்கமுமான கிருஷ்ணனிடம் வந்து கரங்குவித்து, 'ஓ! புருஷோத்தமரே! தேவர்களுடைய காரியத்தைச் சாதிப்பதற்காகக் கிருஷ்ணன் வரப்போகிறார். அவர் பூமியின் புத்திரனான நரகன், நிசும்பன், முரன், ஹயக்ரீவன், பஞ்சஜனனென்னும் அசுரர்களையும் அவர் கள் சேனைகளையும் வதஞ்செய்து அளவற்ற தனத்தை அடையப் போகிறார். அவர் சொற்ப காலத்தில் உங்களைச் சிறையிலிருந்து மீட்பார் என்று நாரதர் எங்களுக்குச் சொன்னார். சிறந்த ஞானி யும் தேவரிஷியுமாகிய அவர் இவ்வாறு சொல்லிச் சென்றார். நாங்கள் எப்போதும் உம்மையே நினைத்துக்கொண்டு கடுந்தவஞ் செய்கிறோம். புருஷசிரேஷ்டரே! இந்தக் கெட்டகாலந் தாண்டி, சிறந்த கைகளையுடைய மாதவரை எப்போது காண்போமென்று மனத்தில் எண்ணமிட்டுக்கொண்டு அசுரர்களால் காவல் காக்கப் பட்டு எக்காலமும் தவஞ் செய்துவருகிறோம். அதன்பிறகு, எங் கள் விருப்பத்தைச் செய்வதற்காக வாயு பகவான் வந்து, 'நார தர் சொன்னது சொன்னபடியே சீக்கிரத்தில் நடக்கும் என்று சொன்னார்' என்று சொன்னார்கள். அந்தச் சிறந்த பெண்களின் முன்னிலையில் விருஷபப் பார்வை யுடையவராயிருந்த கண்

ணனைத் தேவர்களும் கந்தர்வர்களும் பசுக்களின் முன்னிற்கும்
மகாவிருஷபம்போலக் கண்டனர். அந்தப் பெண்கள், சந்திரனுக்
கொப்பான அவருடைய முகத்தைக் கண்டு கண்மலர்ந்து மனங்
களித்துச் சிறந்த கைகளையுடைய அந்தப் பகவானைப் பார்த்து,
'ஓ! எடுத்த விரதம் தவறாதவரே! வாயு பகவானும் எல்லாப்
பிராணிகளுக்கும் நன்மையைக் கருதின நாரத மகரிஷியும் முன்
னர் இங்கே எங்களைப் பார்த்து, சங்கம் சக்கரம் கதை வாளேந்
தின மகாவிஷ்ணுவான நாராயணர் பூமியின் புத்திரனான நரக
னைக் கொன்றபிறகு உங்களுக்குக் கணவராவார் என்பது திண்
ணம் என்றும் சொன்னார்கள். ரிஷிசிரேஷ்டரும் முதன்மையான
மகாத்மாவுமான அந்த நாரதரின் சொற்படி எங்களுக்கு உண்மை
யாக நீர் பர்த்தாவாகவேண்டும். இஃது எங்கள் பாக்கியம். பகை
வரை யடக்குகிறவரே! கேள்விக்குப் பிரியமாயிருந்தவரைக் காட்
சிக்குப் பிரியராகப் பார்க்கிறோம் என்பது சந்தோஷமானது.
இந்த மகாத்மாவான (உம்மைக்) கண்டதனால் நாங்கள் கிருதார்த்
தர்களானோம்' என்று கூறினார்.

யாதவசிரேஷ்டரான கிருஷ்ணன், மதனனால் மயலுற்றிருக்
கும் அந்தப் பெண்களனைவரையும் நோக்கி, 'விசாலமான கண்
களையுடைய பெண்களே! நீங்கள் கேட்பதெல்லாம் உங்களுக்கு
நேரும்' என்று மறுமொழி யுரைத்தார். உடனே, தேவகி
புத்திரரான பகவான் ரத்தினங்களுடனும் தனக்குவியல்களுட
னுங்கூடவே அந்தப் பெண்களெல்லாரையும் கருடன்மேலேற்றி
வைத்தார். தேவந்திரனுக்கு இளைய சகோதரரான அந்தக்
கண்ணபிரான் பட்சிகள், யானைகள், புலிகள் முதலான துஷ்ட
மிருகங்களும் சர்ப்பங்களும் குரங்குகளும் மான்களும் பன்றிகளும்
புள்ளிமான்களும் கூட்டங்கூட்டங்களாக நிறைந்திருப்பதும், கற்
களும் கற்பாறைகளும் தாழ்வரைகளும் உயர்ந்த சிகரங்களு
முடையதும், விசித்திரமான மயில்கள் நிறைந்திருப்பதுமான
மணி பர்வதத்தை எல்லாப் பிராணிகளும் பார்த்திருக்கும்
போதே பேர்த்துக் கருடன்மேல் வைத்தார். பெருமலைச்சிகரம்
போன்ற அந்தக் கருடன் மகா பலசாலிகளான கிருஷ்ணனையும்
பலராமரையும் இந்திரனையும் தூக்கிக்கொண்டு தம் வன்மை
யுள்ள சிறகுகளை விரித்து மலைச்சிகரங்களை இடித்தும் மரங்களைப்
பெயர்த்தும் எல்லாத் திசைகளிலும் பேரொலியை உண்டாக்கி
னர். வீரனே! பகைவரை வெல்லுகிறவராகிய கருடன் வைச்
வாநர மார்க்கமென்று சொல்லப்பட்ட நக்ஷத்திரவீதியிற் சென்று
பெரிய மேகங்களை இழுத்தார். தம் ஒளியினால் நவக்கிரகங்கள்,
இருபத்தேழு நக்ஷத்திரக் கூட்டங்கள், மற்ற தனித்த நக்ஷத்

திரங்கள், ஸப்தரிஷிகள், அசுவினி தேவர்கள் இவர்களின் ஒளிகளை யெல்லாம் மறைத்து மிக்க புண்ணிய ஸ்தானமாகிய தேவலோகத்தைச் சேர்ந்தார். அந்தப் பிரபுவான ஜனார்த்தனர் பலராமரோடு இந்திரனுடைய மாளிகையைச் சேர்ந்தவுடன் கருடனை விட்டு இறங்கி அதிதி தேவியின் பாதங்களை வந்தனஞ்செய்து எல்லாத் தேவர்களாலும் பிரமமா தக்ஷர் முதலான சிருஷ்டிகர்த்தர்களாலும் பூஜிக்கப் பெற்றவராக அதிதி தேவிக்குத் திவ்ய குண்டலங்களையும் சிறந்த ரத்தினங்களையும் கொடுத்தார்.

அதிதி தேவியும் அவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு மனத்துயரம் நீங்கினவளாகி இந்திரனுக்கு இளைய சகோதரரான கண்ணபிரானையும் பலராமரையும கொண்டாடினாள். தேவேந்திரனுடைய மனைவியான இந்திராணி, கிருஷ்ணன் மனைவியான சத்தியபாமையைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு அதிதியினிடம் காண்பித்தாள. துயரம் தீர்ந்த அந்தத் தேவமாதாவான அதிதி தேவி, கிருஷ்ணனுக்குப பிரியம் செய்யக் கருதி அந்த சத்தியபாமையைப் பார்த்து, ‘அழகிய முகமுள்ள பெண்ணரசியே! கிருஷ்ணன் பூமியின்மீதிருக்கும் வரையில் உனக்கு மூப்பு வராமல் உடம்பில் எல்லாவகையான நல்ல மணங்களும பொருந்தியிருப்பாய்’ என்று வரமளித்தாள். அழகிய இடையுள்ள சத்தியபாமை இந்திராணிக்கு விடைகொடுத்து அவளிடத்தில் தானும் விடைபெற்றுக் கிருஷ்ணனுடைய கிருகத்துக்குச் சென்றாள். சத்துருக்களை யடக்குகிறவரான ஸ்ரீ கிருஷ்ணன தேவர்களால் பூஜிக்கப்பெற்று மகரிஷிகளின் கூட்டங்களினால் அனுசரிக்கப்பட்டவராகத் தேவலோகத்திலிருந்து துவாரகைக்குச் சென்றார். தேவர்களுக்கெல்லாம் சிரேஷ்டரும சிறந்த கைகளையுடையவருமாகிய கண்ணபிரான் தூரமான மார்க்கத்தை விரைவாகத் தாண்டிக் கோட்டையின் முனவாயிலை அடைந்தார்.

---

## எண்பத்தேழாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

**(துவாரகா நகரத்தையும் கிருஷ்ணனுடைய அந்தப்புர ஸ்திரீகளின் கிருகங்களையும் வர்ணித்தது)**

பிரபுவும் நாராயணனுமான கிருஷ்ணன் அந்தத் துவாரகாபுரியைக் கண்டு களிப்புற்று எல்லாப் பொருள்களோடும் நகரப் பிரவேசஞ் செய்ய ஆரம்பித்தார். துவாரகாபுரியின் நாற்புறங்

களிலும் பலவகை மலர்களும் கனிகளுமுள்ளவையும் அநேக ஜனங்களுள்ளவையுமான அழகிய அனேகந் தோட்டங்களைக் கண்டார். சூரியனைபபோலவும். சந்திரனைப்போலவும் பிரகாசிக்கின்றவையும் மேருமலையின சிகரஙகள் போன்றவையுமான மாளிகைகள் நிரம்பி அழகாயிருப்பதும், தாமரைகளின் வரிசைகள் நிரம்பினவையும் ஹம்ஸஙகளால் அடையப்பட்ட தண்ணீரோடு கூடியவையும கங்கை நதிக்கும ஸிந்து நதிக்கும் ஒப்பானவையுமான அகழிகளினல் சோபிப்பதும, சூரியனைப்போலப் பிரகாசிப்பதும் ஆகாயததின்மேல் எட்டியிருபபதுமான வெண்மதிலினல் மேகங்கள் சூழ்நத ஆகாயம்போல் விளங்குவதுமாக விசுவகர்மாவினல் செய்யபபட்ட அழகிய துவாரகா நகரியைக் கண்டார். நந்தவனத்திற்கும் மிச்ரகம எனனும தேவோத்தியான வனத்திற்கும் சமானமான வனங்களோடு, அதிகமாகச் சஙகீத கோஷமும் சிறந்த பொன்மாளிகைகளும் நிரமபி, ஜனங்களுககுச் சந்தோஷகரமாக அந்தச் சிறந்த நகரம் விசுவகர்மாவினல் சுயமாகவே உண்டாக்கபபட்டது. எல்லா நகரங்களுக்கும் மேலான அந்த நகரத்தில், கொடிகள் தூககிக கட்டியிருப்பதனல் பறப்பவை போன்றவையும பொன்மயமா யிருப்பதனல் மேரு மலையின் சிகரஙகள்போலப் பிரகாசிபபவையுமான புகழ்பெற்ற யாதவர்களின் மாளிகைகளைக் கண்டு, மகிமைபெற்ற இந்திரன் மகிழ்ந்தான். வெள்ளை பூசி வெளுத்த சிகரங்களோடு கூடியவையும, பொன்னல் அலஙகரிக்கபபட்டவையும், மேருமலையின் கொடுமுடிகள்போலப் பெரிய மேல்மாளிகைகளோடு கூடியவையும, எல்லா ரத்தினங்களுமுள்ளவையும, [1] ஹர்மியம், [2] அர்த்தசந்திரம, [3] நிர்யோகம், [4] பஞ்சரம எனனும் கட்டடங்களோடு கூடியவையும், யந்திரசாலைகள் நிரமபினவையும, ரத்னமும் பொனனும் சேர்ந்த தளவரிசைகளும் சுண்ணமபுக குழம்பு பூசின தரைகளுமிருப்பதனல் பல நிறக் கற்களோடுகூடிய மலைகளபோலிருப்பவையும, பொன்மயமான வாயிற்படிகளும் வைடூரியக் கல்லாலாகிய தாழ்களுமுடையவையும, எல்லாக் காலஙகளிலும் சுகமான காற்றுளளவையும், மிக்க விலைபெற்ற சாமானகளுளளவையும, அழகிய தாழ்வரைகளாலும் கொடுமுடிகளாலும் சோபிக்கின்ற குன்றுகளுக்கொப்பானவையும், ஐந்து நிறங்களுள்ள புஷ்ப வர்ஷங்கள நிரம்பினவையுமான கிருகஙகளினுலும் மேகமுழக்கம்போன்ற ஜனகோஷங்களினுலும் அந்நகரமானது

1 விசாலமான மேலமாடி. 2 அர்த்தசந்திரன் வடிவாயிருப்பது.

3 கொடுங்கை, அதாவது மேல் வளைவான கட்டடம்.

4 கூடுபோலக் கம்பிகளால் செய்யப்பட்ட கட்டடம்.

போகவதி என்னும் நாகலோக நகரம்போல இருந்தது. கிருஷ்ணனுடைய வெண்கொடியே ஐராவதமும், யாதவர்களின் ஆயுதங்களே வானவிற்களும், வீரர்களான யாதவர்களே மயில்களும், அனேகமாயிரம் ஸ்திரீகளே மின்னல்களும், கிருஷ்ணனும் இந்திரனுமே மேக தேவதைகளுமாகவுடைய வீடுகளென்னும் மேகங்களினால் அலங்கரிக்கப்பட்ட துவாரகா நகரானது மேகங்களால் மூடப்பட்ட ஆகாயம்போல மிக்க அழகாயிருந்தது. அவர்கள், நான்கு யோஜனை நீளமும் அவ்வளவே அகலமும் சிறந்த தனங்கள் நிரம்பினதும் உயர்ந்த மேல்மாளிகைகளோடு கூடியதும் சிறிய செய்குன்றுகளோடுகூடியதுமாக விசுவகர்மாவினால் செய்யப்பட்ட கிருஷ்ண பகவானுடைய மாளிகையைக் கண்டனர். சுற்றிலும் ஒரு யோஜனை விஸ்தாரம் இடமுள்ள அந்தக் கிருஷ்ணனது மாளிகையைச் சிறந்த மகிமையுள்ள விசுவகர்மாவானவன் இந்திரனுடைய கட்டளையினால் செய்தான். மேருமலையின் சிகரம்போல் உயரமும பொன்மயமுமான ருக்மிணியினுடைய சிறந்த கிருகமும் மிகச் சிறந்த மகிமையுள்ள விசுவகர்மாவினாலேயே செய்யப்பட்டது. எப்போதும் வெண்ணிறமான கிருகத்திலேயே வசிப்பவளான ஸத்தியபாமையின் கிருகமும், பலநிறமான ரத்தினங்களிழைத்த படிகளுள்ளதும் '[1] சீதவான' என்று பெயருள்ளதுமாக மேகம் முதலிய மறைவு நீங்கிய சூரியனைப்போலப் பிரகாசிக்கும பதினாறு பெரிய கொடிகள் கட்டி அலங்கரித்து முதன்மையான இடத்தில் தனித்துத் தெரியும் படி கட்டப்பட்டது. அதே இடத்தில் பலநிறமான ரத்தினங்களின் ஒளிகள் எங்கும வியாபிப்பதனால் மூன்று லோகங்களையும் பிரகாசப்படுத்துவதும் அலங்காரஞ் செய்யப்பட்டதும எல்லா மாளிகைகளிலும் முதன்மையுமான ஜாம்பவதியின் கிருகமிருந்தது. அவ்விரண்டு கிருகங்களுக்குமிடையில் (= ஸத்தியபாமையின் வீட்டிற்கும் ஜாமபவதியின் வீட்டிற்குமிடையில்) கைலாச சிகரமபோன்ற வெண்ணிறமான பிரகாசமுடையதும் ஜ்வலிக்கின்ற அக்கினியைப்போல விளங்குகிற பொனமயமான சிகரங்களையுடையதும் மேருவென்று பெயர்பெற்றதுமான ஒரு கிருகம கடலுக்கு ஒப்பாக விசுவகர்மாவினால் செய்யப்பெற்றிருந்தது. அதில் காந்தார தேசத்தரசன மகளும் குலத்திலுயர்ந்தவளுமான ஸுகேசியென்று பெயர்பெற்ற மனைவி கிருஷ்ணனால் வைக்கப்பட்டிருந்தாள். சிறந்த கைகளையுடைய தர்மராஜாவே! தாமரைமலர் நிறமுள்ளதும் அதிகப் பிரகாசமுள்ளதும் மிக்க

1 குளிர்ச்சியுள்ளது.

உயரமுமான பத்மகூடமென்று பெயர்பெற்ற கிருகமானது ஸுப்ரபை யென்னும் கிருஷ்ணன் மனைவியினுடையது. கௌரவ சிரேஷ்டனே! சூரியப்பிரபம் என்று பிரசித்தமாகச் சொல்லப் படும் சிறந்த மாளிகையானது சார்ங்கபாணியினால் லக்ஷ்மணை யென்னும் மனைவிக்குக் கொடுக்கப்பட்டது. பாரதனே! உயர்ந்த வைடூரியக்கற்களின் ஒளியும் பச்சைக்கற்களின் ஒளியும் நிரம்பினதும் வெண்மையான பலகணிக் கம்பிகள் வைக்கப்பட்டதும், 'ஹரி' என்று எல்லாராலும் சொல்லப்பட்டதும் தேவர்களா லும் ரிஷிகளாலும் பூஜிக்கப்பட்டதும் எல்லா வீடுகளுக்கும் அலங்காரமானதுமாகிய மாளிகை சுமித்ரவிஜயை யென்னும் கிருஷ்ணன் மனைவி இருக்குமிடம். அவள் அங்கே கிருஷ்ணனால் வைக்கப்பட்டாள். எல்லா மாளிகைகளிலும் முதன்மையானதும் 'கேதுமான்' என்று பெயர்பெற்றதுமான கிருஷ்ணன் மனைவி யின் கிருகம் எல்லாச் சிற்பிகளும் சேர்ந்து கட்டியது. 'விரஜம்' என்று பெயர்பெற்றதும், 'ரஜஸ்' என்று சொல்லப்பட்ட அழுக் கில்லாமையால் அப்பெயருக்கு ஒத்ததும், மகாத்மாவான கிருஷ் ணனை யாவரும் வந்து பார்க்குமிடமும், அங்குள்ள எல்லா அரண்மனைகளிலும் சிறந்ததும், ஒரு யோஜனை விஸ்தாரமான சுற்றுப் பிரதேசமுள்ளதும், எல்லா ரத்தினங்களும் நிரம்பினது மான அந்தக் கிருகத்தைப் பிரபுவுக்காக விசுவகர்மா தானே செய்தான். அவர்களுடைய கிருகங்களெல்லாம் பொன்மயமான கொடிமரங்களும் கொடிகளும் கட்டினவையாகச் செய்யப்பட்டிருந் தன. கண்ணனுடைய கிருகத்துக்குக் கொடிகளே வழிகாட்டுகின் றவை. அங்குள்ள எல்லாருடைய கிருகங்களிலும் மணிகளின் கோவைகள் கட்டப்பட்டிருந்தன. இருபது பனை யுயரமுள்ளதும் அரையோஜனை விஸ்தாரமுள்ளதும் கின்னரர்களின் ஸங்கீதகோஷ முள்ளதும் மூன்று லோகங்களிலும் பெயர்பெற்றதும் 'இந்திர த்யும்னம்' என்னும் தடாகமுள்ளதுமான ஹம்ஸகூட சிகரத்தை யும் சூரியனுடைய மார்க்கத்தையும் எட்டினதும் எல்லா ஜோதிக் கொடிகளும் பிரகாசிப்பதனால் ஒளியுள்ளதும் தேவர்களிருக்கு மிடமும் மூன்று லோகங்களிலும் பெயர்பெற்றதுமாகிய மேரு மலைச் சிகரத்தையும், எல்லா ஜனங்களும் பார்த்திருக்கையில், அளவற்ற மகிமையுள்ள யாதவ சிங்கமான கிருஷ்ணன் பெயர்த் துப் பிரயத்தனத்துடன் தமது இருப்பிடம் கொண்டுவந்து, வைஜயந்த மென்னும் இந்திரன் கிருகத்தைப் போன்ற பெரிய மாளிகையை முன்னமே செய்துகொண்டார். பகைவரைத் துன் பப் படுத்துகிறவரான கிருஷ்ணனால் இந்திரன் வீட்டுத் தோட் டத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பாரிஜாத மரமும் அங்கேயே

நாட்டப்பட்டிருந்தது. அனேக நூறு முழ அளவுள்ள பொன் பூசின மேல்வீடுகளினால் அந்தக் கிருகம் சூழப்பட்டது. அந்த இடத்திலேதான் கிருஷ்ணனால் சிறந்த மரங்களும் வைக்கப்பட்டன. தாமரைமலர்களும் செங்கழுநீர்ப் புஷ்பங்களும் செவ்வல்லிப் பூக்களும் நிரம்பின ஜலமுள்ளவையும் ரத்தினங்களும் முத்துக்களுமே பெருமணல்களாகவுடையவையுமான ஓடைகளும், தடாகங்களும் அங்கேயே இருக்கின்றன. அவற்றின் அழகான கரைகளை அந்தச் சிறந்த மரங்கள் சிறப்பிக்கின்றன. ஆச்சா, பனை, அசுவகர்ணம், அனேகம் கிளைகளோடுகூடிய ஆல், [1]பல்லாதகம், விளா, [2]இந்திரவிருக்ஷம், சம்பகம், கருங்காலி, மிருதக முதலிய மரங்கள் சுற்றிலும வளர்க்கப்பட்டிருக்கின்றன. இமயமலையிலும் நந்தன வனத்திலுமுள்ள மரங்களனைத்தும் யாதவ சிங்கமான கண்ணனால் கொண்டுவந்து அங்கே நாட்டப்பெற்றிருக்கின்றன. அந்தக் காடுகளிலுள்ள மரங்களில் எல்லாக் காலங்களிலும் ரத்னங்களைப் போலப் பொன்னிறமும் சிவப்பு நிறமும் வெண்மை நிறமுமான மலர்களும் கனிகளும நிரம்பியிருந்தன. ஆயிரம் இதழ்களுள்ள தாமரைகளும் அனேக மந்தார மரங்களும் அசோகம், கர்ணிகாரம், திலகம், நாகமல்லிகை, குரவகம், நாகபுஷபம், சண்பகம், திருணபுல்லிகை, [3]ஸப்தபர்ணம், கபந்தம், நீபம், குரகம், தாழை, நாககேஸரம், சிறுதாழை, தலதாடகம், பனை, பிரலம்பம், மகிழ், பிண்டிகை, [4]பீஜபூரகம், துருஞ்சி, ஆமலகம், த்ருதாமலகம், [5]கர்ச்சூரம் சிறந்த நாவல், மா, பலா, திலதிந்துகம், எலுமிச்சை, அமிருதகம், க்ஷீரிகை, கர்ணிகை, தென்னை, புன்கு, உத்குரோசகம், வாழை, ஜாதமல்லி, பாதிரி முதலிய இவற்றின் வனங்களும், ஆம்பலும் செவ்வல்லியும் கருநெய்தலும் நிரம்பின வாவிகளும் கிணறுகளும் அனேகம் இருந்தன. பூத்த அசோகங்களும் விளாமரங்களும் செம்பருத்திகளும் பிரியாள மரங்களும் அசோகங்களும் இலந்தை மரங்களும் அவற்றின் கரைகளிலிருந்தன. பிரியங்கு, இலந்தை, யவம், தினிசம், சந்தனம், சசியென்னும் மரம், சிலேஷ்மாதகம், பலாசம், தவம், அரசு, அத்தி, வில்வம், வேம்பு, இந்திரவிருக்ஷம், மருதம், சிரிபில்வம, பௌமம், கஞ்சா, பல்லாதகம், அசுவவிருக்ஷம், ஸர்ஜம், வெற்றிலைக்கொடி, லவங்கம், பாக்குமரம், பலவகை மூங்கில்கள் இவை நாற்புறமும் வளர்க்கப்பட்டிருந்தன. நந்தன வனத்திலும் சைத்ரரதமென்னும் குபேரன் தோட்டத்திலுமுள்ள மரங்களனைத்தும் யதுநாதரால் அவ்வனத்தில் நாலுபக்கங்களி

1 'சே' என்னும் மரம். 2 தேவதாரு. 3 ஏழிலைம்பாலை. 4 கொய்யா; மாதுளையுமாம். 5 பேரீந்து.

லும் வளர்க்கப்பட்டிருந்தன. அழகான அந்தச் சிறந்த வீட்டில் பலவகை உயர்ந்த ரத்னங்களே பொன்னிறமும் சிவப்பு நிறமும் இந்திரநீலக்கல் நிறமுமான மணற்குன்றுகளாயமைந்த மகாநதிகள் இருந்தன. களித்த மயில்களும் குயில்களும் சப்திக்கும் செய்குன்றுகளெல்லாம் மிகச் சிறப்புற்றிருந்தன. அங்கே யானைக் கூட்டங்களும் பசுக்களும் எருமைகளு மிருந்தன. பன்றிகளுக்கும் மான்களுக்கும் பறவைகளுக்கும் அங்கே இடங்கள் செய்யப்பட்டிருந்தன. நானூறு முழ உயரமுள்ளதும் அமிர்தம்போன்ற நிறமுளளதுமாகிய ஒரு மலை அந்த வீட்டிற்குப் பிராகாரமாக விசுவகர்மாவினல் செய்யப்பட்டிருந்தது. அங்குள்ள மற்ற சிறந்த குன்றுகளும் நதிகளும் தடாகங்களும் காடுகளும் தோட்டங்களும் அந்தப பிராகாரத்தினல் சூழப்பெற்றிருந்தன.

---

ஐம்பத்தெட்டாவது அத்தியாயம்

## அர்க்கரஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (இந்திரன் கிருஷ்ணனிடம் விடைபெற்றுக்கொண்டு சுவர்க்கலோகம் சென்றது)

கிருஷ்ணனும் பலராமரும் பெருங்கீர்த்திபெற்ற இந்திரனுமாகிய இந்த மூன்று புருஷசிரேஷ்டர்களும் இவ்வாறு துவாரகா நகரத்தைக் கண்டனர். பிறகு, கண்ணபிரான் சந்தோஷத்துடன் கருடன் தலைமேல் நின்றுகொண்டு பகைவர்களுக்கு மயிர்சிலிர்க்கச் செய்வதாகிய தமது வெண்சங்கை ஊதினர். அந்தச் சங்கின் முழக்கத்தினல் கடல் மிகக் கலங்கியது. ஆகாயமெல்லாம் சப்தித்தது. அப்போது அஃது ஆர்சரியமாயிருந்தது. பாஞ்சஜன்யத்தின் சப்தத்தைக் கேட்டவுடன் மதுஸூதனரையும் கண்டு குகுரர்களும் அந்தகர்களும் மகிழ்ந்து வந்தனர். ராஜாவாகிய உக்ரசேனன் வசுதேவரை முன்னிட்டுக்கொண்டு புல்லாங்குழல்களும் சங்கங்களும் முழங்க வசுதேவர் மாளிகைக்குச் சென்ருன். தேவகியும, ரோகிணியும், ஆகுகனுடைய அந்தப்புர ஸ்திரீகளுமாகிய அனைவரும் மகிழ்ந்து கண்ணபிரானை அழைப்பதற்குத் தம் தம் வீடுகளிற் பரபரப்போடு சஞ்சரித்தனர். 'பிராமணத்துவேஷிகளனைவரும் அழிக்கப்பட்டனர்; அந்தகர்களும் விருஷ்ணிகளும் வெற்றிபெற்றிருக்கின்றனர்' என்று சொல்லி ஸ்திரீகள் சேர்ந்து அக்ஷதைகள் போட்டபிறகு, கண்ணபிரான் கருடவாகனராகவே தமது அரண்மனைக்குச் சென்ருர். ஈசுவரரான மதுஸூதனர் உடனே அம் மணிபர்வதத்தைத் தக்கவிடத்தில் வைத்தார்.

தாமரைக்கண்ணராகிய மதுஸூதனர் அந்தத் தனங்களையும் ரத்தினங்களையும் சபையில் வைத்துத் தந்தையைத் தரிசிக்க ஆவலுற்றார். பாரதனே! அப்போது மிக்க புகழ்பெற்ற வாசுதேவர் பிராம்மணரான ஸாந்தீபினியின் பாதங்களை முறைப்படி முதலிற் பிடித்து வந்தனஞ்செய்தார். அகன்றும் சிவந்துமுள்ள கண்களையுடையவரும் பகைவர்களான வீரர்களைக் கொல்லுகிறவரும் பெரும்புகழ் பெற்றவரும் இந்திரனுக்கு இளையவருமான கண்ணபிரான், மனத்தில் ஆனந்தம் நிரம்பினவரும் கண்களில் ஆனந்தக்கண்ணீர் ததும்பிக்கொண்டிருப்பவரும் தந்தையுமான வசுதேவரைப் பிரியத்துடன் வந்தனஞ்செய்தார்; ஸாந்தீபினி வசுதேவர் இருவராலும் உச்சியில் மோக்கப்பெற்றார். யாதவ சிரேஷ்டரான கண்ணன் யாதவர்களை வயதின் கிரமப்படி சந்தித்து அவர்களெல்லாரையும் பெயரிட்டழைத்தார். பிறகு ஸ்ரீ கிருஷ்ண பகவான் எல்லா ரத்தினங்களும் நிரம்பின தனங்களெல்லாவற்றையும் அவர்களனைவர்க்கும் பகுத்துக்கொடுத்தார். கண்ணனுக்கு முக்கிய மந்திரிகளும் இந்திரனைப் போன்றவருமான அந்த யாதவப் புலிகளிருக்கும் அச்சபை, சிங்கங்கள் வசிக்கும் மலைக்குகைபோல விளங்கிற்று. பிறகு, ஆசனங்களில் உட்கார்ந்த முக்கியமான குகுரர்களையும் அந்தகர்களையும் ராஜாவான அந்த ஆகுகனையும் பார்த்து, தேவர்களதிபதியும் பரந்த கீர்த்தியுள்ளவனுமாகிய தேவேந்திரன் இனிசொல்லினால் அவர்கள் மகிழும்படி பேசலானான்.

'மகாத்மாவான கிருஷ்ண பகவான் மானிடலோகத்தில் வசுதேவபுத்திரராக எதற்காக ஜனித்தாரென்பதையும், அவர் என்ன செய்தாரென்பதையும் சுருக்கமாகச் சொல்வேன். பகைவரை அடக்குகிறவரான இந்தத் தாமரைக்கண்ணர் நூறாயிரம் அசுரர்களைக் கொன்று பாதாளலோகத்துக்குட் சென்றார். முந்தியவர்களான பிரகலாதன், பலி, சம்பரன் முதலியவர்களால் அடையப்படாத இந்தத் தனம் கிருஷ்ணனால் உங்களுக்கு இங்கே கொடுக்கப்பட்டது. சிறந்த ஞானமுள்ள கிருஷ்ண பகவான், வலை கட்டிக்கொண்டிருந்த முரனையும் பஞ்சஜனனையும் வென்றபிறகு, கற்கோட்டைகளைக் கடந்து நிசும்பனையும் அவன் சேனைகளையும் கொன்றார். சிறந்த சக்தியுள்ள ஹயக்ரீவனென்னும் வலிய அசுரனும் இவரால் கொல்லப்பட்டான். நரகாசுரனும் யுத்தத்தில் அடிக்கப்பட்டான். அதிதியின் குண்டலங்களும் திரும்பக் கொண்டுவரப்பட்டன. மறுபடியும், பாணாசுர வதம் நடக்கப் போகையில் ஆதித்யர்களும் வஸுக்களும் ஸாத்யர்களும் என்னை முன்னிட்டுக்கொண்டு மதுஸூதனரிடம் வரப்போகின்றனர்'

என்றான். இந்திரன் இவ்வாறு சொல்லிக் குகுரர் அந்தகர்களெல்லாரிடமும் விடைபெற்றுக்கொண்டு ராமகிருஷ்ணர்களையும் வசுதேவரையும் தழுவினான். பிரத்யும்னன் ஸாம்பன் முதலானவர்களையும் அனிருத்தன், ஸாரணன், பப்ரு, ஜல்லி ஆகிய இவர்களையும் கதன், பானு, சாருதேஷ்ணன், ஸாரணன், அக்ரூரர், ஸாத்யகி முதலானவர்களையும் கௌரவித்து விடைகேட்டுக்கொண்டு விருஷ்ணிகளுக்கும் குகுரர்களுக்கும் ராஜாவான ஆகுகனைத் தழுவிக்கொண்டான். போஜன், கிருதவர்மா முதலான அந்தக விருஷ்ணிகளிடம் சொல்லிக்கொண்டும் கிருஷ்ணனிடம் தேவர்களுடன் விடைபெற்றுக்கொண்டும் பிரபுவும் இந்திராணியின் கணவனுமாகிய இந்திரன் எல்லாரும் பார்த்திருக்கையில் வெள்ளைமலை போன்ற ஐராவதமென்னும் யானையின்மேல் ஏறினான். அடிக்கடி வாயிலிருந்துண்டான பெரிய கோஷங்களினால் உலகங்களை நிரப்புவதும் பொன்மயமான பெருங்கச்சை கட்டப்பட்டதும் பொன்னையணிந்த தந்தங்களுடையதும் அழகிய சேணம் விரிக்கப்பட்டதும் எல்லா ரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும் மழை பொழியும் மேகம்போல மதஜலத்தை எக்காலமும் வர்ஷிப்பதும் பொன்மாலை யணிந்ததும் திக்கஜங்களில் சிறந்ததுமான ஐராவதத்தின்மேலேறின இந்திரன், மந்தரமலைசிகரத்தில் பிரகாசிக்கும் சூரியன்போல விளங்கினான். அதன்பிறகு, தேவேந்திரன் வயிரக்கல்லினால் செய்யப்பட்டதும் பயங்கரமுமான சிறந்த அங்குசத்தைக் கையிற் பிடித்து மிக்க பலசாலியான அக்னி பகவானுடன் சென்றான். குபேரன், வருணன், நவக்கிரகங்கள், ஸப்த் மருத்துக்கள் முதலிய தேவகூட்டங்கள் பெண்யானைகளிலும் ஆண்யானைகளிலும் விமானங்களிலும் ஏறி அன்புடன் இந்திரன்பின் சென்றனர். அந்த இந்திரன் வாயுமார்க்கத்தைத் தாண்டி வைசுவாநர மார்க்கம் என்று சொல்லப்பட்ட ஆகாயத்தின் மத்தியரேகைக்குச் சென்று சூரியமண்டலத்தைச் சார்ந்து அங்கேயே அந்தர்த்தானமானான்.

---

### ஐம்பத்தொன்பதாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (தாய்மார்களும் பத்னிகளும் கிருஷ்ணனைக் கண்டது)

பிறகு, யாதவர்க ளனைவருடைய ஸ்திரீகளும் ஆகுகன் பத்னிகளும் உலகத்தில் புகழ்பெற்ற நந்தகோப பத்னியாகிய

யசோதையும், மிக்க பாக்கியவதியான ரேவதியும், பதிவிரதையான ருக்மணி, ஸத்யபாமை, ஜாம்பவதி, காந்தாரி, சிமசுமை, விசோகை, லக்ஷணை, ஸுமித்ரை, கேதுமை முதலான கிருஷ்ணனுடைய அந்தப்புர ஸ்திரீகளும் மகாத்மாவான ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஐசுவரியத்தைக் காண விரும்பி அன்புடன மஙகளதிரவியங்களை எடுத்துக்கொண்டு சபைக்குச் சென்றனர். அவர்கள் கண்ணனைப் பார்க்க ஆவலுடன் சபைக்குச் சென்றனர். தேவகியும ரோகிணியும் எல்லா அரசிகளிலும் முன்வைக்கப்பெற்றனர். அவர்கள், பலராமருடன் வீற்றிருக்கும் கிருஷ்ண பகவானைக் கண்டனர். அவ்விரண்டு தேவர்களாகிய ராமகிருஷ்ணர்கள் முதலில் ரோகிணிக்கு அபிவாதனஞ்செய்து, பிறகு, தேவகிக்கு அபிவாதனஞ்செய்தனர். அந்தத் தேவகியானவள் ரிஷபப் பார்வையுள்ள அவ்விரண்டு புத்திரர்களுடன் சேர்ந்து சூரியனோடும் வருணனோடுங்கூடிய தேவமாதாவான அதிதியைபபோல மிக்க சோபையுளளவளாய் விளங்கினாள். பாரதனே! தேக காந்தியினால் மிக ஜ்வலிப்பவள்போல யசோதையின் பெண் உடனே அங்கு வந்தாள். அவள் ஏகாநங்கை யெனனும பெயருள்ளவள்; நினைத்த ரூபமெடுபபவள்; எப்போதும் கனனிகையா யிருப்பவள். அவளுக்காகத்தான் புருஷோத்தமரான கண்ணபிரான் கம்சனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் கொன்றார். பகவானாகிய பலராமர் அந்தப் பெண்ணரசியைத் தழுவி உச்சிமோந்து இடக்கையில் பிடித்துக்கொண்டார். அவர் அங்கே அவளைக் கண்டவுடன் அன்புள்ள பாங்கியைப்போல வலக்கையிற் பிடித்தார். சபையின் நடுவில், பொற்றாமரைபோன்ற கைகளையுடையவளும் தாமரையாளைப்போன்றவளும் பத்மநாபருடைய அவதாரமாகிய ராமகிருஷ்ணர்களுடைய சகோதரியுமான அந்தப் பெண்ணை யாதவர் சபை நடுவிற் கண்டனர். பிறகு, அவர்கள் மகிழ்ந்து ராமகிருஷ்ணர்களின்மேல் அக்ஷதையையும் நெற்பொறிகளையும் புஷ்பங்களையும் நெய்யையும் பொழிந்தனர். யாதவர்கள், குழந்தைகள் கிழவர்கள் குலத்தோர் சுற்றத்தவருடன் கிருஷ்ணனருகில் உட்கார்ந்தனர். சிறந்த கைகளையுடையவரும் நகரத்து ஜனங்களுக்குச் சந்தோஷத்தைப் பெருகச்செய்பவரும் புருஷசிரேஷ்டருமான கண்ணபிரான் எல்லாராலும் பூஜிக்கபபெற்றுத் தமது கிருகத்தில் பிரவேசித்தார். எபபோதும் சுகமுள்ள பகவான் ருக்மிணிதேவியுடன் சேர்ந்து சுகமாகவும் உற்சாகமாகவுமிருந்தார். பாரதனே! பிறகு, ஸததியபாமை, ஜாமபவதி முதலான எல்லா ஸ்திரீகளின் வீடுகள்தோறும் யாதவசிரேஷ்டரான கண்ணபிரான் சந்தோஷமாயிருந்தார். ஸ்ரீ வாசுதேவர் திரும்ப

வும் ருக்மிணியின் கிருகத்துக்குச் சென்றார். அன்பனே! சிறந்த கைகளையுடையவனே! சார்ங்கபாணியான கண்ணனுடைய ஜயம் இவ்வகையானது. இதற்காகத்தான் இந்த மகாத்மா மானிடரில் ஜனித்தாரென்று சொல்லுகின்றனர்.

---

## அறுபதாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

### (கிருஷ்ணன் பாணாசுரனை ஜயித்தது)

மகாராஜாவே! பெரும்புகழ்பெற்ற கிருஷ்ணன், பிறகு தமது அந்தப்புர ஸ்திரீகளிடம இரவும் பகலும் சுகமடைந்து துவாரகை நகரில் மகிழ்ந்திருந்தார். பரத சிரேஷ்டனே! அக் காலத்தில் தமது பேரனான அனிருத்தனுக்காக இந்திராதி தேவர்களைவராலும் செய்யமுடியாத தேவகாரியத்தைச் செய்தார். பரத சிரேஷ்டனே! பலிச் சக்கரவர்த்தியின் மூத்த குமாரனும் வன்மையும் சூரத்தனமுமுள்ளவனும் ஆயிரங்கைகளையுடையவனுமாகிய பாணனென்னனும் அசுர ராஜ னிருந்தான். வேந்தனே! அந்தப் பாணன் உறுதியான மனத்துடன் அநேக வருஷ காலம் கடுந் தவஞ்செய்து சிவபெருமானை ஆராதித்தான். அவனுக்கு மகாத்மாவான சங்கர பகவானால் அநேக வரங்கள் கொடுக்கப்பட்டன. அந்தப் பாணன் இபபுவியில் அசுரர்களுக்குக் கிடைக்க அரியனவாகிய அவ்வரங்களைப் பெற்று ஒப்பற்ற பலசாலியாகச் சோணிதபுர மென்னும் நகரத்தில் ராஜ்யபாரஞ்செய்தான். பாண்டவனே! அந்தப பாணனால் தேவர்களனைவரும் நடுங்கச் செய்யபபட்டனர். பாரதனே! பாணன், இந்திரன முதலான தேவர்களை வென்று அநேக வருஷ காலம் குபேரனைப்போலப் பெரிய ராஜ்யத்தை ஆண்டான். அரசனே! அப்போது பாணனுக்கு உஷையென்று ஒரு புதல்வி இருந்தாள். குந்தி புத்திரனே! சிறந்த சக்தியுள்ளவனும பிரத்யும்னன் புதல்வனுமான அனிருத்த னென்பவன் ஏதோ ஓர் உபாயத்தினால் அந்த உஷையை யடைந்து ரகசியமாகச் சுகித்துக்கொண்டிருந்தான். யுதிஷ்டிரா! அபபோது சிறந்த சக்தியுள்ள பாணன், பிரத்யும்னன மைந்தன தன் மகளுடன் அங்கே மறைந்து வசிப்பதை அறிந்து, அவனைத் தன் வலிமையினால் பிடித்துச் சிறைச்சாலையிலிருக்கச் செய்தான். அரசனே! சுகத்துக்குரிய அந்த ராஜகுமாரனான அனிருத்தன் அப்போது பாணனால் பீடிக்கப்பட்டுத் துயரமடைந்து மதிகலங்கினான். குந்தி புத்திரனே! அதே காலத்தில் நாரத மகாமுனிவர் துவாரகையைச் சார்ந்து கண்ண

பிராணைக் கண்டு, 'கிருஷ்ணு! கிருஷ்ணு! சிறந்த கைகளையுடையவரே! யாதவர்களுக்குப் புகழைப் பெருகச்செய்கிறவரே! உமது பேரனை அனிருத்தன் அளவிறந்த சகதியுள்ள பாணுசுரனுல் பீடிக்கப்பட்டு இப்போது துயரமடைந்து சிறைச்சாலையிலேயே கிடக்கிருன்' என்று சொன்னுர். இதைச் சொன்னவுடன், அந்தத் தேவரிஷி பாணனுடைய நகரத்துக்குச் சென்ருர்.

வேந்தனே! நாரதருடைய சொல்லைக் கேட்டவுடன் வாசுதேவர் பலராமரையும் சிறந்த சக்தியுள்ள பிரத்யும்னனையும் அழைத்துக்கொண்டு அவரிருவருடனுங் கருடன்மேலேறினுர். பரதசிரேஷ்டனே! அந்த மகாவீரர்கள் கோபத்துடன கருடன்மேலேறிப் பாணனை ஜயிப்பதற்காக உடனே அவனது நகருக்குச் சென்றனர். மகாராஜாவே! உடனே, அவர்கள் அங்கே போய் அந்தச் சோணிதபுரத்தைக் கண்டனர். மதிலினுல் சூழப்பட்டதும் பொன்மாளிகைகள் நிரம்பினதுமாகிய அந்நகரைக் கண்டு அவர்களனைவரும் சந்தோஷத்தையும் மிகுந்த ஆச்சரியத்தையும் அடைந்தனர். சிவன் சுப்பிரமணியக் கடவுள் பத்திரகாளி விநாயகர் என்னும் தேவர்கள் எப்போதும் பாணனுடைய நகருக்கு வாயில்காப்பவர்களா யிருந்தார்கள். யுதிஷ்டிரனே! மேலான சக்தியுள்ளவரும் சங்க சக்கரம் கதை கத்திகளைத் தரிப்பவருமாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் மிக்க கோபமுற்றுத் தமது வன்மையினுல் வாயில்காப்பவரை ஜயித்துச் சங்கர பகவானுல் காக்கப்பட்ட வடக்கு வாயிலை யடைந்தார். அவ்விடத்தில் சிறந்த மகிமையுள்ளவரும் சூலபாணியுமான மகேசுவரர், வாய் திறந்த நமனைப்போல வந்திருக்கும் கிருஷ்ணனைக் கண்டு பாணனுக்கு நன்மைசெய்யக் கருதிப பினுகம் என்னும் வில்லையும் அம்பையும் எடுத்து அந்த வாயிலில் நின்ருர். அப்போது வாசுதேவர் மகேசுவரர் இருவரும் யுத்தஞ்செய்தனர். அந்த யுத்தம் சிந்திக்க முடியாததும் மயிர்பொடிக்கச் செய்யும்படி பயங்கரமுமா யிருந்தது. அவ்விருவரும் ஒருவரையொருவர் ஜயிக்கக் கருதி ஒருவரையொருவர் அம்புகளினுல் சிதைத்தனர். அப்போது அவ்விரண்டு தேவர்களும் கோபமுற்றுத் திவ்யாஸ்திரங்களைப் பொழிந்தனர். ஜனுர்த்தனராகிய ஸ்ரீ கிருஷ்ணன் சங்கர பகவானுடன் சற்றுநேரம் போர்செய்து உடனே அவரை ஜயித்துப் பிறகு மற்ற வாயில்காப்பவரையும் யுத்தத்தில் வென்று அந்தச் சிறந்த நகருக்குள் புகுந்தார். பாண்டவனே! புகுந்தவுடன், கிருஷ்ணன் அங்கே பாணனைச் சந்தித்து மிகக் கோபமுற்று அவனுடன் யுத்தஞ்செய்தார். பரதசிரேஷ்டனே! பாணனும் அந்த யுத்தத்தில் மிகக் கோபித்துக் கூர்மையான

ஆயுதங்களெல்லாவற்றையும் கண்ணன்மேல் பிரயோகித்தான். அவன் திரும்பவும் அதிகக் கோபத்துடன் போர்த்தலையில் நின்று தனது எல்லாக் கைகளாலும் கிருஷ்ணன்மேல் ஆயிரம் அஸ்திரங்களை விடுத்தான். பாரதனே! அப்போது ஐம்புலன்கட்கும் எட்டாதவராகிய கிருஷ்ணன் சற்றுநேரம் பாணனுடன் யுத்தஞ் செய்து பாணன் பிரயோகித்த அஸ்திரங்கள் எல்லாவற்றையும் துணித்துக் கோபத்துடன் எல்லா அஸ்திரங்களிலும் சிறந்ததும் தெய்வத்தன்மையுள்ளதுமாகிய தமது சக்கராயுதத்தை ஓங்கிப் பெருஞ்சக்தியுள்ள பாணனுடைய ஆயிரங்கைகளையும் அறுத்தார். மகாராஜாவே! கிருஷ்ணனால் கைகள் அறுக்கப்பட்டு மிகப் பீடிக்கப்பட்ட பாணன் உடனே கிளைகள்போன மரம்போல விழுந்தான். அந்தக் கண்ணபிரான் விரைவாகத் தம் பாணங்களினால் அந்தப் பாணனை வீழ்த்திப் பிரத்யும்னன் மைந்தனான அனிருத்தனைப் பாணனது சிறைச்சாலையிலிருந்து உடனே விடுவித்தார். கிருஷ்ணன் அனிருத்தனை அவன் மனைவியான உஷாதேவியுடன் விடுவித்துப் பாணனுடைய எண்ணிறந்த ரத்தினங்களனைத்தையும் கொணர்ந்தார். யது வம்சத்தை விளங்கச்செய்பவரான ஸ்ரீ கோவிந்தர் பாணன் வீட்டிலிருக்கும் பசுக்கூட்டங்களையும் மற்றுமுள்ள ஐசுவரியங்களெல்லாவற்றையும் தமது வன்மையினால் எடுத்துக்கொண்டார். மதுஸூதனர் ரத்தினங்களெல்லாவற்றையும் மற்றுமுள்ள எல்லாத் தனங்களையும் எடுத்துக் கருடன்மேல் ஏற்றினார். குந்தி புத்திரனான ராஜனே! சிறந்த மகிமையுள்ளவரும் பீதாம்பரம் தரித்தவரும் சிறந்த பலமுள்ளவரும் திவ்யாபரணங்களினால் விசித்திரமாக விளங்கும் அங்கங்களுள்ளவரும் சங்கசக்கரம் கதை கத்திகள் ஏந்தினவரும் வீரருமாகிய கிருஷ்ண பகவான் மகா பலசாலியான பலராமரையும் மகாவீரனும் சிறந்த ஒளியுள்ளவனும் பிரத்யும்னன் புத்திரனுமாகிய அனிருத்தனையும், உஷையென்னும் அழகுள்ள பெண்ணையும், அவள் வேலைக்காரர் வேலைக்காரிகளையும கருடன்மேலேற்றிய பிறகு, சூரியன் உதயமலையில் ஏறுவதுபோலச் சந்தோஷத்துடன் தாமும் கருடன்மேலேறினார்.

---

அறுபத்தோராவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

(கிருஷ்ணனுடைய வேறு பல ஜயங்களைச் சொல்லியது)

பாரத சிரேஷ்டனே! கிருஷ்ணன் துவாரபாலகர்களையும் நிசும்பனையும் நரகனென்னும் அசுரனையும் கொன்று, பிராக்ஜ்யோ

திஷபுரமென்னும் நகரின் வழியை க்ஷேமமாகச் செய்தார். (அனறியும் ருக்மிணி கல்யாணத்தில்) அரசர்கள், கிருஷ்ண னுடைய வில் ஒலியினாலும் பாஞ்சஜன்ய முழக்கத்தினாலும அச்ச முறுத்தப்பட்டனர். பரதசிரேஷ்டனே! மேகநிறமுள்ள தென் தேசத்துப் படைத்தலைவர் அநேகரால் சூழபபட்ட ருக்மியைக் கிருஷ்ணன் பயமுறுத்தினார். சக்கரத்தையும் கதையையும் தரித்தவராகிய இந்தக் கிருஷ்ணன் மேகமபோன்றதும் சூரிய னுக்கொப்பான ஒளியுள்ளதுமான ரதத்தில் போஜன் புத்திரி யான ருக்மிணியை மனைவியாகக் கொண்டுவந்தார். (அப்போது) கோபித்த [1] ஜாரூத்யனும் சிசுபாலனும் ஜயிக்கப்பட்டனர். தந்த வக்கிரனும் சததன்வா என்னும் அரசனும இவரால் யுத்தத்தில் கொல்லபபட்டனர். இந்திரத்யும்னனும காலயவனனும் கசே ருமானும் ஸௌபர்களின் அரசனாகிய ஸால்வனும வில்வித்தை யில் தேர்ந்தவராகிய இந்தக் கிருஷ்ணனால் கோபித்துக் கொல் லப்பட்டனர். இந்தப் புருஷோத்தமராகிய தாமரைக்கண்ணர் தமது சக்ராயுதத்தினால் ஆயிரம் மலைகளை விலக்கி த்யுமத் ஸேனனை அடித்தார். பரதசிரேஷ்டனே! மகேந்திரமலைச்சிகரத் தில் இமைநொடிப்பதற்குள் வெகு தூரம் சஞ்சரித்து நாற்புறமும் ஓடுகிறவர்களாகிய (மைந்த துவிதர்கள்) என்னும இரண்டு வானரர்களைப் பிடித்தார். துவாரகாபுரியில் அக்னிக்கும் சூரிய னுக்கும சமமான சக்தியுள்ள மகாபோஜனும் கொல்லப்பட்டான. அரசனே! அக்ஷப்ரம என்னும் பட்டணத்தில் கிருஷ்ணனைப் பரிகாசஞ்செய்பவர்களாகிய கோபதி தாலகேது எனனும் இரண்டு அரசர்களும் கிருஷ்ணனால் கொல்லப்பட்டனர். அவ் விருவரும் அவர்களின் தேசத்திலேயே கிருஷ்ணனால் சஙகரிக்கப் பட்டனர். அன்பனே! மகாத்மாவான கிருஷ்ணனால் காசிநகர் எரிக்கப்பட்டது. சேர்ந்து வந்த பாண்டியன, புண்ட்ர தேசத் தரசன், மத்ஸ்ய தேசத்தரசன், அங்க தேசத்தரசன், கலிஙக தேசத்தரசன் ஆகிய இவர்களனைவரையும் மாதவர் கொன்றார். யாதவசிரேஷ்டரான இந்தக் கிருஷ்ணன் ஒரு தேராளியாக நூறு க்ஷத்ரியர்களைக் கொன்று காந்தாரதேசத்துப் பெண்ணாகிய தம் மனைவியைக் கொண்டுவந்தார். பரத சிரேஷ்டனே! பிரபு வான மதுஸூதனர் அர்ஜுனனைக் குந்தியின் முனனிலையில் விளையாட்டுககாக ஜயித்தார். பரதசிரேஷ்டனான ராஜாவே! யுத் ததிறகாகச் சேர்ந்துவந்த அசுவத்தாமா, கிருபர், கர்ணன, பீம சேனன், துரியோதனன் இவர்களையும் ஜயித்தார். யுதிஷ்டிரா!

---

1 'ஜாரூத்யே' என்று பாடங்கொண்டு, 'யாகத்தில்' என்று பொருள் செய்வது பழைய உரை.

சக்கரத்தையும் கதையையும் தரித்தவராகிய இந்தக் கிருஷ்ணன் பப்ருவென்னும் யாதவனுடைய விருப்பத்தைச் செய்யக் கருதி வேணுதாரி என்னும அரசன் வரித்த பாரியையைப் பலாத்காரமாகக் கொண்டுவந்தார். குதிரைகள் தேர்கள் யானைகளுள்ளதும் செல்வம் நிரம்பினதுமான வேணுதாரியின் வசத்திலிருந்த பூமி யனைத்தையும் கிருஷ்ணன் ஜயித்தார். பாரதனே! தவத்தினால் சூரத்தனத்தையும் தேக வலிமையையும் ஜயிக்குந் திறமையையும் பெற்ற பாணாசுரனால் தேவசிரேஷ்டர்களனைவரும் சேனைகளுடன்கூடத் துரத்தப்பட்டனர். இந்திராதிதேவர்களும் வஜ்ராயுதத்தினாலும் இடியினாலும் கதைகளினாலும் பாணங்களினாலும் அநேகந்தரம் அடித்தும் பாணனுக்கு யுத்தத்தில் மரணமுண்டாகவில்லை. அப்படிப்பட்ட பாணன் மகாத்மாவான கிருஷ்ணனால் ஆயிரங் கைகளுந் துணிக்கப்பட்டு வெல்லப்பட்டான்; கொல்லப்படவில்லை. சிறந்த கைகளையுடைய இந்தக் கிருஷ்ணன் கம்சனையும் கொன்றார். பாரதனே! தவத்தினால் சூரத்தனத்தையும் வன்மையையும் பிறரை வெல்லுந் திறமையையும் அடைந்த கைடபாசுரனையும் [1] கணக்கிடமுடியாத அநேக அசுரர்களையும் கிருஷ்ணன் கொன்றார். பரத சிரேஷ்டனே! சிறந்த புகழ்பெற்ற கிருஷ்ணன், ஜம்புவையும் ஐராவதனையும் விரூபனையும் எதிரிகளை யழிப்பவனாகிய சம்பரனையும் கொன்றார். பரத சிரேஷ்டனே! இந்தத் தாமரைக்கண்ணர் போகவதி யென்னும் நாகநகருக்குச் சென்று வாசுகியை ஜயித்து ருக்மிணிதேவியின் மைந்தனான பிரதயும்னனை விடுவித்தார். இந்தக் கிருஷ்ணன் இளம்பிராயமாயிருக்கும்போதே பலராமரைத் துணையாகக் கொண்டு இவ்வகையான அநேக காரியங்களைச் செய்திருக்கிறார். இந்தப் பிரபுவான கிருஷ்ணன் இவ்வாறு அசுரர்களனைவருக்கும் பயத்தையும் தேவர்களனைவருக்கும் அபயத்தையும் கொடுத்தவரும் எல்லா உலகங்களுக்கும் ஈசுவரருமா யிருப்பவர். சிறந்த கைகளையுடைய கிருஷ்ணன் இவ்வாறாகவே துஷ்டர்களெல்லாரையும் தண்டித்துத் தேவர்களின் அளவற்ற காரியத்தை நிறைவேற்றினபின், திரும்பவும் தமது லோகமாகிய வைகுண்டத்தை அடைவார். எல்லா ஐசுவரியங்களும் நிரம்பினதும் புண்ணியக்ஷேத்திரமும் சூரியனைப்போலப் பிரகாசிப்பதுமான துவாரகா நகரத்தைத் தம் வசப்படுத்திக்கொண்டிருக்கும் பெருங்கீர்த்திபெற்ற கிருஷ்ணன், முடிவில் தம் நகரத்தைக் கடலில் மூழ்கச்செய்யப் போகிறார். அந்தத் துவாரகா நகரத்தில் வசிக்கும் அரசன் கிருஷ்ணனைத் தவிர மற்றொருவன் தேவர்களிலும் அசுரர்களிலும்

1 மூலத்தில் 'அதிலோமாநி' என்றிருக்கிறது.

மனிதர்களிலும் இருந்ததுமில்லை; இருக்கப்போவதுமில்லை. மகாரதர்களாக விளங்கும் விருஷ்ணிகள் அந்தகர்களனைவரும் இறந்தபின் மிக்க ஒளியுள்ள சுவர்க்கலோகத்தை அடையப்போகின்றனர். தம் கட்டளையினால் யாதவர்களுக்கு இவ்வகையான முடிவைச் செய்தபிறகு, ஸர்வவியாபியான நாராயணர், தம்முடைய மேலுலகத்தை அடைவது திண்ணம். அறிவிற்கு எட்டாதவரும் யாருக்கும் வசப்படாதவரும் விருப்பப்படி நடப்பவரும் எல்லாம் தம் வசத்திலிருப்பவருமாகிய பகவான், குழந்தை விளையாட்டுப் பொருள்களால் விளையாடுவதுபோலச் சிருஷ்டி முதலிய வியாபாரங்களைச் செய்துகொண்டு சந்தோஷமாக அவ்வுலகத்திலிருக்கிறார். பிரபுவான இந்தக் கிருஷ்ணன் கர்ப்பத்தில் பிரவேசித்தவருமன்று; ஒரு வயிற்றிலும் வசித்தவருமன்று; தமது திவ்ய சக்தியினால் எல்லாருக்கும் நன்மையைச் செய்கிறார். எவ்வாறு நீர்க்குமிழி நீரிலிருந்து எழுந்து நீரிலேயே லயிக்கிறதோ அவ்வாறே ஜங்கமங்களும் ஸ்தாவரங்களுமாகிய பொருள்கள் நாராயணரிடமிருந்து எழுந்து அவரிடத்திலேயே லயப்படுகின்றன. பாரதனே! சிறந்த கைகளையுடைய கேசவரைக் கண்டறிய யார்க்கும் முடியாது. உலகமெல்லாம் தாமாயிருப்பவரும், எல்லாவற்றிற்கும் மேற்பட்டவருமாகிய அவருக்குமேல் ஒன்றுமில்லை' என்றார்.

---

அறுபத்திரண்டாவது அத்தியாயம்

## அர்க்காஹரண பர்வம் (தொடர்ச்சி)

**(சகதேவன் அரசர்களை நிராகரித்து மரியாதைகளைச் செய்ததும், அவர்கள் யுத்தஸன்னாஹம் செய்ததும்)**

மகாபலசாலியான பீஷ்மர் இவ்வாறு சொல்லி ஓய்ந்தார். அந்தச் சபையில் சகதேவன் பயன்தரத்தக்க மறுமொழியைச் சொல்லலானான். 'அரசர்களே! கேசியைக் கொன்றவரும் அறிவுக்கெட்டாத பராக்கிரமமுள்ளவருமாகிய கேசவர் என்னால் பூஜிக்கப்பெறுவதை எந்த வீரர்கள் பொறுக்கவில்லையோ அவர்களின் தலையிலும் என்னால் இந்தக் கால் வைக்கப்பட்டது; நான் சொல்வதற்குச் சரியான மறுமொழி கூறட்டும். அப்படிக் கூறுகிறவனே என்னால் கொல்லப்படத்தக்கவனாவானென்பதில் சந்தேகமில்லை. அறிவுள்ள அரசர்கள் யாராவது இருந்தால் அவர்கள், ஆசாரியரும் தந்தையும் சிறப்புற்றவரும் பூஜைகளும் காணிக்கைகளுக்கும் உரியவருமான கிருஷ்ணனை நான் பூஜித்ததைப்பற்றி ஒப்புக்கொள்ளக்கடவர்' என்றான். அறிவிற் சிறந்தவர்களும் கௌரவப்பட்டவர்களும் பலமுள்ளவர்களும் யோக்கியர்

களுமான அரசர்களின் சபையில் அவ்வாறு சகதேவன் காலைக் காண்பித்தபோது யாரும் ஒன்றும் பேசவில்லை. அப்போது, சகதேவன் தலையில் பூமாரிபெய்தது. அசரீரி வாக்குகள், 'சரி, சரி' என்று கூறின. வரப்போவதையும் கடந்துபோனதையும் பேசுகிறவரும் எல்லாச் சந்தேகங்களையும் தீர்ப்பவரும் எல்லா உலகங்களுந் தெரிந்தவருமாகிய நாரதர், தமது கிருஷ்ணாஜினத்தை உதறிக்கொண்டு, 'தாமரையிதழ் போன்ற கண்களையுடைய கண்ணபிரானை எந்த மனிதர்கள் பூஜியார்களோ அவர்களை உயிரோடிறந்தவர்களென்று அறியவேண்டும்; அவர்களிடம் ஒருகாலும் சம்பாஷணைசெய்யலாகாது' என்று எல்லார் நடுவிலும் மிகத் தெளிவாகச் சொன்னார். பிராமணர்களுடையவும் க்ஷத்திரியர்களுடையவும் தராதரமறிந்த ராஜாவான சகதேவன் பூஜிக்கத் தக்கவர்களைப் பூஜித்து அந்தக் காரியத்தை நிறைவேற்றினான்.

அந்தக் கிருஷ்ணனைப் பூஜித்தபிறகு, சத்துருக்களை அழிப்பவனாகிய சிசுபாலன், கோபத்தினால் மிகச் சிவந்த கண்களுடன் அரசர்களைப் பார்த்து, 'நான் இப்போது சேனைத் தலைவனாக இருக்கிறேன். நாம் யாதவர்களும் பாண்டவர்களும் சேர்ந்துவந்தாலும் யுத்தஞ்செய்ய ஸன்னத்தமா யிருப்போம்; நீங்கள் எது சரியென்று நினைக்கிறீர்கள்?' என்று சொன்னான். அந்தச் சேதி தேசத்தரசன் இவ்வாறு அவ்வரசர்களெல்லாரையும் தூண்டிவிட்டு அவர்களுடன் சேர்ந்து யாகத்தைக் கெடுக்க ஆலோசனை செய்தான். அந்த யாகத்தில் அழைக்கப்பட்டு வந்த [1] ஸுநீதன் முதலான கூட்டத்தாரனைவரும் கோபித்து முகத்தின் நிறம் மாறினவர்களாகக் காணப்பட்டனர். தர்மராஜாவுக்கு (யாக முடிவில் நடக்கும்) அபிஷேகமும் கண்ணனுக்குப் பூஜையும் நடவாமலிருக்கும்படி செய்யவேண்டுமென்று அவர்களனைவரும் அப்போது பேசிக்கொண்டனர். எல்லா அரசர்களும் கோபமுண்டு தம்மைத் தாமே சிறந்தவர்களாக நினைத்ததனாலும் பூஜை பெறாத வெறுப்பினாலும் தாங்கள் ஜயிக்கலாமென்ற நிச்சயத்தினாலும் ஆலோசித்துப் பேசிக்கொண்டனர். வேண்டினவர்களால் தடுக்கப்படும்போது அவர்களின் உருவங்கள், புசிக்கும் மாமிசத்திலிருந்து விலக்கப்பட்டுக் கர்ஜிக்கும் சிங்கங்களின் உருவங்கள் போல விளங்கின. தேசபலமே வேகமாகவுடையதும் வரம்பு கடந்ததும் குறையாததுமான அரசர்களென்னும் அந்தக் கடலைக் கண்டு யுத்தத்திற்கு ஸன்னாஹஞ்செய்வதாக உடனே கிருஷ்ணன் தெரிந்துகொண்டார்.

அர்க்காஹரண பர்வம் முற்றிற்று.

---

1. சிசுபாலனுக்கு மற்றொரு பெயர்.

## அறுபத்துமூன்றுவது அத்தியாயம்

## சிசுபால வத பர்வம்

### (அரசர்கள் கோபித்ததைக் கண்டு கலங்கின யுதிஷ்டிரரைப் பீஷ்மர் தேற்றினது)

யுதிஷ்டிரர், பிரளயகாலக் காற்றினுற் கிளப்பப்பட்ட கடலைப்போலப் பயங்கரமாகக் கோபத்தினு லெழுந்ததும் சமுத்திரத்துக்கு ஒப்பானதுமான அரசர்கூட்டமனைத்தையும் கண்டு, புத்திமான்களிற் சிறந்தவரும் முதியவரும் கௌரவர்களின் பாட்டனருமாகிய பீஷ்மரை நோக்கி, பெருஞ்சக்தியுள்ளவனும் பகைவரைக் கொல்லுகிறவனுமாகிய தேவேந்திரன் பிருகஸ்பதியைக் கேட்பது போலக் கேட்கத் தொடங்கினர். 'பிதாமகரே! இந்த அரசர்களென்னும் பெருங்கடல் கோபத்தினுற் கலங்கியிருக்கிறது. இந்த விஷயத்தில் நான் என்ன செய்யவேண்டுமோ அதனை எனக்குச் சொல்லும். பிதாமகரே! எப்படி நடந்தால் நமது யாகத்துக்கு இடையூறு வராமலும் பிரஜைகளுக்கு நன்மை தவருமலுமிருக்குமோ அவ்வாறு எல்லாரிடத்திலும் நடக்க வேண்டியதை யெல்லாம் எனக்கு இப்போது உரைக்கக்கடவீர்' என்ருர். தர்மந்தெரிந்த தர்மராஜரான யுதிஷ்டிரர் இவ்வாறு கேட்டபோது, கௌரவர்களின் கூடஸ்தராகிய பீஷ்மர் பின்வருமாறு சொல்லலானர் :—

'கௌரவப் புலியே! நீ அஞ்சாதே! நாய் சிங்கத்தைக் கொல்லவல்லதா? இந்த விஷயத்தில் நல்ல நீதியுள்ளதும் அபாயமில்லாததுமான மார்க்கத்தை முன்னமே [1]அவலம்பித்திருக்கிறேன். அப்பா! சிங்கம் தூங்கும்போது நாய்கள் எப்படிச் சேர்ந்து வந்து குரைக்குமோ அப்படி யாதவசிம்மம் [2]தூங்கிக்கொண்டிருக்கையில் இவ்வரசர்களனைவரும் எதிர்நின்று குரைக்கின்றனர். அன்பனே! தூங்கின சிங்கம் விழித்துக்கொள்ள யத்தனிக்காதவரையில் சிமமத்தினருகில் நாய்கள் கோபித்துக் குரைக்கும். அச்சுதர் சிமமத்துக்கு ஒப்பானவர். உனக்கு இது முன்னமே தெரிந்ததுதானே. ஆனல், நான் கிருஷ்ணனைத் துதிக்கவேண்டுமென நினைக்கிருய். அரசர்களிற் சிறந்தவனே! அப்பா! கிருஷ்ணன் தூங்குவதனலேதான் சிற்றறிவாளனும் சேதிதேசத்தரசனுமான சிசுபாலன் இவ்வரசர்களெல்லாரையும் சேர்த்து யமலோகத்துக்கனுப்பக் கருதித் தான் சிம்மமல்லாம

1 'கிருஷ்ணனை ஆசிரயித்திருக்கிறேன' என்பது.

2 கவனியாமலிருக்கையில்.

லிருக்கையில் இவர்களைச் சிம்மங்களாக்குகிறான். பாரதனே! இந்தச் சிசுபாலனிடத்திலிருக்கும சக்தியைக் கிருஷ்ணன் திரும்ப எடுத்துக்கொள்ளக் கருதுகிறானென்பது திண்ணம். புத்திமான்களிற் சிறந்தவனே! குந்தியின் புத்திரனே! உனக்கு நன்மையுண்டாகட்டும. இந்தச் சேதிராஜனுக்கும் மற்ற அரசர்களுக்கும் அறிவு தடுமாறிப்போயிற்று. இந்தப் புருஷசிரேஷ்டரான கண்ணன் எவனெவனை எடுத்துவிடக் கருதுகிறானோ அவர்களுக்கெல்லாம இந்தச் சிசுபாலன் புத்தியைப்போலவே புத்தி உடனே கெடும். யுதிஷ்டிரா! மூன்று லோகங்களிலுமுள்ள [1]நால்வகைப் பிராணிகளின் உற்பத்திக்கும நாசத்துக்கும கண்ணனே இடம்' என்றார். ஜனமேஜயரே! இவ்வாறு பீஷ்மர் சொன்னதைக் கேட்டபிறகு, சேதிதேசத்தரசனான சிசுபாலன் பீஷ்மரைப் பார்த்துக் கொடிய சொற்களைச் சொல்லலானான்.

---

## அறுபத்துநான்காவது அத்தியாயம்

### சிசுபால வத பர்வம் (தொடர்ச்சி)

#### (சிசுபாலன் பீஷ்மரையும் கிருஷ்ணனையும் நிந்தித்தது)

ஓ! பீஷ்மா! கிழவனாயிருந்தும் தன் குலத்தைக் கெடுப்பவனாகிய நீ பயமுறுத்தும் பல சொற்களினால் அரசர்களைப் பயப்படுத்துவதனால் ஏன் வெட்கப்படாமலிருக்கிறாய்? [2]மூன்றாவது இயற்கையாகிய நபும்ஸகத்தனத்திலிருப்பவனாகிய நீ தர்மத்துக்கு விலக்கான விஷயங்களைப் பேசுவது பொருந்தியதுதான. நீயன்றோ கௌரவரனைவர்க்குந் தலைமையானவன். பீஷ்மா! உன்னைத் தலைவனாகப்பெற்ற கௌரவர்கள் ஓடத்திற் சேர்த்துக் கட்டப்பட்ட ஓடம்போலவும் குருடன்பின் செல்லும் குருடன்போலவும் ஆயினர். பூதனை வதம் முதலான இந்தக் கிருஷ்ணனுடைய செய்கைகளை நீ சிறப்பித்துப் பேசினதனால் எமது மனம் மிக நொந்தது. பீஷ்மா! கர்வமடைந்தவனும் ஒன்றுந் தெரியாதவனுமாகிய நீ கிருஷ்ணனைத் துதிக்க ஆரம்பிக்குமபோதே உன்னுடைய நாவானது நூறாக வெடியாமலிருப்பது ஏன்? பீஷ்மா! மிகச் சிறுவரும எவனை இகழத்தகுமோ அந்த இடையனை நீ அறிவில் முதிர்ந்தவனாயிருந்தும் துதிக்க நினைக்கிறாய். பீஷ்மா! பறவை இவன் குழந்தையாயிருக்குமபோதே இவனாற் கொல்லப்பட்டிருந்

---

1 (அ) ஸ்வேதஜம். (ஆ) அண்டஜம். (இ) உத்பிஜ்ஜம். (ஈ) ஜராயுஜம் என்பன; அல்லது தேவர், மனிதர், திர்யக, ஸ்தாவரம் எனினுமாம்.

2 ஆணும் பெண்ணுமல்லாதது.

தால் இவ்விஷயத்தில் வியக்கத்தக்கது என்ன இருக்கிறது? பீஷ்மா! யுத்தத் தேர்ச்சியில்லாத குதிரையும் காளைமாடும் கொல்லப்பட்டிருந்தாலும் அறிவற்ற கட்டையாகிய சகடம் இவன் காலால் தள்ளப்பட்டிருந்தாலும் அவற்றில் என்ன ஆச்சரிய மான காரியமிருக்கிறது? எருக்கின் அளவான அம்மரங்கள் இவனால் தள்ளப்பட்டதிலும் காளிய நாகம் அடிக்கப்பட்டதிலும் என்ன ஆச்சரியம் உண்டாக்கப்பட்டிருக்கிறது? பீஷ்மா! புற்றளவான கோவர்த்தன மலை இவனால் ஏழு நாள் தூக்கப்பட்டிருந் தால் அஃது எனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லை. பீஷ்மா! இந்தக் கிருஷ்ணன் விளையாட்டாக மலையின்மேலிருந்து மிகுதி யான அன்னத்தைப் புசித்தானென்று நீ சொல்லக் கேட்ட (என்னைத் தவிர) மற்றவர்கள் வியப்புற்றனர். தர்மந்தெரிந்த வனே! மிக்க பலசாலியான எந்தக் கம்சனுடைய அன்னத்தை இவன் புசித்தானோ அந்தக் கம்சனை இவனால் கொல்லப்பட்டா னென்பதுமட்டும் பெரிய ஆச்சரியம். பீஷ்மா! குரு வம்சத்தில் இழிவானவனே! தர்மமே தெரியாத உனக்கு நான் இப்போது சொல்லப்போகிற சொல் பெரியோர்கள் சொல்லும்போது உன்னால் கேட்கப்படவில்லையென்று நினைக்கிறேன். பெண்கள்மேலும் பசுக்கள்மேலும் அந்தணர்மேலும் எவனுடைய அன்னத்தைப் புசிக்கிறானோ அவன்மேலும் தனனை அடைக்கலமாக அடைந்த வன்மேலும் ஆயுதங்களைப் பிரயோகிக்கலாகாதென்று தர்மிஷ் டரும் அறிஞருமான நல்லோர் எப்போதும் உபதேசிக்கின்றனர். பீஷ்மா! உலகத்திலுள்ள அந்தத் தர்மமெல்லாம் உனனிடத் திற் பயன்படவில்லையென்று தெரிகிறது கௌரவர்களில் இழி வானவனே! கிருஷ்ணன் அறிவிற் பெரியவனென்றும் பெருமை பொருந்தியவனென்றும எல்லாருக்கும் மேற்பட்டவனென்றும் துதித்து, தெரியாதவனுக்கு உரைப்பதுபோல எனக்கு உரைக் கிறாய். பீஷ்மா! கோஹத்தி செய்தவனும் ஸ்திரீஹத்தி செய்தவ னும் உன் சொல்லினால் பூஜிக்கபபெறுவனோ? பீஷ்மா! இவ்வகை யானவன் எவனும துதிப்பதற்குத் தகுதியுள்ளவனோ? இவன் அறிஞருட் சிறந்தவனென்றும் ஈசுவரனென்றும் நீ சொல்வதனால் இந்த ஜனார்த்தனன் இவை யெல்லாம் சரிதானென்று நினைக்கிறான். இவை யனைத்தும் பொய்யென்பது திண்ணம். பீஷ்மா! ஜனார்த்தனன் தன்னைத்தானே தெரிந்துகொள்ளத் திறமையுள்ளவனாயின், அவன் எதிர்பாராமலிருக்கும்போது நீ எப்படி மரியாதைசெய்ய நினைக்கிறாய்? ஒருவன் ஒரு காதையைப் பலமுறை உரைப்பினும் அந்தக் காதை அவ்வுரைப்புவனைக்

காவாது. பிராணிகள், குலிங்கசகுனி யென்னும் பறவைபோலத் தம்மியற்கையையே பற்றும் உண்மையில் உன்னுடைய இந்த இயற்கையே இழிவானது. இதில் ஐயமில்லை. நீ நதியின மகனு யிருப்பதனுல் உன் மனம் நிலைதப்பி ஓடுகிறதென்று நினைக் கிறேன். கிருஷ்ணனைப் பூஜிக்கத்தக்கவரிற் சிறந்தவனுகவும் உன்னை அதற்கு உபதேசிப்பவனுகவும் பெற்ற பாண்டவர்களின இயற்கை உன் இயற்கையிலும் மிக்க இழிவானதென்று நினைக் கப்படுகிறது தர்மந்தெரியாதவனும் பெரியோர்கள் வழியை விட்டு விலகினவனுமாகிய நீயா தர்மிஷ்டன்? பீஷ்மா! தன் னிடத்தில் தர்மமிருப்பதாக நினைத்திருக்கும் எந்த அறிஞரிற் சிறந்தவன் தர்மந்தெரிந்த நீ செய்ததுபோலச் செய்வன்? நீ தர்மத்தை அறிந்திருந்தாலும உன் மதி தேர்ந்திருந்தாலும் பண்டிதனென்று எண்ணிக்கொண்ட உன்னுல் மற்றெருருவன் மேல் காதல்வைத்தவளும் தர்மந்தெரிந்தவளுமான அம்பை யென்னுங் கன்னிகை அபகரிக்கப்பட்டது எப்படி? பீஷ்மா! உனக்குக் கோபம் வேண்டாம். உன்னுல் கொண்டுவரப்பட்ட கன்னிகையைப் பெரியோர்களின் வழியை நினைத்த உன் சகோ தரனை விசித்திரவீரிய னென்னும் அரசன் விரும்பவில்லையே? தெரிந்தவனே! தான் என்ற அபிமானமுள்ளவனும் யோக்கியர் கள் நடந்த வழியிலிருப்பவனுமாகிய நீ ஜீவித்திருக்கையில் விசித்திரவீரியன் மனைவிகளுக்கு மற்றெருருவனுலன்றே சந்ததி கள் உண்டாயின? பீஷ்மா! உனக்கு என்ன தர்மமிருக்கிறது? இந்தப் பிரம்மசாரி விரதம் பொய்; நீ அறியாமையாலேயோ ஆண்மையில்லாமையாலேயோ இதை வகிக்கிறுயென்பது திண் ணம். தர்மந்தெரிந்தவனே! எந்த விஷயத்திலும் உனக்குச் சிறப்பிருப்பதாக நான் அறியவில்லை. நீ பெரியோர்களை அடுக்க வில்லை. அதனுல், இவ்வகையான தர்மத்தை உரைத்தாய். தேவர்களைப் பூஜிப்பதும் கொடுப்பதும் வேதமோதுவதும மிகுதி யாகத் தக்ஷிணைகளைக் கொடுத்து வேள்வி புரிவதுமாகிய தர்மங்க ளனைத்தும சந்ததியென்னுந் தர்மத்தின் பதினுறிலொரு பாகத் திற்கும் ஈடாகா. பீஷ்மா! பலவகை விரதங்களும் உபவாசங்களு மிருந்து செய்யுங் கருமங்களனைத்தும சந்ததியில்லாதவனுக்குப் பயனற்றவையென்பது சாஸ்திரங்களின துணிபு. பிள்ளையில் லாதவனும பிராய முதிர்ந்தவனுமாகிய நீ, பொய்யான தர் மத்தை உபதேசிப்பதனுல் ஹம்சமபோல உன் சுற்றத்தா ராலேயே இனி மரணமடைவாய். பீஷ்மா! முற்காலத்திய விஞ்ஞானிகளாகிய சில மனிதர்கள் சொல்லுகின்ற ஒரு கதையை நீ கேட்பதற்காக நான தெளிவாகச் சொல்வேன். முற்

காலத்தில் தர்மத்தைச் சொல்வதும் அதற்கு மாருக நடப்பது மான ஒரு கிழ ஹம்ஸம் கடற்கரையிலிருந்தது. அது மற்ற பறவைகளுக்கு உபதேசிப்பது வழக்கம். 'புண்ணியஞ்செய்யுங் கள்; பாவஞ் செய்யாதீர்கள்' என்பதே அது சொல்வதாம். பீஷ்மா! அதைப் பட்சிகள் கேட்டன. எப்போதும் தர்மத்தையே உரைப்பதான அன்னத்தின் சொல்லைக் கேட்டு எல்லாப பறவை களும் மகிழ்ந்தன. பறவைகளெல்லாம் அவ்வன்னத்தைச் சுற்றிக் கொண்டு, 'பட்சிகளுள் சிரேஷ்டனே! நீ தர்மங்களை யெல்லாம் பறவைகளுக்குத் தொகுத்துச் சொல்; எங்களுக்குச் சிறந்த தர்மம் யாது என்பதைச் சொல்' என்று கேட்டன. அதற்கு அந்த ஹம்ஸம், 'பறவைக்கூட்டங்களே! பிரஜைகளுக்கு இம்சை செய்யாமையே தர்மம்; இம்சை செய்வதே பாவம். புண்ணிய பாவங்களை இவ்வாருகவே சுருக்கமாக அறியவேண்டும்' என் றது. தர்மத்தில் ஆசையுற்ற அந்தப் பறவைகள் அந்தக் கிழ அன்னத்தின் சொல்லைக் கேட்டு மகிழ்ந்து ஒன்றுசேர்ந்து,'ஐயா! இவ்வுலகில் எந்தப் பறவை மிக்க மனஉறுதியுடன் எப்போதும் தர்மத்தைச் செய்கிறதோ அந்தத் தர்மாத்மா சேரும் கதி யாதென்பதை இப்போது எங்களுக்கு விளக்கிச் சொல்வாயாக' என்று கேட்டன. அதைக் கேட்டு அந்த ஹம்ஸம், 'பறவை காள்! நீங்கள் சிறுவர்கள்; அறத்தின் நுட்பத்தை அறியீர். எவன் இவ்வுலகில் நல்லெண்ணத்தோடு எப்போதும் தர்மத் தையே செய்கிருனே அவன் தன் வாழ்நாள் முடிவில் தேகத்தை விட்டுச் சுவர்க்கம் சேருவான். பட்சிகளே! நானும் அவ்வாறே முடிவுகாலத்தில் இவ்வுடம்பைவிட்டுச் சுவர்க்கலோகத்திற்குச் செல்வேன். இதுதான் தர்மத்தின் முடிவு' என்று இவ்வாருகத் தர்மத்தைப்பற்றிய பேச்சையே பட்சிகளுக்கு வற்புறுத்திப் பேசிற்று. பீஷ்மா! அந்தப் பறவைகள் எக்காலமும் தர்மத்தைப் பற்றியே அதனிடம் கேட்டன பீஷ்மா! அதன்பிறகு, கடல் நீரில் சஞ்சரிக்கும் மற்ற பறவைகள் புண்ணியம் பெறுவதற் காக அவ்வன்னத்திற்கு உணவுகளைக் கொணர்ந்தனவென்று நாம் கேட்டிருக்கிறோம். பீஷ்மா! அந்தப் பறவைகளெல்லாம் தங்கள் தங்கள் முட்டைகளை அவ்வனனத்தி னருகில் வைத்து விட்டுக் கடல் நீரில் உலாவிக்கொண்டு மகிழ்ந்திருந்தன. சுய காரியத்தில் ஊக்கமுள்ள அந்தப் பாவியான அன்னம் ஜாக் கிரதையில்லாமலிருந்த அந்தப் பறவைகள் எல்லாவற்றின் முட்டைகளையும் தின்றது. பிறகு, ஒருகால் அந்த முட்டைகள் குறைந்துவருவதை மிக்க புத்திக்கூர்மையுள்ள ஒரு பறவை கண்டு ஐயமுற்றது. அந்த ஹம்ஸம் செய்யும் பாவத்தைக் கண்டு மிகத் துயரமுற்ற அந்தப் பட்சி அப்பறவைகளெல்லாவற்

றிற்கும் நடந்ததைத் தெரிவித்தது. கௌரவ சிரேஷ்டனே! அதன்பிறகு, அந்தப் பட்சிகளும கண்ணுரக் கண்டு அதனருகே சென்று பொய்யொழுக்கமுள்ள அவ்வன்னத்தை அப்போதே கொன்றன. பீஷ்மா! அந்தப் பட்சிகள் அவ்வன்னத்தைக் கொன்றதுபோலவே அவ்வன்னத்தின் ஒழுக்கத்தை மேற் கொண்டிருக்கின்ற உன்னையும் இவ்வரசர்கள் சீறிக் கொல்வர். பீஷ்மா! பாரதனே! புராணக் கதை தெரிந்த ஜனங்கள மேற் சொன்ன ஹம்ஸ விருத்தாந்தத்தைப்பற்றிய ஒரு காதையையும் பாடுகின்றனர். அதையும் உனக்குச் சரியாக உரைப்பேன். அதன் பொருள் : 'ஓ! பறவையே! மனம் கெட்டிருக்கும்போது மனத்தூய்மையில்லாத பேச்சைப் பிதற்றுகிருய். முட்டைகளைப் பக்ஷிப்பதாகிய இந்த உன் செய்கை உன் சொல்லுக்கு மாருயிருக்கிறது' என்பது.

---

அறுபத்தைந்தாவது அத்தியாயம்

## சிசுபால வத பர்வம் (தொடர்ச்சி)

### (கிருஷ்ணனை நிந்தித்த சிசுபாலனோடு யுத்தஞ் செய்யத் தொடங்கின பீமனைப் பீஷ்மர் தடுத்தது)

இந்தக் கிருஷ்ணன் [1]தாஸனென்று நினைத்து இவனோடு யுத்தஞ்செய்ய விரும்பாத மகா பலசாலியான ஜராசந்த ராஜனை நான் வெகுமானிக்கிறேன். ஜராசந்தனை வதஞ்செய்தபோது கிருஷ்ணன் செய்த காரியத்தையும் பீமார்ஜுனர்கள் செய்த காரியத்தையும் எவன் சரியென்று மதிக்கிருன்? வாயிலல்லா வழியால் நுழைந்து கபடமாகத் தன்னைப் பிராமணனென்று சொல்லிக்கொண்ட கிருஷ்ணனுக்கு ஜராசந்த ராஜாவின் பராக்கிரமம் தெரியும். தான் பிராமணர்களுக்கு வேண்டினவனுக நினைத்திருந்த மகாத்மாவான ஜராசந்தன் இந்தத் துராத்மாவுக்கு முதலிற் கொடுக்கும்படி [2]பாத்யத்தை யனுப்பினுன். பீஷ்மா! கிருஷ்ணன், பீமன், அர்ஜுனன் இவர்கள் ஜராசந்தனுல் 'சாப்பிடுங்கள்' என்று சொல்லப்பட்டனர். கிருஷ்ணன் அதற்கு மாருகச் செய்தான். மூர்க்கனே! நீ நினைக்கிறபடி இவன் [3]உலகத்தைப் படைப்பவனுயிருந்தால் தன்னை ஏன் உண்மையில் பிராமணனென்று அறியவில்லை? இந்தப் பாண்டவர்கள் உன்னுல் பெரியோர்களின் வழியை விட்டு இழுக்கப்பட்டும் அதைச் சரியென்று நினைக்கிருர்களே; இதுவும் எனக்கு ஓர் ஆச்சரியந்

---

1 கமஸனுககு அடிமை. 2 கால் கழுவுவதறகு நீர்.

3 பிரமமதேவர் பிராமணரானதால், இவன பிராம்மணனுயிருக்கவேண்டுமே; அபபடியானுல் இவன் வேஷம்போடுவானேன் எனபது கருத்து.

தான். பாரதனே! மேலும், பெண்தன்மையுள்ளவனும் வயது முதிர்ந்தவனுமாகிய உன்னை எல்லா விஷயங்களுக்கும் உபதேசிப்பவனாகப் பெற்றவர்களுக்கு இஃது ஆச்சரியமன்று' என்று சிசுபாலன் சொன்னான். மிகக் கோபமாகவும் கடுஞ்சொல்லாகவும் சிசுபாலன் சொன்னதைக் கேட்டு, பலவான்களிற் சிறந்தவனும் பராக்கிரமசாலியுமான பீமஸேனன் கோபித்தான். இயற்கையில் நீண்டும் அகன்றும் தாமரைமலர் போலச் சிவந்துமிருக்கும் பீமனுடைய கண்கள் கோபத்தினால் இன்னும் அதிகமாகச் சிவந்தன. பீமஸேனன் நெற்றியில் மூன்று பகுப்புக்களாக எழும்பியிருந்த புருவநெறிப்பை, திரிகூடமலையில் மூன்று பிரிவுகளாக ஓடும் கங்கையைப்போல அரசர்களனைவரும் கண்டனர். கோபத்தினாற் பற்களைக் கடிக்கும் பீமஸேனன் முகம் பிரளய காலத்தில் எல்லாப் பிராணிகளையும் விழுங்கத் தொடங்கும் யமன் முகம்போலக் காணப்பட்டது. கோபம் தாங்காமல் வேகமாகக் கிளம்பின பீமனைச் சிறந்த கைகளையுடைய பீஷ்மரே குமாரக்கடவுளைப் பரமசிவன் அடக்குவதுபோல அடக்கினார். ஜனமேஜயரே! பெரியவரான பீஷ்மர் பலவகைச் சொற்களால் தடுத்த பின்னர் அந்தப் பீமனுடைய கோபம் அடங்கிற்று. கார்காலம் கடந்த பிறகு கொந்தளிக்கின்ற கருங்கடல் கரையைக் கடவாமலிருப்பது போலப் பகைவரை அடக்குகிறவனாகிய பீமன் பீஷ்மர் சொல்லை மீறாமலிருந்தான். ஜனமேஜய ராஜாவே! தன் பராக்கிரமத்தில் உறுதியுள்ள வீரனான சிசுபாலன், பீமன் கோபித்தபோது கலங்கவில்லை. பீமஸேனன் பலமுறை வேகமாகக் கிளம்பியும் அந்த வீரனான சிசுபாலன், கோபித்த சிங்கம(அற்ப)மிருகத்தை எப்படி மதியாதோ அப்படியே அவனை மதிக்கவில்லை. பராக்கிரமசாலியான சேதி ராஜன், பயங்கரமான பராக்கிரமமுள்ள பீமன் கோபித்ததைக் கண்டு நகைத்துக்கொண்டே, 'ஓ! பீஷ்மா! இவனை விட்டுவிடு; விளக்கில் விழுந்த விட்டிற்பூச்சியைப்போல என் பராக்கிரமத்தினால் இவன் எரிந்துபோவதை அரசர்களனைவரும் பார்க்கட்டும்' என்று சொன்னான்; அந்தச் சேதி ராஜன் சொன்ன பேச்சைக் கேட்ட பிறகு, புத்திமான்களிற் சிறந்தவரும் கௌரவர்களில் சிரேஷ்டருமாகிய பீஷ்மர் பீமஸேனனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்: 'பீமஸேனா! சிறந்த கைகளையுடையவனே! யுத்தத்தில் தோல்வியடையாத உன்னை இவன் யுத்தத்திற்கு அழைக்கிறானே; இஃது இவன் சுயபுத்தியன்று; இது கிருஷ்ணனுடைய எண்ணம.'

---

## அறுபத்தாறுவது அத்தியாயம்

## சிசுபால வத பர்வம் (தொடர்ச்சி)

---

### (பீஷ்மர் பீமனுக்குச் சிசுபாலன் வரலாற்றைக் கூறியது)

இவன் சேதி ராஜன் வீட்டில் மூன்று கண்களும் நான்கு கைகளுமாகப் பிறந்தான. கழுதைக் குரலுக்கு ஒப்பான குரலினால் இரைந்து ஊளையிட்டான். அதனால், இவன் தாய்தந்தையரும் சுற்றத்தாரும் பயந்தனர். இவனுடைய விகார ரூபத்தைக் கண்டு தாய்தந்தையர்கள் இவனை விட்டுவிட நிச்சயித்தனர். அப்போது மனைவியோடும் மந்திரிகளோடும் புரோகிதர்களோடும் கூடச் சிந்தையினால் மனங்கலங்கியிருந்த அவ்வரசனைப் பார்த்து ஓர் அசரீரவாணியானது, 'ஓ! அரசனே! இந்த உன் புத்திரன் பெருமைபொருந்தியவனும் பலத்தில் மிகுந்தவனுமாகப் பிறந்திருக்கிறான். ஆதலால், இவனைக் கண்டு பயப்படவேண்டாம். கலங்காமல் குழந்தையைக் காப்பாற்று. இவனுக்கு உன்னால் மரணமில்லை. மரணகாலம் இப்போது வரவுமில்லை. ராஜனே! இவனை ஆயுதத்தினால் கொல்லப்போகிறவன் எவனோ அவனும் பிறந்திருக்கிறான' என்று சொல்லிற்று. இவ்வாறு சொன்ன வார்த்தையை அரசன் முதலானவர்கள கேட்டவுடன், அதைச் சொன்ன பூதம அந்தர்த்தானமாயிற்று. புத்திரனிடமுள்ள வாஞ்சையினால் துயரப்பட்ட தாயானவள், 'என்னுடைய இந்தப் புத்திரனைப்பற்றிய இந்தச் சொல்லைச் சொன்னவனரோ அவனைக் கைகூப்பி வந்தனஞ்செய்கிறேன். அந்த மகிமையுள்ள புருஷன தேவனாயிருந்தாலும, மற்ற யாராயிருந்தாலும எனக்கு மறுபடியும் அந்தச் சொல்லை விரிவாகச் சொல்லக்கடவன். இந்தப் பிள்ளைக்கு யமனாகப் போகிறவன் எவனென்பதைக் கேட்க விரும்புகிறேன்' என்று சொன்னாள். மறைந்திருந்த அந்தப் பூதமானது, திரும்பவும், 'எவன் மடியில் எடுத்துக் கொளளப்பட்டபோது இந்தக குழந்தையினுடைய இயற்கைக்கு அதிகமான கைகளிரண்டும ஐந்து தலை நாகங்கள்போலத் தரையில் விழுமோ, நெற்றியிலிருக்கும மூன்றாவது கண் எவனைக் கண்டவுடன் மறைந்துபோகுமோ, அவன் இவனுக்கு யமனாவான்' என்று சொல்லிற்று. அந்தக் குழந்தை மூன்று கண்களும நான்கு கைகளுமா யிருந்ததையும் அசரீரி வாக்கு அவ்வாறு சொன்னதையும கேள்விப்பட்டு, பூமியிலுள்ள அரசர்களனைவரும பார்க்கக் கருதி வந்தனர். அவ்வரசன் வந்த அரசர்களைத் தகுதிப்படி பூஜித்து ஒவ்வொரு ராஜாவின் மடியிலும்-

பிள்ளையை விட்டான். இவ்வாறு அநேகமாயிரம் அரசர்களின் மடிகளில் தனித்தனியே வரிசையாக அந்தக் குழந்தை ஏறிற்று; அசரீரி வாக்குச் சொன்ன பயனை அடையவில்லை. மகா பலசாலிகளும் யாதவர்களுமான ராமகிருஷ்ணர்கள் துவாரகா நகரத்தில் இவ்விஷயத்தைக் கேள்விபபட்டு யாதவ குலத்துப் பெண்ணாகிய தம தந்தையின் சகோதரியைக் காண்பதற்குச் சேதி நகரத்துககு வந்தனர். பலராமரும கிருஷ்ணனும முறையே அவ்வரசனுககும அவ்வரசிக்கும் வழக்கப்படி வந்தனஞ்செய்து க்ஷேமத்தையும் ஆரோக்கியத்தையும விசாரித்து உட்கார்ந்தனர். அபபோது, அவ்வரசி அவ்விருவரையும் மிகக அன்புடன் பூஜித்து உடனே தன் பிள்ளையைத் தானே கிருஷ்ணன மடியில் வைத்தாள். அந்தக் குழந்தையைக் கிருஷ்ணன மடியில் விட்ட மாத்திரத்தில் அதிகக் கைக ளிரண்டும விழுந்தன. அநத நெற்றிக்கண்ணும் மறைந்தது. அதைக் கண்டு அவ்வரசி துயரமும் அச்சமுமுற்றவளாகி, 'கிருஷ்ணா! சிறந்த கைகளையுடையவனே! பயத்தினால் பிடிக்கப்பட்ட எனக்கு ஒரு வரம் தருவாயாக. துயரப்பட்டவர்களுக்கு ஆறுதலும், பயந்தவர்களுக்கு அபயமுமளிப்பவன் நீயன்றோ?' என்று சொல்லிக் கிருஷ்ணனிடம் வரங் கேட்டாள். யாதவராகிய கிருஷ்ணன் அவளால் இவ்வாறு சொல்லப்பட்ட பிறகு, 'அரசியே! தர்மந் தெரிந்தவளே! நீ பயப்படாதே; என்னால் உனக்குப் பயமிராது. என் தந்தையின் சகோதரியே! உனக்கு என்ன வரம் நான் கொடுக்கவேண்டும்? அல்லது, நான் என்ன செய்யவேண்டும்? சாத்தியமாயிருந்தாலும் அசாத்தியமாயிருந்தாலும நீ சொல்வதைச் செய்வேன' என்று சொன்னார். இவ்வாறு சொல்லப்பட்ட அரசியானவள் கிருஷ்ணனைப் பார்த்து, 'மகா பலசாலியே! யாதவ சிரேஷ்டனே! பிரபுவே! சிசுபாலன் செய்யும் பிழைகளை எனக்காகப் பொறுப்பாயாக; இதுதான் எனக்கு வரமென்றறி' என்று கேட்டுக் கொண்டாள். அதற்குக் கிருஷ்ணன், 'அத்தையே! இந்த உன் புத்திரன கொல்லத்தக்க குற்றஞ்செய்யினும் இவனுடைய நூறு பிழைகளை நான் பொறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நீ துக்கத்தில் மனத்தை வைக்காதே' எனறு சொன்னார். வீரனான பீமஸேனா! யாதவர்களுக்கு சுகத்தைத் தரும் கிருஷ்ணன்தான் தனக்கு யமனென்று அறிந்திருக்கும இந்தப் பாவியான சிசுபாலன் அவர் கொடுத்த வரத்தினால் கர்வமடைந்து மதிகெட்டு உன்னை இவ்வாறு யுத்தத்திற்கு அழைக்கிறான்.

## அறுபத்தேழாவது அத்தியாயம்

## சிசுபால வத பர்வம் (தொடர்ச்சி)

### (தம்மை இகழ்ந்த சிசுபாலனையும் அவனோடு சேர்ந்த அரசர்களையும் பீஷ்மர் அவமதித்துப் பேசியது)

பீமஸேனா! இந்தச் சிசுபாலன் யுத்தத்தில் தோல்வியடையாத உன்னை யுத்தத்திற் கழைப்பது இவனுடைய சொந்தப் புத்தியினாலன்று. லோகநாதராகிய கிருஷ்ணனுடைய எண்ணந்தான் இது. குலக்கேடனும் கெட்ட காலத்தினால் மதிகெட்டவனுமாகிய இந்தச் சிசுபாலன்போல என்னைத் தூஷிக்கத்தக்க அரசன் இப்புவியில் எவன் இருக்கிறான்? சிறந்த கைகளையுடைய இந்தச் சிசுபாலன், இந்தக் கிருஷ்ணனுடைய சக்தியின் ஒரு பாகமென்பது திண்ணம். கிருஷ்ணனானவர் இவனிடத்திலுள்ள அந்தப் பாகத்தை மறுபடியும் எடுத்துக்கொள்ள எண்ணங்கொண்டிருக்கிறார். கௌரவ சிரேஷ்டனே! அதனால்தான் இந்த மதிகெட்ட சேதி ராஜன் நம்மெல்லாரையும் மதியாமல் புலிபோல மிகவும் கர்ஜிக்கிறான்' என்று பீஷ்மர் சொன்னார். அப்போது அந்தச் சேதி ராஜன் அந்தப் பீஷ்மர் சொல்லைப் பொறுமல் மிக்க கோபத்துடன் மறுபடியும் அந்தப் பீஷ்மருக்கு மறுமொழி சொல்லலானான்.

'பீஷ்மா! நீ கிருஷ்ணனுக்குச் சொல்லுகிற மகிமையெல்லாம் கிருஷ்ணனுக்கு எதிரிகளான எமக்கே இருக்கட்டும். நீ அரசர்களுக்குத் துதி பாடம் படிக்கும் வந்தியைப்போல எப்போதும் ஓயாமல் இவனைத் துதிசெய்கிறாய். பீஷ்மா! அயலாரைத் துதிப்பதில் உன் மனத்திற்கு விருப்பமிருக்குமாயின் நீ இந்த ஜனார்த்தனனை விட்டு அரசர்களைத் துதிக்கலாம். ராஜசிரேஷ்டனும் பாஹ்லீக தேசாதிபதியுமான இந்தத் தரதனைத் துதி. இவன் பிறக்கும்போதே இந்தப் பூமியைப் பிளந்தவன். பீஷ்மா! வங்க தேசத்துக்கும் அங்கதேசத்துக்கும் அதிபதியும் பலத்தில் இந்திரனுக்கொப்பானவனும் சிறந்த வில்லை வளைப்பவனுமாகிய இந்தக் கர்ணனைத் துதிக்கலாம். சிறந்த கைகளையுடையவனே! இவனுக்கு இந்தத் திவ்யகுண்டலங்களும் இளஞ்சூரியனைப்போல ஒளியுள்ள கவசமும உடனபிறந்தவையாகக் கடவுளாலேயே படைக்கப்பட்டிருக்கின்றன. இந்திரனுக்கொப்பானவனும் ஜயிக்கவே முடியாதவனுமாகிய ஜராசந்தனை இவன் கைச்சண்டையில் வென்று அவன தேகத்தையும் கிழித்தவன். பீஷ்மா! மகாரதர்களும பிராம்மண சிரேஷ்டர்களும துதிக்கத்தக்கவர்களுமான துரோணரும அசுவததாமாவுமான தகபபன் பிள்ளைகளிருவரையும் நீ

இடைவிடாமல் துதிப்பாயாக. அது நன்று. பீஷ்மா! இவ்விருவர்களில் ஒருவர் கோபித்தால் சராசரங்கள் அடங்கின இப்புவனியில் ஒன்றும் மிச்சமில்லாமல் செய்துவிடுவாரென்பது என் கருத்து. பீஷ்மா! யுத்தத்தில் துரோணருக்கும் அசுவத்தாமாவுக்கும் சமமாக நிற்கத்தக்க இவர்களுக்கீடான அரசனைக் கடல் சூழ்ந்த உலகத்தில் நான் பார்க்கவில்லை. நீ இவர்களைத் துதிக்க நினைக்கிறதில்லை. அரசர்க்கரசனும் சிறந்த கைகளையுடையவனுமாகிய துரியோதனனையும் அஸ்திரங்களில் தேர்ந்தவனும் உறுதியான பராக்கிரமமுள்ளவனுமாகிய ஜயத்ரதனென்னும் அரசனையும் கிம்புருஷர்களென்னும் தேவர்களுக்கு ஆசாரியனும் உலகத்தில் பெயர்பெற்ற பராக்கிரமமுள்ளவனுமாகிய துருமனையும் விட்டு, கேசவனை மகாவீரனென்று ஏன் சிலாகிக்கிருய்? பெரியவரும் பரதகுலத்தவருக்கு ஆசாரியருமாகிய சாரத்வதர் என்று சொல்லப்பட்ட கிருபாசாரியரைவிட்டுக் கேசவனை மகாவீரனென்று ஏன் சிலாகிக்கிருய்? வில்லாளிகளிற் சிறந்தவனும் புருஷ சிரேஷ்டனுமாகிய ருக்மியைவிட்டுக் கேசவனை மகாவீரனென்று ஏன் சிலாகிக்கிருய்? பீஷ்மக ராஜனையும் சிறந்த சக்தியுள்ள தந்தவக்ர ராஜனையும் பகதத்தனையும் யூபகேதுவையும் மகத தேசாதிபதியான ஜயத்ஸேனனையும் விராட துருபதர்களிருவரையும் சகுனியையும் பிருகத்பலனையும் அவந்தி தேசத்தரசர்களான விந்தானு விந்தர்களையும் பாண்டிய ராஜாவும் சிறந்தவனுமான சுவேதனையும் மிக்க பெரும்பாக்கியமுள்ள சங்கனையும் கர்வமுள்ள விருஷஸேனனையும் பராக்கிரமசாலியான ஏகலவ்யனையும் மகாரதனான கலிங்க தேசத்தரசனையும் விட்டு, கேசவனை மகாவீரனென்று ஏன் சிலாகிக்கிருய்? பீஷ்மா! எப்போதும் தோத்திரஞ்செய்வதற்கே உனக்கு எண்ணமிருந்தால், சல்லியன் முதலான அரசர்களையும் நீ ஏன் துதிக்கலாகாது? அரசனே! தர்மங்களைச் சொல்லும் பெரியோர்கள் முற்காலங்களில் கதைகள் சொல்லும்போது நீ கேட்டதில்லையென்பது திண்ணம். அதற்கு நான் என்ன செய்யலாம்? பீஷ்மா! தன்னை இகழ்வதும் புகழ்வதும் பிறரை இகழ்வதும் புகழ்வதும் பெரியோர்களின் ஒழுக்கமில்லையென்று நீ கேட்டிலை. பீஷ்மா! மேலும், புகழத்தகாத இந்தக் கேசவனை நீ அறியாமையால் அன்புகூர்ந்து துதிப்பதை யாரும் ஒப்பவில்லை. கம்ஸனுடைய ஆளாகக் கன்று மேய்த்த துராத்மாவினிடத்தில் வீண் அபிமானத்தினுல் உலகம் எல்லாவற்றையும் நீ எப்படிச் சுமத்தலாம்? பாரதனே! மேலும், உன்னுடைய இந்தப் புத்தி தன்னிலைக்கு வராது. நீ குலிங்க சகுனியைப்போல்வாயென்று நானே முன்னம்

சொல்லியிருக்கிறேன். பீஷ்மா! குலிங்க சகுனி யென்பது இமய மலையின் பின்புறத்திலிருக்கிறது. அதனிடத்தில் எப்போதும் செய்கைக்கு மாருன சொற்களே கேட்கப்படுகின்றன. அது, தான் அதிக சாகஸம் செய்துகொண்டிருப்பதை நினையாமல், 'சாகஸஞ் செய்யாதே' என்று எப்போதும் கூறுகிறது. பீஷ்மா! அற்பப் பிராணியான அந்தப் பறவை இரைதின்னும் சிங்கத்தின் வாயிலிருந்து பற்சந்தில் அகப்பட்டு வெளியில் தெரியும் மாமிசத் துண்டை இழுக்கிறது. பீஷ்மா! சிங்கம் ஒப்பியிருப்பதனால் அது ஜீவிக்கிறதென்பது நிச்சயம். பாபிஷ்டனே! அதுபோலத்தான் நீயும் எப்போதும் சொற்களைச் சொல்லுகிருய். பீஷ்மா! அரசர்கள் இஷ்டப்படுவதனால் நீ உயிரோடிருக்கிருயென்பது திண்ணம். உலகத்தினுல் வெறுக்கத்தக்க செய்கைகளையுடையவன் உன்னைப்போல வேறு ஒருவனுமில்லை' என்ருன்.

ஜனமேஜய ராஜாவே! சேதிராஜனுடைய அந்தக் கடுஞ் சொல்லைக் கேட்டு, அந்தப் பீஷ்மர், அவன் கேட்டிருக்க, 'இவ்வரசர்கள் இஷ்டப்படுவதனாலல்லவோ நான் ஜீவிக்கிறேனும்! நான் இவ்வரசர்களைத் துரும்புக்குங்கூடச் சரியாக நினைக்கவில்லை' என்று சொன்னுர். இவ்வாறு பீஷ்மர் சொன்னவுடன் அங்கிருந்த அரசர்கள் கூவினுர்கள். அவர்களிற் சிலர் சந்தோஷித்தனர். சிலர் பீஷ்மரை இகழ்ந்தனர். சிறந்த வில்லாளிகளாகிய சிலர் பீஷ்மருடைய அந்தச் சொல்லைக் கேட்டு, 'பாபியும் கர்வியும் வயதுசென்றவனுமான இந்தப் பீஷ்மனை நாம் பொறுக்கத்தகாது. அரசர்களே! இந்தக் கெட்ட புத்தியுள்ள பீஷ்மன் யாகப்பசுப்போலக் கொல்லப்படுவது நலம்; எல்லோரும் கோபித்து ஒன்றுசேர்ந்து கட்டைத்தணலினுல் இவனை எரித்தாலும் எரிக்கலாம்' என்று கூறினர். இவ்வாறு அரசர்கள் சொன்னதைக் கேட்டபிறகு, கௌரவர்களின் பிதாமகரும் அறிவில் சிறந்தவருமான பீஷ்மர், அரசர்களை நோக்கி, 'சொல்லுக்கு மறுமொழி சொல்வதில் ஒரு முடிவையும் நான பார்க்கவில்லை. அரசர்காள்! நான் சொல்லப்போவதை முற்றிலும் கேளுங்கள். என்னை யாகப்பசுவைப்போலக் கொல்லுவதையாவது கட்டைத் தீயினுல் எரிப்பதையாவது செய்யுங்கள். இந்தக்கால் முழுமையும் உங்கள் தலையில் வைத்தேன். இதோ கோவிந்தன் எங்களால் பூஜிக்கப்பெற்றுப பின்வாங்காமல் நிற்கிருர் உங்களில் யாருக்கு இறக்க மனம் துடிக்கிறதோ அவன் இப்போதே சக்கரத்தையும் கதையையும் ஏந்தின கண்ணனை யுத்தத்திற்கு அழைக்கலாம். அவன் வீழ்த்தப்பட்டு யது வமசத்தவரான பகவானுடைய தேகத்திலேயே பிரவேசிக்கட்டும்' என்ருர்.

## அறுபத்தெட்டாவது அத்தியாயம்

## சிசுபால வத பர்வம் (தொடர்ச்சி)

**(சிசுபாலன் கிருஷ்ணனை யுத்தத்திற்கு அழைத்தபோது அவன் குற்றங்களைக் கிருஷ்ணன் எடுத்துரைக்கக் கேட்டு அரசர்கள் யுத்தத்தினின்று விலகியது)**

பெரும் பராக்கிரமமுள்ள சேதிராஜன், பீஷ்மர் சொல்லைக் கேட்டதும், வாசுதேவருடன் போர்புரியக் கருதி வாசுதேவரை நோக்கி, 'ஓ! ஜனார்த்தன! உன்னை அழைக்கிறேன். என்னுடன் சண்டைசெய்; பாண்டவர்களெல்லாரையும் உன்னையும் இப்போதே கொல்லப்போகிறேன். கிருஷ்ண! பாண்டவர்கள் எவ்விதத்திலும் உன்னுடன் சேர்த்தே என்னால் கொல்லப்படத் தகுந்தவர்கள். அவர்கள் அரசர்களை விட்டு அரசனல்லாத உன்னைப் பூஜித்தனரன்றோ? அரசனல்லாதவனும் தாஸனும் கெட்ட புத்தியுள்ளவனும் பூஜைக்குத் தகாதவனுமாகிய உன்னைத் தகுந்தவனைப்போலச் சிறுபிள்ளைத்தனமாகப் பூஜித்த பாண்டவர்கள் வதஞ்செய்யப்படத் தக்கவர்களென்பதே என் கருத்து' என்று சொன்னான். ராஜசிரேஷ்டரான ஜனமேஜயரே! பராக்கிரமசாலியான அந்தச் சிசுபாலன் இவ்வாறு சொல்லிப் புலிபோல் இரைந்து எல்லாப் பிராணிகளும் பார்த்திருக்கையில் மிக்க கோபமுற்று எல்லா அரசர்களோடுங்கூட யுத்தஸந்நாஹஞ் செய்துகொண்டு தர்மராஜருடைய யாகத்தைக் கெடுக்கும எண்ணத்துடன் விரைவாகச் சென்றான. அதனபிறகு, கேசியைக் கொன்றவரும் பகைவரை அழிப்பவருமாகிய கேசவர் சக்கரத்தையும் கதையையும் கையிலேந்திகொண்டு தாருகனென்னும ஸாரதியினால் கொடி கட்டி அலங்கரிக்கப்பட்டதும் ரதங்களுள் உத்தமுமான தமது ரதத்தினருகிற் சென்று பீஷ்மரால் கைகொடுககபபெற்று அதன்மேலேறினார். கெட்ட சுபாவமுள்ள அந்தச் சிசுபாலனால் கோபமூட்டப்பட்ட அரசர்களனைவரையும் கிருஷ்ண பகவான் ஒற்றைத் தேராளியாக யுத்தத்தில் சந்தித்தார். அப்போது கருடக்கொடி கட்டின ரதத்திலிருப்பவரும, உதயகால சூரியனைப்போலத் தம் ஒளியினால் பிறருக்குத் தாபத்தை யுண்டுபண்ணிக்கொண்டு வில்லில் நாணேற்றுகிறவரும், உயர்ந்த புஷ்ப ரதத்திலிருக்கும் இரண்டாவது மன்மதனைபபோன்றவரும், தாமரை மலர்போன்ற கண்களையுடையவருமான கண்ணபிரானை அரசர்களனைவரும் கண்டனர். அவ்வாறு தமது பராக்கிரமத்தினால் கொளுத்துகிறவர் போலச் சஞ்சரிக்கும் கண்ணனைக் கண்டு அரசர்கள் பரவசர்களாகிக் கிருஷ்ணனுக்குத் தக்க மரியாதையைச் செய்தனர். ஜனமேஜய

ராஜாவே! சிறந்த கைகளையுடையவரும் அசுர சிரேஷ்டர்களை அழிப்பவரும் பகைவர்களான வீரர்களைக் கொல்லுகிறவருமாகிய அந்த யாதவ வீரர், அவ்வரசர்களை நோக்கி இன்சொல்லாகச் சொல்லலானார். 'அரசர்களே! நீங்களெல்லோரும் என கட்டளையினால் அச்சமற்றுச் சேனைகளுடன் செல்லுங்கள். தான் கெட்ட இந்தப் பாவி உங்களையும் கெடுக்கலாகாது. இவன் எங்களுக்கு முற்றிலும் பகைவன்; யாதவர்களை இம்சை செய்பவன்; யாதவ குலத்துப் பெண்ணின் மகனாயிருந்தும் யாதவர்களிடத்திலேயே மிக்க பகைகொண்டாடுகிறான். அரசர்களே! கொடிய செய்கைக் காரனாகிய இவன் எனக்கு அத்தை மகனாயிருந்தும் நாம் பிராக்ஜ்யோதிஷ நகரத்திற்குச் சென்றதை அறிந்து துவாரகையைக் கொளுத்தினான். முன்னே போஜ ராஜனாகிய உக்ரசேனன் ரைவதக மலையில் விளையாடிக்கொண்டிருக்கையில் யாதவர்களனைவரையும் அடித்தும் சிறைபிடித்தும் தன் ஊருக்குத் திரும்பிச் சென்றான். என் தந்தை அசுவமேத யாகத்துக்காகக் காவலாளிகளின் காப்புடன் விடுத்த குதிரையை யாகத்திற்கு இடையூறு செய்வதற்காக இந்தக் கெடு நினைவுள்ள இவன் கொண்டு போனான். குற்றமற்ற பப்ருவென்னும் யாதவனுடைய மனைவி தன் தேசத்திலிருந்து ஸௌவீர தேசத்துக்குப் போனபோது அவள் இஷ்டப்படாமலிருந்தும் தனது காம மயக்கத்தினால் அவளை எடுத்துக்கொண்டுபோனான். இவன் தனது மாதுலனுக்குத் தீங்கிழைப்பவனாக மாயையினால் மறைந்து விசாலனுடைய புதல்வியாகிய பத்ரை யென்பவளை அவள் துயரப்படும்படி குகுரர்களையும் அந்தகர்களையும் கொன்று அவர்களின் மனைவிகளை அழவைத்துக் கரூச தேசத்தரசனுக்காகக் கொண்டுபோனான். கெட்ட எண்ணமுள்ள இவன் தந்தையினால் வரிக்கப்பட்டவளும் பதிவிரதையும் விசால ராஜன் பெண்ணுமான பத்ரையைப் பரபரப்புடன உள்ளே பிரவேசித்து எடுத்தான். இவன் என்னை ஜயிக்கக் கருதிக் கரூச ராஜாவுடன் சிநேகஞ் செய்துகொண்டு ஜராசந்தனை அடுத்து எனக்கு இன்னாதவற்றைச் செய்தான். அரசர்களே! அவற்றையெல்லாம் நான் எண்ணமுடியாது. இவ்வாறு இவன் யாதவர்களுக்கு எல்லையில்லாத தீங்குகள் செய்தவன். இவன் மிகக் கபடமாகவே நம்முடைய விஷயத்தில் அநேக காரியங்களைச் செய்தான். 'இவனைக் கொல்லுவதற்குரிய குற்றங்கள் நூற்றை நாம் பொறுப்போம்' என்று இவன் தாயாருக்கு நான் செய்த கொடிய சபதங்களினால் நான் கட்டுப்பட்டிருந்தேன். அவ்வாறாகவே, இவனை அழிப்பதற்குரிய குற்றங்கள்

நூறும் என்றால் பொறுக்கப்பட்டன. இவனைக் கொல்லுகிற காலமாகிய இந்தச் சமயத்தில் நான் எவ்வகையிலும் பொறுக்கக் கூடாத பிழைகள் இரண்டுள்ளன. 'யாகத்துக்கு இடையூறு செய்ப வனைக் கொல்வேன; பாண்டவர்களுக்கு விரோதியைக் கொல் வேன்' என்ற இரண்டுவகை நிச்சயம் எனக்கு இருக்கிறது. அதை நான் எப்படி மாற்றுவேன்? என் தந்தையின் சகோதரிக் காக மிகப் பெருந்துயரத்தை நான் பொறுத்துக்கொண்டிருக் கிறேன். நற்காலத்தினால் இந்தக் குற்றம் இப்போது எல்லா ராஜாக்களின் முன்னிலையிலும் நடந்திருக்கிறது. இப்போது என் விஷயத்தில் இவன் அளவுக்கு மீறிச் செய்த அக்கிரமத்தை நீங்களே பார்க்கிறீர்களல்லவா? நீங்கள் பாராமலிருக்கும்போது செய்தவற்றையும் நீஙகளே ஊஹித்துத் தெரிந்துகொள்ளலாம். எல்லா அரசர்களும் நிரம்பின ஸதஸில் இவன் கர்வத்தோடு செய்த இந்தவதத்திற்குரிய அக்ரமத்தைமட்டும் நான் பொறுக்க முடியாது. இறப்பதற்கு ஆசையுள்ள இந்த மூடன் ருக்மிணியின் மேல் ஆசைகொண்டிருந்தான். சூத்திரன் வேதமோதலைப் பெறு வதுபோல இவன அந்த இஷ்டத்தை அடையாமற்போனான்' என்றார்.

அங்கே சேர்ந்திருந்த அவ்வரசர்களனைவரும் இவ்வாறு சிசு பாலனைப்பற்றிய தூஷணையைக் கண்ணன் சொல்லக் கேட்டனர். வாசுதேவருடைய சொல்லைக் கேட்டவுடன், சேதிராஜனை இகழ்ந் தனர். ரதத்தின் நடுவில் சேதிராஜன் கோபத்தோடு வில் எடுத்து அம்புகளைத் தொடுப்பதைக் கேட்டும பார்த்தும் அரசர்க ளனைவரும் மிக்க பயமுற்று, சேதிராஜனைச் சேனைத்தலையில் விட்டு விட்டு விரைந்து ஓடினர். சிறந்த பராக்கிரமமுளள சிசு பாலன் அந்தக் கிருஷ்ணன் சொல்லைக் கேட்டு இரைச்சலுள்ள அட்டகாசஞ்செய்து கிருஷ்ணனைப் பார்த்து, 'கிருஷ்ண! ருக் மிணியை நான் முதலில் வரித்ததற்காக ராஜசபையில் விசேஷ மாகச் சொல்லியும் நீ வெட்கப்படாமலிருபபதேன்; மதுஸூதன! உன்னைவிட வேறு எந்தப் புருஷன் தன் மனைவியை வேறொரு வன் முன்னால் வரித்ததாக அறிந்து அதைச் சான்றோரிடம் விளம்புவன்? கிருஷ்ண! உனக்கு என் விஷயத்தில் விசுவாசமும் பொறுக்க விருப்பமுமிருந்தால் பொறு. இல்லாவிட்டால் பொறாதே. நீ கோபமுற்றாலும் அனுக்கிரகமுற்றாலும உன்னால் எனக்கு என்ன ஆகும?' என்றான். ஜனமேஜயரே! அந்தச் சிசு பாலன் அவ்வரசர்களனைவரும கிருஷ்ணனுடைய மகிமையினா லேயே வலிமையற்றுக் குதிரைகளோடும் காலாட்களோடும் தேர்களோடும் யானைகளோடும் ஓடிப்போனதைக் கண்டு.

கோபத்தினாற் சிவந்த கண்களுடன் விட்டிற்பூச்சி தீயை எதிர்த்துப் போவதுபோல ஒற்றை ரதத்தினாலேயே கிருஷ்ணனை எதிர்த்துச் சென்றான்.

---

## அறுபத்தோன்பதாவது அத்தியாயம்

## சிசுபால வத பர்வம் (தொடர்ச்சி)

**(சிசுபாலனுக்கும் கிருஷ்ணனுக்கும் யுத்தம் ஆரம்பித்தபோது உண்டான துர் நிமித்தங்களையும் அவற்றின் லட்சணங்களையும்பற்றி யுதிஷ்டிரருக்கு நாரதர் உரைத்தது)**

அப்போது புத்திமான்களிற் சிறந்தவராகிய யுதிஷ்டிரர், சிசுபாலன் யுத்தத்திற்காக ஸன்னாஹம் செய்துகொண்டிருந்ததைக் கண்டு நாரதரிடம், 'ஓ! மகரிஷியே! ஆகாயத்திலும் பூமியிலும் எவ்விடத்திலும் உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. இபபோது அரசர்களின் நாசக்குறிப்பாகப் பூமியிலும் ஆகாயத்திலும் பலவகையான எந்த [1] உத்பாதங்களும அபசகுனங்களும உண்டாகின்றனவோ அவற்றையெல்லாமபறறி உமமிடத்தில் கேட்க விரும்புகிறேன்' என்று கேட்டார். இவ்வாறு கேட்ட சிறந்த புத்திமானான தர்மராஜருக்குச் சிறந்த அறிவுள்ளவரும் பெருமபுகழ்பெற்றவருமான நாரத முனிவர் எல்லாவற்றையும் தெளிவாகச் சொல்லலானார்.

'குருசிரேஷ்டனே! ஜ்யோதிஷ சாஸ்திரம் கற்றுணர்ந்தவன் கிரகங்களின் பராக்ரமத்தையும் செல்லும் வழியையும சேருதலையும் உச்சத்தையும் [2] ஆரோகணத்தையும் ஒன்றையொன்று எதிர்த்துச் செல்வதையும கிரணஙகள சேருவதையும முயற்சியோடிருப்பதையும நிலைகுலைதலையும் காணக்கூடிய கிரகங்கள காணப்படாதிருத்தலையும் காணக்கூடாதவை காணப்படுதலையும் நீசமடைதலையும் வீறறக்குறைவுகளையும் நிறத்தையும் இடத்தையும் பலாபலன்களையும முழுதும் பரீட்சிக்கவேண்டும். இவ்வுலகத்தில் தெய்விகமாக உண்டாக்கப்பட்ட உத்பாதங்கள், பூமியைச் சார்ந்தவை முதலிலும், ஆகாயத்தைச் சார்ந்தவை பிறகும் உண்டாகின்றன. சூரியன் மேற்றிசையில் இருக்கும்போது எல்லாப் பொருளகளின் நிழலும கிழக்கே திரும்பாமலிருந்தால் தோல்விக்கு அஃது ஓர் அடையாளம். எப்போது கிராமங்களிலுள்ள [3] தலைமையான மரங்களின் நிழல் (வெயிலில்லாமலிருக்கும்

1 எரிகொள்ளி விழுதல் முதலிய அபசகுனங்கள்
2 மேறசெல்லுகை, அல்லது அபிவிருத்தி.
3 மூலத்தில் 'சைத்யகா:' என்றிருக்கிறது.

போது)பிரதிபிம்பம்போலத் தெளிவாகக் காணப்படுகிறதோ அப்போது பெரிய அச்சத்தை அறியவேண்டும். கிராமங்களின் தலைமையான மரங்கள் இலைகள் உலர்ந்தும் இலைகளும் தளிர்களும் (அகாலத்தில்) உதிர்ந்தும் துளிர்கள் கெட்டும்போமாயின் அப்போது நாசத்தைச் சொல்லவேண்டும். கிராமவிருக்ஷங்கள் செழித்த இலைகளும் தளிர்களுமுள்ளவையாகவும் விருத்தியடைகிறவையாகவும் காணப்படுமாயின் அபபோது க்ஷேமத்திற்கு சந்தேகமில்லை. பூவின்மேல் பூவும் காயின்மேல் காயும் சேர்ந்து உண்டாகுமாயின் அப்போது ராஜாவாயினும் ராஜாவைப்போன்றவனாயினும் மரணமடைவான். கார் காலம் சரத் காலம் பனிக் காலம் வசந்த காலம ஆகிய எல்லாக் காலங்களிலும் அவ்வக் காலத்திற்கு உரியவை யல்லாத மலர்களும் கனிகளும் உண்டாகுமாயின தேசத்தில் கலகத்தை உரைக்கவேண்டும. அகாலத்தில் நதிகள் பெருகுவதும் மகா பயத்திற்குக் குறிப்பாம். சிலாக்கியமான மரமானது பூஜிக்கப்பெற்றதாயினும் பெறாததாயினும் காற்றினால் முறிக்கவாவது பெயர்க்கவாவது சாய்க்கவாவதுபடுமாயின அக்னி பயத்தையாவது வாயு பயத்தையாவது அறியவேண்டும. சிறந்த மனிதனாவது அழிந்து போவான். திசைகளெல்லாம் எரியுமாயின் அரசர்களுக்கு மாறுதல்கள் உண்டாகும். வெட்டித் தள்ளப்பட்ட மரம் சத்தஞ் செய்யுமாயின் அதனுடன்கூட அந்த ராஜ்யமே விழுந்துபோகும். ஆதலால், மரத்தை வீழ்த்தலாகாது. மரத்தை ஒருவன் வெட்டுவிப்பானாயின் அந்த மரம் அவன்மேல் அதற்காகக் கோபிக்கும். வெட்டினவனும் பெயர்த்தவனும் அம்மரத்திற்கு உடையவனும் உடனே அழிவார். தேவதா விக்கிரகங்கள் விழுவதும் மண்டபங்கள் இடிவதும மலைகள் அசைவதும் தோல்விக் குறிகள். இரவில் வானவில்லைக் கண்டாலும் அதனால் பெரும் பயமுண்டு. பரதசிரேஷ்டனே ! ஆனால், அதைக் கண்டவனுக்குமட்டும் பயமுண்டாகுமே யன்றி மற்றவனுக்கு இராது. இரவில் வானவில்லைக் கண்டவன் உடனே அந்தத் தேசத்தை விடக்கடவன். எங்கே தேவதா விக்ரகங்கள் ஆடவும் கூவவும் நகைக்கவும் கண் திறக்கவும் கண் மூடவும் செய்கின்றனவோ அந்தத் தேசத்தில் கலகத்தைச் சொல்லவேண்டும். கற்களினின்றும் நீர்க்கசிவுகளும் மற்ற எவ்வகையான மாறுதல்களும் உண்டாகுமாயின் அவை பயத்திற்கு அடையாளங்கள் ; பெரிய மனிதர்களாயினும் பரிஜனங்களோடு கூடிய அரசனாயினும் இறந்துபோவார்கள் ; நகரத்தில் வியாதியாவது உண்டாகும் ; ராஜ்யத்திலும் தேசத்திலும் கலக்கங்களாவது உண்டாகும். தேவதைகளின் ஆலயங்

களிலும் அரசர்களின் அரண்மனைகளிலும் பூஷணசாலைகளிலும் ஆயுதசாலைகளிலும் தேன கட்டப்படுமாயின் அப்போது அந்தத் தேசமே மேலான பலவாறுல் அழிக்கப்படும். அந்தத் தேசத்தில் திடீரென்று பயமுண்டாகுமென்றே சொல்லவேண்டும். மரத்திலிருந்தும் யானையின தந்தத்து நுனியிலிருந்தும் காளைமாட்டின் கொமபிலிருந்தும சிவந்த ரத்தம் பெருகுமாயின், மரத்தில் பெருகுவதனுல் தேசம் போவதும், யானைத்தந்தத்திற் பெருகுவதனுல் அரசு மாறுவதும், மாட்டுக்கொம்பிற் பெருகுவதனுல் பசுக்களுக்கும் பிராமணர்களுக்கும் நாசமுண்டாகுமென்றும் சொல்லலாம். அரசனே! ராஜாவின் குடை தரையில் விழுமாயின் அவ்வரசனும் அவன் ராஜ்யமும் உடனே அழிந்துவிடும். தேவாலயங்களிலும ராஜகிருகங்களிலும் யானை கட்டுகிற இடங்களிலும் வேறுபாடு காணப்படுமாயின் அந்தத் தேசத்திற்கும் ராஜாவுக்கும ஊருக்கும் பீடையுண்டாகும். கொடிய [1] அநாவிருஷ்டி பயத்தையும் பெரும் பஞ்சத்தையும் சொல்லவேண்டும். தேவதா விக்கிரகங்களின் கைகள் ஒடிவதனுல் கிருகஸ்தர்களுக்குப் பயமுண்டாகும். (அவற்றின்) ஆயுதம் ஒடிந்தால் சேனுபதி இறப்பானென் றறியவேண்டும். புதிதாக வந்த தேவதா விக்ரகம் ஆறு மாதத்திற்குள் இடத்தில் நிலைபெறுத்தப்படாமற் போமாயின, அந்நகரத்தை ராஜா விட்டுவிடுவான். பூமி வெடித்தாலும் சத்தஞ்செய்தாலும் இடிந்து விழுந்தாலும் அந்தத் தேசத்து அரசன் இறப்பான்; தேசமும் கெடும. ஏணீபதம், ஸர்ப்பம், டுண்டுபம், தீப்யகம் என்னும் பாம்பு ஜாதிகளைத் தவளை விழுங்குமாயின் அங்கே ராஜநாசம் உண்டாகும். அன்னமானது ஒன்றும் சேர்க்கப்படாமலும் சமைக்கப்படாமலும் அதிகப்படுமாயின் அந்தத் தேசத்தார் நோயுற்று இறந்துபோவர். அந்த அன்னத்தை அவர்கள் புசியார். யுதிஷ்டிரா! (தடாகம் முதலிய)ஜலாசயங்களில் நீர் பொங்கினுலும், மரம் முதலிய தாவரங்களில் தண்ணீர் உண்டானுலும் அங்கிருந்து வெளிப்பட்டாலும், பெண்கள் காலில்லாமலாவது மூன்று கால்கள் இரண்டு தலைகள் நான்கு கைகளோடு கூடவாவது இருக்கும் குழந்தையைப் பெற்றாலும் அந்தத் தேசத்திற்குத் தோல்வியைச் சொல்லவேண்டும். வெள்ளாடுகளும் செம்மறியாடுகளும் பெண்களும் பசுக்களும் மற்றுமுள்ள பல ஜாதிகளும் இயற்கைக்கு மாறுன சந்ததிகளைப் பிரசவித்தால் அந்தத் தேசத்தில் தோல்வி நிச்சயம். நதியானது கலங்கின ஜலமாக எதிர்நோக்கிச் சென்றாலும் திசைகள் ஒளியில்லாமற்போனுலும அவை தோல்விக் குறிகளாம். பாரதனே! இவையும், பூமியையும் ஆகாசத்தையும் சேர்ந்த மற்றுமுள்ள

1 மழையின்மை.

சகுனங்களும் கிருஷ்ணனுலேயே உண்டாகின்றன. பாரதனே! சந்திர சூரியர்கள், கிரகங்கள், நட்சத்திரங்கள், காற்று, நீர், நிலம் இவையனைத்தும் கிருஷ்ணனிடமிருந்து உண்டானவை. எந்தத் தேசத்துக்குக் குறைவையாவது விருத்தியையாவது கிருஷ்ணன் செய்ய விரும்புகிருரோ, அந்தத் தேசத்தில் அதற்குத்தக்க சகுனங்களை இவரே உண்டுபண்ணுகிருர். அப்பா! அந்தக் கிருஷ்ணன் இப்போது தம்மாலுண்டான நிமித்தங்களாலேயே சேதி ராஜனுன சிசுபாலனுக்கு நாசம் வந்திருப்பதைத் தெரிவிக்கிருர்; சந்தேகமில்லை. அரசனே! இதோ பூமி அசைகிறது. கெட்ட காற்று வீசுகிறது. பருவமில்லாத காலத்தில் ராகு சந்திரனைப் பிடிக்கிருன். இடிகளோடு எரிகொள்ளிகள் விழுகின்றன. இருள் மிகுதியாக உண்டாகிறது. சிசுபாலனை அழிப்பதற்காக இந்தக் கிருஷ்ணன் விருத்தியடைகிருர்' என்ருர். தேவரிஷியாகிய நாரதர் இவ்வாறு சொல்லி ஓய்ந்தார். புருஷ சிம்மங்களான சிசுபாலனுக்கும் கிருஷ்ணனுக்கும் அந்த யுத்தம் நேர்ந்தபோது, அவ்வரசர்கள் பயங்கரமான அநேகம் துர்நிமித்தங்களைக் கண்டனர். பாரதரே! வேந்தரே! அப்போது அவ்விடத்தில் எல்லாத் திசைகளிலும் நரிகள் காணப்பட்டு அமங்களகரமான அவற்றின் ஊளைகளும் கேட்கப்பட்டன. மரங்களும் காடுகளும் மலைகளும் அடங்கின பூமியனைத்தும் சப்தித்தது. அமாவாசையல்லாத தினத்தில் மத்யானனத்தில் சூரியனை ராகு விழுங்கினன். வீரரே! எல்லா ரத்னங்களாலும் அலங்கரிக்கப்பட்ட சிசுபாலனுடைய கொடியின்மேல் கூர்மையான மூக்குள்ள கழுகு ஆகாயத்தினின்றும் இறங்கி உட்கார்ந்தது. அந்த யுத்தம் நேர்ந்தபோது காடுகளிலும் நாடுகளிலும் உள்ள மிருகங்களும் பட்சிகளும் அங்கே வேகமாக உற்சாகத்தோடு சேர்ந்து பயங்கரமாகக் கூவின. கிருஷ்ணன் கோபித்தபோது பூமியிலும் ஆகாயத்திலும் இவ்வகையான கொடிய துர்நிமித்தங்கள் காணப்பட்டன.

---

எழுபதாவது அத்தியாயம்

## சிசுபால வத பர்வம் (தொடர்ச்சி)

### (சிசுபால வதம்)

பிறகு, சேதிதேசாதிபதியான சிசுபாலன், பெரிய வில்லை நாணேறிட்டு ஹ்ருஷீகேசரான மதுஸூதனரை எதிர்த்துச் செல்லும்போது அவரைப் பார்த்து, 'ஓ! மாதவா! எனககு நீ ஒரு

சத்ருவே இருக்கிறாய். ஆகையால், இப்போது உன்னைக் கொன்றுவிட்டுப் பிறகு கடல் சூழ்ந்த புவனியை ஆள்வேன். வாசுதேவா! நான் உன்னோடு வெகுகாலமாக விரும்பின இருதேர்ச் சண்டை எனது பாக்கியத்தினால் இப்போது எனக்கு நேர்ந்திருக்கிறது. ஆ! ஆ! இப்போது உன்னையும் பீஷ்மனையும் பாண்டவர்களையும் சேர்த்துக் கொல்லப்போகிறேன்' என்று சொன்னான். அந்தச் சிசுபாலன் இவ்வாறு சொல்லி, சாணை பிடிக்கப்பட்டுக் கூர்மையான முனையுள்ள உக்கிரமான பாணங்களினால் யுத்தத்தில் கிருஷ்ணனை அடித்தான். சேதிராஜனுடைய வில்லினின்றும் வெளிப்பட்ட கழுகு இறகுகள் கட்டப்பட்ட அந்த அம்புகள் அரவங்கள் மலையிற் பிரவேசிப்பதுபோலக் கிருஷ்ணனிடத்தில் பிரவேசித்தன. அந்தச் சிசுபாலன் பாணங்களை எடுப்பதற்கும் விடுப்பதற்கும் இடையிலுள்ள காலம் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் காற்றின் நடைபோல யாவர்க்கும் புலப்படாமலிருந்தது. அம்புகளின் கோவைகளென்னும் நீர்த்தாரைகளை வர்ஷிக்கும் சேதிராஜனென்னும் மகாமேகமானது, மலையின்மேல் மேகம் வர்ஷிப்பதுபோலக் கிருஷ்ணன்மேற் பொழிந்தது. வீரர்களாகிய சத்ருக்களை அழிப்பவரும் சிறந்த கைகளையுடையவருமாகிய கிருஷ்ணன் உடனே தம் சார்ங்கமென்னும் வில்லில் அம்பு தொடுத்துக்கொண்டு சுநீதனை நோக்கி, 'ஓ! சேதிராஜனே! எனது உக்கிரமான இந்தப் பெரிய பாணம் சிறந்த வஜ்ராயுதம் மலையைப் பிளப்பதுபோல உன்னை விரைவாகப் பிளக்கத்தக்கது' என்று சொன்னார். கோவிந்தர் இவ்வாறு சொல்லும்போது சேதிராஜன் மறுபடியும் அநேகம் கூர்மையான அம்புகளைக் கிருஷ்ணனைக் குறிப்புவைத்து எய்தான். பராக்கிரமசாலியான கிருஷ்ணன் அவன் பாணங்களால் அடிக்கப்பட்டுத் தமது சார்ங்கத்தை வளைத்துக் கூர்மையான பாணங்களை நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் விடுத்தார். அந்தச் சேதிராஜன், அந்தப் பாணங்களையும் அம்புகளைப் பொழிந்து துணித்துவிட்டு, உடனே வேறு ஆறு பாணங்களினால் கிருஷ்ணனையும் அடித்தான். உலகத்திற்குத் தந்தையான கிருஷ்ணன் உடனே அஸ்திரத்தை விட்டார். சிறந்த கைகளையுடைய சிசுபாலன் அந்த அஸ்திரத்தை அஸ்திரத்தினாலே தடுத்தான். அதன் பிறகு, பலமும் பராக்கிரமமுமுள்ள சிசுபாலன் கோபித்துத் தாழ்ந்த கணுக்களோடுகூடிய லக்ஷம் பாணங்களை வசுதேவ புத்திரரான கிருஷ்ணனைச் சுற்றிலும் இறைத்துக் கர்ஜித்தான். பகைவர்களான வீரர்களைக் கொல்லுகிறவனான சிசுபாலன் கிருஷ்ணனை நோக்கி மிக்க கோபத்துடன், 'இப்போது என் பாணங்கள் யுத்தத்தில் உன்

தேகத்தைப் பிளக்கப்போகின்றன. உன்னையும் உனது புத்திரர்களையும் அமைச்சர்களையும் பராக்கிரமசாலிகளான பாண்டவர்களையும் கொன்று சிறந்த புத்தியுள்ள ஜராசந்தன், கம்சன, கேசி, நரகன் இவர்களுடைய கடனையும் அப்படியே தீர்த்துக்கொள்ளப்போகிறேன' என்று சொன்னன். இவ்வாறு சொல்லிக் கோபத்தினால் சிவந்த கண்களையுடைய சிசுபாலன, நாற்புறங்களிலும் பாணங்களை வர்ஷித்துக் கிருஷ்ணனை மறைத்தான். பிறகு, கிருஷ்ணன் அஸ்திரத்தினலேயே அநேக பாணங்களையும அறுத்துப் பாண வர்ஷங்களினல் சிசுபாலனையும் மறைக்கத் தொடங்கினர். மகாரதர்களான அவ்விரண்டு வீரர்களும் மறைந்துபோனதைக் கண்டு அவ்விருவரையும் எல்லாப் பிராணிகளும, 'நல்லது, நல்லது; இப்படிப்பட்ட யுத்தம் இதற்குமுன் நாங்கள் கண்டதில்லை' என்று புகழ்ந்தன. பிறகு சிசுபாலன் மூன்று பாணங்களினல் கிருஷ்ணனை உடனே அடித்தான். கிருஷ்ணனும அந்த யுத்தத்தில் ஐந்து பாணங்களினல் சிசுபாலனை அடித்தார். பலசாலியான கிருஷ்ணன் மறுபடியும் எழுபது பாணங்களினல் சிசுபாலனை அடித்தார். கிருஷ்ணனல் அதிகமாக அடிக்கபபட்ட சிசுபாலன் கோபம் மேற்கொண்டு கூர்மையான பாணங்களினல் கிருஷ்ணனை மார்பில் அடித்தான். அவன மறுபடியும சமயம பார்த்து மூன்று பாணங்களினல் கிருஷ்ணனை அடித்துக் கர்ஜித்தான். பிறகு, மிகக் கொடிய யுத்தத்தை அவ்விருவரும் வேகமாகச் செய்தனர். அப்போது யுத்தத்தில் அவ்விருவரும் நகங்களால் புலிகள் போலவும், தந்தங்களினல் மகாகஜங்கள் போலவும், கோரப்பற்களினல் சிங்கங்கள் போலவும், கால்களினல் கோழிகள் போலவும் கூர்மையான பாணங்களினல் ஒருவரையொருவர் பிளந்தனர்; அப்போது கோபித்து மிகச் சிறந்த சரமாரியைப் பொழிந்தனர். அவ்விரண்டு புருஷ சிரேஷ்டர்களும் பாணங்களாலேயே பாணங்களைத் துணித்து மனிதர்களுக்கு முடியாத பயங்கரமான அஸ்திர யுத்தத்தைச் செய்தனர். பராக்கிரமசாலியான சிசுபாலன் ஆக்னேயாஸ்திரத்தை விடுத்தான். கிருஷ்ணன் உடனே அதனை வாருணஸ்திரத்தினல் அழித்தார். சிசுபாலன் உடனே குபேராஸ்திரத்தைப் பிரயோகித்தான். ஜகத்பிரபுவான கண்ணன் அதைக் குபேராஸ்திரத்தினலேயே விரைவாக அழித்தார். பிறகு, காலத்தினல் மதிதப்பின சிசுபாலன் கோபித்து யமாஸ்திரத்தைப் பிரயோகித்தான். கிருஷ்ணன் யமாஸ்திரத்தினலேயே யமாஸ்திரத்தை அடித்தார். கிருஷ்ண பகவான் கந்தர்வாஸ்திரத்தினல் கந்தர்வாஸ்திரத்தையும், மானவாஸ்திரத்தி

ஞல் மானவாஸ்திரத்தையும் வாயவ்யாஸ்திரத்திஞல் வாயவ்யாஸ்திரத்தையும், ரௌத்ராஸ்திரத்திஞல் ரௌத்ராஸ்திரத்தையும், ஐந்திராஸ்திரத்திஞல் ஐந்திராஸ்திரத்தையும், வைஷ்ணவாஸ்திரத்திஞல் வைஷ்ணவாஸ்திரத்தையும் அடித்தார். மகா பலசாலியான அவர்கள் இவ்வாறு அஸ்திரங்களைப பிரயோகித்து யுத்தஞ் செய்தனர். பலசாலியான சிசுபாலன் பிறகு யுத்தத்தில் மாயையை உண்டாக்கி, கதாயுதங்கள், முஸலங்கள், சக்தியாயுதங்கள், தோமரங்கள், அம்புகள், கோடாலிகள், முசுண்டிகள் இவற்றைக் கிருஷ்ணன் மேற் பொழிந்தான். கேசியைக் கொன்றவராகிய கிருஷ்ண பகவான் அவற்றை யெல்லாம் வீணுகாத அஸ்திரத்திஞல் அழித்தார். யுத்தத்தில் சேதிராஜன் மிகக் கொடிய கல் மழை பொழிந்தான். பிரபுவானவர் கோபித்து அதை வஜ்ராஸ்திரத்திஞல் பொடி செய்தார். அதன் பிறகு, சேதிராஜன் பயங்கரமான ஜலவர்ஷத்தைப் பொழிந்தான். கிருஷ்ண பகவான் வாயவ்யாஸ்திரத்திஞல் அதை நூறு கூறுக்கி விலக்கிவிட்டார். மகாரதரான கிருஷ்ணன் சிசுபாலனுடைய மாயைக ளெல்லாவற்றையும அடித்துச் சற்றுநேரம் அவனுடன் சம யுத்தம் செய்தார். தமகோஷன் மகஞன அந்தச் சேதிராஜன் பாண யுத்தஞ் செய்துகொண்டே கிருஷ்ணனைப் பயமுறுத்தி, ‘இப்போது என் பாணங்கள் கிருஷ்ணனைக கிருஷ்ணஞயில்லாமற் செய்யட்டும்' எனறு துணிவாகச் சொன்ஞன். துஷ்ட புத்தியுளளவனும் சிறந்த வீரனுமான சிசுபாலன் இவ்வாறு சொல்லிக் கிருஷ்ணன்மேல் உக்கிரமான சரமாரி பொழிந்தான். ஒரு நொடி நேரத்தில் பாணங்களிஞல் அறுக்கப்பட்ட அஙகங்களையுடைய கண்ணபிரான் மதயானையானது மதஜலத்தைப் பெருக்குவதுபோல ரத்தத்தைப் பெருக்கிஞர். மகாத்மாவான கிருஷ்ணனுடைய ஸாரதியும் ரதமும் மலைகள போன்ற குதிரைகளும் பாணங்களால் மறைக்கப்பட்டுக் காணபபடாமறபோயின. கிருஷ்ணன் அந்த நிலைமையிலிருந்ததைக் கண்டு பிராணிகள் கதறின. அப்போது தாருகனென்றும் ஸாரதி, யாதவ சிரேஷ்டரான கிருஷ்ணனை நோக்கி, ‘மாதவரே! இப்படிப்பட்ட சண்டையை இதற்குமுன் நான் கண்டதில்லை. உமது பிரபாவத்திஞல் நிற்கலாமென்று நிற்கிறேன். ஜஞர்த்தனரே! இல்லாவிட்டால் என் உயிர் நில்லாது. கோவிந்தரே! ஆதலால், நனருக ஆராய்ந்து உடனே இவனை வதஞ்செய்யக் கடவீர்' என்ருன். இவ்வாறு ஸாரதியிஞற் சொல்லப்பட்ட கேசவர், (அவனை நோக்கி ‘இவன் முன்னே தேவர்களுக்குச் சத்ருவும் வரம்

பெற்றதனால் கர்வமடைந்தவனும் அதிகப் பலசாலியுமான ஹிரண்யகசிபு வென்னும் அசுரனாக இருந்தான். பிறகு அதிகப் பராக்கிரமசாலியான ராவணனென்னும ராக்ஷஸனாகப் பிறந்தான். அந்தப் பலத்தின் வன்மையினாலேதான் என் பலத்தை மதிக்க வில்லை. இந்தத் துராத்மாவுக்கு ஒவ்வொரு காலத்திலும் நானே யமனாயிருப்பவன். ஸாரதியே! ஆதலால், அச்சப்படவேண் டாம். நானிருக்கும்போது இவனொன்றுமில்லை' என்று சொன் னார். கருடக்கொடியை யுடையவரான கிருஷ்ண பகவான் இவ் வாறு சொல்லிக் கர்ஜித்துப பாஞ்சஜன்ய மென்னும் மகாசங் கத்தை ஊதி மயங்கச் செய்து தமது திவ்யமான சக்ராயுதத்தை எடுத்தார். சக்ராயுதத்தினால் யுத்தத்தில் சுநீதனுடைய சிரத்தை அறுத்தார். சிறந்த கைகளையுடைய சிசுபாலன வஜ்ராயுதத்தி னால் அடிக்கப்பட்ட மலைபோல விழுந்தான். ஜனமேஜய மகா ராஜாவே! உடனே ஆகாயத்திலிருந்து சூரியன் உதயமாவது போலச் சேதிராஜனுடைய தேகத்திலிருந்து கிளம்பின சிறந்த ஒளியை அரசாகள கண்டனர். அரசனே! அந்தச் சிறந்த ஒளி யானது அப்போது உலகங்களால் நமஸ்கரிக்கப் பெற்றவரும் தாமரைக் கண்ணருமாகிய கிருஷ்ணனை வந்தனஞ் செய்து அவ ருக்குட் பிரவேசித்தது. அந்த ஒளி சிறந்த கைகளையுடைய புருஷோத்தமரிடம் பிரவேசித்ததைக் கண்டு அரசர்களனைவரும் ஆச்சரியமென்று நினைத்தனர். கிருஷ்ணனால் சிசுபாலன் கொல்லப்பட்டபோது மேகமில்லாமலே ஆகாயம் மழை பெய் தது; ஜ்வலித்துககொண்டு இடி விழுந்தது; பூமி நடுங்கிற்று. சொல்லுக்கெட்டாததான அந்தக் காலத்தில் கிருஷ்ணனைக் கண்ட அரசர்களில் சிலர் ஒன்றும் பேசவில்லை; மற்றும் சிலர் கோபித்துக் கைகளாற் கைகளைப பிசைந்தனர். வேறு சிலர் கோபமேற்கொண்டு பற்களால் உதடுகளைக் கடித்தனர். சில அரசர்கள் ரகசியமாகக் கிருஷ்ணனைப புகழ்ந்தனர். சிலர் மிகக் கோபித்தவராகவும் சிலர் மத்யஸ்தராகவு மிருந்தனர். மகரிஷிகள் மகிழ்ந்து துதித்துக்கொண்டு கிருஷ்ணனிடம் சென்றனர். மகாத் மாக்களான பிராம்மணர்களும் மகா பலசாலிகளான அரசர்களு மாகிய அனைவரும் கிருஷ்ணனுடைய பராக்கிரமத்தைக் கண்டு சந்தோஷமாகச் சிலாகித்தனர். தேவ கந்தர்வக் கூட்டங்களும் பூமியிற் பெயர்பெற்ற அரசர்களும் மகாத்மாவான கிருஷ்ண னுக்கு நமஸ்காரஞ் செய்தனர். இவ்வுலகத்தில் க்ஷத்திரியர்க ளாகப் பிறந்த அசுரக்கூட்டத்தார்களும் ஆயுள் குறைந்தவர்களு மான துராத்மாக்கள் மட்டும் கிருஷ்ணனை நிந்தித்தனர். பிரம்ம தேவரைச் சேர்ந்தவர்களும் மகாத்மாவான கிருஷ்ணனிடத்தில்

மத்தியஸ்தர்களுமான பிரம்மரிஷிகளும் ஸித்தர்களும் கந்தர்வர்களும நாகர்களும் சாரணர்களும் மங்களமான தேவகானங்களால் கிருஷ்ணனைத் துதித்தனர்; பலவகையாகப் பாடி ஆடினர்; மகாத்மாவான கிருஷ்ணனிடம் அன்புகூர்ந்து அவரிடம் வந்தனர். மகரிஷிகளும் பிராமணர்களும் மகா பலசாலிகளான பாண்டவர்களும் மகிழ்ந்து மிக்க அன்புடன் துதித்துக்கொண்டு கண்ணனிடம் சென்றனர். தர்மராஜர், தம் சகோதரர்களைப் பார்த்து, 'தமகோஷன் மைந்தனும் சூரனுமான சிசுபாலனுக்குச் சிறப்பாகத் தேக ஸம்ஸ்காரம் செய்யுங்கள்; காலதாமதம வேண்டாம' என்று கட்டளையிட்டார். தர்மபுத்திரர் சொன்னதைக் கேட்டவுடன்; அவர் சகோதரர்களும் பரபரப்புடன் அவர் கட்டளையை அப்போதே நிறைவேற்றினர். தர்மராஜர் கிருஷ்ணனுடைய கட்டளையினால் அரசர்கள் அனைவரோடும் சேர்ந்து சிசுபாலன் புத்திரனுக்குச் சேதிராஜ்யாபிஷேகஞ் செய்தார்.

---

## எழுபத்தோராவது அத்தியாயம்

## சிசுபால வத பர்வம் (தொடர்ச்சி)

---

### (ராஜஸூய யாகம் நடந்த வரலாறு)

பிறகு, சிறந்த புத்திசாலியான தர்மராஜருடைய யாகமானது இடையூறுகளும் பூஜையைப்பற்றின கலகங்களும் அடங்கி மகரிஷிகளுடைய கூட்டங்கள் நிரம்பினதாக நடந்தது. சிறந்த கைகளையுடைய கிருஷ்ண பகவான் சார்ங்கத்தையும் சக்கரத்தையும கதையையும் ஏந்திக்கொண்டு அவ்வேள்வியை முடியும்வரையிற் காத்தார. அந்த யக்ஞம் நடக்கும்போது சிறந்த வாக்குள்ள தர்க்கப் பிரசங்கிகள் பிறர் பக்ஷங்களை ஜயிக்கக் கருதினவர்களாய் அநேக யுக்திவாதங்களைப் பேசினர். ஜனமே ஜயரே! உபேந்திரரான கிருஷ்ணனுக்காகவே சகதேவனால் நடத்தபபட்டது போன்ற அந்த யாகத்தின் சிறந்த முறையை அவ்வரசர்கள் கண்டனர். ஜனமேஜய ராஜாவே! அந்த யாகத்தில் பிராமணர்கள் மிக்க விருப்பத்துடன் புண்ய கதைகளைச் சொல்லிக்கொண்டும் நாடகங்களையும நர்த்தனங்களையும் பார்த்துக் கொண்டும இருந்தனர். அந்த யாகத்தில் ஒளியினால் ஜ்வலிப்பவை போன்றவையும் சூரியனைப்போலப் பிரகாசிப்பவையுமான பொற் பனைமரங்களினால் செய்யப்பட்ட தோரணங்களைக் கண்டனர்.

நவக்கிரகங்களினால் ஆகாயம் விளங்குவதுபோல அந்த யாக பூமியானது அந்தத் தோரணங்களினால் விளங்கிற்று. படுக்கைகளும் ஆசனங்களும் விளையாட்டுப் பொருள்களும் குடங்களும் பானைகளும் சால்களும் கலயங்களும் ரத்னமயமாகவும் மிகுதியாகவும் இருக்கக் கண்டனர். அரசர்கள் அங்கே பொன்னல்லாதது ஒன்றையும் காணவில்லை. பலவகையான இனிய உணவுகளைப் புசித்துச் சந்தோஷப்படும் மகாத்மாக்களான பிராமணர்களின் (குரல்) இடைவிடாமல் அங்கே கேட்கப்பட்டது. 'பரிமாறவேண்டும், பரிமாறவேண்டும்' என்றும், 'புசிக்கவேண்டும், புசிக்கவேண்டும்' என்றும இவ்வகையான பேச்சுக்களே எப்போதும் அங்கே கேட்கப்பட்டன. அந்த மகா யாகத்தில் ராஜாவின வேலைக்காரர்கள் பலவகை ருசியுள்ள சித்ரான்னங்களையும் பட்சணங்களையும் இனிய பானங்களையும் பிராமணர்களுக்கு எக்காலமும் அளித்தனர். ஒவ்வொரு நாளும் லக்ஷம் பிராமணர்கள் புசித்ததற்கடையாளமாக ஏற்படுத்தப்பட்ட சங்கம் ஊதப்பட்டது. ஜனமேஜயரே! அந்தச் சங்கினுடைய பெருஞ் சப்தம் அடிக்கடி கேட்கப்பட்டது. அதைக் கேட்டவர்கள் ஆச்சரியமடைந்தனர். ஜனமேஜயரே! இவ்வாறு சந்தோஷமும் போஜன திருப்தியுமுள்ள ஜனங்கள் நிரம்பின யாகம் நடந்தபோது குன்றுகளுக்கொப்பான அநேகம் அன்னக் குவியல்களையும் தயிர் வாய்க்கால்களையும் நெய் மடுக்களையும் ஜனங்கள் கண்டனர். ஜனமேஜயரே! தர்மபுத்திரரின் அம் மகா யாகத்தில் அநேக தேசங்க ளடங்கின. ஜம்புத்வீபு முழுமையும் ஓரிடத்திற் சேர்ந்ததாகக் காணப்பட்டது. அந்த ராஜாவின் மகா யாகத்தில் அநேகமாயிரம் அரசர்கள் தங்கள் வேலைக்காரர்களைக்கொண்டு தனங்களை எடுத்துக்கொண்டு பல தேசங்களிலிருந்து வந்தனர். அரசர்கள் பூமாலைகள் சூடித் துலக்கபபட்ட ரத்னகுண்டலஙகளையணிந்து நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவுமுளள பிராமணர்களுக்குப பரிமாறினர். அரசர்கள் புசிக்கத் தகுந்த பலவகை அன்னங்களையும் பானங்களையும் [1] லேகியங்களையும் அவ்வரசர்கள் பிராமணர்களுக்கு அளித்தனர். பலவகைப் பட்சணங்களையும் இனிய மலர்களையும் கனிகளையும் வெல்லங்களையும் நல்ல தேன்களையும் அவர்கள் பிராமணர்களுக்கு அளித்தனர். பல தேசங்களிலிருந்து வந்த பிராமணர்களனைவரும் அந்த யாகத்தில் இவற்றையெல்லாம் சந்தோஷமாகப் புசித்து எப்போதும் மிகுந்த திருப்தியை அடைந்திருந்தனர். இவ்வாறு தனங்களும் தானியங்களும் மிகுதியாக நிரமபி ஜனங்கள் சந்தோஷமா

1. நக்கிச் சாப்பிடத்தக்கவை.

யிருந்த அந்த யாகசாலையைக் கண்டு அரசர்கள் மிக்க ஆச்சரியத்தை அடைந்தனர். தர்மராஜருடைய ராஜசூய மகா யாகத்தில் ரித்விக்குகள் அனைவரும் சாஸ்திரப்படி அக்னிகளை வளர்த்து முறை தவறாமல் ஹோமங்களைச் செய்தனர். வியாஸர், தௌமியர் முதலான பதினாறு ரித்விக்குகள் தர்மராஜருடைய அந்த மகா யாகத்தில் தம் தம் காரியங்களை விதிப்படி செய்தனர். அந்த யாக ஸதஸில் ஆறு வேதாங்கங்களுந் தெரியாதவனும் மிருதியான கேள்வியில்லாதவனும் நியமந் தவறினவனும் பிறருக்குக் கற்பிக்கத் தகாதவனும் பாவமுள்ளவனும் திறமையில்லாதவனுமான பிராமணன் யாரும் இருக்கவில்லை. அங்கே லோபியும் தரித்திரனுமில்லை. பசித்தவனும் துன்பப்பட்டவனும் இழிவானவனுமான மனிதன் எவனுமில்லை. சிறந்த பராக்கிரமசாலியான சகதேவன் தர்மராஜனுடைய கட்டளையினால் போஜனம் வேண்டினவர்களுக்கு எப்போதும் போஜனம் போடுவித்தான். அக்னி காரியங்களில் சமர்த்தர்களும் சாஸ்திரங்களையே கண்களாகவுடையவர்களுமான ரித்விக்குகள் ஒவ்வொரு நாளும் எல்லாக் காரியங்களையும் செய்தனர். வேதங்களும் சாஸ்திரங்களும் தெரிந்த பிராமணர்கள் எல்லா இடங்களிலும் வாதங்கள் செய்தனர். வாதம் முடிந்தபோது எல்லாரும் அம் மகா யாகத்தில் சந்தோஷமாக இருந்தனர். வேத ஸம்பன்னர்களான தேவர்கள் பிராமணர்கள் மகரிஷிகளோடு கூடிய அந்த யாகவேதிகையானது நட்சத்திரங்கள் நிரம்பின மாசற்ற ஆகாயம்போல விளங்கிற்று. சில பிராமண சிரேஷ்டர்கள் தங்கள் கல்வித்திறமையைக் காண்பிப்பதற்காகவும், மற்றும் சிலர் தர்க்கஞ்செய்வதற்காகவும், வேறு சிலர் கல்வி விருப்பத்தினாலும், சிலர் யாகத்தைப்பார்க்கும் விருப்பத்தினாலும், சிலர் பராக்கிரமசாலியான தர்மராஜாவினிடத்திலுள்ள பயத்தினாலும் வந்தனர். யாகம் செய்விப்பவர்களாக வந்த பிராமணர்களனைவரும் தாம் தாம் யாகஞ்செய்து அவபிருதஸ்நானஞ்செய்தவர்கள். சிறந்த பராக்கிரமசாலியான சகதேவன் யாகத்தின் அழகுக்காக எல்லா ரத்னங்களும் இழைக்கப்பட்ட பொன் யூபஸ்தம்பங்களைச் செய்வித்தான். பொற்பனை மரங்களாற் செய்த தோரணங்களை ஜனங்கள் அங்கே கண்டனர். அந்த யாக பூமி அந்தத் தோரணங்களால் ஆகாயம் கிரகங்களால் விளங்குவதுபோல விளங்கிற்று. அந்த ஸதஸானது பழகின திசையானைகள் போலவும் ஆதித்யர்கள் போலவும் ஒளியுள்ள அந்தத் தோரணங்கள் எல்லாத் திசைகளிலும் வைக்கப்பட்டதனாலும், கிரீடங்களைத் தரித்த அரசர்கள் இருந்ததனாலும் சோபித்தது. சிறந்த புத்திசாலியும் மகாத்மாவுமான

தர்மராஜருடைய ராஜசூய மகா யாகம், தேவலோகத்திலுள்ள தேவர்களும் யக்ஷர்களும் நாகர்களும் தேவலோகத்திலும் மானிடலோகத்திலுமுள்ள வித்யாதரர்களும் நிரம்பியிருந்ததனால் மிக விளங்கிற்று; கந்தர்வர்களும் அப்ஸரஸுக்களும் தேவர்களும் யக்ஷர்களுமிருந்ததனால் இரண்டாவது தெய்வலோகம்போல விளங்கிற்று; கிம்புருஷ கின்னரர்களின் சங்கீதத்தினாலும் சிறப்புற்றிருந்தது. அங்கே நாரதர் பாடினார். சிறந்த ஒளியுள்ள தும்புரு விசுவாவசு சித்ரஸேனன் முதலான சங்கீத வித்வான்களான தேவர்கள் யாக காரியங்களின் இடையில் (பாடி) அங்குள்ளவர்களைச் சந்தோஷிக்கச் செய்தனர். பார்ப்பதற்கினிய அழகுள்ளவர்களான அப்ஸரஸுக்களனைவரும் ஒவ்வொரு நாளும் பாடினர்; ஆடினர். வியாகரண சாஸ்திரங்களை தெரிந்தவர்கள் ஒவ்வொரு நாளும் கிரியைகளின் இடையில் இதிகாசங்களையும் புராணங்களையும் கதைகளையும் முழுதும் உரைத்தனர். பேரிகள், முரசுகள், மட்டுகங்கள், கோமுகங்கள், கொம்புகள், புல்லாங்குழல்கள், சங்குகள், வீணைகள் இவை ஆயிரக்கணக்காகக் கேட்கப்பட்டன. இவ்வுலகத்திலுள்ள பிராமணர்களனைவரும் க்ஷத்ரிய வைசிய சூத்ரர் முதலானவர்களும் மிலேச்சர்களனைவரும் முதலிடைகடை வர்ணங்களைச் சேர்ந்த ஸங்கரஜாதிகளெல்லாரும் அங்கே வந்தனர். பல தேசங்களிலுண்டான பல ஜாதியார்களும் வந்திருந்ததனால் இவ்வுலகமே யுதிஷ்டிரர் கிருகத்தில் (வந்து) நிரம்பினது போலிருந்தது. பீஷ்மரும் துரோணரும் துரியோதனன் முதலான கௌரவர்களும் யாதவர்களும் பாஞ்சாலர்களனைவரும் அந்த யாகத்தில் அடிமைகளைபோல எல்லா வேலைகளையும் செய்தனர். சிறந்த கைகளையுடைய ஜனமேஜயரே! இவ்வாறு நடந்த சிறந்த புத்தியுள்ள தர்மராஜருடைய அந்த யாகமானது சந்திரனுடைய யாகம்போல விளங்கிற்று. தர்மராஜரானவர் அந்த யாகத்தில் பிராமணர்களுக்கு வஸ்திரங்களையும் சால்வைகளையும் போர்வைகளையும் பொன் நாணயங்களையும் பொற்பாத்திரங்களையும் ஆபரணங்களையும் நிரம்பக் கொடுத்தார். பரத சிரேஷ்டரான தர்மராஜர் அந்த யாகத்தில் அரசர்களால் கிடைத்த ரத்னங்களெல்லாவற்றையும் பிராமணர்களுக்கு அளித்தார்.

---

## எழுபத்திரண்டாவது அத்தியாயம்

## சிசுபால வத பர்வம் (தொடர்ச்சி)

**(யுதிஷ்டிரர் யாகத்தை நிறைவேற்றி அவபிருதஸ்நானஞ்செய்து யாகத்திற்கு வந்தவர்களுக்கு விடைகொடுத்தனுப்பித் துரியோதனன் முதலான பிராதாக்களோடுகூடச் சேர்ந்திருந்தது)**

ஜனமேஜய ராஜாவே! அதன்பிறகு, தர்மராஜாவின் அந்த யாகமானது எல்லாக் கிரியைகளும் குறைவில்லாததாகவும் எல்லாருக்கும் சந்தோஷத்தை உண்டுபண்ணுவதாயும் பெரிய உற்சவமாகவும் விளங்கிற்று; இடையூறுகள் நீங்கிச் செய்வதற்கு எளிதும் நிரம்பின தனங்களும் தானியங்களுமுள்ளதும் அன்னமும் பட்சணங்களும் மிகுதியாகவுள்ளதும் கிருஷ்ணனால் நன்றாகக் காப்பாற்றப்பட்டதுமாக நடந்தது. அவ்வாறு ராஜசூய மகா யாகத்தை யுதிஷ்டிரர் நிறைவேற்றினார். மகாத்மாக்களான பிராமணர்களுக்கு ஆயிரம்கோடி திரவியங்களைக் கொடுத்தார். உலகத்தில் மற்றும் ஓர் அரசன் அந்த யாகம் செய்யமாட்டான். யாகத்தைச் செய்வித்தவர்கள் வேண்டின எல்லாவற்றையும் தனங்களையும் பெற்று எப்பொழுதும் திருப்தியடைந்திருந்தனர். பிறகு, பாண்டு புத்திரரான தர்மராஜர் யாகத்தின் முடிவில் அவபிருதஸ்நானஞ்செய்து, வியாஸரையும் தௌமியரையும் வசிஷ்டரையும் நாரதமாமுனிவரையும் ஸுமந்துவையும் ஜைமினியையும் பைலரையும் வைசம்பாயனரையும் யாக்ஞவல்க்யரையும் கபிலரையும் கபாலரையும் கௌசிகரையும் பூஜ்யர்களான மற்றுமுள்ள சிறந்த ரித்விக்குகளையும் பூஜித்து, 'உங்களுடைய அனுக்கிரகத்தினால் இந்த ராஜசூய மகாயாகம் எனக்கு நிறைவேறிற்று. கிருஷ்ணனுடைய அனுக்கிரகத்தினால்தான் என் எண்ணம் நிறைவேறிற்று' என்று சொன்னார். யாகம் முடிந்தபிறகு, தேவசிரேஷ்டரான கிருஷ்ணனையும் பலராமரையும் பீஷ்மர் முதலான கௌரவ சிரேஷ்டரையும் தர்மராஜர் பூஜித்தார். தர்மாத்மாவான யுதிஷ்டிரர் அவபிருதஸ்நானஞ் செய்தபிறகு, பூமிக்கதிபதிகளான க்ஷத்ரியர்களனைவரும் அருகில் வந்து, 'தர்மந்தெரிந்தவரே! நீர் அபிவிருத்தியடைந்திருப்பது சந்தோஷம். ஸம்ராட் என்னும் ஸ்தானத்தை அடைந்திருக்கிறீர். அஜமீட வம்சத்தவரே! அஜமீட வம்சத்தாரின் புகழ் உம்மால் பெருகச்செய்யப்பட்டது. அரசர்க்கரசே! இந்த ராஜசூய யாகம் செய்ததனால் மிகப் பெரிய தர்மத்தைச் செய்ததாகிறது. புருஷ சிரேஷ்டரே!

வேண்டினவை எல்லாவற்றினாலும் நன்றாகப் பூஜிக்கப்பெற்றோம்; விடைகேட்கிறோம். எங்கள் தேசங்களுக்குச் செல்வோம். அதற்கு அனுமதி கொடுக்கக்கடவீர்' என்று கேட்டனர் அரசர்கள் சொன்னதைக் கேட்டபிறகு, தர்மராஜாவான யுதிஷ்டிரர் அவ்வரசர்களுக்குத் தகுதியின்படி மரியாதைசெய்து தமது சகோதரர்களனைவரையும் நோக்கி, 'வீரர்களான இந்த அரசர்களனைவரும் அன்புடன் நம்மிடம் வந்திருக்கின்றனர். இவர்கள் என்னிடம் விடைகேட்டுக்கொண்டு தம் தம் தேசங்களுக்குச் செல்லுகின்றனர். இந்த உத்தமர்களான அரசர்களோடு தேசத்தின் எல்லைவரையிற் பின்செல்லுங்கள். உங்களுக்குச் சுகமுண்டாகட்டும்' என்று சொன்னார். தர்மத்தைச் செய்கிறவர்களாகிய பாண்டவர்கள், ஜ்யேஷ்டரான தர்மராஜர் சொல்லைக் கேட்டு அவ்வரசர்களனைவரையும் ஒவ்வொருவராக அவரவர்க்குத் தக்கபடி பின்சென்றனர். பராக்கிரமசாலியான த்ருஷ்டத்யும்னன் பரபரப்புடன் விராடன் பின் சென்றான். தனஞ்சயன் மகாத்மாவும் மகாரதனுமான த்ருபதனை அனுசரித்தான். பீஷ்மரையும் திருதராஷ்டிரனையும் மகாபலசாலியான பீமஸேனன் பின் தொடர்ந்தான். வீரரான துரோணரையும் அசுவத்தாமாவையும் யுத்தங்களில் தலைவனான சகதேவன் பின்சென்றான். ஜனமேஜயராஜாவே! சுபலனையும் அவன் புத்திரர்களையும் நகுலன் பின் சென்றான். க்ஷத்திரிய சிரேஷ்டர்களான திரௌபதியின் புத்திரர்களும் சுபத்திரையின் புத்திரனான அபிமன்யுவும் மகாரதர்களான மலைநாட்டரசர்களையும் மற்றுமுள்ள க்ஷத்திரியர்களையும் பின் சென்றனர். ஆயிரக்கணக்கான பிராமணர்களெல்லாரும் இவ்வாறே நன்றாகப் பூஜிக்கப்பெற்றுச் சென்றனர். ராஜசிரேஷ்டர்களும் பிராமணர்களும் ஆகிய அனைவரும் சென்றபிறகு சிறந்த மகிமையுள்ள வாசுதேவர், யுதிஷ்டிரரை நோக்கி, 'கௌரவ சிரேஷ்டரே! நான் உம்மிடம் விடைபெற்றுக்கொள்ளுகிறேன். துவாரகைக்குச் செல்வேன். யாகங்களிற் சிறந்த ராஜசூய யாகத்தை நீர் நிறைவேற்றினதில் சந்தோஷம்' என்று சொன்னார். இவ்வாறு சொல்லப்பெற்ற தர்மராஜர், ஜனார்த்தனரை நோக்கி, 'ஓ! கோவிந்தா! இந்தச் சிறந்த யாகத்தை நான் நிறைவேறப்பெற்றது உமது அனுக்கிரகத்தினாலேதான். க்ஷத்திரியர்களனைவரும் சிறந்த காணிக்கைகளை எடுத்துக்கொண்டு என்னையே அடைந்து எனக்குட்பட்டிருந்ததும் உம்முடைய அனுக்கிரகத்தினாலேதான். குற்றமற்றவரே! நீர் செல்வதைப் பற்றி என் வாக்கானது எவ்வாறு விடைகொடுக்கும்? வீரரே! உம்மைவிட்டு ஒருகாலும் நான் சுகமடைவதில்லையே. ஆனால், நீர்

துவாரகாபுரிக்குச் செல்வதும் இன்றியமையாததுதான்' என்று சொன்னார். தர்மாத்மாவும் பெரும்புகழ்பெற்றவருமான கிருஷ்ணன், இவ்வாறு சொல்லப்பெற்று அன்புகூர்ந்து யுதிஷ்டிரருடன் கூடவே குந்தியிடம் சென்று, 'அத்தையே! உன் புத்திரர்கள் இப்போது ஸாம்ராஜ்யமென்னும் பதத்தைப் பெற்றனர்; ஜயத்தையும் தனத்தையும் அடைந்தனர். அதனால் நீ சந்தோஷத்தை அடையக்கடவாய். உன்னால் விடைகொடுக்கப்பெற்று நான் துவாரகைக்குப் போக விரும்புகிறேன்' என்று சொன்னார். பிறகு, கிருஷ்ணன் சுபத்திரையையும் திரௌபதியையும் கண்டு, பிரியம் பாராட்டினார். யுதிஷ்டிரருடன்கூடவே அந்த அந்தப்புரத்திலிருந்து புறப்பட்டு ஸ்நான ஜபங்களைச் செய்து பிராமணர்களைக்கொண்டு ஸ்வஸ்திவாசனஞ் செய்வித்தார். பிறகு, சிறந்த கைகளையுடைய தாருகனென்னும் ஸாரதி மேகத்தின் வடிவம்போல விளங்குவதும் நன்றாக அலங்கரிக்கப்பட்டதுமான தேரைப் பூட்டிக்கொண்டு வந்து சேர்ந்தான். சிறந்த மனமுள்ள தாமரைக்கண்ணர் சிறந்த கருடக் கொடியோடு வந்த ரதத்தைக் கண்டு 'பிரதட்சிணஞ்செய்து அதன் மேலேறித் துவாரகா நகரத்திற்குப் புறப்பட்டார். தர்மராஜாவும் ராஜலக்ஷ்மி பொருந்தினவருமான யுதிஷ்டிரர் தம்பிமாருடன் கூடச் சிறந்த வலிமையுள்ள கிருஷ்ணனைக் கால்நடையாகப் பின்சென்றார். தாமரைக்கண்ணராகிய கண்ணன், சிறந்த தேரைச் சிறிது நேரம் நிறுத்திக்கொண்டு குந்திபுத்திரரான யுதிஷ்டிரரை நோக்கி, 'அரசே! நீர் எப்போதும் ஜாகிரதையாயிருந்துகொண்டு பிரஜைகளைக் காக்கக்கடவீர். பிராணிகள் மேகத்தையும் பறவைகள் பெருமரத்தையும் தேவர்கள் இந்திரனையும் போல உறவினர் உம்மை அடுத்திருக்கக்கடவர்' என்று சொன்னார். கிருஷ்ணனும் யுதிஷ்டிரரும் ஒருவரோடொருவர் இவ்வாறு சம்பாஷணை செய்துகொண்ட பிறகு ஒருவரிடத்தொருவர் விடைபெற்றுக்கொண்டு தம்தம் கிருகங்களை நோக்கிச் சென்றனர். ஜனமேஜய ராஜாவே! யாதவசிரேஷ்டரான கிருஷ்ணன் துவாரகைக்குச் சென்றபோது ராஜாவாகிய துரியோதனன் [1]ஒருவனும் சுபலன் மகனான சகுனியும் ஸூதனுக்கும் ராதைக்கும் புத்திரனான கர்ணனும் துச்சாஸனன் முதலியோரும், விரும்பத்தக்க சிறப்புக்கள் எல்லாவற்றினாலும் நிரம்பப் பூஜிக்கப்பெற்று அந்தத் திவ்ய சபையில் பாண்டவர்களுடன் இருந்தனர்.

சிசுபால வத பர்வம் முற்றிற்று

---

1 'ஏகோ துர்யோதனஸ:' என்ற பாடம் கொள்ளப்பட்டது.

## எழுபத்துநான்காவது அத்தியாயம்

## த்யூத பர்வம்

(வியாசர் விடைகேட்டுக்கொண்டு சென்றபிறகு தர்மராஜர் புரப்ரவேசம் செய்தது)

சிறந்த வில்லாளிகளான பாண்டவர்கள், ராஜாக்களைப் பின் சென்றபிறகு பாண்டவர்களில் மூத்தவரும் தர்மராஜருமாகிய யுதிஷ்டிரரிடம் வந்தனர். சிறந்த கைகளையுடைய தர்மபுத்திரர் பிராதாக்களுக்கும நண்பர்களுக்கும் அனுமதிசெய்தார். வியாசர் தம் சிஷ்யர்களால் சூழப்பெற்றவராய்த் தர்மராஜர் எதிரில் வந்தார். ஸகோதரர்களாற் சூழப்பட்ட அந்தத் தர்மராஜரும் ஆசனத்திலிருந்து விரைவாக எதிர்கொண்டு சென்று பாத்யத்தையும் ஆசனத்தையும் அளித்துத் தமது பிதாமகரான வியாசரைப் பூஜித்தார். வியாச பகவான் பொனமயமான சிறந்த ஆசனத்திலுட்கார்ந்து தர்மபுத்திரரான யுதிஷ்டிரரையும் 'உட்காரலாம்' என்று சொன்னார். பல விஷயங்களைப்பற்றியும் பேசுவதில் சமர்த்தரான வியாச பகவான் ஸகோதரர்களாற் சூழப்பட்டு உட்கார்ந்திருந்த தர்மராஜரை நோக்கி, 'ஓ! குந்திபுத்திரனே! பெறுதற்கரிதான ஸாம்ராஜ்ய மென்னும் ஸ்தானத்தைப்பெற்று நீ விருத்தியடைவது நல்ல காலம். குரு வம்சத்தைத் தாங்குபவனே! கௌரவர்களெல்லாரும் உன்னால் சிறப்பிக்கப்பெற்றனர். ராஜனே! நான் பூஜிக்கப்பெற்றேன். உன்னிடம் விடைகேட்டுக்கொண்டு செல்வேன' என்று சொன்னார். வியாசரால் இவ்வாறு சொல்லபபெற்ற தர்மபுத்திரரான யுதிஷ்டிரர், தமது பிதாமகரை அபிவாதனஞ்செய்து கால்களைப் பிடித்துக்கொண்டு, 'மனிதர்களிற் சிறந்தவரே! யாராலும் தீர்ப்பதற்கரிதான ஒரு சந்தேகம எனக்கு உண்டாயிருக்கிறது. பிராமண சிரேஷ்டரே! அதற்கு (நிச்சயம்) கூறுவதற்கு உம்மைவிட வேறு யாருமில்லை. பிதாமகரே! திவ்யம் ஆந்தரிக்ஷம் பார்த்திவம் (= பூமியிலுண்டானது) என்று மூன்றுவகை உத்பாதங்களைப் பகவானான நாரத முனிவர் சொல்லியிருக்கிறார். அவற்றிற்கு மிகப பெரிய பயன் வருவது திண்ணம். சிசுபாலன் இறந்ததனால் அந்தப் பெரிய உத்பாத பயமானது அடங்கிற்றா?' என்று கேட்டார். பராசர புத்திரரும சமர்த்தரும் கிருஷ்ணத்வைபாயனரென்று பெயர்பெற்றவருமான வியாசர் தர்மராஜருடைய சொல்லைக் கேட்டுப் பினவருமாறு மறுமொழி கூறலானார்:—
ராஜனே! பதினமூன்று வருஷங்கள்வரையில் துர்நிமித்தங்

களின் பலன் பெரிதாயிருக்கும். மனிதர்க்கதிபதியே! இந்த உத்பாதம் எல்லா க்ஷத்திரியர்களும் அழிவதற்குக் குறிப்பாம். பரதசிரேஷ்டனே! நாளடைவில் உனையே காரணமாகக் கொண்டு பூமியிலுள்ள க்ஷத்திரியர்கள் சேர்ந்து துரியோதனன் செய்த குற்றத்திற்காகப் பீமார்ஜுனர்களுடைய பலத்தினால் நாசமடைவர். அரசர்க்கரசே! அந்தக் காலம் நேரும்போது நீ ஒரு கனவு காண்பாய். யுதிஷ்டிரா! அதனை நான் உனக்குச் சொல்வேன்; தெரிந்துகொள். அரசர்க்கரசே! ரிஷபக் கொடியுள்ளவரும் நீலகண்டரும் [1] பவரும் ஸ்தாணுவும் கபாலமேந்தின வரும் திரிபுரர்களை யழித்தவரும் உக்ர ரூபமுள்ளவரும் ருத்திரரும் பசுபதியும் மகாதேவரும் உமாகாந்தரும் ஹரரும் [2] சர்வரும் [3] விருஷரும் சூலத்தையும் பினாகமெனனும் வில்லையும் ஏந்தினவரும் தோலாடை உடுத்தவருமாகிய சிவபெருமான் கைலாச சிகரத்துக்குச் சமானமான விருஷபத்திலேறிக்கொண்டு யமனுடைய திசையான தென்திசையை இடைவிடாமல் நோக்கிச் செல்வதாக இரவின் முடிவில் காண்பாய். மனிதர்க்கதிபதியே! இவ்வகையான ஸ்வப்னத்தை நீ காணப்போகிறாய். அதைப் பற்றி நீ சிந்தையுறாதே. காலம் கடக்க முடியாததன்றோ? உனக்கு நன்மையுண்டாகக்கடவது. நான் கைலைமலைக்குச் செல்வேன். நீ ஐம்புலன்களையும் அடக்கி ஜாக்கிரதையோடிருந்து ராஜ்ய பரிபாலனம் செய்யக்கடவாய்' என்றார். கிருஷ்ணத்வைபாயனரென்று சொல்லப்பட்ட அந்த வியாச பகவான் இவ்வாறு சொல்லிச் சிஷ்யர்களோடும் பின்செல்லும் ரிஷிகளோடும் கைலைமலைக்குச் சென்றார். தர்மராஜர் தமது பிதாமகரான வியாசர் சென்றபிறகு, சிந்தையும விசனமுமுற்று அவர் சொன்ன விஷயத்தையே பலமுறை நினைத்து உஷ்ணமாகப் பெருமூச்செறிந்து, 'விதியை மானிட சக்தியினால் வெல்லுவது முடியுமா? மகரிஷி சொன்னது தவறாமலே வந்து தீரும்' என்று நினைத்தார். சிறந்த மகிமைபெற்ற யுதிஷ்டிரர், உடனே சகோதரர் அனைவரையும் நோக்கி, 'ஓ! புருஷப்புலிகளே! த்வைபாயனர் எனக்குச் சொன்னதை நீங்கள் கேட்டீர்களன்றோ? அவர் சொன்னதைக் கேட்டபோதே என புத்தி மரணமடைய நிச்சயஞ்செய்தது. எல்லா க்ஷத்திரியர்களுடைய அழிவுக்கும நானன்றோ காரணமாகக் காலத்தினால் உண்டாக்கப்பட்டேனென்று அவர் நினைத்தது. அப்பா! ஜீவித்திருப்பதனால் எனக்குப் பயன் யாது?' என்று சொன்னார். இவ்வாறு சொல்லுகின்ற தர்மராஜாவுக்குப் பல்குனன், ராஜரே! புத்தியைக் கெடுக்கும் கொடிய கலக்கத்தில்

1 என்றுமிருப்பவர். 2 தெறஅடிப்பவர். 3 அபீஷ்டங்களை வர்ஷிப்பவர்.

நீர் பிரவேசிக்கவேண்டாம். மகாராஜரே! நன்றாய் ஆராய்ந்து எது யுக்தமோ அதைச் செய்யக்கடவீர்' என்று சொன்னான். பிறகு, சத்தியத்தில் உறுதியுள்ள யுதிஷ்டிரர் சகோதரர்களனைவருக்கும் வியாசர் சொன்னதைச் சொல்லினர்; அதைப்பற்றியே நினைத்தார். 'சகோதரர்களே! உங்களுக்குச் சுகமுண்டாகக்கடவது! இன்று முதல் நான் செய்த பிரதிக்ஞையைக் கேளுங்கள். நண்பர்காள்! நான் ஜீவித்திருப்பதின் பயன் யாது? இன்று முதல் பதின்மூன்று வருஷகாலம் என் சகோதரர்களையும் மற்ற அரசர்களையும் கடிந்து பேசமாட்டேன். என் குலத்தோரின் கட்டளையிலிருந்துகொண்டு அவர்களுக்குத் தக்கபடி பேசிக்கொண்டு கூடியிருப்பேன். இவ்வாறு நடக்கின்ற எனக்கு என் பிள்ளைகளிடத்தும் மற்றவர்களிடத்தும் வேறுபாடிராது. உலகத்தில் கலகம் வேறுபாட்டினால்தான் உண்டாவது. மனிதர்களிற் சிறந்தவர்களே! சண்டையைத் தூரத்திலேயே தடுத்து, இனிய காரியங்களையே செய்து உலகத்தில் நிந்தைக்கு ஆளாகாமலிருப்பேன்' என்று சொன்னார். தமது ஜ்யேஷ்ட சகோதரரான யுதிஷ்டிரருடைய அந்தச் சொல்லைக் கேட்டு அவருடைய நன்மையில் ஊக்கமுள்ள பாண்டவர்கள் அவரையே ஒத்துக்கொண்டனர். பரதசிரேஷ்டரான ஜனமேஜய ராஜாவே! தர்மராஜாவானவர் சபையின் முன்னிலையில் தம சகோதரர்களுடன் இவ்வாறு நிச்சயஞ்செய்து கிரமமாகப் பிதிர்தர்ப்பணமும் தேவபூஜையும் புரிந்து மங்கள காரியங்களைச் செய்து க்ஷத்திரிய சிரேஷ்டர்களெல்லாரும் சென்றபிறகு சகோதரர்களாலும் அமைச்சர்களாலும் சூழப்பெற்றவராய்த் தமது சிறந்த நகரத்திற் பிரவேசித்தார். ஜனமேஜய மகாராஜாவே! துரியோதனனும் சுபலன் புத்திரனான சகுனியும் அந்த அழகான சபையின் கண்ணே இருந்தனர்.

---

## எழுபத்துநான்காவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

### (துரியோதனன் ராஜசூய சபையில் தடுமாறிப் பொறாமையுற்றுச் சகுனியிடம் முறையிட்டது)

புருஷசிரேஷ்டரான ஜனமேஜயரே! அந்தச் சபையிலிருந்த துரியோதனன்* சகுனியுடன்கூட அந்தச் சபையை முழுதும் வரிசையாகப் பார்த்தான். கௌரவ சிரேஷ்டனான துரியோதனன் ஹஸ்தினபுரத்தில் இதற்குமுன் தான் கண்டிராத தெய்விக விஷயங்களைக் கண்டான். அந்தத் துரியோதன மகாராஜன் ஒருகால்

அந்தச் சபை நடுவில் படிகத் தளவரிசையுள்ள இடத்திற்குச் சென்று ஜலமென்று நினைத்து மதிமயங்கித் தன் வஸ்திரத்தைத் தூக்கிக் கட்டிக்கொண்டான். அதனால் துயரமடைந்து யாருக்கும் முகங்கொடாமல் அந்தச் சபையைச் சுற்றித் திரிந்தான். பிறகு, மேடுபள்ளந் தெரியாமல் தரையில் விழுந்ததனால் துயரமும் வெட்கமுமுற்றுப் பெருமூச்செறிந்துகொண்டு வெறுப்புடன் அந்தச் சபையில் சஞ்சரித்தான். அதன்பிறகு, படிகம் போலத் தெளிந்த நீருள்ளதும் படிகத் தாமரைமலர்களால் சோபிப்பதுமாகிய வாவியைத் தரையென்று நினைத்து ஆடையோடு ஜலத்தில் விழுந்தான். அந்தத் துரியோதனன் ஜலத்தில் விழுந்ததைக் கண்டு மகா பலசாலியான பீமஸேனனும் வேலைக்காரர்களும் நகைத்தனர். தர்மராஜாவின் கட்டளையினால் அவனுக்கு வேலைக்காரர்கள் உயர்ந்த வஸ்திரங்களைக் கொடுத்தனர். அவன் அவ்வாறிருக்கக் கண்டு மகாபலசாலியான பீமஸேனன் அர்ஜுனன் நகுல சகதேவர்கள் ஆகிய அனைவரும் சிரித்தனர். பொறுமைக்காரனல்லாத துரியோதனன் அவர்களுடைய பரிகாசத்தைப் பொறுக்கவில்லை. தன் எண்ணத்தை வெளிக்காட்டாமலிருப்பதற்காக அவன் அவர்களைக் கண்ணெடுத்துப் பாராமலிருந்தான். திரும்பவும் ஜலத்தைத் தாண்டுகிறவன் போல வஸ்திரத்தைத் தூக்கிக் கட்டிக்கொண்டு நிலத்தில் அடியைத் தூக்கிவைத்தான். அதனால் எல்லா ஜனங்களும் மறுபடியும் நகைத்தனர். படிகக் கதவினால் மூடப்பட்ட வாயிலைப் பார்த்து அதில் நுழையும்போது, துரியோதனன் தலையிலடிபட்டுக் கலங்கி நின்றான். அதுபோலவே [1] பெரும்படிகக் கதவுள்ள மற்றொரு வாயிலைக் கைகளினால் இடித்துத் திறக்கும்போது வாயிலுக்கு வெளிப்பட்டு முன்னே விழுந்தான். மறுபடியும் அவன் திறந்திருந்த ஒரு வாயிலை அடைந்து அது முன் போன்றதே என்று நினைத்து அந்த வாயிலிலிருந்து திரும்பினான். ஜனமேஜய மகாராஜாவே! அந்தத் துரியோதன ராஜன் அவ்விடத்தில் இவ்வாறு பலவகை ஏமாறுதல்களை அடைந்து பாண்டவர்களால் விடைகொடுக்கப்பெற்று ராஜசூயமென்னும் மகா யாகத்திலுள்ள அந்த ஆச்சரியமான சம்பத்தைப் பார்த்ததினால் துயரமுற்ற மனத்துடன் ஹஸ்தினபுரத்திற்குச் சென்றான். பாண்டவர்களின் செல்வத்தினால் கொதிப்புற்று அதையே நினைந்துகொண்டு செல்லுகின்ற துரியோதனராஜனுக்குக் கெட்ட எண்ணமுண்டாயிற்று. ஜனமேஜயரே! பாண்டவர்கள் மனங்களித்திருந்ததையும் அரசர்கள் அவர்களுக்கு வசப்பட்டிருந்த

1 இல்குவாகத் திறக்கக்கூடிய கதவுகளை மிக்க பலத்துடன் இடித்துத் திறந்ததனால் வெளியில் வந்து விழுந்தான்.

தையும் குழந்தைமுதல் எல்லா ஜனங்களும் அவர்களிடம் அன்பு வைத்திருந்ததையும மகாத்மாக்களான பாண்டவர்களின் சிறந்த மேன்மையையும் கண்டு திருதராஷ்டிரன் மைந்தனை துரியோதனன் நிறம் மாறிப்போனுன். அவன் செல்லும்போது மனமகலங்கி, சிறந்த புத்திமானுன தர்மராஜருடைய அந்த ஒப்பற்ற ஐசுவரியத்தையும் சபையையுமே தனிமையில் நினைந்துகொண்டிருந்தான். திருதராஷ்டிர புத்திரனை துரியோதனன் அப்போது மதி கலங்கி, அடிக்கடி பேசுகின்ற சகுனிக்கு மறுமொழி கூறவில்லை. அவ்வாறு கலங்கி நின்ற துரியோதனனைக் கண்டு, சகுனியானவன், 'துரியோதன! பெருமூச்செறிகிறவன்போலச் செல்லுகிருய்; இதற்கு என்ன காரணம்?' என்று கேட்டான். அதற்குத் துரியோதனன், 'மாமா! இந்தப் பூமி முழுமையும் மகாத்மாவான அர்ச்சுனனுடைய அஸ்திரப் பிரதாபத்தினுல் ஜயிக்கப்பட்டு யுதிஷ்டிரனுக்கு உட்பட்டுப்போனதையும், யுதிஷ்டிரனுடைய அம்மகா யாகம் அவ்வாறு நடந்ததையும், தேவர்களில் இந்திரன்போல யுதிஷ்டிரன் மிகுந்த மகிமையுள்ளவனுயிருந்ததையும் கண்டு பொருமையால் நிரப்பப்பட்டு இரவும் பகலும் எரிக்கப்பட்டவனுக, ஆனி ஆடி மாதங்கள் வந்தபோது சிறிய தடாகம் வற்றுவதுபோல வற்றுகிறேன்; பார். யாதவ சிரேஷ்டனை கிருஷ்ணனுல் சிசுபாலன் கொல்லப்பட்டான். அந்தச் சபையில் அந்தச் சிசுபாலன் அடியைத் தொடரும் ஆண்பிள்ளை யாருமில்லாமற் போனுன். பாண்டவர்களிடமிருந்து உண்டான தீயினுல் சுடப்பட்ட அரசர்கள் அந்தக் குற்றத்தைப் பொறுத்தனர். அதை யார் பொறுக்கத்தகும்? அந்தத் தகாத பெருங்காரியம் கிருஷ்ணனுல் செய்யப்பட்டது. மகாத்மாக்களான பாண்டவர்களின் பராக்கிரமத்தினுல் அது நிலைத்தது. அதனுலே தான் அரசர்கள் பலவகை ரத்னங்களை யெடுத்துக்கொண்டு வைசியர்களைப்போலக் கப்பங்கட்டி, குந்தி புத்திரனை தர்மராஜாவைச் சேவித்தனர். அவ்வாறு தர்மராஜாவினிடத்தில் ஜ்வலிப்பதுபோலப் பிரகாசித்த அந்த ராஜ்யலக்ஷ்மியைக் கண்டு அந்தத் தகுதிபெருத நான் பொருமையின் கையில் அகப்பட்டுக்கொண்டு தாபமுற்றிருக்கிறேன்; தீயிலாவது குதிப்பேன்; விஷத்தையாவது தின்பேன்; ஜலத்திலாவது விழுவேன்; ஜீவிக்கமாட்டேன். உலகத்தில் பராக்கிரமமுள்ள எந்த ஆண்பிள்ளை எதிரிகள் விருத்தியடைந்திருக்கவும், தான் குறைந்திருக்கவும் கண்டு பொறுப்பான்? அவர்களுக்கு அப்படிப்பட்ட ஐசுவரியம் வந்திருப்பதைக் கண்டு இப்போது பொறுத்திருக்கிற நான் பெண்ணுமல்லேன்; பெண்ணல்லாதவனுமல்லேன்; ஆணுமல்

லேன்; ஆணல்லாதவனுமல்லேன். பூமிக்கெல்லாம் ஈசுவரனு யிருப்பதையும் அப்படிப்பட்ட தன சாபத்தையும் அவ்வகை யான யாகத்தையும் கண்டு என போன்றவன் எவன தாப மடையாமலிருப்பன்? நான் சகாயமின்றி அந்த ராஜ்யலக்ஷ்மியை அபகரிப்பதற்குச் சக்தனல்லேன். சகாயம யாருமிருப்பதாகவும் தெரியவில்லை ஆதலால், இறப்பதைபபற்றியே நினைக்கிறேன். யாராலும் கெடுக்கப்படாத பரிசுத்தமான ஐசுவரியம் குந்திபுத்திர னிடமிருப்பதைக் கண்டு, தெய்வமே வலியதென்றும் முயற்சி பயனற்றதென்றும் நினைக்கிறேன். சுபல புத்திரனே! முதலி லேயே அவனை அழிப்பதற்கு நான் முயன்றேன். அவற்றை யெல்லாங் கடந்து ஜலத்தில் தாமரைபோல அவன் வளர்ந்து கிளம்பினன். அதனல் விதியே பெரிதென்றும் முயற்சி பயனற்ற தென்றும் நினைக்கிறேன். திருதராஷ்டிரன் புத்திரர்கள் குறைந்து போகின்றனர். பாண்டவர்கள் நாளுக்கு நாள் விருத்தியாகின் றனர். கிருஷ்ணன் அவர்களிடம் அன்புகூர்ந்து அவர்களுக்குச் செல்வங்களை விருத்திசெய்கிருன். ஆதலால், நான் அந்த ஐசு வரியத்தையும் அவ்வகையான அந்தச் சபையையும் காவலாளி கள் செய்த அந்தப் பரிகாசத்தையும் பார்த்துத் தீயினல் சுடப் படுவதுபோலச் சுடப்படுகிறேன். மாமா! மிகத் துயரமுற்ற என்னை இப்போது நீ விட்டுவிடு. எனக்குள்ள ஆற்றாமையைத் திருதராஷ்டிரருக்குத் தெரிவி' என்று சொன்னான்.

---

## எழுபத்தைந்தாவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

### (துரியோதனனும் சகுனியும் சூதாடுவதைப்பற்றிப் பேசிக்கொண்டது)

சகுனி, 'துரியோதனா! நீ யுதிஷ்டிரனைப்பற்றிப் பொரு மைப்படத்தகாது. பாண்டவர்கள் எப்போதும் தங்கள் பாகங்களையே தாம் அனுபவிக்கிறார்கள். விதி பலவகைகளாக இருக்கிறது. அவர்களுக்கு விதியினல் மேன்மை உண்டா யிருக்கிறது. மஹாராஜனே! பகைவரை அடக்குகிறவனே! முன்னே நீ அநேக உபாயங்கள் செய்ய ஆரம்பித்தும் உன் னல் அவர்களைப் பீடிக்கமுடியவில்லை புருஷசிரேஷ்டர்களான பாண்டவர்கள் அவர்கள் அதிருஷ்டத்தினலேயே (ஆபத்துக்களி னின்றும்) விடுபட்டனர். முயற்சியுள்ள மனிதர் தம் காரியங்க ளில் இகழ்ச்சி அடையார். அவர்களுக்குத் திரௌபதி பாரியை யாகக் கிடைத்தாள். துருபதனும் அவன் புத்திரர்களும்

சிறந்த சக்தியுள்ள கிருஷ்ணனும் அரசர்களும் துணைவர்களாகக் கிடைத்தனர். அரசனே! (பிறருடைய) காரியத்தைக் கெடுக்காமல் தங்கள் பிதாவின் பாகத்தை அவர்கள் அடைந்தனர். அஃது அவர்களின் சக்தியினால் அபிவிருத்தி அடைந்தது. அதில் (உனக்கு) என்ன துயரமிருக்கிறது? தனஞ்சயன் அக்னி பகவானைத் திருப்தி அடைவித்துக் காண்டீவத்தையும் பெரிய அம்பறுத்தூணிகளையும் திவ்யாஸ்திரங்களையும் அடைந்தான். அந்த உயர்ந்த வில்லினாலும் தன் கைவன்மையினாலும் அவன் அரசர்களை வசப்படுத்தினான். அதில் உனக்கென்ன துயரமிருக்கிறது? பகைவரைத் துன்புறச் செய்கிறவனாகிய அந்த ஸவ்யஸாசி மயனென்னும் அசுரனை அக்னியிலிருந்து விடுவித்து அவனால் அந்தச் சபையைச் செய்வித்துக்கொண்டான். அந்த மயனால் நியமிக்கப்பட்ட கிங்கரர்களென்னும் பயங்கரமான அரக்கர்கள் அந்தச் சபையைக் காக்கின்றனர். அதில் உனக்கென்ன துயரம்? பாரதனே! வேந்தனே! உனக்குச் சகாயம யாருமில்லையென்று சொன்னாயே; அது பிழை. இந்தச் சகோதரர்கள் அனைவரும் உனக்கு உட்பட்டிருக்கின்றனர். சிறந்த வில்லாளியும் வீரருமான துரோணரும் அவர் புத்திரரான அசுவத்தாமாவும் உனக்கு உட்பட்டிருக்கின்றனர். ஸூதனுக்கும் ராதைக்கும் புத்திரனான கர்ணன் உறுதியான வில்லாளி; மகாரதன். அவன் ஒருவனே பாண்டவர் ஸோமகர்களெல்லாரையும யுத்தத்தில் வெல்லத்தக்கவன். சிறந்த கைகளையுடையவனே! வேறு சகாயங்களால் நீ செய்யப்போவது யாது? புருஷ சிரேஷ்டரான பீஷ்மரும மகாரதரான கிருபரும பலசாலியான ஜயத்ரதனும் ஸோமதத்தனும் நானும் என் சகோதரரும ஸோமதத்தன் புத்திரனுமாகிய எங்களெல்லாருடனும் சேர்ந்து பூமி முழுமையும் நீ ஜயிக்கக்கடவாய்' என்று சொன்னான். அப்படிச் சொல்லியதைக் கேட்டுத் துரியோதனன், 'அரசனே! உனக்கு இஷ்டமிருந்தால் உன்னோடும் நீ சொன்ன மற்ற மகாரதர்களோடும் சேர்ந்து இந்தப் பாண்டவர்களை நான் ஜயிப்பேன். இவர்களை ஜயித்தேனேயாயின் பூமியும் அரசர்களனைவரும் மிக்க விலைபெற்ற அந்தச் சபையும் என் வசமாகிவிடும்' என்று சொன்னான். அதற்குச் சகுனி, 'தனஞ்சயன், கிருஷ்ணன், பீமசேனன், யுதிஷ்டிரன், நகுலன், சகதேவன், துருபதன், அவன் புத்திரர்கள இவர்களை யுத்தத்தில் வெல்வதற்குத் தேவக்கூட்டங்களாலும் முடியாது. எல்லாரும் மகாரதர்கள்; சிறந்த வில்லாளிகள்; அஸ்திரங்களில் தேர்ந்தவர்கள்; யுத்தத்தில் அடங்காத கர்வமுள்ளவர்கள். அரசனே! எந்த உபாயத்தினால் யுதிஷ்டிரனை நான் ஜயிக்க முடியுமோ அந்த உபாயம் எனக்குத் தெரியும். நீ அதனை

அறிந்து நடத்துவாயாக' என்று சொன்னான். துரியோதனன், மாமா! நமக்கு வேண்டியவர்களுக்கும் மற்றுமுள்ள மகாத்மாக்களுக்கும் தீங்கில்லாமல் அவர்களை ஜயிக்கமுடியுமாயின் அதனை எனக்குச் சொல்' என்று கேட்க, சகுனி, 'யுதிஷ்டிரன் சூதாட்டத்தில் ஆசையுள்ளவன். அவனுக்கு ஆடத் தெரியாது. ராஜசிரேஷ்டனான அவன் நாம் அழைத்தால் வராமலிருக்கமாட்டான். கௌரவனே! நான் ஆட்டத்தில் தேர்ந்தவன். எனக்கு நிகரானவன் பூமியிலும் மூன்று லோகங்களிலும இல்லை. நீ அவனைச் சூதுக்கு அழை. புருஷ சிரேஷ்டனான அரசனே! பாச்சிகைகளில் நிபுணனாகிய நான் அவனுடைய ராஜ்யத்தையும் அந்த விளங்கும் ஐசுவரியத்தையும் உனக்காக வாங்கிவிடுவேனென்பது திண்ணம். துரியோதனா! இவற்றை யெல்லாம் நீ திருதராஷ்டிர மகாராஜாவுக்குத் தெரிவி. உன் தந்தையினால் உத்தரவு கொடுக்கப்பட்ட பிறகு அவர்களை ஐயமின்றி ஜயிப்பேன்' என்று சொன்னான். துரியோதனன், 'ஸௌபலனே! கௌரவ சிரேஷ்டரான திருதராஷ்டிரருக்கு நீயே காரணங்களுடன் தெரிவிப்பாயாக. நான் தெரிவிப்பது முடியாது' என்று சொன்னான்.

---

## எழுபத்தாறுவது அத்தியாயம்

### த்யூத பர்வம் (தொடர்ச்சி)

---

**(துரியோதனனாலும் சகுனியினாலும் சூதாடுவதைப்பற்றித் தெரிவிக்கப்பட்ட திருதராஷ்டிரன் சபை கட்டுவித்து, தர்மராஜரை அழைத்துவரும்படி விதுரரை அனுப்பியது)**

மிக்க கெட்ட புத்தியுள்ள சகுனி, ராஜாவான யுதிஷ்டிரருடைய அந்த ராஜசூய யாகத்தைத் துரியோதனனுடன கூடப் பார்த்து ஹஸ்தினபுரத்திற் பிரவேசித்தான். பாவஞ்செயபவனும் அரசர்களை யழிப்பவனும் கெட்ட புத்தியுள்ளவனுமாகிய சகுனி, துரியோதனனுடைய துயரத்தைக் கண்டு, பரத வம்சத்தார் கெடுவதறகாக, அவனுடைய அபிப்பிராயமே சரியென்று மனத்தில் உறுதியாக வைததுக்கொண்டான். துரியோதனனது விருபபத்தைச் செய்கிறவனாகிய சகுனி அவன் சொல்லைக் கேட்டு அவன் கருத்தை யறிந்துகொண்டு அறிவே கண்ணாக வுடையவனும் சிறந்த புத்திசாலியுமான திருதராஷ்டிர மகாராஜன் வீற்றிருக்கும்போது அவனருகிற் சென்று, 'மகாராஜரே! மனிதர்களுக்கு அதிபதியே! துரியோதனன் நிறம் மாறி

வெளுத்து இளைத்துத் துயரத்தையும் விசாரத்தையும் அடைந்திருக்கிறான்; அதனை யறியும். உமது ஜ்யேஷ்ட புத்திரனான துரியோதனனுக்குத் தாங்கக்கூடாத மனத்துயரம் பகைவரால் உண்டாயிருப்பதை நீர் விசாரிக்கவில்லை; ஏன் தெரிந்துகொள்ளாமலிருக்கிறீர்?' என்றான். சகுனியினால் இவ்வாறு சொல்லப்பட்ட திருதராஷ்டிர மகாராஜன் துரியோதனனை அழைத்துச் சொல்லத் தொடங்கினான்: 'என் அன்புள்ள மகனே! துரியோதனா! என்ன காரணத்தினால் நீ மிகத் துயரப்படுகிறாய்? கௌரவ சிரேஷ்டனே! அந்த விஷயத்தை நான் கேட்கலாமாயின் எனக்குச் சொல்; நீ நிறம் மாறி வெளுத்து இளைத்திருப்பதாக இந்தச் சகுனி சொல்லுகிறான். நான் நினைத்துப் பார்க்கையில் நீ துயரப்படுவதற்குக் காரணம் எனக்குத் தெரியவில்லை. புதல்வனே! பெரிய ஐசுவரியம் முழுதும் உன்னிடத்தில் நிலைபெற்றிருக்கிறது. உன் சகோதரர்களும் நண்பர்களும் உனக்கு விருப்பமில்லாதவற்றைச் செய்வதில்லை. உயர்ந்த ஆடைகள் உடுக்கிறாய்; மாமிசத்தோடுகூடிய அன்னத்தைப் புசிக்கிறாய்; உயர்ந்த ஜாதிக் குதிரைகள் ஏறுகிறாய்; எதனால் வெளுத்தும் இளைத்துமிருக்கிறாய்? விலைபெற்ற படுக்கைகளும் மனத்திற்கினிய பெண்களும் சிறந்த வீடுகளும் சுகமான தோட்டங்களும் தேவர்களுக்கிருப்பதுபோல உனக்கு இருக்கின்றன. உலகமெல்லாம் உன் சொல்லிற் கட்டுப்பட்டிருக்கிறது; சந்தேகமில்லை. யாராலும் வெல்லமுடியாத அன்புள்ள புத்திரனே! அப்படிப்பட்ட நீ ஏழைபோல் ஏன் துயரப்படுகிறாய்? அப்பா! தாய்தந்தையர்களால் புத்திரனுக்குச் செய்யத்தக்கவற்றுள் எது சிறந்ததாக நினைக்கப்பட்டிருக்கிறதோ அதையும் நம்முடைய குலத்தின் ராஜ்யலக்ஷ்மி எல்லாவற்றையும் நீ அடைந்திருக்கிறாய். தேவலோகத்தில் தேவேந்திரனுக்கு இருப்பதுபோலவே எல்லா விருப்பங்களும் பலவகைச் சிறந்த உணவுகளும் பானங்களும் உனக்கு இருக்கின்றன. ஏன் விசனப்படுகிறாய்? நிருக்தம் சந்தம் முதலான ஆறு அங்கங்களோடுகூடிய வேதத்தையும் அஸ்திர வித்தையையும் சாஸ்திரங்களையும் [1] பத்து இலக்கணங்களுடன் கிருபாசாரியரிடம் படித்துத் தேர்ந்திருக்கிறாய்; பலராமரிடத்திலும் கிருபரிடத்திலும் துரோணரிடத்திலும் அஸ்திரவித்தை கற்றிருக்கிறாய்; நீ சகோதரர்களில் மூத்தவன்; ராஜ்யத்திலிருக்கிறாய்; புத்திரனே! ஏன் துயரப்படுகிறாய்? புத்திரனே! நீ பிரபுவாயிருந்துகொண்டு ஸூதர்களாலும் மாகதர்களாலும் துதிக்கப்பெற்று, சாமானிய ஜனங்களுக்குக் கிடையாத உணவு

---

[1] 1. ஸ்வரம்; 2. வர்ணம்; 3. பதம்; 4. தாது; 5. வேற்றுமை யுருபுகள்; 6. வினையுருப்புகள்; 7. நிருபசர்க்கம்; 8. தத்திதப்ரத்யயம்; 9. காரகம்; 10. ஸமாஸம் என்பன.

உடைகளை மிகுதியாக அனுபவிக்கிறாய். எல்லாந் தெரிந்தவனே! இவ்வுலகத்தில் மற்றொருவன் மேன்மையை அடைந்திருக்கிறானென்பது உன் விசனத்திற்குக் காரணமாவது எப்படி? அதை நான் கேட்கிறேன்; சொல்' என்றான்.

மந்த புத்தியுள்ளவனும் கோபம் மேற்கொண்டவனுமான துரியோதனன், திருதராஷ்டிரனுடைய அந்தச் சொல்லைக் கேட்டுத் தந்தையை நோக்கி, தன் எண்ணத்தை வெளிப்படுத்திக் கொண்டு பின்வருமாறு சொல்லலானான் :—'நான் அற்ப மனிதன்போல உண்ணுகிறேன்; கெட்ட காலத்தைக் கடக்கக் கருதித் தாங்கக்கூடாத கோபத்தைத் தாங்குகிறேன். அவமானத்தைப் பொறாமல் தனது ராஜ்யாங்கங்களை ஆக்கிரமித்து மேலாயிருந்து பிறரால் உண்டாகும் கஷ்டங்களை விடுவிக்க முயலுகிறவன்தான் ஆண்பிள்ளையென்று சொல்லப்படுகிறான். பரத வம்சத்தவரே! உள்ளது போதுமென்றிருப்பதும் தயையும் பயமும், ஐசுவரியத்தையும் கௌரவத்தையும் கெடுக்கின்றன. அவற்றினால் ஆக்கிரமிக்கப்பட்டவன் மேன்மையை அடையான். மிகப் பிரகாசிப்பதும் என்னை நிறம் குறையச் செய்வதுமான ராஜ்யலக்ஷ்மி குந்திபுத்திரனான யுதிஷ்டிரனிடத்திலிருப்பதைக் கண்ட பிறகு நான் அனுபவிப்பது எனக்குத் திருப்திகரமாயில்லை. எதிரிகள் மேன்மை அடைவதையும் நான் குறைவதையும் கண்ட பின், தர்மராஜாவின் ஐசுவரியம் கண்ணுக்குப் புலப்படாததாயினும் எதிரில் நிற்பதுபோலத் தோன்றுவதனால் நான் நிறம் குன்றி ஓய்ந்து வெளுத்தும் இளைத்துமிருக்கிறேன். யுதிஷ்டிரனால் காப்பாற்றப்பட்ட ஸ்நாதகர்களும் கிருகஸ்தர்களும் எண்பததெண்ணாயிரவர் இருக்கின்றார்கள். அவர்களில் ஒவ்வொருவருக்கும் முப்பது முப்பது வேலைக்காரிகளுண்டு. யுதிஷ்டிரனுடைய வீட்டில் ஜிதேந்திரியர்களான யதிகள் பதினாயிரவர் பொற்பாத்திரங்களில் புசிக்கின்றனர். கறுப்பும் நீலமும சிவப்புமான வர்ணங்களோடுகூடிய மான்தோல்களையும் விலைபெற்ற சால்வைகளையும் காம்போஜ தேசத்தரசன் யுதிஷ்டிரனுக்கு அனுப்பினான். நூற்றுக்கணக்கும் ஆயிரக்கணக்குமாகப் பெண்யானைகளையும் பசுக்களையும் குதிரைகளையும் முந்நூறு ஒட்டகங்களையும் அநேக நூறு பெண்குதிரைகளையும் கப்பமாக எடுத்துக் கொண்டு, ராஜகுமாரர்கள் யுதிஷ்டிரனுடைய கிருகத்தில் வந்து சேர்ந்தனர். வேந்தரே! அந்தச் சிறந்த யாகத்தில் அரசர்கள் பலவிதமான ரத்தினங்களை யுதிஷ்டிரனுக்கு மிகுதியாகக் கொணர்ந்து கொடுத்தனர். சிறந்த புத்தியுள்ள பாண்டு புத்திரனுக்கு அந்த யாகத்தில் திரவியலாபம் வந்ததுபோல எவ்விடத்திலும் இதற்குமுன் நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை.

இதெல்லாம் பொய்யாயிருந்தால் நீர் சஞ்சயனைக் கேட்கலாம். அரசரே! நமது சத்துருவின் அளவற்ற அந்தத் தனக்குவியலைக் கண்டு அதையே நினைந்து நான் சுகம்பெறாமல் இருக்கிறேன். பிராமணர்களும் பயிரிடுகிறவர்களும் பசுக்கள் வைத்துக் கொண்டிருப்பவர்களும் நூற்றுக்கணக்காகக் கூட்டம்சேர்ந்து மூவாயிரம் கோடி பொன்களைக் கப்பமாக எடுத்துக்கொண்டு வந்து வாயிலில் தடுக்கப்பட்டு நின்றனர். திரிகர்வ தேசத்தார் அழகான பொற்குடங்களைக் கொண்டுவந்து தர்மராஜாவுக்குத் தெரிவித்தபிறகு உள்ளே விடப்பட்டனர். தேவஸ்திரீகள் எதில் இந்திரனுக்கு மதுவை வைத்துக்கொண்டிருக்கின்றனரோ வருணனுடைய அந்த வெண்கலப் பாத்திரத்தைத் திருப்பாற் கடல் தர்மராஜாவுக்குக் கொணர்ந்து கொடுத்தது. ஆயிரம் பொன் விலைபெற்றதும் அநேக ரத்னங்களால் அலங்கரிக்கப் பெற்றதும் உறியில் வைக்கப்பட்டதுமான சிறந்த சங்கத்தை யெடுத்துக் கிருஷ்ணன் தர்மராஜனுக்கு அபிஷேகஞ் செய்தான். அதையெல்லாம கண்டு எனக்குப பெரிய ஜ்வரம் உண்டானது போலிருந்தது. பரதசிரேஷ்டரே! பறவைகள் அந்தச் சங்கை எடுத்துககொண்டு கீழ்கடலுக்கும் தென் கடலுக்கும் மேல் கடலுக்கும் சென்றன; வட கடலுக்குமட்டும் செல்லவில்லை. அர்ஜுனன் அந்த வடதிசைக்குச் சென்று அளவற்ற தனத்தைக் கப்பமாகக் கொண்டுவந்தான். பாரதரே! மயனால் பிந்துஸரஸி லுள்ள ரத்னங்களைக் கொண்டுவந்து செய்து படிககல் மேலே மூடியிருந்ததனால் ஜலம் நிரம்பின தாமரைக்குளம் போலிருக்கும் பூமியைக் கண்டேன. பரதசிரேஷ்டரே! அங்கே நான் துணியைத் தூக்கினதைப் பார்த்து விருகோதரனும் சபை காக்கும் வேலைக்காரர்களும் நகைத்தனர். அப்போது என் தாய்தந்தையர்களுக்காக என் உயிரைச் சிரமப்பட்டுக் காப்பாற்றினேன. என்னால் முடிந்திருக்குமாயின் விருகோதரனை அங்கேயே கொன்றிருபபேன. பாரதரே! என் பகைவனால் செய்யபபட்ட அந்தப் பரிகாசம் என்னை எரிக்கிறது. வேந்தரே! அந்தச் சபையின் படிகத் தாமரைகளினால் விளங்குவதும படிகமே ஜலமபோற் செய்யப்பட்டதுமாகிய தாமரைக் குளத்தைச் சபையென்று நினைத்து விழுந்தேன். அப்போது பீமனும் அர்ஜுனனும சப்தத்துடன சிரித்தனர். திரௌபதியும பெண்களுடன சேர்ந்து என் மனம் விழுந்துபோகும்படி நகைத்தாள். ஜலத்திலிறங்கி வஸ்திரம் நனைந்துபோன எனக்கு ராஜாவினால் கட்டளையிடப பட்ட வேலைக்காரர்கள் வேறு வஸ்திரஙகளைக் கொடுத்தனர். அதுவும் எனக்குப் பெருந் துயரமே. தூண்களிருக்குமிடத்தில் தூண்களில்லாததுபோலவும தூண்களில்லாத இடங்களில்

ஆயிரம் தூண்களிருப்பதுபோலவும் காணப்படுகிறது. அரசரே! பிரபுவே! அந்த இடத்தில் நான் படிகக்கற்களின் நடுவில் அடிபட்டுக்கொண்டேன்; வாயிலில்லாத இடம் வாயில போலிருந்ததனால் அங்கே வெளியில் போகத் தொடங்கிக் கல்லில் முட்டிக்கொண்டு நெற்றியில் மிகவும் அடிபட்டுக்கொண்டேன்; அதைப் பார்த்துத் தடவிக்கொண்டு வேறு மார்க்கத்திற் சென்றேன். விருகோதரன் பரிகாசஞ் செய்து என்னைப் பார்த்து, 'அரசரே! இது வாயில்; இது வாயிலன்று' என்று புதுமையாகச் சொனனான். வேந்தரே! அவ்விடத்தில் அந்த நிலைமையிலிருந்த என்னைக் கண்டு பெண்களும் நகைத்தனர். புருஷசிரேஷ்டரே! அந்தச் சபையிலுள்ளவர்களுக்கு இவையெல்லாம் சிரிக்கக் காரணமாயிருந்தன. நான் இதுவரையில எங்கும் கண்டதும் கேட்டதுமில்லாத ரத்னங்களை அவ்விடத்திற் கண்டேன். அதனால் கொதிப்பும் துயரமும் அடைந்தேன். தீயிற குதிப்பேன; கருங்கடலில் விழுவேன். புகழ்பெற்றவனுக்கு அபகீர்த்தியானது மரணத்திலும அதிகக் கஷ்டம். மற்றோர் ஆச்சரியமும அங்கு உண்டாயிற்று; அதனையும சொல்லுகிறேன; கேளும. எப்போதும் புசிக்கும் பிராமணர்கள் ஒரு லக்ஷம கணக்கானதற்கு அடையாளமாக அஙகே சஙகு வைததுத் தினம ஊதப்படுகிறது. பாரதரே! அந்தச் சங்கு அடிக்கடி ஒலிக்கும்போது இடைவிடாத சப்தத்தைக் கேட்டேன். அதனால், எனக்கு மயிர்கள் பொடித்தன. மகாராஜாவே! காண வந்த அனேக அரசர்களினால் நிரமபின அந்தச் சபையானது மாசற்ற ஆகாயம் நட்சத்திரங்களினால் விளஙகுவதுபோல விளங்கிறறு. மகாராஜாவே! பிரஜைகளுக்கதிபதியே! சிறந்த புத்திசாலியான தர்மராஜனுடைய அந்த யாகத்தில் அரசர்கள வைசியாகள்போல் எலலா ரத்னஙகளையும காணிக்கைகளாகக் கொண்டுவந்தனர். பிராமணர்களுககுப் பரிமாறுகிறவர்கள அரசர்களே. ஓ! வேந்தரே! யுதிஷ்டிரனிடத்திலிருந்த லக்ஷ்மியானது தேவேந்திரனுககும யமனுக்கும வருணனுககும குபேரனுக்கும் இல்லை. பாணடு புத்திரனுடைய அந்தச் சிறந்த ராஜலக்ஷ்மியைக் கண்டு மனக்கொதிப்புற்ற நான் ஆறுதல் அடையவில்லை. பாண்டவர்களுடைய ஐசுவரியத்தை யடையாமல் எனக்கு ஆறுதலில்லை. பாணஙகளினால் பகைவரையாவது படுக்கவைபபேன. நானாவது பிறரால் அடிக்கப்பட்டுச் சாய்வேன். பகைவரைத் துனபுறச்செய்கிறவரே! இந்த நிலைமையிலிருக்தும் எனக்கு உயிரினாலாவதென்ன? அரசரே! பாண்டவர்கள் மேன்மேலும் ஓங்குகின்றனர். நமது உயர்வு நின்றுவிட்டது' என்றான்.

அப்போது சகுனி, 'தவறாத பராக்கிரமமுள்ளவனே! தர்மராஜாவினிடத்தில் எந்த ஒப்பற்ற ஐசுவரியத்தைக் கண்டாயோ அதை அடைவதற்கு நான் ஓர் உபாயம் சொல்லுகிறேன்; கேள். பாரதனே! இந்தப் பூமி முழுமையிலும் பாச்சிகைகளில் நான் தேர்ந்தவன். ஆடும்போது காய் போகும் வழி எனக்குத் தெரியும்; பந்தயம் தெரியும்; தன் ஆட்டம் பிறர் ஆட்டம் இவைகளின் வித்தியாசம் தெரியும். யுதிஷ்டிரனுக்கு ஆட்டத்தில் விருப்பமுண்டு; ஆனால் ஆடத் தெரியாது; அழைத்தோமானால் அவசியம் வருவான். அவன் எப்போதும் தானே என்னை அழைப்பதுண்டு. பிரபுவே! நான கபடத்தைச் செய்து அவனை நிச்சயமாக ஜயிப்பேன். அந்தச் சிறந்த ஐசுவரியத்தைத் திருப்பி வாங்கிவிடுவேன். அவனை அழை' என்று சொன்னான். சகுனியினால் இவ்வாறு சொல்லப்பட்ட துரியோதனன் மகாராஜன் உடனே திருதராஷ்டிரனை நோக்கி, 'அரசரே! சொக்கட்டான் ஆட்டம் தெரிந்த இந்தச் சகுனி ஆட்டத்தினாலேயே யுதிஷ்டிரனுடைய ராஜ்யலக்ஷ்மியை வாங்கத் திறமையுள்ளவன் அதற்கு நீர் அனுமதி கொடுக்கக்கடவீர்' என்று சொன்னான். அதைக் கேட்ட திருதராஷ்டிரன், 'விதுரன் மகா புத்திசாலி; எனக்கு மந்திரி; நான் அவன் சொற்படியிருப்பவன். அவனுடன் கலந்து இந்தக் காரியத்தின் முடிவைப்பற்றித் தெரிந்துகொள்வேன். தீர்க்கதரிசியாகிய அந்த விதுரன் தர்மத்தை முன்னிட்டு இருபக்கத்தாருக்கும் தகுந்ததும் மிக்க நன்மையுமாகக் காரியத்தின் முடிவைச் சொல்வன்' என்று சொன்னான். துரியோதனன், 'அரசர்க்கரசரே! விதுரர் வருவாராயின் அவர் உம்மைத் திருப்பிவிடுவர். நீர் திரும்பினால் நான் இறந்துபோவது திண்ணம். வேந்தரே! நான் இறந்துபோனபிறகு நீர் விதுரருடன் சுகமாயிரும். பூமி முழுமையையும் நீர் ஆளலாம். உமக்கு என்னாலாவதென்ன?' என்று சொன்னான். அவன் அன்போடும் துயரத்தோடும் சொன்ன அந்தச் சொல்லைக் கேட்டுத் திருதராஷ்டிரன் அவனுடைய எண்ணத்தை அங்கீகரித்து வேலைக்காரர்களைப் பார்த்து, 'சிற்பிகாள்! அனேகமாயிரம் தூண்களை நிரம்பினதும் நூறு வாயில்களுள்ளதும் மனத்திற்கும் பார்வைக்கும் இனியதுமான சபையை எனக்கு உடனே செய்யுங்கள். சிற்பிகளெல்லாரையும் வருவித்து அந்தச் சபையில் ரத்னங்களால் தளவரிசைகள் போட்டுப் பிரவேசிப்பதற்குச் சுகமாகவும் அழகாகவுஞ் செய்து உடனே எனக்குத் தெரிவியுங்கள்' என்று கட்டளையிட்டான். ஜனமேஜய மகாராஜாவே! துரியோதனனுடைய சமாதானத்திற்காகத் திருதராஷ்டிர மகாராஜன் இவ்வாறு நிச்சயம் செய்து விதுரருக்குத் தூதனை அனுப்பினான்.

விதுரரைக் கேட்காமல் திருதராஷ்டிரனுக்குத் தன் மனத்தில் ஒரு நிச்சயமும் உண்டாகவில்லை. திருதராஷ்டிரன் சொக்கட்டான் ஆடுவதிலுள்ள குற்றங்களை அறிந்திருந்தும் புத்திரனிடத்தி லுள்ள சிநேகத்தினால் இழுக்கப்பட்டான். புத்திமானான விதுரர் கலகத்திறந்த வாயிலாக வந்திருப்பதும் நாசத்திற்கு ஆரம்பமாக உண்டானதுமாகிய அந்தச் சமாசாரத்தைக் கேட்டுத் திருதராஷ் டிரனிடம் ஓடிவந்தார். அந்த விதுரர் தமக்குத் தமையனும் மகாத்மாவுமான திருதராஷ்டிரனை யடைந்து பாதங்களில் தலை வணங்கி, 'அரசரே! பிரபுவே! உம்முடைய இந்த முயற்சியை நான் ஒத்துக்கொள்ளவில்லை. இந்தச் சூதாட்டம் காரணமாக உமது புத்திரர்களுக்கு விரோதம் வராமலிருக்கும்படி செய்யக் கடவீர்' என்று சொன்னார். அதற்குத் திருதராஷ்டிரன், 'விதுரா! தேவர்கள் அனுக்கிரகஞ்செய்வாராயின் எனது புத்திரர் களுக்கும் பாண்டு புத்திரர்களுக்கும் கலகம் உண்டாகாமலிருக்கு மென்பது நிச்சயம். நல்லதோ கெட்டதோ, அனுகூலமோ பிரதி கூலமோ மித்திரர்களுக்குள் சூதாட்டம் நடக்கட்டும். இது விதி யின் கட்டளை யென்பதில் சந்தேகமில்லை. பாரதனே! நானும் துரோணரும் பீஷ்மரும் நீயும் இருக்கும்போது, இவ்விருவருக்கும் தெய்விகமாகக்கூட அக்கிரமம் எவ்வகையிலும் நேரிடாது. நீ இப்போதே காற்றுவேகமான குதிரைகள் பூட்டின ரதத்திலேறிக் கொண்டு காண்டவப்பிரஸ்தம் சென்று யுதிஷ்டிரனை அழைத்து வா. விதுரா! என்னுடைய எண்ணம் யுதிஷ்டிரனிடத்திற் சொல்லத்தகாது. இதனை உனக்குச் சொல்லுகிறேன். தெய் வந்தான் மேலானதென்று நினைக்கிறேன். அதனாலேதான் இது நேரிடுகிறது' என்று சொன்னான். இவ்வாறு சொல்லியதைக் கேட்ட புத்திமானான விதுரர், 'இந்தக் குலம் இனி இல்லை' என்று நினைத்து மிகத் துன்பமுற்றுச் சிறந்த புத்தியுள்ள பீஷ்ம ரிடம் சென்றார்'' என்றார்.

---

## எழுபத்தேழாவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

**(ஜனமேஜயர் விரிவாகச் சொல்லும்படி கேட்டதன்மேல் வைசம்பாயனர் சொல்லத் தொடங்கி, திருதராஷ்டிரனிடம் துரியோதனன் துயரப்பட்டதை மறுபடியும் கூறியது)**

ஜனமேஜயர், ''ஓ! பிரம்ம ஞானிகளிற் சிறந்தவரே! எனது பிதாமகர்களான பாண்டவர்கள் அப்படிப்பட்ட விசனம்

அடைந்ததற்குக் காரணமும் பிராதாக்களுக்கே பெரிய நாசத்தை விளைவித்ததுமாகிய அந்தச் சூதாட்டம் எவ்வாறு நடந்தது? அந்த ஆட்டத்திற்குச் சபையோராயிருந்த அரசர்கள் யாவர்? அதைச் சந்தோஷித்தவர் யாவர்? மறுத்தவர் யாவர்? பிராம்மணரே! நீங்கள் இதை விரிவாகச் சொல்ல விரும்புகிறேன். பிராம்மணோத்தமரே! பூமியே அழிந்ததற்கு இதன்றோ ஆதி காரணம்" என்று கேட்க, பிறகு வியாசருடைய சிஷ்யரும் சிறந்த மகிமையுள்ளவரும் வேதார்த்தங்களை அறிந்தவருமாகிய வைசம்பாயனர் நடந்தவற்றையெல்லாம் சொல்லத் தொடங்கினார்.

"பரத வம்சத்தவரிற் சிறந்தவரே! மகாராஜரே! உமக்கு இந்தக் கதையைக் கேட்க விருப்பமிருந்தால் மறுபடியும் விரிவாகச் சொல்லுகிறேன், கேளும். அம்பிகையின் புத்திரனாகிய திருதராஷ்டிரன் விதுரருடைய அபிப்பிராயத்தை அறிந்த பிறகு மறுபடியும் ஏகாந்தத்தில் துரியோதனனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானான்: 'காந்தாரியின் மகனே! த்யூதம் வேண்டாம். விதுரன் அங்கீகரிக்கவில்லை. மிகச் சிறந்த புத்தியுள்ள விதுரன் நமக்கு இன்னாததை உரையான். விதுரன் சொல்வதே நமக்கு மிக்க நன்மையென்றல்லவோ நான் நினைப்பது. புத்திரனே! அவன் சொன்னதை யெல்லாம் நீ செய்யக்கடவாய். அதுதான் உனக்கு நன்மையென்று யான் நினைக்கிறேன். தேவரிஷியும் இந்திரனுக்கு ஆசாரியரும் மூன்று காலங்களையும் அறிந்தவரும் சிறந்த புத்தியுள்ளவருமான பிருகஸ்பதி இந்திரனுக்கு எந்தச் சாஸ்திரத்தை உரைத்தாரோ அதையெல்லாம் மகாகவியாகிய விதுரன் சூட்சுமங்களுடன் அறிந்திருக்கின்றான். புத்திரனே! நான்கூட எப்போதும அவன் சொல்லிலிருப்பவனன்றோ? ராஜனே! சிறந்த புத்திசாலியான விதுரன்தான் கௌரவர்களுக்குத் தலைவனாக நினைக்கப்பட்டிருப்பவன். மகா புத்திசாலியான உத்தவன்தான் யாதவர்களில் பூஜிக்கத்தக்கவன். மகனே! ஆதலால், சூது வேண்டாம். சூதில் விரோதத்தைக் காண்கிறோம். விரோதம் வந்தால் ராஜ்யமே அழியும். புத்திரனே! அந்தச் சூதை விட்டுவிடு. தாய் தந்தையர்கள் மகனுக்கு ஆக்கும் பேருதவியென்று எது சொல்லப்படுகிறதோ அதை நீ அடைந்திருக்கிறாய். தந்தை பாட்டனார்களிடமிருந்து வந்த ராஜ்யத்தைப் பெற்றிருக்கிறாய். நீ ஓதினவன்; சாஸ்திரங்களில் தேர்ந்தவன்; வீட்டில் எக்காலமும் கொண்டாடப்பட்டவன்; சகோதரர்களில் மூத்தவன்; ராஜ்யத்திலிருப்பவன்; என்ன நன்மையை நீ பெறுமலிருக்கிறாய்? சிறந்த கைகளையுடையவனே! மற்ற ஜனங்கள் பெறுதற்கரிய சிறந்த உணவுகளையும் உடைகளையும் நீ பெற்றிருக்கிறாய். அன்புள்ள மகனே! நீ துயரப்படுவ

தேன்? சிறந்த கைகளையுடையவனே! தந்தை பாட்டனார் வரிசையாகக் கிடைத்ததும் செழித்ததுமாகிய பெரிய ராஜ்யத்தை எப்போதும் கட்டளையிட்டுக்கொண்டு தேவலோகத்தில் தேவேந்திரன்போல (இப்புவியில்) விளங்குகிறாய். ராஜனே! உனக்குள்ள ஐசுவரியமும் முன்பு என்னால் உரைக்கப்பட்ட உனக்குள்ள சுகங்களும் மற்றவர்கள் பெறுதற்கரியவை. எல்லாந் தெரிந்தவனே! அப்படிப்பட்ட உனக்குத் துயரத்திற்குக் காரணம் என்ன உண்டாயிற்று? அதை எனக்குச் சொல்லவேண்டும்' என்றான். அதைக் கேட்டுத் துரியோதனன், 'உண்ணுகிறேன், உடுக்கிறேன் என்று பார்த்துக்கொண்டு ஆண்மையை விட்டுப் பிறர் பெருமையில் பொறாமைப்படாதவன் எவனோ அவன் இழிவான மனிதனென்று நினைக்கப்படுகிறான். அரசர்க்கரசரே! பிரபுவே! எல்லாருக்குமிருப்பதுபோன்ற ராஜ்யலக்ஷ்மியானது எனக்கு சந்தோஷத்தைத் தருவதில்லை. குந்தியின் புத்திரனிடத்தில் சிறப்புற்று விளங்கின ராஜ்யலக்ஷ்மியைக் கண்டுதான் விசனமுற்றேன். பூமி முழுவதும் யுதிஷ்டிரனுடைய ஆஞ்ஞைக்குட்பட்டிருப்பதைக் கண்டு ஜீவித்திருக்கும் யான் மிகக கடினமானவன். துக்கத்தினால் இதை உமக்குச் சொல்லுகிறேன். நீபர்கள், சித்ரகர்கள், குகுர தேசத்தவர்கள், காரஸ்கரர்கள், லோகஜங்கர்களென்னும் அரசர்கள் யுதிஷ்டிரன் வீட்டில் அடிமைகள்போல வசப்பட்டிருக்கின்றனர். இமயமலையிலும் கடற்தீவுகளிலுமுள்ள ரத்னநிதிகளோடுகூடிய அரசர்களனைவரும் மிலேச்ச ஜாதியார்களனைவரும் யுதிஷ்டிரன் கிருகத்தில் தூர விலக்கப்பட்டிருந்தனர். அரசர்க்கரசரே! யுதிஷ்டிரன் என்னை மூத்தவனென்றும் சிறந்தவனென்றும் நினைத்து மரியாதையுடன் ரத்னங்களை வாங்கும்படி ஏற்படுத்தியிருந்தான். பாரதரே! அங்கே வந்த மிகச் சிறந்த ரத்னங்களுக்கும் காணிக்கைகள் கொண்டுவந்தவர்களுக்கும இக்கரையுந் தெரியவில்லை; அக்கரையுந் தெரியவில்லை. அந்தத் தனங்களை வாங்குவதற்கு என் கை போதாமற்போயிற்று. நான் களைப்படைந்திருந்தபோது தூரத்திலிருந்து கொண்டுவந்த தனங்களைக் கையில் வைத்துக்கொண்டு அவரவர்கள் நின்றனர். பிந்துஸரஸிலுள்ள ரத்னங்களைக் கொண்டுவந்து மயனால் நிர்மாணஞ் செய்யப்பட்டதும் படிககல் மூடப்பட்டிருபபதனால் ஜலம் நிரம்பின தாமரைக்குளம்போன்றதுமான ஓரிடத்தைக் கண்டேன். நான் ஆடையைத் தூக்கிக்கொள்ளும்போது சத்ருவின் செல்வச் சிறப்பைக் கண்டு மயங்கினவனும் ரத்னங்களில்லாதவனுமாகிய என்னைக் கண்டு விருகோதரன் நகைத்தான். என்னால் முடிந்திருக்குமாயின் அங்கேயே விருகோதரனைக் கொன்றிருப்பேன்.

அரசரே! பீமனைக் கொல்ல யத்தனஞ் செய்திருப்பேனாயின் சிசுபாலனுக்கு வந்த கதிதான் நமக்கும் வந்திருக்கும்; சந்தேகமில்லை. பாரதரே! என பகைவன் பரிகாசஞ்செய்தது என்னைச் சுடுகிறது. ராஜரே! திரும்பவும் அதுபோனற மற்றொரு குளம் தாமரை மலர்களினால் விளங்கியிருந்ததைப் படிகக்கல் பூமியாக நினைத்து ஜலத்தில் விழுந்தேன். அவ்விடத்தில் என்னைப பார்த்துக் கிருஷ்ணன் அர்ஜுனனுடன்கூடச் சத்தங்கேட்கும்படி நகைத்தான. திரௌபதியும அநேக ஸ்திரீகளுடன்கூட என் மனம் துயரப்படும்படி நகைத்தாள். ஜலத்தில் வஸ்திரம் நனைந்து போன எனக்குத் தர்மராஜாவினால் ஏவப்பட்ட வேலைக்காரர்கள் வேறு வஸ்திரங்களைக் கொடுத்தனர். அதுவும் எனக்குப் பெருந்துயரம். அரசரே! நான் மற்றொரு மோசம்போனதையும் சொல்லுகிறேன்; கேளும். வாயிலிருப்பதுபோலத் தோன்றும் வாயிலில்லாத இடத்தில வெளியே போகத் தொடங்கிக் கல்லில் அடிபட்டு நெற்றியில் புண்பட்டுக்கொண்டேன். அங்கே அவ்வாறு அடிபட்ட என்னை, சேர்ந்திருந்த நகுல சகதேவர்களிருவரும தூரத்திலிருந்து பார்த்து விசனப்பட்டுக் கைகளால் அணைத்தனர். அந்தச் சமயத்தில் சகதேவன், என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு, 'திருதராஷ்டிர புத்திரனே! வாயில் இங்கே யிருக்கிறது; அங்கே போகாதே' என்று அடிக்கடி சொன்னான். அந்தச் சமயத்தில் பீமஸேனனும், 'திருதராஷ்டிர புத்திரனே!' என்று அழைத்து, சிரித்து, 'ராஜனே! வாயில் இஙகே' என்று சொன்னான். அந்தச் சபையில் நான் கண்ட ரத்னங்களுக்குப் பெயர்களைக்கூட இதற்குமுன நான் கேட்டதில்லை. அதுவும் என் மனத்தைச் சுடுகிறது.

---

### எழுபத்தெட்டாவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

**(ராஜசூய யாகத்தில் தர்மராஜாவுக்கு வந்த காணிக்கைகளைப்பற்றித் துரியோதனன் விரிவாகத் திருதராஷ்டிரனுக்கு உரைத்தது)**

பாரதரே! ஆங்காங்கிருந்து அரசர்கள் பாண்டவர்களுக்குக் கொண்டுவந்த சிறந்த தனஙகள் யான் கண்டனவற்றைக் கேளும். பகைவனுடைய அந்தத் தனத்தைக் கண்டு மயஙகின நான் என்னையே அறியாமற் போனேன். பாரதரே! [1] பூமியி

---

1 பூமியிலிருந்து உண்டானவை ரத்னங்கள் முதலியவை; பூமியிலிருந்து உண்டான பொருள்களிலிருந்து உண்டானவை வஸ்திரங்கள் முதலியவை.

லிருந்தும் பூமியிலுண்டான பொருள்களிலிருந்தும் உண்டான திரவியங்களைத் தெரிந்துகொள்ளும். ஆட்டுமயிர்களாற் செய்யப்பட்டனவும் எலி பெருச்சாளி முதலியவற்றின் தோல்களாற் செய்யப்பட்டனவும் பூனைத் தோல்களாற் செய்யப்பட்டனவும் பொற்சரிகையினால் அலங்கரிக்கப்பட்டனவுமான சிறந்த போர்வைகளையும் தோல்களையும் மிகுதியாகக் காம்போஜராஜன் கொடுத்தான். குருவிகள்போலச் சித்ர நிறமுள்ளவையும் கிளிமூக்குப்போலச் சிவந்த மூக்குள்ளவையுமான முந்நூறு குதிரைகளையும் சிலேஷ்மாதகம் வன்னி இங்குதி இவற்றின் காய்களினால் வளர்க்கப்பட்ட ஒட்டகங்களையும் பெண்குதிரைகளையும் திரிகர்த்த தேசத்தார் கொடுத்தனர். இடையர்கள் தங்கள் இனத்தாருடன்கூட [1] நாற்காற் பிராணிகளையும் வஸாதிகள் என்னப்பட்ட எப்போதும் திரிந்துகொண்டிருக்கும் ஜாதியார் மற்ற அநேக தனங்களையும் எடுத்துக்கொண்டு தர்மராஜாவின் வாயிலில் நின்றனர். மகாரதர்களிற் சிறந்தவனாகிய திரிகர்வ தேசத்தரசன் தன் பந்துக்களாற் சூழப்பட்டு மனமகிழ்ச்சியோடும் அன்போடும் அழகான பொற்குடங்களையும் ரத்தினங்களையும் பொன் நாணயங்களையும் பொற்கட்டிகளையும் எடுத்துக்கொண்டுவந்து தர்மராஜாவுக்கு அளித்தான். குவிந்தன் என்னும் பிராம்மண சிரேஷ்டனால் புத்திமானான தர்மராஜனுக்குக் காண்பித்து அன்போடு அளிக்கப்பெற்ற சங்கத்தைச் சகோதரர்களனைவரும் அர்ஜுனனுக்குக் கொடுத்தனர். பொன் ரேகைகளோடு கூடியதும் ஆச்சரியப்படத்தக்கதும் ஆயிரக்கணக்கான பொன் நாணயத்தினால் விசித்திரமானதும் தன் ஒளியினால் விளங்குவதும் அழகானதும் கண்களைக் கவருவதும் [2] விசுவகர்மாவினால் பூஜிக்கப்பெற்றதுமாகிய அந்தச் சங்கை அர்ஜுனன் வாங்கிக்கொண்டான். தர்மராஜனைப் பல முறை நமஸ்காரஞ்செய்து அதை எடுத்துக்கொண்டான். ஊதாமலிருக்கையிலும் கர்ஜிக்கத்தக்க அந்தச் சங்கம் அர்ஜுனன் ஊதினபோது மிகவும் ஒலித்தது. அந்தச் சங்கின் ஒலியினால் அரசர்கள் தங்கள் வலிமைகுன்றி விழுந்தனர். தமது சக்தி நிரம்பினவரும் ஒருவருக்கொருவர் இனியன செய்பவருமாகிய திருஷ்டத்யும்னனும் பாண்டவர்கள் ஐவரும் ஸாத்யகியும் கிருஷ்ணனுமாகிய இந்த எண்மரும் மூர்ச்சையடைந்த அரசர்களையும் என்னையும் கண்டு அப்போது நகைத்தனர். பாரதரே! பிறகு, அர்ஜுனன் சந்தோஷமடைந்து பொன் கட்டின கொம்புகளையுடைய ஐந்நூறு விருஷபங்களை அந்தக் குவிந்தன் என்னும் பிராமண சிரேஷ்டனுக்குக் கொடுத்தான். குவிந்தனென்னும் பிராமணன்

1 பசுக்களையும். 2 விசுவகர்மாவின் சிற்பத்திற்கு மேலாகவே இயற்கையிலமைந்தது.

முகமலர்ச்சியுடன் பொன்னும் பலவகை வஸ்திரங்களுமாகிய சிறந்த காணிக்கைகளைத் தர்மராஜாவுக்கு அனுப்பினன். காச்மீர தேசத்தரசன் சுத்தமும் மதுரமுமான திராட்சைப்பழ மத்யத்தையும் இன்னும் எல்லாக் காணிக்கைகளையும் எடுத்துக் கொண்டு தர்மராஜாவினிடம் வந்தான். யவனர்கள் மனோவேகமுள்ள மலைநாட்டுக் குதிரைகளையும் பெரிய விலைபெற்ற ஆசனங்களையும் புதியவையும் இலேசானவையும் அழகியவையும விலைபெற்றவையும் பிரகாசிப்பவையுமான சால்வைகளையும் மற்றுமுள்ள பலவகை ரத்னங்களையும கொண்டுவந்து வாயிலில் நின்றனர். கலிங்க தேசத்தரசனாகிய ச்ருதாயு என்பவன் மிகச் சிறந்த முத்துக்களையும் ரத்னங்களையும அளித்தான். அங்க தேசத்தரசன் பொன்மயமான ஆபரணங்களை யணிந்த அழகிய பெண்களைக் கொடுத்தான். பாரதரே! அரசரே! தென் கடற்கரையிலிருந்து வங்க தேசத்தரசன் நூற்றுக்கணக்கான பொற்கட்டில்களையும் நூற்றுக்கு மேற்பட்ட போர்வைகளையும் ஜலத்திலுண்டான ரத்னங்களையும் மற்ற சிற்றரசர்களிடமிருந்து அவன் வாங்கின கப்பங்களெல்லாவற்றையும் தர்மபுத்திரனுக்குக் கொடுத்தான். பாண்டிய ராஜன தர்த்துர மலையிலுண்டான தொண்ணூற்ருறு பாரம் நிறையுள்ள முதல்தரமான சந்தனக் கட்டைகளையும் தொண்ணூறருறு சங்கங்களையும் தர்மராஜாவுக்கு விரைந்து கொடுத்தான். சோள ராஜன் கேரள ராஜன் இருவரும் கணக்கில்லாத சந்தனங்களையும் அகில்களையும் பலவகையான முத்துக்களையும் வைடூரியங்களையும பாண்டு புத்திரனுக்குக் கொடுத்தனர். அச்மக ராஜன் கொம்புகளில் பொன் கட்டினவையும் பொன் ஆபரணங்களை யணிந்தவையும் கன்றுகளோடுகூடியவையும் குடங்குடமாகக் கறக்கின்றவையுமான பதினாயிரம் பசுக்களைக் கொடுத்தான். ஸிந்து தேசத்தரசன் பொன்மாலைகளினால் அலங்கரிக்கப்பட்டவையும் ஸிந்து தேசத்திலுண்டானவையுமான குதிரைகளில் இருபத்தையாயிரம் கொடுத்தான். ஸௌவீர தேசத்தரசன் பொன்னினாலும் முத்துக்களினாலும் ரத்னங்களினாலும் அலங்கரிக்கப்பட்டவையும் ஒளியினால் மத்தியான்ன சூரியனைப்போலப் பிரகாசிப்பவையும் யானைகள் பூட்டினவையுமான முந்நூறு சிறந்த தேர்களையும் மற்றுமுள்ள கப்பங்களையும் எடுத்துக்கொண்டுவந்து பாண்டு புத்திரனுக்குக் கொடுத்தான். பாரதரே! ராஜரே! அவந்தி தேசத்தரசன் ஆயிரக்கணக்கான பலவகை ரத்னங்களையும் உயர்ந்த முத்துமாலைகளையும் தோள்வளைகளையும் மற்றும் பலவகை ஆபரணங்களையும் பதினாயிரம் வேலைக்காரிகளையும் கப்பமாகக்கொண்டு சபையின் வாயிலில் வந்து பார்க்க விருப்ப

முள்ளவனாகக் காத்திருந்தான். தசார்ண தேசத்தரசனும் சேதி தேசத்தரசனும் வீரனான சூரஸேன தேசத்தரசனும் உயர்ந்த வஸ்திரங்களையும் பலவகை ரத்னங்களையும் மற்றுமுள்ள காணிக்கைகளெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டுவந்து பாண்டவனுக்கு அர்ப்பணஞ் செய்தனர். காசிராஜன் மிக்க சந்தோஷத்துடன் எண்பதினாயிரம் பசுக்களையும் எண்ணூறு யானைகளையும் தர்மராஜாவுக்குக் கப்பமாகக் கொடுத்தான். பொன் மாலைகளை அணிந்தவையும் ஸிந்து நதிக்கரையிலுண்டானவையுமான குதிரைகள் பதினாயிரத்தையும் பலவகை ரத்னங்களையும் காசிராஜன் காணிக்கையாகக் கொடுத்தான். விதேக தேசத்தரசனாகிய கிருதக்ஷணனும் கோசல தேசத்தரசனாகிய பிருகத்பலனும் பதினாலாயிரம் சிறந்த குதிரைகளைக் கொடுத்தனர். வஸாதிகளென்னும் தேசத்தாரோடு கூடிய சைப்பிய ராஜனும் மாலவர்களோடு கூடிய திரிகர்த்த ராஜனும் பாண்டவர்களுக்கு ரத்னங்களைக் கொடுத்தனர். ஒவ்வொரு அரசனும் கொடுத்த ரத்னங்களுக்கும் அளவில்லை. அரசரே! பாருகச்ச தேசத்தரசன் உயர்ந்த ஹாரங்களையும், மற்றும் பல ஆபரணங்களையும், நூல் வஸ்திரங்களை உடுக்கின்றவரும் இளமைப்பருவத்திலிருப்பவரும் மெல்லிய தேகமும் நீண்ட கூந்தலுமுள்ளவரும் பொன்னணிகலங்களை அணிந்தவருமாகிய நூறாயிரம் வேலைக்காரிகளையும், பிராமணோத்தமர்கள் தரிக்கத்தக்க சிறந்த சுத்தமான சால்வைகளையும், எல்லாக் காணிக்கைகளையும் கொணர்ந்து கொடுத்தான். அவர்களனைவரும் தர்மராஜாவைக் காண்பதற்காக அரண்மனை வாயிலில் நின்றனர். காணிக்கைகளை யளிக்கும்போதுமட்டுந்தான் அவர்களுக்கு வழி கிடைத்தது. மழை பெய்வதனாலும் நதிகள் பாய்வதனாலும் கிருஷியில் சிரமப்படாமலே தான்யங்களை விருத்தி செய்பவரும் சமுத்திரக் கரையில் பிறந்தவரும் ஸிந்து நதிக் கரையில் வசிப்பவருமான த்ருமர், பாரதர், காசியர், கிராதகர் என்னும் அரசர்கள் பலவகை ரத்னங்களையும் வெள்ளாடுகள், செம்மறியாடுகள், பசுக்கள், கோவேறு கழுதைகள், ஒட்டகங்கள் இவைகளையும் பொன்னையும் பழத்திலுண்டான மதுவையும் பலவகைச் சால்வைகளையும் காணிக்கைகளாக எடுத்துக் கொண்டு வந்து அரண்மனை வாயிலில் தடுக்கப்பட்டு நின்றனர். மகா பலசாலியும் சூரனும் மிலேச்சர்களுக்கு அதிபதியும் பிராக்ஜ்யோதிஷ தேசத்தரசனுமான பகதத்த ராஜன், யவனர் சேனையுடன் காற்றுக்கொப்பான வேகமுள்ள உயர்ந்த ஜாதிக் குதிரைகளையும் மற்ற எல்லா வகையான காணிக்கைகளையும் கொண்டு விரைவாக வந்து வாயிலில் தடுக்கப்பட்டு

நின்றான். பிராக்ஜ்யோதிஷாதிபதியான அவன் குதிரைகளுக்குப் போடத்தக்க சிறந்த ஆபரணங்களையும் தந்தப்பிடி போட்ட சிறந்த கத்திகளையும் கொடுத்துச் சென்றான். பல தேசங்களிலிருந்து வந்த [1] த்வியக்ஷர், [2] த்ரியக்ஷர், [3] லலாடாக்ஷர், [4] ஔஷ்ணீஷர், [5] அஹயர், [6] பாஹுகர், [7] புருஷாதகர், [8] ஏகபாதர் என்னும் ஜாதியார் அங்கே பொன் வெள்ளி முதலிய தனங்களை யுதிஷ்டிரனுக்குக் காணிக்கையாகக் கொடுக்க வந்து வாயிலில் தடுக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். பட்டுப்பூச்சி நிறமுள்ளவையும் கிளி நிறமுள்ளவையும் வானவில் நிறமுள்ளவையும் செவ்வான நிறமுள்ளவையுமாகப் பல நிறங்களாயிருக்கும் மனோவேகமான அநேகம் காட்டுக் குதிரைகளையும் விலையில்லாத பொன்னையும் ஏகபாதர்கள் யுதிஷ்டிரனுக்கு அளித்தனர். அப்போது சிங்கள தேசத்தரசன் மிகுதியான தனத்தையும் சிவப்பும் பசுமையும் கறுப்புமான நூறு பாரம் சிறந்த சந்தனக்கட்டைகளையும் எடுத்துக்கொண்டு வந்து வாயிலில் தடுக்கப்பட்டு நின்றான். மகாராஜாவே! நக்னவிஷயர்களென்றும் பர்ப்பரேயர்களென்றும் பெயர்பெற்ற அரசர்கள் நூறாயிரம் வேலைக்காரிகளையும் ஆயிரம் சால்வைகளையும் எடுத்துக்கொண்டு வாயிலில் தடுக்கப்பட்டு நின்றனர். ஓ! மகா பலசாலியே! நினைத்தபடி செய்கிறவர்களாகிய பௌண்ட்ரர், தாமலிப்தர் என்னும் அரசர்கள் சந்தனத்தையும், வெள்ளியையும், அகிற்கட்டையாலும் பளிங்கினாலும் தந்தங்களினாலும் செய்யப்பட்ட சாமான்களையும், ஜாதிக்காய்களையும், தக்கோலம் லவங்கம் கர்ப்பூர முதலான பலவகைப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு வந்தனர். மகாத்மாக்களான அவர்களனைவரும் வாயிலில் தடுக்கப்பட்டு நின்றனர். மகாராஜாவே! சைலேயனென்னும் அரசன் வெண்பட்டுக்களை எடுத்துக்கொண்டு வாயிலில் நின்றபோது காவற்காரரால் தடுக்கப்பட்டான். சீனரும் ஹூணரும் கஷரும் காசரும் மலைகளுக்குள்ளிருப்பவருமாகிய இவர்கள் எல்லாத் தேசங்களிலும் பெயர்பெற்றவையும் பழகினவையுமான பதினாயிரம் குதிரைகளையும், உஷ்ணத்தைக் காக்கும் கம்பளத்தையும் விசாலமும் நல்ல நிறமும் மேன்மையுமுள்ளவையும் பாஹ்லீக தேசத்திலும் சீனதேசத்திலுமுண்டானவையும் பட்டுப்பூச்சிகளினாலும் [9] ரத்னங்களினாலும் உண்டான

---

1 இரண்டு கண்களையுடையவர். 2 மூன்று கண்களையுடையவர். 3 நெற்றியில் கண்ணையுடையவர். 4 தலைப்பாகைக்காரர். 5 குதிரையில்லாதவர். 6 கை நீண்டவர்கள்; நீந்துகிறவர்களென்பர் சிலர். 7 மனிதனைத் தின்பவர். 8 ஒற்றைக்காலர். 9 கற்சாயங்களினாலும்.

வையுமான பட்டுக்களையும் சுவையுள்ள கனி முதலியவற்றையும், நல்ல மணமுள்ளவற்றையும் கொணர்ந்து தெரிவித்த பிறகு வழி விடப்பட்டனர். கர்வடர், தோமரர், சூரர், வர்த்தனகரென்பவர்கள் பலவிதமான வஸ்திரங்களை யெடுத்துக்கொண்டுவந்து வாயிலில் தடுக்கப்பட்டு நின்றனர். மகாராஜாவே! பிராக்கோடர், நாடகேயர், நந்திநகரகர், நாபிதர், திரைபுரர், பஞ்சமேயர், ஊருஜர் முதலான காட்டரசர்களனைவரும் மிகுதியான தனங்களையும் சாமான்களையும் எடுத்துக்கொண்டு வந்து வாயிலில் தடுக்கப்பட்டு நின்றனர். கௌரவ ராஜாவே! சகர், துஷாரர், ரோமகர், சிருங்கிகள், அச்மகர், ஊருகமர் ஆகிய இவர்கள் என்றால் பத்துக்கோடிகளாக எண்ணப்பட்டவையும் தாமரைத் தாது நிறமுள்ளவையுமான பொற்குவியல்களையும் கூர்மையும் நீளமுமான கத்திகளையும் தடிகள், சக்திகள், கோடாலிகள் முதலிய மற்றைய ஆயுதங்களையும் பருத்திநூலாற் செய்யப்படாத மெல்லிய வஸ்திரங்களையும் பதப்படுத்தின ஆட்டுத்தோல்களையும் கொழுத்த சேனைகளையும் கொண்டுவந்து வாயிலில் தடுக்கப்பட்டு நின்றனர். கிழக்குத் தேசத்துக்கு அதிபதியான அரசன் பொன்னினாலும் ரத்னங்களினாலும் விசித்ரமானவையும் யானைத் தந்தங்களினாற் செய்யப்பட்டவையும் மிக்க விலைபெற்றவையுமான ஆசனங்களையும் வாகனங்களையும் சயனங்களையும் பொன்னினால் அலங்கரிக்கப்பட்டவையும் பழகின குதிரைகள் பூட்டப்பட்டவையும் புலித்தோல் போர்க்கப்பட்டவையும் மேலே அலங்காரங்கள் செய்யப்பட்டவையும் விசித்திரமான பல உருவமுள்ளவையுமான ரதங்களையும் அநேகவிதமான விற்களையும் நாராசங்களையும் அர்த்த சந்திர பாணங்களையும் பல அஸ்திரங்களையும் இவ்வகையான இன்னும் அநேகம் பொருள்களையும் எடுத்துக்கொண்டு மகாத்மாவான பாண்டவனுடைய யாகசாலையில் பிரவேசித்தான். பட்டுப்பூச்சியினாலுண்டான பட்டுக்கள் பதினாயிரத்தையும் வெண்கலப் பாத்திரங்களையும் விலைபெற்ற ரத்ன கம்பளங்களையும் பலவகை ரத்னங்களையும் சந்தோஷத்துடன் தர்மராஜாவுக்கு அளித்தான். அரசரே! கடற்கரையிலுள்ள மனிதர்கள் இன்னும் அநேக ரத்னங்களைக் கொணடுவந்து பாண்டவனுக்குக் கொடுத்தனர். ராஜரே! மாலவர்கள் பலவகை ரத்னங்களைக் கொடுத்தனர். அரசர்க்கரசே! மகா பலசாலியான ஸௌராஷ்டிர தேசத்தரசன் கோடி மரக்கால் அளவுள்ள கோதுமை முதலான பலவகைத் தானியங்களையும் பலவகை ரத்னங்களையும் எடுத்துக்கொண்டுவந்து பாண்டவனுக்கு அன்புடன் கொடுத்து மகா யாகத்தில் பிரவேசித்தான். மகாராஜாவே! அந்த

ஸௌராஷ்டிர ராஜன் இரண்டு மரக்கால் பிடிக்கும் நல்லெண்ணெய்க் குடங்கள் பதினாயிரமும் ஆயிரம் வண்டி உயர்ந்த வெல்லங்களுமாகிய இவை எல்லாவற்றையும் கொண்டுவந்து குந்திபுத்திரனுக்குக் கொடுத்தான். வேந்தரே! பல தேசங்களிலிருந்தும் வந்த மற்ற அரசர்களும் பலவகை ரத்னங்களைக் கொண்டு வந்து தர்மராஜாவுக்குக் கொடுத்தனர். தேசங்களும் வனங்களும் மலைகளுமடங்கிய இந்த ஜம்புத்வீபு முழுமையிலும் தர்மராஜனுக்குக் கப்பங்கொடாத அரசன் ஒருவனுமில்லை. அந்த யாகத்திற்கு வராத மனிதன் ஏழு வருஷங்களிலுமில்லை. பலவகைக் கூட்டங்களும் நிறைந்த அந்த யாகசாலையானது இந்திரசபை போல விளங்கிற்று. அரசரே! அரசர்கள் யாகத்துக்கு வெகுமதிகளாகக் கொடுத்த பலவகைப் பெருந்தனக்குவியல்களைப்பற்றி நான் சொல்லப்போவதைக் கேளும். மேருமலைக்கும் மந்தரமலைக்குமிடையில் சைலோதை யென்னும் நதிக்கரையில் மூங்கில்களின் இனிய நிழலை அடுத்து வசிப்பவர்களும் தனி ஆசனம் முதலிய மரியாதைகளுக்குத் தக்கவர்களுமான கஷர், பிரதரர், தீர்க்கவேணுக்கள், பாரதர், குலிந்தர், தங்கணர், பரதங்கணர் ஆகிய மனிதர்கள், எறும்புகளினால் வளைகளிலிருந்து வெளியிற் கொண்டுவரப்பட்ட பிபீலிதமென்னும் பெயருள்ள சிறந்த தங்கத்தை மரக்காலால் அளக்கும்படி குவியல்களாகக் கொணர்ந்து கொடுத்தனர். கறுத்த வாலும் வெளுத்த வாலுமுள்ள அநேகம கவரிமான்களையும், இமயமலையின் மலர்களிலிருந்துண்டான மிகுதியான இனிய தேனையும், வடகுருதேசத்திலிருந்தும் கைலாசத்துக்கு வடக்கிலிருந்தும் வந்த மிகச் சிறந்த சக்தியுள்ள மூலிகைகளையும, மகாத்மாக்களான வ்யூடமால்யர்க ளென்னும் அரசர்களும் மலைநாட்டரசர்களும் அஜாதசத்ருவுக்குக் கொண்டு வந்து வணங்கி நின்றனர். அரசரே! அவர்கள் வாயிலில் தடுக்கபட்டு நின்றனர். மனிதர்க்கதிபதியே! இமயமலைக்குப் பின்புறத்திலும் சூரியன் உதயமாகிற மலைச்சாரலிலும் கடற்கரையிலும் லௌஹித்யமென்னும் ஆற்றின் அருகிலும் வசிப்பவர்களும் கனிகளையும் கிழங்குகளையும் புசிப்பவர்களும் தோலாடையுடுப்பவர்களுமாகிய இன்னும் அநேக கிராதர்கள உயர்ந்த சந்தனங்களையும் அகில்களையும் சிறந்த சால்வைகளையும் தோல்களையும் ரத்னங்களையும பொன்களையம் பலவகை வாசனைத் திரவியங்களையும் கிராத ஜாதிப் பெண்களாகிய தாஸிகள் பதினாயிரவரையும் கண்ணுக்கினிய அநேகம் பொருள்களையும் நெடுந்தூரம் செல்லத்தக்க மிருகங்களையும் பறவைகளையும் மலைகளிலிருந்து சேர்க்கப்பட்ட மிகுந்த ஒளியுள்ள தங்கத்தையும் கப்பமாகக்

கொண்டுவந்து வாயிலில் தடுக்கப்பட்டு நின்றனர். அரசரே! காபவ்யர், தாதர், தர்வர், சூரர், யமகர், ஔதும்பரர், துர்விபாகர் ஆகிய இவர்கள் வாயிலில் தடுக்கப்பட்டு நின்றனர். காச்மீரர், குமாரர், கௌரகர், ஹம்ஸகர், சிபிகள், திரிகர்த்தர், யௌதேயர், மத்ரகர், வசுதேயர், மௌலேயர், தாஹர், க்ஷுத்ரகர், மாலவர், சௌண்டிகர், ஔதகர், ஸால்வர், அங்கர், வங்கர், யவனர், கயர் என்னும் உயர்குலத்தோரும் சிறந்தவரும் குற்றமற்றவருமாகிய அரசர்கள் நூற்றுக்கணக்காக வரிசையாக ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு அஜாதசத்ருவுக்குத் தனத்தைக் கொண்டுவந்து கொடுத்தனர். பாரதரே! வங்கர், களிங்கர், மகதர், தாம்ரலிப்தர், புண்ட்ரகர் என்னு மரசர்கள், தங்கள் தேசங்களிலிருந்து வந்து [1] கௌசிகம், [2] பத்ரோர்ணம் என்னும் பட்டுக்களைத் தர்மராஜாவுக்குக் கொடுத்தனர். நுகத்தடிகள போன்ற தந்தங்களையுடையவையும் பொற் கச்சைகள் கட்டப்பட்டவையும தாமரை மலரின் நிறமுள்ளவையும் மேலே சித்ர கம்பளங்கள் விரிக்கப்பட்டவையும் மலைகள் போன்றவையும் எக்காலமும் மதஜலம் பெருகுகின்றவையும் காம்யக மெனனும் தடாகத்தின் அருகிலிருப்பவையும் அடக்கமுள்ளவையும் நல்ல ஜாதியிற் பிறந்தவையும் அலங்காரங்களுள்ளவையுமான ஆயிரம் யானைகளை ஒவ்வொருவனும் கப்பமாகக் கொண்டுவந்து நிற்கும்போது, 'வாயில் விட்ட பிறகு போகலாம' என்று வாயிற்காவற்காரர்களால் சொல்லப்பட்டதனால் அவர்கள் சந்தோஷமடையவில்லை. விதேகர், புண்ட்ரர், கௌலேயர், தாம்ரலிபதகர், மருகர, காசிகர், தர்த்தர், பௌமேயர், நடநாடகர், கர்நாடர், காமஸ்யகுட்டர், பத்மஜாலர், ஸதீநரா, தக்ஷிணதேசத்தார், புளிந்தர், சபரர், தங்கணர், கஷர், பர்ப்பரர், யவனர், கர்க்கரர், ஆபீரகர், பல்லவர், சகர், காரூசர், தும்பகர், காசிகர் முதலான பல அரசர்களும பல திசைகளிலிருந்தும் வந்தனர். மற்றுமுள்ள அநேக மகாத்மாக்களினால் அங்கே ரத்னங்கள் கொண்டுவரபபட்டன. கடலில் உண்டான உயர்ந்த வைடூரியக் கற்களையும முத்துக்களையும் வலம்புரிச் சங்கங்களையும் சிறந்த சிப்பிகளையும் சிங்களர் கொடுத்தனர். இந்திரனுடைய வேலைக்காரனாகிய சித்ரரதனென்னும் கந்தர்வ ராஜன் ரத்னச்சேணம் போடப்பட்டவையும் கடைக்கண்கள் சிவந்தவையும் வாயுவேகமுள்ளவையுமான நானூறு கறுப்புக் குதிரைகளைக் கொடுத்தான். தும்புருவென்னும் கந்தர்வன் சந்தோஷமடைந்து மாவிலை நிறமுள்ளவையும் பொன்மாலைக ளணிந்தவையுமான நூறு குதிரைகளை அளித்தான். கௌரவ ராஜரே! சமர்த்தனுலை

1 நாரினாலுண்டானது. 2 பூச்சியினாலுண்டானது.

சூகர தேசத்தரசன் அநேகம் நூறு சிறந்த யானைகளைக் கொடுத்தான். மத்ஸ்ய தேசத்தரசனாகிய விராடனால் பொன்மாலைகளை அணிந்த இரண்டாயிரம் மதயானைகள் கப்பங்களாகக் கொடுக்கப்பட்டன. வேந்தரே! பாம்ஸுராஷ்டிர மென்னும் தேசத்திலிருந்து வசுதான னென்னும் அரசன பொன்மாலைகளை யணிந்தவையும் வேகமும் பலமு முள்ளவையும் இளமைப்பருவத்திலிருப்பவையுமான இரண்டாயிரம் குதிரைகளையும் இருபத்தாறு யானைகளையும் நிரம்பின காணிக்கையாகக் கொண்டுவந்து பாண்டவர்களுக்குக் கொடுத்தான். அரசரே! துருபதனால் பதினாலாயிரம் தாசிகளும் மனைவிகளோடுகூடிய பதினாயிரம் தாசர்களும் யானைகள் பூட்டின இருபத்தாறு தேர்களும தனது முழு ராஜ்யமும் யாகத்திற்காகப் பாண்டவர்களுக்கு அளிக்கப்பட்டனர். விருஷ்ணிகுலத்தோனாகிய கிருஷ்ணனும அர்ஜுனனைக் கௌரவிப்பதற்காகப் பதினாலாயிரம சிறந்த யானைகளைக் கொடுத்தான். கிருஷ்ணன அர்ஜுனனுடைய ஆத்மா; அர்ஜுனன கிருஷ்ணனுடைய ஆத்மா; அர்ஜுனன எதைச் சொன்னாலும் அதையெல்லாம கிருஷ்ணன செய்வானென்பது திண்ணம. தனஞ்சயனுக்காகக் கிருஷ்ணன சுவர்க்கலோகத்தையும விட்டுவிடுவான். அவ்வாறே, கிருஷ்ணனுக்காகத் தனஞ்சயன உயிரையும விடுவான். சோழராஜனும பாண்டியராஜனும மலயம் தர்த்துரமென்னும மலைகளிலிருந்து பொற் குடங்களில வைக்கப்பட்ட மணமுள்ள சந்தனக்குழம்புகளையும சந்தனக்கட்டைகள அகிற்கட்டைகளின குவியல்களையும ஒளியுள்ள முத்துக்களையும ரத்னங்களையும பொன்மயமான மெல்லிய வஸ்திரங்களையும கொண்டுவந்து வாயிலில் வழிகிடைக்காமலிருந்தனர். சிங்களர்கள சமுத்திரத்திலுண்டான உயர்ந்த வைடூர்யக் கற்களையும முத்துக்குவியல்களையும நூற்றுக்கணக்கான விரிப்புக்களையும அங்கே கொண்டுவந்தனர். ரத்னமயமான உடைகள போர்த்தவரும கறுத்த நிறமுள்ளவரும் கட்கடைகள் சிவந்தவருமான சிங்களர்கள அந்தக் காணிக்கைகளை எடுத்துக்கொண்டு வந்து வாயிலில் தடுக்கப்பட்டு நின்றனர். பிராமமணர்களும ஜயிக்கப்பட்ட க்ஷத்திரியர்களும வைசியர்களும பணிவிடைசெய்யக் கருதின சூத்திரர்களும தர்மராஜாவைச் சந்தோஷப்படுத்துவதற்காகக் காணிக்கைகளைக் கொண்டுவந்தனர். மிலேச்சர்களனைவரும முதல் இடை கடையாகிய எல்லா வருணத்தாரும யுதிஷ்டிரனிடம அன்போடும கௌரவத்தோடும வந்தனர். பல தேசங்களிலுண்டான பல ஜாதியார் வந்திருந்ததனால இவ்வுலகமே யுதிஷ்டிரனுடைய கிருகத்தில் சேர்க்கப்பட்டதுபோ லிருந்தது. அரசர்களால் எதிரி

களுக்குச் சேர்ப்பிக்கப்பட்ட அளவற்ற பலவகைக் காணிக்கை களைப் பார்த்தபோது துயரத்தினால் எனக்கு இறப்பதில் எண்ண முண்டாயிற்று. அரசரே! யுதிஷ்டிரன் எவர்களுக்குச் சமைத்த வற்றையும் சமைக்காதவற்றையும் பகுத்துக்கொடுத்தானோ அந்தப் பாண்டவர்களின் வேலைக்காரர்களைப்பற்றி உமக்குச் சொல்வேன். யானைப்பாகர்களும் குதிரைக்காரர்களுமாக மூன்று கோடியே பதினாயிரவர். ரதிகர்கள் பத்துக்கோடி. காலாட்களுக்குக் கணக்கில்லை. பச்சையாக அளக்கப்படுவதும் பிறகு சமைக்கப் படுவதும் உடனே கொடுக்கப்படுவதுமாயிருந்தது. மற்ற ஓரிடத் தில் சுத்திசெய்வதற்காகப் புண்ணியாகவாசனத்தின் கோஷமே யிருந்தது. யுதிஷ்டிரனுடைய கிருகத்தில் எல்லா வருணங்களி லும் உண்ணாதவனையும் குடிக்காதவனையும் அலங்காரஞ்செய்து கொள்ளாதவனையும் வெகுமதிக்கப்படாதவனையும் நான் பார்க்க வில்லை. யுதிஷ்டிரனால் காப்பாற்றப்பட்ட ஸ்நாதகர்களும் கிருகஸ் தர்களும் எண்பத்தெண்ணாயிரவர். ஒவ்வொருவருக்கும் முப்பது முப்பது வேலைக்காரிகள். அவர்கள் மிக்க அன்போடும் திருப்தி யோடும் யுதிஷ்டிரனுடைய பகைவர்கள் அழியவேண்டுமென்று பிரார்த்திக்கின்றனர். யுதிஷ்டிரனுடைய கிருகத்தில் பொற்பாத் திரங்களில் புசிக்கும் ஊர்த்துவரேதஸ்களான யதிகள் பதினாயிர வர். அரசரே! திரௌபதி, தான் புசியாமல் கூனர்கள் குள்ளர் கள் முதலான எல்லா ஜனங்களும் உண்டதையும் உண்ணாத தையும் கவனித்தாள். பாரதரே! பாஞ்சாலர்கள் சம்பந்திகளா யிருப்பதனாலும் அந்தகர்களும் விருஷ்ணிகளும் சிநேகிதர்களா யிருப்பதனாலும் அவ்விருதிறத்தார்மட்டும் தர்மராஜாவுக்குக் [1] கப்பமாகக் கொடுக்கவில்லை.

---

## எழுபத்தொன்பதாவது அத்தியாயம்

### த்யூத பர்வம் (தொடர்ச்சி)

### (துரியோதனன் சொல்லியதன் தொடர்ச்சி)

பூஜிக்கத்தக்கவர்களும் சத்தியம் தவறாதவர்களும் சிறந்த தவமும் நிரம்பின வித்தையுமுள்ளவர்களும் நன்றாகப் பேசுகிறவர் களும் வேதங்களின் முடிவுகண்டு அவபிருதஸ்நானம் செய்தவர் களும் தைரியமும் அக்காரியங்களில் வெட்கமுள்ளவர்களும் தர்மத் தில் மனமுள்ளவர்களும் புகழ்பெற்றவர்களும் ராஜ்யபட்டாபி ஷேகம் செய்யப்பெற்றவர்களுமான அரசர்களும் யுதிஷ்டிர னிடம் காத்திருக்கின்றனர். வெண்கலத்தினால் செய்யப்பட்ட

---

1 அவர்கள் பிரீதியினால் கொடுத்தனர்.

கறக்கும் பாத்திரங்களுடன் அரசர்களினால் தட்சிணைக்காகக் கொண்டுவரப்பட்ட அநேகமாயிரம் காட்டுப் பசுக்கள் ஆங்காங்கு காணப்பட்டன. பாரதரே! அந்த யாகத்தில் அரசர்கள் தர்மராஜனை மரியாதை செய்வதற்காக ஊக்கத்துடன் அபிஷேகத்திற்குரிய பலவகைப் பொருள்களையும் தாமாகவே கொண்டுவந்து கொடுத்தனர். பாஹ்லீக தேசத்தரசன் பொன்னினால் அலங்காரஞ் செய்யப்பட்ட ரதத்தைக் கொண்டுவந்தான். சுதக்ஷிணனென்னு மரசன் காம்போஜ தேசத்திலுள்ள வெள்ளைக் குதிரைகளை அதிற் பூட்டினான். சேதி தேசத்தரசனும் மகா பலசாலியுமான சிசுபாலன் அன்புடன் தேரச்சையும் உயரமான கொடிமரத்தையும் தானாகவே கொணர்ந்து கொடுத்தான். தென் தேசத்தரசன் கவசத்தையும், மகத தேசத்தரசன் மாலையையும் கிரீடத்தையும், சிறந்த வில்லாளியான வஸுதானனென்பவன் அறுபது வயதுள்ள சிறந்த யானையையும் மத்ஸ்ய தேசத்தரசன் பொன்பாச்சிகைகளையும், ஏகலவ்யன் பாதுகையையும், அவந்தி தேசத்தரசன் அபிஷேகத்திற்குரிய அநேக தீர்த்தங்களையும், சேகிதானன் தூணியையும், காசிராஜன் வில்லையும், சல்லியன் பொன்னினால் அலங்கரிக்கப்பட்டதும உறையில் வைக்கப்பட்டதுமான அழகான பிடியுள்ள கத்தியையும் கொடுத்தனர். பிறகு, தௌமியரும் மிகச் சிறந்த தவமுள்ள வியாஸரும் நாரதரையும் தேவலரையும் அஸிதரையும் முன்னிட்டுக்கொண்டு அபிஷேகஞ் செய்தனர். அந்த அபிஷேகத்திற்கு மகரிஷிகள் அன்புடன் வந்திருந்தனர். வேதங்களிற் கரைகண்டவர்களான பரசுராமர் முதலிய மற்றுமுள்ள மகாத்மாக்களும், மிகுதியாகத் தக்ஷிணைகளைக் கொடுக்கும் தர்மராஜாவினிடம், சப்தரிஷிகள் தேவலோகத்தில் தேவேந்திரனிடம் வருவதுபோல, மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு வந்தனர். தவறாத பராக்கிரமமுள்ள ஸாத்யகி தர்மராஜாவுக்குக் குடை பிடித்தான். பாண்டவர்களாகிய தனஞ்சயனும் பீமசேனனும் இரண்டு விசிறிகளை எடுத்துக்கொண்டனர். நகுல சகதேவர்களிருவரும் இரண்டு வெண் சாமரங்களை எடுத்துக்கொண்டனர். முன் யுகத்தில் பிரம்மதேவர் இந்திரனுக்காக எடுத்துக்கொண்டதான அந்த வருணனுடைய சங்கத்தைத் திருப்பாற்கடல் தர்மராஜாவுக்குக் கொணர்ந்து கொடுத்தது. ஆயிரம் பொன்களால் விசுவகர்மாவினால் நன்றாகச் செய்யப்பட்டதும் உறியில் வைக்கப்பட்டதுமான அந்தச் சங்கத்தினால் கிருஷ்ணன் அபிஷேகஞ் செய்தான. அதனால் எனக்குத் துயரம் உண்டாயிற்று. பட்சிகள் கீழ்க்கடலிலிருந்து மேல் கடலுக்கும் தென் கடலுக்கும் சென்றன. வட கடலுக்குமட்டும் செல்லவில்லை. அந்தக் காலத்தில் மங்களகர

மான சங்குகளை நூறு நூறுக்கணக்காக ஊதினர். அவை ஊதப்பட்டுச் சப்திக்கும்போது எனக்கு மயிர் சிலிர்த்தது. பராக்கிரமம் குறைந்தவர்களான அரசர்கள் விழுந்தனர். தைரியமும் பராக்கிரமமுமுள்ளவர்களும் ஒருவர்மேல் ஒருவர் அன்புள்ளவர்களுமான திருஷ்டத்யும்னனும் பாண்டவர்களும் ஸாத்யகியும் கிருஷ்ணனுமாகிய எண்மரும், மயக்கமுற்ற அரசர்களையும் என்னையும் கண்டு நகைத்தனர். வேந்தரே! பிறகு, அர்ஜுனன் சந்தோஷத்துடன் பொன் கட்டின கொம்புகளோடு கூடிய ஐந்நூறு விருஷபங்களைப் பிராமண சிரேஷ்டர்களுக்குத் தானஞ்செய்தான். குந்தி புத்திரனும் ராஜாவுமான யுதிஷ்டிரன், மிகச் சிறந்த பெருமையை அடைந்திருந்ததுபோல ரந்திதேவன், நாபாகன், மாந்தாதா, மனு, வேனன் புத்திரனாகிய பிருது சக்ரவர்த்தி, பகீரதன், யயாதி, நகுஷன் இவர்கள் யாருமிருந்ததில்லை. இவ்வாறு ஹரிச்சந்திரன்போல ராஜஸூய யாகத்தைச் செய்து யுதிஷ்டிரன் பிரபுவானான். பிரபுவே! பாரதரே! அரிச்சந்திரனிடத்திலிருந்ததுபோல யுதிஷ்டிரனிடமிருக்கும் ராஜ்யலக்ஷ்மியைக் கண்ட பிறகு, என் உயிர் வாழ்க்கையைச் சிலாக்கியமாக எப்படி நினைக்கிறீர்? அரசரே! இந்தக் காலமே குருடனால் படைக்கப்பட்டதுபோலத் தாறுமாறாயிருக்கிறது. தாழ்ந்தவர் விருத்தியாகின்றனர்; உயர்ந்தவர் குறைகின்றனர் கௌரவரே! இவ்வாறு பார்த்தபிறகு, என்னை ஆராய்ந்து பார்த்தும நான் சுகம்பெறவில்லை. அதனால், இவ்வகையான இளைப்பையும் நிறமாறுதலையும துயரத்தையும அடைந்திருக்கிறேன்' என்றான்.

---

## எண்பதாவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

---

### (திருதராஷ்டிரன் பாண்டவர்களைப் பகையாமலிருக்கும்படி துரியோதனனுக்கு நியாயம் சொல்லியது)

திருதராஷ்டிரன், 'புத்திரனே! நீ முதல் புத்திரன்; எனது முதல் பாரியையின் புத்திரன; பாண்டவர்களைப் பகையாதே; பகைப்பவன் மரணத்துக்கு சமானமான துயரத்தைத் தேடிக்கொள்ளுகிறான். பரத சிரேஷ்டனே! பிறருடைய கபடத்தை அறியாதவனும் நம்மைப்போலவே ஐசுவரியமுள்ளவனும் நம்முடைய மித்திரர்களையே தனக்கும் மித்திரர்களாக உடையவனும நம்மைப் பகையாதவனுமாயிருக்கிற யுதிஷ்டிரனை உன்னைப்போன்றவன் பகைப்பது எவ்வகை? அரசனே!

புத்திரனே! குலத்திலும் பராக்கிரமத்திலும் அவனுக்குச் சரியா யிருக்கிற நீ அறியாமையால் உன் பிராதாவினுடைய ஐசுவரியத் திற்கு ஏன் ஆசைப்படுகிறாய்? இப்படி இராதே; அடங்கு; விசனப்படாதே; பரத சிரேஷ்டனே! அந்த யாகச் சிறப்பை நீ விரும்புகிறாயாயின் அம்மகாயாகத்தை உனக்கும் ரித்விக்குகள் செய்விக்கட்டும். அரசர்கள் உனக்கும் மிகுதியான திரவியத்தை யும் ரத்னங்களையும் ஆபரணங்களையும் அன்போடும் கௌரவத் தோடும் காணிக்கையாகக் கொடுப்பார். குழந்தாய்! அயலா னுடைய பொருளில் ஆசைப்படுவது கெட்டவர்களின் நடை. தனக்குள்ளதில் திருப்தியை யடைந்து தன் தர்மத்தை விடாம லிருப்பவனெவனோ அவன்தான் எளிதில் விருத்தியாவான். வேண்டினவற்றைக் கறக்கும் பூமி வீரனுக்குப் பத்னியென்று சொல்லப்படுகிறது. அதுபோலவே ராஜ்யலக்ஷ்மியும் வீர னுடைய பாரியை தான். இவ்விரண்டும் பார்யைகளைப் போன் றவையே. உனக்கும் சக்தியிருக்குமாயின் இந்தப் புவனியை ஆள்வாய். அயலான் பொருளைக் கவர்வதுமட்டும் சிறிதும் தகாது. வேண்டினவர்கள் விஷயத்தில் அக்கிரமத்தைக் கருது கிறவனுக்கு இம்மை மறுமை இரண்டிலும் துயரந்தான். அந் நியருடைய திரவியங்களை யடையப் பிரவிர்த்தியாமலிருப்பதும் தன் கார்யங்களில் விடாமுயற்சியும் ஈட்டின பொருள்களைக் காப்பதுமாகிய இவைதாம் பிரபுத்துவத்தின அடையாளங்கள். ஆபத்துக்களில் துயரப்படாதவனும செய்வனவற்றைத் திருந் தச் செய்பவனும் எனறும் முயற்சியுளளவனும் தவறுதலில்லா தவனும மனத்தை யடக்கினவனுமான மனிதன் எககாலமும் க்ஷேமங்களையே பார்ப்பான். தன் கைகளையே வெட்டுவதுபோல இந்தப் பாண்டு புத்திரர்களை நீ வெட்டலாகாது. அந்தப் பாண்டவர்களும் உன் விஷயத்தில் அப்படியே. உன் பிராதாக்க ளின் அந்தத் தனத்தைப் பெறுவதற்காக மித்திரத் துரோகஞ் செய்யாதே. ராஜாவே! பாண்டுவின் புத்திரர்களைப் பகையாதே. அப்படியே உன பிராதாக்களான அவர்களுடைய நிரம்பின ஐசுவரியத்தையும வெறுக்காதே. குழந்தாய்! மித்திரத் துரோ கஞ் செய்வதில் பெருமபாவம இருக்கிறது. உனக்கு எவர்கள் கூடஸ்தர்களோ அவர்கள் தாம் அவர்களுக்கும் கூடஸ்தர்கள். பரத சிரேஷ்டனே! நீயும் அந்தர்வேதிகை யென்னும் யாகசாலை யில் திரவியங்களைத் தானஞ்செய்து மனத்திற்கினிய போகங்களை அனுபவித்து மங்கையருடன் விளையாடிக் கவலையின்றிச் சாந்தனா யிரு' என்றான்.

## எண்பத்தோராவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

---

(திருதராஷ்டிரனிடம் துரியோதனன் தன் கருத்தை வற்புறுத்திக் கூறியது)

அங்ஙனம் கூறியதைக் கேட்ட துரியோதனன் சொல்லுகிறான் :—'எவனுக்குக் கேள்விமட்டும் மிகுதியாயிருந்து இயற்கை அறிவில்லாமலிருக்கிறதோ அவன், பட்சணங்களின் சுவையை அகப்பை அறியாமலிருப்பதுபோலச் சாஸ்திரங்களின் கருத்தை அறிவதில்லை. அல்லது, தெரிந்தே என்னைப் பிரமிக்கச் செய்கிறீரோ? நீர் ஓடத்திற் கட்டின ஓடம்போலிருக்கிறீர். உமக்கு சுபகார்யத்தில் ஊக்கமில்லையா? அல்லது, என்னை நீர் பகைக்கிறீரா? உம்மைக் கட்டளையிடுபவராக அடைந்த இந்த உமது புத்திரர்கள் நிலைபெறுர்கள். தனக்குத் தானே நேரிடக்கூடிய விஷயத்தையே நாம் செய்யத்தக்க காரியமாக நீர் எப்போதும் சொல்லுகிறீர். பிறர் புத்தி கேட்பவனைத் தலைவனுகப் பெற்றவன் வழி தெரியாமல் மயங்குவான். அவன்பின் செல்பவர்கள் சரியான வழியில் செல்வதெவ்வகை? அரசரே! முதிர்ந்த அறிவுள்ளவரும பெரியோரை அடுத்தவரும் ஐம்புலன்களையும கட்டினவருமான நீர் தம் காரியங்களைச் செய்யத் தொடங்கின எங்களை மிகவும் பிரமிக்கச்செய்கிறீர். உலகநடையைக் காட்டிலும் அரசன் நடை வேறென்று பிருகஸ்பதி சொல்லியிருக்கிறுர். அதனுல், வேந்தன் ஊக்கத்துடன் எப்போதும் தன் லாபத்தையே சிந்தித்தல்வேண்டும். மகாராஜாவே! க்ஷத்ரியனுடைய தொழில் ஜயத்திலேதான் இருக்கிறது. அது தர்மமாயிருந்தாலும் சரி; அதர்மமாயிருந்தாலும் சரி; தன் தொழிலைப்பற்றிப் பரீட்சை ஏது? பரதசிரேஷ்டரே! எதிரிகளினுடைய சிறப்புற்ற ராஜ்ய லக்ஷ்மியைப் பெற விரும்புகிற அரசன், சாரதி சாட்டையினுல் குதிரைகளை ஓட்டுவதுபோல எதிரிகளை எல்லாத் திசைகளிலும் ஓட்டவேண்டும். கபடமாகவோ வெளிப்படையாகவோ உள்ள எந்த உபாயமானது எதிரியைத் துன்பப்படுத்துமோ அதுதான் அஸ்திரமறிந்தவரின் அஸ்திரம். வெட்டுங் கருவியே அஸ்திரமென்று சொல்லப்படவில்லை. சத்துருவென்பதும் மித்திரனென்பதும் எழுதிவைத்திருப்பனவுமல்ல; பட்டயமுமல்ல. அரசனே! எவன், எவனுக்குத் துன்பத்தை உண்டு பண்ணுகிறுனே அவன் அவனுக்குச் சத்துருவென்று சொல்லப்

படுகிறான். திருப்தியடையாமலிருப்பதுதான் ஐசுவரியத்துக்குக் காரணம்; அதனால் அதை நான் விரும்புகிறேன். வேந்தரே! விருத்தியாவதற்கு முயற்சி செய்வதுதான் நீதியின் துணிபு. ராஜ்யத்திலும் செல்வத்திலும் எனதென்கிற எண்ணத்தை யாரும் செய்யத்தகாது. முன் கிடைத்ததைப் பிறர் பிறகு எடுத்துக்கொள்ளுவார்கள். அஃது அரசர்களின் தர்மமெனறே அறிகின்றனர். இந்திரன் துரோகம் பண்ணுவதில்லை யென்று வாக்குத்தத்தஞ்செய்து நமுசி யென்னும் அசுரனுடைய தலையை வெட்டினான். சத்துருவினிடத்தில் அவ்வகையான ஒழுக்கம் எப்போதும் உள்ளதென்று இந்திரனாலேயே நினைக்கப்பட்டது. பகையில்லாத அரசன் ஊரைவிட்டுச் செல்லாத பிராமணன் இவ்விருவரையும், எலிகளைப் பாம்பு தின்பதுபோல, பூமி தின்று விடுகிறது. அரசரே! ஒரு மனிதனுக்குப் பிறப்பினாலேயே பகைவன் இல்லை. எவனுக்கு எவனோடு தொழிலொன்று யிருக்கிறதோ அவனுக்கு அவன் பகைவன்; மற்ற ஜனங்கள் பகைவராகார். எவன் சத்துருவின்பக்ஷம் அபிவிருத்தியாவதை அறிவின்மையினால் கவனியாமல் விடுகிறானோ அவனுக்கு அந்தச் சத்துருபக்ஷம், சிகிச்சை செய்யாமல் விடப்பட்ட ரோகம் போல வேரை அறுத்துவிடுகிறது. பராக்கிரமத்தினால் மிக்க மேன்மையை அடையும் சிறிய சத்ருவுங்கூட, வேரில் உண்டான புற்று மரத்தைத் தின்பதுபோல அருகிலிருந்தே அரித்து விடுவான். அஜமீட வம்சத்தவரே! பாரதரே! எதிரியின் சிறப்பானது உமக்குப் பிரியமாயிருக்கலாகாது. இந்த நீதி யானது புத்திமான்கள் தலையில் வைத்திருக்கும் பாரமாயிருக் கிறது. தன் தேகத்தின் வளர்ச்சியைப் போலத் திரவியங்கள் விருத்தியாவதை எவன் விரும்புகிறானோ அவன்தான் தன் இனத்தாரில் சிறப்பை அடைகிறான். உடனே மேன்மையைத் தருவது பராக்கிரமந்தான். பாண்டவர்களின் ஐசுவரியத்தைக் காணாமலிருந்தால் எனக்குப் பிராண சந்தேகம் உண்டாகாது. ஆதலால், அந்த ஐசுவரியத்தைப் பெறக்கடவேன்; அல்லது யுத்தத்தில் அடிபட்டுப் படக்கடவேன். அரசரே! பாண்டவா கள் நாளுக்குநாள் மேலாகின்றனர். நம்முடைய மேன்மையோ நிலையற்றதாயிருக்கிறது. இந்த நிலைமையிலிருக்கின்ற எனக்கு உயிரினால் ஆவதென்ன?" என்றான்.

---

## எண்பத்திரண்டாவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

(சகுனியும் துரியோதனனும் சூதாட்டத்தைப்பற்றி வற்புறுத்திச் சொன்னதன்மேல் திருதராஷ்டிரன் பாண்டவர்களை அழைத்துவரும்படி விதுரரை அனுப்பியது)

சகுனி, துரியோதனனைப் பார்த்து, 'ஜயிப்பவரிற் சிறந்தவனே! பாண்டு புத்திரனான யுதிஷ்டிரனிடத்திலுள்ள எந்த ராஜ்ய லக்ஷ்மியைக் கண்டு நீ துயரப்படுகிறாயோ அந்த ராஜ்ய லக்ஷ்மியைச் சூதாட்டத்தினால் நான் வாங்கிவிடுவேன். அரசனே! குந்தி புத்திரனான யுதிஷ்டிரனை நீ அழைக்கமாத்திரம் வேண்டும். நான் படைத்தலையில் யுத்தஞ்செய்யாமலும் பிராணசமுசயத்தை அடையாமலும் புண்படாமலும் பாச்சிகைகளை இறைத்து, தெரியாதவனான தர்மராஜனை ஜயிப்பதில் சமர்த்தன். பாரதனே! என்னுடைய பந்தயங்கள்தாம் விற்களென்றும், காய்கள்தாம் அம்புகளென்றும், சூதாட்டத்தினுடைய ரகசியப்தான் நாண் கயிறென்றும், காய்களைப் போடும வகைதான் தேரென்றும் அறி' என்று சொன்னான். பிறகு துரியோதனன, 'வேந்தரே! சூதாட்டந் தெரிந்த இந்தச் சகுனி சூதினாலேயே பாண்டவர்களிடமிருந்து ராஜ்யலக்ஷ்மியை வாஙகத் திறமையுள்ளவனாயிருக்கிறான். அதற்கு நீர அனுமதிக்கவேண்டும்' என்றான. திருதராஷ்டிரன், 'நான் எனது சகோதரனும் மகாத்மாவுமான விதுரனுடைய சொல்லில் நிற்பவன். அவனுடன் கலந்து இந்தக் காரியத்தின முடிவைத் தெரிந்துகொளவேன்' என்று சொன்னான். துரியோதனன், 'அரசரே! அந்த விதுரரும் வியாஸரைவிட அதிகமாகத் தெரிந்தவர்தாம்; ஆனால், வெறுந் தர்மத்தையே சொல்லுவர். அது ஜயத்துக்குச் சாதகமாகாது. பரதசிரேஷ்டரே! ஜயம் தர்மத்திற்கு மாறானது. ஆதலால், தந்திரமுளளவன்தான் ஜயிப்பான். (வியாஸரும் விதுரருமாகிய) அவர்களிருவரும் (ஜயத்துக்கு) விரோதிகள். நிச்சய புத்தியுள்ள விதுரர் உமது எண்ணத்தை மாற்றிவிடுவார். கௌரவரே! அவர் பாண்டவர்களின் விஷயத்தில் நன்மை செய்ய ஊக்கத்தோடிருப்பதுபோல என் விஷயத்திலில்லை. ஒரு மனிதன் பிறர் திறமையையேபற்றித் தன் காரியத்தை ஆரம்பிக்கலாகாது. கௌரவரே! காரியங்களில் இருவருடைய புத்தி ஒன்றாயிருப்பதுமில்லை. [1] பயத்தை ஒதுக்கிக்கொண்டும்

---

1 வேறு பாடம் கொண்டு, 'பயத்திற்கேதுவான காரியங்களை விலக்கித் தன்னைக் காக்கும் மதியீனன் மழைக்காலத்தில் ஈரப்பாய்போல இருந்தபடியே மடிந்துபோகிறான்' என்பது பழைய உரை.

தன்னைத்தானே காப்பாற்றிக்கொண்டும் மழைக்காலத்தில் நனைந்த ஆலமரம்போலிருப்பவன் கெடான். வியாதிகளும் மரணமும் (ஒருவன்) நன்மையை அடையும்வரையில் காத்திருப்பதில்லை. தான் சக்தனாயிருப்பதற்குள்ளாகவே நன்மைக்காகும் காரியங்களைச் செய்யவேண்டும்' என்று சொன்னான். திருதராஷ்டிரன், 'புத்திரனே! எப்படியானாலும் பலவான்களோடு விரோதம் எனக்கு இஷ்டமாயில்லை. பகையானது மாறுதலை உண்டாக்குகிறது. அதுதான் இரும்பினாற் செய்யப்படாத ஆயுதம். ராஜபுத்திரனே! சண்டையைத் தொடுப்பதும் கரைகடந்து போவதுமாகிய சூதாட்டமென்னும் அனர்த்தத்தைச் சாதகமென்று நினைக்கிறாய். அந்தச் சூதாட்டம் ஆரம்பிக்கப்படுமாயின் எவ்வகையிலாவது கூர்மையான கத்திகளையும் அம்புகளையும் உண்டாக்கிவிடும்' என்று சொன்னான். அதற்குத் துரியோதனன், 'முன்னோர்களாலும் சூதாட்டத்தின் பழக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அதில் அபாயமும் யுத்தமும் இருந்திருக்கவில்லை. ஆதலால், இப்போது சகுனி சொல்லும் வார்த்தையை நீர் எடுத்துக்கொள்ளவேண்டும் சீக்கிரத்தில் இங்கு ஒரு சபை செய்யக் கட்டளையிடும். சூதாட்டமானது, ஆடுகிற நமக்கு சுவர்க்கத்திற்குச் சிறந்த மார்க்கம். சுவர்க்கத்திலிருப்பவர்களுக்குங்கூட அந்த ஆட்டமே சிறந்தது; ஆதலால், அதற்கு ஒப்பு அதுதான். அந்தச் சூதாட்டத்தைப் பாண்டவர்களுடன்கூட நீர் செய்விக்கக்கடவீர்' என்று சொன்னான். திருதராஷ்டிரன், 'ராஜனே! நீ சொன்ன சொல் எனக்குப் பிரியமாயில்லை. உனக்கு எது விருப்பமோ அதைச் செய்யலாம். இந்தச் சொல்லை நினைத்துப் பிறகு வருத்தப்படுவாய். இப்படிப்பட்ட சொல் பின்னும் சுகத்தைத் தராதன்றோ? புத்தியும் கல்வியுமுள்ளவனும் நன்றாகப் பார்த்தும் ஆராய்ந்துமிருப்பவனுமாகிய விதுரனாலேயே இவையெல்லாம் அறியப்பட்டன. க்ஷத்திரியர்களுடைய உயிர்களை மாய்க்கும் அந்தப் பெரும் பயம் நம்மால் தடுக்க முடியாமல் வருகிறது' என்று சொன்னான். புத்திசாலியான திருதராஷ்டிர மகாராஜன் இவ்வாறு சொல்லி, விதி பெரிதென்றும் கடக்க முடியாதென்றும் நினைத்து விதியினால் மனம் மயங்கித் தன் மகன் சொல்லில் அகப்பட்டவனாகி, வேலைக்காரர்களைப் பார்த்து, 'நீங்களெல்லோரும் ஆயிரம் தூண்களுள்ளதும் பொன்னினாலும் வைடூரியக் கற்களினாலும் விசித்திரமானதும், நூறு வாயில்களுடையதும், ஸ்படிகத் தோரணங்களுள்ளதும் ஒரு குரோசம் நீளமும் அவ்வளவு அகலமுள்ளதுமான ஒரு சிறந்த சபையை ஜாக்கிரதையோடு விரைவிற் செய்யுங்கள்'

என்று உரக்கக் கட்டளையிட்டான். புத்திசாலிகளும் வேலையில் தேர்ந்தவர்களும் ஜாக்கிரதையுள்ளவர்களுமான ஆயிரக்கணக்கான சிற்ப வேலைக்காரர்கள், திருதராஷ்டிரன் சொல்லைக் கேட்டவுடன், சிந்திக்காமலும் விரைவாகவும் சபையைச் செய்தனர். அச்சபையில் எல்லாப் பொருள்களையும் கொண்டுவந்து சேர்த்தனர். ராஜாவுக்கு நம்பிக்கையான வேலைக்காரர்கள், அநேக ரத்னங்களிழைத்துப் பலநிறமுள்ளதும் புதிய பொன் ஆசனங்களுள்ளதுமான அந்தச் சபை விரைவில் முற்றுப்பெற்றதைப் பற்றி அரசனிடம் தெரிவித்தனர். பிறகு, தெரிந்தவனான திருதராஷ்டிர மகாராஜன், மந்திரிகளிற் சிறந்தவரான விதுரரைப் பார்த்து, 'ராஜகுமாரனான யுதிஷ்டிரனிடம் சென்று, 'இந்த என் சபை அநேக ரத்தினங்களினால் அழகாகவும் மிக்க விலைபெற்ற படுக்கைகளும் ஆசனங்களும நிரம்பினதாகவும் இருக்கிறது. நீ சகோதரர்களுடனகூட வந்து இதைப் பார்க்கவேண்டும். இதில் சிநேகிதர்களுக்குள் ஒரு சூதாட்டம நடக்கவேண்டும்' என்று நான் சொன்னதாகச் சொல்லி அவனைச் சீக்கிரம் இங்கே அழைத்து வா' என்று சொன்னான். ஜனமேஜய மகாராஜாவே! திருதராஷ்டிர மகாராஜன் தன் புத்திரனுடைய எண்ணத்தை அறிந்து விதியை வெல்லமுடியாதென்று நினைத்து இவ்வாறு செய்தான். அறிஞரிற் சிறந்த விதுரர், அவ்வாறு அநீதியாகக் கட்டளையிடப்பட்டபோது, தமது பிராதாவினுடைய அந்தச் சொல்லை அங்கீகரியாமல், 'அரசரே! உம்முடைய இந்தக் கட்டளையை நான் ஒப்பவில்லை. குலத்திற்குக் கெடுதிவருமென்று பயப்படுகிறேன். இவ்வாறு செய்யாதீர். உமது புத்திரர்களுக்குள் வேறுபாடும் சண்டையும் நிச்சயமாக உண்டாகும். வேந்தரே! இதற்காகவே சூதாட்டத்தைப்பற்றிப் பயப்படுகிறேன்' என்று சொன்னார். திருதராஷ்டிரன், 'விதுரா! விதியானது பிரதிகூலமாகாமலிருக்குமாயின் இந்தக் கலகத்தைப் பற்றி எனக்குத் துயரமில்லை. இந்த உலகமனைத்தும் பிரமமாவினால் விதியின் வசத்தில் வைக்கப்பட்டுத்தான் நடந்துகொண்டிருக்கிறது. எதுவும் சுதந்திரமாக இல்லை. விதுரா! ஆதலால், இப்போதே தர்மராஜாவினிடம சென்று, யாராலும் வெல்லமுடியாதவனும் குந்தி புத்திரனுமான அவனை என் கட்டளைப்படி விரைவில் அழைத்து வா' என்று சொன்னான்.

## எண்பத்துமூன்ருவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

### (விதுரரால் அழைக்கப்பட்ட பாண்டவர்கள் அஸ்தினபுரம் சென்று ஸபாப் பிரவேசம் செய்தது)

திருதராஷ்டிர மகாராஜாவினுல் வலிந்து கட்டளேயிடப் பட்ட விதுரர், உடனே மிக்க வேகமும் பலமுமுள்ளவையும் நன்ருகப் பழக்கப்பட்டவையுமான உயர்ந்த குதிரைகளினுல் புத்திசாலியான பாண்டவர்களிடம் போகப் புறப்பட்டார். மகாபுத்திசாலியான விதுரர் அந்த வழியைத் தாண்டிப் பிராம்மணர்களால் பூஜிக்கப்பெற்று தர்மராஜாவின் நகரத்தில் பிரவேசித்தார். தர்மாத்மாவான விதுரர் குபேரன் கிருகத்துக்கொப்பான தர்மராஜருடைய கிருகத்தை யடைந்து தர்மபுத்திரரான யுதிஷ்டிரரிடம் சென்ருர். தைரியத்தை விடாதவரும் மகாத்மாவும் அஜாதசத்ருவுமான தர்மபுத்திரர், அந்த விதுரரைத் தக்கபடி மரியாதையோடு அழைத்துத் திருதராஷ்டிரனேயும் அவன் பிள்ளேகளேயும்பற்றி விசாரித்து, 'விதுரரே! உமக்கு மன மகிழ்ச்சியில்லாமை காணப்படுகிறது. க்ஷேம காரியத்தோடு வந்திருக்கிறீரா? பிள்ளேகள் கிழவருக்கு அனுகூலர்களாயிருக்கிருர்களா? பிரஜைகள் அடங்கி யிருக்கின்றனரா?' என்று வினவினர். (விதுரர்) 'ராஜனே! மகாத்மாவான திருதராஷ்டிர மகாராஜர் தம் புத்திரர்களாலும் குலத்தோராலும் சூழப்பெற்று இந்திரன்போலச் சுகமாக இருக்கிருர். அந்த மகாத்மாவானவர் தம் புத்திரர்களுடைய குணங்களால் மாற்றப்பட்டவராய் விசனத்தைவிட்டுத் தம்மிலேயே சுகமடைந்து சந்தோஷமுற்றிருக்கிருர். கௌரவ ராஜரான திருதராஷ்டிரர் முதலில் உன்னுடைய க்ஷேமத்தையும் குறைவின்மையையும் விசாரித்து, பிறகு, 'புத்திரனே! உன் சகோதரர்களின் இந்தச் சபை உன் சபைக்குச் சமமான அழகுள்ளதாயிருக்கிறது. நீ வந்து பார்க்க வேண்டும். குந்தி புத்திரனே! சகோதரர்களுடன்கூட நீ இந்தச் சபைக்கு வந்து சிநேகிதர்களுக்குள் சொக்கட்டானுட்டத்தை ஆடி மகிழவேண்டும். நீங்கள் எல்லாரும் சேருவதில் நமக்கு விருப்பமிருக்கிறது. கௌரவர்களனேவரும் முன்னமே வந்துசேர்ந்திருக்கின்றனர்' என்று (உனக்குச் சொல்லும்படி) சொன்னுர். ராஜனே! மகாத்மாவான திருதராஷ்டிர மகாராஜாவினுல் ஏற்படுத்தப்பட்டு அந்தச் சபையில் உட்கார்ந்திருக்கும் மோசக்காரர்களான சூதாட்டக்காரர்களே நீ பார்க்கக்கடவாய்

என்பதைச் சொல்வதற்காக நான் வந்தேன். இதை நீ செய்வாயாக' என்று சொன்னார். யுதிஷ்டிரர், 'விதுரரே! சூதாட்டத்தில் நமக்குக் கலகம் நிச்சயம். தெரிந்தவன் எவன் சூதை விரும்புவன்? நீர் தாம் எது சரியென்று நினைக்கிறீர்? நாங்களனைவரும் உமது சொற்படி நடப்பவர்கள' என்று சொன்னார். விதுரர், 'வித்வானே! சூதானது தீங்குக்கு வேரென்று எனக்குத் தெரியும். அதைத் தடுப்பதற்கு நான் முயற்சி செய்தேன். ஆகிலும், அரசர் என்னை உன்னிடத்திற்கு அனுப்பினார். இதைக் கேட்ட பிறகு உனக்கு எது நன்மையோ அதைச் செய்துகொள்' என்று சொன்னார். யுதிஷ்டிரர், 'விதுரரே! திருதராஷ்டிர மகாராஜருடைய புத்திரர்களைத் தவிர வேறு ஆடத்தக்கசூதர்கள அங்கே யாரிருக்கிறார்கள்? எவர்களுடன் சேர்ந்து நான் பலமுறை ஆடவேண்டியிருக்கும? அவர்களை எமக்குச் சொல்லும்; உமமைக் கேட்கிறேன்' என்று கேட்டார். விதுரர், 'ராஜனே! காந்தார தேசத்தரசனாகிய சகுனி எல்லாரையுமமிஞ்சி ஆடுகிறவன்; கைதேர்ந்தவன்; காய்கள் அவனுக்கு வசப்பட்டவை. விவிமசதி, சித்ரஸேனன், ஸத்யவ்ரதன், புருமித்ரன், ஜயன் என்னு மரசர்களும் ஆடுகிறவர்களே' என்று சொன்னார். யுதிஷ்டிரர், 'மிக்க பயஙகரர்களும் மோசமே உபாயமாகவுடையவர்களுமான சூதர்கள் அந்தச் சபையில் ஆடுவதற்கு உட்கார்ந்திருக்கின்றனர். பிரமமதேவரால் இவ்வுலகமனைத்தும் விதியின் வசத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. ஒன்றும் சுதந்திரமாயில்லை. எல்லாந்தெரிந்தவரே! திருதராஷ்டிர மகாராஜர் கட்டளையிட்டபிறகு நான் சூதாட்டத்திற்குப்போக விரும்பாமலிருக்கவில்லை. புத்திரனுக்குப பிதாவின்மேல் பற்று எபபோதும் உள்ளதுதானே. விதுரரே! நீர் எனக்கு என்ன சொல்லுகிறீரோ அதைச்செய்பவனாக இருக்கிறேன். ஜயிக்குந் திறமையுள்ள சகுனி அந்தச் சபையில் என்னை அழையாமலிருப்பானாயின் விருப்பமில்லாத நான் அவனுடன் ஆடப்போவதில்லை. அழைத்த பிறகு ஒருபோதும் திருமபேன். இது நான் நெடுநாளாக வைத்துக் கொண்ட விரதம்' என்று சொன்னார். தர்மராஜர் இவ்வாறு விதுரருக்குச் சொல்லி, உடனே பிரயாணத்திற்கு வேண்டியவற்றிற்கெல்லாம் கட்டளையிட்டு, சபை சேருவதற்கு முதல் நாள் தன் இனத்தாரோடும வேலைக்காரர்களோடும் ஸ்திரீகளோடுங்கூடத் திரௌபதியை முதன்மையாக வைத்துக்கொண்டு புறப்பட்டார். 'சடுதியில் வந்து விழும் மின்னலானது கண்ணைப் பறிப்பதுபோல விதியானது மதியைப் பறித்துவிடுகிறது. மனிதன் வலைகளினால் கட்டப்பட்டவன்போல் விதிக்கு வசப்படுகிறான்'

என்று சொல்லிவிட்டு, வீரரான தர்மராஜர் திருதராஷ்டிரன் அவ்வகையாக அழைத்ததைப் பொறுமல் விதுரருடன் கூடப் புறப்பட்டார். பகைவர்களான வீரர்களைக் கொல்லுகிறவரான தர்மராஜர் பாஹ்லீக தேசத்துக் குதிரைகள் பூட்டின ரதத்திலேறி ராஜ்ய லக்ஷ்மியால் பிரகாசித்துக்கொண்டு சகோதரர்களோடும் விருதுகளோடும் பிராம்மணர்களை முன்னிட்டுக்கொண்டு புறப்பட்டார். பிறகு, தம்மிடம் வந்த வேலைக்காரர்களை நகரத்தைக் காப்பதற்கு நியமித்தார். ராஜசிரேஷ்டரான ஜனமேஜயரே! உடனே, அவர்கள் ராஜாவின் கட்டளையைச் செய்தனர். சிறந்த சக்தியுள்ள தர்மராஜாவானவர் தேரையும் விருதுகளையும் நிறுத்திக்கொண்டு பிராமமணர்களால் ஸ்வஸ்தி வாசனம்செய்வித்த பிறகு அரண்மனையிலிருந்து வெளிபபட்டார். பிராம்மணர்களுக்கும் மற்றவர்களுக்கும் யாத்திரா தானமாக விதிப்படி ரத்னங்களை யளித்துச் செல்லத் தொடங்கினர். ஜனமேஜய ராஜாவே! ஹாரம கிரீடம் முதலிய எல்லா ஆபரணங்களையும் அணிந்துகொண்டு பொன்னிறமாக விளங்குகின்ற யுதிஷ்டிரர், எல்லா லக்ஷணங்களும் பொருந்தியதும் ராஜஹம்சம் போன்ற வெண்மையான வஸ்திரம் போர்க்கபபட்டதும அறுபது வயதுள்ளதுமாகிய சிறந்த [1] யானையின்மேலேறிக்கொண்டு, பொன்மயமான வேதிகையில் நெய் ஆகுதி செய்யப்பட்டு ஜ்வலிக்கும் அக்கினிபோல ராஜலக்ஷ்மியினல் பிரகாசித்தார். அப்போது தர்மராஜாவானவர் உற்சாகமுள்ள மனிதர்களோடும் வாகனங்களோடும ரதஙகளின் பெருங்கோஷத்தினல் ஆகாயத்தை நிரபபிக்கொண்டும, ஸூதர்களாலும மாகதர்களாலும் துதிக்கப்பெறறவராய்க் கிரணஙகளுடன் கூடிய சூரியன் செல்வதுபோலப பெருஞ்சேனையுடன்கூடச் சென்றார். வெண்குடை தலைமேற் பிடிக்கபபட்டதனல் பௌர்ணமாசிச் சந்திரன்போல விளங்கினர். பரத சிரேஷ்டரான தர்மராஜர் பொன்காம்புள்ள வெண்சாமரங்கள் நாற்புறமும் வீசபபெற்றவராய் வழியில் மனிதர்கள் உண்மையோடு மகிழ்ந்து சொல்லும், 'ஜய! ஜய' என்ற ஆசீர்வாதங்களை முறைப்படி பெற்றுக்கொண்டார். ஜனமேஜய ராஜாவே! பலசாலியான பீமசேனன் ரதத்திலேறித் தர்மராஜாவுக்கு முன்சென்றான். பரத சிரேஷ்டரான ஜனமேஜய ராஜாவே! அழகுள்ளவர்களாகிய நகுல சகதேவர்களிருவரும் மெத்தை போடப்பட்டும் அலங்காரங்கள் செய்யப்பட்டுமிருந்த

---

1 நகரத்துக்குள் யானைமேலேறிச் சென்று பிறகு ரதமேறி வழியிற் சென்றாரென்று கொள்ளவேண்டும்.

இரண்டு தேர்களின்மேல் ஏறிப் பெருஞ்சேனையை மகிழ்வித்துக் கொண்டு ராஜாவுக்கு இருபக்கங்களிலும் சென்றனர். வீரனும் ஆயுதம் பிடித்தவரிற் சிறந்தவனும் வெண்மையான குதிரைகளுள்ளவனுமாகிய அர்ஜுனன் அக்னிபகவான் கொடுத்த ரதத்திலேறிக் காண்டீபத்தை எடுத்துக்கொண்டு பின்சென்றான். ஜனமேஜய ராஜாவே! குந்திபுத்திரரான யுதிஷ்டிரர் சேனையின் நடுவிற் சென்றார். ஜனமேஜய ராஜாவே! அழகான அங்கங்களையுடைய திரௌபதி முதலிய அரசிகள் வேலைக்காரிகளோடும் விருதுகளோடுங்கூடப் பலவிதமான வாகனங்களிலேறிப் பெருஞ்சேனையுடன் ராஜாவுக்கு முன் சென்றனர். ஜனமேஜய ராஜாவே! வழியிற் செல்லுகின்ற பாண்டவர்களின் சேனை, மனிதர்களும் யானைகளும் குதிரைகளும் நிரம்பினதும் கொடிகளோடு கூடிய உயர்ந்த தேர்களுள்ளதும் சிறந்த கத்திகளைத் தரித்ததும் சங்கங்கள், துந்துபிகள், தாளங்கள், புல்லாங்குழல்கள், வீணைகள் இவைகளின் முழக்கங்களினால் பெருஞ்சப்தமுள்ளதுமாக விளங்கிற்று. ஆதிகாலத்தில் லங்கையில் வசித்துக்கொண்டிருந்த குபேரன் பெரிய சேனையுடன் மிகச் சிறப்பாகத் தேவராஜாவான இந்திரனிடம் சென்றதுபோலக் குபேரனுக்கு ஒப்பான தர்மராஜாவும் எண்ணமுடியாத பெருமையையுடையதான நிரம்பின சேனையுடன் சென்றார். ஜனமேஜய மகாராஜாவே! அந்தத் தர்மராஜர் தடாகங்களையும் நதிகளையும் காடுகளையும் சோலைகளையும் தாண்டி நகரத்தை அடைந்தார். கௌரவ ராஜாவான அந்த யுதிஷ்டிரர் அஸ்தினாபுரத்திற்குச் சமீபத்தில் சேனைகளுடன் விடுதியைச் செய்துகொண்டார். க்ஷேமமாயும் மேடுபள்ளமில்லாமலுமிருக்குமிடத்தில் தர்மபுத்திரர் வாசஞ்செய்தார். ஜனமேஜய ராஜாவே! பிறகு விதுரர், விசனத்தினால் தழுதழுத்த குரலோடு தர்மராஜாவை அழைத்து, திருதராஷ்டிரன் செய்யக் கருதின விஷயமெல்லாவற்றையும் நடந்தபடி அவருக்குச் சொன்னார். அவர் சொன்னதைக் கேட்டு தர்மராஜாவானவர், 'விதுரரே! என்னை அழைத்தது எனக்குப் பொறுக்கவில்லை. எனக்கு விரதமன்றோ இருக்கிறது. உலகத்திலுள்ள பிராம்மணர்களுக்கும் பிரஜைகளுக்கும் எப்போதும் க்ஷேமமுண்டாகக்கடவது' என்று சொன்னார். அதன் பிறகு, திருதராஷ்டிரனாலும் காலத்தினுடைய வன்மையினாலும் அழைக்கப்பட்ட தர்மராஜாவானவர் அஸ்தினாபுரத்தில் பிரவேசித்தார். தர்மராஜாவானவர் அஸ்தினாபுரம் சேர்ந்தபிறகு திருதராஷ்டிரனுடைய கிருகத்திற்குப் போனார். பிரபுவும் தர்மாத்மாவுமான யுதிஷ்டிரர்

திருதராஷ்டிரனையும் பீஷ்மரையும் துரோணரையும் கர்ணனையும் கிருபரையும் அசுவத்தாமாவையும் தகுதிப்படி சந்தித்தார். சிறந்த கைகளையுடைய வீரரான தர்மராஜர், பிறகு, ஸோமதத்தனையும் தமது பிராதாவான துரியோதனனையும் சகுனியையும் முன்னமே அங்கு வந்திருந்த அரசர்களையும் வீரனான துச்சாஸனன் முதலிய சகோதரர்களனைவரையும் ஜயத்ரதனையும் மற்ற கௌரவர்களனைவரையும் சந்தித்தார். சிறந்த கைகளையுடைய தர்மராஜர், சகோதரர்களனைவராலும் சூழப்பெற்று, சிறந்த புத்திசாலியான திருதராஷ்டிர மகாராஜனுடைய அந்தப்புரத்திற் பிரவேசித்தார். நட்சத்திரங்களாற் சூழப்பெற்ற ரோகிணியைப் போல மருமக்களால் எப்போதும் சூழப்பட்ட பதிவிரதையான காந்தாரியை அங்கே கண்டார். அவர் காந்தாரியை நமஸ்கரித்து அவளால் ஆசீர்வதிக்கப்பெற்று, வயதுசென்றவனும் அறிவே கண்ணாகவுடையவனும் ராஜாவும் தந்தையுமான திருதராஷ்டிரனைக் கண்டார். ஜனமேஜய ராஜாவே! தர்மபுத்திரரும் பீமசேனன் முதலான மற்ற நாலு பாண்டவர்களும் திருதராஷ்டிர மகாராஜாவினால் உச்சியில் மோக்கப்பெற்றனர். அரசரே! காண்பதற்கினிய புருஷ சிரேஷ்டர்களான அந்தப் பாண்டவர்களைக் கண்டதனால் குருவம்சத்தவர்களுக்குச் சந்தோஷமுண்டாயிற்று. அந்தப் பாண்டவர்கள் திருதராஷ்டிர மகாராஜனுடைய அனுமதி பெற்று ரத்னங்கள் நிரம்பின கிருகங்களில் பிரவேசித்தனர். அங்கு வந்தவர்கள் திரௌபதி முதலான ஸ்திரீகளையும் கண்டனர். ஜ்வலிப்பதுபோலப் பிரகாசிக்கின்ற திரௌபதியின் பெருஞ் செல்வத்தைக் கண்டு திருதராஷ்டிரன் மருமக்கள் மனத்தில் அதிகச் சந்தோஷமுள்ளவர்களாய் இருக்கவில்லை. பிறகு, புருஷ சிரேஷ்டர்களான பாண்டவர்கள் ஸ்திரீகளுடன் தனித்தனியே பேசிச் சென்று தேகப் பயிற்சி முதலான காரியங்களையும் அலங்காரங்களையும் செய்த பிறகு சந்தியாவந்தனம் முதலிய கடமைகளைச் செய்து உயர்ந்த சாந்துகளை அணிந்துகொண்டும் சுபத்தைச் சிந்தித்துக்கொண்டும் பிராமணர்களால் ஸ்வஸ்திவாசனம் செய்வித்து மனத்திற்கினிமையான உணவுகளை யுண்டு தம் தம் படுக்கையறைகளிற் பிரவேசித்து மங்கையர்களின் கானங்களைக் கேட்டுக்கொண்டு நித்திரை செய்தனர். பெண்கலவியில் கலந்த அந்தப் பாண்டவர்களுக்கு அவ்விரவு சுகமாகச் சென்றது. சிரம பரிகாரஞ் செய்துகொண்ட பிறகு வந்திகளால் துதிக்கப்பெற்று விடியற்காலத்தில் நித்திரையைவிட்டெழுந்தனர். அவர்களனைவரும் இரவு முழுதும் சுகமாயிருந்து காலையில் கடமைகளை முடித்

துக்கொண்டு சூதாட்டக்காரர்களால் அழைக்கப்பெற்றவர்களாகி அழகான சபையிற் பிரவேசித்தனர்.

---

## எண்பத்துநான்காவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

### (தர்மபுத்திரருக்கும் சகுனிக்கும் ஸம்வாதம்)

யுதிஷ்டிரர் முதலான பாண்டவர்கள் அந்தச் சபையில் பிரவேசித்து, அரசர்களனைவரையும் சந்தித்து, பூஜிக்கத்தக்கவர்களைப் பிராயத்துக்குத் தக்கபடி சேர்ந்து பூஜித்து, விசித்திரமானவையும் உயர்ந்த மெத்தைகளுள்ளவையுமான ஆசனங்களில் தகுதிப்படி உட்கார்ந்தனர். அந்தச் சபையில் பாண்டவர்களும் மற்ற எல்லா அரசர்களும் உட்கார்ந்த பிறகு, சுபல புத்திரனை சகுனி, யுதிஷ்டிரரை நோக்கி, 'ராஜனே! யுதிஷ்டிரனே! சபையில் ஆட்டத்துணி விரிக்கப்பட்டிருக்கிறது. எல்லாரும் உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். காய்களை உருட்டி விளையாடுவதற்குச் சமயம் கொடுக்கவேண்டும்' என்று சொன்னான். அதற்கு யுதிஷ்டிரர், 'ராஜனே! சூதாடுவதானது மோசமும் பாவமுமானது. அதில் க்ஷத்திரியனுக்குரிய பராக்கிரமமில்லை; நிச்சயமான நீதியும் ஒழுங்குமில்லை. நீ ஏன சூதைப் புகழ்கிறாய்? சூதனுடைய மோசத்தில் கௌரவத்தை யாரும் புகழ்வதில்லை. சகுனியே! கொடியவன்போல இவ்வகையான தப்பு வழியால் எம்மை ஜயிக்காதே' என்று சொன்னார். சகுனி, 'ஆடுகிற முறை தெரிந்து காய்களிலுண்டாகும் மாறுதல்களில் சோர்வில்லாமல் கணக்கையும் ஆட்டத்தையும் அறியும் மகா புத்திசாலிதான் ராஜ்ய காரியங்களிலும எதையும் தாங்குவான். குந்தி புத்திரனே! பாச்சிகைகளில் நமது பந்தயம பிறரைத் தோற்கச்செய்யும். அதனாலேதான் இதில் குற்றமுண்டாகிறது. ராஜனே! ஆடுவோம்; பயப்படாதே; பந்தயம் வை; கால தாமதம் செய்யாதே' என்றான்.

யுதிஷ்டிரர், 'இவ்வுலக மார்க்கங்களில் எப்போதும் திரிந்துகொண்டிருக்கும் அஸிதரும் தேவலருமாகிய முனிசிரேஷ்டர்கள், 'சூதர்களுடன் மோசமாகச் செய்யும் சூதாட்டமானது பாவம். யுத்தத்தில் தர்மமாக ஜயிப்பதுதான் சிலாக்கியமானது. சூதாடுவது சிலாக்கியமன்று. ஆரியர்கள் மிலேச்ச பாஷை பேசார்; மோசஞ்செய்யார். பாவமும வஞ்சகமுமில்லாதது யுத்தம். அதுதான் ஸத்புருஷர்களுக்கு விரதம்' என்று சொல்லியிருக்கின்றனர். நாம் கூடியவரையில் பிராம்மணர்களை ரட்சிப்பதற்கும்

துஷ்டர்களைச் சிட்சிப்பதற்கும முயலுகிறோம். அதுதான் நமக்குத் தனம். சகுனியே! அக்கிரமமாகச் சூதாடிப் பிறரை ஜயிக்காதே! வஞ்சகத்தினால் சுகங்களையும் தனங்களையும் அடைய நான் விரும்புவதில்லை. சமர்த்தனான சூதாடுகிறவனுடைய நடை கௌரவிக்கப்படுவதில்லை' என்று சொன்னார். அதற்குச் சகுனி, 'யுதிஷ்டிரா! வேதமோதினவன் [1] வேதமோதாதவரையும், கற்றுணர்ந்தவன கற்றுணராதவரையும் ஜயிக்கப்போவது மோசந்தான். ஜனங்கள் அதை மோசமென்று கூறுவதில்லை. யுதிஷ்டிரா! அவ்வாறே, சூதாட்டத்தில் கற்றுணர்ந்தவன் கற்றுணராதவரையும், அஸ்திரத் தேர்ச்சியுள்ளவன் அஸ்திரத் தேர்ச்சியில்லாதவனையும், மிகுந்த பலமுள்ளவன் பலங் குறைந்தவனையும் ஜயிக்கபபோவதும் மோசந்தான். இவ்வாறே எல்லாச் செய்கைகளிலும் தெரிந்தவன் தெரியாதவர்களை ஜயிக்கப்போவது மோசந்தான். ஜனங்கள் அதை மோசமென்பதில்லை. அபபடி நீ என்னிடம் வருவதை மோசமாக நினைப்பாயாயின், உனக்குப பயமிருக்குமாயின் ஆட்டத்தை விட்டுவிடு' என்று சொன்னான். யுதிஷ்டிரர், 'அரசனே! அழைக்கப்பட்ட பிறகு திரும்புவதில்லை. இது நான் வைத்துக் கொண்டிருக்கும் விரதம். விதி பெரிது. விதியின் வசத்தில் நான் இருக்கிறேன். இந்தச் சேர்க்கையில் நான் யாரோடு ஆடவேண்டியிருக்கும்? எனக்கு எதிர்ப்பந்தயம் வைப்பவன் யாரென்று தெரிந்தபிறகு ஆட்டம் நடக்கலாம' என்று சொன்னார். துரியோதனன், 'அரசனே! ரத்னங்களையும் தனங்களையும் நான் கொடுப்பேன். எனது மாமாவாகிய இந்தச் சகுனி எனக்காக ஆடுவான்' என்றான். யுதிஷ்டிரர், 'ஒருவருக்காக மற்றொருவன் ஆடுவது தவறாக எனக்குத்தோன்றுகிறது. தெரிந்தவனே! அதைத் தெரிந்து கொள். அப்படியும இஷ்டமிருந்தால் நடக்கட்டும்' என்றார்.

---

## எண்பத்தைந்தாவது அத்தியாயம்
## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

---

### (யுதிஷ்டிரருக்கும் சகுனிக்கும் நடந்த ஆட்டத்தில் யுதிஷ்டிரர் பொருள்களைத் தோற்றது)

சூதாட்டம் ஆரம்பிக்கப்படும்போது, அவ்வரசர்களனைவரும் திருதராஷ்டிரனை முன்னிட்டுக்கொண்டு அந்தச் சபைக்குப் போயினர். ஜனமேஜயரே! பீஷ்மர், துரோணர், கிருபர், சிறந்த புத்திமானான விதுரர் இவர்கள்மட்டும் மனத்தில் அதிகத்திருப்தி

---

1 இங்கு 'அச்ரோத்ரியாந' என்ற பாடம் கொள்ளப்பட்டது.

யில்லாமல் திருதராஷ்டிரனை அனுசரித்தனர். மகா பராக்கிரம சாலிகளும் சிங்கம்போன்ற கழுத்துள்ளவர்களுமாகிய அவர்கள் சிறந்த பல சிம்மாசனங்களில் சிலர் இருவர்களாகச் சேர்ந்தும் சிலர் தனித்தும் உட்கார்ந்தனர். ஜனமேஜய ராஜாவே! அந்த மகானுபாவர்களான அரசர்கள் சேர்ந்ததனால் அந்தச் சபையானது தேவர்கள் சேர்ந்த தெய்வலோகம்போல விளங்கிற்று. எல்லாரும் வேதங்கள் தெரிந்தவர்கள். எல்லாரும் சூரர்கள். எல்லாரும் ஒளியுள்ள உருவங்களையுடையவர்கள். ஜனமேஜய மகாராஜாவே! அவர்கள் வந்தவுடன், சிநேகிதர்களுக்குள் சூதாட்டமானது நடக்கத் தொடங்கிற்று. அப்போது யுதிஷ்டிரர், 'அரசனே! மிக்க விலைபெற்றதும் கடற்சுழியில் உண்டானதும் என்னுடைய ஹாரத்தில் முதன்மையானதும் சிறந்த பொற்கட்டினால் அலங்கரிக்கப்பட்டதும் சிறந்த ஒளியுள்ளதுமாகிய இந்த ரத்தினம் எனது பொருள். மகாராஜனே! என்னோடு எதிர் ஆட்டம் ஆடுவதற்குச் சரியான பந்தயம் உனக்கென்ன இருக்கிறது?' என்று கேட்க, துரியோதனன், 'ரத்தினங்களும் மிக்க அதிகமான தனங்களும் என்னிடத்திலும் இருக்கின்றன; திரவியங்களைப்பற்றி எனக்கு விரோதமில்லை; இந்த ஆட்டத்தை ஜயி' என்று சொன்னான். உடனே, பாச்சிகைகளின் உண்மையை யறிந்த சகுனி அந்தக் காய்களைக் கையிலெடுத்தான். 'ஜயித்தாய்விட்டது' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னான். யுதிஷ்டிரர், 'கொழுத்தவனே! சகுனியே! ஆ! ஆ! சூதாட்டத்தில் மோசமாகவே உன்னால் ஜயிக்கப்பட்டேன். இன்னும் இருவரும் பந்தயம் வைத்து ஆடுவோம். ஆயிர [1] நிஷ்கங்கள் நிரம்பின [2] குடங்களும் அழியாத பொன் பொக்கசமும் மிகுதியான சிறந்த தங்கமும் என்னிடமிருக்கின்றன. [3] இஃது என்னுடைய தனம். இதனை வைத்து நான் உன்னுடன் ஆடுகிறேன்' என்று சொன்னார். இவ்வாறு சொல்லப்பட்ட சகுனி, கௌரவர்களுடைய வம்சத்தை விருத்திசெய்பவரும் பாண்டவர்களில் மூத்தவரும் சத்தியம் தவறாதவருமான தர்மராஜரை நோக்கி, 'ஜயித்தாய்விட்டது' என்றே சொன்னான். யுதிஷ்டிரர், 'ஆயிரம் தேர்களுக்குச் சமமானதும் புலித்தோலினால் மூடப்பட்டதும், அசையாததும், அழகான சக்கரங்களும் மற்ற சாமான்களுமுள்ளதும், சதங்கைகளின் மாலைகளினால் அலங்கரிக்கப்பட்டதும், ஒளியுள்ளதும், மேகமுழக்கம்போலும்

1 நூற்றெட்டுப் பலம் கொண்ட பொன் நாணயம்.

2 'பெட்டிகள்' என்பது பழையவுரை.

3 தொகுதிபற்றி ஒருமையாகக் கூறுகிறார். இங்ஙனம் வருமிடந்தோறுங் கண்டுகொள்க.

கடலொலிபோலும் சப்தமுள்ளதும், நாம் ஏறி வந்ததும், ராஜ ரதமுமாகிய கொற்றத்தேர் இதோ இருக்கிறது. [1]குரரம் என்னும் பட்சிபோல (வெண்மை) நிறமுள்ளவையும் எல்லாத் தேசங்களிலும் பழக்கமுள்ளவையுமான சிறந்த எட்டுக் குதிரைகள் இந்த ரதத்தை இழுக்கின்றன. [2]பூமியில் சஞ்சரிக்கும் பிராணிகள் இவற்றின் காலடியிலிருந்து விடுபடமாட்டா. அரசனே! இஃது என் தனம். இதனால் நான் உன்னோடு ஆடுவேன்' என்று சொன்னார். இதைக் கேட்டவுடன் தன்னிடத்தில் நிச்சயமுள்ள சகுனி, வஞ்சகத்தை ஆசிரயித்து, 'ஜயித்தாய்விட்டது' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னான். பிறகு, யுதிஷ்டிரர், 'இளமைப்பருவத்தில் இருப்பவர்களும், பொன்னிறமுள்ளவர்களும், சங்கு வளைகளையும் தோள்வளைகளையும் கழுத்தில் [3]காசுமாலைகளையும் மற்றுமுள்ள மிக்க விலை பெற்ற ஆபரணங்களையும் பூமாலைகளையும அணிந்தவர்களும், உயர்ந்த ஆடைகளை உடுத்துச் சாந்தணிந்து ரத்னங்களையும் பொன்களையும் தரித்தவர்களும், அறுபத்துநான்கு கலைகளிலும் தேர்ந்தவர்களும், ஆட்டத்திலும் பாட்டிலும் சமர்த்தர்களுமான நூறுயிரம் வேலைக்காரிகள் என் கட்டளையின்படி ஸ்நாதகர்களுக்கும் மந்திரிகளுக்கும் அரசர்களுக்கும் பணிவிடை செய்து கொண்டிருக்கின்றனர். அரசனே! இஃது என் தனம். இதனால் நான் உன்னுடன் ஆடுகிறேன்' என்று சொன்னார். தன்னுள் நிச்சயமுள்ள சகுனி, அதைக் கேட்டு மோசத்தைக் கடைப்பிடித்து, 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னார். மறுபடியும், யுதிஷ்டிரர், 'சமர்த்தர்களும், அனுகூலர்களும், எப்போதும் உயர்ந்த போர்வைகளையும் ஆடைகளையும் தரித்தவர்களும், அறிவிலும் புத்தியிலும் சிறந்தவர்களும், ஜிதேந்திரியர்களும், இளமைப் பருவத்திலிருப்பவர்களும், ஒளியுள்ள குண்டலங்களைத் தரித்தவர்களும், இரவும் பகலும் பாத்திரங்களைக் கையிலெடுத்துக்கொண்டு அதிதிகளுக்குப் போஜனம் பரிமாறுகிறவர்களுமான தாஸர்கள் நூறுயிரவர் என்னிடத்திலிருக்கின்றனர். வேந்தனே! இஃது என் தனம்; இதனால் நான் உன்னுடன் ஆடுவேன்' என்று சொன்னார். தன்னுள் நிச்சயமுள்ள சகுனி, அதைக் கேட்டு மோசத்தைக் கடைப்பிடித்து, 'ஜயித்தாய்விட்டது' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னான்.

---

1 'குமுத' என்று பாடங்கொண்டு, 'குமுதம்போல வெண்மையான' என்பது பழைய வுரை.

2 எவ்வளவு வேகமுள்ளவற்றையும் இவை பிடித்துவிடும்.

3 மூலத்தில் 'நிஷ்கம்' என்றிருக்கிறது.

மறுபடியும், யுதிஷ்டிரர், 'சுபல புத்திரனே! பொற்கச்சை கட்டினவையும், மஸ்தகங்களுக்கு அலங்காரங்கள் செய்யப்பட்டவையும், [1] பத்மம் என்னும் சிவப்புப் புள்ளிகளுள்ளவையும், பொன் மாலைகள் பூண்டவையும், யுத்தங்களிலுள்ள எல்லாக் கோஷங்களையும் பொறுக்கும்படி நன்ருகப் பழக்கப்பட்டவையும், கலப்பைக் கால்கள்போன்ற தந்தங்களும் பெருந் தேகங்களுமுள்ளவையுமான ஆயிரம் மதயானைகள் என்னிட மிருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் எவ்வெட்டுப் பெண் யானைகள் இருக்கின்றன. நீருண்ட மேகங்கள் போன்ற அந்த யானைகளெல்லாம் நகரங்களையே அழித்துவிடும். ராஜனே! இஃது என் தனம். இதனால் நான் உன்னுடன் ஆடுவேன' என்று சொன்னர். இவ்வாறு சொன்ன யுதிஷ்டிரரைப் பார்த்து நகைத்துக்கொண்டே சுபலன் புத்திரனை சகுனி, 'ஜயித்தாகிவிட்டது' என்று சொன்னன். யுதிஷ்டிரர், 'பொன்மயமான ஏர்க்கால்களுள்ளவையும், சிறந்த கொடிகள் கட்டினவையும், அடங்கின குதிரைகளோடும் விசித்ர யுத்தங்கள் செய்யத்தக்க தேராளிகளோடுங் கூடியவையுமான தேர்கள் ஆயிரம் என்னிடத்திலிருக்கின்றன. அந்தத் தேராளிகளில் ஒவ்வொருவனும் ஆயிரம பொன்னுக்கு மேற்பட்ட சமபளம் வாங்குகிறவன். அவர்கள் யுத்தஞ்செய்தாலும் செய்யாவிட்டாலும் மாதந்தோறும சமபளம் கொடுக்கப்படும். அரசனே! இஃது என் தனம். இதனால் நான் உன்னுடன் ஆடுவேன்' என்று சொனனர். மனத்தில் பகைவைத்தவனும் கெட்ட எண்ணமுள்ளவனுமாகிய சகுனி, அவர் இவ்வாறு சொன்னவுடன், 'ஜயித்தாயிற்று' எனறே யுதிஷ்டிரருக்குச் சொன்னன். யுதிஷ்டிரர், 'யுத்தத்தில் அர்ஜுனனல் தோல்வியடைந்த சித்ரரதன் என்னும் கந்தர்வன் அர்ஜுனன் மேல் சந்தோஷமடைந்து குருவிபோலச் சித்திர நிறமுள்ளவையும் பொன்மாலை பூண்டவையுமான கந்தர்வலோகத்துக் குதிரைகளை அர்ஜுனனுக்கு அன்புடன் அளித்திருக்கிருன். அரசனே! இஃது என் தனம். இதனல் நான் உன்னுடன் ஆடுவேன்' என்று சொன்னர். தன்னுள் நிச்சயமுள்ள சகுனி இதைக் கேட்டு மோசத்தைக் கடைப்பிடித்து, 'ஜயித்தாய்விட்டது' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னன். மறுபடியும் யுதிஷ்டிரர், 'பதினயிரம் சிறந்த ரதங்களும் வண்டிகளும் பலவகைக் குதிரைகளும பூட்டியே யிருக்கின்றன. அப்படியே ஒவ்வொரு வர்ணத்திலிருந்தும் ஆயிரக் கணக்காகப் பொறுக்கியெடுக்கப்பட்ட சிறந்த பராக்கிரமமுள்ள

---

1 மூலத்தில் 'பத்மிந:' என்றிருக்கிறது. 'கழுத்திலும் கபோலத்திலும் தாமரை மலர்போன்ற புள்ளிகளுள்ளவை' என்பது பழைய வுரை.

வீரர்கள் எல்லாரும் சேர்ந்திருக்கின்றனர். அவர்கள் பாலைக் குடித்துக்கொண்டும் சம்பா அரிசிச் சோற்றை உண்டுகொண்டும் இருக்கின்றனர். எல்லாரும் அகன்ற மார்புள்ளவர்கள். அவர்கள் அறுபதினாயிரவர். அரசனே! இஃது என் தனம். இதனால் நான் உன்னோடு ஆடுவேன்' என்று சொன்னார். தன்னில் நிச்சயமுள்ள சகுனி இதைக்கேட்டு மோசத்தைக் கடைப்பிடித்து, 'ஜயித்தாய்விட்டது' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னான். யுதிஷ்டிரர், 'துரியோதனா! ஒவ்வொன்றிலும் அவ்வைந்து துரோணங்கள் விலைமதிக்கப்படாத சிறந்த ஆணிப்பொன் அடங்கினவையான நானூறு செம்பு இரும்புப் பாத்திரங்கள் இருக்கின்றன. வேந்தனே! இஃது என் தனம். இதனால் நான் உன்னுடன் ஆடுவேன்' என்று சொன்னார். தன்னுள் நிச்சய முள்ள சகுனி, இதைக் கேட்டு மோசத்தைக் கடைப்பிடித்து, 'ஜயித்தாய்விட்டது' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னான்.

---

## எண்பத்தாறுவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

### (விதுரர் திருதராஷ்டிரனிடம் சூதாட்டத்தை நிறுத்தச்சொன்னது)

இவ்வாறு எல்லாப் பொருள்களையும் கொண்டுபோவதாகிய கொடிய சூதாட்டமானது நடத்தப்படும்போது, எல்லா சந்தேகங்களையும் விடுவிப்பவராகிய விதுரர், திருதராஷ்டிரனுக்குச் சொல்லலானார்:—'பரத வம்சத்து மகாராஜாவே! நான் உமக்குச் சொல்லப்போவதை நீர் தெரிந்துகொள்ளும். இறக்கப் போகிறவனுக்கு மருந்து எப்படியோ அப்படியே கேள்வி உமக்குப் பிரியப்படாமலுமிருக்கும். கெடுநினைவுள்ளவனும் பரத வம்சத்தைக் கெடுப்பவனுமாகிய இந்தத் துரியோதனன் முன்னர்ப் பிறந்தபோதே நரிபோல விகாரமான குரலோடு ஊளையிட்டானன்றோ? இவன் உங்கள் மரணத்துக்கு ஏதுவாயிருக்கத் தகும். துரியோதனன் வடிவமாக வீட்டுக்குள் நரியிருப்பதை நீர் அன்பினால் அறியவில்லை. எனது நீதியுள்ள சொல்லைக் கேளும். தேனெடுப்பவன் தேன் கிடைத்தபோது தன் விழுகைக்குக் காரணமான மலைச்சரிவைப் பார்ப்பதில்லை; தேனிருக்குமிடத்தில் ஏறி அதிலேயே ஆழ்ந்துபோகிறான்; அதனால், விழவும் விழுகிறான். அப்படியே இந்தத் துரியோதனனும் சூதாட்டமென்னும் தேனில் மயங்கித் தான் விழுவதைப்பற்றி ஆராய்ந்து பார்க்கவில்லை. மகாரதர்களோடு பகைகொள்வ

தனால் வரும் கெடுதியை அறியவில்லை. மிகத் தெரிந்தவரே! முன்னர் போஜ வம்சத்தாருக்குள்ளேயே அஸமஞ்சஸனென்னும் புத்திரனை நகரத்தோருடைய நன்மைக்காகத் தந்தையே விட்டு விட்டானென்று எனக்குத் தெரியும். பகைவரைக் கொல்லுகிற வராகிய கிருஷ்ண பகவானால் கம்ஸன் கொல்லப்பட்டபோது அவர் கட்டளையினால் அந்தகர்களும் யாதவர்களும் போஜர்களும் சேர்ந்து கம்ஸனை விட்டுவிட்டனர். அதனால், அந்தக் குலத்தோ ரனைவரும் அநேக வருஷ காலங்களாகச் சந்தோஷமாயிருக்கின் றனர். அர்ஜுனன் உமது கட்டளையினால் துரியோதனனை அழிக்கட்டும். இந்தப் பாபியை அழிப்பதனால் மற்ற கௌர வர்கள் சுகமாக மகிழ்ந்திருக்கட்டும். அரசரே! காக்கையும் நரியு மாகிய துரியோதனனைக் கொடுத்து மயில்களும் புலிகளுமாகிய பாண்டவர்களை விலைக்கு வாங்கும். துயரக்கடலில் நீர் முழுக வேண்டாம். ஒரு குலத்திற்காக ஒரு மனிதனை விட்டுவிட வேண்டும். தேசத்திற்காகக் கிராமத்தை விடவேண்டும். தனக்காகப் பூமியையே விட்டுவிடவேண்டும். எல்லாந் தெரிந்த வரும் எல்லாருடைய அபிப்பிராயங்களையும் அறிந்தவரும் சத்து ருக்களெல்லோருக்கும் பயத்தைத் தருபவருமாகிய சுக்கிராச்சாரி யர் ஜம்பாசுரனை விடவேண்டியதற்காக அசுர சிரேஷ்டர்களைப் பார்த்து இவ்வாறு சொன்னார்: ஒரு ராஜாவானவன் பொன்னை ஈனுகின்ற சில காட்டுப் பறவைகளை வீட்டில் கொணர்ந்து வைத்துக்கொண்டு, பொன்னாசையினால் அவற்றைக் கொன்று விட்டானாம். வீரரே! பொன்னை விரும்பின அவ்வரசன் பொன்னையெல்லாம் ஒரே காலத்தில் அநுபவிக்கும் ஆசை யினால் கண்ணில்லாமல் எதிர்கால நிகழ்கால மிரண்டின் லாபங் களையும் உடனே அழித்துவிட்டான். வேந்தரே! ஆதலால், நீரும் அவனைப்போலவே பொருளாசைகொண்டு பாண்டவர் களுக்குத் துரோகம் செய்யலாகாது. பறவைகளைக் கொன்ற புருஷனைப்போல ஆசைகொண்ட நீரும் பின்னால் துயரப்படுவீர். பாரதனே! புஷ்பக்காரன் தோட்டத்தில் அன்புசெய்து (காப் பாற்றி) பூத்த புஷ்பங்களைமட்டும் எடுத்துக்கொள்ளுவதுபோல நீர் பாண்டவர்களிடம் அன்புவைத்து அப்போது அபபோது அவர்கள் பிரியப்பட்டுக் கொடுக்கும் தனங்களை வாங்கிக்கொள் ளும்; தீ வைப்பவன் மரங்களைக் கொளுத்துவதுபோல அவர்களை வேரோடு கொளுத்தாதீர்; பிள்ளைகள் மந்திரிகள் சேனைகளுடன் கூட யமலோகத்திற்குச்செல்லாதீர். பாரதரேறே! ஒன்றுசேர்ந்த பாண்டவர்களுடன் தேவர்களோடு சேர்ந்து நேரே வந்த தேவேந் திரனாயினும் எதிர்நின்று யுத்தஞ்செய்ய முடியுமா? கலகத்திற்கு

வேரான சூதானது பெருங்கொடுமைக்குக் காரணமாக ஒருவர்க் கொருவர் பகையை அழைக்கிறது. திருதராஷ்டிர புத்திரனாகிய இந்தத் துரியோதனன் அந்தச் சூதாட்டத்தை யடைந்து கொடிய துவேஷத்தை உண்டாக்குகிறான். துரியோதனன் செய்த பிழையினால் பிரதீப வம்சத்திற் பிறந்தவரும் சந்தனு வம் சத்திற் பிறந்தவரும் பீமசேன வம்சத்திற் பிறந்தவருமாகிய கௌரவர்களனைவரும் பாஹ்லீகர்களுடன்கூடத் துயரத்தை அடையப்போகின்றனர். விருஷபம் கொழுப்பினால் தன் கொம் பைத் தானே ஒடித்துக்கொள்வதுபோல, இந்தத் துரியோத னன் கர்வத்தினால் க்ஷேமத்தையும் ராஜ்யத்தையும் இழந்து விடுகிறான். அரசரே! வீரனும் சிறந்த புத்தியுள்ளவனுமாகிய ஒருவன் தன்னறிவைவிட்டுப் பிறன் மனத்தை ஒத்துப்போவா னாயின் அவன் சிறுவனான மாலுமியோடு கூடிய கப்பலிலேறின வன் கடலில் முழுகுவதுபோலக் கொடுந் துயரத்தில் முழுகு வான். துரியோதனன் பாண்டவனுடன் பந்தயம் போடுகிறான். இவன் ஜயிக்கிறானென்று நீர் அதில் பிரியப்படுகிறீர். அதிக விளையாட்டு சண்டையாக முடியும். அதனால் மனிதர்களுக்குக் கேடு நேரிடும். நன்றாக நடத்தப்படும் உமது சூதாட்ட மானது தலைகீழாகப் பயனைத் தரும். மந்திராலோசனை அடியாக மனத்தைக் கட்டுவது மேலானது. உமமுடைய புத்திரனாகிய யுதிஷ்டிரனுடன் நேரும் இந்தக் கலகத்தைப்பற்றி நீர் நினையா மலே ஒப்புக்கொண்டிருக்கிறீர். பிரதீப வம்சத்தவரும் சந்தனு வம்சத்தவருமான அரசர்களே! இந்தக் கௌரவர்களின் சபை யில் இந்த நீதி வாக்கியத்தைக் கேளுங்கள். புத்தியில்லாத வனை அனுசரிப்பதனால் ஜ்வலிக்கின்ற கொடிய தீயில் விழா தீர்கள். சொக்கட்டான் காய்களின் மயக்கத்தினால் மூடப்பட்ட பாண்டு புத்திரனாகிய தர்மராஜாவும் விருகோதரனும் சவ்யசாசி யும் நகுல சகதேவர்களும் கோபத்தை அடக்காமற் போவா ராயின் அந்தப் பெருங்கலகத்தில் உங்களுக்குத் [1]தீவுபோலிருப் பவன் யாவன்? மகாராஜாவே! இந்த த்யூதமாடுவதற்கு முன் னமே மனத்தில் விரும்பக்கூடிய தனங்களை எல்லாவற்றிற்கும நீர் இருப்பிடமாயிருக்கிறீர். அதிகத் தனமுள்ள பாண்டவர்களை ஜயித்தால் அந்தத் தனம் உமக்கு என்ன ஆகும்? இப்போது பாண்டவர்களைப் பொருளாக அடையும். சகுனியினுடைய ஆட்டத்தை நாம் அறிவோம். மலைநாட்டரசனான சகுனி சூதி லுள்ள சூதை யறிந்திருக்கிறான். சகுனி எங்கிருந்து வந்தானோ அங்கே போகட்டும. பாரதரே! பாண்டவர்களைச் சண்டை மூட்டாதீர்' என்றார்.

1 கடல் நடுவில் தீவுபோல ஆதரவாயிருப்பவ னென்பது பொருள்.

## எண்பத்தேழாவது அத்தியாயம்

### த்யூத பர்வம் (தொடர்ச்சி)

**(துரியோதனன் விதுரரை நிந்தித்ததும், அவர் அவனுக்கு ஹிதம் உரைத்ததும்)**

துரியோதனன், 'விதுரரே! நீர் எப்போதும் திருதராஷ்டிரன் புத்திரர்களை இகழ்ந்து பிறர் புகழையே புகழ்கிறீர். விதுரரே! உமக்கு யாரிடத்தில் அன்பிருக்கிறதென்பது எங்களுக்குத் தெரியும். எங்களைச் சிறுவர்களைப்போலவே எப்போதும் தாழ்வாகப் பேசுகிறீர். அப்படிப்பட்ட மனிதன் வேறிடத்தில் விருப்பமுள்ளவனென்று அறியத்தக்கவன்; அதற்குத் தக்கபடிதான் இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் செய்கிறான். அவனவன் நாவே அவனவன் உள்ளத்திலிருப்பதை வெளியிடுகிறது. உமது மனம் விரோதமாயிருப்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். அரவத்தை மடியில் வைத்ததுபோலிருக்கிறீர். பூனைபோல வளர்ப்பவனையே கெடுக்கிறீர். சுவாமித்துரோகம் செய்யும் உம்மை மிக்க பாவியென்று யாரும் சொல்வதில்லை. விதுரரே! அதனாலேதான் நீர் பாவத்திற்கு அஞ்சவில்லையோ? விதுரரே! பகைவர்களை ஜயித்துப் பெரிய லாபத்தைப் பெற்றிருக்கிறோம். இனி, எங்களைப் பார்த்துக் கடுஞ்சொற்களைச் சொல்லாதீர். நீர் எங்கள் பகைவர்களோடு சேர்க்கையில் விருப்பமுள்ளவர்; எங்கள் சேர்க்கையில் வெறுப்பை அடைகிறீர். தகாத சொல்லைச் சொல்லுகிற மனிதன் சத்ருவாகிறான். அவன் சத்துருக்களைத் துதிக்கும்போது, அவர்களின் ரகசியங்களை மறைத்துவிடுகிறான். வெட்கமற்றவரே! பாண்டவர்களைச் சார்ந்துகொண்டு ஏன் பீடிக்கிறீர்? நீர் எதை எண்ணுகிறீரோ அதைத்தான் இப்போது பேசுகிறீர். எங்களை அவமதிக்காதீர். உம்முடைய மனத்தை நாங்கள் அறிவோம். பெரியோர்களிடமிருந்து நல்லறிவைக் கற்றுக்கொள்ளும். விதுரரே! நன்றாகச் சம்பாதிக்கப்பட்ட புகழைக் காப்பாற்றிக் கொள்ளும். அயலார் காரியங்களில் நீர் பிரவிருத்திக்கவேண்டாம். விதுரரே! நீர், 'நானே அதிகாரி' என்று நினைத்துக்கொள்ளாதீர். எப்போதும் எங்களைப் பார்த்துக் கொடுஞ் சொற்களைச் சொல்லாதீர். விதுரரே! எனக்கு எது நன்மையென்று உம்மை நான் கேட்கவில்லை. விதுரரே! உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். பொறுத்தவர்களை நீர் துன்பப்படுத்தவேண்டாம். கட்டளையிடுகிறவன் ஒருவன்தான்; மற்றொருவன் கட்டளையிடுகிறவனில்லை. அந்தக் கட்டளையிடுகிறவன் மனிதன் கர்ப்பத்திலிருக்கும்போதே கட்டளையிடுகிறான். ஜலமானது பள்ளத்தாக்

கினால் இழுக்கப்படுவதுபோல அவனுடைய கட்டளையினால் மனிதன் இழுக்கப்படுகிறான். நான் எப்படிக் கட்டளையிடப்பட்டிருக்கிறேனோ அப்படி இருக்கிறேன். தலையினால் மலையை உடைக்கிறவனும் பாம்பைப புசிப்பிக்கிறவனும எவனோ அவனுக்கு அவன் புத்திதான் காரியங்களில் கட்டளையிடுகிறது. எவன் வலிந்து கட்டளையிடுகிறானோ அவன் அந்தக் கட்டளையினாலேயே தனக்குச் சத்துருவைத் தேடுகிறான். சிநேகத்தை விடாமலிருப்பவனைத் தெரியாதவன் அலட்சியஞ் செய்கிறான். பரத வம்சத்தவரே! [1] எவன் கர்ப்பூரத்தை முதலில் கொளுத்தி வெகுநேரம் கவனியாமலிருக்கிறானோ அவன் அதில் மிஞ்சிய சாம்பலைக்கூட ஒருகாலும் அடையான். விதுரரே! எதிரிகளின் பக்கத்திற் சேர்ந்து பகைப்பவனாகிய வேண்டாத மனிதனைச் சமீபத்தில் வைத்துக்கொள்ளாமலிருப்பது முக்கியம். விதுரரே! ஆதலால், உமக்கு எங்கே விருப்பமிருக்கிறதோ அங்கே போகலாம். கெட்ட நடையுள்ள ஸ்திரீயானவள் மிகவும் நல்ல வார்த்தை சொல்லப்பட்டாலும் விட்டேவிடுவாள்' என்று சொன்னான்.

விதுரர், [2] 'இவ்வளவினாலேயே ஒரு மனிதனை எவர்கள் விடுகிறார்களோ அவர்களின் நட்பு முடிவுள்ளது. மகாராஜனே! சொல்லு. அவர்களுடைய உள்ளங்கள் கலங்கியே யிருக்கின்றன. அவர்கள் இன்சொல்லைக் கொடுத்து உலக்கைகளால் இடிப்பவர். மிகக் குறைந்த புத்தியுள்ள ராஜபுத்திரனே! நீ உன்னைச் சிறுவனல்லாதவனாகவும் என்னைச் சிறுவனாகவும் நினைக்கிறாய். எவன் ஒரு மனிதனைச் சிநேகத்தில் வைத்துக்கொண்டு பிறகு அவனையே தூஷிக்கிறானோ அவன்தான் சிறுவன். வேதமோதின பிராம்மணனது வீட்டில் கெட்டுப்போன பெண் எப்படியோ அப்படியே கெட்ட புத்தியானது நன்மையைத் தராது. சிறு பெண்ணுக்கு அறுபது வயதான கணவன் எப்படியோ அப்படியே பரதசிரேஷ்டனான உனக்கு நல்லதைச் சொல்லுகிறவன் வேண்டியிரான். அரசனே! ஆதலால், உன் மனத்திற் கினியதையே நீ விரும்புவையாயின், மாதர், பித்தர், முடவர் முதலியவர்களிடத்தில் நன்மையும் தீமையுமான எல்லாக் காரியங்களையும்பற்றிக் கேட்கக்கடவாய். இவ்வுலகத்தில் இன்சொற் சொல்லும் பாபியான மனிதன் எப்போதும் கிடைப்பான். இன்னாததும் நன்மை பயப்பதுமான சொல்லை உரைப்ப

1 நிந்தித்தவன் உடனே பரிகாரம் செய்யாவிடில் பழைய சிநேகம் எவ்வளவுமில்லாது என்பது கருத்து.

2 திருதராஷ்டிரனைப் பார்த்துச் சொன்னதாகப் பழையவுரை அபிப்பிராயப்படுகிறது.

வனும் கேட்பவனும் கிடைப்பது அரிது. எவன் தர்மத்தையே தலைமையாகக்கொண்டு தன் ராஜாவின் விருப்பையும் வெறுப்பையும் கவனியாமல் இன்னாதவையாயினும் நன்மை பயப்பனவற்றையே உரைக்கிறானோ அவன்தான் அரசனுக்குத் துணைவன். மகாராஜாவே! வியாதியினாலுண்டாகாமல் கடுமையினாலுண்டானதும் கூர்மையானதும் வெப்பமானதும் கீர்த்தியை அழிப்பதும் கொடியதும் நாற்றமுள்ளதும் ஸத்புருஷர்கள் அடக்கிவிடுவதும் அயோக்கியர்கள் அடக்காததுமான அதை நீ [1]அடக்கிவிட்டுச் சாந்தனாக இரு. திருதராஷ்டிர மகாராஜாவுக்கும் அவர் புத்திரர்களுக்கும் புகழும் செல்வமும் நீடுழி காலமிருப்பதை நான் விரும்புகிறேன். ஆதலால், உனக்கு அஃது இருக்கவேண்டும். உனக்கு ஒரு வந்தனம். எனக்கும் [2]பிராம்மணர்கள் க்ஷேமத்தைக் கொடுக்கக்கடவர். தெரிந்தவன், பார்வையில் விஷமுள்ள சர்ப்பங்களைக் கோபமூட்டமாட்டான். கௌரவனே! நான் உனக்கு இதைத்தான் தொடர்ச்சியாகச் சொல்லுகிறேன்' என்று சொன்னார்.

---

## எண்பத்தெட்டாவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

### (ஆட்டத்தில் தருமபுத்திரர் எல்லாப் பொருள்களையும் தோற்றபிறகு சகோதரர்களையும் தம்மையும் திரௌபதியையும் தோற்றது)

சகுனி, 'யுதிஷ்டிரா! பாண்டவர்களுடைய மிகுதியான தனங்களைத் தோற்றாய். குந்தி புத்திரனே! தோற்காத திரவியம் உனக்கு ஏதாவதிருக்குமானால் சொல்' என்று கேட்டான். தர்மபுத்திரர், சுபல புத்திரனே! என்னுடைய தனம் எண்ண முடியாது. அஃது எனக்குத் தெரியும். சகுனியே! நீ தனத்தைப் பற்றி ஏன் கேட்கிறாய்? [3]அயுதம், [4]ப்ரயுதம், [5]சங்கு, [6]பத்மம், [7]அர்ப்புதம், [8]கர்வம், [9]சங்கம், [10]நிகர்வம், [11]மகாபத்மம், [12]மத்யம், [13]பரார்த்தம் என்னும் கோடி சங்கியைகளும்

---

1 மூலத்தில் 'பேயம்' என்றிருக்கிறது; பேயம் = குடிக்கத்தக்கது.

2 'பிராமணாசீர்வசனம் வேண்டுமேயன்றி உன் விருப்பம் வேண்டாம்' என்பது கருத்து.

3 பதினாயிரம்; 4 பத்துலக்ஷம்; 5 பத்துலக்ஷம்கோடி; 6 நூறுகோடி; 7 பத்துக்கோடி; 8 ஆயிரங்கோடி; 9 லக்ஷம்கோடி; 10 பதினாயிரம்கோடி; 11 நூறு லக்ஷங்கோடி; 12 பதினாயிரலக்ஷங்கோடி; 13 லக்ஷலக்ஷங்கோடி.

அதற்கு மேற்பட்டவையும் பந்தயம் வைக்கலாம். அரசனே! இஃது என்னுடைய தனம். இதனால் நான் உன்னுடன் ஆடுவேன்' என்று சொன்னார். தன்னுள் நிச்சயமுள்ளவனான சகுனி, இதைக் கேட்டு மோசத்தைக் கடைப்பிடித்து, 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னான். யுதிஷ்டிரர், 'சகுனியே! பசுக்கள் கிராமயின மந்தைகளும குதிரைக் கூட்டமும் எண்ணிறந்த வெள்ளாடுகளும் செம்மறியாடுகளின் கூட்டமும் ஸிந்து நதிக்குக் கிழக்கே பர்ணாசியென்னும் நதியின் கரையில் இருக்கின்றன. அவையெல்லாம என்னுடைய தனங்கள். இதனால் நான் உன்னுடன் ஆடுவேன்' என்று சொன்னார். தன்னுள் நிச்சயமுள்ள சகுனி, அதைக் கேட்டு மோசத்தைக் கடைப்பிடித்து, 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னான். யுதிஷ்டிரர், அரசனே! நகரமும் தேசமும பூமியனைத்தும பிராமணரல்லாதவர்களுடைய தனங்களும் பிராமணரல்லாத மனிதர்களுந் தாம எனக்கு மிச்சமுள்ள பொருள்கள். அரசனே! இதுதான் என் தனம. இதனால் நான் உன்னுடன் ஆடுவேன்' என்று சொன்னார். தன்னுள் நிச்சயமுள்ள சகுனி, இதைக் கேட்டு மோசத்தைக் கடைப்பிடித்து 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னான். யுதிஷ்டிரர், 'ராஜனே! இந்த ராஜகுமாரர்கள் எவற்றினால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகின்றனரோ இந்தக் குண்டலங்கள் கண்டிகள முதலான ராஜாபரணங்களனைத்தும எனது தனம. அரசனே! இவைகளால் நான உன்னோடு ஆடுவேன' என்று சொன்னார். தன்னுள நிச்சயமுளள சகுனி, இதைக் கேட்டு மோசத்தைக் கடைப்பிடித்து, 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னான. யுதிஷ்டிரர், 'கறுத்தவனும இளம வயதிலிருப்பவனும் சிவந்த கண்களும் சிம்மம போன்ற தோள்களும நீண்ட கைகளுமுளளவனுமாகிய நகுலனொருவனே எனக்குப் பந்தயம. இவன் எனது தனமென்றறி' என்று சொன்னார். சகுனி, 'ராஜனே! யுதிஷ்டிரனே! உனக்கு அன்பனும ராஜகுமாரனுமான நகுலன் எங்கள் வசமாய் விட்டான். இன்னும யாரை வைத்து ஆடுகிறாய்?' என்று சொல்லி அந்தக் காய்களை மறுபடியும் ஆடினான். 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னான. யுதிஷ்டிரர், 'இந்தச் சகதேவன் தர்மங்களை உபதேசிப்பவன். இவ்வுலகத்தில் பண்டிதனென்று பெயர்பெற்றவன். என அன்பனாகிய இந்த ராஜகுமாரன் பந்தயத்துக்குத் தகாதவனானாலும் இவனை வேண்டாதவனைப்போலப் பந்தயம்வைத்தாடுகிறேன்' என்று சொன்னார். தன்னுள் நிச்சயமுள்ள சகுனி இதைக் கேட்டு

மோசத்தைக் கடைப்பிடித்து, 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச் சொல்லி, 'ஓ! ராஜனே! மாத்ரி புத்திரர்கள் உனக்கு அன்பர்கள். இவர்கள் என்னால் ஜயிக்கப்பட்டனர். பீமசேனனும் தனஞ்சயனும் உனக்கு மேற்பட்டவரென்று நான் நினைக்கிறேன்' என்று சொன்னான். யுதிஷ்டிரர், 'மூடா! எங்களுடைய நீதியை நீ பார்க்கவில்லை. நீ பாபம் செய்கிறாய். ஒத்த மனமுள்ள எங்களுக்குள் மித்திரபேதஞ் செய்யக் கருதுகிறாயன்றோ?' என்று சொன்னார். சகுனி, 'தன மதமுள்ளவன் பள்ளத்தில் விழுகிறான்; ஜாக்கிரதையில்லாமல் ஸ்தாவரம்போலாகிறான். ராஜனே! பரதசிரேஷ்டனே! நீ மூத்தவனும் சிறந்தவனுமாயிருக்கிறாய்; உனக்கு நமஸ்காரம். யுதிஷ்டிரனே! [1]சூதாடுகிறவர்கள் ஆடும்போது வரம்பு கடந்தவர்கள் போலப் பிதற்றுவன, கனவிலாவது விழித்துக்கொண்டிருக்கையிலாவது காணுதவைகள் தாம்' என்று சொன்னான். யுதிஷ்டிரர், 'சகுனியே! யுத்தத்தில் கப்பல்போல எங்களைக் கரைசேர்ப்பவனும் பகைவரை ஜயிப்பவனும் பராக்கிரமசாலியும் உலகத்தில் ஒப்பற்ற வீரனும் ராஜகுமாரனுமாகிய அர்ஜுனன் பந்தயத்துக்குத் தகாதவனாயினும் அவனை வைத்து ஆடுகிறேன்' என்று சொன்னார். தன்னுள் நிச்சயமுள்ள சகுனி, இதைக் கேட்டு மோசத்தைக் கடைப்பிடித்து, 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச் சொல்லி, 'ராஜனே! பாண்டவனே! பாண்டவர்களுள் சிறந்த வில்லாளியாகிய இந்த ஸவ்யஸாசியையும் நான் ஜயித்துவிட்டேன். இனி உனக்கு அன்பனான பீமனை வைத்தாடு. ஆட்டத்திற்குப் பந்தயமாக ஒருவன்தான் மிச்சமிருக்கிறான்' என்றும் சொன்னான். யுதிஷ்டிரர், 'அரசனே! எங்களுக்குத் தலைவனும் யுத்தத்தில் எங்களை நடத்துகிறவனும் இந்திரனைப்போல அசுரர்களுக்கு ஒப்பற்ற சத்ருவும் குறுக்கான பார்வையும் வளைந்த புருவங்களும் சிம்மம்போன்ற தோள்களுமுள்ளவனும் எப்போதும் அவமதிப்பைப் பொறுதவனும் மகாத்மாவும் தேகவன்மையில் தனக்கொப்பற்றவனும் இவ்வுலகில் கதை பிடித்தவர்களுள் முதன்மையானவனும் பகைவரைத் தொலைப்பவனும் ராஜகுமாரனுமான அந்தப் பீமஸேனன் பந்தயத்துக்குத் தகாதவனாயினும் அவனை வைத்தாடுகிறேன்' என்று சொன்னார். தன்னுள் நிச்சயமுள்ள சகுனி, இதைக் கேட்டு மோசத்தைக் கடைப்பிடித்து, 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச் சொல்லி, 'குந்தி புத்திரனே! அதிக திரவியங்களையும் சகோதரர்களையும் யானைகளையும் குதிரைகளையும் தோற்றாய். தோலாத திரவியம் ஏதாவது உனக்கு

1 ஆட்டத்திற பேசினதற்காக கோபிக்கவேண்டாம் என்பது கருத்து.

இருக்குமானுல் சொல்லு' என்று கேட்டான். யுதிஷ்டிரர், 'என் சகோதரர்கள் எல்லாரிலும் நான் சிறந்தவன்; அவர்களுக்கு அன்பன். நான் ஜயிக்கப்பட்டு என்னை நிர்ப்பந்தப்படுத்தினுல் நானே ஊழியஞ்செய்வேன்' என்று சொன்னுர். தன்னுள் நிச்சய முள்ள சகுனி, இதைக் கேட்டு மோசத்தைக் கடைப்பிடித்து 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச் சொல்லி, 'அரசனே! உன்னை நீ தோற்றது மிகப் பாவமானது. மற்ற தனமிருக்கும் போது தன்னைத் தோற்பது பாவம்' என்றும் சொன்னுன். சூதாடு கருவிகளைத் தெரிந்த சகுனி இவ்வாறு சொல்லி லோக வீரர்களாகிய அவர்களெல்லாரும் தன் பந்தயத்தில் அகப்பட் டிருப்பதைத் தனித்தனியே அரசர்களுக்குச் சொல்லி வென்றுன்.

(பிறகு) சகுனி, 'வேந்தனே! நீ தோலாத பந்தயம் ஒன்றிருக் கிறது; அதாவது உன்னுடைய மனைவி; பாஞ்சால ராஜன் புத் திரியான கிருஷ்ணையைப் பந்தயத்தில் வை; அவளால் மறுபடி யும் உன்னை மீட்டுக்கொள்' என்று சொன்னுன். யுதிஷ்டிரர், 'சுபல புத்திரனே! அரசனே! குறுமையும் நெடுமையுமல்லா மலும் இளைத்திராமலும் அதிகச் சிவப்பில்லாமலுமிருப்பவளும், கறுத்தும சுருண்டுமிருக்கும் கூந்தல்களையுடையவளும், சரத் காலத்திய தாமரையிதழ்போன்ற கண்களையுடையவளும், சரத் காலத்துத் தாமரைபோன்ற மணமுள்ளவளும, சரத்காலத்துத் தாமரைமல ரணிந்தவளும, அழகிலும் தயையிலும் ஒளியிலும் நல்லொழுக்கத்திலும் லக்ஷ்மிக்கொப்பானவளும, புருஷர்கள் விரும்பத்தக்கவளும், எல்லா நற்குணங்களும் நிரம்பினவளும், அனுகூலமானவளும், இன்சொல்லே சொல்லுகிறவளும, அறம் பொருளின்ப மென்னும் மூன்று புருஷார்த்தங்களும் சித்திப்பதற் குக் காரணமாக மனிதன் நினைக்கத்தக்கவளும, பின் தூங்கி முன னெழுந்திருப்பவளும், ஆடுமாடு மேய்ப்பவர்கள் முதல் எல்லா ருடைய வேலைகளும ஆனதையும் ஆகாததையும் முற்றிலும் அறிகிறவளும், வேர்வை அரும்பும்போது மதுத்துளிகளுள்ள தாமரை மலர்போலவும் மல்லிகைமலர் போலவும் விளங்கும முக முள்ளவளும், நுண்ணிடையும் நீண்ட கூந்தலும் சிவந்த வாயு முள்ளவளும், தேகத்தில் ரோமங்கள் குறைந்தவளும், இன்னும் இவ்வகையான அநேகஞ் சிறப்புக்களுள்ள அழகான அங்கங்க ளுடையவளும், பாஞ்சால ராஜன் குமாரியுமான திரௌபதியைப் பந்தயம்வைத்து ஆடுகிறேன்; ஐயோ!' என்று சொன்னுர். சிறந்த புத்தியுள்ள தர்மராஜரால் இந்தச் சொல் சொல்லப்பட்ட போது, சபையோரான பெரியோர்களிடமிருந்து 'சீ! சீ!' என்ற சொற்கள் வெளிப்பட்டன. ஜனமேஜய ராஜாவே! அந்தச் சபையே கலங்கிற்று. அரசர்களுக்கும் பீஷ்மர் துரோணர் கிருபர்

முதலியோர்க்கும் கண்ணீரும் வியர்வையு முண்டாயின. விதுரர் தலையைப் பிடித்துக்கொண்டும் உயிர்போனவர் போலத் தலை குனிந்து சிந்தித்துக்கொண்டும் சர்ப்பம்போலப் பெருமூச் செறிந்துகொண்டும் உட்கார்ந்திருந்தார். பாஹ்லீகன், ஸோமதத்தன், பிரதீப வம்சத்தாரைச் சேர்ந்த சஞ்சயன், அசுவத்தாமா, பூரிசிரவஸ், திருதராஷ்டிரன் புத்திரனாகிய யுயுத்ஸு ஆகிய இவர்களும் தலைகுனிந்து நாகங்கள்போலப் பெருமூச்சு எறிந்து கொண்டு பார்த்திருந்தனர். திருதராஷ்டிரன்மட்டும் மிக்க சந்தோஷத்துடன், 'ஜயித்தாயிற்றா? ஜயித்தாயிற்றா' என்று பலமுறை கேட்டான்; எண்ணத்தை மறைக்கவில்லை. துச்சாஸனன் முதலானவர்களுடன் கூடக் கர்ணன் மிக மகிழ்ந்தான். மற்ற சபையோரின் கண்களினின்றும் கண்ணீர் விழுந்தது. ஜயத்தினால் பிரகாசிப்பவனும் அதிகக் கர்வமுள்ளவனுமாகிய சகுனி, இவ்வாறு சொன்ன பிறகு, 'ஜயித்தாயிற்று' என்றே அந்தக் காய்களை மறுபடியும் ஆடினான்.

---

## எண்பத்தோன்பதாவது அத்தியாயம்

### த்யூத பர்வம் (தொடர்ச்சி)

(துச்சாஸனனால் சபையில் இழுத்துவரப்பட்ட திரௌபதி சபையோரைப் பார்த்துத் தர்மங் கேட்டது)

துரியோதனன், 'விதுரரே! வாரும்; பாண்டவர்களால் கௌரவிக்கப்பெற்ற அன்புள்ள மனைவியாகிய திரௌபதியை அழைத்து வாரும். வீட்டை விளக்கவேண்டும்; சீக்கிரம் வரட்டும். அந்தக் கெட்ட நடையுள்ளவள் வீட்டில் தாஸிகளுடன் சேர்ந்திருக்கட்டும்' என்று சொன்னான்.

விதுரர், 'மூடனே! உன்னைப்போன்றவன் பேசத்தகாததை நீ பேசினாய்; கயிற்றினால் சுருக்கிடப்பட்டும் அதை அறியாமலிருக்கிறாய்? படுகுழியில் தொங்குகிறாய்; அதை நீ அறியவில்லை. நீ மானாக இருந்து புலிகளை அளவுக்கு மீறிக் கோபிக்கச்செய்கிறாய். மிக மந்தமான புத்தியுள்ளவனே! கொடிய விஷமுள்ள சர்ப்பங்கள் நிறைந்த கோபத்தோடு உன் தலையில் இருக்கின்றன. அவற்றை இன்னும் கோபிக்கச்செய்யாதே. நீ யமலோகத்திற்குப் போகாதே. கிருஷ்ணையானவள் தாஸித்தனத்தை அடையத்தகாதவள். தர்மபுத்திரன் தனக்குச் சுதந்திரமில்லாத காலத்தில் அவளைப் பந்தயத்தில் வைத்திருக்கிறானென்பது என் அபிப்பிராயம். திருதராஷ்டிரருடைய புத்திரனாகிய

இந்த ராஜாவானவன், தன்னைக் கொல்வதற்காக[1] மூங்கில் காய்ப்பதுபோல, பகையையும் பெரிய பயத்தையும் தரத்தக்க சூதைக் கைப்பற்றியிருக்கிறான். இவன் மதங்கொண்டு தன் நாசத்தை அறியாமலிருக்கிறான். புண்ணிற் கோலிடுகிறவனாகவும் கொடுஞ் சொற் சொல்லுகிறவனாகவும் இருக்கலாகாது. [2] இழிவானவனிடத்திலிருந்து மேலான பொருளை வாங்கலாகாது. இவனுடைய எந்தச் சொல்லினால் பிறன் துயரப்படுவானோ நரகலோகத்திற்குக் காரணமும் அமங்களமுமான அந்தச் சொல்லைச் சொல்லலாகாது. வாயிலிருந்து கரைகடந்த சொற்களும் வெளிபபடுகின்றன. அவற்றினால் அடிக்கப்பட்டவன் அநேகம் இரவு பகல்கள துயரப்படுகிறான். அவை, அயலானுடைய உள் [3] மர்மங்களில் தவிர மற்ற இடங்களில் விழுவதில்லை. தெரிந்தவன் அவற்றைப் பிறர் மேல் விடுக்கமாட்டான். ஓர் [4] ஆடு கத்தியை விழுங்கிற்று. ஆயுதம் தலைக்குள் மறைந்துபோனதனால் அதன் தலையை அறுத்துப் பூமியில் தள்ளுவதாகிய கொடுஞ் செய்கை நேர்ந்தது. அதுபோலப் பாண்டவர்களுடன் பகைசெய்துகொள்ளாதே. பாண்டவர்கள் இவ்வாறு ஒன்றும் சொல்வதில்லை. நாய்த்தன்மையுள்ள மனிதர்கள், காட்டிலுள்ள வேடனாலும் கிருகஸ்தனாலும் வித்தை நிரம்பின ரிஷியாலும் அவர்களைக் கண்டு எப்போதும் இப்படித்தான் குரைக்கின்றனர். மிகக் கொடிய நரக வாயிலான இந்தப் பாவத்தைத் திருதராஷ்டிரருடைய புத்திரன் அறியவில்லை. துச்சாஸனன் முதலான கௌரவர்கள் அநே

---

1 'வேனனென்னும் அரசன் ரிஷிகளை அவமதித்ததனால் அழிந்தான்' என்று கூறுவது பழைய உரை.

2 'இழிவான சூது முதலியவற்றால் சத்துருவை ஜயிக்கலாகாது' என்பது பழைய உரை.

3 உயிர் நிலை.

4 ஆடு கத்தியை இலை என்று நினைத்து விழுங்குமாயின் அதன் கழுத்தில் அகப்பட்டுக்கொள்ளும் அந்தக் கத்தியை ஆயுதம் வேண்டுபவன் இழுக்கும்போது அஃது அவ் ஆட்டின் கழுத்தை வெட்டிக்கொண்டுதான் விழும். அப்படியே பாண்டவர் பகை உன் உயிரைக்கொண்டுதான் முடியும் என்பது கருத்து.

'ஓர் ஆடு ஒரு கத்தியை விழுங்கத் தொடங்கி அதை விழுங்கமுடியாமையால் பூமியில் வாயை வைத்துக்கொண்டு கால்களினால் கத்தியைத் தள்ளிக்கொண்டு விழுங்கத் தொடங்கிற்று; கத்தியைத் தூக்கினதனால் தன் தலையும் கழுத்தும் அறுபட்டு விழுந்தது' என்பதும், 'ஒரு மீன் பிடிப்பவன் தூண்டில் முள்ளில் மாவைத் தடவி ஜலத்தில் போட்டபோது அவன் வீட்டு ஆடு அந்த மாவுக்காக அந்தத் தூண்டின் முள்ளைக் கடித்துக் கொண்டது. அந்த முள்ளை இழுக்கும்போது கழுத்தறுந்து ஆடு இறந்தது என்ற கதை இவ்விடத்தில் உதாகரிக்கப்பட்டது' என்பதும் பழைய உரை.

கர்கள் சூதாட்டத்தின் ஜயத்தில் துரியோதனனை அனுசரிக்கின்றனர். சுரைக்காய்கள் அமிழ்கின்றன. கற்கள் மிதக்கின்றன. கப்பல்கள் அடிக்கடி வழிதப்பிப் போகின்றன. மூடராஜாவான துரியோதனன் நான் சொல்லும் ஹிதங்களைக் கேட்கிறதில்லை. கௌரவர்களுக்கு முடிவு இதோ வரப்போகின்றது; நிச்சயம்! எல்லாரையும் கொண்டுபோகும் மிகக் கொடிய நாசம் வரும். (ஏனெனில்) மிக்க நன்மையுள்ளவையான நண்பர்களின் நீதிச் சொற்கள் கேட்கப்படுவதில்லை. ஆசையே மேலோங்குகிறது' என்று சொன்னார்.

மதத்தினால் தன்னை மறந்த துரியோதனன் விதுரரை, 'சீ!' என்று சொல்லிப் பிராதிகாமியென்னும் வேலைக்காரனைப் பார்த்தான். சபையில் சிறந்த பெரியோர் நடுவில், 'ஓ! பிராதிகாமியே! நீ திரௌபதியை அழைத்து வா. உனக்குப் பாண்டவர்களிடத்தில் பயமில்லையே. இந்த விதுரர் தாம் பயந்து விரோதமாகப் பேசுகிறார். அவர் எப்போதும் நம்முடைய பெருக்கத்தில் விருப்பமில்லாதவர் தாமே' என்று அவனுக்குக் கட்டளையிட்டான். இவ்வாறு கட்டளையிடப்பட்ட பிராதிகாமி யென்னும் தேர்ப்பாகன் ராஜாவின் சொல்லைக் கேட்டு விரைவாகச் சென்றான். சிம்மமிருக்கும் குகையில் நாய் புகுவதுபோலப் பாண்டவர்களின் அரசியான திரௌபதி யிருக்குமிடத்திற்குச் சென்று, 'திரௌபதியே! யுதிஷ்டிரர் சூதென்னும் கள் மயக்கத்தினால் மயங்கியிருக்கிறார். துரியோதனன் உன்னை ஜயித்துவிட்டான். ஆதலால், நீ திருதராஷ்டிரன் வீட்டுக்குள் போ. யாக்ஞஸேனியே! வேலை செய்வதற்காக உன்னை அழைக்கவந்திருக்கிறேன்' என்று சொன்னான். திரௌபதி, 'பிராதிகாமியே! ஏன இப்படிப் பேசுகிறாய்? எந்த ராஜபுத்திரன் மனைவியை வைத்தாடுவான்? ராஜாவானவர் சூதென்னும் கள் மயக்கத்தினால் மயங்கி மூடரானாரா? அவருக்குப் பந்தயம் மற்றொன்றுமில்லையா?' என்று சொன்னாள். பிராதிகாமி, 'வேறு பொருள் ஒன்றுமில்லாதபோதுதான் பாண்டவரான அஜாதசத்ரு உன்னை வைத்து ஆடினார். ஓ! ராஜகுமாரியே! அந்த ராஜாவினால் முதலில் சகோதரர்களும் பிறகு தாமேயும் பந்தயம் வைக்கப்பட்ட பிறகு நீ பந்தயம் வைக்கப்பட்டாய்' என்றான். திரௌபதி, 'ஸூத புத்திரனே! செல்; நீ அந்தச் சூதாடினவரிடம் சென்று, 'நீர் முதலில் உம்மைத் தோற்றீரா? அல்லது என்னைத் தோற்றீரா?' என்று சபையில் கேள். ஸூத புத்திரனே! இதைத் தெரிந்துகொண்டு வா. பிறகு, என்னை அழைத்துப் போகலாம். ராஜாவின் கருத்துத் தெரிந்தபிறகு நான் துக்கத்துடன்

போவேன்' என்றாள். அப்போது அந்தப் பிராதிகாமியான வன் சபைக்குச் சென்று அரசர்களின் நடுவிலிருக்கும் தர்மராஜா வைப் பார்த்து, 'ஐயா! 'நீர் எந்த சுதந்திரத்துடன் என்னைத் தோற்றீர்? முதலில் உம்மைத் தோற்றீரா? என்னைத் தோற் றீரா?' என்று திரௌபதி உம்மைக் கேட்கிறாள்' என்று சொன் னான். யுதிஷ்டிரர் மனம் குன்றி உயிர்போனவர்போ லிருந்தார். அந்த ஸூதனைப் பார்த்து நல்லதென்றாவது தீதென்றாவது ஒரு மறுமொழியும் சொல்லவில்லை. துரியோதனன், 'பாஞ்சாலி இங்கு வந்தே இந்தக் கேள்வியைக் கேட்கட்டும். அவள் சொல்லு கிறதையும் இவன் சொல்லுகிறதையும் இங்குள்ளவ ரனைவரும் கேட்கட்டும்' என்று சொன்னான். துரியோதனன் கட்டளைக்கு உட்பட்ட அந்தப் பிராதிகாமியென்னும் ஸூதன் தர்மராஜாவின் கிருகத்திற்குச் சென்று திரௌபதியைப் பார்த்துத் துக்கத் துடன், 'ராஜபுத்திரியே! இந்தச் சபையோர் உன்னை அழைக் கின்றனர். கௌரவர்களுக்குச் சந்தேகம் வந்ததென்று நினைக் கிறேன். ராஜபுத்திரியே! அந்த அற்பன் உன் பெருமையைக் கவனிக்கவில்லையே! அவன் உன்னைச் சபைக்குக் கொண்டுபோக நினைக்கிறான்' என்று சொன்னான். திரௌபதி, 'பிரம்மதேவர் இவ்வாறு கட்டளையிட்டிருக்கிறாரென்பது நிச்சயம். [1] சீதமும உஷ்ணமுமாகிய இரண்டு உணர்ச்சிகளும் கிழவனையும் சிறிய வனையும் தொடுகின்றன. உலகத்தில் தர்மமொன்றே முக்கிய மாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நாம காப்பாற்றினால் அது நமக்கு நன்மையைச் செய்யும். அந்தத் தர்மம் கௌரவர்களை விட்டுப்போகாமலிருக்கவேண்டும். என்னுடைய இந்தத் தர்ம முள்ள கேள்வியைச் சபையோரிடம் சென்று கேள். தர்மத்தில் எண்ணமுள்ளவர்களும் நியாயத்திலிருப்பவர்களும் மிகச் சிறந்த வர்களுமான அந்தச் சபையோர்கள் எதை நிச்சயமாக எனக்குச் சொல்லுகிறார்களோ அதைச் செய்வேன்' என்று சொன்னாள் திரௌபதியின் அந்தச் சொல்லைக் கேட்டு ஸூதன் சபைக்குச் சென்று அவள் சொன்னதைச் சொன்னான். அவர்கள் துரியோ தனனுடைய அந்தப் பிடிவாதத்தை அறிந்துகொண்டு தலை குனிந்தவர்களாகி யாதொன்றும் பேசாமலிருந்தனர். ஜனமே ஜயரே! யுதிஷ்டிரர், அதைக் கேட்டுத் துரியோதனன் செய்யக் கருதினதை அறிந்து திரௌபதிக்கு நம்பிக்கையான தூதனிடம், 'பாஞ்சாலியே! ரஜஸ்வலையாயிருக்கும் நீ அரையில் முடியப்பட்ட ஒற்றை வஸ்திரத்துடன் அழுதுகொண்டு சபைக்கு வந்து மாம னார்முன் நில். ராஜபுத்திரியாகிய நீ சபைக்கு வந்ததைக் கண்ட

---

1 'சுகதுக்கங்கள் தகுந்தவனுக்கும் தகாதவனுக்கும் வருகின்றன' என்பது கருத்து.

போது சபையோரெல்லோரும் துரியோதனனை மனத்தினால் திட்டுவார்' என்று சொல்லியனுப்பினார். ஜனமேஜய ராஜாவே! புத்திமானாகிய அந்தத் தூதன் திரௌபதியின் கிருகத்திற்கு விரைவாகச் சென்று தர்மபுத்திரருடைய உள்கருத்தைத் தெரிவித்தான். மகாத்மாக்களான பாண்டவர்கள் சோர்வும் துயரமுமுற்று சத்தியத்தினால் மிகக் கட்டப்பட்ட அங்கங்களுடையவர்களாய்ச் சிறிதும் கண்ணெடுத்துப் பாராமலிருந்தார்கள். பிறகு ராஜாவான துரியோதனன், அவர்கள் முகத்தைக் கண்டு மகிழ்ந்து தேர்ப்பாகனைப் பார்த்து, 'பிராதிகாமியே! அவளை இங்கேயே அழைத்து வா. அவள் முன்னிலையிலேயே கௌரவர்கள் மறுமொழி சொல்லுவார்கள்' என்று சொன்னான். அதன் பிறகு, துரியோதனன் கட்டளையில் அகப்பட்டவனும் திரௌபதியின் கோபத்திற்குப் பயந்தவனுமாகிய பிராதிகாமி யென்னும் ஸூதன், வெட்கத்தை விட்டுச் சபையோரை நோக்கி, 'திரௌபதிக்கு நான் என்ன சொல்வது?' என்று திரும்பவும் கேட்டான்.

அப்போது துரியோதனன், 'துச்சாஸனா! புத்தியில்லாத இந்த என் ஸூத புத்திரன் விருகோதரனுக்கு நடுங்குகிறான். நீயே நேரில் போய்த் திரௌபதியைப் பிடித்துக்கொண்டு வா. சுதந்திரம் தப்பின பகைவர்கள் உன்னை என்ன செய்வார்கள்?' என்று சொன்னான். ராஜபுத்திரனாகிய துச்சாஸனன், தன் தமையனுடைய கட்டளையைக் கேட்டவுடன, சபையிலிருந்து எழுந்து சிவந்த கண்களுடன் மகாரதர்களான பாண்டவர்களின் கிருகத்திற் பிரவேசித்து ராஜகுமாரியான திரௌபதியைப் பார்த்து, 'ஓ! பாஞ்சாலி! வா; வா; ஓ! கிருஷ்ணையே! நீ ஜயிக்கப்பட்டாய்; வெட்கத்தை விட்டுத் துரியோதனனைக் காணக்கடவாய். தாமரையிதழ்போன்ற நீண்ட கண்களையுடையவளே! கௌரவர்களைச் சேர். தர்மத்தினால் அடையப்பட்டிருக்கிறாய். சபைக்கு வா' என்று சொன்னான். பிறகு, மிக்க துயரமுற்ற அந்தத் திரௌபதி எழுந்து நிறம் மாறின தன் முகத்தைக் கையினால் துடைத்துக்கொண்டும் அழுதுகொண்டும் கௌரவ சிரேஷ்டனும் முதியோனுமான திருதராஷ்டிர மகாராஜனுடைய ஸ்திரீகளிருக்குமிடத்திற்கு ஓடினாள். பிறகு துச்சாஸனன் கோபத்தோடு அவளைப் பார்த்துக் கர்ஜித்துக்கொண்டு விரைவாக எதிரில் ஓடி வந்து, நீண்டும் இருண்டும் அலைகள் போலப் படிப்படியாயுமிருக்கும் கூந்தல்களில் ராஜபத்தினியான திரௌபதியைப் பிடித்தான். ராஜசூயமென்னும் மகாயாகத்தின் அவபிருத ஸ்நான காலத்தில் மந்திரங்களால் பரிசுத்தமான ஜலத்தை அபிஷேகஞ்செய்யப்பெற்ற திரௌபதியின் கூந்தல்கள்

திருதராஷ்டிரன் மகனால் பாண்டவர்களின் பராக்கிரமத்தை அவமதித்துப் பலாத்காரமாகத் தொடப்பட்டன. அந்தத் துச்சாஸனன் மிக நீண்ட கூந்தலையுடைய அந்தத் திரௌபதியை, நாதர்களுள்ளவளாயிருந்தும் அநாதையைப்போல இழுத்துச் சபையினருகிற் கொண்டுவந்து வாழைமரத்தைக் காற்று அலைப்பதுபோல அலங்கோலமாக இழுத்தான். அவள் இழுக்கப்படும்போது கொடிபோன்ற உடம்பு குன்றி, 'புத்தியில்லாதவனே! அயோக்கியனே! நான் ரஜஸ்வலையாயிருக்கிறேன். எனக்கு ஒற்றை வஸ்திரமேயுள்ளது; என்னைச் சபைக்குக் கொண்டுபோகத்தகாது என்று மெல்லச் சொன்னாள். துச்சாஸனன், அப்போது திரௌபதியைக் கறுத்த கூந்தல்களில் பலாத்காரமாகப் பிடித்துக்கொண்டு, [1] 'கிருஷ்ணனையும் ஜிஷ்ணுவையும் ஹரியையும் நரனையும் தன்னைக் காப்பதற்காக யாஜ்ஞஸேனி கூவுகிறாள். யஜ்ஞஸேனன் மகளே! ரஜஸ்வலையாகத்தானிரு; ஒற்றை வஸ்திரத்தோடிரு; அல்லது, வஸ்திரமில்லாமலேயிரு, ஆட்டத்தில் ஜயிக்கப்பட்டுப் போனாய்; தாசியாகச் செய்யப்பட்டாய்; உன் தகுதிப்படி தாசிகளிற் சேர்ந்திருக்க வேண்டும்' என்று சொன்னான். கூந்தல் விரிந்தும் பாதி வஸ்திரம் அவிழ்ந்தும் துச்சாஸனனால் அலைக்கப்பட்ட திரௌபதி வெட்கமுற்றுக் கோபத்தினால் உள்கொதிப்புற்றவளாகிப் பின் வரும் சொல்லை மெல்லச் சொல்லலானாள் :—'இந்தச் சபையோரனைவரும் சாஸ்திரங்களை ஓதி ஒழுக்கத்தோடிருப்பவர்கள். எல்லாரும் இந்திரனுக் கொப்பானவர்கள். இவர்களெல்லாரும் எனக்குக் குருவைப்போன்றவர்களும் குருக்களுமாயிருப்பவர்கள். அவர்களின்முன் நான் இவ்வாறு நிற்கமுடியவில்லை; கொடுஞ்செய்கைக்காரா! கெட்ட நடையுள்ளவனே! என்னை வஸ்திரம் போகும்படி செய்யாதே; என்னை இழுக்காதே! இந்திராதி தேவர்கள் உனக்குத் துணையாக வந்தாலும் ராஜபுத்திரர்களான பாண்டவர்கள் உன்னைப் பொறுக்கமாட்டார்கள். மகாத்மாவான தர்மபுத்திரர் தர்மத்தை விடாதவர். தர்மமானது யாவர்க்குந் தெரியாது; தெரிந்தவர் மட்டுமே அறியக்கூடியது. என் கணவர் விஷயத்தில் குணங்களை யல்லாமல் அணுவளவு குற்றத்தையும் வாக்கினாற் சொல்லவும் கருதேன். ரஜஸ்வலையான என்னைக் கௌரவ வீரர்களின் நடுவில் நீ இழுப்பது மிகவுங் கெட்ட செய்கை. இந்தச் சபையில் ஒருவனும் உன்னை இகழவில்லை. உன் எண்ணத்தையே இவர்கள் அங்கீகரித்

1 ஒவ்வொருவரையும் இரண்டு பெயர்களால் அவள் சொன்னதாகக் கூறிப் பரிகாசஞ் செய்கிறான்.

திருக்கின்றனரென்பது திண்ணம். சீ! பரத வம்சத்தவர்களில் தர்மமும் க்ஷத்திரியர்களுடைய ஒழுக்கமும் அழிந்துபோயின. கௌரவர்களின் தர்மத்தின் வரை தப்பிப்போனதை இச்சபையில் கௌரவர்களனைவரும் பார்த்திருக்கின்றனர். மகாத்மாக்களான துரோணருக்கும் பீஷ்மருக்கும் இந்த விதுரருக்கும் திருதராஷ்டிர மகாராஜாவுக்கும் விவேகமில்லையே! அதனாலேயே கௌரவர்களில் மூத்தவர்களும் சிறந்தவர்களுமான இவர்கள் இந்தக் கொடிய பாவத்தைக் காணாமலிருக்கின்றனர்' என்றாள். அழகான இடையுள்ள அந்தத் திரௌபதி அவ்வாறு அழுது கொண்டே கிளம்பி, கோபமுற்ற தன் கணவர்களைக் கடைக்கண்ணால் பார்த்து முன்னமே கோபத்தினால் எரிக்கப்பட்ட தேகமுள்ள அவர்களை அந்தப் பார்வையினால் தூண்டிவிட்டாள். வெட்கத்தோடும் கோபத்தோடும் பார்த்த திரௌபதியின் பார்வையினால் அவர்களுக்குண்டான துயரம் ராஜ்யமும் தனமும் சிறந்த ரத்னங்களும் கவரப்பட்டதனாலும் உண்டாகவில்லை. துச்சாஸனன், அசக்தர்களான தன் கணவர்களை நோக்குகிற திரௌபதியைக் கண்டு வேகமாக அலைத்து, மூர்ச்சித்தவள்போன்ற அவளைப் பார்த்து, இரைந்து சிரித்துத் தாசி யென்று அழைத்தான். கர்ணனும் மிக மகிழ்ந்து இரைந்து சிரித்துத் துச்சாஸனன் சொன்னதைச் சிலாகித்தான். அவ்வாறே, காந்தார தேசத்தரசனாகிய சகுனியும் துச்சாஸனனைப் புகழ்ந்தான். அவ்விருவரையும் துரியோதனனையும் தவிர அந்தச் சபையிலிருந்த மற்றவர்களுக்கு சபையில் திரௌபதி இழுக்கப்படுவதைக் காண்பது மிக்க துயரமாயிருந்தது.

பீஷ்மர், 'பாக்கியமுள்ளவளே! தனக்குத்தான் சுதந்திரமில்லாதவன் அயலானுடைய பொருளைப் பந்தயம் வைக்கமுடியாதென்பதையும் பெண்ணானவள் கணவனுக்குட்பட்டவளென்பதையும் பார்க்கும்போது, தர்மம் அறியக்கூடாமலிருப்பதனால் நீ கேட்ட இந்தக் கேள்விக்குச் சரியாகப் பகுத்து மறுமொழி சொல்ல என்னால் முடியவில்லை. யுதிஷ்டிரன் செல்வம் நிறைந்த பூமியனைத்தையும் விட்டாலும் விடுவனேயன்றித் தர்மத்தை விடான். நான் ஜயிக்கப்பட்டேனென்று அவனே சொன்னான். அதனால் இதில் ஒரு நிச்சயமும் நான் சொல்ல முடியவில்லை. சகுனி சூதாட்டத்தில் மனிதர்களுள் ஒப்பற்றவன். குந்தி புத்திரனான யுதிஷ்டிரன் [1] அவனால் இஷ்டப்படி விடப்பட்டான். அந்த வஞ்சகத்தை யுதிஷ்டிரன் அறியவில்லை. அதனால் உன் இந்தக் கேள்விக்கு நான் மறுமொழி கூறாமலிருக்கிறேன்'

1 இஷ்டமிருந்தால் உன்னைப் பந்தயம் வைக்கலாமென்றுதான் சகுனி சொன்னான்.

என்று சொன்னார். திரௌபதி, 'சூதில் தேர்ந்தவர்களும் அயோக்கியர்களும் கெடுநினைவுள்ளவர்களும் சூதிலேயே ஊக்க முள்ளவர்களுமான மோசக்காரர்கள் அதிக ஜாக்கிரதையெடுத்துக்கொள்ளாத ராஜாவைச் சபையில் அழைத்தபிறகு அவர் இஷ்டப்படி விடப்பட்டவராவது எப்படி? கெட்ட எண்ணத்துடன் மோசத்துக்கே ஆரம்பித்த எல்லாரும் சேர்ந்து, மோசமறியாதவரும் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் சிரேஷ்டருமான தர்மராஜரை ஜயித்த பிறகுதான அவர் இந்தப்[1] பந்தயத்தை ஒப்புக்கொண்டார். தங்கள் பெண்களுக்கும் மருமக்களுக்கும் அதிகாரியாயுள்ள இந்தக் கௌரவர்கள் சபையிலிருக்கின்றனர். நீங்களெல்லாரும் இந்த என் கேள்வியை ஆராய்ந்து பார்த்துச் சரியான மறுமொழி கூறுங்கள். [2]பெரியோர்களில்லாதது சபையன்று; தர்மத்தை உரையாதவர் பெரியோர்களுமல்லர்; உண்மையில்லாதது தர்மமுமன்று; கபடம் சேர்ந்தது உண்மையுமன்று' என்று சொன்னாள். அவ்வாறு சொல்லிப் பரிதாபப்படும்படி அழுதுகொண்டு அசக்தர்களான தன் கணவர்களை நோக்கும் திரௌபதியைப் பார்த்துத் துச்சாஸனன் கொடியவையும் கேட்பதற்கு இனிமையில்லாதவையும் வெறுக்கத்தக்கவையுமான சொற்களைச் சொன்னான். இழுக்கப்பட்டவளும் அவ்வாறு செய்யப்படத்தகாதவளும் ரஜஸ்வலையாயிருப்பவளும் மேலாடை விழுந்துபோனவளுமான திரௌபதியையும் தர்மராஜாவையும் கண்டு மிகவும் மனம் நொந்த விருகோதரன் கோபமுற்றான்.

---

## தொண்ணூறுவது அத்தியாயம்
## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

---

**(பீமனும் விகர்ணனும் கூறியதும், துச்சாஸனன் திரௌபதியின் துகிலுரிந்ததும், கிருஷ்ணனுடைய அனுக்கிரகத்தினால் அவளுக்கு வஸ்திரம் வளர்ந்ததும், விதுரர் நீதிமொழி கூறியதும்)**

பீமசேனன் 'ஓ! யுதிஷ்டிரரே! சூதாடுகிறவர்களின் வீடுகளில் தாஸிகளிருக்கின்றனர். அவர்களைக்கூடப் பந்தயம் வைத்தாடுவதில்லை. அவர்களிடத்திலும் தயையுண்டு. காசிராஜன்

---

1 மூலத்தில 'கைதவம்' என்றிருக்கிறது; கைதவம்=வஞ்சனை.

2 'துரியோதனனிடம் பயந்து தந்திரமாகப் பேசுவது சத்தியமாகாது; சத்தியம் தவறினபிறகு தர்மமில்லை; தர்மஞ் சொல்லாதவர்கள பெரியோரல்லர்; பெரியோரில்லாதது சபையே யன்று' என்பது கருத்து.

முதலான அநேக அரசர்கள் காணிக்கையாகக் கொண்டுவந்து கொடுத்த உயர்ந்த பொருள்கள், ரத்னங்கள், வாகனங்கள், கவசங்கள், ஆயுதங்கள் முதலியவைவையும், ராஜ்யமும், உமது சரீரமும் நாங்களும் எதிரிகளால் சூதினால் எடுத்துக்கொள்ளப்பட்டோம்; எனக்குக் கோபமுண்டாகவில்லை; ஏனெனில், எங்களுடைய எல்லாவற்றிற்கும் நீர்தாம் அதிகாரி. திரௌபதியைப் பந்தயம் வைத்ததைமாத்திரம் அக்கிரமமென்று நினைக்கிறேன். இந்த நிலைமைக்குத்தகாத இந்தச் சிறுமி, பாண்டவர்களை யடைந்து, அற்பர்களும் கொடியவர்களும் புத்தியில்லாதவர்களுமான கௌரவர்களால் உம் காரணமாகவன்றோ துன்பப்படுகிறாள்? அரசரே! இவளுக்காக இந்தக் கோபத்தை உம்மேல் போடுகிறேன். உமது கைகளிரண்டையும் கொளுத்தப்போகிறேன். சகதேவா! அக்னியைக் கொண்டுவா' என்று சொன்னான். அதைக் கேட்ட அர்ஜுனன், 'பீமசேனா! இதற்குமுன் நீ இவ்வகையான பேச்சுக்களைப் பேசுகிறவனல்லன். கொடியவர்களான நமது பகைவர்களால் உனக்குத் தர்மத்திலிருந்த மரியாதைகூட அழிக்கப்பட்டதென்பது நிச்சயம். பகைவர்களின் எண்ணம் நிறைவேறும்படி செய்யலாகாது. தர்மமே சிறந்தது; அதையே செய். தர்மிஷ்டரும் ஜ்யேஷ்டருமான சகோதரரை மிஞ்சுவது எவனுக்குத் தகும்? பிறரால் அழைக்கப்பட்ட ராஜாவானவர் க்ஷத்திரியனுடைய விரதத்தை நினைத்து அயலான் விருப்பத்தை அனுசரித்து ஆடினார். அது நமக்குப் பெரும் புகழைத் தருவது' என்று சொன்னான். பீமசேனன், 'தனஞ்சய! இவ்வாறு இவர் தர்மமாகச் செய்ததை நான் அறியாமலிருப்பேனாயின் இவர் இரண்டு கைகளையும் சேர்த்து பலாத்காரமாய் எரிகிற நெருப்பில் கொளுத்தியிருப்பேன்' என்று சொன்னான். அந்தப் பாண்டவர்கள் அவ்வாறு துக்கப்பட்டிருப்பதையும் பாஞ்சாலி இழுக்கப்படுவதையுங் கண்டு திருதராஷ்டிரன் புத்திரனாகிய விகர்ணன், 'ஓ! அரசர்களே! திரௌபதி சொன்ன சொல்லுக்கு விவரித்து மறுமொழி கூறுங்கள். கேள்விக்கு மறுமொழி கூறாவிடின் நமக்கு நரகம் உடனே வரும். கௌரவர்களுக்குள் மிக்க வயது முதிர்ந்தவர்களாகிய பீஷ்மரும் திருதராஷ்டிரருமாகிய இவ்விருவரும் சேர்ந்திருந்தும் ஒன்றும் சொல்லாமலிருக்கின்றனர். மகா புத்திசாலியான விதுரரும் ஒன்றும் சொல்லவில்லை. எல்லாருக்கும் ஆசாரியர்களாகிய துரோணர் கிருபர் இவ்விரண்டு பிராமணோத்தமர்களுங்கூடக் கேள்விக்கு மறுமொழி ஏன் கூறவில்லை? எல்லாத் திசைகளிலிருந்தும் வந்துசேர்ந்த மற்ற அரசர்களும் விருப்பையும் வெறுப்பையும் விட்டுத் தங்களுக்குத்

தெரிந்த அளவு சொல்லலாம். அரசர்களே! சிறந்தவளான திரௌபதி பலமுறை சொன்ன சொல்லை ஆராய்ந்து பார்த்து, யாருக்கு என்ன அபிப்பிராயமோ அந்தப்படி மறுமொழி சொல்லுங்கள்' என்று சொன்னான். அவன் இவ்வாறு அந்தச் சபையிலுள்ளவர்களெல்லாரையும் பார்த்துப் பலமுறை கூறினான். அவ்வரசர்கள் சரியென்றாவது பிழையென்றாவது அவனுக்குச் சொல்லவில்லை. விகர்ணன் அவ்வரசர்களனைவரையும் பார்த்து அவ்வாறு பலமுறை சொன்னபின் கையினால் கையைப் பிசைந்து பெருமூச்செறிந்துகொண்டு பின்வருமாறு சொல்லலானான்: 'அரசர்களே! இந்தச் சொல்லுக்கு நீங்கள் மறுமொழி சொல்லுங்கள்; அல்லது எந்தக் காரணத்தினாலாவது சொல்லாமலிருந்தாலும் இருங்கள். கௌரவர்களே! இந்த விஷயத்தில் நான் எதைச் சரியென்று நினைக்கிறேனோ அதைச் சொல்லப்போகிறேன். புருஷ சிரேஷ்டர்களே! வேட்டைகள், சூதாட்டம், சிற்றின்பத்தில் மிக்க பற்று இந்நான்கும் அரசர்களுக்கு விசனங்களென்று சொல்லுகின்றனர். இவற்றில் பற்றுள்ள மனிதன் தர்மத்தை விட்டிருப்பான். எந்த நிலைமையிலிருக்கும் மனிதன் செய்த செய்கையை உலகத்தார் ஏற்றுக்கொள்ளமாட்டார்களோ அவ்வகையான சூதால் அழைக்கப்பட்டுச் சூதாட்டமென்னும் விசனத்தில் அகப்பட்டுக் கொண்ட தர்மராஜாவினால் திரௌபதியைப் பந்தயமாக வைப்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. குற்றமற்ற இந்தத் திரௌபதி பாண்டவர்களெல்லாருக்கும் பொதுவானவள். மேலும், இந்தப் பாண்டவரான தர்மராஜர் தம்மைத் தோற்றபிறகு இவளைப் பந்தயம் வைத்திருக்கிறார். சகுனி திரௌபதியைப் பந்தயம் வைக்க விரும்பி அவள் பெயரைக் கூறினான். இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்கையில் இவளை ஜயிக்கப்பட்டவளாக நான் நினைக்கவில்லை' என்றான். இதைக் கேட்டவுடன், விகர்ணனைப் புகழ்வதும் சகுனியை இகழ்வதுமாயிருந்த சபையோரின் பேரொலி உண்டாயிற்று. அந்தக் கோஷம் ஓய்ந்தவுடன், கோபம் மிகுந்த கர்ணன் அழகான கையைத் தூக்கிக்கொண்டு பின்வருமாறு சொல்லலானான்:

'விகர்ணா! இதில் அநேகம் கெடுதல்கள் காணப்படுகின்றன. அரணியிலுண்டான அக்கினிபோல நீ எதில் பிறந்தாயோ அதையே அழிப்பதற்கு இருக்கிறாய். இந்தச் சபையோர் கிருஷ்ணையினால் கேள்விகள் கேட்கப்பட்டும் யாதொன்றும் சொல்லாமலிருக்கின்றனர். திரௌபதி தர்மத்தினாலேயே ஜயிக்கப்பட்டவளென்று இவர்கள் நினைக்கின்றனர். திருதராஷ்டிர புத்திரனே! நீ மட்டும் வெறுஞ் சிறுபிள்ளைத்தனத்தினால் [1] வெடித்துப் பேசுகிறாய். சிறுவனாகிய நீ சபை நடுவில்

1 அடங்காமற் பேசுகிறாய்.

பெரியவன்போலப் பேசுகிறு யன்றோ? 'துரியோதனனுக்கு இளையவனே! ஜயிக்கப்பட்ட திரௌபதியை ஜயிக்கப்படாதவ ளென்று சொல்வதனால் நீ தர்மத்தைச் சரியாக அறியவில்லை. உன் புத்தி மிகக் குறைவானது. திருதராஷ்டிர புத்திரனே! பாண்டவர்களில் மூத்தவனாகிய யுதிஷ்டிரன் எல்லாப் பொருள் களையும் சபையில் வைத்துவிட்டபோது திரௌபதி மட்டும் ஜயிக்கப்படவில்லையென்று நீ நினைப்பதெப்படி? பரத சிரேஷ் டனே! அந்தத் திரௌபதியும் எல்லாச் சொத்திலும் அடங்கின வள்தானே? இப்படி நியாயமாக ஜயிக்கப்பட்ட திரௌபதியை ஜயிக்கப்படவில்லை யென்று நீ நினைப்பதெப்படி? திரௌபதியை வாக்கினால் சகுனி சொன்னதுண்டு. பாண்டவர்களும் ஒப்புக் கொண்டனரே. இவளை ஜயிக்கப்படாதவளாக நீ நினைத்த கார ணம் யாது? ஒற்றை வஸ்திரத்தோடு இவள் சபைக்குக் கொண்டு வரப்பட்டது அதர்மமென்று நினைக்கிறாயா? அந்த விஷயத்தி லும் என்னுடைய முடிவான பேச்சைக் கேள். கௌரவனே! பெண்ணுக்கு ஒரு கணவன்தான் தேவர்களால் விதிக்கப்பட்ட வன். இவளோ அநேகருக்கு வசப்பட்டவள்; அதனால் வேசை என்பது நிச்சயம். இவளைச் சபைக்குக் கொண்டுவருவதும் இவள் ஒற்றை வஸ்திரம் உடுத்திருப்பதும் வஸ்திரமே யில்லாம லிருப்பதும் வியக்கத்தக்கன அன்றென்று நான் நினைக்கிறேன். இந்தப் பாண்டவர்களின் பொருள்கள் அனைத்தும் இவளும் இந்தப் பாண்டவர்களும் எல்லாம் தர்மமாகவே சகுனியினால் ஜயிக்கப்பட்ட உடைமைகள். துச்சாஸனா! இந்த விகர்ணன் மிகச் சிறியவன்; தெரிந்தவன்போலப் பேசுகிறான். பாண்டவர் களின் வஸ்திரங்களையும் திரௌபதியின் வஸ்திரத்தையும் கொண்டு வா' என்றான்.

ஜனமேஜயரே! அதைக் கேட்டவுடன், பாண்டவர்களனை வரும் தங்கள் மேல்வஸ்திரங்களை எறிந்துவிட்டு சபையில் உட் கார்ந்தனர். அரசரே! அதன் பிறகு துச்சாஸனன், சபை நடுவில் திரௌபதியின் வஸ்திரத்தைப் பலாத்காரமாக அவிழ்த்து இழுக்கத் தொடங்கினான். வஸ்திரம் இழுக்கப்படும் போது திரௌபதி மிக்க துயரத்துடன் அழுது, 'முற்காலத்தில் மகாத்மாவான வசிஷ்ட மகரிஷி பெரிய ஆபத்து வரும்போது பகவானான ஹரியை நினைக்கவேண்டுமென்று சொல்லியிருப்பது எனக்குத் தெரியும்' என்று மனத்தில் நிச்சயித்து சரணாகத வத்ஸலரான கிருஷ்ணனை நினைத்தாள். 'சங்கம் சக்கரம் கதை களைக் கையில் ஏந்தினவரே! துவாரகையிலிருப்பவரே! அச்சுதா! கோவிந்தா! தாமரைக்கண்ணா! சரணமடைந்த என்னைக் காப்பாற்றும். ஆ! கிருஷ்ணா! துவாரகாவாஸா!

யாதவர்களைச் சந்தோஷப்படுத்துகிறவரே! எங்கிருக்கிறீர்? இந்நிலைமையை யடைந்தவளும் அநாதையுமான என்னை ஏன் கவனியாமலிருக்கிறீர்? கோவிந்தா! துவாரகாவாசியே! கிருஷ்ணா! கோபீ ஜனப்பிரியா! கேசவா! கௌரவர்களால் அவமதிக்கப்படுகிற என்னை நீர் ஏன் அறியவில்லை? ஓ! லோகநாதா! ஓ! ஸ்ரீபதியே! ஆய்ப்பாடியைக் காப்பவரே! துன்பத்தை யழிப்பவரே! ஜனார்த்தனா! கௌரவர்களென்னும் கடலில் மூழ்கின என்னைக் கை தூக்கிவிடும். கிருஷ்ணா! கிருஷ்ணா! மகாயோகியே! உலகத்துக்கெல்லாம் அந்தர்யாமியே! உலகத்தைப் படைப்பவரே! கோவிந்தா! கௌரவர்களின் நடுவில் கஷ்டப்பட்டுச் சரணம் அடைந்த என்னைக் காப்பாற்றும்' என்றாள். ஜனமேஜய ராஜாவே! அந்தச் சிறந்த பெண்ணான திரௌபதி மூன்று லோகங்களுக்கும் ஈசுவரரான ஹரியாகிய கிருஷ்ணனை இவ்வாறு இடைவிடாமல் நினைத்து மிக்க துயரத்தினால் முகத்தை மூடிக்கொண்டு அழுதாள். அப்போது திரௌபதியின் வஸ்திரத்தை இழுக்க இழுக்க, கிருஷ்ணனுடைய அனுக்கிரகத்தினால் அதைப்போல இன்னும அநேக வஸ்திரங்கள் உண்டாயின. ஜனமேஜய ராஜாவே! தர்மத்தைக் காப்பாற்றினதனால் மறுபடியும் பல பல நிறங்களுள்ளவையும் சுத்த வெண்மையுமான அநேக வஸ்திரங்கள் நூற்றுக்கணக்காக உண்டாகிக்கொண்டேயிருந்தன. பிறகு, சபையில் கேட்க மிகக் கடினமான 'கலகல' என்னும் சத்தம் உண்டாயிற்று. அந்தச் சபையிலுள்ள அரசர்களனைவரும் உலகத்திலில்லாத அந்தப் பெரிய ஆச்சரியத்தைக் கண்டு துச்சாஸனனையிகழ்ந்து திரௌபதியைப் புகழ்ந்தனர். கௌரவர்களைப் பற்றி, 'சீ சீ!' என்ற இழிவான சொல்லைச் சொல்லினர். சபை நடுவில் வஸ்திரங்களின் ராசி குவிந்துபோனபோது துச்சாஸனன் களைத்து வெட்கி உட்கார்ந்துவிட்டான். அந்த அரசர்கள் நடுவில் பீமன் கோபத்தினால் துடிக்கும் உதடுகளுடன் கையைப் பிசைந்து பெருங்குரலோடு சபதம் செய்தான்.

பீமன், 'உலகத்திலுள்ள க்ஷத்திரியர்களனைவரும் மற்ற மனிதர்கள் இதற்குமுன் சொல்லாததும் இனியும் யாரும் சொல்லப்போகாததுமான இந்த என் சொல்லைக் கேளுங்கள். பூமிக்கு ஈசுவரர்களே! நான் இதைச் சொல்லி இவ்வாறு செய்யாமற் போவேனாயின், அதாவது—பாவியும் துஷ்டபுத்தி யுள்ளவனும் பரத வம்சத்தவரில் இழிவானவனுமாகிய இந்தத் துச்சாஸனுடைய மார்பை யுத்தத்தில் பிளந்து பலாத்காரமாக இவன் ரத்தத்தைக் குடியாமல் விடுவேனாயின், என் முன்னோர்களான கூடஸ்தர்கள் சென்ற கதிக்கு நான் செல்லாமற் போகக்கடவேன்'

என்றான். கொடியதும் மயிர்பொடிக்கச்செய்வதுமாகிய பீமனுடைய அந்தச் சொல்லைக் கேட்டுச் சபையோர் துச்சாஸனனை நிந்தித்துப் பீமனுக்கு மிகுந்த கௌரவத்தைச் செய்தனர். அங்குள்ள யோக்கியர்கள் திருதராஷ்டிரனை இகழ்ந்து திரௌபதியின் கேள்விக்குக் கௌரவர்கள் சரியான மறுமொழி சொல்லவில்லையென்று கூவினர். பிறகு, எல்லாத் தர்மங்களுந் தெரிந்த விதுரர் கைகளைத் தூக்கிச் சபையோரை அடக்கிப் பின்வருமாறு சொல்லலானார்:

'திரௌபதியானவள் கேள்வி கேட்டு இவ்வாறு அநாதை போலக் கதறுகிறாள். சபையோரே! அவள் கேள்விக்கு நீங்கள் மறுமொழி கூறவில்லை. இதனால் தர்மம் கெடுக்கப்படுகிறது. கேள்வியானது ஜ்வலிக்கிற அக்னிபோலச் சபையில் விழுந்திருக்கிறது. சபையிலுள்ளவர்கள் சத்தியத்தினாலும் தர்மத்தினாலும் அதை அவிக்கவேண்டும். ஆதலால், யோக்கியனான மனிதன் தர்மமுள்ள கேள்விக்கு உண்மையோடு மறுமொழி கூறவேண்டும். காமக்குரோதங்களின் வன்மையைத் தாண்டினவர்கள் அந்தக் கேள்விக்கு மறுமொழி சொல்லவேண்டும். வேந்தர்களே! விகர்ணன் தன் புத்திக்குத் தக்கபடி கேள்விக்கு மறுமொழி சொன்னான். நீங்களும் அறிவுக்கெட்டினவரையில் அந்தக் கேள்விக்கு மறுமொழி கூறுங்கள். சபையிலிருப்பவன் தர்மத்தையறிந்தும் கேள்விக்கு மறுமொழி கூறாமலிருப்பானாயின் பொய் சொல்வதனாலுண்டாகும் பயனில் பாதியை அனுபவிப்பான். சபையிலிருப்பவன் தர்மந்தெரிந்தும் தப்பாக மறுமொழி கூறுவானாயின், அவன் பொய்யின் முழுப் பயனையும் அடைவானென்பது நிச்சயம். இந்த விஷயத்தில் பிரகலாதருக்கும் ஆங்கிரஸரென்னும் முனிவருக்கும் நடந்த ஸம்வாதமாகப் பெரியோர் சொல்லும் பழமையான இதிகாசத்தை நான் சொல்லுகிறேன்.

'[1] பிரகலாதனென்னும் ஓர் அசுரசிரேஷ்டனிருந்தான். அவனுடைய புத்திரனான விரோசனனென்பவன் ஒரு கன்னிகைக்காக அங்கிரஸின் புத்திரனாகிய சுதன்வாவை நெருங்கித் தொடர்ந்தான். அப்போது அந்தக் கன்னிகையை அடைவதற்காக அவ்விருவருக்கும் 'நான் பெரியவன்; நான் பெரியவன்' என்று அவ்விஷயத்தில் [2] உயிர்ப் பந்தயம் உண்டானதென்று யாம் கேட்டிருக்கிறோம். அவர்களுள் யார் பெரியவனென்ற கேள்வியைப்பற்றி விவாதமுண்டாயிற்று. அவ்விருவரும் பிரகலாதனிடம் சென்று, 'எங்களில் எவன் பெரியவன்?

1 இந்தக் கதையை உத்யோக பர்வம் 35-வது அத்தியாயத்தில் காண்க.

2 'தோற்றவன் உயிருள்ளவரையில் ஜெயித்தவனுக்கு அடிமைசெய்வது' என்பது பழைய உரை.

இந்தக் கேள்விக்குப் பொய்யில்லாமல் மறுமொழி சொல்லும்' என்று கேட்டனர். அந்தப் பிரகலாதன் சுதன்வாவைக் கண்டு மறுமொழி சொல்வதற்குப் பயந்தான். சுதன்வா கோபித்துப் பிரம்ம தண்டம்போல் ஜ்வலித்துக்கொண்டு பிரகலாதனைப் பார்த்து, 'பிரகலாதா! நீ பொய் சொன்னாலும் ஒன்றும் சொல்லாமலிருந்தாலும் இந்திரன் வஜ்ராயுதத்தினால் உன் தலையை நூறு சுக்காகும்படி அடிப்பான்' என்று சொன்னான். சுதன்வாவினால் அவ்வாறு சொல்லப்பட்டபோது பிரகலாதனென்னும் அசுரன் அரசிலை போல் நடுங்கிச் சிறந்த மகிமையுள்ள கசியபரிடம் கேட்கச் சென்றான். 'மகானுபாவரே! நீர் தாம் தேவாசுரர்களுடைய தர்மங்களையும் பிராம்மண தர்மங்களையும் அறிந்தவர். இந்தத் தர்மசங்கடத்தைக் கேளும்; கேள்விக்கு மறுமொழி சொல்லாதவனுக்கும் தப்பாக மறுமொழி சொல்லுகிறவனுக்கும் மறுமையில் வரும் உலகங்கள் யாவை என்பதை நான் கேட்கிறேன்; சொல்லும்' என்று கேட்டான். அதற்குக் கசியபர், 'தெரிந்திருந்தும் விருப்பினாலாவது வெறுப்பினாலாவது அச்சத்தினாலாவது கேள்விகளுக்கு உத்தரஞ் சொல்லாமலிருப்பவன் ஆயிரம் வருண பாசங்களைத் தன்மேல் மாட்டிக்கொள்ளுகிறான். நேரே கண்டவன் கண்டதைச் சரியாகச் சொல்லாமல் [1]மாட்டின் காதுபோல் ஆடிக்கொண்டு திரிவானாயின் அவன் ஆயிரம் வருணபாசங்களைத் தன்மேல் மாட்டிக்கொள்வான். அவனுக்கு ஒரு வருஷம் நிரம்பின பிறகு ஒரு பாசம் மேலே மாட்டப்படுகிறது. ஆதலால், தெரிந்தவன் சத்தியம் சொல்லவேண்டும். சத்தியந்தான் முக்கியமானது. எங்கே தர்மமானது அதர்மத்தினால் கெடுக்கப்பட்டு, எந்தச் சபையையடைகிறதோ அந்தச் சபையோர் தர்மத்தில் தைத்த ஆணியை எடுத்துவிடாவிடின் அவர்களே அந்த ஆணியினால் குத்தப்படுகின்றனர். தலைவன் பாதிப் பயனை அடைகிறான். செய்தவனுக்குக் கால் பாகம்; இகழத்தக்க காரியத்தை இகழாமலிருந்த சபையோருக்கு மற்ற கால் பாகம். நிந்திக்கத்தக்கவனை நிந்திப்பாராயின் தலைவனும் சபையோரும் பாவத்திலிருந்து விடப்படுகின்றனர். பாபம் செய்தவனைமட்டும் சாருகிறது. பிரகலாதா! தர்மத்தைக் கேட்கிறவனுக்கு எவர்கள் தப்பாக மறுமொழி கூறுவார்களோ அவர்கள் முன்னேழு பின்னேழு தலைமுறைகளையும் யாகப் பயன்களையும் தான தர்மங்களையும் அழிக்கின்றனர். பொருளைப் பறிகொடுத்தவனுக்கும் பிள்ளை இறந்தவனுக்கும் கடன்காரனுக்கும் காரியம் கெட்டவனுக்கும் கணவனில்லாத

1 'இரண்டு பக்ஷத்திலும் சேருவது' என்பது பழையவுரை.

பெண்ணுக்கும் ராஜாவினால் பிடித்து வருத்தப்பட்டவனுக்கும் பிள்ளையில்லாதவளுக்கும் புலியினால் மோக்கப்பட்டவனுக்கும் மாற்றாளுள்ளவளுக்கும் சாட்சிகளால் கெடுக்கப்பட்டவனுக்கும் உள்ள துக்கங்களெல்லாம் சமானமானவையென்று தேவசிரேஷ்டர்கள் சொல்லுகின்றனர். அசத்தியஞ் சொல்லுகிறவன் மேற்சொன்ன எல்லாத் துக்கங்களையும் அடைகிறான். கண்ணால் கண்டதனாலும் கேட்டதனாலும் விஷயங்களை ஞாபகம் வைத்திருப்பவன் சாட்சியாகிறான். ஆதலால், உண்மை சொல்லுகிற சாட்சியானவன் அறம்பொருள்கள் கெடாமலிருப்பவன்' என்று சொன்னார். கசியபர் சொல்லியதைக் கேட்ட பிறகு, பிரகலாதன் தன் புத்திரனைப் பார்த்து, 'விரோசனா! உன்னைவிட சுதன்வா பெரியவன். அப்படியே அங்கிரஸ் என்னைவிடப் பெரியவர். சுதன்வாவின் தாய் உன் தாயைவிடப் பெரியவள். ஆதலால், இந்தச் சுதன்வாதான் உன் உயிருக்கு அதிகாரி' என்று சொன்னார். அதற்குச் சுதன்வா, 'நீ புத்திர சிநேகத்தைக்கூட விட்டுத் தர்மத்தில் நிலைநின்றாயாதலின் உன் புத்திரனை விட்டுவிடுகிறேன். இவன் நூறு வருஷ காலம் ஜீவித்திருக்கட்டும்' என்று சொன்னார். இந்தச் சிறந்த தர்மத்தைக் கேட்ட சபையோரனைவரும் திரௌபதியின் கேள்விக்கு எது சரியான மறுமொழியென்று நினைத்துப் பாருங்கள்' என்றார்.

விதுரர் சொல்லைக் கேட்டு அரசர்கள் ஒன்றும் சொல்லவில்லை. கர்ணன் துச்சாஸனனைப் பார்த்து, 'தாஸியான கிருஷ்ணையை வீட்டுக்கு அழைத்துப் போ' என்றான். நடுக்கத்தோடும் வெட்கத்தோடும் பாண்டவர்களைப் பார்த்து அழுது கொண்டிருக்கும் பரிதாபப்படத்தக்க திரௌபதியை சபை நடுவில் துச்சாஸனன் இழுத்தான்.

---

## தொண்ணூற்றோராவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

**(திரௌபதி சபையில் புலம்ப, பீஷ்மர் தாமொன்றும் சொல்ல முடியாமையையும் அவள் விஷயத்தில் தமக்குள்ள வருத்தத்தையுஞ் சொல்லித் திரௌபதி கேள்விக்கு யுதிஷ்டிரரை மறுமொழி கூறச்சொன்னது)**

துச்சாஸனனாலும் மனத்துயரத்தினாலும் பீடிக்கப்பட்டவளும் அப்படிப் பீடிக்கப்படத்தகாதவளுமான திரௌபதி, 'இந்தப் பலவானான துச்சாஸனன் பலாத்காரமாக இழுத்ததனால் சக்தியற்றவளாகச் செய்யப்பட்டேன். சபையிலுள்ள இந்தச்

குரு வம்சத்தோருக்கு நான் வந்தனஞ் செய்கிறேன். இந்தச் சூதாட்டம் நான் செய்ததன்று. இதற்கு முன் காரியத்தையும் பின் காரியத்தையும் நான் செய்யவில்லை. ஆதலால், இந்தக் குற்றம் எனக்கிருக்கலாகாது' என்று சொல்லிச் சபையில் விழுந்து யாவருக்கும் துயரமுண்டாகும்படி பின்வருமாறு புலம்பலானாள்.

'இதற்குமுன் சுயம்வர சபையில் வந்திருந்த அரசர்களால் காணப்பட்டது தவிர மற்றெங்கும் காணப்படாமலிருந்த நான் இப்போது அம்பலத்துக்கு வந்தேன். முன்னே வீட்டிலிருக்கும் போது காற்றுங் கதிரோனுங்கூட என்னைக் கண்டதில்லை. அந்த நான் இப்போது சபை நடுவில் ஜனக்கூட்டத்தில் காணப்படு கிறேன். முன் வீட்டிலிருக்கும்போது மேலே காற்றுப்பட்டாலும் பாண்டவர்கள் பொறுக்கமாட்டார்கள். அவர்களே இப்போது இந்தத் துராத்மாவான துச்சாஸனனால் நான் தொடப்படுவதைப் பொறுக்கின்றனர். மருமகளும் மகளும் கஷ்டப்படத்தகாதவளு மான நான் பிடிக்கப்படுவதை இந்தக் குரு வம்சத்தவரும் பொறுப்பது விபரீத காலமென்று நான் நினைக்கிறேன். கற் புள்ள சிறந்த பெண்ணாகிய நான் சபை நடுவில் இப்போது பிரவேசிக்கிறே னென்பதைவிடப் பெரிய இழிவு என்ன இருக் கிறது? அரசர்களின தர்மம் இப்போது எங்கே போயிற்று? முன்னோர்கள் கற்புள்ள பெண்ணைச் சபைக்குக் கொண்டுவருவ தில்லையென்று நாம் கேட்டிருக்கிறோம். முன்னோர்கள் செய்த தும் என்று மழியாததுமான அந்தத் தர்மம் கௌரவர்களிடத் தில் அழிந்துபோயிற்று. பாண்டவர்களுக்குப் பாரியையும் திருஷ்டத்யும்னன் சகோதரியும் கிருஷ்ணனுக்குத் தோழியும் கற்புள்ளவளுமான நான் இந்த ராஜசபைக்கு எப்படி வரலாம்? குரு வம்சத்தோரே! தர்மராஜருக்குத் தமக்குச் சரியான க்ஷத் திரிய வருணத்தில் பிறந்த பாரியையாகிய என்னைத் தாசியென் றுவது தாசியல்லவென்றுவது நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் சொன்னபடி செய்வேன். குரு வம்சத்தவர்களே! குரு வம்சத் தவர்களின் கீர்த்தியை அழிப்பவனாகிய இந்த அற்பன் என்னை மிக உறுதியாகப் பிடித்துத் துன்பப்படுத்துகிறான். அதை நான் வெகுநேரம் சகிக்க முடியாது. குரு வம்சத்து அரசர்களே! என்னை ஜயிக்கப்பட்டவளென்றோ ஜயிக்கப்படாதவளென்றோ எப்படி நீங்கள் நினைக்கிறீர்களோ அப்படி மறுமொழி கூறவிரும்பு கிறேன். உங்கள் சொற்படி செய்வேன்' என்று சொன்னாள்.

அதைக் கேட்ட பீஷ்மர், 'மேன்மை பொருந்தியவளே! முன் னமே சொல்லியிருக்கிறேன். உலகத்தில் தர்மத்தின் சிறந்த

வழியை அறிவது மிகத் தெரிந்த மகாத்மாக்களுக்கும் முடியாது. உலகத்தில் பலவான்ன மனிதன் எதைத் தர்மமாக நினைக்கிருனே அதுதான் தர்மமாகிறது. [1]மற்றது தர்மத்தின் கரையில் தடைப்பட்டு நிற்கிறது. மேலும், இந்தத் தர்மம் சூட்சுமமாயிருப்பதனுலும் அறிதற்கு அரிதாயிருப்பதனுலும் முக்கியமாயிருப்பதனுலும் உன்னுடைய இந்தக் கேள்விக்கு நிச்சயமாகப் பகுத்து மறுமொழி கூற என்னுல் முடியவில்லை. ஆனுல், இந்தக் குலத்துக்குச் சீக்கிரத்தில் அழிவு வருவது திண்ணம். அதற்குத் தக்கபடிதான் கௌரவர்களனைவரும் ஆசையையும் அறியாமையையுமே கைப்பற்றியிருக்கின்றனர். மேன்மையுற்றவளே! அப்படிப்பட்ட எங்களுக்கு நீ மருமகளாயிருக்கிருய். மேற்குலத்தோர்கள் விசனங்களினுல் மிகவும் பீடிக்கப்பட்டிருந்தபோதிலும் தர்மத்தின் மார்க்கத்தைவிட்டு நழுவுவதில்லை. பாஞ்சாலியே! துயரப்பட்டுக்கொண்டிருந்தும் தர்மத்தையே கவனிப்பதாகிய இந்தச் சிறந்த ஒழுக்கம் உனக்கே தகும். பெரியோர்களும் தர்மந்தெரிந்தவர்களுமாகிய இந்தத் துரோணர் முதலானவர்களும் உயிர்போனவர்கள்போலத் தலைகுனிந்து வெறுந் தேகங்களோடிருக்கின்றனர். இந்தக் கேள்விக்கு நிச்சயம் சொல்லவேண்டியவன் யுதிஷ்டிரனென்பது எனது அபிப்பிராயம். நீ ஜயிக்கப்பட்டவளென்ருவது ஜயிக்கப்படாதவளென்ருவது தானே வியக்தமாகச் சொல்லவேண்டியவன் அவன்' என்று சொன்னுர்.

---

## தொண்ணூற்றிரண்டாவது அத்தியாயம்

### த்யூத பர்வம் (தொடர்ச்சி)

---

**(துரியோதனன் முதலானவர்கள் பேசுவதும், துரியோதனன் திரௌபதிக்குத் தொடையைக் காண்பித்ததனுல் பாண்டவர்கள் துரியோதனன் கர்ணன் முதலானவர்களை வதஞ்செய்யப் பிரதிக்ஞை செய்ததும், துரியோதனன் முதலானவர்களை திரௌபதி சபித்தபோது ஆகாயத்தினின்று பூமாரி பொழிந்ததும்)**

அந்தத் தேவி [2]அன்றிற்பெடைபோல அவ்வாறு அழுது மிகுதியாகக் கதறுவதைக் கண்டும் அந்தச் சபையிலுள்ள அரசர்கள் துரியோதனனுக்கு அஞ்சி, சரியென்ருே அல்லது பிழை என்ருே ஒரு சொல்லும் சொல்லவில்லை. அரசர்களின் பிள்ளை

---

1 ஐசுவரிய பலமுள்ளவன் அதர்மத்தைத் தர்மமென்று சொன்னுலும் மறுக்கக் கூடவில்லையென்பது கருத்து. 2 'குரரி' என்பது மூலம்.

களும் பேரன்மார்களும் அவ்வாறு பேசாமலிருந்ததைக் கண்ட பொழுது, திருதராஷ்டிரன் மகன் பாஞ்சால ராஜபுத்திரியான திரௌபதியைப் பார்த்துப் புன்னகை நகைத்துக்கொண்டு பின் வருமாறு சொல்லலானான்: 'மேலான தைரியமுள்ளவளே! துருபத புத்திரியே! இந்த உன் கேள்வி உன் புருஷர்களாகிய பீமன், அர்ஜுனன், நகுலன், சகதேவன் இவர்களிடத்திலேயே இருக்கட்டும். உன்னிடமிருந்து வந்த சொல்லுக்கு இவர்களே மறுமொழி கூறட்டும். பாஞ்சாலியே! உன் விஷயத்தில் யுதிஷ்டிரனுக்கு யாதொரு உரிமையுமில்லையென்று பெரியோர்களின் நடுவில் சொல்லட்டும். எல்லாரும் தர்மராஜாவைப் பொய்யனுகச் செய்யட்டும். பாஞ்சாலி! (அப்போது) நீ தாசித்தனத்திலிருந்து விடப்படுவாய். தர்மத்திலிருப்பவனும் மகாத்மாவும் இந்திரனுக்கொப்பானவனுமாகிய தர்மபுத்திரன் 'உனக்கு அதிகாரியா, அல்லனு' என்பதைத் தானே சொல்லட்டும். இவன் சொன்னவுடனே இரண்டில் ஒன்றை அடையலாம். இந்தச் சபையிலிருக்கிற சிறந்த குணவான்களான கௌரவர்களனைவரும் உன் துயரத்தில் அகப்பட்டிருந்தும் உன் புருஷர்கள் பாக்கியம் குறைந்தவர்களாயிருப்பதை உண்மையாக அறிந்துதான் மறுமொழி சொல்லவில்லை' என்றுன். பிறகு, சபையோரனைவரும் கௌரவ ராஜாவான துரியோதனன் சொன்னதை முழுங்கிப் புகழ்ந்தார்; கூவிக்கொண்டு மேல் வஸ்திரங்களை எடுத்து விசிறினர். 'ஆ! ஆ!' என்ற துக்க சப்தமும் உண்டாயிற்று. மனத்தைக் கவருவதாகிய துரியோதனன் சொல்லைக் கேட்டபிறகு, சபையிலுள்ள கௌரவர்களுக்குச் சந்தோஷமுண்டாயிற்று. எல்லா அரசர்களும் கௌரவ சிரேஷ்டனுன துரியோதனன் தர்மமாக நடக்கிருனென்று அவனைக் கொண்டாடி அவன் மேல் அன்போடிருந்தனர். அவ்வரசர்களனைவரும், தர்மந் தெரிந்தவரான யுதிஷ்டிரரும் யுத்தத்தில் தோல்வியடையாத அர்ஜுனனும் பீமசேனனும் நகுல சகதேவர்களும் என்ன சொல்லப்போகிருர்களென்று மிக்க ஆவலோடு முகங்களைக் குறுக்காகத் திருப்பி ஏறிட்டுப் பார்த்திருந்தனர். அந்த ஒலி ஓய்ந்த பிறகு, பீமசேனன் அழகும் சிறப்புமுள்ளதும் சாந்தணியப் பெற்றதுமான கையை எடுத்துப் பேசலானுன்.

'சிறந்த மனமுள்ளவரும் மூத்தவருமாகிய இந்தத் தர்மராஜர் எங்களுக்கு அதிகாரியாக இல்லாமற்போனுல் இந்தக் கௌரவ வம்சத்தை நாங்கள் பொறுத்திருக்கமாட்டோம். எங்கள் புண்ணியங்களுக்கும் தவங்களுக்கும் உயிருக்குங்கூட அவரே அதிகாரி. அவர் தம்மைத் தோற்றதாக நினைக்கும்போது

நாங்களும் (எங்களைத்) தோற்றவர்தாம். காலால் பூமியை மிதிக்கும் மானிடத்தன்மையுள்ளவன் பாஞ்சாலியின் இந்தக் கூந்தலைத் தொட்டபிறகு உயிரோடு என்னிடத்திலிருந்து விடுபடமாட்டான். நீண்டும் திரண்டும் பரிகாயுதங்களைப்போன்றுமிருக்கும் என் இரு புஜங்களையும் பாருங்கள். இவற்றின் நடுவில் அகப்பட்ட பிறகு இந்திரனானாலும் விடப்படமாட்டான். தர்மமென்னும் கயிற்றினால் கட்டப்பட்டும் என் தமையனாரிடத்திலுள்ள மரியாதையினால் தடுக்கப்பட்டும் அர்ஜுனனால் அடக்கப்பட்டுமிருப்பதனால் இந்தத் துயரத்தை அனுபவிக்கிறேன். தர்மராஜரால் அனுமதி கொடுக்கப்பெற்றேனாயின் இந்தப் பாபிகளான திருதராஷ்டிர புத்திரர்களைச் சிங்கம் அற்ப மிருகங்களை அழிப்பதுபோலக் கைகளென்னும் கத்திகளால் துணித்துவிடுவேன்' என்று சொன்னான். அப்போது பீஷ்மரும் துரோணரும் விதுரரும், 'உன்னிடத்தில் எல்லாச் சக்தியும் இருப்பது தெரியும். இப்போது பொறுத்துக்கொள்' என்று பீமனுக்குச் சொன்னார்கள்.

கர்ணன, 'சிறந்த பெண்ணே! அடிமை, புத்திரன், பிறருக்குட்பட்ட பெண் இம்மூவரும் பொருளில்லாதவர்கள். நீ பொருளில்லாத தாசனுடைய மனைவி. உனக்கு நாதனுமில்லை. தாசனுடைய தனமெல்லாம் எஜமானனுடையது. நீ உள்ளே போய்த் துரியோதனனுடைய பரிவாரங்களைச் சேர். அதுதான் நீ செய்யவேண்டிய காரியம். மற்றது அவ்விடத்தில் கட்டளையிடப்படும். ஓ! ராஜபுத்திரியே! திருதராஷ்டிர புத்திரர்களெல்லாரும் உனக்கு எஜமானராகிறார்கள். பாண்டவர்களல்லர். சிறந்த பெண்ணே! யாரை அடைந்தால் சூதாடிப் பந்தயத்தினால் அடிமைத்தனம வராதோ அப்படிப்பட்ட மற்றொருவனைக் கணவனாக உடனே தேடிக்கொள். தாசியாகப் போனபிறகு தன்னிஷ்டப்படி புருஷர்களை வைத்துக்கொள்வது குற்றமாகாது. அஃது உனக்குத் தெரிந்திருக்கட்டும். யக்ஞசேனன் மகளே! நகுலன் பீமசேனன் யுதிஷ்டிரன் சகதேவன் அர்ஜுனன் ஆகிய எல்லோரும் தோற்றுப்போனார்கள். அதனால் நீ தாசியானாய். தங்களைத் தோற்றவர்கள் உனக்குக் கணவராகார்கள். பாஞ்சால ராஜனான துருபதன் பெண்ணாகிய இவளைச் சபை நடுவில் பந்தயம்வைத்தாடின தர்மராஜன் தன் பிறப்பின் பயனையும் பராக்கிரமத்தையும் ஆண்மையையும் நினைக்கவில்லையோ?' என்று சொன்னான். பீமசேனன் அதைக் கேட்டு மிகவும் பொறுதவனாகி ராஜாவை அனுசரித்துத் தர்மமென்னும் கயிற்றினால் கட்டப்பட்டுக் கர்ணனை எரிப்பவன்போல (ப்பார்த்து)க் கோபத்தினால் சிவந்த கண்களோடு துயரத்துடன் மிகப் பெரு

மூச்செறிந்தான். அவன், 'தர்மராஜரே! இந்தத் தேர்ப்பாகன் மகன்மேல் எனக்குக் கோபமில்லை. உண்மையாக அடிமைத் தொழில்தான் அவனிட்ட கட்டளை. நீர் இவளைப் பந்தயம் வைக்காமலிருப்பீராயின் பகைவர்கள் நம்மை இவ்வாறு பேசுவார்களா?' என்று தர்மராஜாவைப் பார்த்துச் சொன்னான்.

பீமசேனன் சொல்லைக் கேட்டவுடன் ராஜாவான துரியோதனன், மதிமயங்கி மௌனமாயிருந்த யுதிஷ்டிரரை நோக்கி, 'ஓ! அரசனே! பீமசேனனும் அர்ஜுனனும் நகுல சகதேவர்களும் உன்னுடைய கட்டளையை எதிர்பார்த்திருக்கின்றனர். கிருஷ்ணை ஜயிக்கப்படாதவளென்று நீ நினைக்கிறாயா? அவள் கேள்விக்கு மறுமொழி சொல்' என்று சொன்னான். தர்மராஜாவைப் பார்த்து இவ்வாறு சொன்னபிறகு, தன்னுடைய ஐசுவரியத்தின் கர்வத்தினால் மதிகெட்ட துரியோதனன் புன்னகையுடன் பாஞ்சாலியைப் பார்த்துப் பீமசேனனை அவமானப்படுத்துவதற்காகக் கர்ணனுடன் பரிகாசஞ்செய்து தன் வஸ்திரத்தை விலக்கி வாழை மரத்துக்கும் யானைத் துதிக்கைக்கும் ஒப்பானதும் வஜ்ராயுதத்துக்கு ஒப்பான திடமுள்ளதும் எல்லா லட்சணங்களும் பொருந்தியதுமான தன் [1] இடத்தொடையைத் திரௌபதி பார்க்க அவளுக்குக் காண்பித்தான். பீமசேனன் அவனைப் பார்த்துச் சிவந்த கண்களை விழித்து, அரசர்களின் நடுவில் அந்தச் சபையோரெல்லாம் கேட்கும்படி, 'ஓ! துரியோதனா! விருகோதரன் பெரும் போரில் உன்னுடைய இந்தத் தொடையைக் கதையினால் பிளந்து விடானாயின் அவன் முன்னோர்கள் சென்ற லோகத்திற்குச் செல்லான்' என்று சொன்னான். கோபித்த பீமசேனனுடைய மயிர்க்கால்கள் எல்லாவற்றினின்றும் அக்னி ஜ்வாலைகள், கொளுத்தப்பட்ட மரத்தின் பொந்துகளினின்றும் கிளம்புவதுபோல வெளிப்பட்டன.

அப்போது விதுரர், 'பிரதீப வம்சத்து அரசர்களே! பெரும் பயத்தைப் பாருங்கள். பீமசேனனால் அந்தப் பயம் வருமென்று தெரிந்துகொள்ளுங்கள். இந்தப் பரத வம்சத்தாரிடத்தில் இந்தப் பெரிய அநீதி முந்திய வினைப்பயனாக உண்டாயிருப்பதென்பது திண்ணம். ஓ! திருதராஷ்டிர புத்திரனே! சபையில் ஸ்திரீயைக் கொண்டுவந்து விவாதஞ் செய்வதென்பது அளவுக்கு மேற்பட்ட சூதாட்டமாகச் செய்யப்பட்டிருக்கிறது. உங்களுடைய யோக க்ஷேமங்களனைத்தும் அழிந்தன. கௌரவர்கள் பாவமான ஆலோசனைகளைச் செய்கின்றனர். கௌரவர்களே! இந்தத்

---

1 இடத்தொடை தன் ஸ்திரீக்கு உரியது; ஆதி பர்வம் ௬அக-ம் பக்கத்திற் காண்க.

தர்மத்தைச் சீக்கிரம் தெரிந்துகொள்ளுங்கள். தர்மம் கெட்டால் சபை கெடும். சூதாடுகிறவன் தன்னைத் தோற்பதற்குமுன்னே இவளைப் பந்தயம் வைத்திருப்பானாயின் இவளுக்கு அதிகாரியாயிருந்திருப்பன். சுதந்திரமில்லாதவன் எதை வைத்தாடுகிறானோ அதை ஜயித்தது கனவில் ஜயித்த தனமபோலத்தான் ஆகுமென்று நினைக்கிறேன். கௌரவர்களே! சகுனி சொல்லைக் கேட்டு இந்தத் தர்மத்தை விட்டு விலகிப்போகாதீர்கள்' என்று சொன்னார். அப்போது துரியோதனன், 'யாஜ்ஞஸேனியே! பீமன் அர்ஜுனன் நகுலசகதேவர்கள் இவர்களுடைய சொல்லுக்காகக் காத்திருக்கிறேன். யுதிஷ்டிரனுக்கு அதிகாரமில்லையென்று அவர்கள் சொல்லட்டும். உடனே அடிமைத்தனத்திலிருந்து விடப்படுவாய்' என்று சொன்னான். அப்போது அர்ஜுனன், 'குந்தி புத்திரரும் மகாத்மாவுமான தர்மராஜர் முதலில் எங்களைப் பந்தயம் வைத்தபோது அதிகாரமுள்ளவராயிருந்தார். அவர் தம்மைத் தோற்றபிறகு யாருக்கதிகாரி என்பதைக் கௌரவர்களனைவரும் அறியுங்கள்' என்று சொன்னான். கர்ணன், 'துச்சாஸனா! நான் சொல்வதைத் தெரிந்துகொள். வெகுநேரம் இவனோடென்ன பேச்சு? வீரனே! திரௌபதியை அழைத்துப் போ. துரியோதனா! நீ அவளைத் தாஸியாக வைத்து உன் னிஷ்டப்படி அனுபவி' என்று சொன்னான். பிறகு, காந்தார ராஜாவின் புத்திரனான சகுனி, 'கர்ணா! சிறந்த கைகளையுடையவனே! 'உன்னிஷ்டப்படி செய்' என்று நீ சொன்னது நன்றாயிருக்கிறது' என்று சொன்னான். துராத்மாவான துச்சாஸனன், பிறகு திரௌபதியைப் பலாத்காரமாகச் சீக்கிரத்தில் உள்ளே அழைத்துக்கொண்டுபோக ஆரம்பித்து அவளை இழுத்தான். அதனால் பெண்ணரசியான பாஞ்சாலி கதறினாள். 'பீஷ்மரே! துரோணரே! அசுவத்தாமாவே! கிருபரே! தர்மிஷ்டரும் தர்மத்தில் அன்புள்ளவருமான விதுரரே! என்னைக் காப்பாற்றுங்கள். திருதராஷ்டிர மகாராஜாவே! உமது மருமகளைக் காப்பாற்றும். மகானுபாவையும் எல்லாம் தெரிந்தவளும் எல்லாவற்றையும் பார்த்திருப்பவளுமான காந்தாரியே! துரியோதனன் பயத்தினால் வருத்தப்பட்டு நடுங்கியிருக்கும் என்னைக் காப்பாற்று. வீரர்களைப் பெற்ற குந்திதேவியே! என்னை நீ பார்க்கவில்லையே. அயோக்கியனால் பிடிக்கப்படும் உன் மருமகளை நீ காப்பாற்றவில்லையே. இவ்வாறு அடிக்கடி புலம்புகிற என்னைப்பற்றி யாரும் ஒன்றும் சொல்லாமற்போனால் பாக்கியமற்ற நான் துரியோதனனுக்கு வசப்பட்டுக் கெட்டுப்போவேன். பாண்டு மகாராஜாவும் தர்மதேவதையும் தேவேந்திரனும் வாயு பகவானும் அசுவினி

தேவதைகளும் தங்கள் மருமகளைக் காப்பாற்றவில்லையே! பதிவிரதையும் பாக்கியமில்லாதவளுமான நான் ஜீவிப்பேனாயின் கஷ்டம். சீ!' என்றாள்.

விதுரர், 'ராஜகுமாரியே! நீ சொல்லுகிறதை நான் கேட்கிறேன். இந்தப் பாண்டவர்கள் ஒன்றும் பேசுவதில்லையே. பாபபுத்தியுள்ளவனும் செய்ந்நன்றி கொன்றவனுமான துரியோதனனை உன் விருப்பத்திற்காக நான் சொல்லும் சொல்லை நீயே கேள். துரியோதனனும் அவனைச் சேர்ந்தவர்களும் மிகக் கெட்டவர்கள். திருதராஷ்டிர மகாராஜர் பிள்ளைகளுடன் கூடவே மோசம் செய்கிறார். பாப புத்தியுள்ளவனும் மிகக் கெட்டவனுமாகிய இந்தத் துரியோதனன் நான் சொல்லும் பெரிய சொல்லைக் கேளாமற்போவனோ என்னவோ' என்று திரௌபதிக்குச் சொல்லித் திருதராஷ்டிரனுடைய புத்திரனான துச்சாஸனனைப் பார்த்து, 'ராஜபுத்திரா! திரௌபதியைக் கஷ்டப்படுத்தாதே; நீ நாசத்தைப் பாராமலிருக்கலாம்' என்று சொன்னார். துச்சாஸனனுக்கு இவ்வாறு சொன்ன பிறகு, திருதராஷ்டிரனைப் பார்த்து, 'மகாராஜாவே! நீர் இவ்வாறு திரௌபதியைக் கஷ்டப்படுத்துவீராயின் பாண்டவர்களைக் கெடுத்த காரணத்தினாலேயே இந்தப் பாவியான உமது புத்திரனும் அவன் மந்திரிகளும், கோபித்த பீமார்ஜுனர்களிருவர்களாலும் நகுல சகதேவர்களாலும் வெகு சீக்கிரத்தில் அழிக்கப்படுவார்கள். ஆதலால், பிள்ளையைத் தடுக்கக்கடவீர். கெட்டுப்போகக் கருதவேண்டாம்' என்று சொன்னார். இதைக் கேட்டுப் புத்தி கெட்ட திருதராஷ்டிரன் ஒரு மறுமொழியும் சொல்லவில்லை. அப்போது நீண்ட கண்களையுடைய பாபியான துரியோதனன் விதியினால் வந்த அறிவின்மையினால் இழுக்கப்பட்டு விதுரர் சொன்னதை லட்சியஞ்செய்யாமல் சந்தோஷத்துடன் அடிக்கடி திரௌபதிக்குத் தொடையைக் காண்பித்தான். தொடையைக் காண்பிக்கும்போது தருமபுத்திரரின் தம்பியும் பலமும் அகங்காரமுமுள்ளவனுமான விருகோதரன் துரியோதனனைப் பார்த்தான். அப்போது பீமசேனன், தனக்குச் செய்த அந்த அவமானத்தை நினைத்துச் சிவந்த கண்களை விழித்துக் கோபத்தை அடக்கி வெளிப்படையாகப் பின்வருமாறு சொல்லலானான்.

'நான் துரியோதனனைக் கொல்வேன். தனஞ்சயன் கர்ணனைக் கொல்வான். சூதில் தேர்ந்தவனாகிய சகுனியைச் சகதேவன் கொல்வான். இந்தச் சபை நடுவில் மறுபடியும் இந்தப் பெரிய சொல்லைச் சொல்வேன். நமக்கு யுத்தம் நேரும்போது தேவர்கள் இதைச் சத்தியமாகச் செய்வார்கள். இந்தப் பாபியான

துரியோதனனை யுத்தத்தில் கதையினால் கொல்வேன். தரையில் விழுந்த இவன் தலையைக் காலால் மிதிப்பேன். சூரனும் கொடியவனும் துராத்மாவுமான துச்சாஸனனுடைய மார்பைப் பிளந்து சிங்கம்போல ரத்தத்தைக் குடிப்பேன்' என்று சொன்னான். அர்ஜுனன், 'பீமசேனா! உன்னுடன் பகைத்தவர்கள் இருப்பதில்லை. வீட்டில் சுகமாக இருக்கும் மூடர்களுக்குப் பெரும் பயம் தெரியாது. பீமா! சிறந்தவர்களுடைய முயற்சி பேச்சினால் தெரிவிக்கப்படாது. க்ஷத்திரிய தர்மத்தின்படி இவர்கள் யுத்தத்தில் நம்முடன் நிற்பார்களாயின் துரியோதனன் கர்ணன் துராத்மாவான சகுனி துச்சாஸனன் இந்நால்வருடைய ரத்தத்தையும் பூமி குடிக்கும். பீமசேனா! இந்தத் துராத்மாக்கள் சந்தோஷப்படும்படி பேசுகின்ற பொறாமைக்காரனான கர்ணனை உன் ஆக்ஞையினால் நான் யுத்தத்தில் கொல்வேன்; கர்ணனையும் கர்ணனைச் சேர்ந்தவர்களையும் பாணங்களினால் யுத்தத்திற் கொல்வேன். மற்றுமுள்ள எந்த அரசர்கள் புத்தியில்லாமல் என்னோடு யுத்தஞ் செய்வார்களோ அவர்களெல்லாரையும் கூரிய அம்புகளினால் யமலோகத்திற் கனுப்புவேன். என்னுடைய சத்தியம் போமானால் இமயமலை இடத்தை விட்டு விலகும்; சூரியன் ஒளியற்றுப்போவான்; குளிர்ச்சி சந்திரனைவிட்டுப் போய்விடும்' என்று சொன்னான். அர்ஜுனன் இவ்வாறு சொன்னபிறகு, பெருமையுள்ளவனும் பராக்கிரமும் சிறப்புமுள்ளவனும் மாத்ரி புத்திரனுமான சகதேவன் பெரிய கையைத் தூக்கிச் சகுனியின் வதத்தைச் செய்யக் கருதிக் கோபத்தினால் கண்கள் சிவந்து பலமுறை பெருமூச்சு விட்டுக் கொண்டு பின்வருமாறு சொல்லலானான். 'மூடா! காந்தார ராஜாக்களின் புகழைக் கெடுத்தவனே! நீ எவற்றைப் பாச்சிகைகளென்று நினைக்கிறாயோ இவை பாச்சிகைகளல்ல; உன்னால் யுத்தஞ் செய்வதற்காக எடுக்கப்பட்ட கூர்மையான பாணங்களாகும். சுபல புத்திரனே! க்ஷத்திரிய தர்மப்படி நீ யுத்தத்தில் நிற்பாயாயின் உன்னைப்பற்றிய பீமன் சொன்னதை உன் விஷயத்திலும் உன் பந்துக்கள் விஷயத்திலும் செய்கையினால் நிறைவேற்றுவேன். [1] முடித்துக்கொள்ள வேண்டியவற்றை எல்லாம் முடித்துக்கொள்' என்றான். ஜனமேஜயரே! சகதேவன் சொல்லைக் கேட்டு மனிதர்களுள் மிக்க அழகான நகுலனும் சொல்லலானான். 'இந்தச் சூதாட்டத்தில் மோசக்காரர்களும் திருதராஷ்டிர புத்திரர்களும் துரியோதனனுக்கு வேண்டியவர்களுமான எவர்களால் இந்தத் திரௌபதி கொடுஞ் சொற்கள் சொல்லப்பட்டாளோ,

1 பிறகு நீ இருக்கமாட்டாய் என்பது கருத்து.

மிகக் கொடிய நடையுள்ளவர்களும் இறக்கப்போகிறவர்களும் காலத்தினால் ஏவப்பட்டவர்களுமான அவர்களில் பெரும்பான்மையோருக்கு யமலோகத்தை நான் காண்பிப்பேன். எனக்குப் பகையாளியும் மனிதர்களில் இழிவானவனும் துராத்மாவுமான உலூகனென்னும் சகுனியின் அன்புள்ள புத்திரனை யுத்தத்தில் நான் கொல்லப்போகிறேன். தர்மராஜருடைய கட்டளையினாலும் திரௌபதியின் கருத்தை அனுசரித்தும் பூமியில் திருதராஷ்டிர புத்திரர்கள் இல்லாமற் சீக்கிரத்தில் செய்துவிடுவேன்' என்றான். திரௌபதி, 'பாபிஷ்டா! நீ தொடையை எனக்குக் காண்பித்து நீயும் பார்த்துக்கொண்டதனால் உனக்கு மரணம் தொடையிலேயே வரப்போகிறது. துராத்மாவான உன் சகோதரன் என்னை இப்படிப் பிடிப்பதனால் இவனது ரத்தத்தை விருகோதரர் குடிக்கவே போகிறார். மிகக் கெடுநினைவுள்ள இந்தக் கர்ணனைப் பிள்ளைகள் பந்துக்கள் மந்திரிகள் சேனைகள் முதலியவர்களோடு தனஞ்சயர் கொல்லப்போகிறார். அற்பத்தனமுள்ளவனும் மோசக்காரனும பாபத்தில் மனமுள்ளவனுமாகிய சகுனியையும் அவன் சுற்றத்தாரையும் சகதேவர் கோபித்து யுத்தத்தில் கொல்லப்போகிறார்' என்று சொன்னாள். தர்மமான ஒழுக்கமுள்ள திரௌபதியினால் இந்தச் சொல் சொல்லப்பட்டபோது அந்தச் சபையில் ஆகாயத்திலிருந்து மிகப் பெரிய பூமாரி பொழிந்தது. ஜனமேஜய ராஜாவே! அவர்கள் சொன்னதைக் கேட்டு அந்தக் சபையோர் பேசவில்லை. அர்ஜுனனிடத்தில் பயத்தினால் அந்தச் சபையெல்லாம் ஒலி யடங்கியிருந்தது.

---

## தொண்ணூற்றுமூன்றாவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

**(கோபித்த அர்ஜுனனை யுதிஷ்டிரர் சமாதானப்படுத்தியதும், திரௌபதிக்குத் திருதராஷ்டிரன் வரமளித்ததும்)**

அப்பொழுது திரௌபதி சொல்லியதைக் கேட்டுக் கோபமுற்ற தனஞ்சயன், கோபத்தினால் சிவந்த கண்களுடன், 'இந்தத் தர்மராஜரான யுதிஷ்டிரர் என்னைத் தடுக்கிறார்' என்று சொன்னான். இவ்வாறு சொல்லி வீரனான ஸவ்யஸாசியானவன் கோபத்தால் சிவந்த கண்களுடன் வில்லை யெடுத்துக்கொண் டெழுந்து அந்தச் சத்துருக்களைப் பார்த்தான். பிரளய காலத்தில் எல்லா லோகங்களையு மெரிக்கும் அக்னியைப்போலவும் தக்ஷ யாகத்தில் பசுக்களைக் கொல்ல யத்தனித்துக் கோபித்த ருத்திரரைப்போலவும் வில்லைக் கையிற் பிடித்துக் கொல்வதற்காகப் பலமுறை

நோக்கிக்கொண்டு யுத்தத்திற்கு முயற்சியுள்ளவனுயிருந்த அர்ஜுனனை அங்குள்ள அரசர்களனைவரும் கண்டனர். அவ்வாறிருந்த அர்ஜுனனைக் கண்டு அங்குள்ள மனிதர்கள் விசனமுற்றனர். தனஞ்சயனுடைய பராக்கிரமத்தை யறிந்தவ ரனைவரும் அப்போது உயிரில் ஆசையைவிட்டு இமைகொட்டாத கண்களோடு இறந்தவர்போ லிருந்தனர். அர்ஜுனனையும் தர்மபுத்திரரையும் அரசர்கள் கண்ணெடுத்துப் பார்த்தனர். அப்போது அர்ஜுனன் கோபித்ததைப் பார்த்துப் பூமி நடுங்கிற்று. ஆகாயத்திற் சஞ்சரிக்கும் பிராணிகளும் பயப்பட்டு நடுங்கின. அப்போது சூரியனும் பிரகாசிக்கவில்லை; நட்சத்திரங்கள், ஆகாயம், திசைகள் ஒன்றும் பிரகாசிக்கவில்லை; தாவரங்களும் ஜங்கமங்களுமாகிய உலகமனைத்தும் கலங்கிப்போயிற்று. அந்த அர்ஜுனன் எழுந்திருக்கும்போது ஆகாயத்தில் சூரியன் உதயமாவது போல விளங்கினுன். அவ்வாறு கோபித்துப பிரளய காலத்தில் உலகத்தை அழிக்கும் யமனுக்கொப்பாயிருந்த அர்ஜுனனைக் கண்டு பிமசேனனும் சந்தோஷமடைந்து யுத்தஞ்செய்யவே எண்ணங்கொண்டான். அப்போது கருடன் நாகங்களைக் கொல்வதுபோல எல்லாப் பகைவரையும் கொல்லக் கருதி மிகக் கோபித்த தனஞ்சயனைத் திரௌபதியும் நோக்கினுள். கோபித்துப் பிரளய காலத்து அக்னியைப்போல் ஜ்வலிக்கின்ற அர்ஜுனன் கண்ணெடுத்துப் பார்க்க முடியாமலிருந்தான். பராக்கிரமத்தோடுகூடிய அர்ஜுனனைக் கண்டு அந்த நகரத்திலுள்ளோர் விசனப்பட்டனர். வேகமாகக் கிளம்புகின்ற தனஞ்சயனைக் கண்டு தர்மராஜாவானவர் இந்திரன் உபேந்திரனை அடக்குவதுபோல அடக்கினுர். தமையுள்ளவரும் மூத்தவரும் தர்மராஜாவுமான யுதிஷ்டிரர், 'அர்ஜுனு! அவசரமாகக் காரியம் செய்யாதே. கீர்த்தி அழியலாகாது. பாவஞ் செய்தவர்களாகிய இந்தச் சூதாட்டக்காரர்களை நான் எரித்துவிட முடியும். ஆனுல், அசத்தியத்திற்கு அது மார்க்கமென்றறிந்ததனுல் என் கோபம் அடங்குகிறது. பாண்டவனே! உலக நன்மைக்காக நீயும் இந்தக் கோபத்தை அடக்கு' என்று சொன்னுர். தர்மராஜாவினுல் இவ்வாறு சொல்லப்பட்ட பாண்டவனுன தனஞ்சயன், துரியோதனன்மேலிருந்த கோபத்தை அடக்கிக்கொண்டான். அந்த வீரனுன பல்குனன் அடங்கினபோது தாவரங்களும் ஜங்கமங்களுமடங்கிய உலகம் மறுபடியும் சந்தோஷமடைந்தது. ஜனமேஜயரே! அவ்வாறு தமையனுரால் அர்ஜுனன் தடுக்கப்பட்டதைக் கண்டு விருகோதரன் துயரமடைந்தான். அந்தச் சபை சப்தமில்லாமலிருந்தது. ஜனமேஜயரே! அப்போது திருதராஷ்டிர

அப்போது திருதராஷ்டிர மகாரர்ஜாவின் கிருகத்தில் அக்னி ஹோத்ரசாலையில் நரி உரக்க ஊளையிட்டது. நாலுப்க்கங்களிலும் கழுதைகளும் கொடிய பட்சிகளும் நரிகளுக்கு எதிராக ஒலித்தன. தத்துவ ஞானியான விதுரரும் காந்தாரியும் வித்வானுன பீஷ்ம துரோண கிருபர்களும் அந்த விகாரமான சப்தத்தைக் கேட்டு, 'சுப முண்டாகவேண்டும், சுப முண்டாகவேண்டும்' என்று உரக்கக் கூறினர். பிறகு, காந்தாரியும் எல்லாந் தெரிந்தவரான விதுரரும் அந்தக் கொடிய அபசகுனத்தைக் கண்டு துக்கத்துடன் திருதராஷ்டிர மகாராஜாவுக்குத் தெரிவித்தனர்.

அதன்பிறகு திருதராஷ்டிரன், 'புத்தியில்லாத துரியோதனு! அயோக்கியா! கௌரவர்களின் சபையில் ஒரு பெண்ணை—அதிலும் தர்மபத்தினியான திரௌபதியை—பார்த்துப் பரிகாசமாகப் பேசினுய். அதனுல் கெட்டுப்போகிருய்' என்று சொன்னுன். நல்ல புத்தியுள்ளவனும் உண்மையை யறிந்தவனுமான திருதராஷ்டிரன் இவ்வாறு சொல்லித் தன் புத்திரர்களுக்கு அபாயம் நேர்ந்திருப்பதைப் புத்தியினுல் ஆராய்ந்து அவர்களின் நன்மையைத் தேடி, பாஞ்சால ராஜன் மகளான கிருஷ்ணையை நோக்கி, இன்சொல்லை முன்னிட்டு, 'பாஞ்சாலீ! தர்மத்தையே தலைமையாகக்கொண்டவளும் கற்புள்ளவளுமாகிய நீ எனது மருமக்களுக்குள் சிறந்தவளாகையால் உனக்கென்ன வரம் வேண்டுமோ அதை என்னிடம் கேள்' என்று சொன்னுன். அதைக் கேட்டுத் திரௌபதி, 'பரத சிரேஷ்டரே! நீர் எனக்கு வரம் கொடுப்பதாயிருந்தால் கேட்கிறேன். எல்லாத் தர்மங்களையும் அனுசரிப்பவரும் மேன்மை பொருந்தினவருமான யுதிஷ்டிரர் தாஸராகாமலிருக்கக்கடவர். உயர்ந்த மனமுள்ளவனும் என் புதல்வனுமாகிய இந்தப் பிரதிவிந்தியனை அறியாத சிறுவர்கள் 'தாஸபுத்ரா!' என்றழையாமலிருக்கவேண்டும். பாரதரே! முதலில் சாதாரண மனிதனுக இராமல் ராஜபுத்திரனுக இருந்து கொண்டாடப்பட்ட புருஷன் தான் தாஸபுத்திரனென்றறிந்தால் இறந்துவிடுவானன்ருே?' என்று சொன்னுள். திருதராஷ்டிரன், 'சிறந்தவளே! நீ எப்படிச் சொல்லுகிருயோ அப்படியே யாகட்டும். மங்களமானவளே! உனக்கு இரண்டாவது வரமும் கொடுப்பேன்; கேள். என் மனமே கொடுக்கிறது. உனக்கு ஒரு வரம் போதாது' என்று சொன்னுன். திரௌபதி, 'அரசரே! ரதங்களும் விற்களுமுள்ளவர்களான பீமஸேனர்ஜுனர்களும் நகுல சகதேவர்களும் அடிமைகளாயிராமல் சுதந்திரர்களா யிருக்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன்' என்று கேட்டாள். திருத

ராஷ்டிரன், 'மகானுபாவையே! பெண்ணே! நீ விரும்புகிற படியே ஆகட்டும். நம்மிடத்தில் மூன்றாவது வரமுங் கேள். இவ் விரண்டு வரங்களினால் நீ முழு நன்மையும் பெறவில்லை. தர்மந் தவறாதவளான நீதான் எனது மருமக்களெல்லாரிலும் சிறந்த வள்' என்று சொன்னான். திரௌபதி, 'மகிமைபொருந்தி யவரே! ஆசையானது தர்மத்தைக் கெடுக்கும். ஆதலால், நான் ஆசைப்படவில்லை. ராஜசிரேஷ்டரே! நான் மூன்றாவது வரம் வாங்கத்தகாதவள். அரசர்க்கரசரே! வைசியனுக்கு ஒரு வர மென்றும், க்ஷத்திரியப் பெண்ணுக்கு இரண்டு வரங்களென்றும், ராஜாவுக்கு மூன்று வரங்களென்றும், பிராமணனுக்கு நூறு வரங்களென்றும் சொல்லுகின்றனர். இந்த என் கணவர்கள் மிகப் பாபமுள்ளவர்களாக ஆகி இப்போது கரையேற்றப்பட் டனர். அரசரே! இனி, தம நற்செய்கைகளினால் நன்மைகளை அடைவார்கள்' என்று சொன்னாள்.

---

## தொண்ணூற்றுநான்காவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

### (கர்ணன் சொன்னதற்காகக் கோபித்த பீமனைத் தர்மபுத்திரர் அடக்கினது)

கர்ணன், 'அழகினால் பெயர்பெற்ற மானிடப் பெண்கள் நாம் கேட்டிருப்பவர்களுள் யாருக்கும இப்படிப்பட்ட செய்கை யிருந்ததைக் கேட்டிலம். இந்தச் சபையில் திருதராஷ்டிர புத்தி ரர்கள் பாண்டவர்களின்மேல் கரைகடந்த கோபாவேசம் கொண் டிருந்த சமயத்தில், துருபத புத்திரியான கிருஷ்ணை பாண்டவர் களுக்குப் பரிகாரமானாள். ஓடமில்லாத ஜலத்தில் விழுந்து தரை அகப்படாமல் முழுகிக்கொண்டிருக்கும பாண்டவர்களுக்கு இந்தப் பாஞ்சாலி கரைசேர்க்கும் கப்பலானாள்' என்று சொன்னான். கௌரவர்களின் நடுவில் அவன் சொல்லியதைக் கேட்டு, பீம ஸேனன், மிக்க கோபமும் துயரமுமுற்றவனாகி, 'பாண்டவர் களுக்கு ஸ்திரீதான் கதியா?' என்று சொல்லி அர்ஜுனனைப் பார்த்து, 'ஓ! தனஞ்சயா! 'ஸந்ததி, புண்ணிய கர்மம், ஞானம் என்னும் மூன்று ஒளிகள் சேர்ந்தவன்தான் மனிதன்; ஏனெனில், இம்மூன்றனோடுந்தான் பிரஜைகள் படைக்கப்பட்டிருக்கின்றனர். உயிர்போனபிறகு அசுத்தமும் ஒன்றுமில்லாததுமான தேகம் உறவினரால் விடப்படும்போது இம்மூன்றுந்தான் ஆத்மாவுக்கு சாதகங்களாகின்றன' என்று தேவலர் சொல்லியிருக்கிறார். பெண்டாட்டியை அயலான் தொட்டதனால் நமக்கு அந்த

ஒளி கெடுக்கப்பட்டது. பிறன் தொட்டவளிடத்தில் உண்டானது ஸந்ததி யாவதெப்படி?' என்று சொன்னான். அதற்கு அர்ஜுனன், 'பாரதனே! மேலோர், இழிவானவன் கடுஞ்சொற்களைச் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அவனுக்கு மறுமொழி கூறுவது ஒருகாலுமில்லை. எல்லாந் தெரிந்தவர்களும் தமக்குத் தாமே கௌரவத்தைப் பெற்றவர்களுமான சான்றோர்கள் பிறர் செய்த உபகாரங்களைமட்டும் நினைப்பார்கள்; அபகாரங்கள் செய்யப்பட்டிருந்தபோதிலும் அவற்றை நினையார்' என்று சொன்னான். பீமஸேனன், 'அரசர்க்கரசரே! தர்மராஜாவே! சேர்ந்திருக்கும் இந்தச் சத்துருக்களனைவரையும் இங்கேயே வேரோடு அழித்துவிடட்டுமா? அல்லது இதைவிட்டு வெளிப்பட்டபிறகு செய்யட்டுமா? பாரதரே! இதில் நமக்குச் சந்தேகந்தான் எதற்கு? வாய்ச்சொல்தான் எதற்கு? இந்த இடத்தில் இப்போதே இவர்களைக் கொன்றுவிடுகிறேன். இந்தப் பூமியை நீர் ஆளும்' என்று சொல்லித் தன் தம்பிமார்களுடன்கூட மான்களின் நடுவிலிருக்கும் சிம்மம்போல அடிக்கடி பகைவரைக் கண்ணெடுத்துப் பார்த்தான். சிறந்த கைகளையுடைய வீரனாகிய பீமன் சிறந்த செய்கையுடைய தர்மராஜாவினால் சமாதானஞ் செய்யப்பட்டும் அவரைப் பார்த்து உட்கொதிப்பினால் கஷ்டப்பட்டுக்கொண்டே யிருந்தான். ஜனமேஜயரே! கோபித்த பீமஸேனனுடைய காதுகள் முதலான துவாரங்களிலிருந்து புகையோடும் பொறிகளோடும் ஜ்வாலையோடுங்கூடத் தீ உண்டாயிற்று. அவனுடைய முகம் பிரளயகாலத்தில் உருவமெடுத்து வந்த யமனுடைய முகம்போலப் புருவநெறிப்பினால் பார்க்கக்கூடாமலிருந்தது. கைகளால் சோபிப்பவனாகிய அந்தப் பீமனை யுதிஷ்டிரர் கையினால் தடுத்து, 'பாரதனே! இது வேண்டாம்; பேசாமலிரு' என்று சொன்னார். கோபத்தினால் சிவந்த கண்களையுடைய அம்மகாவீரனைத் தடுத்தபிறகு, தம் தந்தையான திருதராஷ்டிரனிடம் கைகூப்பி நின்றார்.

---

## தொண்ணூற்றைந்தாவது அத்தியாயம்

## த்யூத பர்வம் (தொடர்ச்சி)

**(திருதராஷ்டிரன் விடைகொடுத்தபின்மேல் தர்மபுத்திரர் இந்திரப்பிரஸ்தம் சென்றது)**

யுதிஷ்டிரர், 'பரத வம்சத்தரசரே! உமக்கு நாங்கள் என்ன செய்யக்கடவோம்? எங்களுக்குக் கட்டளையிடும். நீர்தாம் எங்களுக்குப் பிரபு. பாரதரே! எப்பொழுதும் உமது கட்டளைப்படி

நடக்கக் கருதுகிறோம்' என்று சொன்னார். திருதராஷ்டிரன், 'அஜாதசத்ருவே! உனக்கு நன்மை உண்டாகட்டும். நீங்கள் க்ஷேமமாய் உபத்திரவமில்லாத வழியில் செல்லுங்கள்; என்னால் விடைகொடுக்கப்பெற்ற நீங்கள் உங்கள் தனங்களுடன் சென்று ராஜ்யத்தை ஆளுங்கள். முதிர்ந்தவனாகிய எனது இந்தக் கட்டளையை நீங்கள் அறியவேண்டும். நான் சொல்வதெல்லாம் உங்கள் நன்மைக்கும் மேன்மைக்கும் முக்கிய காரணமாகும். அப்பா! யுதிஷ்டிரா! தர்மங்களின் நுட்பமான வழிகளை நீ அறிந்தவன். சிறந்த அறிவுள்ளவனே! நீ நன்றாகக் கற்பிக்கப்பட்டவன்; பெரியோர்களிடத்தில் பணிவுசெய்தவன். அறிவுள்ள இடத்தில் அடக்கமிருக்கும். பாரதனே! நீ ஆறுதலடை. [1] மரமல்லாதனவற்றில் வாள் முதலிய ஆயுதங்கள் பிரவேசிப்பதில்லை. ஆதலால் மரத்திலேதான் அவை போடப்படுகின்றன. எவர்கள் தீங்குகளை மறந்து குற்றங்களைப் பாராமல் குணத்தையே அறிந்து பகை செய்யாமலிருக்கின்றனரோ அவர்கள்தாம் மேன்மக்கள். மேன்மக்கள் பிறர் செய்த உபகாரங்களையே நினைப்பதன்றிப் பிறரால் செய்யப்பட்ட தீங்குகளை நினையார்; அயலாருக்கு உபகாரஞ் செய்யும்போது பிரதியுபகாரத்தை எதிர்பாரார். யுதிஷ்டிரா! கீழ்மக்கள் ஒற்றுமையாகப் பேசும்போதே கடுஞ்சொற்களைச் சொல்வர். தாங்கள் முதலிற் சொல்லாமல் பிறர் சொன்னபிறகு அவர்களுக்குக் கடுஞ்சொல் சொல்லுகிறவர்கள் நடுத்தரத்தினர்; தீரர்களான மேன்மக்கள் பிறர் இன்னாத கடுஞ்சொற்களைச் சொன்னாலும் (சொல்லக் கருதிச்) சொல்லாமலிருந்தாலும் தாங்கள் ஒருபோதும் மறுமொழி சொல்லார். எல்லாம் தெரிந்த சான்றோர் ஆத்மஞானத்தை யடைந்து உபகாரங்களையே நினைப்பதன்றி அபகாரங்கள் பிறரால் செய்யப்பட்டிருந்தாலும் அவற்றை நினையார். சாதுக்கள் ஆரியர்களின் வரம்புகளைக் கடவாமல் காண்பதற்கினியவராகவே யிருப்பர். அப்படியே யோக்கியனாகிய நீயும் சபையில் சான்றோர் நடப்பது போலவே நடந்திருக்கிறாய். அப்பா! துரியோதனன் செய்த அந்தக் கொடுமையை மனத்தில் வைக்காதே. பாரதனே! உன் தாயான காந்தாரியையும் உன் குணத்தில் அன்புடன் வந்திருக்கும் முதியோனும் கண் தெரியாதவனும் உன் தந்தையுமாகிய என்னையும் பார். நான் நமது புத்திரர்களின் சிநேகிதர்களையும் பலாபலங்களையும் பார்க்கக் கருதியதனால் தெரிந்துதான் இந்தச் சூதாட்டத்தை விலக்காமலிருந்தேன். வேந்தே! உன்னை ராஜாவாகவும் எல்லாச் சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த சிறந்த புத்தியுள்ள

1 பொறுத்தவனிடத்தில்தான் பகைசெயவர் என்பது கருத்து.

விதுரனை மந்திரியாகவும் பெற்ற கௌரவர்களுக்கு யாரும் கவலைப் படவேண்டியதே யில்லை. உன்னிடத்தில் தர்மமும், அர்ஜுன னிடத்தில் மனவுறுதியும் பீமஸேனனிடத்தில் பராக்கிரமமும் புருஷசிரேஷ்டர்களான நகுல சகதேவர்களிடத்தில் சுத்தமான குருபக்தியும் இருக்கின்றன. அஜாதசத்ருவே ! உனக்கு சுக முண்டாகட்டும். காண்டவப்ரஸ்தத்தைச் சேர். உன் பிராதாக்க ளான துரியோதனன் முதலானவர்களுடன் உனக்கு சிநேக மிருக்கட்டும். உன மனம் தர்மத்திலேயே வைக்கப்படவேண்டும்' என்று சொன்னான். ஜனமேஜயரே! தர்மராஜாவான யுதிஷ் டிரர் இவ்வாறு சொல்லப்பட்டவராய் யோக்கியர்கள் செய்யும் பிரதிக்ஞை யெல்லாவற்றையுஞ் செய்து சகோதரர்களுடன் புறப் பட்டார். அந்தப் பாண்டவர்கள் கிருஷ்ணையுடன் மேகங்கள் போன்ற ரதங்களிலேறி மனமகிழ்ந்து இந்திரப்பிரஸ்தமென்னும் சிறந்த நகரத்திற்குச் சென்றனர்'' என்றனர்.

**த்யூத பர்வம் முற்றிற்று**

---

## தொண்ணூற்றுருவது அத்தியாயம்

## அநுத்யூத பர்வம்

**(துரியோதனன் அர்ஜுனனிடம் தனக்கிருக்கும் பயத்தையும் அவன் பராக்கிரமத்தையும் திருதராஷ்டிரனுக்குச் சொல்லி, அதற்கு உதாரணமாகக் கார்த்தவீர்யார்ஜுனன் சரித்திரத்தை எடுத்துரைத்தது)**

ஜனமேஜயர், '' அந்தப் பாண்டவர்கள் மிகுதியான ரத்னங் களோடும் தனங்களோடும் அனுப்பப்பட்டதை அறிந்த பிறகு திருதராஷ்டிர புத்திரர்களின் மனம் எவ்வாருயிற்று ?'' என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லுகிருர்.

'' ஜனமேஜய ராஜாவே ! புத்திசாலியான திருதராஷ்டிரனுல் அந்தப் பாண்டவர்கள் அனுப்பப்பட்டதை அறிந்து, துச்சா ஸனன் உடனே தன் தமையனிடம் சென்றுன். பரத சிரேஷ்ட ரான ஜனமேஜயரே ! பரத சிரேஷ்டனுன துச்சாஸனன் மனதில் வருத்தங்கொண்டு (கர்ணன் சகுனி முதலான) மந்திரிகளுடன் கூடியிருக்கும் துரியோதனனை அடைந்து, ' ஓ ! மகாரதர்களே ! நாம் கஷ்டப்பட்டுக் கொணர்ந்து சேர்த்த இந்தப் பொருள்களை யெல்லாம் கிழவர் சத்துருக்களுக்குக் கொடுத்து அழித்துவிடு கிருர். இதனை அறியுங்கள்' என்று சொன்னுன். பிறகு, பாண்டவர்களின்மீது பொருமைகொண்டவர்களாகிய துரியோ

தனன், கர்ணன், சுபலன் புத்திரனான சகுனி இவர்கள் ஒருவரோ டொருவர் சேர்ந்து விசித்ரவீரியன் புத்திரனும் புத்திசாலியு மான திருதராஷ்டிர மகாராஜனிடம் விரைவாகச் சென்று நயமாகத் தெரிவித்தனர். துரியோதனன், 'அரசரே! வித்வானும் தேவர்களுக்குப் புரோகிதருமான பிருகஸ்பதி இந்திரனுக்கு ராஜநீதியைச் சொல்லும்போது சொன்ன விஷயம் நீர் கேட்டதில்லையா? சத்துருக்களைக் கொல்லுகிறவரே! [1] எல்லா உபாயங்களையும் செய்து சத்துருக்களைக் கொல்லவேண்டும். பின்னிட்டு யுத்தத்தினலாவது சகாயஞ் சேர்த்துக்கொள்வதனலாவது உமக்கு அவர் தீங்குசெய்வார். அதனல், நாம் பாண்டவர்களின் தனங்களினல் எல்லா அரசர்களையும் வசப்படுத்திப் பாண்டவர்களோடு யுத்தஞ்செய்வோமாயின் நமக்கென்ன குறையும்? கெடுப்பதற்காக வந்த கோபித்த சர்ப்பங்களைக் கழுத்திலும் முதுகிலும் போட்டுக்கொண்டு எவன் (கொல்லாமல்) விட்டுவிடுவான்? தந்தையே! கோபித்து ஆயுதங்களை எடுத்துத் தேர்களிலேறிக்கொண்டு போகும் பாண்டவர்கள் சீறின சர்ப்பங்கள் போல நம்மை மிச்சமில்லாமற் செய்துவிடுவார்கள். அர்ஜுனன் கவசத்தை நன்றாகப் போட்டுக்கொண்டும் சிறந்த தூணிகளை எடுத்துக்கொண்டும் போகிறான்; காண்டீவத்தை அடிக்கடி எடுக்கிறான்; பெருமூச்சுவிட்டுக்கொண்டு பார்க்கிறான். விருகோதரன் விரைவுடன் பெருங் கதையை எடுத்துத் தனது தேரைப் பூட்டிக்கொண்டு வேகமாகச் சென்றானென்று நாம் கேள்விப்படுகிறோம். நகுலன் கத்தியையும் அர்த்தசந்திர வடிவமான கேடகத்தையும் எடுத்துச் சென்றான். சகதேவனும் தர்மராஜாவும் குறிப்புக்களினல் சமிக்ஞை செய்துகொண்டனராம் அவர்களனைவரும் அநேக ஆயுதங்களோடும் சாமான்களோடுங்கூடிய தேர்களிலேறிக்கொண்டு மற்ற ரதிகர்களை அடிப்பதற்காகச் சேனை சேர்க்கப் புறப்பட்டுப்போயினர். ஒரு காலத்தில் நம்மால் தீங்கு செய்யப்பட்ட அவர்கள் அதைப் பொறுக்கமாட்டார்கள். திரௌபதியைக் கஷ்டப்படுத்தினதை அவர்களில் எவன் பொறுக்கக்கூடியவன்? யுத்தத்தில் கோபித்த அர்ஜுனனுக்கு எதிர் நிற்பவனை நான் காணவில்லை. தேராளிகளிற் சிறந்தவர்களான பீஷ்மர், துரோணர், கர்ணன், அசுவத்தாமா, கிருபர், விருஷசேனன், விகர்ணன், ஜயத்ரதன், பாஹ்லிகன், ஸோமதத்தன், பூரி,

1. 'உமக்குத் தீங்கு செய்கிறவர்களை யுத்தஞ்செய்யாமலே எல்லா உபாயங்களாலும் கொல்லவேண்டும்; அல்லது, யுத்தத்திலாவது கொல்லவேண்டும்' என்பது பழைய உரை.

பூரிசிரவன், சலன், சகுனி, அவன் புத்திரன், கௌரவரைச் சேர்ந்த மற்றுமுள்ள அரசர்கள் இவர்களனைவரும் யுத்தஞ் செய்யத் தொடங்கினாலும் அர்ஜுனனுக்கு எதிர் நிற்கமாட்டார்கள். பராக்கிரமத்தில் அர்ஜுனனுக்குச் சமமான வில்லாளி உலகத்தில் இல்லை. இரண்டு கைகளுள்ள இவ்வர்ஜுனன் ஆயிரம் கைகளுள்ள (கார்த்தவீரிய) அர்ஜுனனுக்குச் சமமானவன்' என்று சொன்னான். திருதராஷ்டிரன், 'புத்திரனே! அர்ஜுனனுக்கு சமமானவன் பராக்கிரமமுள்ள வீர புருஷனென்று உன்னால் எடுத்துரைக்கப்பட்டவன் யார்? அந்த மகாவீரனை யான் கேட்க விரும்புகிறேன்; சொல்' என்று கேட்க, துரியோதனன் சொல்லலானான்.

'அரசரே! மகாத்மாவான கார்த்தவீரியனுடைய சரித்திரத்தைக் கேளும். எல்லா லோகங்களுக்கும் காரணமாயுள்ள பிரம்மதேவர் பரப்பிரம்மத்திலிருந்து உண்டானவர். வித்வானாகிய அத்திரி மகரிஷி பிரம்மாவின் புத்திரர். அத்திரியின் புதல்வன் சந்திரன்; சந்திரன் பிள்ளை புதன்; புதன் மகன் புரூரவன். அவன் மகன் ஆயு; ஆயுவின் பிள்ளை நகுஷன். நகுஷன் பிள்ளை யயாதி. யயாதியின் மகன் யது. மகாராஜாவே! யதுவின் புத்திரன் ஸஹஸ்ரௌஜனென்று பெயர்பெற்றவன். அரசரே! ஸஹஸ்ரௌஜனுடைய புத்திரன் சக்ரதாஸனென்னப்பட்டவன். சக்ரதாஸனுடைய பிள்ளை ஹேஹயனென்னுமரசன். ஹேஹயனுக்குத் தர்மநேத்ரனென்னும் புத்திரனிருந்தான். தர்மநேத்திரனுக்குக் கிருதியென்பவன புத்திரன. கிருதியின் புத்திரன் கிருதவீரியன். கிருதவீரியன் புத்திரன் பலவான்களிற் சிறந்த கார்த்தவீர்யார்ஜுனனென்பவன். மகாராஜாவே! அந்த அர்ஜுனன் உக்ரமான தவஞ்செய்த காலம் பதினாயிரம் வருஷத்துக்கு மேலானதென்று நான் முன் கேட்டிருக்கிறேன். ராஜாவே! பிதாவே! ஏழு தீவுகளும் பட்டணங்களும் சமுத்திரங்களும் நதிகளுமுள்ள இந்தப் பூமியனைத்தும் அவனால் உக்கிரமான செய்கையினால் ஜயிக்கப்பட்டது. சிறந்த பராக்கிரமமுள்ள அந்த அர்ஜுனன் யாரும் செய்ய முடியாத தவத்தைச் செய்து அத்திரியின் புத்திரரான தத்தரென்னும் முனிவரை ஆராதித்தான். அந்தத் தத்தாத்ரேயர் அவ்வரசனுக்கு நாலு வரங்கள் கொடுத்தார். அவன் முதலில் ஆயிரம் கைகளை முக்கியமான வரமாகக் கேட்டான். அதர்மத்தில் மனம் இறங்கும்போது சான்றோரால் தடுக்கப்படுவது இரண்டாவது வரம; க்ஷத்திரிய தர்மத்தினால் பூமியை ஜயித்துத் தர்மத்தினாலேயே பிரஜைகளை மகிழச் செய்வது மூன்றாவது வரம்; அநேக யுத்தங்களைச் செய்து சத்துருக்களை ஆயிரக்கணக்காகக் கொன்று மேன்மேலும்

யுத்தத்திற்கு ஆரம்பிக்கும்போது தனக்கு மேற்பட்டவனால் மாத்திரம் வதஞ்செய்யப்படுவது நான்காவது வரம். பாரதரே! அவன் யுத்தஞ் செய்யும்போது ஆயிரம் கைகளும் ரதமும் கொடியும் உண்டாயினவென்று நான் முன்னமே கேட்டிருக்கிறேன். ராஜாவே! தந்தையே! அப்படியே [1] ஏழு தீவுகளும் பட்டணங்களும் கடல்களும் நதிகளுமுள்ள இந்தப் பூமி அவனால் ஜயிக்கப்பட்டது. சிறந்த பராக்கிரமமுள்ள அந்த அர்ஜுனன் பிறகு ஏழு தீவுகளுக்கும் அதிபதியானான். மகா பலசாலியான அந்த அரசன் மகா யாகங்களைச் செய்தான். அந்த மகாவீரன் அநேக வருஷ காலம் பூமியை ஆண்டான். பரத சிரேஷ்டரான ராஜரே! மாகிஷ்மதி யென்னும் நகரத்துக்கு அதிபதியான அவ்வர்ஜுனன் ஒருகால் தன் மனைவிகளுடன் கூடி நர்மதையாற்றுக்குச் சென்றான். பரத சிரேஷ்டரே! அரசரே! அவ்வரசன் அந்த நதிக்குச் சென்று ஜலத்துக்குள்ளிறங்கி ஜலக்ரீடை செய்ய ஆரம்பித்தான். பிதாவே! அதே காலத்தில் லங்காதிபதியும் சிறந்த பலசாலியுமான ராவணன் ராக்ஷஸர்களுடன அவ்விடம் போனான். எப்போதும் கோபமுள்ளவனும் வரம்பெற்றதனால் களித்தவனுமாகிய அந்த ராவணன் நர்மதையில் அவ்வர்ஜுனனைக் கண்டு மிக்க கோபத்துடன் தேவேந்திரனைச் சம்பராசுரன் எதிர்த்ததுபோல எதிர்த்துச் சென்றான். அர்ஜுனனும் அந்த ராவணனைக் கண்டு எதிர்த்தான். பிறகு, அந்த ராவண அர்ஜுனர்களிருவரும் போர்புரிந்தனர். அரசரே! அப்போது யாராலும் வெல்லமுடியாத வீரனும வரம்பெற்றதனால் கர்வங் கொண்டவனுமாகிய ராவணனை ராஜாவான அர்ஜுனன் தன் பலத்தினால் யுத்தத்தில் ஜயித்து வில்லின் நாணினால் கட்டித் தன் நகரத்திற்குச் சென்றான். புலஸ்திய முனிவர், அந்த ராவணன் கட்டப்பட்டதைக் கேள்விப்பட்டு, கார்த்தவீர்யார்ஜுனனை நகரத்திற் போய்க் கண்டு, ராவணனைக் கட்டிலிருந்து விடுவித்தார். பாரதரே! பராக்கிரமமும் பலமுமுள்ள கார்த்தவீர்யார்ஜுனன் பிறகு ஒருகால் கர்வத்தினால் ஒன்றுந் தெரியாமல் சமுத்திரக்கரைக்குச் சென்று திரிந்துகொண்டே சமுத்திரத்தின்மீது கூர்மையான பாணங்களை மிகுதியாக எய்தான். சமுத்திர ராஜன், அவனுக்கு நமஸ்காரஞ்செய்து கைகூப்பிக்கொண்டு, 'வீரனே! பாணங்களை விடாதே. உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்? சொல். ராஜசிரேஷ்டனே! என்னைச் சேர்ந்த ஜந்துக்கள் உன்னால் விடப்பட்ட சிறந்த அம்புகளினால் பீடிக்கப்படுகின்றன. பிரபுவே! அவற்றிற்கு அபயங்கொடு' என்று கேட்டான்.

---

1 இந்தப் பர்வம் 44-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

அர்ஜுனன், 'சமுத்திர ராஜனே! இப்போதே சீக்கிரத்தில் எனக்கு ஒரு யுத்தம் கொடு. இல்லாவிட்டால் உன்னைப் பீடிப்பேன். ஆதலால், நீ தாமதம் செய்யாதே' என்று சொன்னான். சமுத்திர ராஜன், 'ராஜனே! உலகத்தில் அநேக மகாவீரர்கள் இருக்கின்றனர். அரசர்க்கரசே! மகா பலசாலியே! அவர்களில் ஒருவரோடு யுத்தஞ்செய்' என்றான். அர்ஜுனன், 'யுத்தத்தில் எனக்குச் சமமான சிறந்த ஆயுதம் பிடித்தவன் எங்கேயாவது இருப்பானாயின் அவனை எனக்குச் சொல். அவன் என்னோடு யுத்தத்தில் நிற்கவேண்டும்' என்று கேட்டான். சமுத்திர ராஜன், 'ராஜனே! ஜமதக்னி யென்னும் மகரிஷியை நீ கேட்டிருக்கிறாயா? அவருடைய புத்திரன் உனக்கு வேண்டினபடி யுத்தத்தைக் கொடுக்கத்தக்கவன்' என்று சொன்னான். பாரதரே! முன்னமே நாரதருடைய பெருங்கோபத்தினால் சூழப்பட்ட அந்த மாகிஷ்மதி நகரத்தரசன் சமுத்திரராஜன் சொல்லைக் கேட்டவுடன் கோபத்துடன் விரைவாகச் சென்றான். அவன் அந்த ஆசிரமத்திற்குச் சென்று நினைத்தபடி யெல்லாம் செய்தான். தன பந்துக்களுடன் கூடத் தீங்குகளை மிகச் செய்தான். அவன் மகாத்மாவான பரசுராமருக்கு மனவருத்தத்தை உண்டு பண்ணினான் பரசுராமருடைய சூரியன் போன்ற உக்கிரமான பராக்கிரமம் அவன் சேனைகளை எரிப்பதுபோல ஜ்வலித்தது. பிறகு, அவர்களிருவரும் விருத்திராசுரனும் இந்திரனும்போல் யுத்தஞ் செய்தனர். பிறகு, பரசுராமர் விரைவாகக் கோடாலியை எடுத்துக்கொண்டு ஆயிரம் கைகளுள்ள கார்த்தவீரியார்ஜுனனை அநேகம் கிளைகளோடு கூடிய மரத்தைபபோல வெட்டினார். அவன் அடிபட்டு விழுந்ததைக் கண்டு, அவனுடைய சுற்றத்தார் சேர்ந்து கத்திகளையும் சக்தியாயுதங்களையும் எடுத்துக்கொண்டு பரசுராமரை எதிர்த்தனர். பலசாலியான பரசுராமரும் விரைவாகத் தேரிலேறி வில்லை வளைத்து உயர்ந்த அஸ்திரங்களைப் பிரயோகித்து அரசர்களை அழித்தார். அரசரே! அதன் பிறகு, பரசுராமரிடத்தில் பயத்தினால் பீடிக்கப்பட்ட அரசர்கள், சிம்மத்தினிடத்தில் பயந்த மான்கள்போல மலைக் குகைகளில் பிரவேசித்தனர். பரசுராமரிடமுள்ள பயத்தினால் அவர்களில் யாரும் தங்களுக்குரிய கர்மங்களைச் செய்யவில்லை. பிராம்மணர்களைப் பாராமையினால் அந்த ஜனங்கள் சூத்திரராயினர். அதனாலேதான, க்ஷத்திரிய தர்மத்திலிருந்த திரவிடர், காசர், புண்ட்ரர், சபரர் இவர்கள் தர்மங் கெட்டுச் சூத்திரர்களாயினர். பிறகு, புருஷர்களை யிழந்த க்ஷத்திரியப் பெண்களிடத்தில் பிராம்மணர்களால் க்ஷத்திரிய சந்ததிகள் உண்டாக்கப்

பட்டன். அவற்றையும் பரசுராமர் பலமுறை கொன்றார். அவ்வாறு இருபத்தொரு முறை கொன்ற பிறகு, தேவலோகத்திய அசரீரி வாக்கானது இன்சொல்லாகவும் எல்லா ஜனங்களுக்கும் கேட்கும்படியாகவும் பரசுராமரைப் பார்த்து, 'ராமரே! ராமரே! இதை விடும். இந்த க்ஷத்திரியர்களைப் பலமுறை கொல்வதனால் உமக்கு ஒரு லாபத்தையும் நீர் பார்க்கவில்லை' என்று சொல்லிற்று. அப்படியே, ரிசீகர் முதலான பிதிர்க்களும் மகாத்மாவான பரசுராமரைப் பார்த்து, 'ராம! ராம! மகாவீரனே! ஓய்ந்துவிடு' என்றனர். தம் பிதாவைக் கொன்றதைப் பொறாத பரசுராமர், அந்த ரிஷிகளைப் பார்த்து, 'நீங்கள் என்னைத் தடுக்கலாகாது' என்று சொன்னார். பிதிர்க்கள், 'ஜயிப்பவரிற் சிறந்தவனே! நீ க்ஷத்திரிய ஜாதியாரைக் கொல்வது சரியன்று. குழந்தாய்! நீ பிராம்மணனாயிருந்தும் அரசர்களைக் கொல்வது தகாது' என்றனர். அந்தப் பரசுராமர், தமது பிதிர்க்கள் சொன்னதைக் கேட்டவுடன் கோபத்தை விட்டு ஆயிரக்கணக்கான அசுவமேதங்களையும் நூற்றுக்கணக்கான நரமேதங்களையும் செய்து, கடல் சூழ்ந்த பூமியைக் காசியபருக்குக் கொடுத்தார். பிதாவே! தனஞ்சயன் யுத்தத்தில் அந்தப் பரசுராமருக்கும் அந்தக் கார்த்தவீரியார்ஜுனனுக்கும் சமமானவனென்பதில் சந்தேகமில்லை. அரசர்க்கரசரே! பராக்கிரமத்தினால் யுத்தத்தில் அர்ஜுனனை ஜயிக்க முடியாது' என்றான்.

---

தொண்ணூற்றேழாவது அத்தியாயம்

## அநுத்யூத பர்வம் (தொடர்ச்சி)

### (துரியோதனன் சொற்படி திருதராஷ்டிரன் மறுபடியும் சூதாடுவதை ஒப்புக்கொண்டது)

துரியோதனன், 'அரசரே! முன்னோர் நினைக்கவும் முடியாததாயிருந்த அர்ஜுனனுடைய பராக்கிரமங்களைப்பற்றிக் கேளும். வில்லாளிகளிற் சிறந்த அர்ஜுனன் முன்னே செயற்கரிய காரியத்தைச் செய்தான். அரசரே! துருபதனுடைய நகரத்தில் திரௌபதியின் சுயம்வர காலத்தில் குழந்தை முதல் கிழவன் வரையில் கூடியிருந்த எல்லா க்ஷத்திரியர்களும் சேர்ந்த சபையில் அர்ஜுனன் யார்க்கும் பார்க்க முடியாமல் விரைவாக மத்ஸியத்தை ஜலத்தில் தள்ளினான். எல்லா அரசர்களாலும் சாதிக்க முடியாத அந்தச் சிறந்த வில்லை எல்லா அரசர்களும் பார்த்திருக்கையில் ஒரு நொடியில் நாணேறிட்டான். பலவானான பற்குணன் அப்போது மத்ஸிய யந்திரத்தை

அடித்த பிறகு திரௌபதியினால் கழுத்தில் பொன்மாலை போடப் பட்டான். திரௌபதியினால் அர்ஜுனன் வரிக்கப்பட்டதைக் கண்டு சிறந்த பராக்கிரமமுள்ள வீரர்களாகிய அரசர்களனைவரும் கோபித்து எல்லா ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு ரோஷத் தினால் கர்ணனை முன்னிட்டுக்கொண்டு அர்ஜுனனை எதிர்த்துச் சென்றனர். அப்போது மகா பலசாலியான அந்த அர்ஜுனன் அங்கே எல்லா அரசர்களும் கோபித்திருக்கக் கண்டு, கூர்மை யான பாணங்களினால் அவர்களைத் தடுத்துத் தான் ஜயம் பெற்றான். அர்ஜுனன் பராக்கிரமத்தின் வன்மையினால் கர்ணன் முதலான அவ்வரசர்க ளனைவரையும் யுத்தத்தில் ஜயித்து, முன்னம் எல்லா க்ஷத்திரியக் கூட்டங்களின் நடுவிலும் பீஷ்மர் அம்பையை அடைந்ததுபோலச் சிறந்தவளான கிருஷ்ணையை அடைந்தான். பிறகு, ஒருகால் அர்ஜுனன் தீர்த்தயாத்திரைக்குச் சென்றான். தந்தையே! அப்போது நாக ராஜன் மகளான உலூபியை அடைந்தான். நாகர்களிற் சிறந்த வரன்களிருக்கையில் அந்த உலூபியினால் அர்ஜுனனே வரிக்கப் பட்டான். அதன்பிறகு, கோதாவரியிலும் கிருஷ்ணா நதியிலும் காவேரியிலும் ஸ்நானஞ்செய்தான். அங்கே பாண்டியனை அடைந்து அவன் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொண் டான்; அவ்விடத்திலிருந்து சந்தோஷமடைந்த பிறகு அவன் தென்திசைக்குச் சென்றான். அவன் தென்கடற்கோடிக்குச் சென்று அப்ஸரசுக்களின் சம்பந்தமான குமாரதீர்த்தத்தைச் சேர்ந்து, கன்னியா தீர்த்தத்தை யடைந்து, அதில் முதலை வடிவமாயிருந்த அந்த ஐந்து அப்ஸரசுக்களையும் தன் பலத்தி னாலும் பராக்கிரமத்தினாலும் கரையிலெடுத்துச் சாபத்திலிருந்து விடுவித்தான். அதன்பிறகு, பற்குணன் துவாரகைக்குச் சென்று கிருஷ்ணனுடைய கட்டளையினால் சுபத்திரையை மனைவியாக அடைந்து, அவளைத் தேர்மேலேற்றிக்கொண்டு தன் நகரத்திற் குச் சென்றான். அவன் அவளைத் தூக்கிக்கொண்டு போனதைக் கேட்டு, பிரத்யும்னன், கிருதவர்மா, கதன், சாரணன், ஸாத்யகி, ஆஹுகன், சாம்பன், சாருதேஷ்ணன், விதூரதன், பலராமர் முதலிய யாதவர்களனைவரும் புலிக்கூட்டம் போலவும் சிம்மக் கூட்டம் போலவும் மிகக் கோபித்து (அந்த) அர்ஜுனன்மீது யுத்தத்திற்குச் சென்றனர். யானைகளிலும் குதிரைகளிலும் தேர்களிலு மேறிக்கொண்ட அநேகம் கோடி யாதவர்கள் ஒருவ னாகக் காட்டிற் செல்லும் அர்ஜுனனை மிக்க கோபத்துடன் சூழ்ந்துகொண்டு அவனுடன் யுத்தஞ்செய்தனர். அர்ஜுனன் ஒருவனாகவே அவர்களுடன் மிக்க பயங்கரமான யுத்தத்தைச் செய்தான். அவனுக்கும் அவர்களுக்கும் சில நேரம் சமயுத்தம்

நடந்தது. அரசர்க்கரசரே! பிறகு, வீரனான அர்ஜுனன் யுத்தத்தில் பராக்கிரமத்தினால் யாதவர்களனைவரையும் கூர்மையான பாணங்களினால் தகைந்து ஜயித்து அந்த சுபத்ரையை அழைத்துக்கொண்டு இந்திரப்பிரஸ்தத்தில் பிரவேசித்தான். மகாராஜாவே! பல்குனனுடைய பராக்கிரமத்தை மறுபடியும் கேளும். அந்த அர்ஜுனன் அக்னியினால் கேட்கப்பட்ட காண்டவ வனத்தை அக்னிக்குக் கொடுத்தான். அரசரே! அர்ஜுனனால் அவ்வனம் கிடைத்தவுடன், அக்னி பகவான் காண்டவ வனத்தையும் அதிலுள்ளவற்றையும் பட்சிக்கத் தொடங்கினான். அரசர்க்கரசரே! அவ்வாறு பட்சிக்கின்ற அந்த அக்னியை மகாபலசாலியும் சமர்த்தனுமான ஸவ்யஸாசி தேரிலேறி வில்லையும் அம்புகளையும் எடுத்துத் தூணிகளைத் தரித்துத் தன் பராக்கிரமத்தினால் காத்தான். அதைக் கேட்டுத் தேவேந்திரன் மேகங்களை அனுப்பினான். அவனால் ஏவப்பட்ட அந்த மேகக் கூட்டங்கள் அதிக மழை பெய்தன. பிறகு, அர்ஜுனன் ஆகாயமெங்கும் பாணக்கூட்டங்களை விடுத்து அம்மேகக் கூட்டங்களைத் தடுத்துவிட்டான். அது ஆச்சரியமாக இருந்தது. மேகங்கள் தடுக்கப்பட்டதைக் கேட்டுக் கோபமுற்ற இந்திரன் வெள்ளை யானையிலேறிக்கொண்டு எல்லாத் தேவர்களின் கூட்டங்களினாலும் சூழப்பட்டவனாகிக் காண்டவ வனத்தைக் காப்பாற்றுவதற்காக அர்ஜுனனோடு யுத்தஞ்செய்யப்போனான். பாரதரே! ருத்ரர்களும் மருத்துக்களும் வசுக்களும் அசுவினி தேவர்களும் ஆதித்யர்களும் ஸாத்யர்களும் விச்வேதேவர்களும் கந்தர்வர்களும் மற்றுமுள்ள தேவக்கூட்டங்களுமாகிய தேவசிரேஷ்டர்கள் ஒன்றுசேர்ந்து ஆயுதங்களைத் தரித்துத் தம் பராக்கிரமத்தினால் ஜ்வலிப்பவர்களாகித் தனஞ்சயனைக் கொல்வதற்காக ஓடினர். அரசரே! பிரளய காலத்தில் என்ன பெரிய அபசகுனங்கள் காணப்படுமோ அவை யெல்லாம் அப்போது காணப்பட்டன. பிறகு, தேவக்கூட்டத்தாரெல்லாம் அர்ஜுனனை எதிர்த்தனர். அவர்களையும் அந்தத் தேவ சேனையையும் பார்த்து அர்ஜுனன் கலங்காமல் கூர்மையான அம்புகளைக் கையிற் பிடித்துப் பிரளய காலத்து யமன்போல இந்திரனையும் தேவர்களையும் நோக்கி நின்றான். அரசரே! பிறகு, இந்திராதிதேவர்கள் அனைவரும் மானிடனாகிய அந்த அர்ஜுனன்மேல் பாண வர்ஷங்களைப் பொழிந்தனர். சிறந்த பராக்கிரமசாலியான அர்ஜுனன் அப்போது விரைவாகக் காண்டீவத்தை எடுத்துக்கொண்டு பாணக்கூட்டங்களினால் தேவர்களின் பாணங்களைத் தடுத்தான். அரசரே! மிகச் சிறந்த பலமுள்ள தேவர்களனைவரும் கோபித்து மனிதனான அந்த ஸவ்ய

ஸாசியின்மேல் மறுபடியும் பற்பல அஸ்திரங்களைப் பொழிந்தனர். அர்ஜுனன் தேவர்களால் விடப்பட்ட அந்த அஸ்திர வர்ஷங்களைக் கூர்மையான அம்புகளினால் இரண்டாகவும் மூன்றாகவும் துணித்தான். மறுபடியும் பார்த்தன் கோபித்து வில்லை மண்டலமாக வளைத்துத் தேவக்கூட்டங்களைச் சுற்றிலும் கூர்மையான அம்புகளை விடுத்தான். பரத சிரேஷ்டரே! தேவக்கூட்டத்தினரெல்லாம் அர்ஜுனனுடன் பலமுறை யுத்தஞ்செய்து அவனுடைய பாணங்களினால் பீடிக்கப்பட்டவர்களாகி யுத்தத்தில் அவனை ஜயிக்க முடியாதென்று தெரிந்துகொண்டு சண்டையையொழித்தனர்; ஐராவதத்தையும் இந்திரனையும் விட்டுவிட்டு எல்லாத் திசைகளிலும் ஓடினர். ருத்ரர்களும் கந்தர்வர்களும் கிழக்கிலும், மருத்துக்கள் தெற்கிலும், வசுக்களும் அசுவினி தேவர்களும் மேற்கிலும், ஆதித்யர்களும் விச்வேதேவர்களும் வடக்கிலும் பயந்தோடினர். ஸாத்யர்கள் அர்ஜுனன பாணங்களை நினைத்துப் பயந்து மேனோக்கிச் சென்றனர். இவ்வாறு தேவக்கூட்டத்தினரெல்லாம விறபிடித்த அர்ஜுனனையே அடிக்கடி பார்த்துக்கொண்டு எல்லாத் திசைகளிலும ஓடினர். யுத்தத்தில் அந்தத் தேவக்கூட்டங்கள ஓடினதைக் கண்டு மகா பராக்கிரமசாலியான இந்திரன கோபித்து அர்ஜுனனமேல் பாணங்களைப் பொழிந்தான. அர்ஜுனன் மனிதனுயிருந்தும தேவர்க்கதிபதியான இந்திரனை அடித்தான். பிறகு அந்தத் தேவேந்திரன கல்மழை பொழிந்தான். அர்ஜுனன் மிகக் கோபித்து அந்தக் கல்மழையைப் பாணஙகளினால் தடுத்தான். தேவேந்திரனும ஸவ்யஸாசியின சிறந்த பராக்கிரமத்தை அறியக் கருதி அந்தக் கல்மழையை மிகவும் அதிகப்படுத்தினன். அர்ஜுனனும் இந்திரன மகிழும்படி மகா வேகமுள்ள அந்தக் கல் மழையைத் தன் பாணஙகளினால் அழித்தான. இந்திரன் அர்ஜுனனைக் கொல்வதற்காக அஙகதமெனனும மலையை மரங்களுடன் இருகரங்களாலும் பெயர்த்து அர்ஜுனன மீது எறிந்தான். உடனே அர்ஜுனன் வேகமுள்ளவையும் ஜ்வலிப்பவையும் குறிதவறாதவையுமான பாணஙகளினால் அந்தச் சிறந்த மலையை ஆயிரம பொடியாக அடித்தான். யுத்தத்திற சிறந்தவனாகிய அர்ஜுனன் இந்திரனையும பாணங்களால் அடித்தான். மகாராஜாவே! அதன்பிறகு, இந்திரன் பராக்கிரமமும பலமுமுள்ள வீரனாகிய அந்த அர்ஜுனனை ஜயிக்க முடியாதவனென்று அறிந்து, தன் பிள்ளையின் பராக்கிரமத்தினால் மிகுந்த சந்தோஷத்தை அடைந்தான். அரசரே! அப்பொழுது அந்த யுத்தத்தில் அர்ஜுனனை ஜயிப்பதற்குத் திறமையுள்ளவன் பிரசித்தமாகத் தேவலோகத்தில் யாருமில்லை. பிரம்மதேவரும்

சக்தரல்லர். சிறந்த பராக்கிரமமுள்ள அர்ஜுனன் அப்போது யக்ஷர்களையும் ராக்ஷஸர்களையும் நாகர்களையும் பாணங்களினால் அடித்து ஜ்வலிக்கின்ற அக்னியில் இடைவிடாமல் தள்ளினான். அப்போது தேவேந்திரனும் தேவக்கூட்டங்களும் ஆகாயத்தில் தடுக்கப்பட்டதைக் கண்டு, யாரும்அர்ஜுனனைத் தடுக்க முடியாமற்போயினர். முற்காலத்தில் கருடன் அமிர்தத்துக்காகத் தேவர்களை எப்படி ஜயித்தானோ அப்படியே அர்ஜுனனும் தேவர்களை ஜயித்து அக்னியைத் திருப்தியடைவித்தான். பாரதரே! அர்ஜுனன் அவ்வாறு தன் பராக்கிரமத்தினால் அக்னியைத் திருப்தியடைவித்துத் தேரையும் கொடியையும் குதிரைகளையும் திவ்யாஸ்திரங்களையும் காண்டீவமென்னும் சிறந்த வில்லையும் அம்பறாத்தூணிகளையும் கீர்த்தியையும் அடைந்தான். அரசர்க்கரசரே! பரத சிரேஷ்டரே! மறுபடியும் கேளும். அர்ஜுனன், வடதிசைக்குச் சென்று நகரங்களும் பர்வதங்களுமடங்கிய [1] ஒன்பது வர்ஷங்களையும் ஜயித்து ஜம்புத்தீவு முழுமையும் தன் வசப்படுத்திக்கொண்டு தன் பலத்தினால் அரசர்களனைவரையும் ஜயித்துக் கப்பம கட்டுவித்து ரத்னங்களெல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு திரும்பி நகரத்துக்குச் சென்று, மூத்தவனும் மகாத்மாவும் தர்மராஜாவுமான யுதிஷ்டிரனுக்கு ராஜசூய மகாயாகத்தைச் செய்வித்தான். அந்த அர்ஜுனன் இன்னும் அநேகம் பிரசித்தமான காரியங்களையும் முன்னே செய்தான். இந்த மூன்று லோகங்களிலும் பராக்கிரமத்தில் அர்ஜுனனுக்கொப்பானவன் யாருமில்லை. தேவர்களும் அசுரர்களும் யக்ஷர்களும் பிசாசர்களும் நாகர்களும் ராக்ஷஸர்களும் மகாரதர்களாகிய பீஷ்மர் துரோணர் முதலிய கௌரவர்களெல்லாரும உலகத்தில் வீரர்களும் வில்லாளிகளுமாகிய எல்லா அரசர்களும் யுத்தத்தில் அர்ஜுனனுடன் எதிர்யுத்தம் செய்யமாட்டார்கள். கௌரவரே! நான் எப்போதும் என் மனத்திலிருக்கும் அர்ஜுனனையே பார்த்துக் கொண்டும சிந்தித்துக்கொண்டும் அவன் பயத்தினால் நடுங்கிக்கொண்டுமிருக்கிறேன். பிதாவே! நான், பாணத்தையும காண்டீவத்தையும் தரித்து, பாசாயுதத்தைக் கையிற் பிடித்த யமனைப்போலிருக்கும அர்ஜுனனை எப்போதும் வீட்டுக்கு வீடு பார்க்கிறேன; பாரதரே! பயத்தினால் அநேகமாயிரம் அர்ஜுனர்களைப் பார்க்கிறேன். இந்த நகரமனைத்தும் அர்ஜுனர்களாயிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. பாரதரே! பிதாவே! யாருமில்லாத இடத்திலும் அர்ஜுனனைத்தான் பார்க்கிறேன். கனவில் அர்ஜுனனைக் கண்டு புத்திமயங்கித் தடுமாறுகிறேன். அர்ஜுனனையே

1 பூமியின் பிரிவுகள்

மனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் எனக்கு அசுவம் அக்ஷரம் அம்புஜம் முதலிய அகரத்தை முதலாகவுடைய பெயர்களே பயத்தை உண்டுபண்ணுகின்றன. தந்தையே! அர்ஜுனனைத் தவிர மற்ற வீரர்களிடத்தில் எனக்குப் பயமில்லை. யுத்தத்தில் அர்ஜுனன் பிரகலாதனையும் பலியையுங்கூட வென்றுவிடுவான். மகாராஜாவே! பிதாவே! அதனால், அவனோடு யுத்தஞ்செய்வது நமக்குத் தகாது. எனக்கு அவனுடைய பராக்கிரமம் தெரியும். நான் எப்போதும் துக்கப்படுகிறேன். முன்காலத்தில் தண்டகாவனத்தில் மாரீசனுக்கு மகாவீரரான ராமரிடத்தில் எப்படிப் பயமிருந்ததோ அப்படியே எனக்கு அர்ஜுனனிடத்தில் பயமிருக்கிறது' என்று சொன்னான்.

திருதராஷ்டிரன், 'யாராலும் அணுகமுடியாத மகாபராக்கிரமம் அர்ஜுனனிடத்திலிருப்பது எனக்குத் தெரியும். அந்த வீரனை அர்ஜுனனுக்கு வெறுக்கத்தக்கதாகிய சூதாட்டத்தையும் அஸ்திர யுத்தத்தையும் தீயசொற் சொல்வதையும் நீ எவ்வகையிலும் செய்யாதே. அவர்களிடத்தில் இவற்றைச் செய்தால் அர்ஜுனனுக்கும் உங்களுக்கும் சண்டை யுண்டாகும். மகனே! ஆதலால், நீ எப்போதும் அர்ஜுனனோடு சிநேகமாயிரு. பாரதனே! பூமியில் எந்த மனிதனாவது அர்ஜுனனுடன் சிநேகமாயிருப்பானாயின் அவனுக்கு மூவுலகங்களிலும் யாதொரு பயமுமில்லை. குழந்தாய்! ஆதலால், நீ எப்போதும் அர்ஜுனனுடன் சிநேகமாயிரு' என்று சொன்னான். துரியோதனன், 'கௌரவரே! சூதாட்டத்தில் தர்மராஜனுக்குக் கபடமாகத் தோல்வியுண்டாக்கப்பட்டது. பிதாவே! அதனாலேதான் நமக்கு ஜயம். வேறு உபாயத்தினால் நமக்கு ஜயம் வராது' என்று சொன்னான். திருதராஷ்டிரன், 'குழந்தாய்! பாரதனே! பாண்டவர்களைப்பற்றித் தந்திரஞ் செய்யலாகாது. முன்னமே பாண்டவர்களுக்கு விரோதமாக அநேக உபாயங்கள் உன்னால் செய்யப்பட்டன. குந்தி புத்திரர்கள் அந்த உபாயங்களெல்லாவற்றையும் தாண்டிவிட்டார்களன்றோ? குழந்தாய்! ஆதலால் நமது குலத்தோரும் பிரஜைகளும் உயிர் வாழ்ந்திருக்கும்படி நன்மையைச் செய்யும் விருப்பம் உனக்கு இருக்குமாயின் நீ உன் சிநேகிதரோடும் உறவினரோடும் சகோதரரோடுங்கூட அர்ஜுனனிடம் எப்போதும் சிநேகமாயிரு' என்று சொன்னான். ராஜாவான துரியோதனன், திருதராஷ்டிரன் சொன்னதைக் கேட்டுச் சிறிது நேரம் ஆலோசித்து விதியினால் ஏவப்பட்டுப் பேசலானான்.

'புருஷ சிரேஷ்டரே! பாண்டவர்கள் வனம் போவதைப் பந்தயமாக வைத்து மறுபடியும் ஆடுவோம். உமக்கு நன்மை

யுண்டாகும். இப்படித்தான் நாம் அவர்களை வசப்படுத்தமுடியும். சூதாட்டத்தில் தோற்றவர்கள் அவராயினும் நாமாயினும் தோலுடுத்துப் பன்னிரண்டு வருஷ காலம் மகாவனத்தில் இருக்கவேண்டும். பதின்மூன்றாவது வருஷம் சுற்றத்தாருக்குத் தெரியாமல் இருக்கவேண்டும். தெரிந்தால் திரும்பவும் பன்னிரண்டு வருஷ காலம் வனத்தில் வசிக்கவேண்டும். நாமாவது வசிப்போம்; அவர்களாவது வசிக்கட்டும். அந்த நிச்சயத்தோடு சூது நடக்கட்டும். பாண்டவர்கள் மறுபடியும் காய்களை யுருட்டி இந்தச் சூதை யாடட்டும். பரத சிரேஷ்டரான ராஜரே! இதுதான் நமக்கு முதன்மையான காரியம். இந்தச் சகுனி காய்கள் அனுகூலமாக வருவதென்னும் வித்தையை அறிந்தவன். நாம் மிகுதியான தனங்களினால் எதிரிகள் அணுகமுடியாத பெருஞ்சேனையையும் மித்திரர்களையும் மகிழ்வித்து வசப்படுத்தி ராஜ்யத்தில் வேரூன்றிவிடுவோம். அரசரே! அவர்கள் பதின்மூன்றாவது வருஷத்தின் விரதத்தைத் தாண்டுவாராயின் அவர்களை நாம் ஜயித்துவிடலாம். வீரரே! நீர் இதை அங்கீகரிக்க வேண்டும்' என்றான். திருதராஷ்டிரன், 'வழியில் நெடுந்தூரம் போயிருந்தபோதிலும் அந்தப் பாண்டவர்களை உன் இஷ்டப்படி சீக்கிரம் திரும்பிவரச்செய். பாண்டவர்கள் வந்து மறுபடியும் இந்தச் சூதாட்டத்தை நடத்தட்டும்' என்று சொன்னான். அப்போது துரோணர், ஸோமதத்தன், பாஹ்லீகன், கிருபர், விதுரர், அசுவத்தாமா, வைசிய புத்திரனும் வீரனுமாகிய யுயுத்ஸு, பூரிசிரவஸ், பீஷ்மர், மகாரதனான விகர்ணன் இவர்களெல்லோரும், 'சூதுவேண்டாம்; சமாதானமிருக்கட்டும்' என்று கூறினர். ராஜகாரியம் தெரிந்த நண்பரனைவரும் இஷ்டப்படாமலிருக்கையில், பிள்ளையினிடம் அன்புள்ள திருதராஷ்டிரன், பாண்டவர்களை அழைக்கச் செய்தான். ஜனமேஜய மகாராஜாவே! அப்போது தர்மம் தவறாதவளான காந்தாரி, பிள்ளைகளிடத்திலுள்ள அன்பினால் துயரப்பட்டுக்கொண்டு, ராஜாவான திருதராஷ்டிரனைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினாள்.

'மகா புத்திசாலியான விதுரர், துரியோதனன் பிறந்தபோதே, 'குலத்தைக் கெடுப்பவனாகிய இவனைப் பரலோகத்துக்கு அனுப்புவது நலம்' என்று சொன்னார். பாரதரே! இவன் பிறந்தவுடன் நரிபோல ஊளையிட்டானன்றோ? கௌரவர்களே! இந்தக் குலத்திற்கு இவன்தான் முடிவு என்பதை அறியுங்கள். பிரபுவே! பாரதரே! நீர் உம்முடைய பிழையினால் அகாதமான ஜலத்தில் முழுகிப்போகாதீர். விவேகமில்லாத சிறு பிள்ளைகளுடைய புத்தியை ஏற்றுக்கொள்ளாதீர். கொடியதாகிய வம்சக்ஷயத்திற்கு நீர் காரணமாகவேண்டாம். பரத சிரேஷ்டரே!

கட்டின அணையை எவன் உடைப்பன? அவிந்த நெருப்பை எவன் ஊதுவன்? அடங்கியிருக்கின்ற குந்தி புத்திரர்களை எவன் கோபமூட்டுவான்? எப்போதும் உம்மை மறவாமலிருக்கும் தர்மராஜாவுக்கு நானும் மறுபடியும் நினைவுமூட்டுவேன். புத்தி கெட்டவனுக்கு நன்மையையும் தீமையையும்பற்றிச் சாஸ்திரம் கற்பிக்காது. அரசரே! பெரியவன் எவ்வகையிலும் சிறுவர் புத்தியை எடுத்துக்கொள்ளலாகாது. உமது புத்திரர்களாகிய பாண்டவர்கள் உம்மையே நாதராகப் பெற்றிருக்கக் கடவர். அவர்கள் வேறுபடுத்தப்பட்டு உம்மை விட்டுவிடலாகாது. ஆதலால், குலத்தைக் கெடுக்கும் இந்தத் துரியோதனனை என சொற்படி விட்டுவிடலாம். அரசரே! பிள்ளையினிடத்திலுள்ள அன்பினால் நீர் அவ்வாறு செய்யாமற் போனீர். அதன் பயன்தான் குலமழிவதற்குக் காரணமாக வந்திருக்கிறதென்று அறியும். அடக்கமும தாமமும நீதியுமுள்ளதாகிய உமது புத்தியே உமக்கு இருக்கட்டும; தவருதீர். கொடுமை கலந்த ஐசுவரியமானது அழிந்துவிடும. நயத்தினால் விருத்தி அடைந்த ஐசுவரியமானது புத்திர பௌத்திரர் முதலான சந்ததிக்கெல்லாம செல்லும்' என்ருள். அப்போது திருதராஷ்டிர மகாராஜன், தர்மந் தெரிந்தவளான காந்தாரியைப பார்த்து, 'குலத்துக்கு நாசம் வந்தாலும வரட்டும்; என்னல் தடுக்க முடியாது. இவர்கள எப்படி நினைக்கிருர்களோ அப்படியே நடக்கட்டும. பாண்டவர்கள் திரும்பிவரட்டும். என் பிள்ளைகள் பாண்டவர்களுடன் திரும்பவும சூது ஆடட்டும்' என்று சொன்னன்.

---

### தொண்ணூற்றெட்டாவது அத்தியாயம்

## அனுத்யூத பர்வம் (தொடர்ச்சி)

**(யுதிஷ்டிரர் நடுவழியிலிருந்து திரும்பிவந்து திரும்பவும் சூதாடியது)**

பிறகு, புத்திமானன திருதராஷ்டிர மகாராஜாவின் ஆக்ஞையினல், பிராதிகாமியானவன், வெகு தூரம் சென்றிருந்த குந்தி புத்திரரான யுதிஷ்டிரரைப் பார்த்து, 'தர்மராஜாவே! சபையில் காய்களை வைத்துச் சொக்கட்டான் வஸ்திரம விரிக்கப்பட்டிருக்கிறது. பாண்டவரே! உமது பிதாவாகிய திருதராஷ்டிர மகாராஜர் உம்மை வந்து ஆடச் சொல்லுகிருர்' என்று சொன்னன். யுதிஷ்டிரர், 'பிராணிகள் நன்மையையும் தீமையையும் விதியின் கட்டளைப்படி அடைகின்றன. அவ்விரண்டும் விட்டுப்போவ

தில்லை; மறுபடியும் ஆடவேண்டுமா? சொக்கட்டான் ஆடுவதற்காக அழைப்பது கெடுதலுக்குக் காரணமென்று தெரிந்திருந்தாலும் கிழவருடைய கட்டளையினால் அதை நான் விடமுடியவில்லை. பொன்மயமான மிருகம் இருப்பதில்லை. ஆகிலும், ராமர் பொன்மானின்மேல் ஆசைப்பட்டார். கஷ்டம் நெருங்கின காலங்களில் புத்திகளும் மிகவும் மாறிப்போகின்றன' என்று சொல்லிக்கொண்டே தம் சகோதரர்களுடன் திரும்பினார். சகுனியின் மோசத்தை அறிந்திருந்தும் அவர் மறுபடியும் சூதாடப்போனார். மகாரதர்களும் பரதசிரேஷ்டர்களுமான அந்தப் பாண்டவர்கள் மறுபடியும் சபைக்குட் பிரவேசித்து வேண்டியவர்களின் உள்ளங்களைத் துயரப்படுத்தினார். பாண்டவர்கள் விதியினால் பீடிக்கப்பட்டு எல்லா ஜனங்களும் அழிவதற்காக மறுமுறையும் சூதாடுவதில் தம் தம் தகுதிப்படி உட்கார்ந்தனர். அப்போது சகுனி, 'ஓ! பரத சிரேஷ்டனான யுதிஷ்டிரா! கிழவர் தனத்தை உங்களுக்குக் கொடுத்துவிட்டது புகழத்தக்கதுதான். ஆனால், பெருவிலை பெற்ற பந்தயம் ஒன்றைமட்டும் கேள். நாங்கள் உங்களால் சூதாடி ஜயிக்கப்பட்டாலும் புள்ளிமான் தோலையுடுத்துப் பன்னிரண்டு வருஷம் மகாவனத்திலிருப்போம்; பதின்மூன்றாம் வருஷம் உறவினரால் அறியப்படாமல் இருப்போம்: அறியப்பட்டால் மறுபடியும் பன்னிரண்டு வருஷகாலம் வனத்தில் வசிப்போம். நீங்கள் எங்களால் ஜயிக்கப்பட்டாலும் கிருஷ்ணையுடன் கூடத் தோலாடை யுடுத்துப் பன்னிரண்டு வருஷம் வனத்தில் வசியுங்கள்; பதின்மூன்றாவது வருஷம் உறவினரால் அறியப்படாமல் வசியுங்கள்; அறியப்பட்டால் திரும்பவும் பன்னிரண்டு வருஷம் வனத்தில் வசியுங்கள்; பதின்மூன்றாவது வருஷம் சரியாக நிறைவேறினால் நீங்களானாலும் நாங்களானாலும் மறுபடியும் வழக்கம்போலத் தங்கள் தங்கள் ராஜ்யத்தைப் பெறலாம். பாரதா! யுதிஷ்டிரா! இந்த நிச்சயம் செய்துகொண்டு எம்முடன் மறுதடவையும் காய்களை யுருட்டிச் சூதாட வா' என்று சொன்னான். உடனே, சபையிலுள்ளவர்களனைவரும் மனத்தில் வருத்தமுற்றுச் சபை நடுவில் கைகளை விரைவாகத் தூக்கி, 'ஆ! ஆ! சீ! இந்தப் பெரும் பயத்தைச் சுற்றத்தவர் தர்மராஜாவுக்குத் தெரிவிக்கவில்லையே! இந்தப் பரதசிரேஷ்டன் தன் புத்தியினால் அறிவானோ அறியானோ' என்று கூறினார். ஜனங்களின் மிகுதியான சொற்களைக் கேட்டும், தர்மராஜர், வெட்கத்தினாலும் தர்மத்திற்காகவும் மறுமுறையும் சூதாடப் போனார். மகா புத்திசாலியான தர்மராஜர் தெரிந்திருந்தும் கௌரவர்களுக்கு நாசம் கிட்டியிருந்தாலும் இருக்கலாமென்று நினைத்துத் திரும்பவும்

சூதாடினர். அவர், 'சகுனியே! தன் தர்மத்தைக் காப்பாற்றுகிற என் போன்ற அரசன் அழைக்கப்பட்ட பிறகு திரும்பிப் போவதெப்படி? ஆதலால், உன்னுடன் சூதாடுகிறேன்' என்று சொன்னார். அதற்குச் சகுனி, 'பாண்டவர்களே! ரிஷபங்களும் குதிரைகளும் பசுக்களும் செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் யானைகளும் பொக்கிஷமும் பொன்னும் வேலைக்காரிகளும் வேலைக்காரர்களும் அளவற்றனவாக நிரம்பியிருக்கின்றன. அவற்றையெல்லாம் விட்டுக் காட்டில் வசிப்பது ஒன்றே நமக்குப் பந்தயம். நீங்களாயினும் நாங்களாயினும் ஜயிக்கப்பட்டால் வனத்தை அடைந்து வசிக்கவேண்டும். பதின்மூன்றாவது வருஷம் ஊறவினரால் அறியப்படாமலிருக்கவேண்டும். புருஷ சிரேஷ்டர்களே! தர்மராஜாவே! இந்த ஒரே பந்தயத்தை நிச்சயஞ்செய்து கொண்டு ஆடுவோம்' என்று சொன்னான். ஜனமேஜய ராஜாவே! தர்மராஜாவான யுதிஷ்டிரர், விதியின் பலத்தினால் இவ்வாறு தூண்டப்பட்டு, பீஷ்மர், துரோணர், புத்திமானான விதுரர், யுயுத்ஸு, கிருபர், ஸஞ்சயன், காந்தாரி, குந்தி, பீமார்ஜுனர்கள், நகுல சகதேவர்கள், வீரனான விகர்ணன், திரௌபதி, அசுவத்தாமா, ஸோமதத்தன், புத்திசாலியான பாஹ்லிகன் ஆகிய இவர்களால் அடிக்கடி தடுக்கப்பட்டும் நிறுத்தவில்லை. இவ்வாறு மேற்சொன்னவர்கள் நன்மையைக் கருதித் தடுத்தும் தேவகாரியமாகிய பூபாரம் தொலைவது நிறைவேறுவதற்காகச் சிறிது நேரம் [1] கலியை அடைந்தார். அரசரே! கலியினால் பிரவேசிக்கப்பட்டவராய் 'அப்படியே யாகட்டும்' என்று சகுனிக்கு மறுமொழி கூறி வனவாசத்தை ஒப்புக்கொண்டு ஆடினர். தர்மராஜர் அந்தப் பந்தயத்தை ஒப்புக்கொண்டார். சுபல புத்திரனான சகுனி காய்களை எடுத்தான்; 'ஜயித்தாயிற்று' என்றே யுதிஷ்டிரருக்குச் சொன்னான்.

---

## தொண்ணூற்றேன்பதாவது அத்தியாயம்

## அநுத்யூத பர்வம் (தொடர்ச்சி)

**(பாண்டவர்கள் மறுமுறையும் சூதில் தோற்று வனத்திற்குப் புறப்படும்போது கௌரவர்களை வதஞ்செய்வதாகப் பிரதிக்ஞை செய்தது)**

தோல்வியடைந்த பாண்டவர்கள் உடனே வனவாச தீக்ஷை செய்துகொண்டு வரிசைப்படி தோல் உத்தரீயங்களை எடுத்துக்கொண்டனர். பகைவர்களை அடக்குகிறவர்களான பாண்டவர்கள் ராஜ்யம் அபகரிக்கப்பட்டுத் தோல்களைப் போர்த்

1 பாபம்.

துக்கொண்டு வனவாசத்திற்காகப் புறப்பட்டதைக் கண்டு, துச்சாஸனன் பேசலானான்: 'மகாத்மாவாகிய துரியோதன மகாராஜாவின் ஆக்ஞாசக்கரம் சுழலத் தொடங்கிற்று. பாண்டவர்கள் தோற்றுப் பெரிய ஆபத்தை அடைந்தனர். [1] இப்போதுதான் தேவர்கள் [2] இடமில்லாத சம வழிகளில் செல்லுகின்றனர். ஏனெனில், குணங்களில் சிறந்தவர்களும் வயதில் பெரியோருமாகிய நாம் அயலாரைவிடச் சிறப்புற்றிருக்கிறோம். பாண்டவர்கள் நீடூழிகாலம் முடிவில்லாத நரகத்தில் தள்ளப்பட்டனர். அநேக வருஷ காலம சுகமும் கெட்டு ராஜ்யத்தையு மிழந்து போயினர். எவர்கள் தனத்தினால் மதங்கொண்டு திருதராஷ்டிர புத்திரர்களை விட்டனரோ அந்தப் பாண்டவர்கள் தோற்றுப் பொருளிழந்து காட்டுக்குச் செல்லப்போகின்றனர். இவர்களுடைய விசித்திரமான கவசங்களையும் பிரகாசிக்கின்ற உயர்ந்த வஸ்திரங்களையும மனிதர்கள் களையக்கடவர். சகுனியினுடைய பந்தயத்தை ஒப்புக்கொண்டபடி எல்லாரும் புள்ளிமான் தோல்களை உடுத்துவிக்கபபடட்டும். உலகங்களில் தங்களைப்போன்ற மனிதர்களில்லை யென்று மனத்தில் எப்போதும் நினைத்துக்கொண்டிருந்த இந்தப் பாண்டவர்கள், இப்போது விபரீதத்தை அடைந்து எள்ளுப் பதர்கள்போலப் பயன்படாதவர்களாகித் தங்களைச் சரியாகத் தெரிந்துகொள்வர். இப்படிப்பட்ட அகங்காரமுள்ள மிக்க பலசாலிகளான பாண்டவர்கள் இந்தப் புள்ளிமான் தோலாடை உடுத்தது யக்ஞதீக்ஷை செய்துகொள்ளாதவன் தோலுடுப்பதுபோலிருக்கிறது ; பாருங்கள். சிறந்த அறிவுள்ளவனும் ஸோமக வம்சத்தவனுமாகிய துருபதன், தன் பெண்ணான பாஞ்சாலியைப் பாண்டவர்களுக்குக் கொடுத்ததனால் இவ்வுலகத்தில் ஒரு பாக்கியமும் பெறாதவனானான். ஆண்மையற்ற பாண்டவர்கள் திரௌபதிக்குக் கணவர்கள். திரௌபதியே ! அற்பமான உடைகளை உடுத்து மேலே தோல் போர்த்துச் செல்வமில்லாமலும் ராஜ்யமில்லாமலும் காட்டிலிருக்கும் கணவர்களைக் கண்டு நீ என்ன சந்தோஷத்தை அடையப்போகிறாய்? எங்களுள் யாரை நீ விரும்புகிறாயோ அந்த மற்றொரு கணவனை வரித்துக்கொள். பொறுமையும் இந்திரிய நிக்ரகமுமுள்ளவர்களும் சிறந்த ஐசுவரியமுள்ளவர்களுமாகிய இந்தக் கௌரவர்க ளனைவரும் கூடியிருக்கின்றனர். இவர்களில் ஒருவனைக் கணவனாக வரித்துக்கொள்; இந்தக் காலவித்தியாசம் உனக்கு வராது. எள்ளின் பதரும்

---

1 தங்களுக்கு ஏக ராஜ்யம் வந்ததுதான் சரியான தெய்விகம் என்பது கருத்து.

2 அங்கே வந்திருந்த ஜனங்களின் நெருக்கத்தினால் இடமில்லாத வழி என்பது பழைய உரை.

தோலால் செய்த மிருகமும் [1] நெற்பதரும் எப்படியோ அப்படியே பாண்டவர்க ளனைவரும் பயனற்றவர்கள். நிலைமை தவறின பாண்டவர்களை அனுசரித்து உனக்கென்ன ஆவது? பதரான எள்ளை ஆட்டுவது வீண் சிரமந்தானே?' என்றான். கொடியவனாகிய அந்தத் துச்சாஸனன் பாண்டவர்களைப் பார்த்து இவ்வகையான கடுஞ் சொற்களைச் சொன்னான்.

பீமஸேனன், அதைக் கேட்டு மிகவும் பொருதவனாகி அவனைப் பயமுறுத்திக் கோபத்துடன் விரைவாக அவனிடம் சென்று இமயமலையிலுள்ள சிம்மம் நரியை வளைப்பதுபோல அவனை வளைத்துக்கொண்டு, 'கொடியவனே! பாபிகள் பேசுவதும், பயன்படாததுமான பேச்சைப் பேசுகிறாய். சகுனியின் வித்தையா லன்றோ நீ அரசர்கள் நடுவில் தற்புகழ்ச்சி செய்கிறாய்? இப்போது சொல்லம்புகளினால் எங்கள் உள்ளங்களை எப்படி நீ மிகவும் குத்துகிறாயோ அப்படியே யுத்தத்தில் உன் இருதயத்தைப் பிளந்து உனக்கு இதனை நினைவூட்டுவேன். இன்னும் எவர்கள் கோபத்துக்கும் பொருளாசைக்கும் வசப்பட்டு உன்னுடன் சேர்ந்து உன்னைக் காப்பாற்றுகின்றனரோ அவர்களையும் அவர்களைச் சேர்ந்தவர்களையும் யமலோகத்துக்கு அனுப்புவேன்' என்று சொன்னான். தர்ம மார்க்கத்தில் கட்டுப்பட்டுத் தோலாடையுடுத்த பீமஸேனன் இவ்வாறு பேசும்போது துச்சாஸனன் வெட்கமின்றி, 'மாடே! மாடே!' என்று அவனை அழைத்துக் கௌரவர்களின் நடுவில் கூத்தாடினான். பீமஸேனன், 'துச்சாஸனா! கொடியவனே! கொடுஞ்சொற் சொல்லத்தான் உன்னால் முடியும். ஏமாற்றிப் பொருளை அடைந்தபிறகு தன்னைப் புகழ்ந்துகொள்வது எவனுக்குத் தகும்? குந்தி புத்திரனான விருகோதரன், யுத்தத்தில் உன் மார்பைப் பிளந்து உதிரத்தைக் குடியாவிட்டால் புண்ணியவான்கள் செல்லும் உலகங்களுக்குச் செல்லமாட்டான். வெகு சீக்கிரத்தில் யுத்தத்தில் எல்லா வில்லாளிகளும் பார்த்திருக்கையில் திருதராஷ்டிரன் பிள்ளைகளைக் கொன்றபிறகு ஓய்வேன். இதை உனக்கு உண்மையாகச் சொல்லுகிறேன்' என்றான். ராஜாவும் புத்தியில்லாதவனுமாகிய துரியோதனன், பாண்டவர்கள் சபையினின்று வெளியே போகும்போது, சிம்மம்போல உல்லாசமாக நடக்கும் பீமஸேனனுடைய நடையை உற்சாகத்துடன் தன்னடையினால் நடந்து காட்டினான். விருகோதரன், பாதித் தேகத்தைத் திருப்பி அவனைப் பார்த்து, 'மூடா! இவ்வளவோடு முடிவானதொன்று மில்லை. வெகு சீக்கிரத்தில் உன் சுற்றத்தாருடன் நீ கொல்லப்படும்போது இதனை உனக்கு

1 மூலத்தில் 'மாகயவா' என்றிருக்கிறது.

ஞாபகப்படுத்தி மறுமொழி கூறுவேன்' என்று சொன்னான். பலமும் மானமுமுள்ள பீமஸேனன், இவ்வாறு தன்னைச் செய்த அவமானத்தைப் பார்த்துக் கோபத்தை அடக்கிக்கொண்டு வெளியிற் போவதற்காகத் தர்மராஜாவைப் பின் செல்லும் போது குரு வம்சத்தவரின் சபையில் பின்வருமாறு சொல்ல லானான் :

'நான் துரியோதனனைக் கொல்வேன்; தனஞ்சயன் கர்ணனைக் கொல்வான்; சூதாடத் தெரிந்த சகுனியைச் சகதேவன் கொல்வன்; இந்தச் சபை நடுவில் மறுபடியும் ஒரு பெருஞ் சொல்லைச் சொல்வேன். நமக்கு யுத்தம் நேரிடும்போது தேவர்கள் அதை நிறைவேறச் செய்வர். அதாவது, இந்தப் பாவியான துரியோதனனை யுத்தத்தில் கதையினால் கொல்லப் போகிறேன். உடனே, தரையில் விழுந்திருக்கும் இவன் தலையைக் காலால் மிதிப்பேன். பேச்சில் சூரனும் கொடியவனும் துராத்மாவுமாகிய இந்தத் துச்சாஸனனுடைய ரத்தத்தைச் சிங்கம்போலக் குடிப்பேன்' என்றான். அர்ஜுனன், 'பீமஸேனா! நீ பகைக்கத்தக்கவர்கள் இங்கில்லையே! வீட்டில் சுகமாக வளர்ந்து கர்வமுள்ளவர்கள் பெரும் பயத்தை அறியார். பீமா! சிறந்தவர்களின் கருத்து இவ்வாறு சொல்லினால் அறியப்படுவதில்லையே. இதற்குப் பதினான்காவது வருஷத்தில் எது நேரிடுமோ அதனை யாவரும் பார்ப்பர்' என்று சொன்னான். பீமசேனன், 'துரியோதனன், கர்ணன், துராத்மாவான சகுனி துச்சாஸனன் இந்நால்வருடைய ரத்தத்தையும் பூமி குடிக்கப் போகிறது' என்று சொன்னான். அர்ஜுனன், 'பீமஸேனா! அசூயைப்படுகிறவனும் வேடிக்கை பார்ப்பவனும் மிகப் பேசுகிறவனும் தன்னைப் புகழுகிறவனுமாகிய கர்ணனை உன் சொற்படி நான் யுத்தத்தில் கொல்வேன். பீமசேனன் சந்தோஷப்படுவதற்காக அர்ஜுனன் பிரதிக்ஞை செய்கிறான். கர்ணனையும் கர்ணனைச் சேர்ந்தவர்களையும் யுத்தத்தில் பாணங்களினால் கொல்வேன். மற்றுமுள்ள எந்த அரசர்கள் புத்திமயங்கி எனக்கு எதிர்யுத்தம் செய்வரோ அவர்களனைவரையும் பாணங்களினால் யமலோகத்திற்கு நான் அனுப்புவேன். என்னுடைய சத்தியம் தவறுமானால் இமயமலை இடம் விட்டு விலகும். சூரியன் ஒளியற்றுப்போவான். சந்திரனை விட்டுக் குளிர்ச்சி போய்விடும். இதற்குப் பதினான்காவது வருஷத்தில் துரியோதனன் மரியாதை செய்து ராஜ்யத்தைக் கொடாமற் போவானாயின் நான் சொன்னவை யெல்லாம் சத்தியமாகும்' என்று சொன்னான். அர்ஜுனன் இவ்வாறு பேசினவுடன், அழகும் பராக்கிரமமுமுள்ள

மாத்ரியின் புதல்வனான சகதேவன் சகுனியின் வதத்தைச் செய்யக் கருதிப் பருத்த கையைத் தூக்கிக்கொண்டு கோபத்தினுற் சிவந்த கண்களுடன் பன்னகம்போற் சீறிப் பின்வருமாறு சொல்லலானுன்: 'காந்தார தேசத்தரசர்களின் புகழைக் கெடுத்த மூடா! எவற்றைப் பாச்சிகைகளென்று நீ நினைக்கிருயோ அவை பாச்சிகைகளல்ல; யுத்தத்தில் நீ வேண்டுகிற கூரிய அம்புகளே. உன்னையும் உன் பந்துக்களையும்பற்றிப் பீமன் சொன்னபடியே அந்தக் காரியத்தை நான் நிறைவேற்றுவேன். நீ செய்யவேண்டியவற்றையெல்லாம் செய்துமுடித்துக்கொள். சுபல புத்திரனே! நீ க்ஷத்திரிய தர்மப்படி யுத்தத்தில் எதிர் நிற்பாயாயின் என் பராக்கிரமத்தினுல் உன்னையும் உன் பந்துக்களையும் இங்கேயே கொன்றுவிடுவேன்' என்றுன். ஜனமேஜய ராஜாவே! சகதேவன் சொல்லைக் கேட்டு, மனிதர்களுள் மிக்க அழகான நகுலனும் சொல்லலானுன்: 'துரியோதனனுடைய விருப்பத்தை அனுசரித்த திருதராஷ்டிர புத்திரர்கள் எவர்கள் திரௌபதியைப் பார்த்துக் கொடுஞ்சொற்களைச் சொன்னுர்களோ, கெட்ட நடையுள்ளவர்களும் காலத்தினுல் ஏவப்பட்டவர்களும் மரணம் கிட்டினவர்களுமாகிய அவர்களில் பெரும் பான்மையோர்களை நான் யமலோகத்திற் சேர்ப்பிப்பேன். சகுனியின் அன்புள்ள மகனும் கொடியவனும் மனிதர்களில் இழிவானவனுமாகிய உலூகனென்னும் துராத்மாவையும் யுத்தத்தில் கொல்வேன். நான் திரௌபதியின் கருத்தை அனுசரித்து தர்மராஜாவின் கட்டளையினுல் பூமியில் திருதராஷ்டிரன் பிள்ளைகளில்லாமலிருக்கும்படி வெகு சீக்கிரத்திற் செய்வேன்' என்றுன். நீளமான கைகளையுடையவர்களும் புருஷ சிரேஷ்டர்களுமான அந்தப் பாண்டவர்களனைவரும் இவ்வாறு அநேகம் பிரதிக்ஞைகளைச் செய்து திருதராஷ்டிரனிடம் சென்றனர்.

---

## நூறுவது அத்தியாயம்

## அனுத்யூத பர்வம் (தொடர்ச்சி)

### (திருதராஷ்டிரன் முதலானவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தர்மபுத்திரர் புறப்பட்டது)

யுதிஷ்டிரர், 'பரத வம்சத்தவரையும் பிராய முதிர்ந்த பிதாமகராகிய பீஷ்மரையும் ராஜாவான ஸோமதத்தனையும் மகாராஜாவான பாஹ்லீகனையும் மற்றுமுள்ள அரசர்களையும் துரோணரையும் கிருபரையும் அசுவத்தாமாவையும் விதுரரை

யும் திருதராஷ்டிரரையும் திருதராஷ்டிர புத்திரர்களெல்லாரை யும் மகாவீரனான ஸோமதத்தன் மகனையும் சிறந்த புத்திமானான விகர்ணனையும் யுயுத்ஸுவையும் ஸஞ்சயனையும் மற்றுமுள்ள சபையோரையும் பெரும் பாக்கியத்தையுடைய காந்தாரியையும் என் தாயாரான குந்தியையும் விடை கேட்டுக்கொள்ளுகிறேன். விடைபெற்றுக்கொண்டு சென்று திரும்பி வந்து உங்களெல்லா ரையும் காண்பேன்' என்று சொன்னார். அப்போது அவர்கள் வெட்கத்தினால் குன்றித் தர்மராஜாவைப் பார்த்து ஒன்றும் பேசவில்லை. மனத்தில்மட்டும் சிறந்த புத்தியுள்ள தர்மராஜாவி னுடைய க்ஷேமத்தைப் பிரார்த்தித்தனர். விதுரர், 'ராஜ புத்திரியும் பூஜிக்கத்தக்கவளும் கஷ்டந் தாங்காதவளும் எப் போதும் சௌக்கியத்திலேயே பழகினவளும் வயது சென்றவளு மான குந்தி காட்டுக்குச் செல்லத்தகாதவள். மேன்மை பொருந் தின குந்தி இங்கேயே என் வீட்டில் மரியாதைசெய்யப்பட்டு வசிப்பாள். பாண்டவர்களே! இதனை அறியுங்கள். உங்களெல் லோருக்கும் ஆரோக்கியம் உண்டாகட்டும்' என்று சொன்னார். (அவரைப் பார்த்து) பாண்டவர்களெல்லாரும், 'குற்றமற்றவரே! நீர் எங்களுக்கு எப்படிச் சொல்லுகிறீரோ அப்படியே ஆகட்டும். நீர் தந்தையின் சகோதரர்; தந்தைக்குச் சமமானவர். நாங்கள் உம்மையே நம்பியிருப்பவர்கள். நீர்தாம் எங்களுக்கு முதன்மை யான ஆசாரியர். எல்லாம் நீர் ஆக்ஞாபிக்கிறபடிதான். சிறந்த புத்தியுள்ளவரே! இன்னும் நாங்கள் செய்யத்தக்கது யாதோ அதையும் கட்டளையிடக்கடவீர்' என்று கூறினர். விதுரர், 'பரத சிரேஷ்டனான யுதிஷ்டிரா! நான் சொல்லுகிறதைத் தெரிந்து கொள். அதர்மத்தினால் ஜயிக்கப்பட்ட ஒருவன் தோல்விக்காகத் துன்பப்படுவதில்லை. உனக்குத் தர்மந் தெரியும். அர்ஜுனன் யுத்தத்தில் ஜயிப்பவன். பீமஸேனன் பகைவரைக் கொல்லுகிற வன். நகுலன் பொருளீட்டுகிறவன். சகதேவன் பொருளைக் காப்பாற்றுகிறவன். தௌம்யர் பிரம்மஞானிகளிற் சிறந்தவர். திரௌபதி அறம் பொருள்களை அறிந்தவள்; தர்மத்தை அனுஷ் டிப்பவள். நீங்களனைவரும் ஒருவர்மேலொருவர் அன்புள்ளவர் கள்; பார்ப்பவர்களுக்கும் பிரியமானவர்கள்; எப்போதும் சந் தோஷமுள்ளவர்கள். அயலார் உங்களைக் கலைக்கமுடியாது. இவ் வுலகத்தில் உங்களைப் பார்த்து ஆசைப்படாதவர் யார்? பார தனே! இந்த உன் மனவுறுதி எல்லா க்ஷேமங்களுக்கும் காரணம். உன் பகைவன் இந்திரனுக்கொப்பானவனாயிருந்தாலும் இந்தக் குணத்திற்கு எதிர்நிற்கமாட்டான். முன்னர் இமயமலையில் மேரு ஸாவர்ணி முனிவராலும் வாரணாவத நகரில் வியாஸ பகவானாலும்

பிருகு துங்கம் என்னும் மலையில் (பரசு) ராமராலும் திருஷத்வதி யென்னும் நகரத்தில் பரமசிவனாலும் உபதேசிக்கப்பெற்றிருக்கிறாய். கல்மாஷி நதிக்கரையில் வசித்த பிருகு மகரிஷிக்கு நீ சிஷ்யனாக இருந்தபோது பிரஜைகளை மகிழ்விப்பதைப்பற்றி அவர் உபதேசித்ததையும் கேட்டிருக்கிறாய். நாரதர் எந்தக் காலமும் உன்னைக் காண்பவர். இந்தத் தௌமியர்தாம் உனக்குப் புரோகிதராயிருக்கிறார். ரிஷிகளால் கொண்டாடப்பட்ட அந்த உன் புத்தியை ஆபத்துக் காலத்தில் நீ விடாதே. பாண்டு புத்திரனே! நீ அறிவினால் இளையின் புத்திரனான புரூரவனையும் மிஞ்சுகிறாய்; பராக்கிரமத்தினால் மற்ற ராஜாக்களையும், தர்மத்தை அனுஷ்டிப்பதனால் ரிஷிகளையும் ஜயிக்கிறாய். இந்திரனுடைய ஜயத்திலும் யமனுடைய பொறுமையிலும் குபேரனுடைய தானத்திலும் வருணனுடைய இந்திரிய ஜயத்திலும் மனம் வைத்திருக்கிறாய். தன்னைத் தருகையையும் குளிர்ச்சியாயிருப்பதையும் ஜீவனத்திற்குக் காரணமாயிருப்பதையும ஜலத்தினிடமிருந்தும், பொறுமையைப் பூமியினிடமிருந்தும், நிரம்பின பிரதாபத்தைச் சூரியனிடமிருந்தும், தேக பலத்தை வாயுவினிடமிருந்தும், தனக்கு வேண்டின மற்ற சிறப்புக்களை எல்லாம் பிராணிகளிடத்திலிருந்தும் பெறுவாயாக. உங்களுக்கு ஆரோக்கியமும் க்ஷேமமும் உண்டாகக்கடவன. திருமபி வந்த உங்களைப் பார்க்கக்கடவேன். யுதிஷ்டிரா! ஆபத்துக்குரிய தர்மங்களிலும் ராஜ்ய கஷ்டங்களிலும் மற்ற எல்லாக் காரியங்களிலும் காலந்தோறும் சரியாக நடக்கக்கடவாய். குந்தி புத்திரனே! பாரதனே! விடைபெற்றுக் கொள்ளுகிறேன். நன்மையைப் பெறுவாயாக. காரியம் நிறைவேறி க்ஷேமமாகத் திரும்பிவந்த உன்னைப் பார்க்கக்கடவோம். உங்களிடத்தில் பூர்வஜன்மங்களிற் செய்த பாபத்தையும் கிஞ்சித்தேனும் யாரும் அறியார்' என்று சொன்னார். சத்தியத்தில் உற்சாகமுடைய பாண்டு புத்திரரான யுதிஷ்டிரர் விதுரரால் இவ்வாறு சொல்லப்பெற்று, 'அப்படியே' என்று சொல்லிப் பீஷ்மரையும் துரோணரையும் நமஸ்கரித்துப் புறப்பட்டார்.

---

நூற்றோராவது அத்தியாயம்

## அநுத்யூத பர்வம் (தொடர்ச்சி)

### (குந்தியினிடம் சொல்லிக்கொண்டு பாண்டவர்கள் வனம் சென்றது)

ஜனமேஜய ராஜாவே! அந்தத் தர்மராஜர் வனத்திற்குப் புறப்பட்டபோது துயரமுற்ற ஜனங்கள் அவரைப் பார்ப்ப

தற்காக நான்கு பக்கங்களிலும் உயர்ந்த மாளிகைகளிலும் தேவாலயங்களின்மேலும் கோபுரங்களெல்லாவற்றிலும் மரங்களெல்லாவற்றிலும் ஏறினர். அவர்கள் ஸ்திரீகளுடன் ஏறித் தூரத்திலிருந்து பார்த்தனர். அந்தக் காலத்தில் அந்த வீதிகள் ஜனங்கள் நிறைந்து நடக்கமுடியாமலிருந்தன. ஜனங்கள் மேற்கண்ட இடங்களிலேறித் துயரத்துடன் தலைகுனிந்து பாண்டவர்களை நோக்கினர். குடையும் வஸ்திரங்களும் ஆபரணங்களுமில்லாமல் மரவுரியையும் தோலையும் உடுத்துக் கால்நடையாகச் செல்லுகின்ற தர்மபுத்திரரைப் பார்த்து மனத்தில் மிக்க கஷ்டமுள்ள ஜனங்கள் பலவிதமான சொற்களைச் சொன்னார்கள்.

'எவர் போகும்போது பெருகு சதுரங்கதளம் பின்சென்று கொண்டிருந்ததோ அவர் கிருஷ்ணையுடன் தனித்துப் போக, சகோதரர்களான நாலு பாண்டவர்களும் புரோகிதரான தௌமியரும் மாத்திரம் பின்செல்லுகின்றனர். மகாத்மாவான யுதிஷ்டிரர், சகுனி மோசஞ்செய்ததற்காக வில்லெடுத்த பீமார்ஜுனர்களைத் தடுத்து ராஜ்யத்தையும் விட்டுத் தர்மத்திலேயே நிலைநின்றார். எவளை இதற்குமுன் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் தேவர்களும் பார்க்கமுடியாதோ அந்தத் திரௌபதியை இப்போது ராஜமார்க்கத்தில் போகும் ஜனங்களும் பார்க்கின்றனர். உயர்ந்த வாசனைகள் பூசிக்கொள்ளத்தக்கவளும் செஞ்சந்தனம் அணிந்து கொள்ளுகிறவளுமான திரௌபதியை மழையும் வெப்பமும் குளிர்ச்சியும் சீக்கிரத்தில் நிறம் மாறச்செய்யப்போகின்றன. இப்போது குந்திதேவி ஏதோ ஓர் ஆவேசங்கொண்டுதான் பேசுவாளென்பது நிச்சயம். இந்தக் காலத்தில் அவள் பிள்ளைகளையும் மருமகளையும் பார்க்கமுடியாது. குணமில்லாத பிள்ளையையும் துக்கப்படும்போது பார்ப்பதற்கு முடியாது. யாருடைய ஒழுக்கத்தினால் இவ்வுலகமனைத்தும் வசப்படுத்தப்பட்டிருக்கிறதோ அவரைப்பற்றிச் சொல்லவேண்டுமா? துன்பம் செய்யாமையும் தயையும் மனவுறுதியும் ஒழுக்கமும் அடக்கமும் மன ஒழிவுமாகிய இவ்வறு குணங்களும் புருஷசிரேஷ்டரான தர்மராஜரை அலங்கரிக்கின்றன. அதனால் இவருடைய கஷ்டத்தினால் பிரஜைகள் மிகத் துயரப்படுகின்றனர். கோடைகாலத்தில் தண்ணீர் வற்றிப்போவதனால் நீரிலுள்ள மீன் முதலிய ஜந்துக்கள் வருத்தப்படுவதுபோலப் பூமிக்குத் தலைவனாகிய தர்மராஜருடைய கஷ்டத்தினால் உலகமெல்லாம் துயரப்படுகிறது. வேரறுத்துவிட்டால் மரம் மலர்களோடும் காய்களோடும் வாடுகிறது; இந்தச் சிறந்த மகிமையுள்ள தர்மராஜர் மனிதர்களுக்கு வேர்;

மற்ற ஜனங்கள் இவருக்குப் பூவுங் காயும் இலையும் கிளைகளுமா யிருக்கின்றனர். ஆதலால், நாமும் அங்கே அவர் சகோதரர்கள் போலவே புத்திரர்களோடும் சுற்றத்தாரோடுங்கூடத் தர்மராஜர் போகுமிடத்திற்கே செல்வோம். தோட்டங்களையும் நிலங்களையும் வீடுகளையும் விட்டு இன்ப துன்பங்களை ஒன்றாக அனுபவித்துக் கொண்டு மிக்க தர்மிஷ்டரான தர்மராஜர் பின்செல்வோம். கொடிகள் [1]பெயர்க்கப்பட்டும், மேடைகள் இடிக்கப்பட்டும், தனங் களும தானியங்களும் மற்றுமுள்ள முக்கியமான பொருள்களெல் லாம எடுத்துக்கொள்ளப்பட்டும், தூளிகளால் மூடப்பட்டும், கிருகதேவதைகளினால் விடப்பட்டும், சேனைகளாக ஓடும் பெருச் சாளிகளினால் வியாபிக்கப்பட்டும், தண்ணீரும் புகையுமில்லா மலும், விளக்கப்படாமலும், பலிகள் யாகங்கள் மந்திரஜபங்கள் ஹோமங்கள் அழிந்தும, பாத்திரங்கள் உடைந்தும், கெட்ட காலத்தினால் கெடுக்கப்பட்டவை போன்ற நம்மால் விடப்பட்ட வீடுகளைச் சகுனி ஆளட்டும். பாண்டவர்கள் போகும் வனமே நகரமாகட்டும்; நம்மால் விடப்பட்ட நகரம் வனமாகட்டும். நம் மிடத்தில் பயந்து சர்ப்பங்கள் புற்றுக்களையும், மான்களும் யானை களும் சிம்மங்களும் பட்சிகளும வனங்களையும் விட்டுவிடட்டும். மிருகங்களும் பறவைகளும் நாமில்லாத விடத்தை அடைந்து நாம் செல்லும் இடத்தை விட்டுவிடட்டும். (அவை) புற்களையும் மாமிசங்களையும் கனிகளையு முண்ணுகிற பிராணிகளிருக்கும் இடங்களை விட்டுவிடட்டும். நாம் பாண்டவர்களுடன் மிகச் சுகமாக வனத்தில் வசிப்போம்' என்றார்கள்.

இவ்வாறு பல ஜனங்களினால் சொல்லப்பட்ட அநேகவித மான சொற்களைத் தர்மராஜர் செவியுற்றார். அதனால் அவர் மனங்கலங்கவில்லை. பிறகு, நாற்புறங்களிலுமுள்ள ஒவ்வொரு வீட்டிலும் பிரம்ம க்ஷத்ரிய வைசிய சூத்ர ஜாதி ஸ்திரீகள் உப்பரி கைகளிலேறிப பலகணிகளின் அருகிற் சென்று கதவுகளைத் திறந்து, மரவுரியையும் தோலையும் உடுத்து ஏழைகளாகவிருந்த பாண்டவர்களைக் கண்டனர். இதற்கு முன் யாராலும் காணப் படாத அந்தத் திரௌபதி வீட்டுக்கு விலக்காயிருக்கையில் ஒற்றை வஸ்திரமும் அவிழ்ந்த கூந்தலுமாக அழுதுகொண்டு காலால் நடந்துபோகின்றதைக் கண்டு அந்த ஸ்திரீகளனைவரும் மிகவும் முகங்கருகித் துக்கத்தினாலும் சோகத்தினாலும் வருத்த முற்று மெய்ம்மறந்து பலவிதமாகப் புலம்பி, 'ஆ! ஆ! சீ! சீ!' என்று சொல்லிக் கண்களால் நீர் சொரிந்தனர். வனவாசத்தைக் குறித்து மனத்தில் நிச்சயஞ்செய்துகொண்ட தர்மபுத்திரர்,

---

1 'ஸமுஜ்ஜிதாம்' என்று பாடம் இருத்தல் வேண்டும்.

ஜனங்களின் சொல்லைக் கேட்டுக்கொண்டே சகோதரர்களுடன் புறப்பட்டார். அவர் புறப்படும்போது திரௌபதி மிக்க துயரத்துடன் புகழ்பெற்ற குந்தியிடத்திலும் அங்குள்ள மற்ற ஸ்திரீகளிடத்திலும் விடைகேட்டுக்கொண்டாள். அப்போது, பாண்டவர்களின் அந்தப்புரத்தில் மிகப் பெரிய கூச்சல் உண்டாயிற்று. குந்தியும், திரௌபதி போகிறதைக் கண்டு மிகக் கொதிப்புற்றவளாகித் துயரத்தினால் தழுதழுத்த சொல்லோடு கஷ்டப்பட்டுப் பேசலானாள் :

'குழந்தாய்! இந்தப் பெரிய ஆபத்தை யடைந்தும் நீ விசனப்படத்தகாது. ஸ்திரீ தர்மங்கள் உனக்குத் தெரியும். நீ நல்ல ஒழுக்கமும் செய்கையுமுள்ளவள். வெண்மையான புன்னகையுள்ளவளே! உன் கணவர்களைப்பற்றி உனக்கு நான் ஒன்றும் உபதேசிக்கவேண்டாம். நீ கற்புள்ளவள்; குணங்கள் நிரம்பினவள்; (பிறந்ததும் புகுந்ததுமாகிய) இரண்டு குலங்களும் உன்னால் அலங்கரிக்கப்பெற்றன. குற்றமற்றவளே! இந்தக் கௌரவர்கள் அதிருஷ்டமுள்ளவர்கள். அதனாலேதான் உன்னால் எரிக்கப்படாமலிருக்கின்றனர். என்னை நினைப்பதனால் தைரியமடைந்து தீங்கில்லாமல் வழியிற் செல்வாயாக. அவசியம் நேரிடும் விஷயங்களில் நல்ல பெண்களுக்கு மனவேற்றுமை உண்டாவதில்லை. எல்லாவற்றினும் பெரிதான தர்மத்தினாலேயே காப்பாற்றப்பட்டுச் சீக்கிரத்தில் நன்மையை அடைவாய். என் புத்திரனை சகதேவனை வனத்திலிருக்கும்போது நீ எப்போதும் பார்த்துக்கொள்ளவேண்டும். சிறந்த புத்தியுள்ள இவன் இந்தத் துயரத்தை அடைந்ததனால் சோர்ந்துபோகலாகாது' என்று சொன்னாள். அந்தத் திரௌபதி, 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லிப் பெருகும் கண்ணீரினால் நனைக்கப்பட்டவளாகி [1] ஒற்றை வஸ்திரத்தோடும் விரித்த கூந்தலோடும் வெளிப்பட்டாள். அழுது கொண்டு போகின்ற திரௌபதியைத் துக்கத்துடன் குந்தி பின் சென்றாள்; அப்போது ஆபரணங்களும் வஸ்திரங்களும் எடுக்கப்பட்டும் புள்ளிமான் தோலால் தேகத்தில் மூடப்பெற்றும் வெட்கத்தினால் கொஞ்சம் தலை குனிந்தும் பகைவர்களால் சந்தோஷத்துடன் சூழப்பெற்றும் நண்பர்களால் துயரப்படப்பெற்றுமிருந்த தன் புத்திரர்களெல்லாரையும் பார்த்தாள். மிக்க அன்புள்ளவளான அந்தக் குந்தி அந்த நிலைமையிலிருந்த புத்திரர்களெல்லாரையும் அணுகித் தழுவிக்கொண்டு விசனத்தினால் பலவாறாக மிகப் புலம்பிப் பின்வருமாறு சொல்லலானாள்: 'நல்ல தர்மத்தையும் நடையையு முடையவர்களும் ஒழுக்கத்தினாலும் மரியாதையி

1 இங்கே இரண்டு சொற்கள் விடப்பட்டன.

ஞலும் அலங்கரிக்கப்பட்டவர்களும் பெருந்தன்மையுள்ளவர்களும் உறுதியான பக்தியுள்ளவர்களும் எப்போதும் தேவதைகளுக்கு யாகஞ்செய்வதே காரியமாயிருப்பவர்களுமான உங்களுக்குத் துயரம் வந்ததே! இஃது என்ன விதியின் வித்தியாசம்! உங்களுக்கு இந்தக் குற்றம் யாருடைய சாபத்திஞல் வந்ததென்று என் புத்தியில் ஆலோசிக்கிறேன். உத்தம குணங்களுள்ளவர்களாயிருந்தும் மிக்க துயரத்தையும் சிரமத்தையும் அனுபவிக்கும்படியான இது, உங்களைப் பெற்ற எனது பாக்கியக் கேடுதான். பராக்கிரமம், தைரியம், பலம், உற்சாகம், மகிமை இவைகளில் குறைவில்லாமலிருந்தும் ஐசுவரியமில்லாமல் இளைத்துப்போன நீங்கள் காட்டில் கரடுமுரடுகளில் எப்படி வசிப்பீர்கள்? உங்களுக்கு வனவாசம் இவ்வாறு அவசியம் நேருமென்று முன்னமே எனக்குத் தெரிந்திருக்குமாயின், பாண்டு இறந்தபின் சதசிருங்கமலையிலிருந்து அஸ்திஞ நகரத்திற்கு வந்திருக்கமாட்டேன். பிள்ளைகளின் துக்கத்தைப் பாராமல் சுவர்க்கத்திற்குப் போவதையே பிரியமாக நினைத்தவரும் தவமும் புத்தியுமுள்ளவருமாகிய உங்கள் பிதா பாக்கியசாலியென்று நினைக்கிறேன். புலன்களுக்குப் புலப்படாதவற்றையும் அறிகிறவளும் தர்மந் தெரிந்தவளும் மேன்மையுள்ளவளும் மேலான கதியை யடைந்தவளுமான மாத்ரி எவ்வகையிலும் பாக்கியம் பெற்றவளென்று நினைக்கிறேன். கணவனிடத்தில் அடைந்த இன்பத்திலும் அறிவிலும் பரலோகமடைந்ததிலும் அவளால் நான் ஏமாற்றப்பட்டேன். எனக்கு உயிர்தான் வேண்டும்; துக்கத்துக்கே ஏற்பட்ட நான் உதவியற்றவள். புத்திரர்களே! நான் கஷ்டப்பட்டுப் பெற்ற என் அன்புள்ள நன்மக்களான உங்களை நான் விட்டிரேன். நானும் வனத்திற்கு உங்களுடன் செல்வேன். திரௌபதி! என்னை ஏன் விட்டுவிடுகிருய்? இந்த உயிர்வாழ்க்கையானது முடிவுள்ளதாயிருக்கிறது. பிரம்மதேவர் தவறுதலிஞல் எனக்கு மட்டும் முடிவை விதியாமற் போஞரோ? அதஞலேதான் ஆயுள் என்னை விடவில்லையோ? ஓ! கிருஷ்ண! துவாரகாவாசியே! பலராமனுக்கிளையவனே! எங்கிருக்கிருய்? என்னையும் புருஷசிரேஷ்டர்களான இந்தப் பாண்டவர்களையும் துக்கத்திலிருந்து நீ ஏன் காப்பாற்றவில்லை? 'முதலும் முடிவுமில்லாத உன்னை எந்த மனிதர்கள் விடாமல் தியானம் செய்கின்ருர்களோ அவர்களை நீ காப்பாற்றுகிருய்' என்னும் சொல் எப்படிப் பொய்யாயிற்று? நல்ல தர்மத்தையும் மகிமையையும் புகழையும் சூரத்தனத்தையும் அடைந்திருக்கும் இவர்கள் (=பாண்டவர்கள்) துயரப்படத்தகாதே. கிருஷ்ண! இவர்கள்மீது தயை செய்ய

வேண்டும். நீதிசாஸ்திரத்தின் விஷயங்களை அறிந்த பீஷ்மர், துரோணர், கிருபர் முதலிய குலத்தலைவர்கள் இருக்கையில் இந்த ஆபத்து எப்படி வந்தது? ஆ! பாண்டுவே! ஆ! மகாராஜாவே! எங்கே இருக்கிறீர்? யோக்கியர்களான புத்திரர்கள் பகைவரால் சூதாடி வெல்லப்பட்டுக் காடு புகுவதை ஏன் கவனியாமலிருக்கிறீர்? சகதேவா! மாத்ரி புத்ரா! நீ திரும்பு; நீ என் சரீரத்தைக் காட்டிலும் எனக்கு அதிகப் பிரியமானவன். கெட்ட பிள்ளைபோல என்னை விட்டுவிடாதே. உன்னுடைய இந்தச் சகோதரர்கள் சத்தியத்துக்கு ஆசைப்பட்டவராயிருந்தால் செல்லட்டும். நீ என்னைக் காப்பாற்றுவதனால் இங்கேயே தர்மத்தைச் செய்' என்றாள். இவ்வாறு புலம்புகிற குந்தியை வணங்கி நமஸ்கரித்துப் பாண்டவர்கள் சந்தோஷமில்லாமல் காட்டுக்கே சென்றனர். விதுரர், தாமும் மிகத் துயரமுற்று, துயரப்பட்டுக்கொண்டிருக்கும் அந்தக் குந்தியை நியாயங்கள் சொல்லித் தேற்றி, மெல்ல மெல்லத் தம் கிருகத்துக்கு அழைத்துக்கொண்டு போனார். திருதராஷ்டிர புத்திரர்களின் மனைவிகளனைவரும் சூதாடிய சபையில் திரௌபதியைக் கொண்டுவந்ததையும் வஸ்திரத்தை இழுத்ததையும் முழுதும் கேட்டுக் கௌரவர்களை மிகவும் திட்டிக் குரல்விட்டழுதனர். தாமரை மலர் போன்ற முகங்களைக் கைகள்மேல் வைத்துக்கொண்டு நெடுநேரம் சிந்தையுற்றிருந்தனர். திருதராஷ்டிர மகாராஜனும் தன் பிள்ளைகள் செய்த அக்கிரமத்தை நினைத்துப் பரிதபித்த மனத்துடன் ஆறுதலை யடையாமலிருந்தான். மனம் ஒருவழிப்படாமல் சிந்தைகொண்டு விசனத்தினால் மனங்கலங்கின திருதராஷ்டிரன் சீக்கிரம் வரவேண்டுமென்று விதுரருக்குச் சொல்லியனுப்பினான். பிறகு விதுரர், திருதராஷ்டிரன் வீட்டிற்குச் சென்றார். ராஜாவான திருதராஷ்டிரன் பயந்து விதுரரிடம் கேட்கலானான்.

---

## நூற்றிரண்டாவது அத்தியாயம்

## அநுத்யூத பர்வம் (தொடர்ச்சி)

**(பாண்டவர்கள் காட்டுக்குப் போனபிறகு திருதராஷ்டிரன் பயந்து விதுரரிடம் ஆலோசித்ததும், துரியோதனன் முதலானவர்கள் துரோணரைச் சரணமடைந்ததும், அவர்களுக்குப் புத்திசொன்னதும்)**

அம்பிகையின் புத்திரனான திருதராஷ்டிர மகாராஜன் தீர்க்காலோசனையுள்ள அந்த விதுரர் வரக் கண்டு அச்சத்துடன், 'விதுரா! குந்தி புத்திரனும் தர்மபுத்திரனுமான யுதிஷ்

டிரனும் பீமசேனனும் ஸவ்யஸாசியும் மாத்ரியின் புத்திரர்களான நகுல சகதேவர்களும் தௌமியரும் புகழ்பெற்ற திரௌபதியும் எப்படிச் செல்கின்றனர்? நான் கேட்க விரும்புகிறேன். அவர்களின் செய்கைக ளெல்லாவற்றையும் சொல்' என்று கேட்டான். விதுரர், 'குந்தி புத்திரனை யுதிஷ்டிரன் வஸ்திரத்தினல் முகத்தை மூடிக்கொண்டு போகிறான். பீமன் தனது பெருங்கைக ளிரண்டையும் பார்த்துக்கொண்டு போகிறான். ஸவ்யஸாசி மணல்களை இறைத்துக்கொண்டே தர்மராஜாவின் பின்செல்லுகிறான். மாத்ரியின் புத்திரனை சகதேவன் முகத்தில் வர்ணம் பூசிக்கொண்டு போகிறான். உலகத்தில் மிக்க அழகான நகுலன் மனஞ்சோர்ந்து உடம்பெல்லாம் புழுதியைப் பூசிக்கொண்டு தர்மராஜாவின்பின் செல்லுகிறான். நீண்ட கண்களையுடையவளும் அழகியவளுமான திரௌபதி கூந்தல்களினல் முகத்தை மறைத்துக்கொண்டும் அழுதுகொண்டும் ராஜாவின் பின்செல்லுகிறாள். ராஜனே! தௌமியர் மார்க்கங்களிலுள்ள தர்ப்பங்களைக் கையினலெடுத்து ருத்திரரையும் யமனையும்பற்றின சாமங்களை ஸ்வரத்துடன் சொல்லிக்கொண்டு செல்லுகிறார்' என்று சொன்னார். திருதராஷ்டிரன், 'பாண்டவர்கள் இப்போது பலவிதமான குறிகளைச் செய்துகொண்டு போகின்றனரே! விதுரா! ஏன் அவர்கள் இப்படிப் போகின்றனர்? அதை எனக்குச் சொல்' என்று கேட்க, விதுரர் சொல்லலானர்.

'ராஜ்யமும் தனங்களும் கவரப்பட்டும் உமது புத்திரர்களால் அவமதிக்கப்பட்டுமிருந்தாலும், சிறந்த புத்திமானை தர்மராஜாவின் புத்தி தர்மத்தைவிட்டு விலகுவதில்லை. பாரதரே! எப்போதும் உமது புத்திரர்களிடத்தில் தயையுள்ள அந்தத் தர்மராஜன் மோசத்தினல் கெடுக்கப்பட்டுக் கோபத்தோடு உக்கிரமான பார்வையினல் பார்த்து இந்தக் கௌரவ ஜனங்களை எரிக்கலாகா தென்று நினைத்துக் கண்களைத் திறக்கவில்லை. அதற்காக அந்தத் தர்மராஜன் முகத்தை மூடிக்கொண்டு போகிறான். பரத சிரேஷ்டரே! பீமன் அவ்வாறு போவதற்குக் காரணத்தைச் சொல்லுகிறேன்; கேளும். 'கைகளின் வன்மையில் எனக்கு ஈடானவனில்லை' என்ற எண்ணத்தினல் தன் கைகளைப் பரப்பிக்கொண்டு பீமன் போகிறான். அரசரே! கைகளென்னும் தனத்தினல் கர்வித்த பீமன் தன் கைகளாகிய தனத்திற்குத் தக்கபடி பகைவர்களுக்குச் செய்யத்தக்கதைச் செய்யக் கருதிக் கைகளைக் காண்பித்துக்கொண்டு போகிறான். குந்தி புத்திரனும் ஸவ்யஸாசியுமான அர்ஜுனன் தான் பாணங்கள் பிரயோகிப்பதைக் காண்பிப்பதற்காக மணல்களை இறைத்துக்கொண்டு ராஜாவின்பின் செல்லுகிறான். பாரதரே!

இப்போது மணல்கள் அவன் கையிலிருந்து எப்படித் [1] தடையில்லாமல் உதிருகின்றனவோ அப்படியே தடையில்லாமல் எதிரிகளின் மேல் சரமாரிகளைப் பொழியப்போகிருன். பாரதரே! 'இந்தக் காலத்தில் என் முகத்தை யாரும் தெரிந்துகொள்ளலாகாது' என்று நினைத்து, சகதேவன் முகத்தில் வர்ணம் பூசிக்கொண்டு செல்லுகிருன். பிரபுவே! 'போகும் வழியில் பெண்களின் மனத்தை நான் கவரலாகாது' என்று நினைத்து, அங்கமெல்லாம் புழுதிகளைப் பூசிக்கொண்டு நகுலன் செல்லுகிருன். ரஜஸ்வலையாயிருந்த [2] திரௌபதி ஒற்றை வஸ்திரத்தோடும் விரித்த கூந்தலோடும் அழுதுகொண்டே 'எவர்களால் நான் இந்தக் கஷ்டத்தை அடைந்திருக்கிறேனே அவர்களுடைய மனைவியர்கள் பதினன்காவது வருஷத்தில் கணவர்களும் மைந்தர்களும் உறவினரும் சிநேகிதர்களும் கொல்லப்பட்டும், பந்துக்களின் உதிரங்களால் உடம்பெல்லாம் பூசப்பட்டும், தலைவிரித்து உடம்பெல்லாம் தூசி மூடப்பெற்றும் தர்ப்பணஞ் செய்துவிட்டு அஸ்தினாபுரத்தில் பிரவேசிக்கவேண்டும்' என்று சொன்னாள். பாரதரே! சிறந்த ஞானமுள்ள புரோகிதரான தௌமியர் தென்மேற்கு மூலையிலிருக்கும் தர்ப்பங்களை அறுத்து யமனைப்பற்றிய சாமங்களை ஸ்வரங்களுடன் சொல்லிக்கொண்டு முன் செல்லுகிருரன்றே? அவர், 'யுத்தத்தில் பரத வம்சத்தவர்கள் கொல்லப்பட்ட பிறகு கௌரவர்களின் புரோகிதர்கள் இவ்வகையான சாமங்களையே சொல்லப்போகின்றனர்' என்று தெரிவித்துக்கொண்டு செல்லுகிருர். பாண்டவர்களை மட்டும் மிச்சமாக அனுப்பினதனுல் உம்மைச் சேர்ந்த மற்றவர்கள் மிச்சமிருப்பதில்லை யென்ற நிச்சயத்துடன் தௌமியர் ருத்ர சாமங்களைச் சொல்லுகிருர்' என்று சொன்னர். திருதராஷ்டிரன், 'விதுரா! சூதாடினவர்கள் என்ன சொன்னர்கள்? நகரத்திலுள்ள ஜனங்கள் என்ன சொன்னர்கள்? என்னுடைய நன்மைக்காக எல்லாவற்றையும் விடாமற் சொல்' என்று கேட்க, விதுரர் சொல்லலானர். 'மகாராஜாவே! பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களும் மற்றவர்களும் சொன்னதை நான் உமக்குச் சொல்லுவேன்; கேளும். 'ஆ! ஆ! நம்முடைய தலைவர்கள் போகின்றனர். கௌரவர்களில் பெரியோர்களும் குழந்தைகளைப்போல இவ்வாறு நடத்தினதைப் பாருங்கள். சீ! கஷ்டம். ராஜ்யத்தில் ஆசைப்பட்டுப பாண்டு புத்திரர்களை நாட்டைவிட்டுக் காட்டுக்கு அனுப்புகிருர்களே!

1 மூலத்தில 'அஸக்தா:' என்றிருக்கிறது; இதற்கு, 'ஒன்றோடொன்று சேராமல்' என்பது பழையவுரை.

2 இங்கே இரண்டு சொற்கள் விடப்பட்டன.

பாண்டவர்களை விட்டுப் பிரிந்த நாமெல்லோரும் அநாதர்களா யிருக்கிறோம். துஷ்டர்களும் லோபிகளுமாகிய கௌரவர்க ளிடத்தில் நமக்கு என்ன சந்தோஷமிருக்கிறது?' என்று நகரத்து ஜனங்கள் மிகத் துயரப்பட்டு அடிக்கடி கதறினார்கள். சிறந்த மனமுள்ள அந்தப் பாண்டவர்களும் மேற்சொல்லிய இங்கிதக் குறிப்புக்களினால் மனத்திலுள்ள நிச்சயத்தைத் தெரிவித்துக் கொண்டு வனத்திற்குச் சென்றனர். அந்தப் புருஷ சிரேஷ்டர் கள் அஸ்தினாபுரத்திலிருந்து இவ்வாறு வெளியிற்போனபோது மேகமில்லாத ஆகாயத்தில் மின்னல்கள் உண்டாயின. பூமியும் நடுங்கிற்று. அரசரே! அமாவாசை யில்லாதபோது சூரிய னுக்கு ராகு கிரகணம் உண்டாயிற்று. ஊரை அபஸவ்யமாகச் சுற்றி எரிகொள்ளி விழுந்தது. கழுகு நரி காக்கை முதலான மாமிசம் தின்னும் பிராணிகள் தேவாலயங்களிலும் கிராமங்களின் தலைமையான மரங்களிலும் மதில்களிலும் கோபுரங்களிலும் கத்தின. அரசரே! உமது துராலோசனை நடந்ததனால் பரத வம்சத்தார் அழிவதற்கு அறிகுறியாக இவ்வாறு இந்தக் கொடிய பெரிய அபசகுனங்கள் உண்டாயின' என்றார்.

ஜனமேஜய ராஜாவே! அரசனான திருதராஷ்டிரனும் புத்தி மானான விதுரருமாகிய இவ்விருவரும் இவ்வாறு பேசிக்கொண் டிருக்கையிலேயே, அந்தக் கௌரவர்களின் சபை நடுவில் அநேக மகரிஷிகளாற் சூழப்பெற்ற நாரதர் எதிர்தோன்றி, 'இதற்குப் பதினான்காவது வருஷத்தில், இவ்விடத்தில் துரியோதனன் செய்த பிழையினாலும் பீமார்ஜுனர்களுடைய பலத்தினாலும் கௌரவர்கள அழியப்போகின்றனர்' என்று பயங்கரமான சொல்லைச் சொன்னார். மிகச் சிறந்த பிரமதேஜஸைத் தரிக் கின்றவரும் தேவரிஷிகளிற் சிறந்தவருமான நாரதர் இவ்வாறு சொல்லி ஆகாயத்திலேறி உடனே மறைந்தார். பிறகு, துரியோதனனும் கர்ணனும் சுபல புத்திரனான சகுனியும் துரோணரைத் தஞ்சமாக நினைத்தனர்; ராஜ்யத்தையே அவ ருக்கு ஒப்புவித்தனர். அப்போது துரோணர், பொறாமைக்கார னான துரியோதனனையும துச்சாஸனனையும் கர்ணனையும் மற் றெல்லாப் பாரதர்களையும பார்த்து, 'பாண்டவர்கள் தேவர் களின் புத்திரர்களென்றும், கொல்லமுடியாதவர்களென்றும் பிராமணர்கள் சொல்லுகின்றனர். நானோ என்னைச் சரண மடைந்த திருதராஷ்டிர புத்திரர்களையும் திருதராஷ்டிரனையும் என்னால் கூடியவரையில் அன்போடும் முழு மனதோடும் அனு சரித்திருப்பேன்; விடமாட்டேன். ஆனால், தெய்வம் மிக்க வலிமை யுடையது. உங்களால் ஜயிக்கப்பட்ட பாண்டவர்கள் தர்மத்திற்

காக வனம் போகின்றனர். அந்தப் பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷம் வனத்தில் வசித்துப் பிரம்மசரிய விரதத்தை அனுஷ்டித்துக் கோபத்தையும் பொறுமையையுங்கொண்டு உங்களுக்குப் பெருந்துயரம் உண்டாகும்படி பகை தீர்க்கப்போகின்றனர். திருதராஷ்டிர மகாராஜாவே! சிநேகிதர்களுள் உண்டான சண்டைக்காக நான் துருபதனை ராஜ்யத்திலிருந்து தள்ளினேன். என்னைக் கொல்வதற்காகப் புத்திரனை வேண்டித் துருபதராஜன் யாகஞ்செய்தான். அவன் யாஜ உபாஜரென்னும் ரிஷிகளின் தவத்தினால் திருஷ்டத்யும்னனென்னும் புத்திரனை அக்னியிலிருந்தும் நுண்ணிடையாளான திரௌபதியென்னும் பெண்ணை யாகவேதியின் நடுவிலிருந்தும் அடைந்தான். திருஷ்டத்யும்னன், மைத்துனனென்னும் சம்பந்தத்தினால் பாண்டவர்களால் கௌரவிக்கப்பெற்றவன். அவர்களுடைய விருப்பத்தைச் செய்ய ஊக்கமுள்ளவன்; அவனிடத்தில் எனக்குப் பயமுண்டாயிருக்கிறது. அக்னி ஜ்வாலையின் நிறமுள்ளவனாகவும் வில்லையும் கவசத்தையும் அம்பையுமுடையவனாகவும் அக்னி பகவானால் அவன் கொடுக்கப்பட்டவன். எனக்கு மனிதத்தன்மையிருப்பதனால் அவனிடத்தில் இப்போது பெரிய பயமிருக்கிறது. பகைவர்களான வீரர்களைக் கொல்லுகிறவனாகிய துருபதனும் அவர்கள் பக்கத்தைச் சேர்ந்தவனன்றோ? ரதர்கள் அதிரதர்களின் எண்ணிக்கையில் முதல்வனும் இளமைப்பருவத்திலிருப்பவனுமான அர்ஜுனனுடன் எனக்கு யுத்தம் நேருமாயின் என் பிராணன் போவது மிகவும் நிச்சயம். கௌரவர்களே! பூமியில் இதற்கு மேற்பட்ட பெருந்துயரம் வேறு என்ன இருக்கிறது? 'திருஷ்டத்யும்னன் துரோணருக்கு ம்ருத்யு' என்னும் சொல் எங்கும் பரவியிருக்கிறது. என்னைக் கொல்வதற்காகவே அவன் பாண்டவர்களால் ஆசிரயிக்கப்பட்டிருக்கிறானென்று உலகத்தில் பிரசித்தி அதிகமாயிருக்கிறது. எனக்கு அந்த விபரீத காலம் உன் நிமித்தமாக வந்திருப்பது நிச்சயம். நீங்கள் உங்களுடைய நன்மையைச் சீக்கிரம் செய்துகொள்ளுங்கள். இவ்வளவு செய்ததனால் ஒன்றும் செய்ததாகவில்லை. பனிக்காலத்திய பனைமர நிழல் போல இது சிறிதுநேரமுள்ள சுகந்தான். பெரிய யாகங்களையெல்லாம் செய்யுங்கள். சௌக்கியங்களை அனுபவியுங்கள்; தானங்களைக் கொடுங்கள். இதற்குப் பதினான்காவது வருஷத்தில் பெரிய ஆபத்தை யடையப்போகிறீர்கள். துரியோதனா! இதைக் கேட்ட பிறகு உன் விருப்பம்போலச் செய். உனக்கு இஷ்டமிருந்தால் தர்மபுத்திரனோடு சந்திசெய்துகொள்' என்று சொன்னார். துரோணர் சொன்னதைக் கேட்டு, திருதராஷ்டிரன், 'குருவான

துரோணர் சொல்வது சரி. விதுரா! பாண்டவர்களைத் திருப்பி யழை. அவர்கள் திரும்பாமற் போவாராயின் என் புத்திரர்களாகிய அந்தப் பாண்டவர்கள் ஆயுதங்களோடும் தேர் காலாள் முதலிய படைகளோடும் ராஜபோகங்களையுடையவர்களாயும் சிறப்பிக்கப்பெற்றவர்களாயும் செல்லட்டும்' என்று சொன்னான்.

---

## நூற்றுமூன்றாவது அத்தியாயம்

## அநுத்யூத பர்வம் (தொடர்ச்சி)

### (திருதராஷ்டிரனும் ஸஞ்சயனும் பேசிக்கொண்டது)

ஜனமேஜய மகாராஜாவே! இவ்வாறு சூதில் ஜயிக்கப் பட்ட பாண்டவர்கள் வனத்திற்குச் சென்றபோது திருதராஷ்டிரனுக்குள் கவலை புகுந்தது. கவலையுடன் பலவகை எண்ணங் கொண்டு பெருமூச்செறிந்து உட்கார்ந்திருக்கும் திருதராஷ்டிர மகாராஜனைப் பார்த்து ஸஞ்சயன், 'பூமிக்கதிபதியே! ராஜாவே! பாண்டவர்களை ராஜ்யத்தைவிட்டுக் காட்டுக்கு அனுப்பித் தனங்கள் நிரம்பின பூமியை யடைந்த பிறகு ஏன் துயரப்படுகிறீர்?' என்று கேட்டான். திருதராஷ்டிரன், 'யுத்தத்தில் சமர்த்தர்களும் பலசாலிகளும் மகாரதர்களுமான பாண்டவர்களோடு பகை நேரிடுகிறவர்களுக்குத் துயரமில்லாமை ஏது?' என்று சொல்ல, ஸஞ்சயன், 'அரசரே! நீர் செய்த காரியம் நன்றாயிருக்கிறது. ஜனங்களுக்குத் தொடர்ச்சியாக நாசத்தைத் தரத்தக்க பெரும்பகை வந்துவிட்டது. பீஷ்மராலும் துரோணராலும் விதுரராலும் தடுக்கப்பட்டும், உமது புத்திரனும் மிகப் புத்தி கெட்டவனும் வெட்கமில்லாதவனுமாகிய துரியோதனன், பாண்டவர்களின் அன்புள்ள மனைவியும் தர்மந் தவறாதவளுமான திரௌபதியை 'இங்கே அழைத்து வா' என்று பிராதிகாமி யென்னும் சூத புத்திரனை அனுப்பினான். தேவர்கள் எந்த மனிதனுக்கு அபஜயத்தைக் கொடுப்பார்களோ அவனுடைய புத்தியைக் குறைத்துவிடுவார்கள். அவன் விபரீதங்களையே பார்ப்பான். கேடு நெருங்கி மதி கலங்கிப்போனபோது அநியாயம் நியாயம்போலத் தோன்றி மனத்தை விட்டு விலகாமலிருக்கும். கேடு வருமுன் தீயவை யெல்லாம் நல்லவை போலவும், நல்லவை யெல்லாம் தீயவைபோலவும் தோன்றும். இவனுக்கும் அப்படியே தோன்றியிருக்கிறது நிச்சயம். காலமானது தண்டத்தை யோங்கி யார் தலையையும் உடைக்கிறதில்லை. காரியங்களை மாறாகக் காண்பிப்பதுதான் காலத்தின் வன்மை. கர்ப்பத்தில் பிறவாதவளும் தவமுள்ளவளும் அழகு

உள்ளவளும் நல்ல குலத்தில் (அக்னியினின்றும்) பிறந்தவளு மாகிய பாஞ்சாலியைச் சபையில் இழுத்தபோதே மயிர்பொடிக்கச் செய்யும் பயங்கரமான இந்தக் காலம் உமது பிள்ளைகளினால் தேடிக்கொள்ளப்பட்டது. வஞ்சகச் சூதாடுகிறவனைத் தவிர வேறு எவன், எல்லாத் தர்மங்களுமறிந்தவளும் புகழ் பெற்ற வளுமாகிய அவளைப் பலாத்காரமாகச் சபை நடுவில் கொண்டு வருவான்? பெண்தன்மைக்குரிய ருதுகாலத்திலிருப்பவளும் [1]ஒற்றை வஸ்திரம் தரித்தவளுமாகிய அந்தப் பெண்ணரசி யான பாஞ்சாலி, பொருள்களும் ராஜ்யமும் வஸ்திரங்களும் மகிமையும் அபகரிக்கப்பட்டு எல்லாப் போகங்களையு மிழந்து தர்மமென்னுங் கயிற்றினால் கட்டப்பட்டுப் பராக்கிரமஞ் செய்யச் சக்தியில்லாதவர்களைப்போல அடிமைத்தன்மையை யடைந் திருந்த பாண்டவர்களை நோக்கினாள். துக்கப்படத்தகாத அந்தத் திரௌபதி கௌரவர்களின் சபையில் துயரப்பட்டுக் கோபித் திருந்தபோது துரியோதனனும் கர்ணனும் கடுஞ்சொற்கள் சொன்னார்கள். அரசரே! இவ்வாறு எல்லாம் தாறுமாறாக நடந்ததென்று எனக்குத் தோன்றுகிறது' என்று சொன்னான்.

திருதராஷ்டிரன், 'ஸஞ்சய! அந்தத் திரௌபதியின் துயர முற்ற கண்களினால் பூமியே எரிக்கப்படும். இப்போது என் புத்திரர்களில் யாராவது மிச்சமிருப்பார்களா? தர்மிஷ்டையும் தர்மபத்தினியும் அழகும் இளமையுமுள்ளவளுமாகிய கிருஷ்ணை அந்தச் சபைக்கு வரக் கண்டு பரத வம்சத்தவரின ஸ்திரீகளனை வரும் காந்தாரியுடன் சேர்ந்து பயங்கரமாகக் கூவினர். தம் தம் குழந்தைகளுடன் சேர்ந்து தினந்தோறும் அவர்கள் துயரப் படுகின்றனர். திரௌபதியை இழுத்ததற்காகப் பிராமணர்கள் கோபித்தனர். சாயங்காலங்களில் அக்னிஹோத்ரங்கள் யாரா லும் செய்யப்படவில்லை. பயங்கரமான பெருங்காற்றும் பேரிடி யும் உண்டாயின. ஆகாயத்திலிருந்து எரிகொள்ளிகள் விழுந் தன. அமாவாசை இல்லாத காலத்தில் ராகுவினால் சூரிய கிரகணம் உண்டாயிற்று. அது பிரஜைகளுக்கு மிகக் கொடிய பயங்கரமாயிருந்தது. அப்படியே தேர்ச்சாலைகளில் தீப்பிடித் தது. பாரதர்களின் கெடுதலுக்குக் குறிப்பாகக் கொடிகள் விழுந்தன. துரியோதனனுடைய அக்னிஹோத்ர சாலையில் நரிகள் பயங்கரமாக ஊளையிட்டன. அவற்றிற்கு நாலு பக்கங் களிலும் கழுதைகள் எதிராகக் கத்தின. ஸஞ்சய! உடனே பீஷ்மரும், துரோணரும், கிருபரும், சோமதத்தனும், சிறந்த மனமுள்ள பாஹ்லீகனும் அதை விட்டுப்போயினர். பிறகு,

1. இங்கே, இரண்டு சொற்கள் விடப்பட்டன.

விதுரனால் தெரிவிக்கப்பட்ட நான், 'கிருஷ்ணை என்ன என்ன வரங்கள் விரும்புகிறாளோ அவற்றையெல்லாம் அவளுக்குக் கொடுப்பேன்' என்று சொன்னேன். அப்போது பாஞ்சாலி பாண்டவர்கள் தாஸர்களாயில்லாமலிருக்கும்படி கேட்டுக் கொண்டாள். நானும் அவர்களை ரதங்களோடும் விற்களோடும் செல்லும்படி அனுப்பினேன். அப்போது சிறந்த புத்தியுள்ளவனும் எல்லாத் தர்மங்களும் தெரிந்தவனுமாகிய விதுரன், 'எப்போது கிருஷ்ணை சபைக்கு வந்தாளோ, அதுதான் பாரதர்களுக்கு முடிவுக்காலம். இந்தப் பாஞ்சால ராஜன் மகள் லக்ஷ்மி; அவளுக்கு மேற்பட்டவள் யாருமில்லை இந்தப் பாஞ்சாலி தெய்வத்தினால் சிருஷ்டிக்கப்பட்டு இந்தப் பாண்டவர்களை அடைந்திருக்கிறாள். உண்மையான பிரியமுள்ள அந்தக் கிருஷ்ண பகவானால் காப்பாற்றப்பட்டவர்களும், அவமானத்தைப் பொறாதவர்களுமாகிய குந்தி புத்திரர்களும் சிறந்த வில்லாளிகளாகிய யாதவர்களும் மகாரதர்களான பாஞ்சாலர்களும் திரௌபதியின் துயரத்தைப் பொறார்கள். பாஞ்சாலர்களால் சூழப்பெற்று அர்ஜுனன் வரப்போகிறான். அவர்களின் நடுவில் சிறந்த வில்லாளியும் மகா பலசாலியுமான பீமஸேனன் யமன் தண்டாயுதத்தைச் சுழற்றுவதுபோலக் கதையைச் சுழற்றிக்கொண்டு வரப்போகிறான். அப்போது சிறந்த புத்திமானான அர்ஜுனனுடைய காண்டீவ கோஷத்தையும், பீமனுடைய கதையின் வேகத்தினாலுண்டான சப்தத்தையும் அரசர்கள் கேட்டுச் சகிக்கமுடியாது. அது விஷயத்தில் எப்போதும் பாண்டவர்களோடு சிநேகமே எனக்குச் சரியாகத் தோன்றுகிறது; விரோதம் சரியன்று. எப்போதும் கௌரவர்களைப்பார்க்கிலும் பாண்டவர்கள் மிக்க பலசாலிகளென்று நான் நினைக்கிறேன். இதுதான் சரி. சிறந்த பலமும் பராக்கிரமமுமுள்ள ஜராசந்தனென்னும் அரசன் கையையே ஆயுதமாக வைத்துக்கொண்ட பீமனால் யுத்தத்திற் கொல்லப்பட்டானே! பரத சிரேஷ்டரே! ஆதலால், பாண்டவர்களோடு உமக்குச் சிநேகமே இருக்கவேண்டும். இவ்விரு திறத்தாருக்கும் சரியானதைச் சந்தேகப்படாமற் செய்யும். மகாராஜாவே! இவ்வாறு செய்தால் நீர் மேலான நன்மையை அடைவீர்' என்று சொன்னான். ஸஞ்சய! விதுரன் இவ்வாறு தர்மத்திற்கும் ராஜ்ய லாபத்திற்கும் ஒத்த சொல்லைச் சொன்னான். பிள்ளையின் விருப்பத்தை அனுசரித்த நான் அதை ஏற்றுக்கொள்ளாமற் போனேன்' என்று சொன்னான்" என்றார்.

அனுத்யூத பர்வம் முற்றிற்று

---

ஸபா பர்வம் முற்றிற்று

---

The Royal Printing Works, Mount Road, Madras 2.—15.4-49, C. 1000.